# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு எட்டு

## (VOLUME EIGHT)

**1941 - 1945**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரைக்கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா ஒருவரே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 6000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, செப்டம்பர் 2021
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113
REV:01/27.01.2025

# இறை போதையின் பரவச பாதையில் மஸ்துகள்

## (மெஹர் பாபாவின் விளக்கம்)

**பாகம்: 01/02**

சராசரி மனிதன், ஏறக்குறைய பிறரைப் போல் ஆடை அணிகிறான்; அவன் பிறரைப் போல் அமர்ந்து, பேசி, நடமாடவும் செய்கிறான். அவன் தனது உடல் தேவைகளுக்காகச் செலுத்தும் கவனம், சுய வெளிப்பாட்டிற்காக உருவாக்கும் பழக்கவழக்கங்கள் மற்றும் சக மனிதர்களிடம் காட்டும் எதிர்வினைகள் இவை அனைத்திலும், சந்தேகத்திற்கு இடமின்றி, சில வேறுபட்ட பண்புகளும், தனித்தன்மைகளும் இருக்கலாம்; ஆனால் இந்தப் பண்புகள் மற்றும் தனித்தன்மைகளின் மாறுபாடுகள் அனைத்தும், குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அடங்கும். அவை சாதாரண நடைமுறை வழிகளிலிருந்து பெரிய அளவில் விலகாமல், இயல்பான வரம்பிற்குள் மாறுகின்றன. இவ்வாறு, பேச்சும், செயலும் சராசரி நடைமுறை பழக்கவழக்கத்துடன் இணங்கிப் போவதால், உலகின் சாதாரண மனிதன் எந்தவொரு சிறப்பு ஆர்வத்தையும் தூண்டுவதில்லை: அவன் ஒரு சாதாரண மனிதனாகப் பார்க்கப்படுவதால், அவனைப் பற்றிய எந்த விளக்கமும் தேவையில்லை எனத் தோன்றுகிறது. அவனது பேச்சும், செயலும் பெரிய அளவில் மாறுபட்டு, சாதாரண வரம்புகளை மீறும் தருவாயில், விளக்கம் இன்றியமையாதது.

சராசரி மனிதன் உலகத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறான், மேலும் உலகின் வழிகளால் வடிவமைக்கப்படுகிறான். உலகம், அவனது மனதில் ஏற்படுத்தும் விதவிதமான தாக்கங்களின் விளைவாக உருவாக்கப்பட்ட நாட்டங்களைத் தூண்டுவதன் மூலம், அவன் உலகிற்கு எதிர்வினையாற்றுகிறான். அவனது எதிர்வினையின் முக்கிய அடிப்படையான மனம், எதிரும் புதிருமாக வினைபுரியும் இரட்டைத்தன்மையின் அனுபவத்தினால் விளையும் மனப்படிவங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது - வெற்றி-தோல்வி, மகிழ்ச்சி-துன்பம் போன்றவை. உலகின் சாதாரண மனிதனின் மனம் வழங்கும் பதில்களும், அது ஆற்றும் எதிர்வினைகளும், உண்மையான மதிப்புகளால் தீர்மானிக்கப்படுவதில்லை, அல்லது வாழ்க்கையைப் பற்றிய உண்மையான புரிதலால் நிர்ணயிக்கப்படுவதில்லை; அவை ஒழுங்காக ஒருங்கிணைக்கப்படாத அல்லது புரிந்து கொள்ளப்படாத அனுபவங்களிலிருந்து, கட்டமைக்கப்பட்ட குழப்பமான மற்றும் முரண்பாடான போக்குகளால் தீர்மானிக்கப்படுகின்றன. சாதாரண மனிதனின் வெளிப்புற நடத்தை, அவனுடைய பதில்கள் மற்றும் எதிர்விளைவுகள் சராசரி நடைமுறைகளுடன் ஒத்துப்போவதால், அவனது உள் வாழ்க்கை, கடுமையான மன குழப்பங்களுக்கும் துன்பங்களுக்கும்,

எப்போதும் புதிதாக உருவாகும் விரக்தியின் உணர்விற்கும் உட்பட்டதாக இருக்கும்.

வெளியளவில், சராசரி மனிதன் சமநிலையில் இருப்பது போலத் தோன்றலாம், ஆனால் உண்மை அதுவல்ல. சீராக ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்படாத செயல்பாடுகளில், அவன் ஆழ்ந்த அதிருப்தி அடையும் வேளையில், எல்லா நிலைகளிலும் தோல்வியற்ற நிலைப்பாட்டை அடைய அவன் போராடுகிறான், மேலும் அது அவனுக்கு நிலையான அமைதி மற்றும் நிறைவை உறுதி செய்வதை விரும்புகிறான். உலகம் மற்றும் அதன் அனுபவம் பற்றிய அறிவார்ந்த புரிதல் அவனுக்கு அத்தகைய நிலைப்பாட்டை வழங்கத் தவறிவிட்டது. எனவே அவன் தனது முந்தைய அனுமானங்கள் மற்றும் வழிகளை மறுபரிசீலனை செய்து, தனது சுய வாழ்வில் அறிவார்ந்த புதிய பரிசோதனைகளைச் செய்யத் தொடங்குகிறான்.

வாழ்க்கையின் இத்தகைய புதிய பரிசோதனை, உலகில் தற்போதைய சராசரி நடைமுறை பழக்க வழக்கத்திலிருந்து உணர்வைத் துண்டிக்கச் செய்கிறது. இது, தன்னுள் ஒருவழி நிலைப்பாட்டைக் கண்டறிந்து, வேண்டிய நம்பிக்கையை அடைய வழி வகுக்கும் என்பதைக் குறிக்கிறது. இதுவே உண்மையான தேடுதலின் ஆரம்பம். பொதுவாக, அத்தகைய நபர், தன்னை விட முன்னேறியதாகக் கருதும் பிறரின் உதவியுடன், புதிய பரிசோதனையை மேற்கொள்கிறார்; மேலும், அரிதான சந்தர்ப்பங்களில், அவர் இறைநிலையை அடைந்த ஒரு குருநாதரின் (சத்குருவின்) வழிகாட்டுதலின் நன்மையைப் பெறுகிறார். இதுபோன்ற தருணங்களில், சராசரி வாழ்க்கை முறையிலிருந்து அவர் விலகிச் செல்வது கணிசமான அளவில் இராது, மேலும் அவர் தனது புதிய பரிசோதனையின் விளைவாக ஆன்மீக ஆர்வலரின் வாழ்க்கை முறைகளை அவரது அவதானிப்பு மூலமாக அடையப் பெறுகிறார் அல்லது பாரம்பரிய வழிமுறைகளால் தெரிந்து கொள்கிறார்.

ஆனால் அத்தகைய வழிகாட்டுதலின் உதவியின்றி, பரிசோதனையில் ஈடுபடும் வேளையில், அனைத்து தடை அல்லது பிடிப்புகளை இழக்க நேர்ந்தால், அந்த நபர், தனது சுய விருப்பத்தில், புரிந்து கொண்டதற்கிணங்க, வழக்கத்திற்கு மாறான வாழ்க்கை முறைகளை கையாள நேரிடும். இதன் விளைவாக, இந்தச் செயல்முறை பெரும்பாலும் குழப்பமான பாதைகளிலும், சில சமயங்களில் வாழ்க்கையின் பிற்போக்குத்தனமான வழிகளிலும் அழைத்துச் செல்லும். வாழ்க்கையின் சராசரி நடைமுறையைக் கைவிடும் வேளையில், அது எண்ணற்ற வகையான சுய-உருவாக்கம், தற்காலிக வாழ்க்கை முறை மற்றும் செயல்பாடுகளுக்கு இடமளிக்கிறது. இந்தச் செயல்பாட்டு முறைகள் இயல்பிலிருந்து பெரும்பாலும் மாறுபடலாம், மேலும் இவற்றிலிருந்து பின்பற்றப்படும் வாழ்க்கை முறைகள் சராசரி வாழ்க்கை முறையிலிருந்து

விலகும் அளவிற்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றலாம். ஆனால் அவை உண்மையான பைத்தியக்காரத்தனம் அல்லது உள்ளார்ந்த தேடுதலின் பாதையில் பின்னடைவு என்று அர்த்தமாகாது.

அத்தகைய நபர், அடிக்கடி, அவரது தனிப்பட்ட வழியில், கடவுளை அல்லது உண்மைப்பொருளைத் தீவிரமாகத் தேடுவதில் தவறாமல் உள்ளூர வழிநடத்தும் சக்தியாகத் திகழ்கிறார். அவரது தன்னிச்சையான தன்மையில் மேலும் அதன் மூலம் விளையும் அசாதாரண நடத்தையில், அவருக்கென தர்க்கரீதியான ஒரு முறை இருக்கும்; அவரது உள்நோக்க சக்தியின் வெளிச்சத்தில் பார்த்தால் மட்டுமே, அவருடைய விசித்திர பாங்கும், விபரீத நடத்தையும் புரியும். அவர், அவருக்காக உருவாக்கிய எழுச்சியூட்டும், உயிர்த்தன்மையுள்ள செயல்பாட்டு முறையின் நோக்கத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்காவிடில், அவற்றின் உண்மையான முக்கியத்துவத்தைப் பாராட்ட முடியாது. அவர் தேர்ந்தெடுத்த வழிமுறை வினோதமாக, புறம்பானதாக, மற்றும் பைத்தியக்காரத்தனத்தின் சாயலில் இருப்பதாகத் தோன்றலாம்; ஆனால் இப்படி நடப்பதன் காரணம் என்னவெனில், அது, அதன் உள் சூழலிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, இயந்திரத்தனமாகவும் மேலோட்டமாகவும், இயல்பான வெளிப்புற மற்றும் வழக்கமான நடவடிக்கைகளால் மதிப்பிடப்படுகிறது. பெரும்பாலும், வெளியளவில் பைத்தியமாகத் தோன்றும் நபர்களின் வாழ்க்கைக்கு உயிரூட்டம் தரும் குறிப்பிட்ட முறையிலான நடத்தையின் உள் நோக்கம், கடவுளாகிய உண்மைப்பொருள் மட்டுமே; அது உள்ளூர வழிநடத்தும் சக்தியாக, அதேவேளையில் அவர்களின் வெளிப்புற நடத்தை விபரீதமாக இருந்தாலும், அவர்கள் உள் ஆன்மீகப் பாதையில் வெகுவாக முன்னேறிச் செல்கின்றனர். அவர்கள் உண்மையாகவும், நேர்மையாகவும், முழு மனதுடனும் கடவுளுக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ளனர்; அவர்கள் நித்திய, நிரந்தர வாழ்வின் மதிப்புகளைத் தேடுவதில் தெய்வீக வெறி பிடித்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் இறை உணர்வை அடையும் ஏக்கத்தில் முழு அங்கமாகத் திகழ்கின்றனர். அத்தகைய நபர்கள் சாதாரண அர்த்தத்தில் பைத்தியம் அல்ல; அவர்கள் கடவுளை முழுமையாக நேசிக்கும் இறை பைத்தியங்கள்; மேலும் அவர்கள் மஸ்துகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

# நிகழ்வுகளின் காலவரிசை

**1941**
- டிசம்பர் 29 , மெஹர் பாபா குழுவுடன் மெஹராபாத்திலிருந்து 'கும்பமேளா' நிகழும் அலஹாபாத்திற்குப் பயணம்.

**1941**
- டிசம்பர் 30 -31, கும்ப மேளாவில் 7000க்கும் அதிகமான சாதுக்களின் பாதங்களைத் தொடுதல்.

**1942**
- ஜனவரி 01 - 06, ஸெக்கந்திராபாத், ஷோலாபூர் வழியாக மெஹராபாத் வருகை. ஜனவரி 15 - 21, தென்னிந்தியா ஹூப்ளி, நாகப்பட்டினம், நாகூர் பயணம்

**1942**
- பிப்ரவரி 02 - 05, டெஹ்ரா டூன் வருகை.
- பிப்ரவரி 11 - 15, இமயமலை அருகில் (ஹரித்வார், ரூர்க்கி) மஸ்த் பயணம்

**1942**
- பிப்ரவரி 15 - 20, அஜ்மீர், ஜோத்பூர், பரேலி, மொராதாபாத், டெஹ்ரா டூன் மஸ்த் பயணம் - டெஹ்ரா டூன் உள்ளூர் பகுதிகளில் மஸ்த் தொடர்புகள்.

**1942**
- மார்ச் 12 - 22, மஸ்த் பயணம் - கோரக்பூர், சீதாபூர், பரேலி - டெஹ்ரா டூன்
- பிப்ரவரி - மார்ச், நான்கு செய்திகளை அரசியல் தலைவர்களுக்கு வழங்கினார்

**1942**
- ஏப்ரல் 10, காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் பற்றிய விளக்கம்
- ஏப்ரல் 11 - 15, மெஹர் பாபாவின் மண்டலி காந்தியுடன் சந்திப்பு

**1942**
- ஏப்ரல் 25 - மே 24, மஸ்த் பயணம் - டெஹ்ரா டூன் - ராவல்பிண்டி,ஸியால்கோட், லாஹூர், ஹரித்வார், ரிஷிகேஷ், நேபாளம், பூட்டான் எல்லை - டெஹ்ரா டூன்

**1942**
- மே 26 - ஜூன் 30, பெண் மண்டலியுடன் ரிஷிகேஷ், ஹரித்வார் - மஸ்த் பயணம் - டெஹ்ரா டூன் வருகை.

**1942**
- ஜூலை 10 - 30, காத்கோடம், பரேலி, நஜிபாபாத், ஸாஹன்பூர், அஜ்மீர், புஷ்கர்
- ஆகஸ்ட் 03, டெஹ்ரா டூன் - 'காம்ரேட்' நாளிதழில் இளைஞர்களுக்கான செய்தி

**1942**
- செப்டம்பர் 10, மெஹர் பாபா மண்டலியுடன் லோனவாலா வருகை.
- அக்டோபர் 20-29, தென்னிந்திய மஸ்த் பயணம் - நாகப்பட்டினம், ஹூப்ளி

**1942**
- நவம்பர் 21, பாபாவின் செய்தியை - மும்பை, பூனா, நாக்பூர், ஹைதராபாத், அலஹாபாத், லாஹூர், ஷோலாப்பூர் நகரங்களில் பரப்பும் தீர்மானம்

**1942**
- டிசம்பர் 04 - 22 , ராய்பூர் மஸ்த் பயணம் - மெஹராபாத் வருகை.
- டிசம்பர் 27, தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேர் அடங்கிய குழுவின் சிறப்பு கூட்டம்

| | |
|---|---|
| 1942 | • டிசம்பர் 28, முதல் முறையாக மெஹராவின் பிறந்தநாள் மெஹராபாத்தில் பகிரங்கமாகக் கொண்டாடப்பட்டது |
| 1943 | • ஜனவரி 11, மெஹராபாத் கூட்டத்தின் சிறப்பு செய்தி, ஆகா கான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்ட காந்திக்கு வழங்கப்பட்டது |
| 1943 | • ஜனவரி 24 - பிப்ரவரி 02, குல்தாபாத் மஸ்த் பயணம்<br>• பிப்ரவரி 10, மஹாபலேஷ்வர் பயணம் |
| 1943 | • பிப்ரவரி 14, மெஹர் பாபாவின் 49ஆவது பிறந்தநாள் - மும்பை, பூனா, நாக்பூர், ஷோலாபூர், மதராஸ், லாஹூர் நகரங்களில் சிறப்பு கூட்டங்கள் |
| 1943 | • பிப்ரவரி 25, ஷிரீன்மாய், மெஹர் பாபாவின் தாயார் (மெமோ) 65 வயதில் காலமானார் |
| 1943 | • மார்ச் 09 - 10, ஷோலாபூர், அக்கல்கோட் விஜயம்<br>• மார்ச் 11 - 19, தென்னிந்தியாவில் விஜயவாடா, கோட்டலங்கா வருகை |
| 1943 | • மார்ச் 19 - ஏப்ரல் 17 , பிலார் வனப்பகுதியில் 'ஜல்கி' பங்களாவில் மண்டலியுடன் தங்கியிருந்து மெஹராபாத் வருகை |
| 1943 | • மே 14 - 19, மெஹராபாத் சிறப்பு கூட்டம் - 125 இந்திய ஆண் அன்பர்கள் பங்கெடுப்பு - மெஹர் பாபாவின் 'தெய்வீக கருப்பொருள்' விளக்கம் |
| 1943 | • மே 21 - 26, மெஹர் பாபா பிலார் பயணம், நீலப்பேருந்தில் ஆண், பெண் மண்டலியுடன் மெஹராபாத் வருகை. |
| 1943 | • ஜூலை 6 - ஆகஸ்ட் 19, லாஹூர் மஸ்த் பயணம், மெஹராபாத் வருகை. மீண்டும் லாஹூர் பயணம் |
| 1943 | • செப்டம்பர் 02 -11, மெஹர் பாபா காஷ்மீர், ஸ்ரீநகர், ராவல்பிண்டி, ஜஸ்கிரான் மலைப்பகுதி, ஹரிபூர் மஸ்த் பயணம். |
| 1943 | • அக்டோபர் 14 - நவம்பர் 21, கொல்கத்தா, லக்னோ நகரங்களில் 'ஏழை நிகழ்ச்சி' & ஜலந்தர், லாஹூர், அமிர்தசரஸ் பொற்கோயில் விஜயம் |

**1943**
- நவம்பர் 30 , மெஹர் பாபா மண்டலியுடன் பிம்பல்காவ்ம் (மெஹராஸாத்) விஜயம்

**1943**
- டிசம்பர் 30 -31, மெஹராவின் பிறந்தநாளை முன்னிட்டு பூனாவில் சிறப்பு தரிசன நிகழ்ச்சி

**1944**
- ஜனவரி 01 - 03, மெஹராபாத், ஔரங்காபாத் வருகை
- ஜனவரி 09, மெஹராஸாத் இல்லத்தில் தங்கத் தொடங்கினார்

**1944**
- ஏப்ரல் 1 - 10, குவாலியர், ஔரங்காபாத் மஸ்த் பயணம்; மெஹராபாத் வருகை

**1944**
- ஜூலை 07 - 14 , ராய்ப்பூர் பயணம், மஸ்த் பணி - அமராவதி, எலிச்பூர், பாஸிம், பட்நேரா, டாட்டா நகர்

**1944**
- ஆகஸ்ட் 18, ஸ்ரீநகர், காஷ்மீர் பயணம்
- ஆகஸ்ட் 25, சாஞ்சி - காஷ்மீரில் மரணம்

**1944**
- செப்டம்பர் 21 - 30, ராவல்பிண்டி, பெஷாவர், ஆஃப்கான் எல்லைப்பகுதி விஜயம் - ஆக்ரா, டெல்லி, ஔரங்காபாத் வருகை

**1944**
- அக்டோபர் 02, மர்டில் பீச், மெஹர் பாபா ஆன்மீக மையம் நிறுவுதல் தொடர்பான கடிதப் பரிமாற்றம்

**1944**
- நவம்பர் 10 - 17, நாக்பூர், ஸாவ்னேர் தரிசன நிகழ்ச்சிகள் - ஔரங்காபாத் வருகை
- டிசம்பர் 19, மெஹராபாத்தில் மாஸாஜி காலமானார்

**1945**
- பிப்ரவரி 02 - 23, ஜான்சி, ஹைதராபாத் (ஜூபிலி ஹில்ஸ்), ஸெக்கந்திராபாத் மஸ்த் பயணம் - மெஹராபாத் வருகை

**1945**
- பிப்ரவரி 25, மெஹர் பாபாவின் 51ஆவது பிறந்தநாள்
- மார்ச் 09, ஹைதராபாத் மஸ்த் பயணம்

**1945**
- மே 22-23, மெஹராபாத் - இரண்டு நாள் சிறப்பு கூட்டம்

**1945**
- ஜூலை 06 - 26, மஸ்த் பயணம் - குல்பர்கா, யாத்கிரி, தும்கூர் - தொடர்ந்து ஹைதராபாத் வருகை

**1945**
- தொடரும்...

# பொருளடக்கம்


**போர்க்கால பயணம் - கும்பமேளா, அலஹாபாத்............... 4**

**போர்க்கால பயணம் - டெஹ்ரா டூன் .................................. 21**

**ரிஷிகேஷ், காத்கோடம் & அஜ்மீர் ......................................... 52**

**டெஹ்ரா டூன், லோனவாலா & மெஹராபாத் ...................... 71**

**மஹாபலேஷ்வர், ஷோலாபூர் & மெஹராபாத்.................111**

**போர்க்கால பயணம் - லாஹூர்...........................................171**

**போர்க்கால பயணம் - கொல்கத்தா, லக்னோ .................193**

**பிம்பல்காவ்ம் & ஔரங்காபாத் ..............................................211**

**ராய்ப்பூர் & காஷ்மீர் ..............................................................246**

**நாக்பூர் & ஸாவ்னேர் .................................................................278**

**ஹைதராபாத் & மெஹராபாத்.................................................313**



மெஹர் பாபா (MEHER BABA) - **1941**

# போர்க்கால பயணம் - கும்பமேளா, அலஹாபாத்

**(Wartime Travel – Kumbha Mela, Alahabad)**

இந்தியாவில் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை, கும்பமேளா (KUMBHA MELA) என்று அழைக்கப்படும் மதம் சார்ந்த ஒரு மிகப்பெரிய திருவிழா நிகழ்ச்சி ஹரித்வார் (HARIDWAR), அலஹாபாத் (ALAHABAD), நாசிக் (NASIK), உஜ்ஜைன் (UJJAIN) நகரங்களில் அடுத்தடுத்து நடத்தப்பட்டு வருகிறது. 1942ஆம் ஆண்டில், கும்பமேளா அலஹாபாத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது; மேலும் '**விழாவில் கலந்து கொள்ளும் 7,000 சாதுக்கள் மற்றும் மஸ்துகளின் பாதங்களைத் தொட வேண்டும்**' என்ற தனது விருப்பத்தை மெஹர் பாபா தெரிவித்தார்.

இந்த ஆன்மீகப் பணியைக் குறித்து அவர் குறிப்பிடுகையில்:

**மக்களுக்கு, கற்சிலைகளிலும் சடங்கு சம்பிரதாயங்களிலும் கடவுள் இருப்பதைப் போலவே, எனது கடவுள் இந்த மஸ்துகளில் இருக்கிறார்! உங்கள் தெய்வங்கள் யாராக இருந்தாலும், நீங்களே கடவுளாக இருந்தாலும், அல்லது நான், உங்கள் குருநாதராக இருந்தாலும் - மஸ்துகள் எனது தெய்வங்கள்.**

**இன்று வரை தொடர்ந்து நடந்து வரும் இந்த மஸ்த் பணி 1942, பிப்ரவரி 15க்கு முன்பு முடிவடையும். இந்தப் பணிக்கு ஓர் இறுதி வடிவம் கொடுக்க, இப்போது கும்பமேளாவிற்குச் செல்ல விரும்புகிறேன். நான் அங்கு 7,000 சாதுக்கள் மற்றும் மஸ்துகளைத் தொடர்பு கொள்ள வேண்டும்.**

**நான் இந்தப் பணியை நிறைவு செய்து இங்குத் திரும்பி வந்த பின்னர், உபவாசம் இல்லை, ஏகாந்தவாசம் இல்லை. அப்போது எனக்குக் கடவுளும் (தெய்வங்கள்) இருக்காது. நான் தனியாக இருப்பேன், என்னுடன் எனது மண்டலியும் இருப்பார்கள்!**

பாபாவின் பணிக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய, பிளீடர், அலஹாபாத்திற்கு, பத்து நாட்களுக்கு முன்பே அனுப்பப்பட்டார். அங்கு அவர் 1938ஆம் ஆண்டில் பாபாவை முதன் முதலில் சந்தித்து, தீவிரமாகப் பின்பற்றி வந்த மாநில அரசின் உதவி ஆணையராக இருந்த ஜி.எஸ். ஸ்ரீவாஸ்தவா (G.S. SRIVASTAVA) என்ற நபரைத் தொடர்பு கொண்டார். கும்பமேளாவில் மெஹர் பாபாவின் 'அன்பின் செய்தியைப் பரப்ப' ஸ்ரீவாஸ்தவா ஏற்கனவே திட்டமிட்டிருந்தார். விபூதி, பாபாதாஸ் இருவரும் அதே நோக்கத்தில் அலஹாபாத்திற்கு வந்து கொண்டிருந்தனர். ஆனால், பாபா '**தனது சொந்த பணிகளை நிறைவு செய்து, அலஹாபாத்தை விட்டு வெளியேறும் வரை, அவர்களின் பணிகளைத் தொடங்கக்கூடாது**' என்று அறிவுறுத்தினார்.

கும்பமேளாவின் போது அவரது வீட்டில் காட்சிக்காக வைக்க, 'அவதார்' (AVATAR) என்ற தலைப்பில் ரானோ வரைந்த பாபாவின் பெரிய ஓவியம் ஒன்று ஸ்ரீவாஸ்தவாவிற்கு அனுப்பப்பட இருந்தது. ஆனால் அலஹாபாத்தை விட்டு வெளியேறும் வரை அந்த ஓவியம் ஸ்ரீவாஸ்தவாவின் கைகளைச் சென்றடையக்கூடாது என்று பாபா குறிப்பிட்டார்.

அலஹாபாத் செல்லும் பாபாவின் முடிவு அறிவிக்கப்பட்ட மறுகணமே, மாயா தனது வழக்கமான எதிர்ப்பை உருவாக்குவதாகத் தோன்றியது. இராணுவத் தேவைகள் காரணமாக அலஹாபாத் செல்லும் அனைத்து சிறப்பு, விரைவு ரயில்களையும் இந்திய அரசு ரத்து செய்தது. ரயில்கள் மற்றும் ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது.

1941, டிசம்பர் 29 திங்கட்கிழமை அதிகாலையில், பாபா, மெஹராபாத்திலிருந்து புறப்பட்டு, பைதூல், எரச், சகன், குஸ்தாஜி, காக்கா, பெண்டு, ஸவக் ஆகியோருடன் ரயில் நிலையத்திற்குச் சென்றார். சிறப்பு ராணுவ துருப்பு ரயில்களால் தடங்கள் தடுக்கப்பட்டுள்ளதாகவும், அலஹாபாத் ரயில் வரும் நேரம் அறிவிக்கப்படும் என்றும் ரயில் நிலையத்தில் தெரிவிக்கப்பட்டது. நீண்ட கால தாமதத்தைத் தவிர்க்கும் நோக்கத்தில், ஸரோஷ் ஏற்பாடு செய்த தனியார் பேருந்தில், மன்மாட் ரயில் சந்திப்புக்குச் செல்ல பாபா முடிவு செய்தார்.

வழியில், அவர்கள் ஷிர்டி, ஸாக்கோரி இரண்டு இடங்களையும் கடந்து சென்றனர்; பாபா, அவருக்கும், உபாஸனி மஹாராஜுக்கும் இடையேயான கடைசி சந்திப்பு நடந்த தஹிகாவ்ம் (DAHIGAON) கிராமத்தைச் சுட்டிக்காட்டினார். பாபா, அவரது திட்டங்களை கடைசி நேரத்தில் மாற்றி, பேருந்தில் மன்மாட் ரயில் சந்திப்பு வழியாகப் பயணிக்கச் செய்த நிகழ்வுகள் உண்மையில் 'எதிர்பாராத' திருப்பமா, அல்லது, 'அதற்கு ஆழ்ந்த முக்கியத்துவம் உள்ளதா' என்று ஆண் மண்டலி தமக்குள் ஆச்சரியப்பட்டனர்: அதாவது, பாபா தனது இரண்டு குருநாதர்கள் வாழ்ந்த ஆசிரமங்களின் ஆன்மீக சூழல்களை முதலில் கடந்து சென்றபின், தனது முக்கியமான பணியைச் செய்யப் போகிறார்.

அடுத்ததாக, பேருந்து மன்மாடிலிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்த அங்காய் மலையை (ANKAI HILLS) நெருங்கியபோது, பாபா காலை உணவுக்காக ஒரு நீரோடைக்கு அருகில் நிறுத்த முடிவு செய்து, ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் மண்டலியுடன் அமர்ந்தார். இந்த மலையில்தான் பாபா, குஸ்தாஜி, பிளீடர், ஸவக், பபானந்தா ஆகியோரை ஏகாந்தவாசம் மேற்கொள்ள அனுப்பி வைத்தார்; மேலும், பப்பா ஜெஸவாலாவின் 'கொடுங்கோல் ஆட்சியை' எதிர்த்து குஸ்தாஜி கிளர்ச்சி செய்த இடமும் இதுதான்.

இதற்கிடையில், மன்மாட் ரயில் நிலையத்தைச் சென்றடைந்தபோது, ரயில் பெட்டியில் இடம் கிடைப்பது குறித்து மண்டலி ஆர்வமாக இருந்தனர். ஆனால், அவர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும் விதத்தில், ரயில் பல மூன்றாம் வகுப்பு பெட்டிகளோடு ஏராளமான அறைகளுடன் வந்தது. அவர்கள்

தங்களுக்கென கிட்டத்தட்ட ஒரு முழு பெட்டியை ஆக்கிரமிக்க முடிந்தது. பாபா உடனே இவ்வாறு குறிப்பிட்டார், **“ரயில் பெட்டிகள் இடையில் பிரிக்கப்படாமல், நேரடியாக அலஹாபாத்திற்கு செல்கிறதா என்பதை மட்டும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.”** மண்டலி அதை விசாரித்து, அலஹாபாத்திற்கு நேரடியாகச் செல்லும் என்பதை ஊர்ஜிதம் செய்தனர்.

ஆனால் வழியில், அன்று நள்ளிரவில், அனைவரையும் கீழே இறங்கக் கூறி, சுமைக் கூலியாட்கள் கூச்சலிட்ட வேளையில் அவர்கள் தூக்கத்திலிருந்து விழித்தனர். இந்தப் பெட்டி, ரயிலிலிருந்து பிரிக்கப்படுவதாகக் கண்டறியப்பட்டது. ஆண் மண்டலி ரயில்வே அதிகாரியை சபித்து வாக்குவாதத்தில் ஈடுபடத் தொடங்கினர், ஆனால் பாபா தலையிட்டு, **“வாக்குவாதத்தில் நேரத்தை வீணடிப்பதற்கு பதிலாக, நாம் வேறு ஒரு பெட்டிக்கு மாற முடியுமா என்று விரைவாக முயற்சி செய்யுங்கள்; இல்லையேல், ரயில் புறப்பட்டுவிடும்”** என்று கூறினார்.

ரயிலின் கடைசி பெட்டியில் மண்டலி ஒரு சிறிய இடத்தைக் கண்டுபிடித்து, அனைவரும் தத்தமது பொருட்களுடன் விரைந்தனர். அலஹாபாத்திற்கான எஞ்சியுள்ள பயணத்தின் போது, வினோதமான தோற்றத்தில் ஒரு நபர் அவர்கள் பயணம் செய்த பெட்டியில் நுழைந்தார்; அவருடைய வேடிக்கையான கேளிக்கைகள், பாபாவை மகிழ்வித்தது. குள்ளமான அந்த மனிதனுக்கு ஒரு பெரிய, வட்டமான தொப்பை, மெல்லிய கால்கள் மற்றும் ஒரு பெரிய தலை இருந்தன. அவர் எரச்சிடம் அவரது சோகக் கதையைக் கொட்டிய வேளையில், பாபா, எரச்சிடம் பத்து ரூபாய் கொடுக்குமாறு சைகையால் தெரிவித்தார். அவர் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவரது துயரங்களைக் கேட்கும் அனைவரின் காதுகளையும் நிரப்பத் தொடங்கினார். பாபா மீண்டும் அவருக்கு பத்து ரூபாய் கொடுத்தார், எனவே அவர் தனது கஷ்டங்களை மேலும் விரிவுபடுத்தினார். இப்படி, காலை பத்து மணிக்கு ரயில் அலஹாபாத் ரயில் நிலையம் சென்றடைந்த நேரத்தில் அவருக்கு மேலும் பத்து ரூபாய் வீதம் ஐந்து முறை வழங்கப்பட்டது; அதற்குப் பின்னர், அவரது வருமானமும் நின்றுவிட்டது. பாபா அந்த மனிதனால் மிக்க மகிழ்ச்சி அடைந்தார், வெளிப்படையான உண்மையான ஆர்வத்துடன் அவரின் கதைகளுக்குச் செவிமடுத்தார்; ஆனால் அந்த மனிதனுக்கு யாருடைய கைகளிலிருந்து உண்மையிலேயே பிரசாதத்தைப் பெறுகிறார் என்பது பற்றி குறைந்தபட்ச யோசனையும் இல்லை. (உண்மையில் இது ‘கையடக்கமாகக்’ கொடுக்கப்பட்டது!)

குழு ஒரு ஹோட்டலில் தங்குவதற்கான ஏற்பாடுகளை பிளீடர் செய்திருந்தார். சற்று ஓய்வு மற்றும் சிற்றுண்டி அருந்திய பிறகு, பாபா ஒரு சில மண்டலியுடன் திருவிழா மைதானங்களுக்குச் சென்றார். அங்குச் சென்றதும், 7,000 சாதுக்களின் கால்களைத் தொட்டு வணங்குவது என்பது அத்தனை எளிதான காரியமல்ல என்பதை அவர்கள் விரைவில்

கண்டுகொண்டனர். வானிலை அதிக வெப்பமாகவும், புழுக்கமாகவும் இருந்தது, நதியின் அருகிலமைந்த மேளா மைதானம் மணல் நிறைந்து, இரண்டு மைல் சுற்றளவு நீளத்தில் இருந்தது. சாதுக்கள் எல்லா இடங்களிலும் பரவியிருந்ததால், இது ஒரு கடினமான பணியாகத் தோன்றவே, எளிதான வேறு வழிகளையும், முறைகளையும் மண்டலி பரிந்துரைத்தனர். ஆனால், பாபா அவர்களின் அனைத்து யோசனைகளையும் நிராகரித்து அவருக்கே உகந்த முறையில் செய்யும் நோக்கத்தில் புறப்பட்டார்.

கடும் வெயிலின் தளர்வான மணலில் ஏறக்குறைய நான்கு மணி நேரம் நடந்து கொண்டே புலனாய்வு செய்து வந்த பாபாவை மண்டலி பின்தொடர்ந்தனர். முழு நீள இடத்தையும் பார்வையிட்ட பிறகு, பாபா, தனது தொடர்புகளை உருவாக்கத் தொடங்கினார்.

அவர் முதல் சாதுவின் கால்களைத் தொட்ட போது சூரியன் கீழ் வானத்தைத் தொட்டு இருளை நிரப்ப ஆயத்தமானது. அந்த மனிதன் நேரடியாக சூரியனை நோக்கி வணங்கி, 'கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் கூறுங்கள்!' என்று குரல் கொடுத்தார். அந்த சாது வழக்கமான நீண்ட ஆடையும், தலையில் பொதுவாக ஐரோப்பியர்கள் அணியும் ஒரு சூரிய தொப்பியும் அணிந்திருந்தார். இந்த முதல் தொடர்பு, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளின் கலவையாக இருந்த ஒரு சாது என்பது குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

பாபா தொடர்புகொண்ட இரண்டாவது சாது, சுமார் 30 வயது, இளமையான, அழகான தோற்றத்துடன் இருந்த அவர், பாபாவை தூரத்திலிருந்து பார்த்ததும், சிறிது நேரம், அளப்பரிய மகிழ்ச்சியில் உணர்ச்சி பொங்க நடனமாடத் தொடங்கினார். ஆடிய வேகத்தில் அவர் களைத்துப்போய் அங்கேயே அமர்ந்தார். பாபா அவரை மிகுந்த பாசத்துடன் ஒரு பிரியமான குழந்தையைத் தழுவுவது போலத் தழுவினார்! அந்த இளம் சாது முற்றிலும் நிர்வாணமாக இருந்தார், அவரது உடல் தூசி மற்றும் மணலால் மூடப்பட்டிருந்தது. அவர் நங்கா மஸ்த் (NANGA MAST - நிர்வாண மஸ்த்) என்று அழைக்கப்பட்டார். கண்களை மேலே தூக்கிய வண்ணம், வெண் விழிகள் மட்டும் வெளியே தெரியும் விதத்தில், எவர் மீதும் அல்லது எந்தப் பொருட்கள் மீதும் மோதாமல், அலஹாபாத் நகரத்தைச் சுற்றி நடந்து வருவது வழக்கம். ஆனால் அவரது உரையாடல் எதுவும் அறிவிற்குப் புலப்படாமல் இருந்தது.

அருகிலிருந்த வெற்றுக் கூடாரம் ஒன்றில் பாபா, அவரைத் தொடர்பு கொண்டார்; அரை மணி நேரத்திற்குப் பின்னர், அவர் திடீரென கூடாரத்தின் கூரையின் கீழே இருந்து தவழ்ந்து வந்தார்; ஆனால், இந்த சந்திப்பில் பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்து, பின்பு மண்டலிக்குத் தெரிவித்தார், **"ஆரம்பமே அற்புதமாக உள்ளது; அவர் இறை அன்பின் ஆழ்கடலில் மூழ்கிய ஆத்மா. 'என்னை மகிழ்ச்சியாக இருக்கச் செய்வது என்ன?' என எவரேனும் என்னிடம் கேட்பதானால், எனது பதில், இன்று நீங்கள் பார்த்ததைப்**

**போலவே 'ஒரு மஸ்தைத் தழுவிக் கொண்டிருப்பது ஆகும்' என்று நான் கூறுவேன்.**"

இவர்களைப் போன்ற சாதுக்கள் மற்றும் மஸ்துகளின் அன்பைக் குறிப்பிட்டு, பாபா மேலும் கூறுகையில், "**இத்தகைய அன்பு, பொய்யும் போலியுமான அகந்தையை விழுங்கி விடுகிறது, மேலும் ஒருவரின் கீழ் நிலை ஆசைகளை நிர்மூலமாக்குகிறது. தெய்வீக உணர்வு உருவாகி உயர்வான சுய தன்மையை உறுதிப்படுத்துகிறது. பரமாத்மா, பிரியமான ஓர் ஆத்மாவுடன் ஒன்றிணைவதைப் புரிந்துகொள்வது அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்டது, அதேபோல், இந்தக் கடவுளின் உண்மையான காதலனின் நிலையை விவரிப்பது என்பதும் இயலாத காரியம்**" என்று விளக்கினார்.

முதல் நாளன்று மாலை, பாபா, 359 சாதுக்களின் பாதங்களைத் தொட முடிந்தது. அனைத்து மண்டலியும் தளர்ந்து போய் சோர்வடைந்த நிலையில் இருந்தனர், ஆனால் எவரும் அதைக் குறித்து பாபாவிடம் புகார் கூறவில்லை. அவர்களின் துயரைப் போக்கும் விதத்தில், பாபா, அவரும் சோர்வாக இருப்பதாகவும், பணியை மீண்டும் மறுநாள் தொடரலாம் என்றும் கூறினார்.

அடுத்த நாள், டிசம்பர் 31, பாபா அதிகாலையில் எழுந்து, ஹோட்டலிலிருந்து நடந்து சென்று, ஆறு மணியளவில் சாதுக்களின் பாதங்களை வணங்கும் பணியைத் தொடர்ந்து, ஒவ்வொருவரும் ஒரே இடத்தில் இருக்குமாறு அறிவுறுத்தியதன் மூலம், பாபா மண்டலியின் கடமைகளை எளிதாக்கினார்.

இதன் விளைவாக, பாபா மட்டுமே மென்மையான மணலில் தொடர்ந்து நகர்ந்தார், அதே நேரத்தில் மண்டலி ஒரே இடத்தில் இருந்துகொண்டு, அவர் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு வந்தபோதுதான் அவருடன் இணைந்தனர்.

பாபா அங்குமிங்கும் நகர்ந்து, பாதங்களைத் தொடுவதற்காகக் குனிந்து, குன்றாத ஆற்றலுடன் எழுந்தார். அவர் ஓர் இடத்திலிருந்து மற்றுமோர் இடத்திற்கு நகர்ந்தது மட்டுமல்லாமல், அந்தந்த இடத்தில் கண்டுகொண்ட நூற்றுக்கணக்கான சாதுக்களின் பாதங்களைத் தொடுவதற்கு அவர் குனிந்து எழும்ப வேண்டியிருந்தது; சில சாதுக்கள் படுத்துக் கொண்டிருந்தனர், சிலர் நொண்டு நடை போட்டு நடந்தனர், சிலர் தாமாகவே நடந்து சென்றனர், சிலர் குறுகிய குடிசைகளில் சிறிய, தாழ்வான கதவுகளை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தனர். பாபா பதினொரு மணி வரை தொடர்ந்து ஐந்து மணி நேரம் இந்தப் பணியைச் செய்தார், பின்பு ஹோட்டலுக்குத் திரும்பி வந்தார்.

தாமதமாகக் காலை உணவை உண்டு, சுமார் இரண்டு மணி நேர ஓய்விற்குப் பின்னர், அலஹாபாத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் அமைந்த நைனி (NAINI) கிராமத்திற்கு மண்டலியை அழைத்துச் சென்றார்; அங்கு அவர் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஒரு மகத்தான மஸ்தைத் தொடர்பு கொண்டார்; காதிர் மியான் (QADIR MIAN) என்று அழைக்கப்பட்ட அவர், நான்காவது ஆன்மீகத் தளத்தின் அதீத சக்திகளைப் பயன்படுத்தினார். அவர்கள்

அந்தத் துறவியை முற்றிலும் நிர்வாணமான, நீண்ட, இருண்ட முகத்துடன், நட்பினிமையற்ற தோற்றத்துடன் இருப்பதைக் கண்டனர்; இருள் நிறைந்த அறைக்குள் ஒரு கட்டிலில் அமர்ந்திருந்தார், (இவ்வளவு வெப்பமான காலநிலையிலும்) உள்ளே நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அந்தத் துறவி தேநீர் விரும்பி அருந்துவதாகத் தெரிய வந்ததும் பாபா, ஒரு பெரிய கெட்டிலில் தேநீர் கொண்டு வருமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார்.

காதிர் மியான் அவரது வாசலில் பாபா மற்றும் மண்டலியைப் பார்த்ததும், சாந்தமான மனநிலையில் இருந்தவர், படுக்கையில் இருந்து எழுந்து, அவர்களை எதிர்பார்த்து இருந்தது போல், அன்புடன் வரவேற்றார். அவர் பைதூலின் கையிலிருந்த கெட்டிலை வாங்கி நெருப்பில் வைத்து, மண்டலியை அவரது கட்டிலில் அமரச் சொன்னார். அவர் பாபாவை அறையின் ஒரு மூலையில் தனியாக அமரும்படி கேட்டுக்கொண்டார். மண்டலியின் உடல்நிலை குறித்து பொதுவாகப் பேசுவது போலவும், அனைவருக்கும் தேநீரை ஊற்றி வழங்குவது போலவும் பாவனைச் செய்யும் வேளையில், பாபாவின் மீது திருட்டுப் பார்வையை அவர் அடிக்கடி பதித்தார். மஸ்த், பாபா இருவரும் அந்தச் சிறிய, இருள் நிறைந்த அறையில், ஒளிரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். காலம் இதை இவ்வாறு பார்த்தது: “பாபாவும், மஸ்தும் தங்கள் கண்களால் உரையாடிக் கொண்டிருந்தனர், ஆனால் அந்த உரையாடலின் உள் அர்த்தத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.”

காதிர் மியானுடன் அரை மணி நேரம் இருந்து, பின்பு பாபாவும் மண்டலியும் அலஹாபாத்திற்குப் புறப்பட்டு, நேரடியாக, மேளா மைதானத்திற்குச் சென்றனர். மாலை ஆறு மணி முதல் ஒவ்வொரு சாதுவிற்குப் பின் சாதுவின் பாதங்களை வணங்கும் பணியைத் தொடங்கி மூன்று மணி நேரம் அதைத் தொடர்ந்தார். அந்த நேரத்தில் அவர் 7,000 சாதுக்களின் பாதங்களைத் தொடுவதன் மொத்த எண்ணிக்கையை மிஞ்சிவிட முடிந்தது. காலையிலும் மாலையிலும் அவர்களின் பிரார்த்தனை நேரங்களிலும், இலவச உணவு விநியோகிக்கப்பட்ட பெரிய முகாம்களில் பாபா அவர்களைத் தொடர்பு கொள்ள முடிவு செய்தார், ஏனெனில் அந்த சமயங்களில் நூற்றுக்கணக்கான சாதுக்கள் ஒன்றுதிரண்டு வருவதால், பலர் அடங்கிய குழுவை எளிதாகத் தொடர்பு கொள்ள முடிந்தது.

ஹோட்டலுக்குத் திரும்புவதற்கு முன்னர், அவர் இளம், நிர்வாண மஸ்தைக் கண்டுபிடித்து, அரை மணி நேரம் அவருடன் அமர்ந்தார். கும்பமேளாவில் சந்தித்த ஆயிரக்கணக்கான சாதுக்களில், இந்த இளைஞன் மட்டுமே பாபாவை மகிழ்வித்த உண்மையான, மேல்நிலை ஆத்மா. பாபா அவரை “**மிகப்பெரிய துறவி**” என்று குறிப்பிட்டார்.

சோர்ந்துபோன பாபா ஒரு டம்ளர் இஞ்சி சோடாவை மட்டுமே அருந்தி, படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு, சூடான நீரில் குளியல் தொட்டியில் நீராடினார். அடுத்த நாள், 1942 ஜனவரி 1 வியாழக்கிழமை, பாபா காலை ஐந்து மணியளவில் எழுந்து, தேநீர் அருந்தி - குறிப்பாக அவரது பணி திருப்திகரமாக

முடிந்த நல்ல மனநிலையில் - அவர்கள் அலஹாபாத்திலிருந்து மும்பை மெயிலில் புறப்பட்டனர்.

மெஹர் பாபா அலஹாபாத் நகரத்திலிருந்து புறப்பட்ட அந்த நாள், மெஹராபாத்திலிருந்து அவரது இயற்கை வடிவளவிலான உருவப்படம் வந்தது. ஸ்ரீவாஸ்தவா, பாபாதாஸ், விபூதி, நாராயண் ஸிங், சதுர்வேதி (CHATURVEDI), தீர்த்ராஜ் பாண்டே (TIRTHRAJ PANDE) ஆகியோர் கும்பமேளாவில் தமது பணிகளை தீவிரமாகத் தொடங்கினர். ரானோவின் ஓவியம் இசையுடன் கூடிய ஒரு பெரிய அணிவகுப்பில் கொண்டு செல்லப்பட்டது, மேலும் மெஹர் பாபாவின் கொள்கை, கோட்பாடுகள் மற்றும் அவரைப் பற்றிய செய்தி, தகவல்களுடன் 8,000 துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. ஓவியத்தின் தரிசனத்தைப் பெற ஆயிரக்கணக்கானோர் ஸ்ரீவாஸ்தவாவின் இல்லத்திற்கு வந்தனர். இப்போது ஸ்ரீ பாபாவை தரிசனம் செய்துகொண்டிருந்த அவர்களுக்கு, ஆயிரக்கணக்கான சாதுக்களின் காலடிகளை வணங்கி, இரண்டு நாட்கள் அவர்கள் மத்தியில் இரகசியமாக இருந்து, திரும்பிச் சென்றது தெரியாது.

மெஹர் பாபா ஸெக்கந்திராபாத்தில் (SECUNDERABAD) சிறிது நேரம் மஸ்த் பணிக்காக நின்று, பின்பு ரயிலில் பயணத்தைத் தொடர்ந்தார். ஸெக்கந்திராபாத் மற்றும் ஷோலாபூர் நகரங்களுக்கு இடையே ரயிலில், மனதைத் தொடும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பாபா மூன்றாம் வகுப்பில் அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி, உருவை மாற்றி பயணம் செய்து, சாதாரண ஆடையும், காஷ்மீர் வகை ஃபர் தொப்பி மற்றும் இருண்ட சூரிய கண்ணாடிகளை அணிந்திருந்தார். ரயில் முழுவதும் நிரம்பியிருந்தது, பெட்டியில் நுழைய ஒரே வழியாக ஜன்னல்கள் மட்டுமே இருந்தது. ஒரு ரயில் நிலையத்தில், நீண்ட, வெண் தாடியுடன் ஒரு வயதான முஸல்மான், பாபா இருந்த பெட்டிக்கு, ஐந்து வயது சிறுவனுடன் ஓடி வந்து, பயணிகளிடம் உள்ளே அனுமதிக்குமாறு கெஞ்சினார். அவர்கள் ஏற்கனவே கூட்டம் அதிகமாக இருந்ததால் அது சாத்தியமில்லை என்று கூற, உள்ளே இருந்த பயணிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர். ரயில் புறப்படும் ஒலி எழுப்பியதும், அந்த முதியவர் மனமுடைந்து, "கடவுளின் நிமித்தம், குழந்தையை உள்ளே போக விடுங்கள்!" என்றார்.

இந்த நேரத்தில், பாபா '**அந்தப் பெரியவருக்கு உதவவும், சிறுவனை உள்ளே வர அனுமதிக்குமாறும்**' மண்டலிக்கு உத்தரவிட்டார். சக பயணிகளுடன் நடந்த உரத்த வாக்குவாதங்களுக்கு மத்தியில், மண்டலி, சிறுவனை ஜன்னல் வழியாக உள்ளே அழைத்து வந்து, பாபாவின் அருகில் அமரச் செய்தனர். அந்த முதியவர் அடுத்த பெட்டியை நோக்கி விரைந்து, ரயிலில் ஏறிக்கொண்டார். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும், சிறுவன் பத்திரமாக இருப்பதை ஊர்ஜிதம் செய்ய மீண்டும் மீண்டும் திரும்பி வந்துகொண்டிருந்தார்.

அந்த முதியவரின் கவலையை கவனித்த பாபா, அவருக்கும் உள்ளே இடம் கொடுக்கும்படி மண்டலிக்கு உத்தரவிட்டார். இதர பயணிகளின் கோஷம், எதிர்ப்பு மற்றும் தொந்தரவிற்கு மத்தியில் அந்த முதியவரை ஜன்னல் வழியாக உள்ளே கொண்டுவருவதில் மண்டலி வெற்றி கண்டனர். பாபா, சிறுவனை மடியில் வைத்து, அந்தப் பெரியவருக்கு சிறிது இடம் கொடுத்தார்.

பழங்கால, வயதான முஸ்லிம் பெரியவருடன் உரையாடும் போது, மண்டலி, அவர் குல்பர்கா (GULBARGA) நகரத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து, மஸ்துகள் மற்றும் சாதுக்களைப் பற்றிய அவர்களுடைய வழக்கமான கேள்விகளைத் தொடர்ந்தனர். அந்தப் பெரியவர் அவர்களின் கேள்வியைக் கேட்டு ஆச்சரியமடைந்து, "நீங்கள் ஏன் சாதுக்களைப் பற்றி கேட்கிறீர்கள்? மக்கள் அவர்களை நாடுவதில் இரண்டு தனித்துவமான நோக்கம் இருக்கும்: ஒன்று செல்வத்தையும் செழிப்பையும் பெறுவதற்காக அல்லது கடவுளுக்காக. நீங்கள் எதை நாடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"நாங்கள் அஹமதுநகரைச் சேர்ந்த பார்சிகள், ஆனால் ஆன்மீகத்தில் அக்கறை கொண்டவர்கள், சாதுக்கள் மீது ஆர்வம் உள்ளவர்கள்" என்று எரச் விளக்கினார்.

அவர்கள் அஹமதுநகரைச் சேர்ந்தவர்கள் என்று கூறியதும், அந்த முதியவர் கேட்டார், "என்ன? நீங்கள் அஹமதுநகரைச் சேர்ந்த பார்சிகள் என்று சொல்கிறீர்கள், அங்கே வசிக்கும் உங்கள் இனத்தைச் சார்ந்த மாபெரும் துறவியான மெஹர் பாபாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? ஏன் நீங்கள் இதர சாதுக்களைத் தேடி அலைய வேண்டும்?"

பாபாவின் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் தவிர்க்கும் எண்ணத்தில் மண்டலி, மெஹர் பாபாவைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது என்று பாசாங்கு செய்ய வேண்டியிருந்தது, மேலும் அவர் யார் என்று சாதாரணமாகக் கேட்டனர்.

அந்த முதியவர் அவர்களின் அறியாமையைக் கேலி செய்து சிரித்தார், "அவர் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்த ஒரு சிறந்த துறவி. அவர் ஆயிரக்கணக்கான அனைத்து சமூகத்தினராலும் வணங்கப்படுகிறார். நீங்கள் அவரைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை என்று கூறுவதை என்னால் நம்ப முடியவில்லை! மெஹராபாத்தில் அமைந்த அவரது ஆசிரமத்தில் அவரைப் பார்க்க இரண்டு முறை சென்றேன், ஆனால் அவரது தரிசனத்தை அடையப் பெறும் அளவிற்கு எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. ஒரு முறை, அவர் ஒரு வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தார், மற்றொரு முறை அவர் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். ஆனால் நான் என் உயிரை விடுவதற்கு முன்னர், அவரை சந்தித்து எனது மரியாதையைச் செலுத்துவதில் உறுதியாக இருக்கிறேன்" என்று கூறி மேலும் தொடர்ந்தார், "எனது முழுக் குடும்பத்தையும் அவரிடம் அழைத்துச் செல்ல விரும்புகிறேன்" என்றார்.

"எனது வாழ்நாளில் ஒரு முறையாவது, அவரைப் பார்க்கும் நல்லதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்க வேண்டும். நீங்கள் ஆன்மீகத்தில் ஆர்வமாக

இருந்தால் அவரிடம் செல்லுமாறு நான் திடமாக அறிவுறுத்துகிறேன்" என்று கூறி முடித்தார் அந்தப் பெரியவர்.

இந்தக் கட்டத்தில், குல்பர்கா ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப்பட்டது; அந்த முஸ்லிம், தனக்கும் சிறுவனுக்கும் இடம் கொடுத்தமைக்கு நன்றி கூறி அங்கே இறங்கினார். அவர் இறங்கிச் சென்றதும், பாபா, மண்டலியிடம் அவருடைய புகைப்படங்கள் ஏதேனும் இருக்கிறதா என்று கேட்டார். எரச் தனது படுக்கைச் சுருளிலில் இருந்து மெஹர் பாபா ஜர்னலின் நகல் ஒன்றை எடுத்தார். பாபா, அவரது சொந்த புகைப்படத்திற்கு தலை வணங்கி, அந்தப் பெரியவரிடம் அதைக் கொடுக்குமாறு, எரச்சை, இந்த வார்த்தைகளுடன் அனுப்பி வைத்தார்: **"ரயிலில் அவரது அருகில் இருந்த நண்பர் யார் என்று அவருக்குச் சொல்லுங்கள், நான் அவரையும் அவரது குடும்பத்தினரையும் ஆசீர்வதிக்கிறேன். இப்போது அவர் மெஹராபாத்திற்கு வரவேண்டிய தேவை இராது!"**

ரயில் நிலையத்திற்கு வெளியே ஒரு டோங்காவில் ஏறவிருந்த அந்த வயதானவரை எரச் கண்டுபிடித்து, பத்திரிகையை அவரிடம் கொடுத்தார். அந்த முதியவர் அதிலிருந்த மெஹர் பாபாவின் சித்திரத்தைப் பார்த்த அந்த வேளையில், எரச், பாபாவின் அடையாளத்தை அவருக்கு வெளிப்படுத்தியதும், அவர் கோபத்தில் வெடித்தார். ரயிலில் இருந்த நேரமெல்லாம் எரச் இதை ஒரு ரகசியமாக வைத்திருந்ததற்காக அவர் சீற்றமடைந்து உரத்த குரலில் திட்டினார். பாபா, எவரையும் பார்க்காமல், மறைமுகமாகப் பயணிப்பதற்கான காரணங்களை எரச் விளக்க முயன்றார்: "அவரைப் பின்பற்றும் நூற்றுக்கணக்கான பக்தர்களை ஒரு கண நேரம் கூட அனுமதிக்காத போது, ஒரு முழு மணிநேரம் அவருடன் பயணம் செய்த நீங்கள் மிகப்பெரிய பாக்கியவான்கள்."

ஆனால் அந்த முதியவர் எதற்கும் செவிசாய்க்கத் தயாராக இல்லாமல், எரச்சையும் அவரது அனைத்து 'இளம் சந்ததிகளையும்' சபித்தார். அந்த நபர் பக்கத்துப் பெட்டியில் எவ்வளவு அமைதியற்றவராக உணர்ந்தார் என்பதை விளக்கினார், அதனால்தான் அவர் அவர்களிடம் திரும்பித் திரும்பி வந்தார், ஏதோவொரு வகையில் தவிர்க்க முடியாமல் பல ஆண்டுகளாக, பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கிய பின்னர் அவரருகில் அந்த நபரை ஈர்த்தார்.

எரச், ரயிலில் ஏறுவதற்காக திரும்பி விரைந்தபோது, அந்த முதியவரும் அவரைப் பின் தொடர்ந்து ஓடினார். எரச் ரயிலில் குதித்து ஏறிய அதே நேரத்தில், அந்தப் பெரியவர், பாபா தனது கருப்பு கண்ணாடியும் தொப்பியும் இல்லாமல் ஜன்னலுக்கு வெளியே சாய்வதைக் கண்டார். அவர் பாபாவைத் தலை தாழ்த்தி வணங்கினார்; ரயில் மெதுவாக நகர்ந்து செல்லும்போது பாபா, அந்த முதியவரின் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

அடுத்ததாக, தொடர்ந்து இரண்டு மேல்நிலை ஆத்மாக்களை தொடர்பு கொள்ளும் நோக்கத்தில் பாபா ஷோலாபூரில் இறங்கினார். ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட 80 வயதான, ஸலிக் போன்ற தன்மை படைத்த யோகி, குலியப்பா சுவாமி (GHULIAPPA SWAMI), ஆணாக உடை அணிந்து கொண்டாலும், அவர் தன்னை 'ஒரு பெண்மணியைப் போலவே' குறிப்பிட்டார்.

முல்லா பாபா (MULLAH BABA) என்று அழைக்கபட்ட மற்றுமொரு மிகப் பழைய மஸ்த், அவர் மிகவும் அசுத்தமாக, எந்தப் பராமரிப்புமின்றி, நீண்ட விரல் நகங்களுடன் காணப்பட்டார். அவர் பதினைந்து ஆண்டுகளாக ஒரே இடத்தில் அமர்ந்து, ஒருபோதும் அங்கிருந்து நகர்ந்ததாகத் தெரியவில்லை; அவர் ஷோலாபூர் மக்களிடையே பிரபலமாகி போற்றி வணங்கப்பட்டார். 1942, ஜனவரி 6 அன்று, ஒரே நாளில் ஷோலாபூர் விஜயத்தை முடித்து, பாபா, மெஹராபாத் திரும்பி வந்த அந்த நாளின் பிற்பகுதியில், போர் மற்றும் இந்திய தேசம் பற்றி விவரித்தார்:

**இந்தப் போர், நம் அனைவருக்கும் கற்பித்த மிகப் பெரிய பாடம் என்னவெனில், வாழ்வே ஆபத்தில் இருக்கும்போது, வாழ்க்கையில் தவறான மதிப்பீட்டின் பயனற்ற தன்மை, அதாவது செல்வம், சொத்து, (உடைமைகள்) போன்றவற்றைக் குறித்த எந்தக் கருத்தும் அல்லது அவற்றிற்கு எந்த மதிப்பும் இல்லை என்பதாகும். மக்கள் பல ஆண்டுகளாக, சிந்தித்து, கணக்கிட்டு, உழைத்து, சேர்த்து வைத்த அபரிமிதமான செல்வங்கள், மதிப்புமிக்க சொத்துக்கள் அனைத்தையும், விமானம் அல்லது நேரடி எதிரியின் தாக்குதலால் உயிருக்கே ஆபத்து எனும் போது, ஒரே நொடியில் விட்டுவிட வேண்டிய சூழ்நிலை உருவாகிறது.**

**ஒருவர் உயிருக்காக ஓடி ஒளியும் போது இவற்றை எல்லாம் உடன் எடுத்துச் செல்ல முடியாது. இது மட்டுமல்லாமல், ஒருவரின் சொந்த உறவினர்கள் மற்றும் பிரியமானவர்கள், அவர்களுக்காக, காலமெல்லாம் உழைத்தும், அவர்களை விட்டுச் செல்ல வேண்டிய அல்லது தற்காலிகமாகவோ நிரந்தரமாக பிரிந்து செல்ல வேண்டிய சூழ்நிலை; இதைப்பற்றி எவரும் எதுவும் சொல்ல முடியாது.**

**ஆனால் இந்த அப்பட்டமான உண்மை, கண் முன்னே இருந்தும், மக்கள், காமம், பேராசை போன்றவற்றால் உந்தப்படும் சுயநல நோக்கங்களை விட்டுவிடாமல், அவற்றை உறுதியாகப் பற்றிக் கொள்ள விரும்புகின்றனர்.**

**ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், ஆதாரமாகவும் திகழும் இந்திய தேசம், வாழ்வின் பயனற்ற தன்மை குறித்த மிக முக்கியமான, அடிப்படை பாடத்தை, தியாகம் மற்றும் துன்பங்களின் வாழ்க்கை உதாரணத்தை வழங்குவதன் மூலம் உலகுக்கு உணர்த்தவும், பொருட்களைப் பிறருக்குத் தருவதிலும், மிகக் குறைந்த அளவுடன் திருப்தி அடைவதிலும் உள்ள முக்கியத்துவத்தையும் உலகிற்குப் புகட்ட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், வேறு எந்த நாட்டையும் விட இந்தியா அதிகம் பாதிக்கப்பட**

**வேண்டும். இறைவனின் அருள் ஆட்சி முறையால் வழிநடத்தப்படும் பாத்திரத்தை வகிக்க, இந்தியா பெரிய அளவில் தியாகம் செய்ய வேண்டும், துன்பப்பட வேண்டும். இந்தியா உலகுக்குக் கற்பித்து நிரூபிக்க வேண்டிய மிகப்பெரிய பாடம் இது.**

வார்தாவில் (WARDHA), மகாத்மா காந்திக்கு ஒரு செய்தியை வழங்குவதற்கான அறிவுறுத்தல்களுடன் சாஞ்சி, பப்பா ஜெஸவாலா இருவரும் ஜனவரி 9 அன்று மும்பைக்குச் சென்றனர்.

இதற்கிடையில் முஹமது மஸ்த் (MOHAMMED MAST) ஒரு வருடத்திற்கும் மேலாக மும்பையில் அலோபாவுடன் தங்கி இருந்தார்; இவ்வேளையில் அலோபா அவரைப் பராமரிப்பதில் கண்டிராத கஷ்டங்களே இல்லை. முஹமது தனது தட்டு, கரண்டி, கண்ணாடி டம்ளர்களை, வாடகை வீட்டின் முதல் மாடி ஜன்னலுக்கு வெளியே எறிந்து, வழிப்போக்கர்களைத் தாக்குவது வழக்கம். ஜன்னலில் ஒரு திரையை வைப்பதன் மூலம் இந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டது. அலோபாவிற்கு அடுத்த தலைவலி என்னவெனில், முஹமது தினமும் காலையில் நான்கு முதல் ஐந்து மணி நேரம் கட்டிடத்தின் ஒரே பொது கழிப்பறையை ஆக்கிரமித்தார்; இது அன்றாடம் காலையில் அலுவலகத்திற்குச் செல்லும் அக்கம் பக்கம் வசிப்பவர்களுக்கு இடையூறாக இருந்தது. அலோபா, பொதுவான கழிப்பறை பழுதுபார்க்கப்படுவதாக அவரிடம் கூறி, தனது அறையில் முஹமதுக்கென ஒரு தனிப்பட்ட கழிப்பறை பெட்டகத்தைத் தயார் செய்தார்.

சில வாரங்களுக்குப் பிறகு, முஹமது மீண்டும் மீண்டும் 'நான் ரத்னகிரிக்கு (RATNAGIRI - அவரது இல்லத்திற்கு) செல்ல விரும்புகிறேன்' என்று சொல்லத் தொடங்கினார். அலோபா முதலில் அவரைக் கண்டுகொள்ளாமல் இருந்தார், ஆனால் முஹமது இந்த வேண்டுகோளைத் தொடர்ந்து முன்வைத்து துன்புறுத்தினார்.

இறுதியாக, அலோபா 'முஹமதை ரத்னகிரிக்கு அனுப்புங்கள்' என்று கோரி பாபாவிற்குக் கடிதம் எழுதினார். இது உலகப் போரின் தீவிரமான காலகட்டம், நீராவி படகுகளில் பயணச்சீட்டு வாங்குவது மிகவும் கடினம், ஆனால் பல நாட்கள் முயற்சித்து, பின்னர் அலோபா, மும்பையியிலிருந்து பயணம் செய்ய இரண்டு பயண சீட்டுகளை வாங்கினார்.

அன்று காலையில் அவர்கள் புறப்படவிருந்த அந்த வேளையில் முஹமது, "நான் ரத்னகிரிக்கு செல்ல விரும்பவில்லை! நான் செல்ல விரும்பவில்லை!" என்று கூறி அடம்பிடித்து அழுதார்.

முஹமதை கப்பலில் அழைத்துச் செல்ல, ரத்னகிரியைச் சேர்ந்த ஒருவரைக் கண்டுபிடிக்குமாறு பாபா, அலோபாவிற்கு அறிவுறுத்தியிருந்தார். அலோபா இந்த ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த வேளையில் முஹமது அழுதுகொண்டே எங்கேயோ புறப்பட்டுச் சென்றார். ஆறு மாதங்கள் கடந்தன.

முஹமது மஸ்தை ஒரு நாளுக்காக அழைத்து வருமாறு பாபா, அலோபாவிற்கு எழுதியிருந்தார்; அலோபா உடனடியாக 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' (THE PERFECT MASTER) எனும் புத்தகத்திலிருந்து முஹமது மஸ்தின் சித்திரத்தை வெட்டி எடுத்து, அதை ஒரு நபரிடம் கொடுத்து, முஹமதைக் கண்டுபிடித்து மீண்டும் மும்பைக்கு அழைத்து வந்தார்.

முஹமது ஜனவரி 9 அன்று, ஒரு நாளுக்காக பாபாவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். பாபா மஸ்துடன் சில மணி நேரம் பணிபுரிந்த பின்னர், அவரை நீராட்டி, புதிய மேலங்கியை அணிவித்தார். முஹமது, பாபாவிடம், "நான் மீண்டும் ரத்னகிரிக்குச் செல்ல விரும்புகிறேன்" என்று கூறினார். அலோபா இப்போது மஸ்தை கவனிப்பதில் முற்றிலும் சோர்ந்து போயிருந்தாலும், முஹமதை மீண்டும் மும்பைக்கு அழைத்துச் செல்லுமாறு பாபா கட்டளையிட்டார். அலோபாவிற்கு, இணங்குவதைத் தவிர வேறு வழியில்லை. ரயிலில், முஹமது மிகுந்த சிரமத்தைத் தந்தார், அவர்கள் மும்பைக்கு வந்த நேரத்தில், அலோபா கண்கலங்கி அழுதுவிடும் நிலையில் இருந்தார்.

மெஹராபாத்தில், பாபாவின் உத்தரவின்படி, உபாஸனி மஹாராஜின் நினைவாக 1942 ஜனவரி 12 திங்கள் அன்று துனியில் நெருப்பு ஏற்றப்பட இருந்தது, அனைவரும் அன்றைய தினம் உபவாசம் மேற்கொண்டனர். பாபா மேல்மலையிலிருந்து மாலை 6:45 மணிக்கு துனி அருகே மேசையில் வைக்கப்பட்டிருந்த உபாஸனி மஹாராஜ் மற்றும் மெஹர் பாபாவின் புகைப்படங்களைப் பார்வையிட்டு, ஒரு மூங்கில் நாற்காலியில் மேற்கு நோக்கி அமர்ந்தார்; துனியில் நெருப்பை ஏற்றி ஒளிரச் செய்யும் பாக்கியத்தை அவருக்கு வழங்கியதால், பப்பா ஜெஸவாலா, பாபாவிற்கு மாலை அணிவித்து, பாபா அறிவித்த அந்த நேரத்தில் துனியை எரியவிட்டார். பாபாவின் உத்தரவின் பேரில், பெண்டு, பாதிரி, பப்பா ஜெஸவாலா, சிது, விஷ்ணு (அவர்கள் மட்டுமே நிகழ்ச்சியில் பங்கெடுக்க அனுமதிக்கப்பட்டனர்) ஒவ்வொருவரும் சந்தனக் குச்சியை நெருப்பிலிட்டு வணங்கினர்.

நெருப்பு எரியத் தொடங்கியதும், பாபா சில கருத்துக்களை எடுத்துரைத்தார்:

**என்னைப் பொறுத்தவரை, நான் அனைத்தும் அறிந்திருப்பதால், வாழ்க்கையின் நிச்சயமற்ற சூழ்நிலைகளில் எனக்கு எந்தவிதமான மகிழ்ச்சியும் இல்லை. எனக்கென நிர்ணயிக்கப்பட்ட கடமைகளின் சுமையை குறைப்பதே எனக்கு ஒரே மகிழ்ச்சி.**

**இன்று மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நாள் - இன்று நிகழ்வுகளின் அலை மாறிக்கொண்டிருக்கிறது. நெருப்பு வைக்க அனைத்தும் தயாராக இருக்கும் நிலையில், ஒரு தீக்குச்சி மட்டுமே தேவைப்படுவது போல், இப்போது, ஏழு மணிக்கு பதினைந்தே நிமிடங்கள் இருக்கும் நேரத்தில், விரைவில் ஏழு மணியும் நெருங்கிவிடும். அந்த நேரம் வரும்போது, (எனது**

**பணிக்கான) தீக்குச்சியைப் பயன்படுத்துவேன். எனது நெருங்கிய (ஆண்) மண்டலியில் ஒரு மிகப்பெரிய ஆத்மாவும் விரைவில் உயிரைத் துறந்துவிடுவார்.**

பாபா, ஏறக்குறைய 20 நிமிடங்கள் துனியில் ஆண் மண்டலியுடன் அமர்ந்திருந்தார், அதற்குப் பிறகு, மேல்மலையை நோக்கித் திரும்பிச் சென்றார். புறப்படுவதற்கு முன்னர், அவர் இவ்வாறு அறிவுறுத்தினார்: **"இப்போது உபாஸனி மஹாராஜ் மறைந்து விட்டதால், ஸாக்கோரிக்கு அடிக்கடி சென்று கொண்டிருந்த பக்தர்கள், என்னையும் நேசிப்பதால், இனிமேல் அங்குச் செல்ல வேண்டாம்."**

முஹமது மஸ்தின் தொந்தரவுகளிலிருந்து அலோபாவிற்கு விடுதலை வழங்கும் எண்ணத்தில், முஹமது மஸ்த் ஜனவரி 13ஆம் தேதி, மும்பையிலிருந்து, நிரந்தரமாகத் தங்குவதற்காக மெஹராபாத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

மெஹர் பாபா அனைத்து மண்டலியையும் மதியம் மூன்று மணிக்கு (மேல்மலை) மஸ்த் ஆசிரமத்திற்கு அழைத்து, 'உபவாசம்' குறித்த இந்த விளக்கத்தை அளித்தார்:

**ஒருவர் நீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்தால், உடல் 95 நாட்கள் உயிர்வாழும். உடல், உணவை உண்பது போல, மனம் ஆசைகளுக்கு உணவூட்டுகிறது, இந்த ஆசைகளில் ஈடுபடுவது, மனம், அகந்தை இரண்டிற்கும் ஊட்டமளிக்கிறது. எனவே, இந்த மனதின் ஆசைகளைப் பசியால் வாடவிடும் வேளையில், அகந்தை மிகவும் மெலிந்து பலவீனமடைந்து விடும்.**

**நீங்கள் நேற்று செய்ததைப் போலவே நீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்தால், காமம் குறைந்துவிடும், ஆனால் கோபமும் நம்பிக்கையும் அதிகரிக்கும். உபவாசத்தின் முதல் மூன்று நாட்களில், பசி கவனத்தை ஈர்க்கும், மனச்சோர்வு வலுவாகும், கோபம் பலமடையும், காமம் குறையும். மூன்று முதல் ஏழாம் நாள் வரை, உணர்வுகளில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்: பசி, மனச்சோர்வு, கோபம், காமம் இவை அனைத்தும் குறையும் அதே நேரத்தில், அனைத்திலும் நம்பிக்கை என்பது இன்னும் வலுவாக இருக்கும். பத்தாவது நாளில், உணர்வுகள் மீண்டும் பின்வாங்கி, பசியும் கோபமும் அதிகரிக்கும். இது 14ஆவது நாள் வரை நீடிக்கும்; உணர்வுகள் மீண்டும் அமைதியாகி அல்லலின்றி இருக்கும்; இவ்வாறு, 14ஆவது நாளுக்குப் பின்னர், உபவாசத்திற்கு ஆன்மீக மதிப்பு எதுவும் இல்லை!**

அதற்குப் பிறகு பாபா, அவரது எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டார்: **"நான் மௌனத்தைக் கலைப்பதற்கு முன்னர், இரண்டு விஷயங்களைச் செய்தாக வேண்டும்: 7,000 சாதுக்களின் பாதங்களைத்**

**தொட வேண்டும்; இதை நான் அண்மையில் அலஹாபாத்தில் செய்து முடித்தேன். இன்னும் நேபாளம், திபெத் நாடுகளுக்குச் செல்ல வேண்டும். எனவே, பிப்ரவரி மாதம் 15ஆம் தேதி முதல், நான் இந்தப் பிரதேசங்களுக்குச் சென்றாக வேண்டும்."**

பாபா தொடர்ந்து சில ஸூஃபி பாடல்களை இசைத் தட்டுகளில் கேட்டு, அவற்றின் பொருளை விளக்கினார்.

1942 ஜனவரி 14 புதன்கிழமை, அரன்காவ்ம் (ARANGAON) மற்றும் சுற்றுப்புற இடங்களில் வாழும் கிராமவாசிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து, துனி அருகே நடைபெற்றது. விருந்து, விழாக்களைக் காணவும், பஜனைகளைக் கேட்கவும் பாபா அன்று மாலை ஆறு மணிக்கு மேல்மலையிலிருந்து இறங்கி வந்தார். அஹமதுநகரிலிருந்து ஸட்டா குடும்பத்தினரும், இதர நெருங்கிய அன்பர்களும் இந்த நிகழ்ச்சிக்காக வந்திருந்தனர், கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு பாபாவைப் பார்க்கும் வாய்ப்பு அனைவருக்கும் கிட்டியது.

மெஹர் பாபாவின் பாதங்களைத் தொடுவதும், அவரைக் கைகூப்பி வணங்குவதும், தடைசெய்யப்பட்டது; ஆனால், நெருக்கமானவர்கள் அவரை இவ்வளவு நாட்களுக்குப் பிறகு பார்த்ததில் மகிழ்ச்சியாக இருந்தனர். பாபா இரண்டு மணி நேரம் அவர்களிடையே இருந்து, பின்பு மேல்மலையை நோக்கி நடந்து சென்றார்.

பாபாவின் உத்தரவின்படி, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வாழும் மண்டலியும் இதர அன்பர்களும் விரும்பினால் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் உணவு உண்டு உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும். இது 1942 ஜனவரி 1 முதல் பிப்ரவரி 15 வரை, ஒன்றரை மாதங்களுக்குத் தொடர இருந்தது. இந்தக் காலகட்டத்தில் பாபா, மஸ்த் பயணத்தை மேற்கொண்டாலும், உபவாசத்தைக் கடைப்பிடித்தார்.

மேலும், கடவுளின் ஏழு நாமங்களை ("ஹரி, பரமாத்மா, அல்லா, அஹுரமஸ்தா, காட், எஸ்தான், ஹு") ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு உச்சரிக்க பாபா தனது அன்பர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார். இந்தப் பிரார்த்தனைக்கான மெட்டையும் பாபா வழங்கி இருந்ததால், அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

ஜனவரி 15ஆம் நாள், மெஹராபாத்திலிருந்து பைதூல், காக்கா இருவருடன் பாபா காரில் புறப்பட்டு, தென்னிந்தியாவில் வாழும் சட்டி பாபா (CHATTI BABA) மற்றும் இதர மஸ்துகளைத் தொடர்பு கொள்ளச் சென்றார். அவர் முதலில் ஹுப்ளி (HUBLI) நகருக்குச் சென்று, இரண்டு மஸ்துகளை இரண்டாவது முறையாகத் தொடர்பு கொண்டார். இவர்களில் ஒருவர் தேவ் புருஷ் (DEV PURUSH) என்ற இளம் துறவி. ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மேல்நிலை மஸ்த், முற்றிலும் நிர்வாணமாக ஒரு கல் மீது

அமர்ந்திருந்தார்; அந்த இடத்தைவிட்டு அவர் வெளியேறியது இல்லை என்று கூறப்படுகிறது. மேலும் பாபா 16ஆம் நாள் அரை மணி நேரம் அவருடன் பணிபுரிந்தார். மெஹர் பாபா, சேலா (CHELA) என்ற மௌனி மஸ்தையும் இரண்டாவது முறையாக சந்தித்தார்; அவர் உணவு உண்பதே மிக அரிது.

பாபா மஸ்துகளுடன் இருந்த போதெல்லாம் ஒருவரும், மண்டலி கூட, அருகில் வர அனுமதிக்கப்படவில்லை.

ஹூப்ளியிலிருந்து, பாபா நாகப்பட்டினத்திற்குச் சென்றார், அங்கு 1942 ஜனவரி 18 ஞாயிற்றுக்கிழமை அவர் சட்டி பாபாவை மறுபடியும் சந்தித்தார். சட்டி பாபா, பாபாவைப் பார்த்த மகிழ்ச்சியில் அபரிமிதனமான அன்பை வெளிப்படுத்தினார்; ஒரு குழந்தையைப் போல் அவரைப் பற்றிக்கொண்டு விடமறுத்தார். பாபா அவரை மிகவும் அன்பாக நடத்தினார், அவரை இதயபூர்வமாக அரவணைத்துக் கொண்டார்.

நாகப்பட்டினத்தில் மோத்தி பாபா (MOTI BABA) என்றழைக்கப்பட்ட மற்றுமோர் ஆறாவது ஆன்மீகத் தள மஸ்துடன் பாபா அன்னியோன்யமாக இணைந்திருந்தார். அங்கிருந்து நாகூர் (NAGORE) நகருக்குச் சென்று 'நாகூர் ஷா வாலி' (NAGORE SHAH WALI) என்ற மஸ்துடன் சிறிது நேரம் அமர்ந்தார். நாகூர், நீளமான வெள்ளை தாடியுடன் கூடிய வயதான பெரியவர், நேர்த்தியான ஆடைகளை அணிந்திருந்தார், ஆனால் நீண்ட விரல் நகங்களைக் கொண்டிருந்தார்.

நாகூரிலிருந்து, பாபா 21 அன்று ஈரோடு (ERODE), செங்கல்பட்டு (CHENGALPET), ரயிச்சூர் (RAICHUR), குருந்துவாடி (KURUNTHWADI) வழியாக மீரஜ் (MIRAJ) நகருக்குச் சென்றார். குருந்துவாடியில் 'கிருஷ்ணா' (KRISHNA) என்றழைக்கப்பட்ட 'ஜலாலி' மஸ்தைத் தொடர்பு கொள்ள முடிந்தது; அத்தகைய அமைதியற்ற மஸ்தை எங்கும் அவர் பார்த்ததில்லை என்று பாபா குறிப்பிட்டார். கிருஷ்ணாவிற்கு இரண்டு உறைவிடங்கள் இருந்தன: ஒன்று மஹாராஜாவின் அரண்மனையில் இருந்த வேளையில் இளவரசனைப் போலவும், வீதிகளில் இருந்த போது, கந்தல் ஆடைகளையும் அணிந்தார்.

மீரஜ் நகரிலிருந்து, பாபா கரடுமுரடான, சேறு நிறைந்த சாலைகளில் 'அரவாடா' (ARAVADA) கிராமத்திற்குச் சென்றார், படகு மூலம் ஒரு சிறிய இடைப்பட்ட நதியையும் கடக்கவேண்டி இருந்தது. அங்கு பாபா, இதற்கு முன்பு தொடர்பு கொண்ட 'வஸீர் பாபா' (WAZIR BABA) என்ற முஸ்லிம் துறவியை மறுபடியும் சந்தித்தார். பின்னர் அனைவரும் மெஹராபாத் புறப்பட்டு, ஜனவரி 23 அன்று அங்கு வந்தனர்.

1942, பிப்ரவரி 1ஆம் நாள், மும்பையிலிருந்து தாதாசாஞ்சி குடும்பம் ஒரு நாளுக்காக மெஹராபாத்திற்கு வந்தது. நௌரோஜியின் மகன்கள் ஹோமா, தாரா இருவரின் 'நவ்ஜோத் விழா' (புனித நூல் விழா) இந்த நேரத்தில் மெஹர் பாபா முன்னிலையில் நடத்தப்பட்டது. சாஞ்சியின் சகோதரர்

அஸ்பந்தியாரிடம் (ASPANDIAR), கடந்த மாதம் மண்டலிக்குச் சொன்னதை பாபா மீண்டும் எடுத்துக் கூறினார்:


**இந்தப் போர், மக்களுக்குக் கற்பிக்கும் மிகப் பெரிய பாடம் என்னவெனில், செல்வம், சொத்து, (உடைமைகள்) போன்றவை நிரந்தரமற்றவை மட்டுமல்லாமல் அவற்றிற்கு எந்த மதிப்பும் இல்லை - போரின் அழிவுகரமான சக்திகளால் அவை பறிக்கப்படுகிறது அல்லது அழிக்கப்படுகிறது, அங்கு வாழ்க்கைக்கு, நடைமுறையில் எந்த மதிப்பும் இல்லை - இருந்தும், இந்திய நாட்டிற்கு, திடமான நம்பிக்கையூட்டும் விதத்தில் இந்தப் பாடம் கற்பிக்கப்பட்டு, புரியவைக்கப்பட வேண்டும். அதற்காக, இந்தியா எல்லாவற்றிற்கும் மேலாக கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும். கிழக்கு மற்றும் மேற்கு எனும் இரு தரப்பிலும் அமைந்த குறடு போன்ற இயக்கங்களுக்கு இடையே இந்தியா நசுக்கப்படும். பின்னர் உள்நாட்டுத் தொல்லைகள் இருக்கும். இத்தகைய குழப்பங்கள் ஒரு முழுமையான முட்டுக்கட்டைக்கு வழிவகுக்கும் போது நான் பேசுவேன். உலகம் அதற்கு செவிமடுத்தாக வேண்டும். நீங்கள் அதைக் காண்பீர்கள்.**

**ஆனால் கவலைப்பட வேண்டாம். அடுத்த நான்கு மாதங்களுக்கு, தற்போதுள்ளபடியே தொடரவும். 'புதியதாக' எதற்கும் அவசரப்பட வேண்டாம். ஒவ்வொரு விஷயமும் தானாக நடக்கட்டும். எந்த உந்துதலும் கொடுக்க வேண்டாம், அதே வேளையில் தடுத்து நிறுத்தவும் வேண்டாம். இவை அனைத்தும் இயற்கையாகவே நடக்கட்டும், எதையும் கட்டாயப்படுத்த வேண்டாம். நீங்கள் என்ன செய்தாலும், என் பார்வை உங்கள் மீது இருக்கும்.**

அர்னவாஸ், நர்கிஸ் இருவரும் பெண் மண்டலியுடன் மெஹராபாத்தில் தங்கியிருந்தனர், பிற அனைவரும் திரும்பிச் சென்றனர்.



மெஹர் பாபா (MEHER BABA) **- 1941**



மஜ்ஜூப் சாச்சா, அஜ்மீர்
(MAJZOOB CHACHA, AJMER)

# போர்க்கால பயணம் - டெஹ்ரா டூன்

**(Wartime Travel – Dehra Dun)**

மெஹர் பாபா, இமயமலைக்கு அருகாமையில் பணிபுரிய விரும்பி, டெஹ்ரா டூன் நகரில் பங்களாக்களைத் தேர்ந்தெடுக்க, பப்பா, ஸவக் இருவரையும் அனுப்பி வைத்தார். கேக்கி நலவாலாவின் உதவியுடன், அவர்கள் இரண்டு மாடி பங்களா ஒன்றை ஏற்பாடு செய்தனர். 1942, பிப்ரவரி 2ஆம் நாள், பாபா, ஆண், பெண் மண்டலியுடன் மெஹராபாத்திலிருந்து டெஹ்ரா டூன் புறப்பட்டார். அன்றிரவு 10:00 மணிக்கு அஹமதுநகர் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். அர்னவாஸ், நர்கிஸ், பணிப்பெண்கள் உட்பட, கிழக்கு மற்றும் மேற்கத்திய பெண்மணிகள் அனைவரும் பாபாவுடன் இருந்தனர். ஆண் மண்டலியில், பைதூல், குஸ்தாஜி, நீலு, விஷ்ணு, கிருஷ்ணா, வெங்கோபா ராவ் ஆகியோர் உடன் சென்றனர்; எஞ்சியுள்ள பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண் மண்டலி மெஹராபாத்தில் தங்குமாறு உத்தரவிடப்பட்டனர்.

பிப்ரவரி 5 காலை ஆறு மணிக்கு டெஹ்ரா டூன் நகரை வந்தடைந்த இந்தக் குழுவை, பப்பா, ஸவக் இருவரும் சந்தித்து 4ஆவது ‘சந்தர் சாலை’யில் (CHANDER ROAD) அமைந்த பிரேம் பவன் (PREM BHAWAN) பங்களாவிற்கு அழைத்துச் சென்றனர். பாபா மேல் மாடியில் தனியாகவும், பெண்மணிகள் கீழ் வீட்டையும் ஆக்கிரமித்தனர்.

ஆண் மண்டலி வேறு இடத்தில், 25 ‘புதிய சாலை’யில் (NEW ROAD) அமைந்த ‘ஸன்னிஸைட்’ (SUNNYSIDE) என்ற பங்களாவில் தங்கியிருந்தனர்.

காக்கா பாரியாவும் சாஞ்சியும் பாபாவை டெஹ்ரா டூனில் சந்தித்ததைத் தொடர்ந்து, காக்கா 6ஆம் தேதி மும்பைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார் (சில நாட்களில் அவர் திரும்பி வந்தார்). மெஹரு, நாஹூ இருவரும் மெஹராபாத் குழுவோடு இணைந்து பாபாவுடன் பயணம் செய்தனர். பிப்ரவரி 9 அன்று பாபா அவர்களை சாஞ்சியுடன் நாசிக் அனுப்பி வைத்தார்.

இந்த நேரத்தில் மெஹர் பாபாவின் 48ஆவது பிறந்த நாள் அந்த ஆண்டு பிப்ரவரி 14ஆம் நாள் (பார்சி நாள்காட்டிபடி) வருவதாகக் கூறி ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது, இது குழுவிற்கான உபவாசம் மற்றும் பிற தியானங்களை கடைபிடிப்பதற்கான கடைசி நாள். எந்தவொரு விழா நிகழ்ச்சியையும் வெளிப்படையாகவோ அல்லது தனியாகவோ நடத்தக்கூடாது என்று பாபா உத்தரவிட்டார். 1942, பிப்ரவரி 15ஆம் தேதிக்குப் பின்னர், அனைவரும் உத்தரவுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு வழக்கம் போல் உணவு உண்ண அனுமதிக்கப்பட்டனர்.

மெஹர் பாபா இமயமலைக்கு அருகே மஸ்துகளுடன் பணிபுரிய விரும்பினார்; ஆனால் இந்த நேரத்தில் குளிர் கடுமையாக இருந்ததால் (மேலும் புது டில்லியில் அமைந்த நேபாள துணை தூதரகத்திலிருந்து அங்குப் பயணம்

செய்ய அனுமதி வழங்கப்படாததால்), பாபா, மார்ச் இறுதி வரை அங்குச் செல்வதை ஒத்திவைத்தார். அதற்கு பதிலாக, பாபா, பிப்ரவரி 11 இரவு, பைதூல், காக்கா, குஸ்தாஜி மூவருடன் டெஹ்ரா டூன் நகரை விட்டு வெளியே சென்றார். ரயில், பேருந்து, மாட்டு வண்டிகளிலும் நடந்தும் சென்று, ஒன்பது நாட்களில் 2,000 மைல்களுக்கு மேல் பயணம் மேற்கொண்டார். ஹரித்வார் (HARIDWAR), ரூர்க்கி (ROORKEE), லண்டோரா (LANDHAURA), ஸஹாரன்பூர் (SAHARANPUR), ஜலாலாபாத் (JALALABAD), தானா பவன் (THANA BHAVAN), மீரட் (MEERUT), அஜ்மீர் (AJMER), ஜோத்பூர் (JODHPUR), அலிகார் (ALIGARH), பரேலி (BAREILLY), மொராதாபாத் (MORADABAD) போன்ற இடங்களில் பாபா 27 மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்.

லண்டோராவில், பாபா, ஒரு வயதான ஜலாலி மஸ்தை சந்தித்தார்; காதிர் ஷா (QADIR SHAH) என்றழைக்கப்பட்ட ஆழ் மன ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட அவர், ஒரு மஸ்த் மற்றும் 'ஸலிக்'கை ஒத்தவர். காதிர், ஆழ்ந்த காட்டில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார், அதைச் சென்றடையும் பயணம் குறிப்பாக மிகவும் கடினமானது, ஏனெனில் பாபா மண்டலியுடன் கடும் மழைக்காலத்தில் வனப்பகுதிக்குள் ஆழமான சேற்று நிலங்கள் வழியாக நடக்க வேண்டியிருந்தது. காதிர் ஷா உயரமான, தாடியுடன் கூடிய வயதான புனிதர், அவர் எளிமையாக ஒரு மேலங்கியை அணிந்திருந்தார். இந்தத் தொடர்பு குறித்து பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்தார், எனவே இத்தனை சிரமங்களை எதிர்கொண்டு சென்றது இறுதியில் நல்ல பலனை அளித்தது.

தானா பவனில், பாபா, மௌலானா அஷ்ர.ஃபாலி (MAULANA ASHRAFALI) என்ற மெலிந்த வயதான வாலியை தொடர்பு கொண்டார், அவர் ஸலிக்கைப் போன்ற தன்மை படைத்தவர்; அவர் நகரத்தின் எளிமையான மசூதி ஒன்றில் பிரார்த்தனைகளை நடத்தி வந்தார். பெரிய ஜமா மஸ்ஜித்தில் (மசூதி) பிரார்த்தனைகளை முன்னெடுத்து நடத்தும் வேளையில், தானா பவனிலும் டெல்லியிலும் ஒரே நேரத்தில் அஷ்ர.ஃபாலி தோற்றமளித்தார் என்று கூறப்பட்டது.

மஸ்த் பயணத்தின் போது, பாபாவின் மிக முக்கியமான தொடர்பில் வந்தவர்கள், அஜ்மீரில் வாழ்ந்த மஜ்ஜூப் சாச்சா (MAJZOOB CHACHA), லக்கன் ஷா (LAKHAN SHAH) மற்றும் ஸாக்ரடீஸ் (SOCRATES) ஆவர்; இவர்களை பாபா ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தார்.

15ஆம் தேதி இரவு பத்து மணிக்கு, பாபாவும் மண்டலியும், இடைவிடாமல் நான்கு நாட்கள் பயணம் மேற்கொண்டு அஜ்மீருக்கு வந்தனர். அவர்கள் உடனடியாக ஒரு தர்மசாலைக்குச் சென்று, தங்கள் பெட்டி படுக்கைகளை ஓர் அறையில் விட்டுவிட்டு (நாள் முழுவதும் நெரிசலான ரயிலில் பயணித்து களைத்துப்போயிருந்த போதிலும்) மஸ்த் சாச்சாவின் இல்லத்திற்குச் சென்றனர். சாச்சா, அப்போது அஜ்மீரில் ஒரு வீட்டின் அறையில் தங்கியிருந்தார்: அதன் மாடியில் ஒரு முஸ்லிம் முஜாவர் (ஒரு சன்னதியின் பராமரிப்பாளர், அல்லது ஒரு புனித மனிதருக்கு உதவியாளர்) வாழ்ந்து வந்தார். அந்த முஸ்லிம் பெரியவர் பாபாவை நன்கு அறிவார்; பாபா

வரும்போதெல்லாம் அவருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது வழக்கம். இந்த இருப்பிடம் ஒரு முக்கிய பாதையில் அமைந்திருந்ததால், பகலில் மஜ்ஜூப்பைச் சுற்றி ஏராளமான மக்கள் ஒன்றுதிரண்டனர். எனவே, சாச்சாவைத் தனியாக சந்திக்கும் நோக்கத்தில் பாபா தாமதமாகச் சென்றார்.

பாபா வந்ததும் பைதூல் முஜாவரை அழைத்தார். ஆழ்ந்து தூக்கிக்கொண்டிருந்த சாச்சா, பைதூலின் கூச்சலைக் கேட்டதும், மகிழ்ச்சியுடன் அவர் படுக்கையிலிருந்து எழுகையில், அவசரத்தில் தனது தனிச்சிறப்பு மிக்க விருந்தினர்களை வரவேற்கும் ஆர்வத்தில் படிக்கட்டுகளிலும் தடுக்கி விழுந்தார். பாபா, சாச்சாவுடன் ஒன்றரை மணி நேரம் தனியாக அமர்ந்திருந்தார். மஜ்ஜூப் உடனான அவரது பணி மிகவும் திருப்திகரமாக முடிந்ததால், பாபா, பராமரிப்பாளருக்குத் தாராளமாகப் பணம் கொடுத்து அதை ஈடு செய்தார். பாபாவும் மண்டலியும் நள்ளிரவில் 2:00 மணிக்கு தர்மசாலைக்குத் திரும்பி வந்தனர்.

ஜோத்பூர் நகரில், பாபா, கடந்த ஆண்டு பணிபுரிந்த இரண்டு மஸ்துகளை இப்போதும் தொடர்பு கொண்டார். முதலாவதாக, மஸ்தானி மாய், இப்பகுதி முழுவதும் பிரபலமான, மிகவும் மேம்பட்ட, வயதான பெண் மஸ்த், குழந்தை இல்லாத பெண்களின் பிரார்த்தனைக்கு இவரின் அருளால் குழந்தை பாக்கியம் கிடைக்கப்பெற்ற மகிழ்ச்சியில், அன்புடன் வழங்கப்பட்ட பல தங்க வளையல்கள், மோதிரங்கள், வெள்ளி நாணயங்கள் மற்றும் பிற ஆபரணங்களை அணிந்ததோடு, பல மூட்டை முடிச்சுகளையும் சுமந்து கொண்டிருந்தார்.

ஜோத்பூரில், பாபா மீண்டும் நங்கா சாதுவை தொடர்பு கொண்டார். ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட இவர், மக்கள் அவரை அணுகும் வேளையில் கைகளால் முகத்தை மறைத்துக்கொண்டு விரல்களின் இடைவெளி வழியாகப் பார்த்தார்.

பரேலிக்குப் பயணம் செய்த பாபா, வயதான, மெலிந்த மஸ்தான பஷீர் மியானைத் தொடர்பு கொண்டார், அவர் உண்ணுவதையும் உறங்குவதையும் காணமுடிவது மிக அரிது. அவர் ஆழ் மன ஆன்மீகத் தளத்தின் உணர்வு நிலையை அடைந்த முஸ்லிம் துறவி; அவருடன் 30 முதல் 40 ஆண், பெண் சீடர்களும் வாழ்ந்து வந்தனர். மாலை நேரங்களில், இந்த சீடர்கள் அவரைச் சுற்றி அமர்ந்து, இசைக் கருவிகளை இசைத்து, பாடி பரவசமடைவது அன்றாட நிகழ்வு.

புனிதமான பஷீர் மியான் ஏழைகளுக்கு உணவளிக்கும் ஒரே நோக்கத்திற்காக பரேலியில் ஒரு பொது சமையலறை வைத்திருந்தார்.

பரேலியில், ஜாரா ஷா (JARA SHAH) என்று அழைக்கப்படும் கோபாவேசமான, பழைய ஜலாலி மஸ்த் மக்களால் மிகவும் மதிக்கப்பட்டவர், உண்மையில் யார் வீட்டில் நுழைந்தாலும் மிக்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

பாபா எவ்வளவோ முயன்றும், அவரை நேரில் தொடர்பு கொள்ள அந்த மஸ்த் மறுத்துவிட்டார். ஒரு முறை, பைதூல் அவருடன் செல்லுமாறு வற்புறுத்த முயன்றபோது, ஜாரா ஷா இவ்வாறு தெரிவித்தார், “ஸாஹேப்-இ-ஸமான் (SAHEB-E-ZAMAN) வருகிறார், அவரது நேரம் நெருங்கிவிட்டது... நான் எனது கை வாளை உருவி, தகுதியற்றவர்களை நிர்மூலமாக்க அவருக்கு உதவுவேன்!”

மொராதாபாத்திற்கு பயணம் மேற்கொண்டு, பாபா, மௌலானா ஷம்சுதீன் உலேமா (MAULANA SHAMSUDDIN ULEMA) என்ற ஆழ் மன ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட, சிறப்பான இந்த ஸலிக் வகையைச் சார்ந்த மஸ்தைத் தொடர்பு கொண்டார். வயதான துறவி குறைந்தபட்சம் 120 வயதைத் தாண்டியவர் என நம்பப்பட்டது, அதேபோல, மக்களால் மிகவும் மதிக்கப்பட்டவர். உலேமா ஓர் அரபு மற்றும் பாரசீக அறிஞராக இருந்தவர், அரசாங்க அதிகாரி ஒருவரின் குடும்பத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்தார். பாபா அவரைத் தொடர்பு கொள்ளச் சென்றபோது, அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அவரை எழுப்பியதும், உலேமா, பாபாவின் முகத்தைப் பார்த்து, ஆழ்ந்த உணர்ச்சிகளுடன், பாரசீக மொழியில் பேசினார்: “இரவின் இருளில் நான் கடவுளின் ஒளியைக் காண்கிறேன்!”

இந்த மஸ்துகளைத் தொடர்புகொள்ள மெஹர் பாபா, பயணத்தில் எதிர்கொண்ட சோதனைகள், இன்னல்கள் மற்றும் சிரமங்களை விவரிக்க முடியாது. பாபா இரவும் பகலும் நகர்ந்து கொண்டிருந்தார். மாட்டு வண்டியில் பயணிக்கும் வேளையில், திடீரென மழை பெய்து, குளிர்ந்த காற்று வீசும்போது, மிகவும் சங்கடமாக இருந்தது. ஓரிடத்தில் பாபாவும் மண்டலியும் தளர்நடை போட்டு சேறும் சகதியுமாக இருந்த சாலைகள் வழியாக பன்னிரண்டு மைல் தூரம் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் மஸ்துகளுடன் உரையாடும்போது வெளிப்படும் உணர்ச்சியும் ஊக்கமும் பொங்கும் பாபாவின் மகிழ்ச்சியில், அவருக்கு இந்த உடல் ரீதியான கஷ்டங்கள் ஒன்றுமே இல்லை! காலம் நமக்கு நினைவூட்டுவது போல, “சரியான உணவு, குடிநீர் இல்லாமல் இரவும் பகலும் நீண்ட தூரம் பயணம் செய்வது எளிதான விஷயமல்ல; அதுவும், போர்க்காலத்தில், இராணுவ துருப்புக்கள் காரணமாக, ரயில்களில் பயணிப்பது, தங்க இடம் கண்டுகொள்வது மிகவும் கடினம். ஆனால், கடவுளே அவருடைய உண்மையான, பிரியமான மஸ்துகளைத் தேடி அலைகிறார்! பெரும்பாலும் மறைந்திருந்தாலும், இந்த மஸ்துகள் அவருடைய உண்மையான பக்தர்கள், அதனால்தான் அவர் தனது தனிப்பட்ட தொடர்பையும், தொடுதலையும் அளிப்பதற்காக, எந்தக் கடினமான சிரமத்தையும், துன்பத்தையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் மேற்கொண்டார்!”

தற்போதைய பயணம் முழுவதையும், மெஹர் பாபா, மண்டலியுடன் பெரும்பாலும் இரவில் மேற்கொண்டார்; ரயில்நிலைய நடைமேடையில்

அல்லது சில எளிமையான தர்மசாலை, விடுதிகளில் தூங்கினார். ஆனால் பயணத்தில் இந்த சிரமங்களைத் தவிர, ஜனவரி 1 முதல் மண்டலி அனுபவித்து வந்த ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுக்கான கட்டுப்பாடு, பயணம் முழுவதும் (பிப்ரவரி 15 வரை) தொடர்ந்தது.

மெஹர் பாபா அவரது மஸ்த் பணியில் முழுவதுமாக ஒன்றிய மனதுடன், முழு வீச்சில் ஈடுபட்டார்; அவரது பலவீனமான உடலின் தேவைகளைக் கண்டுகொள்ளாமல் முற்றிலும் புறக்கணித்து வந்தார், அதனால் உடல் தொடர்ந்து கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தது. பாபாவின் தனிப்பட்ட உதாரணம் முழு தினமும் காக்கா, பைதூல் மற்றும் குஸ்தாஜிக்கு ஒரு தூண்டுதலாக இருந்து - பின்னர் அவர்கள் கூறியபடி, இது அவர்களின் சுய உடல் தேவைகளையும், உணவு, தூக்கம் அனைத்தையும் மறக்கச் செய்தது.

ஒன்பது நாட்களாக மேற்கொண்ட பயணத்திற்குப் பின்பு, பாபாவும் மண்டலியும் பிப்ரவரி 20 காலை எட்டு மணிக்கு டெஹ்ரா டூன் திரும்பி வந்தனர். அதே நாள் பிற்பகலில், சாஞ்சி (மும்பை, நாக்பூர், டெல்லி மற்றும் பிற இடங்களுக்குச் சென்று திரும்பி வந்தவர்) பாபாவை சந்தித்தார்.

பிளீடர் மெஹராபாத் திரும்பி வந்து, மறுபடியும் பிப்ரவரி 15க்குப் பிறகு மும்பைக்குச் சென்றார். பாபா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், **“அவர் திரும்பி வருவார்**. (காற்றாடியின்) **மாஞ்சா நூல் என்னிடம் உள்ளது. அவர் இப்போது சிறிது ஓய்வெடுக்கட்டும்”** என்று கூறினார்.

டெஹ்ரா டூனில், பாபா, மூன்று மணி நேர குறுகிய ஏகாந்தவாசத்தில், தினமும் காலை 8:00 முதல் 11:00 மணி வரை அவரது அறையில் எந்த இடையூறும் இல்லாமல் பணிபுரிந்து வந்தார்.

1942, பிப்ரவரி 22 ஞாயிற்றுக்கிழமை, பாபா, சாஞ்சிக்கு, போரைக் குறித்து புதிய அறிக்கை ஒன்றை எழுத்துப்பலகை வழியாகத் தெரிவித்தார். அதன் முக்கிய அம்சங்கள் கீழ்வருமாறு:

**ஒரே உண்மையான ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்த்தால், போர், யுத்தம், சண்டை சச்சரவுகள், போராட்டங்கள் இவை அனைத்தும், மாயாவின் உதவியுடன் கடவுள் நிகழ்த்தும் தெய்வீக லீலைகள். மாயா, ஆத்மாவை மாயையின் பொறிக்குள் சிக்கவைப்பதற்கும், ஆன்மீக அறியாமையின் பிடியிலிருந்து ஆன்மாவை விடுவிப்பதற்குமான ஊடகமாக இருப்பதால், அது புத்திசாலித்தனமாகக் கையாளப்பட வேண்டும், கைவிடப்படக் கூடாது, ஆனால் அதனுடன் ஒன்றிணையாமல் பற்றற்ற முறையில் கையாள வேண்டும்.**

**போரில் ஈடுபடும் அனைத்து நாடுகளின் ஆத்மாக்களும் அடிப்படையில் ஒன்று; உடல்களும் மனங்களும் மட்டுமே வேறுபட்டவை. எனவே உண்மையில், யார் ஒருவரும் எவருடனும் போரிடுவதில்லை.**

**இதை அறிந்த ஆன்மீக ரீதியில் முன்னேறிய ஆத்மாக்கள் (மஸ்துகள்) எவருக்கும் எந்தத் தீங்கும் இழைக்காமல், ஆதாயம், பழிவாங்கல் அல்லது வெறுப்பு பற்றிய குறைந்தபட்ச சிந்தனையும் இல்லாமல், தத்தமது கடமையைச் செவ்வனே செய்து, தெய்வீக விருப்பத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்கும் விதத்தில் கடவுளின் விளையாட்டில் பங்கெடுக்கின்றனர்.**

**சீனாவின் ஜனாதிபதி சியாங் கை-ஷேக்** (CHIANG KAI-SHEK) **இந்திய தேசத்தின் வைஸ்ராய், ஜின்னா, நேரு, காந்தி மற்றும் பிற தலைவர்களை சந்திக்க இந்தியாவிற்கு வருகை தந்தார். பாபா அவரை புகழ்ந்து பாராட்டினார்: "அவர் ஒரு சிறந்த ஆன்மா, ஒரு தத்துவவாதி மற்றும் ஒரு நடைமுறைக்குரிய தலைவர், எல்லாவற்றிற்கும் மேலாக நேர்மையானவர்."**

24ஆம் நாள், பைதூல், ஸவக் ஆகியோருடன், மாலை 6:00 முதல் 8:00 மணி வரை, டோங்காவில் டெஹ்ரா டூன் நகரின் சுற்றுப்புறங்களில், பாபா ஏழு மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்; அவர்களில், டெஹ்ரா டூனின் ஆன்மீகப் பொறுப்பாளர், மக்களால் போற்றி வணங்கப்பட்ட நன்னு மியான் (NANNU MIAN) குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

நன்னு மியான் நொண்டி நடை போடும் ஒரு வயதான பெரியவர், அவர் பெரிய கைத்தடி ஒன்றில் கந்தல் பொட்டலங்களைக் கட்டிக்கொண்டு, நகரத்தைச் சுற்றி வந்தார். விந்தையான உடையில், பூட்ஸ் மற்றும் மேலங்கி அணிந்து, இடுப்பைச் சுற்றி சால்வை ஒன்றை அணிந்திருந்தார். அவர், அடிக்கடி இரவில் சந்திக்கும் எவருடனும் சண்டையிட்டு வசைபாடுவது கண்கொள்ளா காட்சி. இந்த மஸ்த், குழந்தைகளுக்கு மிகுந்த நேசத்துடன் இனிப்புகளை வழங்கினார், மேலும் இளைஞர்கள் அவரைத் தேடி திரள் திரளாக வருவதையும் காண முடிந்தது.

மஸங்கட்வாலா பாபா (MASANGHATWALA BABA) ஒரு தகன மைதானத்தில் தனது இருப்பிடத்தை அமைத்த ஒரு சூட்சும உணர்வு நிலையில் இருந்த சாது. அவர் கடந்த 35 ஆண்டுகளாக அந்தக் குறிப்பிட்ட இடத்தில் இருந்ததாகவும், தகன மைதானம் கட்டப்படுவதற்கு முன்னரே அவர் அங்கு வாழ்ந்து வந்ததாகவும் கூறப்பட்டது. தகன மைதானம் கட்டுவதற்கு நகராட்சி திட்டமிட்டு, முயற்சித்த போது, அவர் அந்த இடத்தைவிட்டு நகர மறுத்ததால் அவர்கள் அதை மஸங்கட்வாலா மஸ்தைச் சுற்றிக் கட்ட வேண்டி இருந்தது; மேலும் ஒரு புனிதமான மனிதரைத் துன்புறுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து அவர்கள் அஞ்சினர். இந்த சாது எந்நேரமும் நெருப்பை எரிய வைத்திருந்தார், மேலும் மூன்று செல்லப்பிராணிகளைக் வளர்த்து வந்தார் - ஒரு பூனை, ஒரு நாய் மற்றும் ஒரு பசு மாடு; அவர் தனது உணவை உண்பதற்கு முன்னர் அந்த வரிசையில் உணவளித்த பின்னர் அவர் உண்டார்.

1942, பிப்ரவரி 28 அன்று, சாஞ்சி, டான் (இராணுவத்திலிருந்து விடுப்பில் வருகை தந்திருந்தார்) இருவரும் கிட்டத்தட்ட உலகில் எல்லா இடங்களிலும்

பரவிவரும் வன்முறைகளின் தற்போதைய இக்கட்டான நிலை குறித்து, பாபாவிற்குத் தெரிவித்தனர். அவர்களின் அறிக்கைகளுக்கு செவிமடுத்த பாபா, **‘இந்தியாவைக் கைப்பற்ற முயற்சிக்கும் ஜப்பானின் நோக்கம்’** குறித்து கருத்துத் தெரிவித்தார். (ஜப்பானின் ஜாவா, பர்மா போன்ற நாடுகளின் மீதான படையெடுப்புகள் குறித்து அவர்கள் செய்தித்தாள்களில் படித்திருந்தார்கள்.) பாபா இவ்வாறு கூறினார்:

**இந்தியா மாபெரும் ஆபத்தில் உள்ளது. அது ஒன்றிணைந்து ஒரு பொதுவான முயற்சியை மேற்கொள்ளாவிடில், சீனா, பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து தனிமைப்படுத்தப்படும். இது ஜப்பானின் போர் மூலோபாயம், அதனால்தான் அவர்கள் பர்மா மீது படையெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். ரங்கூன், ஜாவா இரண்டும் வீழ்ந்தால் - இது நிகழ வாய்ப்புள்ளது - அடுத்த இலக்கு இந்தியா. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிற்கு அரசியல் சுதந்திரத்தை விரும்பியபடி வழங்கினால் - அதை அவர்கள் வழங்கியாக வேண்டும் - இந்தியர்கள் விழித்தெழுந்து, படையெடுக்கும் ஜப்பானியர்களுக்கு எதிராகப் போராடும் ஏக்கம் நிறைந்த ஓர் உள்ளுணர்வைத் தட்டி எழுப்ப வேண்டும்.**

**ரூஸ்வெல்ட், குண்டுவீச்சு விமானங்கள் எத்தனை வேண்டுமானாலும் வழங்க முடியும், ஆனால் அவற்றை எங்கு தரையிறக்குவது? பசிஃபிக் மிகவும் தொலைவில் உள்ளது மற்றும் தரையிறங்குவதற்கான விமான தளங்கள் இல்லாததால் (அனைத்தையும் ஜப்பானியர்கள் ஆக்கிரமித்துள்ளனர்), அமெரிக்காவின் குண்டுவீச்சு விமானங்கள் செயல்பட முடியாமல் நிற்கின்றன. ஜப்பானியர்களை எதிர்த்துப் போராடுவதற்கு இப்போது - இந்தியாவில் - அவற்றைப் பயன்படுத்த முடிந்தால், ஜப்பானியர்கள் அவற்றை எதிர்கொள்ள முடியாது; ஏனெனில் இந்தியாவும் சீனாவும் இணைந்து ஜப்பானை நொறுக்கிவிடும்.**

**எவ்வாறாயினும், இந்தியா அதன் பழங்காலப் போர் யுக்திகளைக் கையாண்டு, தற்போதைய சூழ்நிலையில் சிறப்பாக போரை சந்திக்கும் மனோபலத்தைக் காட்டுமா என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கம் நாட்டை அமைதியான சூழலில் வைத்திருந்ததால், அதன் ஆக்கிரமிப்பின் கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலத்தில், போராடும் வீர உணர்வுகள் அனைத்தும் அடங்கிவிட்டன. மீண்டும், மக்கள் அரசியல் விழிப்புணர்விற்குத் தூண்டப்படும் தருவாயில், காந்தியால் பரப்பப்பட்ட அகிம்சையின் தத்துவம், எஞ்சியிருந்த அந்தச் சிறிய வீர உணர்வையும் நசுக்கிவிட்டது. இதன் விளைவாக, நம்மிடம் ஆயுதங்கள் இருந்தாலும் கூட, அந்தப் போர் யுக்திகளை மீண்டும் எழுச்சியுறச் செய்வது முடியாத காரியம்.**

**நேரு, (அப்துல் கலாம்) ஆஸாத் போன்ற பல நிரந்தர தலைவர்கள் ஆட்சியைக் கைப்பற்றி, நாட்டைச் சுற்றி வந்து, அந்த வீர உணர்வை மீண்டும் எழுப்பாவிடில், ஜப்பான் முக்கியமான இடங்களிலும் நகரங்களிலும் இறங்கி அனைத்து போர் கருவிகள், ஆயுதங்கள், எண்ணெய்**

**வளம், உணவு மற்றும் பலவற்றைக் கைப்பற்றி இந்தியாவை முற்றிலும் முடக்கிவிடும்.**

**இந்தியா கடினமான உண்மைகளை எதிர்கொண்டு, கடந்து செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். சாதி, மதம், பொருள் சார்ந்த அனைத்து வேறுபாடுகளையும் களைந்து, வெற்றிபெறும் தேசத்திற்காக ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். இந்தியா அதை எவ்வாறு கையாளப் போகிறது என்று பார்ப்போம்.**

**இந்த அனைத்து சிரமங்களுக்கும் மத்தியில், தேஷ்முக், பாபாதாஸ் மற்றும் மண்டலியில் மூன்றில் இரண்டு பேர் வழியாக, என்னுடைய செய்திகளை வாய்மொழியாகவும் துண்டு பிரசுரங்கள் மற்றும் சிறு புத்தகங்கள் மூலமாகவும் வழங்குவேன். அதுதான் திட்டம். இந்த நாட்களில் நான் இங்கு அமைதியாக ஏகாந்தவாசம் மேற்கொண்டு பணிபுரிகிறேன்.**

'**கிழக்குக் கடற்கரையிலிருந்து ஜப்பான் இந்தியாவைத் தாக்க ஆயத்தமாவது போலத் தோன்றினால்,**' பாபா பெண்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்: "**நாம் தாக்கப்பட்டால், நம்மை தற்காத்துக் கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்; தற்காப்பில் நமக்கு இராணுவப் பயிற்சி இன்றியமையாதது.**" தற்காப்புக் கலைகளில் பெண்மணிகளுக்குப் பாடம் புகட்ட பாபா, மார்கரெட்டை நியமித்தார். உடனடியாக குறுந்தடி (லாத்தி) பயிற்சி தொடங்கியது. காயங்களை எவ்வாறு ஏற்படுத்துவது, காயமடைந்தால் எப்படிப் போராடுவது என்பதும் கற்பிக்கப்பட்டது. பயிற்சிகள் பின்வருமாறு நடத்தப்பட்டன: ஒரு விசில் சத்தம் கேட்டவுடன், கைத்தடிகளை சுமந்து செல்லும் வீராங்கணைகள் அனைவரும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட போர் தளங்களுக்கு, அதாவது வீட்டின் மாடியை நோக்கி ஓடவேண்டும்!

ஒரு கட்டத்தில், பாபா, இவ்வாறு ஆலோசனை வழங்கினார்: **எவரேனும் காயமடைந்தால், ரானோ, கிட்டி, மார்கரெட் மூவரும் அவர்களுடன் இருக்க வேண்டும். மெஹரா, மணி, கோர்ஷெத் மற்றும் பிற அனைவரும் மொட்டை மாடிக்குச் சென்றுவிட வேண்டும். எதிரி தாக்க வந்தால், மேலிருந்து அவர்களை எதிர்க்க வேண்டும், இதனால் அவர்கள் இரண்டாவது மாடியை ஆக்கிரமிக்க முடியாமல், மெஹரா பாதுகாக்கப்படுவார்.**"

பணிப்பெண்கள் உட்பட அனைவரும் பயிற்சியை தீவிரமாக எடுத்துக் கொண்டனர். பாபா பெரும்பாலும் மஸ்த் வேட்டைக்காக வெளியே செல்லும் வேளையில், பெண்மணிகளுக்கு இது ஓர் உற்சாகமான பொழுது போக்காக அமைந்தது.

1942, மார்ச் 1 முதல், டெஹ்ரா டூன் நகரில் மஸ்துகளைத் தேடி அலைந்து திரிவதைத் தவிர (சில நாட்கள் நண்பகல் வரை), பாபா மண்டலியின் பங்களாவில் காலை 8:00 மணி முதல் 10:00 மணி வரை மஸ்துகளை நீராட்டி, சுத்தம் செய்து, உணவூட்டும் பணியை மீண்டும் தொடங்கினார். அன்று மாலை

அவர் பெண்மணிகளிடம், “**இன்று இந்தியாவிற்கு ஒரு முக்கியமான நாள்**” என்று கருத்துத் தெரிவித்தார்.

மார்ச் 2ஆம் நாள் நடந்த இந்து ஹோலி பண்டிகையில் பாபா பங்கெடுத்தார். கொல்லைப்புறத்தில் ஒரு குழி தோண்டி, மரத்துண்டுகள் நிரப்பப்பட்டன. பாபா நெருப்பை ஏற்றி, “**நான் உலகின் நெருப்பை உருவாக்குகிறேன்**” என்ற கருத்தை வெளிப்படுத்தினார். பெண்களில் ஒருவர், “தயவுசெய்து, பாபா, நாங்கள் எவரும் ‘எரிக்கப்படாமல் இருப்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்!’” என்றார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, குஸ்தாஜி, பைதூல், ஸவக் ஆகியோருடன் மஸ்துகளைத் தொடர்புகொள்ள பாபா ஹரித்வார் வழியாக ரிஷிகேஷுக்குப் புறப்பட்டார். (பாபா பெண்மணிகள் அனைவரையும் அழைத்துச் செல்ல விரும்பினார், ஆனால் அவர்களைத் தங்க வைப்பதற்கும் அழைத்துச் செல்வதற்கும் சிரமமாக இருந்ததால் இந்த யோசனை கைவிடப்பட்டது.) மறுநாள் மாலையில் பாபா திரும்பி வந்தார். மத்திய பிரதேசத்தில் பாபாவின் அடுத்த மஸ்த் பயணத்தை மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகள் சம்பந்தமாக, பைதூல் பண்டைய, புனித நகரமான அயோத்தியாவிற்கு (AYODHYA - ராமர் பிறந்த இடம்) அனுப்பப்பட்டார்.

ஜால் கேரவாலா, மார்ச் 10 அன்று டெஹ்ரா டூன் வந்த போது பாபாவுடன் தனது அடுத்த இடம் மாற்றத்தைப் பற்றி விவாதித்தார். பாபா மூன்று சாத்தியமான இடங்களிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்கக் கூறினார். அப்போது, இந்திய மற்றும் உலகளாவிய அரசியல் நிலைமை பற்றி விவாதிக்கப்பட்டது; பிற்பகலில் பாபா, நீலுவின் அறையில் பதினைந்து இருபது நிமிடங்கள் தனியாக அமர்ந்தார்.

மார்ச் 11ஆம் நாள், நாக்பூரைச் சேர்ந்த ஸூலூ மெஷ்ராம் (SULOO MESHRAM) என்பவரிடமிருந்து வந்த கடிதம் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது. பாபா நல்ல மனநிலையில் இருந்தார், “**இதுபோன்ற பக்தர்களையும் அன்பர்களையும் வணங்க வேண்டும்**” என்று குறிப்பிட்டார். பாபா பின்னர் அவரது கரங்களைக் கூப்பி, பிரார்த்தனை செய்வது போலக் கண்களை மூடிக்கொண்டார்; இது மண்டலி இதற்கு முன்பு பார்த்திராத ஒன்று. அவர் கடிதத்தை மீண்டும் வாசிக்கக் கூறித் தெரிவித்தார்:

**அத்தகைய ஆழ்ந்த பக்தியுடன் அவர் என்னை நேசிக்கிறார் என்ற அர்த்தத்தில் ஸூலூ என்னை விட தனி மதிப்பு மிக்கவர். அவர் 1938இல் பஞ்ச்கணியில், ஒரு முறை மட்டுமே என்னைப் பார்த்தார், அதன் பின்னர் அவர் தூரத்தில் வைக்கப்பட்டிருந்தார். அந்த வகையில் அன்பர்கள் உண்மையிலேயே பெரியவர்கள்.**

**கிருஷ்ணர் ஏன் சுதாமாவின் பாதங்களைக் கழுவி, அந்த நீரை அருந்தினார்? சுதாமாவின் ஆழ்ந்த அன்பின் காரணமாக. அவர் பாதங்களை**

**அல்ல, சுதாமாவின் அன்பையும் கழுவி, அந்த நீரை அருந்தினார்.**

**கடவுள் எப்போதும் இருக்கிறார், இருந்தார், எப்போதும் இருப்பார். ஆனால் கடவுளின் உன்னதமான, உண்மையான அன்பர்களின் வாழ்வு - கிருஷ்ணாவின் சுதாமா மற்றும் இப்போது ஸூலூ போன்றவர்கள் - கடவுளின் உண்மையான மகத்துவத்தை பிரதிபலிக்கின்றனர். அவர்களின் அன்பின் மகத்துவம் என்னவென்றால், அது, ஒரு குருநாதர் மீது நம்பிக்கையை உருவாக்குகிறது; உண்மையிலேயே அந்த அப்பாவி, அறிவிலியான அன்பருக்கு குருநாதரைத் தெரியாது. ஆனால் உறுதியான நம்பிக்கையின் காரணமாக, அவர் குருநாதருக்காக, தனது உயிரையும் அர்ப்பணம் செய்ய ஆயத்தமாக இருக்கிறார். அது கடவுளை விட சிறப்பானதல்லவா? கடவுள் அவரது அளவிறுதியற்ற நிலையில் எப்போதும் உயர்ந்தவர். ஆனால் அவரை நேசிப்பவர்கள், தங்கள் வரையறுக்கப்பட்ட வரம்பை மீறி, அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தால், தங்கள் அன்புக்குரியவரின் அன்பிற்காகவும், அவர் மீதான அசைக்கமுடியாத நம்பிக்கைக்காகவும் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தால் (அவருடைய உண்மையான நிலை அவர்களுக்குத் தெரியாத போதும்), அது உண்மையில் மிகப் பெரியது. அதனால்தான், எல்லையில்லா கடவுள், அவருடைய உண்மையான பகதர்களின் அன்பிலும் நம்பிக்கையிலும் அவர் காணும் தன்னலமற்ற மனநிலையை அங்கீகரித்து பெருமையுடன் வணங்குகிறார்.**

**கடவுள் எப்போதும் இருக்கிறார். அவர் எல்லா நேரத்திலும் இருந்தார்; இருக்கவும் செய்வார். ஆனால் அன்பர்கள் மற்றும் பக்தர்களின் மகத்துவத்தால் மட்டுமே அவர்கள் ஏக இறைவனையும், குருநாதர்களையும் நேசிக்கிறார்கள், மனம் கனிந்து போற்றி வணங்குகிறார்கள். இந்த சிறுவன் அல்லது இதர பக்தர்கள் அனுபவித்ததைப் போல நீங்கள் (எனது மண்டலி) உணரவில்லை என்றாலும், உங்களுக்கும் எனது உண்மை நிலை தெரியாமல் இருந்தும், நீங்கள் அனைத்தையும் துறந்து, என்னுடன் இருந்து அன்புடன் எனக்கு சேவை செய்கிறீர்கள்; இது உங்கள் மகத்துவத்தை நிரூபிக்க போதுமானது, நான் மட்டுமே அதைப் பார்க்கிறேன், அறிவேன், பாராட்டுகிறேன்.**

டெஹ்ரா டூனில் இருந்தபோது, ஒவ்வொரு நாளும் பாபா, சாஞ்சியிடம் ஜப்பானின் இராணுவ நகர்வுகள் மற்றும் விவகாரங்கள், அத்துடன் இந்தியா போரை எதிர்கொள்ளும் ஆயத்த நிலையில் இல்லாதது, மேலும் அதன் உள் அரசியலின் உறுதியற்ற தன்மை குறித்து விவாதித்தார். ஆயினும்கூட, அவர் எப்போதும் போல் "**இவை அனைத்தும் கடவுளின் திட்டம்**" என்று ஆணித்தரமாகக் கூறினார். பெண்மணிகளுக்கு, பாபா 11 அன்று, "**வாழ்க்கை சில வாரங்களில் ஒரு சூறாவளி போல் இருக்கும்!**" என்று தெரிவித்தார்.

1942, மார்ச் 12ஆம் நாள், இந்திய சுதந்திர இயக்கத் தலைவர்களை சந்திக்க, வின்ஸ்டன் சர்ச்சிலால் (WINSTON CHURCHILL) அனுப்பப்பட்ட ஸர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் (SIR STAFFORD CRIPPS) இந்தியாவிற்கு வருகிறார் என்ற செய்தியைக் கேட்ட பாபா, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிலவும் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும், வெவ்வேறு அரசியல் பிரமுகர்களைப் பற்றியும் கருத்துத் தெரிவித்தார். அருமையான விகட பாணியில், பாபா ஒவ்வொருவரின் வழக்கமான வெளிப்பாடுகளையும் சிரிப்பூட்டும் விதத்தில் நையாண்டி செய்து, மேலும் கூறினார்:

**கிரிப்ஸ் சாமர்த்தியமும், நேர்மையும் உள்ளவர், அதி புத்திசாலி, இந்தியா மீது அனுதாபம் கொண்டவர்... ஜின்னா முழுக்க முழுக்க புத்திகூர்மை மிக்கவர், விரல் நுனியில் அரசியலை வைத்துள்ளார், சிறந்த பேச்சாளர், ஆனால் அவர் காந்தி மற்றும் ஆஸாதைப்** (AZAD) **போல நேர்மையும், விவேகமும் படைத்தவர் அல்ல; ஆஸாத் இஸ்லாமிய இலக்கியத்தின் சிறந்த அறிஞர்.**

**ராஜாஜி** (RAJAJI - சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி) **அனைவரிலும் மிகச் சிறந்தவர்: நேர்மையானவர், புத்திசாலி, திறமையானவர், நேசமாகப் பழகுபவர் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளும் அளவிற்கு தைரியமானவர்; மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பலவீனம் மூலம் அல்லாமல், ஆனால் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளக் கூடியவர். ராஜாஜி பிடிவாதமானவரும் அல்ல எளிதில் வளைந்து கொடுக்காதவரும் அல்ல. காந்தியை எதிர்கொண்டு, அவர் உணர்ந்ததை தைரியமாக எடுத்துச் சொல்லக்கூடிய ஒரே மனிதர் அவர்தான். கொள்கைகளின் அடிப்படையில் தேவைப்பட்டால் அவர் ஒரு பிரிவினையை கூட எதிர்கொள்ளத் தயாராக இருந்தார்; காந்தி அஞ்சும் ஒரே நபர் அவர். அவர் ஒரு மேன்மையான வேதாந்தவாதி, ஆன்மீகத்தில் திடமான பற்றுள்ளவர், அவரது நம்பிக்கைகளில் அசைக்கமுடியாத தைரியம் கொண்டவர், அனைவரையும் கவரக்கூடியவர்.**

**நேரு புத்திகூர்மை மிக்கவர், நேர்மையானவர், தன்னலமற்றவர். அவர் ஏராளமான தியாகம் செய்துள்ளார், ஆனால் முழு விஷயத்தையும் கெடுக்கும் அளவிற்கு விவேகமற்ற வேகம் படைத்த மனநிலையில் இருப்பவர்.**

**கடந்த கால மற்றும் நிகழ்கால இந்தியத் தலைவர்களில், திலக்கை** (பால கங்காதர திலக்) **நான் மிகவும் விரும்புகிறேன். 'தலை - இதயம்'** (HEAD - HEART) **இரண்டு பண்புகளின் சிறப்பான கலவையாகத் திகழ்ந்தார். ஒரு சிங்கத்தைப் போலத் துணிச்சலுடன் அனைத்து சிரமங்களையும் எதிர் கொண்டார்; அவரது ஆத்ம சக்தி, கூர்மையான புத்தி, ஆச்சரியமளிக்கும் விதத்தில் மிகப்பெரிய சுய தியாக மனப்பான்மையுடனும் கர்ஜிக்கிற அந்த ஜீவனை நான் பெரிதும் விரும்பினேன். பிரிட்டன் போன்ற ஒரு வலிமைமிக்க சக்தியின் ஆளுமைக்கு எதிராகப் போராடுவதற்கு அவரது**

மூளை மட்டுமல்ல, அரசியல் இராஜதந்திரத்தின் திறமையும் கணிசமாகக் கைகொடுத்தது. திலக் ஒரு சிறந்த வழக்கறிஞர், சிறப்பான சொற்பொழிவாளர், நல்ல எழுத்தாளர் மற்றும் ஸ்லோகங்களைக் கற்றறிந்த தலை சிறந்த மாணவர், கீதையின் வர்ணனையை எழுத தகுதி படைத்தவர்.

ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளையும் அதன் தலைவர்களையும் பற்றி பாபா குறிப்பிட்டார்:

ஹிட்லர், வெறித்தனம் பிடித்தவராக இருந்தாலும், தன்னலமற்ற நோக்கங்களுடன், அவர் செய்வது அனைத்தும் மனிதகுலத்தின் நன்மைக்காகவே என்ற அவரது கருத்துக்களில் நேர்மையாக இருந்தார். உலகத்தை எதிர்கொள்ள, முழு தேசத்தையும் தயார் நிலைக்குக் கொண்டுவரும் அளவிற்கு ஒரு தூண்டும் சக்தியாகத் திகழ்ந்தார். அற்புதம், ஆச்சரியம்! ஹிட்லர் ஒரு சரியான ஊடகமாக இருந்து உலக நாடக மேடையில் தனது பாத்திரத்தைச் சிறப்பாக நடித்து வரும் நடிகர்.

ஸ்டாலின் கூட ஒரு (நயமான) ஊடகம்: விவேகமும், மதிநுட்பமும் மிக்கவர், மிகவும் தைரியமானவர். அவர் செய்து, சாதித்ததை, வேறு எவராலும் செய்திருக்க முடியாது; உள் பூசல்களும், வேறுபாடுகளும் இருந்தபோதிலும், முழு தேசத்தையும் ஒன்றிணைத்து, பொதுவான பகைவனை எதிர்கொண்டார். நான் முன்பே சொல்லியிருக்கிறேன், ரஷ்யா எப்போதும் இறுதி தீர்மானத்திற்கான காரணியாகத் திகழும்.

சர்ச்சில் ஒரு புத்திசாலி, விவேகமுள்ள அரசியல்வாதி. அவர் பிரிட்டனின் 'ஜீவன்', ஆனால் அவர் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் தோல்வி நிச்சயம். இந்தியாவைக் குறித்த நுண்மையான சூழ்நிலையை அவர் எவ்வளவு புத்திசாலித்தனமாகக் கையாண்டார். அவர் பாராளுமன்றத்தின் நம்பிக்கை வாக்கெடுப்பைப் பெற்றார், ஒரு புதிய அமைச்சரவையை உருவாக்கினார், கிரிப்ஸைக் கொண்டுவந்தார், மேலும் முழு இந்தியப் பிரச்சினையையும் அவருடைய (கிரிப்ஸ்) பொறுப்பில் புத்திசாலித்தனமாகத் தள்ளிவிட்டார்.

ரூஸ்வெல்ட் நல்லவர், நேர்மையானவர், திறமையானவர். அவர் இந்தியா வந்து 1933இல் காஷ்மீரில் நான் ஆக்கிரமித்த அதே படகு வீட்டில் தங்கியிருந்தார். அதன் உரிமையாளரே நோரினா மற்றும் மேலை நாட்டினரிடம் இதைத் தெரிவித்தார். அவர் பிறருக்கு உதவ விரும்பும் நல்ல மனம் படைத்தவர், அதை அவர் செய்கிறார்; ஆனால் அவர் தனது நாட்டிலும் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உலக நாடகத்தில் தமது பங்கை வகிக்கும் பெரும் தலைவர்கள் அனைவரும் போய்விடுவார்கள்; ஆனால் இந்தப் பேரழிவின் நல்ல விளைவுகளைக் காண அவர்கள் உயிர் வாழமாட்டார்கள் என்றாலும், பூமியில் சமாதானத்தின் ஒரு புதிய சகாப்தத்தைக் கொண்டுவருவதற்காக அவர்கள் தத்தமது பாத்திரங்களைச் சிறப்பாக ஆற்றியுள்ளதால் பெரிதும்

**ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்**.

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**அனைவரும் என்னுடையவர்கள் - நீங்களும் அவர்களும்**."

அதே நாளின் பிற்பகுதியில், மார்ச் 12 அன்று காக்கா, குஸ்தாஜி, பைதூல் ஆகியோருடன், பாபா மஸ்துகளைத் தேடி கோரக்பூருக்குச் (GORAKHPUR) சென்றார், வழியில் பல இடங்களுக்கு விஜயம் செய்தார். கோரக்பூரில் அவரது மிக முக்கியமான தொடர்பில் வந்தவர் 'சினி ஷா' (CHINI SHAH) என்றழைக்கப்பட்ட ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள மஸ்த் ஆவார்.

ஒருமுறை பத்து நாள் பயணத்தின் போது, பாபா சீதாபூரில் (SITAPUR) திடீரென நின்றார். இது அவர்களின் பயணத்திட்டத்தில் இல்லை என்றாலும், ரயில் நிலையத்திற்கு அருகிலிருந்த ஒரு மரத்தின் கீழ் முகாமிட்டு வாழும் ஓர் உதவியற்ற குடும்பத்தைக் கருத்தில் கொண்டு பாபா சீதாபூருக்கு வந்தார் என்பது மட்டும் மண்டலிக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அந்தக் குடும்பத்தைப் பற்றி விசாரிக்கும்படி பாபா மண்டலியிடம் கூறினார். குடும்பத்தில் தந்தை மற்றும் தாய், மூன்று குழந்தைகள் இருந்தனர். தாயார் நகர முடியாத அளவிற்கு உடல்நலம் குன்றி காணப்பட்டார். அக்கம் பக்கம் விசாரித்த வேளையில் மூன்று குழந்தைகளில் ஒருவர் முந்தைய நாள் காலமானதாகத் தெரியவந்தது. அவர்களிடம் பணம் எதுவும் இல்லை. மனைவியின் நோயும், குழந்தையின் மரணமும் தந்தையை முற்றிலும் நம்பிக்கையற்ற நிலையில் விரக்தியடையச் செய்தன.

முதலில் அவர்களுக்கு உணவளிக்கும்படி பாபா மண்டலிக்கு அறிவுறுத்தினார், பின்னர் அந்த மனிதனின் நிலை குறித்துக் கேள்விகளை எழுப்பினார். அவரது துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையால் அவர் கிட்டத்தட்ட பைத்தியக்காரத்தனத்திற்குத் தள்ளப்பட்டார். பாபாவும் மண்டலியும் பரேலிக்குச் (BAREILLY) சென்று கொண்டிருந்தனர், மேலும் அந்தக் குடும்பத்தார் அனைவரையும் ரயிலில் உடன் அழைத்துச் செல்லுமாறு பாபா கேட்டுக்கொண்டார். அவர்கள் பரேலிக்கு வந்ததும், மனைவியை மருத்துவமனையில் அனுமதிக்குமாறு பாபா அறிவுறுத்தினார். அந்த நபரிடம் அவரது குடும்பத்திற்கு உணவளிக்க பணம் வழங்கப்பட்டது. பரேலி ஒரு பெரிய நகரமாக இருந்ததால், அந்த நபர் விரைவில் ஒரு வேலையைத் தேடிக்கொள்ள முடியும் என்று கூறினார். மீண்டும், தக்க நேரத்தில் கிடைத்த பாபாவின் உதவி, எல்லா நம்பிக்கையையும் கைவிட்டு, பட்டினியால் உயிரைத் துறக்கும் நிலையில் இருந்த ஒரு குடும்பத்தைக் காப்பாற்றியது.

மெஹர் பாபாவின் மஸ்த் பயணம் நிறைவடைந்ததும், அவர் மார்ச் 22 அன்று டெஹ்ரா டூன் திரும்பி வந்தார். இருப்பினும், அவர் உடல்நிலை சீரில்லை என்பதைக் குறிப்பிட்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா

அனைத்து பணிப்பெண்களையும் மெஹராபாத்திற்குத் திருப்பி அனுப்பி, இதர பெண்மணிகளிடம் அனைத்தையும் நிர்வகிக்கும்படி அறிவுறுத்தினார். பணிப்பெண்களுடன், காக்கா, கர்மான் மாசி, அர்னவாஸ், நர்கிஸ் ஆகியோரும் மும்பைக்குத் திருப்பிச் சென்றனர்.

1942 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் உலகெங்கிலும் நிலைமைகள் மோசமடைந்து காணப்பட்டன. தூரக்கிழக்கு நாடுகள் முழுவதும் இரத்தக்களறியாக அதிவேகத்தில் பரவி வந்தது, மேலும் இந்தியா மீது குண்டு வீசப்படுவதற்கான வாய்ப்பு உண்மையான அச்சுறுத்தலாக மாறியது. ஜப்பான், இந்தோ-சீனா மற்றும் தாய்லாந்து வழியாகச் சென்று சிங்கப்பூரைக் கைப்பற்றியது; ஜப்பான் ஆசியாவின் பெரும்பகுதியைக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் மேற்கு பசிஃபிக் பிராந்தியத்திலும் ஆதிக்கம் செலுத்தியது.

போர் நடந்து வரும் வேளையில், பாபா, பல செய்திகளை வழங்கினார்; அவை அச்சிடப்பட்டு அவரது அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் வெளியிடப்பட்டன. 1942 பிப்ரவரி மாதத்தில், நான்கு புதிய செய்திகளை வழங்கினார்: ‘வன்முறையும் அறவழியும்’ (VIOLENCE AND NON-VIOLENCE), ‘தற்போதைய போரின் ஆன்மீக முக்கியத்துவம்’ (THE SPIRITUAL SIGNIFICANCE OF THE PRESENT WAR), ‘செயலும் செயலற்ற தன்மையும்’ (ACTION AND INACTION) மற்றும் ‘இந்தியாவில் ஆக்கபூர்வமான தலைமைத்துவத்தின் அத்தியாவசிய தேவை’ (THE NEED FOR CREATIVE LEADERSHIP IN INDIA).

ஜப்பான், இந்தியா மீது போர் தொடுக்க நேர்ந்தால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து, பாபா, அவரது அன்பர்கள், பக்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு விளக்கங்களையும் துல்லியமான அறிவுறுத்தல்களையும் வழங்கினார். இந்த நான்கு செய்திகளையும் குறிப்பாக இந்திய தலைவர்களுக்கு வழங்க, பாபா விரும்பினார். இந்தப் பணிக்காக, பாபா, சாஞ்சி, ஜால் கேரவாலா இருவரையும் தேர்ந்தெடுத்து மார்ச் 23 அன்று, இந்த வார்த்தைகளுடன் டெல்லிக்கு அனுப்பி வைத்தார்: **“நீங்கள் இந்த வேலையைச் செய்தாக வேண்டும், அதைச் செய்வதன் மூலம் உங்கள் உயிரைத் துறக்க நேர்ந்தாலும் கூட நீங்கள் மட்டுமே இதைச் செய்ய வேண்டும்!”**

இந்தியாவின் அரசியல் நிலைமை மிகவும் சிக்கலானதாக மாறியது. ஜப்பான் இந்தியாவின் எல்லைகளை நெருங்கிக்கொண்டிருந்தது. அதே நேரத்தில், மகாத்மா காந்தியும், பிற தலைவர்களும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின்னால், சுதந்திரத்திற்காகக் கூச்சலிட்டனர். ஏதோ தீர்விற்கு வரும் நோக்கத்தில், சர்ச்சில் இந்தியாவின் தலைவர்களை சந்திக்க, ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸை (STAFFORD CRIPPS) டெல்லிக்கு அனுப்பி வைத்தார்.

ஜப்பானின் தோல்விக்குப் பின்னர், நாட்டைப் பாதுகாப்பதில் அவர்களின் உடனடி ஒத்துழைப்பைப் பெறுவதற்காக, இந்திய சுதந்திரத்திற்கான அனைத்தையும் வழங்கப்போவதாக அவர் கூறினார். ஆனால் இந்தத் திட்டம்

காந்தியின் அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களோடு இசைந்து போகாததால் அது நிராகரிக்கப்பட்டது.

இதையெல்லாம் உன்னிப்பாகக் கண்காணித்து வந்த பாபா, கிரிப்ஸுடனான (23ஆம் தேதி டெல்லிக்கு வந்தார்) சந்திப்பிற்கு முன்னர் அவர் வெளியிட்ட நான்கு செய்திகளையும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என விரும்பினர். அதன்படி, டெல்லியின் கடுமையான கோடைக்கால வெப்பத்திலும், காந்தி, ஜின்னா, நேரு, ராஜாஜி மற்றும் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் போன்ற சுமார் 30 முக்கிய தலைவர்களை, தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள சாஞ்சி, ஜால் இருவரும் ஒரு வாரம் செலவிட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மெஹர் பாபாவின் நான்கு செய்திகளின் அச்சிடப்பட்ட நகல்கள் வழங்கப்பட்டது.

சாஞ்சி, ஜால் இருவரும் மார்ச் 30 காலையில் டெஹ்ரா டூன் திரும்பி வந்தனர். இந்த முக்கியமான கட்டத்தில் அரசியல்வாதிகளுக்கு நிகழ்வுகளின் நெருக்கமான கால அட்டவணைகள் இருந்தபோதிலும், பாபா விரும்பியபடி அவர்கள் அனைத்து தலைவர்களையும் தொடர்பு கொள்வதில் எவ்வளவு 'அதிர்ஷ்டசாலிகள்' என்ற அவர்களின் அறிக்கைகளைக் கேட்டு, பாபா புன்னகைத்து இவ்வாறு குறிப்பிட்டார்:

**இந்தியாவின் எதிர்காலம் குறித்து விவாதித்து முடிவு செய்யப்படும் குறிப்பிடத்தக்க காலகட்டத்தில், இந்தப் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்ற தலைவர்களை நீங்கள் இருவரும் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. இதுவெல்லாம் கடவுளின் திட்டப்படி நிகழ்ந்தது. கடவுள் அவர்களுக்கு வழங்கும் எண்ணங்களுக்கும், ஞானத்திற்கும் ஏற்ப அவர்கள் இப்போது முடிவுகளை எடுப்பார்கள். கடவுளின் திட்டம் எப்போதுமே சிறந்ததாக இருக்கும்; இருப்பினும், சில நேரங்களில், சில விஷயங்கள் தவறாக நடப்பது போலத் தோன்றினாலும், உண்மையில் அது அவ்வாறு இல்லை.**

இதற்கிடையில், இந்த சந்தர்ப்பத்தில், பாபா நாக்பூரிலிருந்து பங்க்ராஜை (PANKHRAJ) டெஹ்ரா டூனுக்கு அழைத்திருந்தார். அவர் 1942, மார்ச் 25ஆம் நாள் பாபாவிடம் வந்தபோது, பாபா அவரிடம், "**உங்களுக்கு என்ன வேண்டும்?**" என வினவினார்.

"நான் என்றென்றும் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்," என்ற அவருடைய நேர்மையான பதிலைக் கூறினார்.

**"என்னுடன் இருப்பது என்பது மிகவும் கடினம். இதன் அர்த்தம் முழுமையான சுய சரணடைதல். அதற்கு நீங்கள் தயாரா?"**

"நான் அந்த நோக்கத்திற்காக மட்டுமே வந்துள்ளேன்" என்று பங்க்ராஜ் பதிலளித்தார்.

அவருக்கு ஆலோசனை வழங்கிய பாபா, பின்பு தியாகத்தின் அர்த்தத்தை விளக்கி, "**இதை நன்கு யோசித்து, நாளை உங்கள் பதிலை எனக்குச் சொல்லுங்கள்**" என்றார்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, பங்க்ராஜ் அடுத்த நாள் பாபாவிடம் வந்து, “நான் உங்களிடம் சரணடைய தயாராக இருக்கிறேன். நீங்களே எனது குருநாதர், என் இதயத்தின் ஒரே பிரியமானவர்” என்று உறுதியளித்தார்.

“**நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்**,” என்று கூறி பாபா, “**நீங்கள் சரியான முடிவை எடுத்துள்ளீர்கள். இப்போது நாக்பூருக்குத் திரும்பிச் சென்று வேலை தேடுங்கள். மாதத்திற்கு பத்து ரூபாய் மட்டுமே கிடைத்தாலும் அந்த வேலையை ஏற்றுக்கொள்ளுங்கள்**” என்றார்.

அவரது காதுகளை நம்ப முடியாமல் பங்க்ராஜ் பாபாவை முறைத்துப் பார்த்தார். பாபா, தொடர்ந்து விளக்கினார், “**நீங்கள் என்னிடம் சரணடைந்து விட்டதால், இனிமேல் உங்கள் சொந்த விருப்பத்திற்கு இடமில்லை. இப்போது எனக்கு உங்கள் மீது முழு உரிமைகள் உள்ளன, நான் சொல்வது போல நீங்கள் செய்ய வேண்டும். நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்தால், அது என்னுடன் இருப்பது போலாகும். இதுதான் சரணடைதலின் அர்த்தம்.**”

பங்க்ராஜ் பாபாவிற்குக் கீழ்ப்படிந்து வீடு திரும்பினார். விரைவில், அவருக்கு நாக்பூரில் ஒரு நல்ல வேலை கிடைத்தது.

இருப்பினும், சிறிது காலத்திற்குப் பிறகு, பங்க்ராஜ் தனது ‘உலக வாழ்க்கையில்’ அதிருப்தி அடைந்து, அதைக் குறித்து பாபாவிற்கு எழுதினார். சாஞ்சி பதிலளித்த கடிதத்தில், சில நல்ல ஆலோசனைகளை வழங்கினார்:

உங்கள் இதயத்தின் வெளிப்பாடுகளை அறிந்து, பாபா, மிக்க மகிழ்ச்சியடைகிறார்; மேலும் உங்கள் உணர்வின் ஆழத்தை அவர் முழுமையாக அறிந்திருப்பதாகவும், அதற்காக உங்களைப் பாராட்டுவதாகவும் கூறுகிறார்.

எவ்வாறாயினும், நீங்கள் இப்போது இருப்பதைப் போலவே, அவர் உங்களை அழைப்பது வரை, உங்களுக்காகவும் பிறருக்காகவும், சேவை செய்து (உழைத்து) சம்பாதிப்பதைத் தொடர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; எனவே அதுவரை நீங்கள் மனச்சோர்வடைய வேண்டியதில்லை என்றும் பாபா கூறுகிறார். பாபா எங்கும் இருக்கிறார், ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்யும்படி அவர் உங்களிடம் கூறும்போது, அதற்கு சிறப்பு காரணங்கள் உள்ளன என்றும், அது உங்கள் சொந்த நலனுக்காக என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். எனவே, அங்கு உங்கள் சேவையைச் செய்யும் போது கூட, உங்கள் ‘ஜீவன்’ பாபாவுடன் இருந்தால், சலிப்பாகத் தோன்றும் வெளிப்புற சூழல்களைப் பற்றி நீங்கள் கவலைப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. ஆனால் ‘மகத்தான காரணம்’ ஒன்றிற்காக, தன்னை தயார்படுத்திக்கொள்ள அந்த அனுபவமும் தேவையான ஒன்று.

பாபாவைத் தவிர வேறு யாருக்கு இது தெரியும்? உங்களை அந்த வழியில் நடத்துவது விரும்பத்தக்கது என்று அவர் கருதுவதால், அவர் அதை உங்கள் சொந்த நலனுக்காகவே செய்கிறார். ஆகவே, நீங்கள் அவர் விரும்புவதைச் செய்கிறீர்கள், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறீர்கள், அவருடைய விருப்பத்திற்கு இணங்கி செயல்படுகிறீர்கள் என மகிழ்ச்சியாக

உணர முயற்சி செய்யுங்கள். தியானம், மனதை ஒருமுகப்படுத்தல், பிராணயம், தவம் புரிதல் இது போன்ற பிற பயிற்சிகளில் ஈடுபடுவது எளிதானது, ஆனால் ஒரு குருநாதரிடம் சரணடைந்து அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது மிகவும் கடினம்.

இது மிகச் சிறந்தது மட்டுமின்றி எளிதான வழியாகும், ஆனால் ஸ்ரீ பாபா போன்ற உண்மையான குருநாதரை சந்திப்பது மிகச் சிலருக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது. நீங்கள் இக்காலகட்டத்தின் அவதார புருஷரின் நேரடி வழிகாட்டுதலின் கீழ் இருக்கிறீர்கள். இது என்ன ஒரு சிறப்புமிக்க, பிறரிடம் பொறாமையைத் தூண்டும் அதிர்ஷ்டம், அரியதொரு சிறப்புரிமை என்பதை கற்பனை செய்து பாருங்கள்; அது மட்டுமல்லாமல், உங்களை நேசித்து, உங்களின் இறுதி இலக்கை நோக்கி அன்புடன் வழிநடத்தும் பாபாவின் விருப்பங்களையும் அறிவுறுத்தல்களையும் நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியாக இருங்கள்.

மெஹர் பாபா 1942, ஏப்ரல் 1ஆம் நாள், காக்கா, குஸ்தாஜி, ஜால் கேரவாலா, பைதூல் ஆகியோருடன் புறப்பட்டு அமிர்தசரஸ் (AMRITSAR), பட்டான்கோட் (PATHANKOT), டல்ஹௌசி (DALHOUSIE), சம்பா (CHAMBA), காங்க்ரா பள்ளத்தாக்கு (KANGRA VALLEY) போன்ற இடங்களில் வாழ்ந்த மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். இமயமலைக்கு அருகே, ஏகாந்தவாசத்திற்காக, ஒரு சில சிறந்த இடங்களைத் தேர்ந்தெடுக்க விரும்புவதாக பாபா சுட்டிக்காட்டியிருந்தார். இந்தப் பயணத்தின் போது பாபா, காஷ்மீர் நகரில் முர்ரிக்கு அருகிலமைந்த மலையில் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, ஏகாந்தவாசத்தில் அமர்ந்த வேளையில், மலையடிவாரத்தில் மண்டலி கண்காணிப்புடன் இருக்க அறிவுறுத்தப்பட்டனர்.

இந்தப் பயணத்தின் போது, பாபாவின் தொடர்பில் வந்த இரண்டு குறிப்பிடத்தக்க மஸ்துகள், கலா ஸைன் (KALA SAIN) மற்றும் பெங்காளி பாபா (BENGALI BABA) ஆவர். அமிர்தசரஸில் பிரபலமான கலா ஸைன் ஆழ் மன உணர்வு நிலையை எட்டிய ஒரு ஸலிக் வகையைச் சேர்ந்த மஸ்த், 110 வயதுக்கு மேற்பட்டவரும், மிக்க புகழ் வாய்ந்தவரும் ஆவார். அவர் பிறருடனும் பேசுவது மிக அரிது; மேலும் அவர் நகரின் புறநகர் பகுதியில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் வாழ்ந்து வந்தார். பாபா அவரைப் பெரிதும் விரும்பினார்.

பட்டான்கோட்டில், 'ஜலாலி' (கோபம்) மற்றும் ஜமாலி (சாந்தம்) குணாதிசயங்கள் அடங்கிய அப்பகுதியின் ஆன்மீகப் பொறுப்பாளரான பெங்காளி பாபாவை, மெஹர் பாபா தொடர்பு கொண்டார்.

இந்த சந்திப்புகளை நிறைவு செய்து (சில இடங்களுக்கு அவர்கள் குதிரையிலும் பயணம் செய்ய வேண்டியிருந்தது), பாபா ஏப்ரல் 9 அன்று டெஹ்ரா டூன் திரும்பி வந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, மகாத்மா காந்திக்கு ‘அகிம்சை’ (NON-VIOLENCE), ‘ஒத்துழையாமை’ (NON-VIOLENT RESISTANCE) இவற்றைக் குறித்த அவரது சொந்த கருத்துக்கள் இருந்தன; மேலும் இந்த விஷயத்தில் மெஹர் பாபாவின் செய்தியின் சுருக்கத்தை அவர் உண்மையில் புரிந்து கொள்ளவில்லை. பாபா, அவரது மஸ்த் பயணத்தில் இருந்தபோது, காந்தியை சந்திக்க, சாஞ்சியை மீண்டும் டெல்லிக்கு அனுப்பி வைத்தார். 1942 ஏப்ரல் 2, 3ஆம் தேதிகளில் சாஞ்சி, காந்தியை சந்தித்து, டெஹ்ரா டூன் திரும்பிய பின்னர், இருவருக்கும் இடையே பல கடிதங்கள் பரிமாறப்பட்டன. சில சூழ்நிலைகளில் வன்முறையைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்தும் பாபாவின் கருத்துக்களைப் பார்த்து காந்தி ஆச்சரியமடைந்து, அவற்றை ‘முற்றிலும் பொருத்தமற்றது’ என்று குறிப்பிட்டார். இருப்பினும், காந்தியின் கருத்துக்கள் ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் யாத்திரீகர்களுக்கு சாத்தியமற்றவை; அகிம்சையைக் குறித்த அவரது கருத்தை, ஒரு மஜ்ஜூப்பின் இறை உணர்வை அடைந்த நிலையில் மட்டுமே அடைய முடியும்; அந்த நிலையில் அது தானாகவே அடையப்படுகிறது!

ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை அன்று காந்தி மற்றும் அவரது ஒத்துழையாமை இயக்கம் பற்றி விவாதித்தபோது, பாபா மேலும் தெளிவுபடுத்தினார்:

**சத்தியம், அன்பு, தன்னலமற்ற சேவை இவற்றைப் போல் உண்மையான அகிம்சை என்பது இறைநிலையை அடைவதற்கான வழிகாட்டியாகும். சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பிறருக்கு, 100 சதவிகிதம் தீங்கு, வெறுப்பு, பழிவாங்குதல் அல்லது சுய லாபம் போன்ற சிறிதளவு உணர்வும் இல்லாமல் செய்யப்படும் வன்முறை, எனது அகிம்சை அல்லது அறவழியில் ஒரு பாகமாக உள்ளடங்கும். நான் அதை ‘அறவழி வன்முறை’ என்று அழைக்கிறேன்.**

**தூய்மையும், எளிமையுமான அகிம்சை (அறவழி), கடவுளின் ‘அப்பாற்பட்ட’ நிலையைச்** (BEYOND STATE OF GOD) **சார்ந்தது. அதுவே மனிதகுலத்தின் குறிக்கோள். இறைவனைத் தேடி அலையும் நிலையிலிருக்கும் ஒருவரிடத்தில் அது இருக்க முடியாது. எவ்வாறாயினும், இறைவனை நாடும் ஒரு யாத்திரீகர் ‘துணிச்சலானவரின் அகிம்சை’ அல்லது ‘சுயநலமற்ற வன்முறை’ என்பதன் மூலம், இந்த இலக்கை அடைய முடியும்; அதாவது ‘அறவழி வன்முறை’.**

**பிரியமான இறைவனே ஒருவரின் இலக்கு. அன்பே அதற்கு வழி. ஓர் அன்பன், அன்பின் மூலம் அன்பிற்குரியவரை அடைய முடியும். பரபிரம்ம பரமாத்மாவின் ‘அப்பாற்பட்ட’ நிலையிலிருக்கும் கடவுளே அளவிறுதியற்ற அன்பு, ஒளி மற்றும் வாழ்க்கை. எல்லாமே அவர்தான். ஒருவர் கடவுளை உணர்ந்து, அளவிறுதியற்ற அன்பை அடையாவிடில், ஒருவர் முற்றிலும் தூய்மையான, எல்லையற்ற அகிம்சைவாதியாக இருக்க முடியாது. அன்பில் ‘காமம்’ இல்லாதது போல, கடவுளில் ‘வன்முறை’**

இருக்க முடியாது. தூய்மையும், எளிமையுமான அகிம்சை (அறவழி) ஒன்றுதான் அளவிறுதியற்ற அன்பு.

பிரியமான இறைவனைக் காணும் ஆவலுடன் இருக்கும் அன்பன் ஒருவன், ஆன்மீகப் பாதையில் இறைவனைத் தேடும் யாத்ரீகனின் அதே நிலையில் இருக்கிறான். அன்பின் மூலமாக, அன்புக்குரியவரோடு ஐக்கியமான மஜ்ஜூப், இறைநிலையை அடைந்து இறைவனாக வாழ்கிறார்.

இந்த நிலைகளுக்கு இடையிலான வேறுபாட்டை பின்வரும் முறையில் விளக்கலாம்: உங்களை எவரேனும் அறைந்ததாக அல்லது உதைத்ததாக வைத்துக்கொள்வோம். நீங்கள் பதிலடி கொடுக்காமல் அமைதியாக ஒன்றும் செய்யாமல் இருந்தால், அது 'துணிச்சலானவரின்' அகிம்சையைக் கடைப்பிடிக்கும் ஒரு யாத்ரீகரின் வகையைச் சார்ந்ததாகக் கூறலாம். ஒரு மஜ்ஜூப்பை எவரேனும் அறைவது அல்லது உதைப்பது போன்ற விஷயத்தில், இது முற்றிலும் வேறுபட்டது. அமைதியாக இருக்கவோ அல்லது தன்னைக் கட்டுப்படுத்தவோ வேண்டிய அவசியம் மஜ்ஜூப்பிற்கு இல்லை; அதற்காக எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. ஏனெனில், தெய்வீக ஆனந்த நிலையில் இருக்கும் மஜ்ஜூப், ஒருவர் அறைவதையோ உதைப்பதையோ 'உணர்வதில்லை'; அவர் அந்த உணர்வைக் கடந்த நிலையில் இருக்கிறார்.

இறைநிலையை அடைந்த பிறகு கூட, 'உணர்வு' என்ற கேள்வி, அந்த நிலையிலிருந்து மீண்டும் உலக உணர்வு நிலைக்கு வரும்போதுதான் எழுகிறது. அங்கு, அவர் அகிம்சையை, தூய்மையும் எளிமையுமான, தெய்வீக அன்பை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தலாம், மேலும் எல்லையற்ற அன்பின் மூலம் அறைந்தவர் அல்லது உதைத்தவரை இணங்கச் செய்ய முயற்சிக்கலாம். ஒரே இறை உணர்வுடன் இருக்கும் எல்லா ஆத்மாக்களும் நிலைகொண்டிருக்கும் இறைவனின் 'அப்பாற்பட்ட' நிலையில் (BEYOND STATE) தாக்குபவரும், தாக்கப்படுபவரும் அவரே!

இது ஒருமை அல்லது இருமைத்தன்மை உடையதாக இருக்கும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவும் இல்லை.

வெவ்வேறு யோகா முறைகளுக்கு வெவ்வேறு வழிகள் உள்ளன; உதாரணமாக, பக்தி யோகாவைப் பொறுத்தவரை, 'அன்பு'; கர்ம யோகாவிற்கு, 'அகிம்சை' மற்றும் பல. கர்ம யோகாவில், தனிநபர்களுக்கான அன்பு 'துணிச்சலானவரின் அகிம்சை', மற்றும் சாதாரண மக்களிடம் காட்டும் அன்பு 'அறவழி வன்முறை' ஆகும். கர்ம யோகாவில் பிரியமான குருநாதரின் அன்பு 'தூய்மையும் எளிமையுமான அகிம்சை'. இப்போது அன்பான இறை அம்சத்தை அடைய, நீங்கள் அன்பின் பாதையில் செல்ல வேண்டும்.

கடவுள் ஏன் 'பிரியமானவர்' என்று அழைக்கப்படுகிறார்? ஏனெனில் நாம் அவரை அன்பால், பிரியத்தால் அடைகிறோம். அகிம்சை (அறவழி) மூலம் நீங்கள் அவரை அடையும்போது, அவரை எல்லையற்ற அகிம்சை

**என்று அழைக்கிறீர்கள். யோகிகள் (மேல்நிலை ஆத்மாக்கள்) அவரை 'எல்லையற்ற சைத்தன்யா (உணர்வு நிலை)' என்று அழைக்கிறார்கள். ராஜ யோகத்தைப் பின்பற்றுபவர்கள் அவரை 'பிரபு', அனைத்தையும் படைப்பவர், உருவாக்குபவர் என்று அழைக்கிறார்கள். இவ்வாறு ஒருவர் இறைநிலையை அடையும் பாதையின் பெயரால் அழைக்கப்படுகிறார்.**

'காமம்' (LUST) மற்றும் 'பிரம்மச்சரியம்' (CELIBACY) குறித்து மெஹர் பாபா கூறியதாவது:

**ஒருவர் காமம் நிறைந்தவராக இருந்தால், எதிர் பாலினத்தைச் சேர்ந்த பல நபர்கள் மீது தனது காமத்தைத் தூண்டும் போக்கு அவருக்கு இருக்கும். பிரம்மச்சரியத்தின் இலட்சியமானது, எதிர் பாலின நபரைத் தீண்டுவதுகூட அனுமதிக்கப்படமாட்டாது. இப்போது காமத்திலிருந்து முற்றிலும் விடுபட்ட குருநாதர், தீவிரமான காமத்தால் ஆட்கொள்ளப்பட்ட நபருக்கு உதவ விரும்பினால், அவர் பிரம்மச்சரியத்திற்கான தகுதியற்றவர் என்பதை குருநாதர் அறிவார். எனவே, அவர் சட்டப்பூர்வமான திருமணம் செய்ய அனுமதிக்கிறார், ஆனால் அவர் தனது காமத்தை ஒரு பெண்ணுடன் (மனைவியுடன்) மட்டுமே மட்டுப்படுத்தும்படிக் கேட்கிறார். பின்னர் படிப்படியாக, காமம் குறைந்து வருவதால், திருமண வாழ்க்கையை பராமரிக்கவும் தொடரவும் முடியும் என்றாலும், திருமணமான மனைவியுடன் கூட, காமம் சார்ந்த அனைத்து செயல்களையும் கைவிடுமாறு அவரிடம் கேட்கப்படலாம். இந்த முறையில், காமம் படிப்படியாக நீக்கப்பட்டு, பிரம்மச்சரியத்தின் இறுதி இலக்கு அடையப்படுகிறது.**

பெங்களூரில் ஆதி சீனியரிடமிருந்து வந்த தொலைத்தந்தி பற்றி விவாதித்தபோது, அதில் கோடிட்டுக் காட்டிய சில சிரமங்களைக் குறித்து மெஹர் பாபா கூறினார்:

**ஒரு குருநாதர் என்ற முறையில், என்னைச் சார்ந்து, எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிட்ட மண்டலியின் அனைத்து பொறுப்புகளையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டும், அதே நேரத்தில், சில நிபந்தனைகளின் கீழ், நான் அவர்களிடம் கேட்கும்போதெல்லாம், யோசனைகளையும் திட்டங்களையும் பரிந்துரைப்பதன் மூலம் இந்தப் பொறுப்பில் மண்டலி பங்கேற்க விரும்புகிறேன். முழுப் பொறுப்பும் எப்பொழுதும் என் மீது இருந்தாலும், மண்டலியின் இந்த ஆலோசனையைக் கேட்கும்போதெல்லாம், எனது சுமை ஓரளவிற்குக் குறைகிறது.**

**எல்லாமே ஒரே திட்டவட்டமான நோக்கத்திற்காக இருந்தாலும், ஏற்கனவே திட்டமிட்டபடி, ஏதோவொரு வழியில், விவரங்களும் முறைகளும் வேறுபடுகின்றன. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரை அழைத்துவர ரயில் நிலையத்திற்குச் செல்லும்படி நான்**

**கேட்டுக்கொண்டால், நீங்கள் கார், டோங்கா, பஸ், அல்லது நடந்து செல்கிறீர்களா என்பது உங்கள் விருப்பத்திற்கு விடப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அங்கு செல்லவேண்டியதே அவசியம்**.

மெஹர் பாபா, ஆதி சீனியர், டாக்டர் கனி இருவரையும் பெங்களூரிலிருந்து டெஹ்ரா டூன் வரவழைத்து, சில அரசியல் தலைவர்களைத் தொடர்பு கொள்ள டெல்லிக்கு அனுப்பி வைத்தார்.

ஏப்ரல் 11 அன்று, பாபா, தேஷ்முக்கிற்கு கடிதம் எழுதி, காந்தியை மீண்டும் சந்திக்கும்படி அவருக்கு அறிவுறுத்தி, மேலும் பாபாவின் கண்ணோட்டத்தில் சரியாக விளக்க முயற்சிக்குமாறு கூறினார்.

தேஷ்முக் 15ஆம் தேதி வார்தாவில் (WARDHA) உள்ள ஆசிரமத்தில் காந்தியை சந்தித்தார், ஆனால் காந்தி இன்னும் ‘அறவழி வன்முறை (போராட்டம்)’ என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாமல், அவரது சுய கண்ணோட்டத்துடன் விடாப்பிடியாக ஒட்டிக்கொண்டிருந்தார்.

ஏப்ரல் மாத இறுதியில், ஆன்மீகத்தில் ஆர்வம் மிக்க பிற பிரபலமான நபர்களைத் தொடர்புகொண்டு, அவருடைய செய்திகளை அவர்களிடையே பரப்புவதற்கு, பாபா, சாஞ்சியை டெல்லிக்கு மறுபடியும் அனுப்பி வைத்தார். பாபா குறிப்பாக அமெரிக்காவின் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் (ROOSEVELT) சிறப்பு தூதர் கர்னல் லூயிஸ் ஜான்ஸனை (COLONEL LOUIS JOHNSON) தொடர்பு கொள்ள விரும்பினார். சாஞ்சி அவருக்குத் தகவல்களைக் கொடுத்தபோது, அவற்றைப் படிப்பதாக உறுதியளித்தார். (அரபிந்தோ - AUROBINDO போன்ற முக்கிய இந்திய பிரமுகர்களுக்கும் செய்திகள் அனுப்பப்பட்டன.)

கராச்சியிலிருந்து பீலாமாய் பாபாவிற்கு இரண்டு கிளிகள், ஒரு ஆண் மற்றொன்று பெண், கொண்டு வந்தார். ஆண் கிளி நீண்ட காலம் வாழவில்லை, ஆனால் ‘மிட்டு’ (MITTU) என்ற பெண் கிளி, பாபா மற்றும் பெண்மணிகளுடன் அடுத்த சில ஆண்டுகள் பயணம் செய்தது.

டெஹ்ரா டூன் நகரில் வாழ்ந்து வந்த கேக்கி நலவாலா, மெஹர் பாபாவை நேசித்து வந்தாலும், அவர் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை; ஒரு வருடத்திற்கு முன்பு, பாபாவின் பாதங்களை ஒரு முறை மட்டுமே, அதுவும் தூரத்திலிருந்து பார்க்க முடிந்தது! டெல்லியைச் சேர்ந்த கேக்கி தேசாயும் இதேபோல் 1941இல் ஜெய்ப்பூரில் பாபாவை சந்திக்க வந்திருந்தார், ஆனால் பாபாவின் பாதங்களைக் கூட பார்க்க அனுமதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், பாபாவின் ‘காதல் நாடகம்’ கடைசியாக அதன் நோக்கத்தை நிறைவேற்றியது; மேலும், சாஞ்சியின் வேண்டுகோளுக்கு இணங்கி பாபா, மண்டலியின் பங்களாவில் இரண்டு ‘கேக்கிகளுக்கும்’ தரிசனம் வழங்க ஒப்புக்கொண்டார், ஆனால் ஒரு நிமிடம் மட்டுமே. அவர்களுடன் ஆதி நோராஸ், (ADI NORAS - கேக்கி தேசாயின் நண்பர், நவ்ஸாரியைச் சார்ந்தவர், டெஹ்ரா டூனில் பணிபுரிந்தார்) என்பவரும்

அனுமதிக்கப்பட்டார்; கரங்களைக் கூப்பி வணங்கவோ, மாலைகள் அணிவிக்கவோ, அல்லது பாபாவிடம் பேசவோ கூடாது என்று மூவருக்கும் முன்னரே எச்சரிக்கப்பட்டது.

அவர்கள் 1942, ஏப்ரல் 14 அன்று வந்தபோது, பாபாவின் சிறிய, பத்து சதுர அடி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அறையின் குறுக்குப் பாகம் ஒரு திரையால் மறைக்கப்பட்டிருந்தது. கேக்கி நலவாலா இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "திரை விலக்கப்படுவதற்கு முன்பு, நடிகர்கள் நாடக மேடையில் நிற்பது போல நாங்களும் சிறிய திரைக்கு முன்னால் நின்றோம்." சரியாக பிற்பகல் 2:00 மணிக்கு, திரை ஒருபுறம் விலக்கப்பட்டதும், ஜால் கேரவாலாவுடன் ஒரு மூலையில் பாபா சம்மணமிட்டு அமர்ந்திருந்ததைப் பார்க்க முடிந்தது. காலம் இதை இப்படிப் பார்த்தது: "அறையில் மட்டுமல்ல, ஆனால் அவர்களின் மனங்கள் மற்றும் இதயங்களிலிருந்தும் திரை விலக்கப்பட்டது!"

அவர்கள் பாபாவிடம் எதுவும் சொல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அது ஒரு பொருட்டல்ல, ஏனெனில் பாபாவின் முன்னிலையில் அத்தகைய பிரமிப்பில் நின்ற வேளையில், அவர்கள் விரும்பி இருந்தாலும் எதுவும் சொல்லியிருக்க முடியாது. கேக்கி நலவாலா பார்த்ததை இவ்வாறு நினைவுகூர்ந்தார்: "உதயமாகும் சூரியனின் பளபளப்பான பார்வை எங்களை ஊமையாக்கி, முணுமுணுக்கச் செய்து, திகைப்பில் ஆழ்த்தியது!"


குருநாதரின் மௌனம் நலவாலாவின் இதயத்தில் அன்பின் மதுவை ஊற்றி, விளிம்பு வரை நிரப்பியது. அவரது இதய மொழி "பாபா, நான் உங்களுடையவன் ஆகிவிட்டேன்" எனப் பறைசாற்றியது!

கேக்கி தேசாயும் இதயம் நெகிழ்ந்து போனார்; ஆனால் தரிசனம் விரைவாக முடிந்துவிட்டதாலும், அவர் அதி உற்சாகத்துடன் இருந்ததாலும், பாபாவை, மனம் விரும்பிய அளவிற்கு அவர் பார்க்கவில்லை. பின்னர், இதை நினைத்து அவர் ஏமாற்றமடைந்ததாக உணர்ந்தார். ஆனால், இரக்கத்தின் மொத்த உருவான பாபா, ஆறு நாட்களுக்குப் பின்னர், 20ஆம் நாள், கேக்கியின் மனைவி தூன் (DHUN) என்பவரை மகளிர் பங்களாவிற்கு அவர்களுடன் ஒரு நாள் தங்குவதற்காக அழைத்தார். கேக்கியிடம் அவரது மனைவியை அழைத்து வருமாறு கூறப்பட்டது. அவர் மனைவியுடன் வீட்டிற்கு வெளியே வந்ததும், வாசலில் காவல் புரிந்து வந்த ஸூனாமாசி, சற்று காத்திருக்குமாறு கூறினார். ஒரு கவச நாற்காலியில் அமர்ந்திருந்த பாபா, சிறிது நேரத்தில் அவரைத் தோட்டத்திற்கு உள்ளே அழைத்தார்; இப்போது கேக்கிக்கு, அவரது ஏக்கத்தைத் தணிக்கும் அளவிற்கு பாபாவை அருகிலிருந்து பார்க்கும் நல்ல அதிர்ஷ்டம் கிடைத்தது. "**இந்த நேரத்தில் நீங்கள் என்னை, தலை முதல் கால் வரை பார்த்ததில் முழுமையாகத் திருப்தி அடைகிறீர்களா?**" என்று பாபா கேட்டார்.

கேக்கி பின்பு நினைவு கூர்ந்தார்: "நான் எப்பொழுதும் பார்த்த அல்லது பார்க்கும் மிகவும் அழகான முகம் பாபாவின் முகம்தான். இறுதியில் என் அன்பிற்குரியவரைப் பார்த்ததில் நான் அளவிலா மகிழ்ச்சியடைந்தேன்!"



மெஹர் பாபா - ரிஷிகேஷ் (MEHER BABA - RISHIKESH) - **1942**



**கேக்கி நலவாலா & கேக்கி தேசாய்**

(KEKI NALAWALA & KEKI DESAI)

பைரமங்களா நிலத்தை, அப்போது கிடைக்கக்கூடிய அதிகபட்ச விலையில், விற்பனை செய்யும் பொறுப்பை, பப்பா ஜெஸவாலாவிடம் பாபா ஒப்படைத்திருந்தார். ஆன்மீக மையத்திற்காக மெஹர் பாபா திட்டமிட்ட அந்த நிலம் ஐந்து முதல் ஏழு நூறு ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்தது. இந்தப் பணிக்காக பப்பா ஜெஸவாலா டெஹ்ரா டூன், அஹமதுநகர், நாசிக், மும்பை போன்ற நகரங்களுக்கிடையே தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தார், அதே நேரத்தில் அவரது குடும்பம், பாபாவின் அறிவுறுத்தலின் படி, பெங்களூரில் வாழ்ந்து வந்தது.

பப்பா, 1942 ஏப்ரல் 12ஆம் நாள் காலை டெஹ்ரா டூன் வந்து பாபாவை சந்தித்து, அடுத்த நாள் இரவு அஹமதுநகர், நாசிக் போன்ற இடங்களுக்குச் சென்றார்.

இந்த நேரத்தில் பெங்களூர் நகரம் ஜப்பானியர்களால் குண்டு வீசப்படும் அபாயத்தில் இருந்ததாக வதந்திகள் பரவின. நகரத்திலிருந்து மக்கள் திரள் திரளாக வெளியேறியதால் அது கிட்டத்தட்ட வெறிச்சோடி இருந்தது. பப்பா ஜெஸவாலா பீதியடைந்து, தனது குடும்பத்தின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, எரச்சிற்குத் தொலைத்தந்தி அனுப்பியபோது, உடனடியாக, குடும்பம் அனைத்து உடமைகளுடன் டெஹ்ரா டூன் வருமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்த விஷயத்தை மெஹர் பாபாவுடன் கலந்து ஆலோசனை செய்யாமல், பப்பா இதை, பாபாவின் அறிவுறுத்தல்படி செய்ததாக எழுதி கையொப்பமிட்டு, அஹமதுநகரில் இருந்து தொலைத்தந்தியை அனுப்பினார்; ஏனெனில் அது பாபாவிடமிருந்து வருவதானால் அவரது குடும்பத்தினர் அத்தகைய அறிவுறுத்தலுக்குக் கீழ்ப்படிவார்கள் என்று அவருக்குத் தெரியும்.

1942, ஏப்ரல் 17 அன்று குலாமாசி ஸட்டா மற்றும் ஸர்வருடன் எரச், கெய்மாய், மனு, மெஹரு, மெஹர்வான் ஆகியோர் டெஹ்ரா டூன் வந்தபோது, பாபா அவர்களைப் பார்த்து மிகவும் அதிருப்தி அடைந்து, "**நீங்கள் அனைவரும் ஏன் இங்கு வந்தீர்கள்?**" என வினவினார்.

"ஏனெனில், உங்கள் உத்தரவு என்று கூறி பப்பா எனக்குத் தொலைத்தந்தி அனுப்பியிருந்தார்" என்று எரச் பதிலளித்தார்.

அதன் பின்பு, பப்பா டெஹ்ரா டூன் திரும்பி வந்தபோது, '**பாபாவின் அனுமதியின்றி தனது குடும்பத்திற்குத் தொலைத்தந்தி அனுப்பியது ஏன்**' என்று பாபா கேட்டார். "சிட்டகாங் (CHITTAGONG) மீது குண்டுகள் விழுகின்றன. அவை எப்போது இந்தியா மீது விழத் தொடங்கும் என்று யாருக்குத் தெரியும்? நான் பயந்துவிட்டேன், அதனால் நான் அவர்களுக்குத் தொலைத்தந்தி அனுப்பினேன்" என்று பப்பா விளக்கினார்.

"**ஆனால் நீங்கள் என்னிடம் கேட்டிருக்க வேண்டும்!**" பாபா கூறினார்.

"நீங்கள் அப்போது அங்கு இல்லை; ஆபத்து காலங்களில் தாமதப்படுத்துவது நல்லதல்ல. போர் காலங்கள் பீதியை உருவாக்கும் சிக்கலான காலங்கள். பாதுகாப்பிற்காக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார்.

**“நீங்கள் மிகவும் தைரியமானவர் என்று எல்லோரும் நினைக்கிறார்கள்; இப்போது, நீங்களும் அஞ்சுகிறீர்கள்!”**

“குண்டுகளின் மழை பொழியும்போது ஒருவர் எப்படித் தைரியமாக இருக்க முடியும்?” பப்பா பதிலளித்தார்.

டெஹ்ரா டூன் செல்லும் வழியில், அவர்கள் பயணித்த ரயிலின் சரக்குப் பெட்டி வேறு ரயிலுடன் இணைக்கப்பட்டதால் குடும்பத்தின் வீட்டுப் பொருட்கள் அனைத்தையும் இழக்க வேண்டியதாயிற்று. (எல்லாமே சில மாதங்களுக்குப் பிறகு மீட்கப்பட்டாலும்) அவர்கள் தங்கள் அத்தியாவசிய பொருட்கள் எதுவும் இல்லாமல் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்கள் பயன்படுத்த மிகக் குறைவான உடைகள் இருந்ததால், சிறுவன் மெஹர்வான் மணியின் ரவிக்கைகளை அணிய வேண்டியதாயிற்று. பப்பா ஜெஸவாலாவின் கூற்றுப்படி: “அவர்கள் உடைகளை இழந்தாலும், உயிர்கள் காப்பாற்றப்பட்டன!”

இதற்கிடையில் மெஹராபாத்தில் பலத்த சூறாவளி புயல் வீசியது, அங்குள்ள பல கட்டமைப்புகளின் தகரத்தாலான கூரைகள் தகர்க்கப்பட்டன. பெண்டு அது குறித்து பாபாவிற்கு எழுதிய போது, பாபா, பின்வரும் பதிலை, குஜராத்தி மொழியில், ஸவக் கொத்வால் வழியாக எழுதினார்:

ஏப்ரல் 20, 1942

4 சந்தர் சாலை
டெஹ்ரா டூன்.

அன்புள்ள சகோதரர் பெண்டு,

பாபா கூறியபடி, மெஹராபாத்தில் பல ஆண்டுகளாக, சூறாவளிகள் ஒரு நிலையான நிகழ்வாக இருந்து வருகின்றன, அவை தொடர்ந்து அப்படியே இருக்கும், ஏனெனில் மெஹராபாத் என்பது கர்பலா (KARBALA). மண்டலி அனைவரும் நசுக்கப்பட்டு, பறக்கும் தகர கூரைகளுக்கு அடியில் அழிந்தாலும், அவர்கள் இறைநிலையை அடைவார்கள். பின்பு பாபா, அனைவரையும் கவனிக்கும் கடமையிலிருந்து விடுபடுவார், நீங்களும் உங்கள் பிணைப்புகளிலிருந்து விடுபடுவீர்கள். ஆனால் அது அவரது அதிர்ஷ்டத்தில் இல்லை என்று பாபா கூறுகிறார்!

மெஹராபாத்தில் நீங்கள் அனைவரும் சவப்பெட்டிகளை ஏந்தி இறுதி கடன்களைச் செய்யும் பணியாளர்களைப் போல வாழ வேண்டும். டெஹ்ரா டூனில் என்னுடன் இருக்கும் மண்டலியைச் சேர்ந்த எவரும் உயிரைத் துறக்க நேர்ந்தால், அவரது உடல் மெஹராபாத்திற்குக் கொண்டுவரப்படும், அதை நீங்கள் இறுதி சடங்குகளுக்குப் பின்னர் அடக்கம் செய்ய வேண்டும். பெண் மண்டலி மற்றும் நாய்களை மேல்மலையிலும், ஆண் மண்டலியைக் கீழ் மெஹராபாத்திலும் அடக்கம் செய்ய வேண்டும். அவர்களின் கல்லறைகளை உருவாக்குவது உங்கள் வேலையாக இருக்கும். ஆகவே, நீங்கள் அனைவரும்

மும்பையின் 'பார்சி அமைதி கோபுரத்தின்' பணியாளர்களைப் போல் இருக்க வேண்டும், அவர்கள் பல இறந்த உடல்களைக் கையாண்டாலும், மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள்.

இன்னுமொரு விஷயம்: ஆதி சீனியர் விரும்பினால், ஃபிரீனி, டாலி ஆகியோரை மேல்மலையில் அமைந்த மருத்துவமனை கட்டிடத்தில் தங்க வைக்கலாம். பாபாவின் கூண்டு அறையைப் பயன்படுத்த அவர்களை அனுமதிக்க வேண்டாம். இந்தக் காரணத்திற்காக இன்று ஒரு தொலைத்தந்தி உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஷிரீன்மாய், பெரின் ஆகியோர் மெஹராபாத்திற்கு வந்தால், மலையடிவாரத்தில் அமைந்த பெண்கள் குவாட்டர்ஸில், தொலைத்தந்தியில் குறிப்பிட்டபடி ஏற்பாடு செய்யுங்கள் (ஆனால் அவர்கள் மெஹராவின் அறையில் தங்க வேண்டாம்).

ஆதி பெங்களூரில் தங்கியிருப்பதன் மூலம் சில விஷயங்களைத் தவறவிட்டார், இப்போது அவர் அதை உணர்ந்ததால், மீண்டும் அஹமதுநகருக்கு வருகிறார். கூரையின் ஒரு பாகம் உடைந்து விழுந்தது, ஆதி பெங்களூரிலிருந்து இப்போது வந்து அஹமதுநகரில் வாழ்வதை அடையாளப்படுத்துகிறது.

பாபா, உங்கள் விஷயத்தில் மிக்க மகிழ்ச்சியடைகிறார், 'எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்' என்று கூறுகிறார்: "முஹமதின் மகத்துவம் கர்பலாவில் உள்ளது, காபாவில் அல்ல!"

அங்கு வாழும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

பாபாவும் சில நேரங்களில் கவிதை வடிவில் கடிதங்கள் எழுதி பாதிரியிடமிருந்து அதைவிடச் சிறப்பான பதில் கடிதம் கோருவதுண்டு. பாதிரி பதில் எழுத சிறிது காலதாமதம் ஆனாலும், பாபா அதைக் குறித்துத் தொலைத்தந்தி அனுப்புவது வழக்கம். இவ்வாறு பாபா அவரிடமிருந்து தொலை தூரத்தில் இருந்தாலும் மெஹராபாத் மண்டலியுடன் நெருக்கமான தொடர்பில் இருந்தார்.

இந்த நேரத்தில், பாதிரி, தான் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகளைப் பட்டியலிட்டு கடிதம் எழுதினார். 1942, ஏப்ரல் 18 அன்று, பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பி வைத்தார்: "**விஷ்ணுவிற்கு அனுப்பிய உங்கள் கடிதத்தைப் படித்தேன். எப்பொழுதும் எனது தூண்களாகிய உங்களை (பாதிரி, விஷ்ணு, பெண்டு, ஆதி சீனியர்) உறுதியாக நம்புகிறேன், இப்போது உங்கள் தவத்தின் மீதான நம்பிக்கையை நான் இழக்கப் போவதில்லை. கவலைப்பட வேண்டாம்.**"

ரிஷிகேஷில் பாபாவிற்கு ஒரு பங்களாவை ஏற்பாடு செய்வதில் ஜால் கேரவாலாவிற்கு உதவ 22ஆம் நாள் எரச், பெனாரஸுக்குச் சென்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் இருவரும் திரும்பி வந்தனர். காக்கா, கொத்வால்

குழந்தைகளுடன் 25ஆம் தேதி காலை வருகை தந்தார்; ஜால் கேரவாலா அன்று மாலை நாக்பூர் மற்றும் ராய்ப்பூருக்குப் புறப்பட்டார்.

24ஆம் நாள், சாஞ்சி செய்த சில கவனக்குறைவான தவறுகளால் பாபா சீற்றமடைந்தார்; அவை தற்செயலாக நிகழ்ந்தவை என்று சாஞ்சி கூறிய போது, பாபா, "**நீங்கள் ஒருவரை வேடிக்கையாக வயிற்றில் குத்தியதன் விளைவாக அவர் உயிரை இழந்துவிட்டால், தற்செயலாக நிகழ்ந்தது கூடக் கடுமையான காயத்தை ஏற்படுத்தியதாகத்தான் கருதப்படும்!**"

அன்று மாலை, மிகவும் நல்ல மனநிலையில் இருந்த பாபா, சந்தர் சாலை வீட்டிற்கு வெளியே பெண்மணிகளுடன் அமர்ந்திருந்தபோது, காம்பவுண்டின் முன்புற சாலையில், விரக்தியுடன் நின்றுகொண்டிருந்த சாஞ்சியை அழைத்து சமாதானப்படுத்தினார், "**நான் எனது பணியை எனக்கே உகந்த வழியில் செய்கிறேன். நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை என்றால் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? என்னுடைய பணிக்காக, நான் விரும்பும் எவரையேனும் அதில் ஈடுபடுத்தி, அது அவருடைய தவறாக இல்லாமல் இருந்தாலும், புயலைப் போன்ற ஒரு சூழலை உருவாக்கலாம். அதற்காக அந்த நபர் ஏன் சோகமாகவும் கவலையாகவும் இருக்க வேண்டும்?**"

1942, ஏப்ரல் 25 அன்று, பாபா, ராவல்பிண்டி (RAWALPINDI), ஸியால்கோட் (SIALKOAT), லாஹூர், ஹரித்வார், ரிஷிகேஷ் போன்ற இடங்களுக்கு மற்றுமொரு மஸ்த் பயணமாகப் புறப்பட்டார். பாபா, லட்சுமண் ஜூலா (LAXMAN JHULA - பாலம்) அருகே ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு அவர் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார்; இது அவரது ஏழு இடங்களில் இரண்டாவதாக இருப்பதைக் குறிக்கிறது. மே 6ஆம் நாள் மாலை அவர் டெஹ்ரா டூன் திரும்பி வந்தார்.

டெஹ்ரா டூனிலிருந்து, காக்கா மே மாதம் 7ஆம் நாள் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்; மேலும், குழுவின் பயணத்திற்காகவும், ரிஷிகேஷில் பாபாவின் மஸ்த் பயணத்தின் கடைசி கட்ட ஏற்பாடுகளைச் செய்யவும், 9ஆம் தேதி எரச், பெனாரஸுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

டெஹ்ரா டூனில் ஒரு நாள், தெஹ்ரி கர்வால் (TEHRI GARHWAL) என்ற இடத்திலிருந்து பாடகர் ஒருவர் வந்து, பாபா மற்றும் பெண் மண்டலி முன்னிலையில் பாடினார். (மெஹரா நேரடியாகத் தோன்றவில்லை.) பாடகருக்குப் பற்கள் இல்லை, ஆனால் தெஹ்ரி கர்வாலின் மஹாராஜா, அவரை, மன்னர் அக்பரின் நீதிமன்றத்தில் புகழ்பெற்ற பாடகரான தான்ஸேனுடன் (TANSEN) ஒப்பிட்டார் என்று பெருமையாகக் கூறினார். "உங்கள் முகத்திரையை விலக்கி வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் கடவுளைக் காண்பீர்கள்!" என்ற வரியுடன் பாடல் ஒன்றை அவர் பாடினார்.

பாடும் போது அந்த மனிதனின் விசித்திரமான புகழ்ச்சி பாபாவைப் பூரிப்படையச் செய்தது. அவர் அங்கிருந்து சென்ற பின்னர், பாபா, பெண்மணிகள் ஒவ்வொருவரிடமும் அவர் பாடிய அதே தோரணையில் வேடிக்கையாகப் பாடுமாறு கூறியதும், அவர்களுடைய விசித்திரமான குரல் ஒலியும், பாவனையும் பாபாவை மேலும் மகிழ்ச்சியடையச் செய்தது. மணியால் மட்டுமே பாடகரோடு ஒத்த பாணியில் வெற்றிகரமாகப் பாட முடிந்தது, ஆனால் கேட்டியின் தவறான இந்தி மொழி உச்சரிப்பு பாபாவை மேலும் அடக்கமுடியாத சிரிப்பில் ஆழ்த்தியது.

டெஹ்ரா டூன் நகரில் பாபாவும் குழுவும் தங்கியிருந்த பங்களாவிற்கு அருகாமையில், மிகவும் ஏழ்மையான (கழிவறை) துப்புரவாளர் ஒருவர் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். கர்ப்பிணியாக இருந்த மனைவிக்கு ஒவ்வொரு நாள் காலையிலும் அந்த மனிதன் கபீரின் ஈரடி பாடலைப் பாடுவது வழக்கம். அவருக்குத் தெரியாமலேயே, அவர்களின் குடிலில் பாடிக்கொண்டிருந்த வேளையில், இறை-மனிதன் அவரது அறையில் ஒரு மத்தளத்தில் தனது தாளத்தை இசைத்தார். பாபா, பெண் மண்டலியிடம், "**அந்த மனிதனுக்கு ஒரு நல்ல மகன் பிறப்பான். நான் என்னை மகிழ்விப்பதற்காக இதை இசைக்கவில்லை; அவர் என்னிடமிருந்து ஒரு வரத்தைப் பெறுகிறார்**" என்றார்.

1942, மே 16 சனிக்கிழமையன்று டெஹ்ரா டூனிலிருந்து, குஸ்தாஜி, எரச், பைதூல் ஆகியோருடன் நேபாளம் (NEPAL) மற்றும் பூட்டான் (BHUTAN) எல்லைகளுக்கு அருகே மஸ்த் பணிக்காக பாபா புறப்பட்டார். இந்த நேரத்தில், பாபா மஸ்த் பயணங்களுக்குச் சென்ற போதெல்லாம், மஸ்துகளைத் தொடர்பு கொண்ட பிறகு, தேர்ந்தெடுத்த இடங்களைப் பார்வையிட்டு, சிறிது நேரம் அங்கே ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். இறுதியில் அவர் இமயமலையில் ஏழு இடங்களைத் தேர்வு செய்து தனது பணியை மேற்கொண்டார்.

ஒருமுறை மஸ்த் ஒருவரைத் தொடர்புகொள்வதற்காகப் பயணித்த பாதையில், பாபாவும் மண்டலியும் ஒரு திறந்தவெளி நாடகக் கொட்டகையைக் காண நேர்ந்தது.

பாபா, "**நாம் மஸ்த் பணியை முடித்த பிறகு, நமக்காக ஒரு பிரத்யேக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வாரா என்று சம்பந்தப்பட்ட நபரிடம் சென்று கேட்டு வாருங்கள்**" என்றார். அந்த நபரும் ஒப்புக் கொள்ள, ஒரு குறைந்த கட்டணத்திற்கு பாபாவும் மண்டலியும் முழு நிகழ்ச்சியிலும் அமர்ந்தனர்.

மே மாதத்தில் இந்தக் குறிப்பிட்ட மஸ்த் பயணம், கோடையின் உச்சத்தில் இருந்தது. கடுமையான வெப்பத்திலும், நெரிசலான, மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளில் பயணம் செய்தனர். பாபா தனது இருக்கையின் விளிம்பில் மணிக்கணக்கில் பாதி நேரம் அமர்ந்து, மீதி நேரம் நின்றுகொண்டே

பயணம் செய்யவேண்டியிருந்தது. மக்கள் தரையில் அமர்ந்து, வெளியே மற்றும் கழிவறைக்குச் செல்லும் பாதையைத் தடுத்தனர்; பலர் படிகளில் தொங்கிக் கொண்டிருந்தனர். உண்ண உணவும் மிக அரிதாகவே கிடைத்தது. மேலும் மஸ்துகளைத் தொடர்பு கொள்ள, அவர்கள் கடினமான சாலைகளில் பயணிக்க வேண்டியிருந்தது. பாபாவும் மண்டலியும் ஐந்து நாட்களுக்குப் பின்னர் 21ஆம் தேதி, டெஹ்ரா டூன் திரும்பி வந்த நேரத்தில், அனைவரும் முற்றிலும் களைத்துப்போயினர்.

மினூ கராஸ், மே 23 அன்று பாபாவுடன் ஒரு தனிப்பட்ட சந்திப்புக்காக வந்தார். '**அதிகாலை 2:00லிருந்து 5:00 மணிக்கு இடையே**, **ஒரு நாளைக்கு ஐந்து நிமிடங்கள் தியானிக்கவும்**, **கராச்சியின் ஏழைகளுக்கு உணவளித்து**, **நீராட்டி**, **உடை வழங்கவும்**' அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. அவர் அன்றே திரும்பிச் சென்றார்.

ருஸ்தம் மற்றும் ஃபிரீனியின் மகள்கள், மெஹரு, நாகு இருவரும் மே 13 அன்று நாசிக்கிலிருந்து வந்து, சில வாரங்கள் பெண்மணிகளுடன் தங்கியிருந்தனர். மெஹராவின் தாயார் தவ்லத்மாயும் தனது பேத்திகளுடன் வந்திருந்தார், ஆனால் அதே மாலை பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நாசிக் திரும்பிச் சென்றார்.

கெய்மாய் தனது மகள்கள் மெஹரு மற்றும் மனுவுடன் பாபாவிற்கும் பெண்களுக்கும் உணவு தயார் செய்யத் தொடங்கினார். உணவின் சுவையை மிகைப்படுத்த, சர்க்கரை சேர்க்கும் பழக்கம் அவருக்கு இருந்தது, மேலும் சிறிதளவு சர்க்கரையை, பாபாவின் உணவிலும் சேர்த்தார். ஒரு நாள் யாரோ ஒருவர் இதைக் குறித்து புகார் அளித்த போது, கெய்மாய், எரச் இருவரையும் பாபா அழைத்தார். அவர் கெய்மாயிடம், "**உண்மையைச் சொல்லுங்கள்**: **நீங்கள் என் உணவில் சர்க்கரை சேர்த்தீர்களா**?" எனக் கேட்டார்.

"ஆம், பாபா" என்று கெய்மாய் பதிலளித்தார்.

எரச்சின் பக்கம் திரும்பி, "**கடவுள் உங்களுக்கு எந்த மாதிரியான தாயைக் கொடுத்துள்ளார்**? **ஒருவரின் சரியான மனநிலையில் அரிசி மற்றும் பருப்பில் எவரேனும் சர்க்கரையைச் சேர்ப்பதுண்டா**?" என வினவியதும்...

எரச் தாயாரிடம், "அம்மா, பாபாவின் உணவில் ஏன் சர்க்கரை சேர்க்கிறீர்கள்? அது அவருடைய ஆரோக்கியத்தை பாதிக்கும்" என்று கூறினார்.

கெய்மாய் மன்னிப்பு கோரி, "நான் இதை மறுபடியும் ஒருபோதும் செய்ய மாட்டேன்" என்றார்.

"**என்னிடம் சத்தியம் செய்யுங்கள்**!" பாபா சைகையால் தெரிவித்தார்.

எனவே கெய்மாய் சத்தியம் செய்தார், பாபா மீண்டும் மீண்டும் சத்தியம் செய்ய வைத்ததும், இறுதியாக அவர் கண்கலங்கி மனம் உடைந்து போனார். பின்பு பாபா அவரிடம், "**இப்போது நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள்**. **நீங்கள் செய்கிறபடியே செய்யுங்கள்**, **அதே அளவு சர்க்கரையை**

**சேர்த்துக் கொள்ளுங்கள். யார் ஒருவருக்கும் செவிசாய்க்க வேண்டாம். நீங்கள் தயார் செய்யும் உணவை நான் மிகவும் விரும்புகிறேன்!"** என்று கூறி பாபா அவரை அன்புடன் தழுவினார்.

கெய்மாய் நம்பமுடியாமல் பாபாவை முறைத்துப் பார்த்தார். பாபா அரை மணி நேரம் அவரைக் கடுமையாக திட்டிக்கொண்டிருந்தார், இப்போது அவர் இப்படிச் சொல்கிறார்! இந்தக் காட்சியை இதர பெண்மணிகள் மௌனமாக பார்த்துக்கொண்டு நின்றனர். பாபா, அவருக்கு அறிவுறுத்தினார், **"இப்போது உங்கள் வாக்குறுதியைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? நான் சொல்வது போல செய்வதில்தான் உங்கள் சத்தியம் உள்ளது. முதல் சத்தியம் சர்க்கரை சேர்க்காதது, இரண்டாவது சத்தியம் சர்க்கரை சேர்ப்பது."**

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், பாபா ஒரு மந்திரவாதி தங்கள் வீட்டருகில் உலா வருவதை கவனித்து, வேடிக்கைக்காக, அவரது மந்திரத்தை நிரூபிக்க அவரை உள்ளே அழைத்தார். மந்திரவாதி அவருக்கு ஒரு சிறுவன் தேவை என்று சொன்னதும், மெஹர்வான் முன்சென்றான். மந்திரவாதி மிகவும் மெதுவாக அவன் காதுகளில் கிசுகிசுத்தார், "இப்போது நான் கைதட்டும்போது, பேசுவதை நிறுத்துங்கள், நான் மீண்டும் கைதட்டும்போது பேசுங்கள்!" பின்னர் அவர் அனைவருக்கும் அறிவித்தார்: "நான் இப்போது எனது மந்திரத்தை இந்த சிறுவன் மீது பயன்படுத்துவேன், இதனால் அவனது நாக்கு செயலிழந்துவிடும்."

ஏதோ மந்திரத்தை முணுமுணுத்து, மந்திரவாதி, மெஹர்வானின் மீது தனது மந்திரக்கோலை சுழற்றி, கைதட்டி, பார்வையாளர்களிடம், "இப்போது நீங்கள் அவரிடம் கேட்க விரும்பியதைக் கேட்கலாம், ஆனால் அந்த சிறுவனால் பதிலளிக்க முடியாது" எல்லோரும் மெஹர்வானை நோக்கிக் கேள்வி எழுப்பினர், ஆனால் அவன் அமைதியாக இருந்தான். பாபா அவனிடம் கேட்டதற்கும் பதிலளிக்கவில்லை.

மந்திரவாதி கைதட்டியதும், மெஹர்வான் பேசத் தொடங்கினான். நிகழ்ச்சி முடிந்து, அந்த மந்திரவாதி வெளியே சென்றதும், பாபா, மெஹர்வானிடம், **"ஏன் உங்களால் பேச முடியவில்லை?"** என வினவினார்.

மெஹர்வான், "மந்திரவாதி என்னிடம் பேச வேண்டாம் என்று கூறினார்!" என்றான்.

மெஹர்வானின் பதில் அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது, ஆனால் பாபா, "இல்லை, இல்லை, அவர் கண்கட்டு வித்தை மூலமாக நீங்கள் பேசுவதைத் தடுத்தார்!" என்றார்.

மெஹர்வான் விடாப்பிடியாக இருந்தான் "இல்லை, பாபா, உண்மையில், அவர் என்னிடம் பேச வேண்டாம் என்று சொன்னார்!"



அஜ்மீர் மலைகளில் மெஹர் பாபா

(MEHER BABA IN AJMER HILLS)

# ரிஷிகேஷ், காத்கோடம் & அஜ்மீர்

**(Rishikesh, Kathgodam & Ajmer)**

1942 மே 26 காலை 5:00 மணிக்கு பாபாவும் பெண்மணிகளும் ரிஷிகேஷுக்கு வாடகை பேருந்துகளில் புறப்பட்டுச் சென்று, அங்கு அவர்கள் ஒரு மாதம் தங்கியிருந்தனர். டெஹ்ரா டூனில் தங்கியிருந்த விஷ்ணு, குஸ்தாஜி இருவரைத் தவிர, இதர ஆண் மண்டலியும் உடன் சென்றனர்.

டெஹ்ரா டூனில், 'முன்னி' (MUNNI) என்றழைக்கப்பட்ட, துப்புரவு பணியாளர் ஒருவரின் மகள், அருகாமையில் வாழ்ந்து வந்தாள், மிகவும் ஏழ்மையானவள். பெண் மண்டலி தங்களின் பழைய ஆடைகளில் சிலவற்றை அவளுக்குக் கொடுக்க விரும்பினர், ஆனால் பாபா அதைத் தடைசெய்து, **"நான் அவளை மிகச்சிறந்த ஆடைகளால் அலங்கரிப்பேன்"** என்று குறிப்பிட்டார்.

அந்த நேரத்தில் பாபாவின் வார்த்தைகளின் முக்கியத்துவத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், அவர் ரிஷிகேஷுக்குப் புறப்படவிருந்தபோது, முன்னியைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் விருப்பத்தைத் தெரிவித்தார். அவரது தாயார் அதற்கு இணங்காததால், பாபா மண்டலியுடன் புறப்பட்டார்; விரைவில், முன்னி திடீரென நோய்வாய்ப்பட்டார். இதைக் கேள்விப்பட்டதும், பாபா, சிறுமிக்கு முறையான மருத்துவ சிகிச்சை வழங்கப்படுவதைக் கண்காணிக்குமாறு விஷ்ணுவிற்கு கடிதம் எழுதினார். விஷ்ணு அவளை ஒரு மருத்துவமனையில் சேர்த்த சில நாட்களில், முன்னி காலமானார். அப்போதுதான் பாபாவின் விருப்பப்படி ரிஷிகேஷுக்கு அனுப்பாததை எண்ணி தாயார் மனம் வருந்தினார்.

இருந்தும், காலம் குறிப்பிட்டபடி, அது நடக்க வேண்டியதாக விதிக்கப்பட்டது. "பாபா அதை விரும்பினார். அவளை மிகச்சிறந்த ஆடைகளால் அலங்காரம் செய்வதாகக் கூறியதை, அவர் செய்தார்! தாயின் இதயத்தில் எழுந்த கசப்பான உணர்வுடன், மெஹர் பாபாவின் அன்பின் நினைவும் எழுந்தது!"

கடவுளின் ஏழு நாமங்களை அனுதினமும் உச்சரிப்பது பிப்ரவரி 15ஆம் தேதி நிறுத்தப்பட்டது; ஆனால் ரிஷிகேஷில், பாபா மீண்டும் ஒவ்வொரு நாளும் அதைத் தொடருமாறு பெண்மணிகளுக்குக் கட்டளையிட்டார்.

மே 31, ஞாயிற்றுக்கிழமை, பாபா, ரிஷிகேஷில் கங்கா புவனில் (GANGA BHUWAN) ஒரு நிலத்தடி குகைக்குள் சென்று, காலை 7:30 முதல் 10:00 வரை ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். அவர் தனது பணியின் நிமித்தம், ஏகாந்தவாசம் மேற்கொள்ள மீண்டும் மறுநாள் திரும்பிச் சென்றார். பாபாவின் ஏகாந்தவாசம், முன்பு போலவே, போருடன் தொடர்புடையதாகத் தோன்றியது. ஐரோப்பாவில், ஜெர்மனி மீதான கடும் வான்வழி தாக்குதல் மே 30 அன்று தொழில்துறை நகரமான 'கொலோன்' (COLOGNE) மீது 1,000 வலுவான குண்டுவீச்சு

தாக்குதலுடன் தொடங்கியது. பசிஃபிக் (PACIFIC) பகுதியில், 'மிட்வே தீவின்' (MIDWAY ISLAND) தீர்க்கமான போர், ஜூன் 1942 முதல் வாரத்தில் நடந்தது. இது ஜப்பானுக்கு முதல் பெரிய கடற்படை தோல்வியாகும், மேலும் இது 'பசிஃபிக் முன்னணிக்கு' (PACIFIC FRONT) திருப்புமுனையாக அமைந்தது.

31ஆம் நாள், பல்வேறு பிரிவுகள் மற்றும் மதங்களின் வழிபாட்டு முறைகளைப் பற்றிப் பேசும்போது, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**பிணைப்புகளையும் சிக்கல்களையும் உருவாக்காத அளவிற்கு, செயலின்மை என்பது, செயலில் ஈடுபடுவதைக் காட்டிலும் விரும்பத்தக்கது. ஒவ்வொரு செயலும், எவ்வளவுதான் நல்லது அல்லது நேர்மையானதாக இருந்தாலும், பிணைப்புகளையும் அதன் விளைவாக மனப்படிவங்களையும் உருவாக்குகிறது; அதாவது கடந்தகால பிணைப்பை உருவாக்கும் செயல்களின் வினைகளால், ஏற்கனவே உருவான சிக்கல்களோடு மேலும் சிக்கல்கள் வந்திணைகின்றன. வாழ்க்கை என்பது இந்தச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கும், கடந்த கால கர்ம வினைகளின் பிணைப்பிலிருந்து மனதை விடுவிப்பதற்குமான ஒரு முயற்சியே தவிர வேறொன்றுமில்லை.**

'நல்லது, தீயது' இவற்றைப் பற்றி விளக்கும் போது, பாபா கூறினார்:

**நல்லது அல்லது தீயது என்று எதுவும் இல்லை. உலக நெறிமுறை கண்ணோட்டத்தில் பார்த்தால், இவை இரண்டும் உள்ளன, இதனால் உலக விவகாரங்களில் சமூகம் விதித்த வரம்புகளுக்கு ஏற்ப நடத்தப்படலாம். ஆனால் ஆன்மீக நிலைப்பாட்டில், இரண்டுமே பிணைப்புகள்.**

**நல்லது மற்றும் தீயதற்கான தரநிலைகள் இக்கால தராதரங்களின்படி நிறுவப்பட்டுள்ளன; அவை நேரம், சூழ்நிலை இரண்டிற்கும் தகுந்தாற்போல மாறுபடலாம். ஆன்மீகத்திலும், வெகுஜனங்களால் நல்லது என்று புரிந்து கொள்ளப்படுவது ஆன்மீகப் பார்வையில் தீயதாகவும், தீயது பெரும்பாலும் நல்லதாகவும் இருக்கும்.**

**எடுத்துக்காட்டாக, திருட்டு என்பது பொது நியதிப்படி மோசமானது. ஆனால் மிகவும் ஆதரவற்ற, கர்ப்பிணிப் பெண் ஒருவர் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவருக்கு உண்ண உணவு எதுவும் இல்லை, அவருடைய உடல்நிலை காரணமாக, மரணம் நிச்சயம் என்ற நிலையில், ஒரு மனிதன் அந்தப் பெண்மணியைப் பார்க்கிறான், அவர் மீது பரிதாபப்படுகிறான், ஆனால் அவனிடம் பணம் இல்லாததால் உதவ முடியாமல் இருக்கிறான்.**

**எனவே அவன் பணத்தைத் திருடி, அந்தக் கர்ப்பிணிக்கு உணவளிக்க அதைப் பயன்படுத்துகிறான். இப்போது, அந்தப் பெண்மணிக்கு உதவியது நல்லது, ஆனால் அந்தத் திருடும் நோக்கம் மோசமானது. ஆனாலும், மோசமான செயல் காரணமாக, அவனால் நல்லதைச் செய்ய முடிந்தது. மேலும், பொதுவான தராதரங்களின்படி, பிறரை அறைவது**

**மோசமானது, ஆனால் நீங்கள் ஒருவரை அவரது வாழ்க்கையைத் திருத்தும் நோக்கத்துடன் அறைந்து, தீய எண்ணம் இல்லாமல், கோபமின்றி அவ்வாறு செய்தால், இப்படி அறைவதும் அவருக்கு ஓர் ஆசீர்வாதம்!**

**மூன்று விஷயங்கள் மோசமானவை: காமம், கோபம், பேராசை. இவற்றில், கோபம் மிக மோசமானது.**

ரிஷிகேஷில் குழாய் நீர் வசதி எதுவும் இல்லாததால், அங்கு வாழ்ந்த பல சாதுக்கள் இயற்கையின் அழைப்புகளுக்கு பதிலளிக்க, காட்டுப்புறத்தை நோக்கிச் சென்றனர். ஆனால் கடுமையான தனிமை வாழ்க்கை வாழ்ந்த பெண் மண்டலி, இதற்காக இதுபோன்ற தனிமைப்படுத்தப்பட்ட இடங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை. பாபாவின் அறிவுறுத்தல்படி கிருஷ்ணா அவர்கள் தங்கியிருந்த வளாகத்தின் பின்புறம் ஒரு குழி தோண்டியதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. ரானோ, மார்கரெட், ஐரீன், கிட்டி ஆகியோர், ஒரு தகர கொள்கலனில் சேகரித்த தங்களது தினசரி கழிவுகளை, கிருஷ்ணா குழிக்குள் கொட்டி பின்பு மண்ணை நிரப்பி மூடிவிடுவதை ஒரு செயல்முறையாகச் கொண்டார். கிழக்கத்திய பெண்மணிகளைப் பொறுத்தவரை, மன்ஸாரியின் உதவியுடன் கிருஷ்ணா அதைச் செய்து வந்தார்.

இதைக் கண்டுபிடித்த உள்ளூர் சாதுக்கள் சிலர் கலக்கமடைந்து, “இந்தப் புனித இடம் அசுத்தமாக்கப் படுகிறது!” என முறையிட்டனர்.

எனவே பாபா அவர்களுக்கு, கிருஷ்ணா மூலமாக இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்:

**திறந்தவெளியைக் கழிவிடமாகப் பயன்படுத்துவதால், ஈக்கள் ஒன்று சேர்ந்து, ஒருவித நோய் உருவாகும் வாய்ப்பு உள்ளது. அதே வேளையில் கழிவுகளைக் குழியில் எறிந்து மண்ணால் மூடுவதன் மூலம், ஈக்கள் ஈர்க்கப்படுவதில்லை. இது தூய்மையின் அடையாளம், அசுத்தம் அல்ல.**

உள்ளூர் சாதுக்கள் பலர் வந்து மெஹர் பாபாவின் தரிசனத்தைக் கோரினர், ஆனால் பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டதால் எவரையும் சந்திக்கவில்லை.

பெண்மணிகள் கங்கை நதியில் தங்கள் துணிகளைத் துவைத்து, மணல் மீது உலர வைத்தனர். துணிகள் உலரும் வரை பாபா அவர்களுடன் அமர்ந்து உரையாடுவது வழக்கம். ஒருமுறை, பாபா கரையில் அமர்ந்திருந்தபோது, இரண்டு சாதுக்கள் அவரை அணுகி, “மன்னிக்கவும், மெஹர் பாபா எங்கு வசிக்கிறார் என்று சொல்ல முடியுமா?” என வினவினர்.

பாபா பங்களாவைச் சுட்டிக்காட்டிய வேளையில், மணி அவர்களுக்கு “அந்தப் பங்களாவில்” என்று தெரிவித்தார்.

அவர்கள் அங்கிருந்து சென்றதும், மெஹரா, “நீங்கள் அவர்களை சந்தித்திருக்க வேண்டும், பாபா” என்றார்.

பாபா, "**சரி, உங்களை மகிழ்விக்க, நான் அவர்களை சந்திப்பேன்**" என்றார். சாதுக்கள் சிறிது நேரத்தில் திரும்பிச் செல்லும்போது, அவர்களை, பாபாவிற்கு அறிமுகப்படுத்தி, அவரது பாதங்களில் அடிபணிய அனுமதித்தார்.

பெண் மண்டலியுடன் நிதானமாக அமர்ந்திருந்த வேளையில், பாபா, ரிஷிகேஷில் சாதுக்கள் பல்வேறு வகையான ஆன்மீகப் பயிற்சிகளில் மூழ்கியிருப்பதைக் குறிப்பிட்டு, "**அவர்களைப் பாருங்கள்! சிலர் கடவுளின் பெயரை இரவும் பகலும் தூங்காமல் தியானித்து வருகிறார்கள்! எல்லா விதமான கடுமையான தவங்களையும் செய்கிறார்கள். இருந்தும் நான் அவர்களைப் பார்ப்பதில்லை.**

"**இங்கே நான், உங்களோடு அமர்ந்து, பார்த்து, பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்!**"

ரிஷிகேஷில் ஒரு நாள், பாபா மண்டலியின் பங்களாவில் சாஞ்சிக்கு அறிவுறுத்தல்களை வழங்கிக் கொண்டிருந்த வேளையில், ஒரு சன்னியாசி, பாபாவின் தரிசனத்தை விரும்பி வாசலுக்கு வந்தார். சாஞ்சி அவரிடம், மெஹர் பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்வதால், இமயமலையில் அவரது பயணங்கள் முடியும் வரை எவரையும் அவர் சந்திப்பதாக இல்லை என்று கூறினார்.

சன்னியாசி கோபத்தில், "அவர் ஏன் தரிசனம் வழங்க மறுக்கிறார்? நான் என்னத் தகுதியற்றவனா? இந்தியாவில் புனித யாத்திரை செய்து நூற்றுக்கணக்கான இடங்களை நான் பார்த்துவிட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? எனக்கு இங்கே தரிசனம் கிடைக்காவிட்டால் நான் ஏன் கவலைப்பட வேண்டும்!" என்று கத்தினார்

சாஞ்சி நிலைமையை விளக்கி அவரை சமாதானப்படுத்த முயன்றும், சன்னியாசி வாதாடும் மனநிலையில் இருந்தார். அவர் தனது பக்தியை நிரூபிப்பது போல, சாஸ்திரங்களிலிருந்து ஸ்லோகங்களை மேற்கோள் காட்டத் தொடங்கினார். இறுதியில் அவர் இந்த ஈரடி கவிதையை எடுத்துக் கூறியபடி வெளியே சென்றார்:

பிரியமான பக்தரே, நீ என்னை எங்கே தேடுகிறாய்!

எப்பொழுதும் நான் உன்னருகில் உன்னோடு இருக்கிறேன்!

இந்த வரிகளை உரத்த குரலில் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டே, வியத்தகு முறையில் தனது கைகளை உயர்த்தி, வானத்தை அண்ணாந்து பார்த்தது, அவரைப் போன்ற உண்மையான பக்தரை, ஏழை சாஞ்சி அடையாளம் காணும் அளவிற்கு, புத்தியைக் கொடுக்குமாறு கடவுளிடம் கெஞ்சுவது போல் இருந்தது.

ஆனால் முழு நிகழ்வின் வேடிக்கையான பாகம் என்னவெனில், அந்த மனிதன் தனது சொந்த நடிப்பில் உள்வாங்கப்படாமலும், வானத்தை ஏறிட்டுப் பார்க்காமலும் இருந்திருந்தால், ஒரு பக்கமாக நின்றுகொண்டிருந்த பாபாவை அவர் பார்த்திருந்திருக்கக் கூடும்! இரண்டு முறை, பாபாவை அடையாளம் காணாமல் கடந்து சென்றார்.

அந்த மனிதன் அங்கிருந்து சென்ற பின்னர், பாபா, சாஞ்சியிடம் விளக்கினார், **“அவருடைய நேரம் இன்னும் வரவில்லை. அவரைப் போன்றவர்கள், ஏனோதானோவென, இடம் விட்டு இடம் அலைந்து திரிந்து கடவுளைத் தேடி, சாஸ்திரங்களிலிருந்து வசனங்களையும் வார்த்தைகளையும் முணுமுணுத்து, கவிஞர்களின் ஈரடிக் கவிதைகளை உரத்த குரலில் பாடுவது அனைத்தும் நாவிலிருந்து மேலோட்டமாக வருவதே தவிர, இதயத்திலிருந்து அல்ல. அதனால், அவர் அடையும் பயன் மிகக் குறைவாகவே இருக்கும் - ஆன்மீக ரீதியில் எதுவும் இல்லை என்றுதான் கூறவேண்டும்.**

**“வெறும் ஆசை மட்டும் இருந்தால் போதாது; காலப்போக்கில் ஒரு உண்மையான துறவி அல்லது குருநாதருடன் தொடர்பில் வரும் அளவிற்கு உள்ளளவிலான தீவிர ஏக்கம் இன்றியமையாதது.**”

ஜூன் மாதத்தில், மெஹர் பாபாவின் செய்திகளை வெவ்வேறு முக்கிய நபர்களுக்கு வழங்கும் நோக்கத்தில், சாஞ்சி, மதராஸ், பெங்களூர், ஹைதராபாத் மற்றும் பிற இடங்களுக்கு அனுப்பப்பட்டார். அவர் டெஹ்ரா டூன் திரும்பி வந்த பின்பு, காந்தி மற்றும் பிற அரசியல் தலைவர்களைத் தொடர்பு கொள்ள ஜூலை 3 அன்று ஒரு வாரத்திற்காக டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மெஹரு, நாகு இருவரும், அவர்களின் கோடை விடுமுறை முடிந்ததும், ஹில்லா, நாஜூ கொத்வால் ஆகியோருடன் ஜூன் 9 அன்று ரிஷிகேஷிலிருந்து புறப்பட்டுச் சென்றனர். அந்த நேரத்தில் பாபா ஹரித்வாரில் இருந்ததால், சிறுமிகள் அவரிடமிருந்து விடைபெற வாய்ப்பில்லாமலாயிற்று. இதை நினைத்து வருத்தமாக இருந்த சிறுமிகள், ஹரித்வார் ரயில் நிலையத்தில் பைதூல், அவர்களுக்காகக் காத்திருந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர், அங்கு ஒரு மணி நேரம் ரயில் நிறுத்தப்பட்டது.

அருகாமையிலிருந்த பாபாவிடம் பைதூல் அவர்களின் அன்பைத் தெரிவித்த வேளையில், ரயில் புறப்படுவதற்கு முன்பு பாபா, சிறுமிகளை அவரிடம் அழைத்து, அன்புடன் அரவணைத்து விடையளித்தார்.

1942, ஜூன் 23 அன்று, பாபா மீண்டும் ஹரித்வாருக்குச் சென்ற இவ்வேளையில், இம்முறை, பெண்மணிகள் மற்றும் ஒரு சில ஆண் மண்டலியையும் அழைத்துச் சென்று, அங்கு நடந்த ஒரு பெரிய திருவிழாவைப் பார்வையிட்டனர். நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களும் சாதுக்களும் கூடியிருந்தனர். கங்கை நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் பாபாவும் குழுவும் லட்சுமண் ஜூலா பாலத்தின் குறுக்கே நடந்து ஹரித்வாருக்குச் செல்ல வேண்டியிருந்தது. கங்கைக் கரையில் அமைந்த ஒரு பங்களாவின் பால்கனியிலிருந்து பெண்கள் திருவிழாவைக் காண, சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அன்றிரவு அனைவரும் ரிஷிகேஷுக்குத் திரும்பி வந்தனர்.

24ஆம் தேதி பாபா, மூன்று நாட்கள் மஸ்த் பயணமாக பானிப்பட் (PANIPAT) சென்றார். பாபா தொடர்பு கொண்ட அனைவரும் நிர்வாணமாக இருந்தனர். அவற்றில் இரண்டு தொடர்புகள் குறிப்பிடத்தக்கவை. 'அல்லா தியா' (ALLAH DIA) என்றழைக்கப்பட்ட கண்பார்வையற்ற, மெலிந்த தோற்றத்தில் இருந்த அவர், குதுப் புவாலி ஷா கலந்தரின் (QUTUB BUALI SHAH QALANDER) சன்னதி நுழைவாயிலுக்கு அருகில் அமர்ந்திருந்தார். காட்டுவாசி தோற்றமுடைய மற்றுமொரு மஸ்த், ஏறக்குறைய ஒன்பது வயது சிறுவனை, பாபா தொடர்பு கொண்டு இறைபோதையில் இருக்கும் ஆத்மா என உறுதி செய்தார். அந்த சிறுவன் பானிப்பட் நகரை சுற்றி அலைந்து திரிந்தான், எப்பொழுதும் நிர்வாணமாக ஆனால் மண்ணால் உடலை மூடி மறைத்து, கொடுக்கப்பட்ட எதையும், மண்ணையும் கூட உண்டு வந்தான்.

ஒரு முறை, மெஹர் பாபா, மஸ்த் பயணத்தை நிறைவு செய்து ரிஷிகேஷுக்குத் திரும்பும் போது, எரச் அவரை சந்திக்கச் சென்றார். வழியில், எரச், முனிவர்களின் உறைவிடம் என்றழைக்கப்படும் வனப்பகுதி வழியாகச் சென்றார்; அங்கு யோகிகளும் ரிஷிகளும் சிறிய வெள்ளை குடிசைகளில் கடவுளை தியானித்து வந்தனர். பாழடைந்த ஒரு குடிசையில், அழகான வாலிப சிறுவன் ஒருவன் படுக்கையில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருப்பதை எரச் கவனித்தார்.

ஒரு 'சிறந்த சிறுவனைக்' கண்டுபிடிப்பதற்கான மெஹர் பாபாவின் தொடர்ச்சியான விருப்பத்தை நினைவில் கொண்ட எரச், அந்த இளைஞனைப் பற்றி, பாபாவிடம் விவரித்து, குறைந்தபட்சம் பாபா, குடிசைக்குச் சென்று இந்த அசாதாரண சிறுவனைப் பார்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, தங்கள் பங்களாவிற்குத் திரும்பி வரும் வழியில் லட்சுமண் ஜூலா பாலத்தைக் கடந்து சிறுவனின் குடிசைக்குச் சென்றார்.

பாபா, எரச்சிடம் சைகையால் தெரிவித்தார், "**முதலில், அவர் இங்கே என்ன செய்கிறார் என்று அவரிடம் கேளுங்கள்**." எரச் சிறுவனுடன் தனியாகப் பேசியபோது, அவன், "எனது பெற்றோர் அம்பாலாவில் இருக்கிறார்கள், எனக்கு வயது 14, ஆனால் நான் எப்பொழுதும் கடவுளின் தரிசனத்திற்காக மிகுந்த ஏக்கத்துடன் இருந்தேன். எனவே நான் அனைத்தையும் விட்டுவிட்டு அவரைத் தேடி இமயமலைக்கு வந்து தியானத்தில் அமர்ந்து, வேண்டியதைக் கற்றுக்கொள்ள இங்கு வந்தேன்." என்றான் அந்த சிறுவன்.

"உங்களுக்கு ஒரு குருநாதர் இருக்கிறாரா?" என்று கேட்டார் எரச்.

"இல்லை, எனக்கு குருநாதர் இல்லை; அவர்கள் அதிகப்பிரசங்கிகள். வாய் பேசாத ஒரு குருநாதர் எனக்கு வேண்டும்!"

"கடந்த பதினேழு ஆண்டுகளாக வாய் பேசாத ஒரு குருநாதரை நான் அறிவேன். அவர் பெயர் மெஹர் பாபா" என்று எரச் கூறினார்.

சிறுவன் உடனே பதிலளித்தான், "நான் ஸ்ரீ மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டேன்; அவர் அருகாமையில் எங்கோ தங்கியிருக்கிறார், இல்லையா? ஆனால்..." சில கணங்கள் மௌனமாக இருந்து கூறினான்,

“ஆனால், மெஹர் பாபா, என்னை அவருடைய சீடராக ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு உயர்ந்தவர்.”

சிறுவனின் வார்த்தைகள் எரச்சின் இதயத்தைத் தொட்டன; பின்னர் அவனை, பாபாவிடம் அழைத்துச் சென்றார். பாபாவைப் பார்த்ததும், சிறுவன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். பாபா அவனிடம் எடுத்துரைத்தார்: **“நான் உங்கள் குருவாக இருப்பேன். அதேவேளையில், இது நாம் சந்திக்கும் முதல் மற்றும் கடைசி முறையாகும். நீங்கள் என்னை இதற்குப் பின்னர், ஒருபோதும் உடல் ரீதியாகப் பார்க்க மாட்டீர்கள். இருப்பினும், நான் உங்களை எனது சீடராக ஏற்றுக்கொள்வதை நீங்கள் விரும்பினால், என்னுடைய நான்கு கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். நீங்கள் அந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொண்டால், ஒரு நாள் நீங்கள் என்னை உங்கள் இதயத்தில் காண்பீர்கள்.**”

இந்த நான்கு கட்டளைகளை, பாபா அந்த சிறுவனுக்கு வழங்கினார்:

1. **நீங்கள் காமத்திலிருந்து விடுபட வேண்டும், உயிரைத் துறக்கும் நாள் வரை, நீங்கள் ஒருபோதும் ஒரு பெண்ணைத் தொடக்கூடாது.**
2. **அதற்கு பதிலாக, நீங்கள் தெய்வீக அன்பிற்குரியவரை உணர, அவரை மட்டுமே தொடர்ந்து சிந்திக்க வேண்டும்.**
3. **நீங்கள் ஒருபோதும் பணத்தை தொடக்கூடாது, உங்கள் உணவுக்காக யாசிக்க வேண்டும்.**
4. **என்னிடமிருந்து ஒரு மந்திரமாக, இரவும் பகலும் கடவுளின் பெயரை - நீங்கள் விரும்பும் எந்தப் பெயரையும் மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்.**

சிறிதும் தயக்கமின்றி, சிறுவன் நான்கு கட்டளைகளையும் ஏற்றுக்கொண்டதால் மனம் விரும்பிய குருநாதரை அடையப்பெற்றான்.

பாபா திரும்பிச்சென்று, மறுநாள், அவரது சித்திரம் பதித்த ஒரு லாக்கெட், பாபாவின் வாழ்க்கை சரித்திர புத்தகம், அமர ஒரு பாய், மற்றும் சப்பாத்திக்கான சிறிதளவு மாவு ஆகியவற்றை அவரது பிரசாதமாக எரச் மூலம் அந்த சிறுவனுக்கு அனுப்பி வைத்தார். சிறுவன் பாபாவின் அன்பு பரிசுகளை மிக்க நன்றி உணர்வோடு பெற்றுக்கொண்டான். சிறிதுகூட அச்சத்தை வெளிப்படுத்தாமல், அவன் தொடர்ந்து ரிஷிகேஷின் அடர்ந்த காடுகளில் வாழ்ந்தான்; அவை, கொடிய கருப்பு தேள்கள், ஏராளமான பாம்புகள் மற்றும் அவ்வப்போது புலிகளுக்கும் பெயர் போனவை. இப்போது சிறுவன் தனது உண்மையான குருநாதரைக் கண்டுகொண்டதால், அச்சம் என்ற பேச்சிற்கு இடமேயில்லை!

பாபாவும் குழுவும் 1942, ஜூன் 30 செவ்வாய்க்கிழமை ரிஷிகேஷிலிருந்து திரும்பிச் சென்றனர். கடந்த இரண்டு, மூன்று நாட்களாக, ரிஷிகேஷில் கன மழை பெய்து கொண்டிருந்ததால், கங்கை நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

அவர்கள் புறப்பட்ட அந்த நாளில் மழை பெய்து கொண்டிருந்தது; சில சாதுக்கள், "மெஹர் பாபா இப்போது எப்படி நதியைக் கடந்து செல்கிறார் என்று பார்ப்போம்!" எனப் பேசிக்கொண்டனர். ஆனால் சிறிது நேரத்தில், சூரியன் பிரகாசிக்கத் தொடங்கியது, பாபாவும் குழுவும் லட்சுமண் ஜூலா பாலத்தின் குறுக்கே நடந்து டெஹ்ரா டூன் திரும்பினர். பாபாவை அறிந்து அவரை வெகுவாக மதிக்கும் ஒரு படகு வீரரும் அவர்களுக்கு உதவினார். பாபாவிற்கு உதவும் வகையில் அவர் நதியைக் கடக்க வேண்டாம் என்று பல சாதுக்கள் வற்புறுத்திய போதிலும், அந்தப் படகோட்டி குழுவிற்கு உதவ தயாராக இருந்தார். இந்துக்களின் இந்தப் புனிதமான இடத்தில் அந்நியன் என்ற எளிய காரணத்திற்காக, மெஹர் பாபாவிற்கு எதிராக உள்ளூர் மக்களைத் தவறாக வழிநடத்தி, தூண்டிவிட்டனர்.

காலம் இதை முரணாகப் பார்த்தது, "பொய்யும் போலியுமான சாதுக்கள், மெஹர் பாபா, அவர்கள் வணங்கி, வழிபட்டு, காண ஏங்கும் அதே ஏக இறைவன் என்பதைக் கனவிலும் கண்டதில்லை! கண்மூடித்தனமாக இருக்கும் அவர்கள், அவர் யார் என்பதை எப்படி அடையாளம் கண்டுகொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியும்? அவர்கள் நிர்வாண நிலையில் இருந்தபோதிலும், ஆசைகளைத் துறக்கவில்லை; அவர்களின் உடல்கள் சாம்பலால் மூடப்பட்டிருந்தும், அவர்கள் இன்னும் சாம்பலாக எரிக்கப்படவில்லை. பெரும்பாலும் அவர்கள் வெளியளவில் வறுமையிலும் அசுத்தத்திலும் வாழ்ந்தாலும், குருநாதரின் பாதங்களில் தவழும் தூசியாக இன்னும் மாறவில்லை!"

அதே நாளில் ரயில் மற்றும் பேருந்து வழியாக டெஹ்ரா டூன் சென்றடைந்த பாபாவும் பெண்மணிகளும், முன்பு தங்கியிருந்த அதே 'சந்தர் சாலை' பங்களாவில் தங்கினர். ஆண் மண்டலி ரிஷிகேஷிலிருந்து டெஹ்ரா டூன் வரை வாடகை பேருந்தில், அனைத்து மூட்டை முடிச்சுகளுடன் பயணம் செய்தனர். 28 மைல்கள் தூரமே என்றாலும், வெள்ளப்பெருக்கு மற்றும் பேருந்தின் மோசமான நிலை காரணமாக அவர்கள் வந்துசேர கிட்டத்தட்ட பன்னிரண்டு மணி நேரம் பிடித்தது.

போர்க்காலத்தில் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு இருந்ததால், ஒரு வருட தேவைக்கான தானியங்களைச் சேமித்து வைக்குமாறு பாபா, விஷ்ணுவிற்கு அறிவுறுத்தினார். பாபாவின் அறைக்குப் பக்கத்து அறையில் விஷ்ணு போதுமான அளவு சேகரித்து வைத்திருந்தார். சில நாட்களுக்குப் பிறகு, பாபா, விஷ்ணுவிடம் புகார் செய்தார், "**அடுத்த அறையில் உங்கள் தானியங்களின் மூட்டைகள் இருப்பதால், நூற்றுக்கணக்கான எலிகள் இங்கே வந்து எனது பணியில் என்னை தொந்தரவு செய்கின்றன. நீங்கள் அனைத்தையும் விற்று விடுங்கள்.**"

விஷ்ணு உடனே, "உங்களுக்குத் தொந்தரவாக இருந்தால், கோதுமை, தினை போன்ற தானியங்களை மண்டலியின் அறை பக்கம் சேமிக்க முடியும்.

நீங்கள் விரும்பியதால்தான், அது இந்த அறையில் வைக்கப்பட்டது; ஆனால் அந்த அறை அதற்கு ஏற்றதல்ல என்று நான் அப்போதே சுட்டிக்காட்டினேன்" என்றார்.

"**நீங்கள் கூறுவதன் அர்த்தம் என்ன?**" என்று பாபா கேட்டார், "**அதை இங்கே சேமித்து வைத்தது அனைத்தும் சரிதான்; இப்போது நான் அதை விற்க விரும்புகிறேன்!**"

பாபா, தனது சொந்த காரணங்களுக்காக, தானியங்களை அப்புறப்படுத்துவதில் ஆர்வமாக இருந்தார். இதற்காக நிறைய பணம் செலவானது, ஆனால் இப்போது அது குறைந்த விலைக்கு விற்கப்பட்டது.

மேலும் அதை வாங்குபவர்களுக்கு அனுப்பிவைக்க ஒரு காளை வண்டியும், கூலியையும் நியமிக்க வேண்டியதாயிற்று.

வரவு செலவு கணக்குகளுக்குப் பொறுப்பாக இருந்த விஷ்ணு இயல்பாகவே இதைக் கண்டுக் குழப்பமடைந்து, "பாபா, தானியங்களை விற்பதில் நாம் பெரும் இழப்பை சந்தித்தோம்" என்று கூறியதும்...

பாபா, "**இந்த இழப்பால் நமக்குக் கிடைக்கப்பெற்ற லாபம் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நான் சொல்வதை தொடர்ந்து செய்வதே உங்கள் பணி!**" என்றார்.

இமயமலைக்கு அருகில் பொருத்தமான ஒரு தங்குமிடத்தைக் கண்டுபிடிப்பதற்காக, பாபா, காக்கா, பைதூல் இருவரையும் டெஹ்ரா டூனிலிருந்து அனுப்பி வைத்தார். காத்கோடம் (KATHGODAM) என்ற இடத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்ததைப் பற்றிய தகவல் அறிந்ததும், பாபா 1942 ஜூலை 10ஆம் நாள், டெஹ்ரா டூனிலிருந்து புறப்பட்டுச் சென்றார் - அன்றைய தினம் மெஹர் பாபாவின் மௌனத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு நாள். பாபாவுடன் எரச், குஸ்தாஜி இருவரும் இருந்தனர். ஆதி சீனியர் (அஹமதுநகரிலிருந்து அழைக்கப்பட்டவர்) அவர்களுடன் பரேலியில் வந்திணைந்தார். பாபா, எரச்சை மீண்டும் டெஹ்ரா டூனுக்கு அனுப்பிவிட்டு, குஸ்தாஜி, ஆதி சீனியர் ஆகியோருடன் காத்கோடம் பயணம் செய்து, 11ஆம் தேதி நண்பகல் வந்து சேர்ந்தார்.

காக்கா, பைதூல் இருவரும் தேர்ந்தெடுத்த சிறிய குடிலை பாபா பெரிதும் விரும்பினார், ஏனெனில் இது இரண்டு உயரமான மலைகளுக்கு இடையில் அமைந்திருந்தது; இது எந்த ஊடுருவலிலிருந்தும் விலகி தனிமைப்படுத்தப்பட்டது. பின்பு பாபா ஒவ்வொருவருக்கும் தத்தமது கடமைகளை வழங்கினார். தனது தனிப்பட்ட வேலைகள் (சலவை செய்தல், தட்டு, டம்ளர்களை சுத்தம் செய்தல், நீராட உதவுவது) மற்றும் கடிதப் பரிமாற்றம், அறையை சுத்தம் செய்தல் ஆகியவற்றை கவனிப்பதற்காக ஆதியை நியமித்தார். பைதூல் பஜாருக்குச் சென்று வேண்டிய பொருட்களை வாங்கி வருவதும், காக்கா சமையலுக்குப் பொறுப்பாகவும், மற்றும் குஸ்தாஜி அனைவருக்கும் உதவியாகவும் தத்தமது கடமைகளைச் செய்து வந்தனர்.

மேலும், ஒவ்வொருவரும் இரவில் இரண்டு மணி நேரம் பாபாவின் அருகில் கண்காணிப்பாளராகப் பணிபுரிய வேண்டியிருந்தது.

பாபா மஸ்த் பயணத்தில் இருந்த போதெல்லாம், ஆண், பெண் மண்டலியின் உடல்நிலை குறித்த விவரங்களை ஒவ்வொரு நாளும் தொலைத்தந்தி மற்றும் கடிதம் மூலம் தெரிவிக்குமாறு விஷ்ணுவிற்கு அறிவுறுத்தப்பட்டது. பயணங்களின் போது, ரயில் நிலைய அதிகாரியின் அலுவலக முகவரியின் கீழ் தந்திகள் அனுப்பப்பட்டன. இந்த நடைமுறையைப் பற்றி பாபா மிகவும் குறிப்பாக இருந்தார். ஒவ்வொரு நாளும் மண்டலியில் ஒருவர் ரயில் நிலையத்திற்குச் சென்று, தொலைத்தந்தி மற்றும் கடிதங்களை சேகரித்து வருவது வழக்கம். தொலைத்தந்தி, கடிதம் எதுவும் வராத வேளையில், பாபா, விஷ்ணுவிடம் கோபமடைந்து, ஏன் செய்திகள் வரவில்லை என்று கேட்டு, தகவல் அனுப்புவதையும் வழக்கமாகக் கொண்டார்.

1942, ஜூலை 12ஆம் நாள், 'உதர்மன் மஸ்தான்' (UDERMAN MASTAN) என்றழைக்கப்பட்ட உயர் நிலை மஸ்த் பாபாவின் குடிலுக்கு அழைத்து வரப்பட்டார். வயதான அவர், ஒரு ஜமாலி மஸ்த், மிகவும் நேசமானவர், பாபாவின் ஆன்மீக உள் பணிக்கு மிகவும் பொருத்தமானவர் என்று பாபா கூறினார். அன்றிலிருந்து, பாபா கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் அவரது குடிலில் உதர்மன் மஸ்தானுடன் பணிபுரிந்தார்.

14ஆம் தேதி, பாபா, காத்கோடத்திலிருந்து பேருந்தில் 22 மைல் தொலைவில் அமைந்த போவாலிக்குப் (BHOWALI) புறப்பட்டு, அங்கிருந்து அவர் மஹர்காவ்ம் (MAHARGAON) மற்றும் ஹோஸாலி (HOSALI) மலைகளுக்குக் கால்நடையாகச் சென்றார். மஸ்துகளைத் தேடி, பின்பு, மஹர்காவ்மிற்குத் திரும்பி வந்து, நைனி பாபா (NAINNI BABA) என்ற சூட்சும உணர்வு நிலையிலிருந்த இளம் சிறுவனைத் (மஸ்தை) தொடர்பு கொண்டார். அங்கு பாபா, 'ஆன்மீக முன்னோக்குப் பார்வை' கொண்ட ஒரு மனிதரை எதிர்கொண்டு அவரை ஆசீர்வதித்தார்.

தொடர்ந்து பாபா நல் தமயந்தி (NAL DAMYANTI) பள்ளத்தாக்கில் இறங்கி, மௌனி பாபா (MAUNI BABA) என்றழைக்கப்பட்ட யோகியை சந்தித்தார்; அவர் பல ஆண்டுகளாக மௌனமாக இருந்து, ஒரு சில சீடர்களுடன் சிறிய ஆசிரமம் ஒன்றில் வாழ்ந்து வந்தார். அதைத் தொடர்ந்து பாபா, மண்டலியுடன் மீண்டும் போவாலியை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார். அவர்கள் ஏறிய மலைப்பாங்கான தடங்கள், குறுகி, கரடுமுரடாகக் காணப்பட்டன. மிகவும் வெப்பமாக இருந்ததால், பாபா ஆங்காங்கே நின்று தனது விரலால் தரையைத் தொட்டார். வியர்வை துளிகள் அவரது நெற்றியிலிருந்து வழிந்தன. இந்த இமயமலை பகுதிகளில் அலைந்து கொண்டிருந்தபோது, பாபா 'சில கடினமான பணிகளை நிறைவுசெய்து, ஆன்மீக ரீதியில் பெரும் சுமையைத் தாங்கிக்கொண்டு இருப்பதாக' மண்டலி விவரித்தனர். இடைவிடாத பணியில் வியர்வை துளிகள் வழிந்து கொண்டிருந்தாலும், பாபா, தனிச் சிறப்பான

மனநிலையில் இருப்பதாகத் தோன்றியது. அவர் பணியைத் தொடங்குவதற்கு முன்னர் அதிகாலையில் ஒரு டம்ளர் தேநீர் மட்டுமே அருந்தினார், பகலில் வேறு எதுவும் எடுத்துக் கொள்வதில்லை; இருந்தும் அதி வேகமாக, செங்குத்தான மலைகளில் ஏறினார். சில நேரங்களில் கடந்து செல்ல மிகவும் கடினமாக இருந்தபோதும், அவர்கள் கைகளிலும் முழங்கால்களிலும் தாங்கிக்கொண்டு ஏற வேண்டியிருந்தது.

மண்டலியின் உடலின் ஒவ்வொரு பாகமும் வலித்தது. ஒரு கட்டத்தில், பாபா, "**உலகளாவிய உடல் வலிக்கும்போது**, **ஆயிரக்கணக்கான உடல் வலிகளை உணர்கிறேன்**" என்று குறிப்பிட்ட வேளையில், இது மண்டலியின் முணுமுணுக்கும் மனதை அமைதிப்படுத்தியது. பாபா உட்பட அனைவருக்கும் தாகம் ஏற்பட்டாலும், தண்ணீர் அருந்த தடை விதிக்கப்பட்டது.

பிற்பகல் இரண்டு மணியளவில், அவர்கள் மேலும் நான்கு மைல் சமவெளி பரப்பில் நடந்து, இறுதியாக மலை ஒன்றில் ஏறவேண்டியிருந்தது. ஆதி களைத்துப்போய், மேலும் நடக்க முடியாதது போல் உணர்ந்தார். காக்கா, பைதூல், குஸ்தாஜி ஆகியோரும் அதே நிலையில் இருந்தனர், இருந்தும், சிரமங்களைத் தாங்கிக்கொண்டு அவர்கள் ஏழு மைல்களுக்கு மேல் மலை மேல் தாவி, போவாலியைச் (BHOWALI) சென்றடைந்தனர். பொழுது சாய்வதற்கு முன்னதாக, பாபா, காக்கா, ஆதி மூவரும் பேருந்தில் காத்கோடம் திரும்பி வந்த பின்னர், அங்கு பாபா அவர்களின் தாகத்தைத் தணிக்க அனுமதித்தார். காக்கா அவர்களின் இரவு உணவைத் தயார் செய்தார். மிகவும் சோர்வாக இருந்த பாபா, அவரது தலை சுழலுவது போலவும், இதயம் வலிப்பதாகவும் புகார் கூறினார். குஸ்தாஜி, பைதூல் இருவரும் மறுநாள் காத்கோடம் திரும்பி வந்தனர்.

இமயமலையில் தனது மௌனத்தைக் கைவிடப் போவதாக பல நாட்களாக, பாபா தீவிரமான தொனியில் ஆனால் சூசகமாகக் கூறிவந்தார். ஜூலை 16 அன்று, பாபா, அதிகாலை 3:00 மணிக்கு எழுந்து, நான்கு மண்டலியுடன் 5:00 மணியளவில் புறப்பட்டு, அவர் ஒரு மணி நேரம் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் பொருத்தமான இடத்தைத் தேடிச் சென்றார்.

ஒரு கால்வாய் பாலத்தைக் கடந்து, அவர்கள் இரண்டு மணிநேரங்களுக்கு அடர்ந்து வளர்ந்த புதர்கள் வழியாக, மீண்டும் தங்கள் கைகளிலும் முழங்கால்களிலும் தாங்கிக்கொண்டு மலைமேல் ஏறத் தொடங்கினர். இந்தக் காடு போன்ற நிலப்பரப்பில் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஏறும்போது எவரும் கண்ணில் தென்படவில்லை. பாபா நடந்த வேகத்திற்கு மண்டலியால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஆதியின் கணுக்கால், பாதையில் சில மென்மையான கூழாங்கற்கள் மீது நழுவி இரண்டு முறை சுளுக்கியது.

அவர்களால் பொருத்தமான எந்த இடத்தையும் கண்டுகொள்ள முடியாத அந்தத் தருணத்தில், திடீரென பாபா ஓர் ஆழமான பள்ளத்தாக்கைச் சுட்டிக்காட்டி, "**ஆத்ம சக்தியால் நிரம்பியுள்ள அந்தப் பள்ளத்தாக்கு என்னை**

**வரவேற்கிறது!**” என்று கூறி அவர் வேகமாக ஓடத் தொடங்கினார், மண்டலியும் பின் தொடர்ந்தனர். ஒரு மணி நேரம், பாபா மண்டலியுடன் பள்ளத்தாக்கைச் சுற்றி, மூச்சுத் திணறும் விதத்தில் மூன்றாவது மலையின் உச்சிக்கு அழைத்துச் சென்றார்.

பாபா இவ்வாறு குறிப்பிட்டார், “**எனது ஏகாந்தவாசம் மிகவும் முக்கியமானது என்றாலும், இந்த உடலைத் துறந்த ஆத்மாக்களின் அழைப்பை நான் கவனத்தில் கொள்ள வேண்டும்.**” பாபா இப்போது இங்கு இருப்பதால் இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டது, பின்னர் அவர் இரண்டாவது மலைக்குத் திரும்பிச் சென்று, ஏகாந்தவாசத்திற்கான இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்.

ஒரு கட்டத்தில், பாபா இவ்வாறு விளக்கினார், “**மனிதகுலத்தின் தலைவிதியின் சமநிலையை மாற்றுவதற்கு உகந்த நல்ல சக்திகளை ஒன்றிணைப்பதும், ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி போரை நடத்திச் செல்வதற்கு வேண்டிய விதைகளை விதைப்பதும் இந்த ஏகாந்தவாசத்தின் முக்கிய நோக்கம்.**”

மெஹர் பாபா, மீண்டும், அவரது மௌனத்தைக் கலைக்கப் போவதாக, சூசகமான முறையில் சுட்டிக்காட்டினார். அவர் ஒரு மூலையில் பாறை மீது சாய்ந்து அமர்ந்திருந்த வேளையில், அவரது முகம் மென்மையாக ஒளிர்ந்தது. பாபா, நான்கு மண்டலிக்கும் இவ்வாறு அறிவுறுத்தினார்: “**என்னிடமிருந்து 50 கெஜம் தொலைவில், ஒவ்வொரு மூலையிலும் அமர்ந்து கொள்ளுங்கள், நான், எனது கைகளைத் தட்டும் வரை என்னைப் பார்க்க வேண்டாம்.**”

பாபாவின் ஏகாந்தவாசம் காலை 9:50 மணிக்குத் தொடங்கியது. இதை நினைத்து மண்டலி அகமகிழ்ந்தனர்: “பாபா, அவரது மௌனத்தைக் கலைக்கப் போவது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்! அனைத்து மண்டலியிடமிருந்தும், நாம் நான்கு பேர் மட்டுமே அதைக் கேட்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம்!”

55 நிமிடங்களுக்குப் பிறகு, காலை 10:45 மணிக்கு, பாபா கைகளைத் தட்டியதும், மண்டலி அவரை அணுகினர். ‘இத்தனை வருடங்களுக்குப் பிறகு, பாபாவின் முதல் வார்த்தைகள் என்னவாக இருக்கும்?’ மண்டலி மனதிற்குள் நினைத்துக் கொண்டனர். ஆனால் பாபா, சத்தம் எதையும் எழுப்பாமல், ‘**புறப்பட வேண்டிய நேரம் இது**’ என்று சைகையால் தெரிவித்தார். பாபா ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருந்த இடத்திலிருந்து சிறிது மண்ணை பைதூல் சேகரித்து, ஒரு பெட்டியில் பாதுகாத்தார். பாபா, இப்போது இமயமலைக்கு அருகில் இதுபோன்ற ஏழு இடங்களில் ஏகாந்தவாசம் மேற்கொண்டார்.

அடுத்த நாள், காத்கோடத்தில் பாபா தினமும் மூன்று முறை பால் இல்லாத தேநீர் மட்டும் அருந்தி உபவாசத்தைத் தொடங்கினார். உதர்மன் மஸ்தானுடன் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணி நேரம் அவரது அறையில் தனிமையில் பணிபுரிந்தார்.

எதிர்வரும் மஸ்த் பயணத்தில் அஜ்மீர் செல்வதற்காக, ஆதி வரைந்த திட்டத்தை, பாபா மேலோட்டமாகப் பார்த்து, கையெழுத்திட்டார். திட்டப்படி, அவர்கள் பெஷாவர் (PESHAWAR), லாஹூர் நகரங்களுக்கும் செல்வதாக இருந்தது. ஆனால் பாபா அவற்றை கால அட்டவணையிலிருந்து விலக்கி வைத்தார். ஜூலை 18ஆம் நாள் கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது.

இந்த ஏகாந்தவாச வேளையில், பாபா, கவாலி பாடல்களைக் கேட்கும் விருப்பத்தைத் தெரிவித்தார்; ஜூலை 18 அன்று, பைதூல் ஓர் உள்ளூர் பாடகரை, இசைக் குழுவினருடன் அழைத்து வந்தார். இசை நிகழ்ச்சி தொடங்கிய இரண்டே நிமிடங்களில் பாபா அறையை விட்டு வெளியேறி, அவரைப் பின்தொடருமாறு ஆதியை அழைத்தார். அவரது அறைக் கதவை மூடிவிட்டு பாபா, ஆதியிடம், "**உலகளாவிய பணியின் நிமித்தம் என் மீதுள்ள பாரத்தைத் தணித்து, சற்று நிதானமாக இருக்கும் எண்ணத்தில், கவாலி பாடல்களைக் கேட்க விரும்பினேன். பைதூல் இந்த மனிதனை எங்கிருந்து அழைத்து வந்தார்? அவர் பாடுகிறாரா அல்லது வேறு ஏதாவது செய்கிறாரா?**" என விவாதித்தார்.

பாபா, பைதுலை அழைத்து, கூர்மையான வாரத்தைகளால் வினவினார், "**நீங்கள் யாரை இங்கு அழைத்து வந்தீர்கள்? அந்த மனிதனால் பாட முடியாது!**"

ஆனால் பைதூல், பாபாவிற்கு உறுதியளிக்கும் விதத்தில், "அவர் ஒரு பிரபலமான பாடகர். வாருங்கள், வந்து கேளுங்கள்; அவருக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். அவர் இப்போதுதான் தன்னைத் தயார் படுத்திக் கொள்கிறார்" என்றார்.

எனவே, பாபா மீண்டும் பாடலைக் கேட்க திரும்பிச் சென்றார், ஆனால் பத்து நிமிடங்களுக்குப் பின்னர் அவர் பைதூலிடம், பணம் கொடுத்து, குழுவைத் திருப்பி அனுப்புமாறு சைகையால் தெரிவித்தார். பாடகரும் இதர கலைஞர்களும் வெளியேறிச் சென்றதும், பாபா, பைதூலிடம், "**நீங்கள் அவருக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள்?**" என வினவினார்.

"ஐந்து ரூபாய் மட்டுமே. அந்தத் தொகைக்காக இரவு முழுவதும் பாட அவர் ஒப்புக்கொண்டார்" என்றார் பைதூல்.

"**மற்றும் அவரது குதிரைவண்டி கட்டணம்?**"

"இதுவும் ஐந்து ரூபாயில் சேர்க்கப்பட்டுள்ளது."

"**நீங்கள் மூளையற்ற ஈரானி முட்டாள்!**" பாபா எரிச்சலில் திட்டினார். "**எந்தவோர் உண்மையான கவாலி பாடகரும் இந்தத் தொகைக்குப் பாடுவதற்கு எப்போதேனும் ஒப்புக் கொள்ள முடியுமா? நீங்கள் என்னைப் பற்றிக் கொஞ்சமேனும் யோசித்திருக்க வேண்டும்! அந்த முரடனுக்கு, அவரால் பாட முடியாது என்று தெரியும், ஆதலால் அவர் ஐந்து ரூபாயை ஏற்றுக்கொண்டார்.**

"**நீங்கள் நன்கு பேரம் பேசினீர்கள் என்று நினைத்து மகிழ்ச்சியடையும் அளவிற்கு ஒரு முட்டாள். உங்கள் தந்தை எப்போதேனும்**

**கவாலி இசையைக் கேட்டிருக்கிறாரா?"** பின்பு பாபா தலையை அசைத்து, பைதூலின் கஞ்சத்தனத்தை நினைத்து சிரித்தார்.

மண்டலி, பாபாவின் இரவு கண்காணிப்பாளர்களாக, தத்தமது கடமையைப் பகிர்ந்து கொண்டனர், ஒரு நாள் காலையில் தேநீர் அருந்தி கொண்டிருந்த வேளையில், முந்தைய இரவு பாபாவின் குடிலுக்கு எதிரே அமைந்த மலையில் ஒரு பிரகாசமான ஒளியைக் கண்டதாக குஸ்தாஜி தெரிவித்தார். ஆதி சந்தேகத் தோரணையில், அது யாரோ ஒருவர் ஏற்றிய விளக்காக இருக்க வேண்டும் என்றார். பாபா உடனே தலையிட்டு ஆதியிடம், குஸ்தாஜி கூறுவதை கவனிக்கச் சொன்னார். ஆதி இன்னும் அவரை நம்பவில்லை, ஆனால் அன்றிரவு கண்காணிப்பு நேரத்தில் ஆதியும் அதைப் பார்க்க நேர்ந்தது. அந்த மலையில் மேல்நிலையை அடைந்த யோகி ஒருவர் இருப்பதாகவும், அந்த ஒளி அவரிடமிருந்து வந்ததையும் பாபா வெளிப்படுத்தினார்.

மழை தொடர்ந்து பெய்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு, ஜூலை 19 அன்று நள்ளிரவில், சிறிது சாதத்தில் வெண்ணெய் கலந்து பாபா தனது உபவாசத்தை நிறைவு செய்தார். பாபா, குஸ்தாஜியுடன் சதுரங்கம் விளையாடும் போது, காக்கா உணவைத் தயார் செய்தார். ஜூலை 21ஆம் நாள் பாபாவை சந்திக்க சாஞ்சி வந்து, சிறிது நேரம் அவருடன் உரையாடிய பின்பு திரும்பிச் சென்றார். முன்கூட்டியே தங்கும் விடுதிகளுக்கு ஏற்பாடுகள் செய்ய பைதூல் அன்று பரேலிக்கு அனுப்பப்பட்டார்.

1942 ஜூலை 22 அன்று, பாபா, நான்கு மண்டலியுடன் (ஆதி சீனியர், குஸ்தாஜி, காக்கா, பைதூல்) காத்கோடத்திலிருந்து புறப்பட்டு பரேலிக்குச் சென்றார்; அங்கு அவர் மீண்டும் புனித பஷீர் மியான் மஸ்தைத் தொடர்புகொண்டு, அன்றிரவு ஒரு ஹோட்டலில் தங்கினார்.

பாபாவும் மண்டலியும் மறுநாள் மாலை 6:15 மணிக்கு நஜிபாபாத்தைச் (NAJIBABAD) சென்றடைந்து இரண்டு டோங்காக்களில் சற்று தொலைவில் அமைந்த ஸாஹன்பூர் (SAHANPUR) என்ற சிறிய கிராமத்திற்குச் சென்றனர். டோங்கா ஒரு சிறிய ஏரியைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது; அனைவரின் துணிமணிகளும் நனைந்து ஈரமாயிற்று. பாபா, அவரது உடை உலரும் வரை ஆதியின் சில ஆடைகளை அணிந்தார். பாபாவின் அனைத்து கடுமையான முயற்சிகளும் நல்ல பலனை அளித்தது, ஏனெனில் ஸாஹன்பூரில், பாபா 30 வயது கனி பாபா (GHANI BABA) என்ற இளம் மஸ்தைக் கண்டுகொள்ள முடிந்தது.

அந்த மஸ்தின் பெற்றோர் பாபாவை எதிர்கொண்டு, தங்கள் மகன் 'பைத்தியக்காரனாக' மாறிவிட்டதாக அவர்கள் நம்புவதாகவும், மேலும் அவரது நிலை குறித்து மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார்கள் என்றும் முறையிட்டனர். பாபா அவர்களை ஆறுதல் படுத்தினார், **'உங்கள் மகன் உண்மையில் ஆன்மீக ரீதியில் முன்னேறியவன், பைத்தியம் அல்ல'**

என்பதை அவர்களுக்கு விளக்கினார். அவர் மஸ்தின் பெற்றோரை ஆசீர்வதித்தார், '**அத்தகைய புனிதமான மகனை ஈன்றெடுத்தது அவர்களின் நல்லதிர்ஷ்டம்**' என்று பாபா அவர்களுக்கு உறுதியளித்தார்.

ஸாஹன்பூரில் மேலும் இரண்டு மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். ஒவ்வொரு தொடர்புக்கும் முன்னும் பின்னும் பாபா, உடல்நலம் குன்றியதால் மூன்று முறை வாந்தி எடுத்தார்.

அன்றிரவு களைத்துப்போய் நஜிபாபாத்துக்குத் திரும்பிய அவர்கள் ரயில் நிலைய நடைமேடையில் தூங்கினர். அடுத்த நாள், பாபா மீண்டும் ஸாஹன்பூருக்குச் சென்று, அங்கு அவர் கனி பாபாவையும், காலி கம்லிவாலா (KALI KAMLIWALA) என்ற மஸ்தையும் மறுபடியும் தொடர்பு கொண்டு, பின்பு நஜிபாபாத்திற்குத் திரும்பிச் சென்றனர்.

நஜிபாபாத்தில், இதற்கு முன்னதாக ரியாஸுதீன் (RIYAZUDDIN) என்றழைக்கப்படும் தடித்த, நிர்வாண நிலையில் இருந்த மஸ்தை ஒரு மரத்தின் கீழ் சந்தித்து விடைபெறும்போது, 'பணி முடிந்தது' என்று மஸ்த் கூறினார். ஆனால் இன்று, பாபா, அந்த மஸ்தைப் பார்த்தபோது, அவர் ஓடத் தொடங்கினார், பாபாவும் அவரை மூன்று மைல் தூரம் பின்தொடர்ந்து சென்றார். எவ்வாறாயினும், ஏறக்குறைய இரண்டு மணிநேரம் பின்தொடர்ந்தும், பிரியமானவரை வரவேற்பதில் மஸ்த் வெளிப்படுத்திய தயக்கநிலை மாறவில்லை.

ஸாஹன்பூரில் தொடர்பு கொண்ட ஒரு பழைய மஸ்த், துலா ஷா (TULA SHAH) என்பவரை இணங்கச் செய்து பாபா அவரை உள்ளூர் கடை ஒன்றிற்கு அழைத்துச் சென்றார். இது உள்ளூர் கிராம மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது, ஏனெனில் துலா ஷா, பாபாவின் அழைப்பை ஏற்றுக்கொண்ட முதலாவதாக அறியப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும்.

மெஹர் பாபாவின் அடுத்த விஜயத்தில் துலா ஷா, அவரைப் பார்த்ததும், ரியாஸுதீனைப் போலவே பாபாவைத் தவிர்த்தார்; கிராமத்திற்கு வெளியே அடர்ந்த வனப்பகுதிக்குச் சென்று, ஓடி மறைந்த அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, ஒவ்வொரு மஸ்தையும் தனது விருப்பத்திற்கு விட்டுவிட்டு, பாபா அவர்களை, கண்ணுக்கு தெரியாத முறையில் தொடர்பு கொண்டார்.

நஜிபாபாத்திலிருந்து, பாபா அவரது நான்கு தோழர்களுடன் அஜ்மீருக்கு ரயிலில் புறப்பட்டார். வழியில், பாபா, பல்வேறு நாடுகளில் வாழும் மஸ்துளின் எண்ணிக்கையைப் பற்றி விளக்கினார்:

**இந்தியாவில் இரண்டு லட்சம் (200,000) மஸ்துகள் உள்ளனர். ரஷ்யாவில் ஆயிரம் மஸ்துகளும் சீனாவில் ஆயிரமும் உள்ளனர். ஐரோப்பாவில் ஒரு சில மஸ்துகள் மட்டுமே வாழ்கின்றனர். இந்தியாவில் வாழும் மஸ்துகள் ஆன்மீக ரீதியில் அசலான 'அலுவலக ஊழியர்கள்'; ஐரோப்பாவில் இருப்பவர்கள் முகவர்கள், அவர்கள் இந்திய மஸ்துகளிடமிருந்து ஆன்மீக சக்தியை ஈர்க்கிறார்கள். ரோம் நகரில் மிகவும்**

**முன்னேறிய மஸ்த் ஒருவர் நிலைகொண்டுள்ளார். முகவர்கள் எப்போதும் அசலான அலுவலக பொறுப்பாளர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். இந்திய மஸ்துகள் பல பிராந்தியங்களுக்கான பொறுப்பை வகிக்கும் அதிகாரிகள். அவர்கள் முகவர்கள் மூலம் ஐரோப்பிய பிராந்தியங்களையும் கட்டுப்படுத்துகின்றனர். ரோம் நகர முகவர், இந்தியாவிலிருந்து 'சக்தியை சேகரித்து' ஐரோப்பிய முகவர்களுக்கு விநியோகிக்கிறார். ரஷ்யா மற்றும் சீன நாட்டு மஸ்துகள் இந்திய அசலான பணியாளர்களைப் போன்றவர்கள், அதற்கும் மேலாக, ரோம் நகர விநியோகஸ்தர் மூலம் ஐரோப்பிய மஸ்துகளுக்கு உதவுகின்றனர். ரஷ்ய, சீன மற்றும் இந்திய தேசத்து மஸ்துகள் பரஸ்பர உதவியை வழங்குகின்றனர்.**

**ஆன்மீக ரீதியில் சீரழிந்துபோன இந்திய நாட்டு ஆத்மாக்கள் பௌதீக உடல்களைத் துறக்கும் தருவாயில் மேற்கத்திய நாடுகளில் மறுபிறவி எடுக்கின்றன. அதுபோல மேற்கத்திய நாடுகளில் வாழும் சிறப்பான ஆத்மாக்கள் பௌதீக உடல்களைத் துறந்து இந்தியாவில் மறுபிறவி எடுக்கின்றன, மேலும், தகுதி வாய்ந்த இந்தியர்கள் ஆன்மீக ரீதியில் முன்னேறிச் செல்ல இந்தியாவிலேயே மறுபிறவி எடுக்கிறார்கள்.**

**அவதார புருஷர் எப்பொழுதும் ஆசிய கண்டத்தில் பிறவி எடுக்கிறார். அவதார புருஷர்கள் ஓர் உலகில்** (கிரகத்தில்) **மட்டுமே பிறக்கின்றனர். அந்த உலகம் குளிர்ச்சியடைந்து, வாழ முடியாததாக மாறும் காலகட்டத்தில், இடையிடையே, மற்றொரு உலகத்தில்** (கிரகத்தில்) **வாழ்க்கை வளர்ச்சியடைந்து இறுதியாக முந்தைய உலகத்தை மாற்றுகிறது. இது காலாதிகாலமாக நடந்து வரும் நிகழ்வு. அங்கே, கோடிக்கணக்கான உலகங்கள் உள்ளன.**

**இறைப்பெருங்கடல் அமைதியாக இருந்தபோது சைதன்யா** (உணர்வு) **இருந்தது; அது அலைபாய்ந்தபோது, கற்பனை ஆரம்பமானது.**

பாபாவும் நான்கு மண்டலியும் 1942 ஜூலை 26 அன்று அஜ்மீர் நகரைச் சென்றடைந்து, 'கிங் எட்வர்ட் மெமோரியல் ஸெராயில்' (KING EDWARD MEMORIAL SERAI) தங்கினர். பாபா அஜ்மீருக்கு விஜயம் செய்த ஒரே காரணம், காத்கோடத்தில் மேற்கொண்ட ஏகாந்தவாசத்துடன் பார்க்கையில், இது வேறு நோக்கத்துடன், ஒரு குறிப்பிட்ட இடத்தில் அரை மணி நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருப்பதுதான் என்பது பின்பு தெரியவந்தது.

பாபா குறிப்பிட்டார், "**போரில் இறுதி நன்மைகளை அடையப்பெறும் நோக்கத்தில், மனித துன்பங்களைத் திசைதிருப்பி வழிநடத்துவதற்காக நான் இங்குப் பணியாற்றுவேன்.**"

இருப்பினும், முதலில், பாபா, சாச்சாவைத் தொடர்பு கொள்ளச் சென்றார். ஆனால் மஸ்த் அவருடைய எண்ணத்தை வெளிப்படுத்தாமல் தயக்கத்துடன் இருந்ததால், மறுநாள் காலை 4:00 மணிக்கு பாபா, மீண்டும் பைதூல், காக்கா ஆகியோருடன் சென்றார். அன்றைய தினம் ஐந்து மஸ்துகளை

ஹோட்டலுக்கு அழைத்து வந்து, அவர்களுடன் பணிபுரிந்து, அவர்களுக்கு உணவளித்தார்.

பாபா பின்னர் அருகாமையில் அமைந்த புஷ்கர் (PUSHKAR) கிராமத்திற்குச் சென்று, புஷ்கர் ஏரிக்கு அருகில், பழைய, கைவிடப்பட்ட, பாழடைந்த அரண்மனையில் ஓர் அறையில் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். பாபா, முழுமையான மௌனத்தை விரும்பி மண்டலியில் நால்வரை எல்லா திசைகளிலும் காவல் புரியுமாறு அறிவுறுத்தினார்.

ஏகாந்தவாசம் நிறைவடைந்ததும், பாபா, அளப்பரிய மகிழ்ச்சியும், ஆன்மீக ரீதியில் புத்துணர்ச்சி மிக்கவராகவும் காணப்பட்டார். பாபா கூறியபடி: **"எனது பணி மிகவும் திருப்திகரமாக நிறைவுற்றது. எனது தலையிலிருந்த பாரமும் குறைந்தாற் போல் உணர்கிறேன்."**

அவர் அந்தப் பழைய அரண்மனையிலிருந்து வெளியேறியபோது, குரு பூர்ணிமாவின் பண்டிகையைக் கொண்டாடும் அணிவகுப்பு, சாலையில் கடந்து சென்றது. பாபா குறிப்பிட்டார், **"இந்தக் குறிப்பிடத்தக்க தற்செயல் நிகழ்வு, இங்கே எனது ஏகாந்தவாசத்தின் நிறைவைக் குறிக்கிறது."**

புஷ்கரிலிருந்து திரும்பியதும், சாலையோரத்தில் நின்று, ஒரு சிறிய வீட்டில் வசித்து வந்த சாதுவிற்கு ஒரு நாணயத்தை வழங்கினார்.

காலம் இதை நினைத்து வியப்பில் ஆழ்ந்தது: "அவதார புருஷர் நூற்றுக்கணக்கான மைல்கள் பயணித்து, ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் அரை மணி நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருப்பதை வரையறுக்கப்பட்ட மனிதனின் அறிவுத்திறனால் ஏற்றுக்கொள்ள முடியுமா? இந்த அரை மணி நேரத்தில் அவர் என்ன செய்தார் என்று அவருக்கு மட்டுமே தெரியும்! பரிபூரணமான ஒருவருக்கு இடம், காலம் என்றால் என்ன? கண் இமைக்கும் நேரத்தில் பிரபஞ்சத்தை நிர்மூலமாக்கி, அதே கண நேரத்தில் அந்த இடத்தில் மற்றொன்றை உருவாக்கவும் செய்யும் அவரைப் போன்ற ஒருவருக்கு, முப்பது நிமிடங்கள் என்பது, நீண்ட நெடிய நேரமாகும்!"

ஜூலை 28ஆம் நாள், சாச்சாவை மீண்டும் இரவு 11:30 மணிக்கு சந்தித்து, அவருடன் 20 நிமிடங்கள் அமர்ந்து செய்யப்பட்ட ஆன்மீகப் பணியில் பாபா மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

அனைவரும் அடுத்த நாள் இரவு ரயிலில் டெல்லிக்குப் புறப்பட்டு, மறுநாள் காலையில் வந்து, நிஜாம் ஹோட்டலில் தங்கினர். பாபா மற்றும் மண்டலிக்கு, கேக்கி தேசாயின் இல்லத்திலிருந்து சாஞ்சி உணவு எடுத்து வந்தார். பின்பு, பாபா, டெஹ்ரா டூன் புறப்படுகையில் ஜால் கேரவாலாவும் அவரை சந்தித்தார். மெஹர் பாபாவின் சார்பாக ஃபெரோஸ் கான் நூன் (FEROZ KHAN NOON) மற்றும் ஜோகேந்திர ஸிங் (JOGENDRA SINGH) உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்களைத் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு, பாபாவின் நான்கு செய்திகளை வழங்குவதற்கு சாஞ்சி, ஆதி சீனியர் இருவரும் டில்லியில் இருக்குமாறும், பின்னர் அவர்கள் மும்பைக்குச் சென்று அங்கும் அதைச் செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டனர். குஸ்தாஜி, பைதூல் ஆகியோருடன்


பாபா டெஹ்ரா டூன் திரும்பிச் சென்று, மஸ்துகளைத் தொடர்பு கொள்ளும் பணியை மீண்டும் தொடர்ந்தார்.

டெஹ்ரா டூனில் பெண் மண்டலியுடன் இருந்த ஐரீன் பில்லோ கடுமையான நோயால் தாக்கப்பட்டதால் அவருக்கு சிகிச்சை அளிக்க டாக்டர் நீலுவிடம் கூறப்பட்டது. ஐரீன் விபரீதமான தசை வலியால் அவதிப்பட்டார். தசை வலிப்பிலிருந்து நிவாரணம் அளிக்கும் விதத்தில் மார்கரெட் க்ராஸ்கே அவரது கால்கள், கால்விரல்கள் மற்றும் கைகளை அழுத்தி மஸாஜ் செய்து வந்தார்; அதே நேரத்தில் டாக்டர் நீலு அவருக்கு சிகிச்சை அளித்தார்.

ஆகஸ்ட் 4ஆம் தேதி, காத்கோடத்தைச் சேர்ந்த புனித உதர்மன் மஸ்தான் டெஹ்ரா டூனுக்கு அழைத்து வரப்பட்டார், அங்கு அவர் அடுத்த மூன்று வாரங்கள் தங்கியிருந்தார். பாபா ஒவ்வொரு நாளும் மஸ்தை நீராட்டி, உணவூட்டி, அவருடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்தார். மஸ்த் உதர்மன் மஸ்தான் தொடர்ந்து சிகரெட்டுகளைப் புகைப்பதை வழக்கமாகக் கொண்டார். ஆகஸ்ட் 5ஆம் நாள் முதல், பாபா, தினமும் ஒரு முறை உணவு உண்ணத் தொடங்கி, பிரேம் பவனில் (PREM BHAVAN) மேல் மாடியில் காலை 7:00 மணியிலிருந்து மதியம் வரை, மற்றும் மண்டலியுடன் பிற்பகல் 2:00 முதல் 7:00 மணி வரை அடுத்த ஒரு மாதத்திற்கு அதைத் தொடரப் போவதாகக் கூறினார்.

டாக்டர் டான் பெங்களூரிலிருந்து (ராணுவ பணியிலிருந்து) விடுமுறையில் வர அனுமதிக்கப்பட்டார். மூன்று வாரங்கள் தங்கியிருந்த காலத்தில், பாபா அவரை ஹரித்வார், ரிஷிகேஷ், முஸோரி (MUSSOORIE) போன்ற, பாபாவுடன் தொடர்புடைய இடங்களைப் பார்வையிட அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபா தனது மூன்று வார மஸ்த் பயணத்திலிருந்து திரும்பி வந்த ஒரு வாரத்திற்குப் பின்னர், 1942, ஆகஸ்ட் 7 அன்று, பெரும்பாலும் அமெரிக்க கடற்படையினரைக் கொண்ட 'நேச நாட்டுப் படைகள்' (ALLIES), பசிஃபிக் பெருங்கடலில் அமைந்த 'குவாடல்கெனல்' (GUADALCANAL IN THE PACIFIC) தீவில் தரையிறங்கி, ஜப்பானிய சாம்ராஜ்யத்திற்கு எதிரான நட்பு நாடுகளின் முதல் பெரிய தாக்குதலைத் தொடங்கின.



**மெஹர் பாபாவின் கையில் பச்சைக்கிளி 'மிட்டு' - லோனவாலா 1942**

(PARROT MITTU ON MEHER BABA'S HAND – LONOVALA 1942)

# டெஹ்ரா டூன், லோனவாலா & மெஹராபாத்

**(Dehra Dun, Lonavala & Meherabad)**

1942, ஆகஸ்ட் 3ஆம் நாள் மெஹர் பாபா, கீழ்வரும் செய்தியை, இளைஞர்களுக்காக எழுத்துப்பலகை மூலம் வழங்கி, செப்டம்பர் மாத 'காம்ரேட்' (COMRADE) எனும் இந்திய இதழில் வெளியிடுமாறு கட்டளையிட்டார்:

**ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டிருப்பது இளைஞர்களுக்கான தனி சிறப்புரிமை. எந்தவொரு சிக்கலிலும் சிக்கிக் கொள்ளாமல், எதிர்காலத்தைப் பற்றிய அவர்களின் கனவுகள், தடையற்ற கற்பனையால் தூண்டப்படுவதன் நன்மையைக் கொண்டுள்ளன. புதிதாக உருவான அன்பின் கனலொளியில், அல்லது புதிதாகத் தோன்றிய மன எழுச்சியின் கதகதப்பில், அவர்கள், வெவ்வேறு செயல்பாடுகள் மற்றும் சுய தியாகத்திற்கான அழைப்புக்கு விரைவாக பதிலளிக்கிறார்கள். இந்தப் பண்புகள் இல்லாத வாழ்க்கை ஏழ்மையானதாக இருக்கும், ஆனால், அவை பெரும்பாலும் இளைஞர்களிடையே உள்ளன. இத்தகைய பண்புகளை மிகையாக அடையப்பெற்ற இளைஞர்கள், அவற்றின் முழு நன்மையையும் பெற வேண்டுமெனில், அவர்கள் தம்மிடையே, அரிதான வேறு சில குணங்களையும் அடைய முயற்சிக்க வேண்டும்.**

**தோல்வியை, சாந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தைரியத்தால், நம்பிக்கையை ஊக்குவிக்க வேண்டும்; செயலின் பலனுக்காக, பொறுமையுடன் காத்திருக்க வழிவகுக்கும் ஞானம், தீவிரமான மன எழுச்சியை வழிநடத்த வேண்டும். எதிர்காலத்தைப் பற்றிய கருத்தியல் கனவுகள், நிகழ்காலத்தின் யதார்த்தங்களின் உணர்வால் சமநிலையை அடைய வேண்டும். அன்பின் அனல், ஒரு சுதந்திரமான, தடையற்ற செயற்காரணத்தால் அதனை ஒளிரச் செய்ய இடந்தர வேண்டும்.**

**இளைஞர்கள் இலட்சியத்தை உணர்ந்து கொள்வது மிகவும் எளிதானதால், அவர்கள் நிகழ்காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் எதிராக, கசப்புத் தன்மையை வளர்த்துக் கொள்கிறார்கள்; ஆனால் உண்மையானதை இலட்சியமாக்கி, கடந்த கால பாரம்பரியத்தை பாராட்டுவதற்கான பண்பை வளர்த்துக் கொள்வது நல்லது. உலகம், அதன் இயல்பான நிலையில், இளைஞர்கள் விரும்பி போற்றும் முறையைப் பின்பற்றுவதாகத் தோன்றாமல் இருக்கலாம், ஆனால் அவர்களின் கனிவான கவனத்தைத் தக்கவைத்துக்கொள்வது எப்போதுமே போதுமானது என்பதை அவர்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. உலகை மேம்படுத்துவதற்கான அவர்களின் விருப்பத்தில், அவர்கள் கசப்பாக மாறுவதன் மூலம் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கான உரிமையை அர்ப்பணம் செய்ய வேண்டாம்.**

**இளைஞர்கள் சுதந்திரத்தை விரும்புகிறார்கள், எல்லா அதிகாரத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் எதிராகக் கிளர்ச்சி செய்வதற்கான**

**இயல்பான தூண்டுதலை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் சிறப்பாக உள்ளது. ஆனால், குறிப்பாக, இளைஞர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் பல மாயைகளின் கவர்ச்சியில் சிக்கிக்கொள்ளாமல் தம்மைப் பாதுகாக்க, அவர்கள் உண்மையான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். உண்மையான சுய வெளிப்பாடு என்பது பிறருக்கு மதிப்பும், மரியாதையும் வழங்காத தன்மையைக் குறிக்காது; உண்மையான விமர்சனம் என்பது விரோத மனப்போக்கு அல்லது எந்தவிதமான தனித்தன்மையையும் குறிப்பதில்லை. பொறுப்பற்ற சுதந்திரம் நன்மை பயப்பது சந்தேகத்திற்குரியது. சுய கட்டுப்பாடு மற்றும் பிறருடன் ஒத்துழைக்கும் ஆர்வம் இருக்கும் இடங்களில் மட்டுமே சுதந்திரம் அதற்குரிய மதிப்பைப் பெறும்.**

**இளைஞர்கள் எப்பொழுதும் செயலில் ஈடுபடவும், ஆபத்தான சூழ்நிலைகளை எதிர்கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள். அவர்களுள் உறைந்திருக்கும் இந்த அச்சமற்ற, இன்றியமையா வாழ்க்கையின் தூண்டுதலுக்கு அவர்கள் சுதந்திரமாகக் கீழ்ப்படியட்டும். ஆனால் செயல்களில் ஈடுபடும் போது, அது ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும், வெறுமனே அழிவுகரமான ஒன்றாக இருக்கக்கூடாது என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்களின் 'கருத்தைக் கவரும் வார்த்தைகள்' எப்பொழுதும் அன்பாகவும் சேவை மனப்பான்மையுடனும் இருக்கவேண்டும்.**

டெஹ்ரா டூனில் ஏறக்குறைய ஒரு மாத காலம் கடந்துவிட்டது; பாபா, முக்கியமாக உதர்மன் மஸ்தானுடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்தார், ஒவ்வொரு நாளும் மண்டலியுடன் அமர்ந்து அவரது சகவாசத்தை வழங்கினார். ஆகஸ்ட் 20 முதல், பாபா மூன்று நாட்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் மேற்கொண்டார், பின்னர் அவர் தினமும் ஒரு முறை உணவு உண்ணும் வழக்கத்தை மீண்டும் தொடர்ந்தார்.

ஒரு கட்டத்தில், பாபா, அவரது ஏகாந்தவாசத்தை மஹாராஷ்டிரா மாநிலத்தில் மேற்கொள்ள முடிவு செய்து, பொருத்தமான பங்களாக்களுக்கு ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தினார். இந்த ஏற்பாடுகள் லோனவாலாவில் (LONAVALA) செய்யப்பட்டது. ஆகவே, 1942, செப்டம்பர் 10, வியாழக்கிழமை மெஹர் பாபா, ஆண், பெண் மண்டலியுடன் லோனவாலாவிற்கு வந்தார் - பெண்மணிகளில் குல்மாய், பீலாமாய், ஸில்லா, அர்னவாஸ், நர்கிஸ், குலாமாசி, கெய்மாய், மனு மற்றும் மெஹரு ஜெஸவாலா ஆகியோருடன் மெஹரா, மணி, கோர்ஷெத், ஸூனாமாசி, மன்ஸாரி, ஐரீன், மார்கரெட், கிட்டி, ரானோ மற்றும் பலர்.

பாபா மற்றும் மண்டலிக்கு ரயிலில் ஒரு தனி பெட்டியை முன்பதிவு செய்யவும், அனைவருக்கும் வேண்டிய உணவை டெல்லி ரயில்

நிலையத்திற்கு கொண்டு வருவதற்கும், கேக்கி தேசாயிடம் பொறுப்பு வழங்கப்பட்டது. கேக்கி, அவரது மனைவி தூன் மற்றும் அண்டை வீட்டு சிறுமி இருவரையும் உடன் அழைத்து வந்தார். பாபா, '**அந்த சிறுமி அவர்களின் குழந்தையா?**' என்று தூனிடம் கேட்க, அவர் குழந்தை யார் எனக் கூறியதும், பாபா அவரிடம், "**நீங்கள் குழந்தைகளை விரும்புகிறீர்களா? உங்களுக்கு ஒன்று வேண்டுமா?**" என வினவினார். அதற்கு தூன், அவர் குழந்தைகளை விரும்பினாலும், அப்போது இல்லை, அவர்களுக்குத் திருமணமாகி இரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆகின்றன என்று பதிலளித்தார்.

மெஹர் பாபா அறிவுரை வழங்கினார், "**நீங்கள் ஒரு குழந்தையை விரும்பும் வேளையில், என்னை நினைவில் கொள்ளுங்கள். நான் உங்களுக்குத் தரும் அந்தக் குழந்தைக்கு 'மெஹர்' என்று பெயர் சூட்டுங்கள்**", மேலும் அவர் தூனின் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார். தேசாய் குடும்பம் ஒரு குழந்தையை ஈன்றெடுக்க பத்து ஆண்டுகள் ஆயிற்று; அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தையை, மெஹர் பாபாவின் அன்புப்பரிசாகக் கருதி, அவருடைய அறிவுறுத்தலின்படி, 'மெஹர்' என்று பெயரிட்டனர்.

லோனவாலா செல்லும் வழியில் ரயிலில், அச்சமூட்டும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது, மெஹர்வான் ஜெஸவாலா கூறியதற்கிணங்க: "நாங்கள் அனைவரும் ஒரே பெட்டியில் பயணம் செய்த வேளையில், பாபா திடீரென மிகவும் வெளிறிப்போய், கைகளையும் கால்களையும் அசைக்க முடியாமல், அவரது கண்கள் திறந்தவண்ணம் இருந்தன. அவர் உடலில் ரத்தம் முழுவதும் வெளியேறிய தோற்றத்தில், உயிரைத் துறந்து விடுவார்போல் உதவியற்றவராக, அசைய முடியாமல், இருக்கையில் சாய்ந்து வீழ்ந்தார்."

அவருக்கு உயிரூட்டம் அளிக்க அனைவரும் விரைந்தனர். ரானோ கோரமைனின் - CORAMINE (ஒரு மைய நரம்பு மண்டலத்தை தூண்டும் மருந்து) சில துளிகளை வழங்கிய, ஒரு சில நிமிடங்களில் பாபாவின் உடலில் அசைவுகள் தென்பட்டு பின்பு குணமடைந்தார். மெஹர்வான் இவ்வாறு முடித்தார், "கடுமையான ஆன்மீக உட்பணிகளில் ஈடுபடும் காலங்களில், பாபா அத்தகைய விளைவுகளை சந்தித்தார்."

செப்டம்பர் 12 காலை பத்து மணிக்கு பாபாவும் குழுவும் அஹமதுநகருக்கு வந்தனர்.

அனைவருக்கும் தேவையான மதிய உணவுடன் குழுவை சந்திக்க, கெய்மாயின் சகோதரி ஷிரின் தமானியா, அவரது மகள் மெஹரு இருவரும் ரயில் நிலையத்தில் காத்திருக்க வேண்டும் என்று அக்பர் அச்சகத்தில் வாழும் ஸட்டா குடும்பத்தினருக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டது; ஆனால், ஸட்டா குடும்பத்தைச் சேர்ந்த வேறு எவரும் வரவேண்டாம் என பாபா உத்தரவிட்டிருந்தார்.

மெஹர் பாபா தனது அன்பர்களை சந்தித்து, அவரது சகவாசத்தை வழங்கி, ஏறக்குறைய இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன; அவரைப் பார்க்கவும்,

அவருடைய வழிகாட்டுதலை நாடவும், தனிப்பட்ட ஆலோசனைகளைக் கேட்கவும் அனைவரும் அதீத ஏக்கத்துடன் இருந்தனர். இதற்கு முன்னதாக, பாபா, அவரது ஏகாந்தவாசம் இமயமலையில் மேற்கொண்ட மஸ்த் பயணத்துடன் முடிவடையும் என்று கூறியிருந்தார், ஆனால் அது மீண்டும் தொடர்ந்தது.

ஷிரின், மெஹரு இருவரும் ரயில் நிலையத்தில் காத்திருந்தனர்; பாபா, பெண் மண்டலியுடன் காத்திருப்பு அறைக்குச் சென்று, மதிய உணவுக்காக அமர்ந்தார். பாபா, மெஹரு பக்கம் திரும்பி, **"நீங்கள் எதையேனும் மறந்துவிட்டீர்களா?"** என்று கேட்க, அக்பர் அச்சகத்தில் சமையல் அடுப்பில் காய்கறிகளை விட்டுவந்த ஞாபகம் திடீரென வந்தது. அவர் பாபாவிடம், "இது இப்போது எரிந்து தீய்ந்து போயிருக்கும்!" என்றதும், பாபா, ஆதி சீனியரை அனுப்பி அந்தக் காய்கறிகளை எடுத்துவரக் கூறினார். அடுப்பில் எரிவாயு எப்படியோ அணைந்து காய்கறிகள் பாதுகாக்கப்பட்டன.

பாபாவும் குழுவும் அஹமதுநகரிலிருந்து பிற்பகல் இரண்டு மணிக்குப் புறப்பட்டு அன்று மாலை லோனவாலா வந்து சேர்ந்தனர். ஸரோஷ், பாபாவுடன் சில பெண் மண்டலியை தனது காரில் அழைத்துச் செல்ல, எரச் குழுவில் இருந்த பிற அனைவருடன் பேருந்தில் சென்றார்; இதர மண்டலி ரயிலில் பயணம் செய்து நள்ளிரவில் வந்து சேர்ந்தனர். முதல் பதினைந்து நாட்கள், பெண்மணிகள் திரு. தஸ்தூரின் 'கரஞ்ஜா' (KARANJA) பங்களாவிலும் (குவெட்டா ஹவுஸ் - QUETTA HOUSE), அதன் பின்னர் திருமதி டீனின் (MRS. DEANE), 'ப்ராஸ்பெக்ட்' (PROSPECT) லாட்ஜிலும் தங்கினர். ஆண் மண்டலி ஒரு தனி பங்களாவில் தங்க வைக்கப்பட்டனர்.

சாஞ்சி, பாபாவையும் குழுவையும் அஹமதுநகர் ரயில் நிலையத்தில் சந்தித்து அவரும் உடன் சென்றார். அவர் மும்பையில் பாபாவின் வாழ்க்கை வரலாற்றை குஜராத்தி மொழியில் பப்பா ஜெஸவாலாவின் உதவியுடன் எழுதிக்கொண்டிருந்தார். பாபா, லோனவாலாவில் இருந்த வேளையில், குஜராத்தி கையெழுத்துப் பிரதியை படித்து, 1926ஆம் ஆண்டில் 'ஸஞ்ச் வர்தமன்' (SANJ VARDAMAN) குஜராத்தி செய்தித்தாளில் வெளிவந்த சரித்திரத்தின் சில பத்திகளை விலக்க விரும்பி திருத்தங்கள் செய்தார். சில நாட்களுக்குப் பிறகு சாஞ்சி மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

1942, செப்டம்பர் 15 அன்று, மெஹர் பாபா, '**மெஹராபாத், நாசிக் போன்ற பிற இடங்களில் வாழும் அனைத்து மண்டலியையும், அந்த நாளிலிருந்து 1943 பிப்ரவரி 15 வரை, பத்து வயதுக்கு மேற்பட்ட எதிர் பாலினத்தைச் சேர்ந்த எந்தவொரு நபரையும், அவசர நிலைகள், தீ விபத்து போன்ற சூழ்நிலைகளைத் தவிர, வேறு எந்த சூழ்நிலையிலும் தொடக்கூடாது**' என்று உத்தரவிட்டார்.

சகோதரர்கள் ஜால்பாய், பெஹராம், ஆதி ஜூனியர் ஆகியோர் பூனாவிலிருந்து பாபாவைப் பார்க்க வந்து, அவர்களில் இருவர் அதே இரவில்

புறப்பட்டுச் சென்றனர்; பாபா, ஆதி ஜூனியர் இருவரையும் மறுநாள் காலை 9:00 மணிக்கு பூனாவில் தாயார் ஷிரீன்மாயைப் பார்க்க ராம்ஜூ அழைத்துச் சென்று, பிற்பகல் மூன்று மணிக்குத் திரும்பி வந்தார். செப்டம்பர் 24 அன்று, மெமோ லோனவாலா வந்து பெண் மண்டலியுடன் சில நாட்கள் தங்கியிருந்தார்.

பாபாவின் ஆரம்பகால மண்டலி உறுப்பினர்களில் ஒருவரான ராவ்ஸாஹேப் அஃப்ஸேரி (RAOSAHEB AFSERI) 1942 ஜனவரியில் மும்பையிலிருந்து லோனவாலாவிற்குப் குடிபெயர்ந்தார். பாபா மற்றும் குழுவிற்கான உணவை அவர்கள் தங்கியிருந்த காலத்தில் ஏற்பாடு செய்வதன் மூலம் பாபாவிற்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு மறுபடியும் அவருக்கு வழங்கப்பட்டது. கடந்த பல ஆண்டுகளாக பிரிந்து இருந்த காலத்தில் அவர் சோகமாக உணர்ந்ததால், அவர் மீண்டும் பாபாவின் அருகாமையில் இருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு, மண்டலி உணவை தயார் செய்யத் தொடங்கினர்.

லோனவாலாவில் கிருஷ்ணா, வெங்கோபா ராவ் இருவருக்கும் இரவு கண்காணிப்பாளர் கடமை - கிருஷ்ணா, பாபாவின் அறைக்கு வெளியேயும் உள்ளேயும், வெங்கோபா ராவ், பெண்கள் வளாகத்திலும் கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. வெங்கோபா சில நேரங்களில் பணிபுரியும்போது மயக்கமடைந்ததைக் கண்டு, பாபா பலமுறை எச்சரித்து வந்தார். ஒரு நாள் இரவில் பாபா, கிருஷ்ணாவை அழைத்து, **"வெங்கோபா விழித்திருக்கிறாரா அல்லது தூங்குகிறாரா என்று பாருங்கள்"** என சைகையால் தெரிவித்ததும், கிருஷ்ணா வெளியே சென்று பார்த்துத் திகிலடைந்தார். வெங்கோபா தூங்கிக்கொண்டிருந்தார், ஒரு விஷ பாம்பு அவரைத் தாக்க அருகில் தயாராக இருந்தது.

கிருஷ்ணா ஒரு கழியைக் கையில் எடுத்து பாம்பைத் தாக்கினார். திடீரென விழித்த வெங்கோபா எழுந்து நடந்ததைப் பார்த்தார். கிருஷ்ணா பாம்பைத் தாக்கிய வேளையில், பாபாவின் கைதட்டல் ஓசைக் கேட்டது. பாம்பை மேலும் அடித்து கொல்லுமாறு வெங்கோபாவிடம் கூறி, கிருஷ்ணா பாபாவிடம் சென்றார். பாபா, "என்ன சத்தம்?" என்று கேட்க, கிருஷ்ணா பாம்பைப் பற்றி பாபாவிடம் தெரிவித்ததும், வெங்கோபா அதைக் கொன்றுவிட்டாரா என்பதை உறுதிப்படுத்த பாபா அவரைத் திருப்பி அனுப்பி வைத்தார்.

வெங்கோபா பாம்பைக் கொன்றுவிட்டார் என்று பாபாவிடம் கூறியதும், அவர் வெங்கோபாவை அழைத்து, **"நீங்கள் இதுபோல மறுபடியும் தூங்கினால், உங்களைப் பாம்பு கடிக்கும்! அப்போது நான் உங்களைக் காப்பாற்ற மாட்டேன்!"** என்றார்.

ஓர் இரவு, கிருஷ்ணா பாபாவின் அறைக்குள் இருந்த வேளையில், 11:30 மணிக்கு பாபா அவரை வெளியே அமர்ந்து, ஒவ்வோர் அரை மணி நேரம் சுற்றி வந்து கண்காணிக்கும்படிக் கட்டளையிட்டார். தனது இரண்டாவது

சுற்றில், கிருஷ்ணா ஒரு பெரிய நாகப்பாம்பைப் பார்த்து, அதைக் கொன்றபோது, அவர் சிறிது சத்தம் எழுப்பவே, பாபா கைகளைத் தட்டி அழைத்தார். கிருஷ்ணா பாம்பை உள்ளே எடுத்து வந்ததைப் பார்த்து, பாபா அவரைப் பாராட்டினார், "**நீங்கள் நல்ல காரியம் செய்தீர்கள். பாம்பு இப்போது மூன்று பிறவிகளைக் கடந்து செல்லும்.**"

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா கிருஷ்ணாவை தனது அறைக்குள் அழைத்தார். "**ஏதாவது பேசுங்கள்**" என்று அவர் சைகையால் தெரிவித்தார். அதிர்ச்சியடைந்த கிருஷ்ணாவிற்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அப்போது பாபா அவரிடம், "**நான் யார்?**" என்று வினவினார்.

"மெஹர் பாபா."

"**இல்லை, அதற்கு முன்னதாக.**"

"எனக்குத் தெரியாது," என்றார் கிருஷ்ணா.

பாபா எழுத்துப்பலகையில் '**மே-ர்-வா-ன்**' என்று உச்சரித்தார். "**நான் மேர்வானாக இருந்தேன். அதன் பிறகு நான் சத்குரு மெஹர் பாபா ஆனேன். பின்னர், அவதார் மெஹர் பாபா**" என்றார்.

அப்போது பாபா, "**இரண்டு மெஹர் பாபாக்கள் உள்ளனர்**" என எடுத்துரைத்தார்.

அவர் கூறியதன் அர்த்தம் கிருஷ்ணாவிற்குப் புரியவில்லை. "அது எப்படி சாத்தியம்? நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். இரண்டு மெஹர் பாபாக்கள் எங்கே?" என்று கேட்டார்.

"**இல்லை, இருவர் உள்ளனர்,**" என்று பாபா வலியுறுத்தினார்.

"நான் வேறொருவரை எங்கும் பார்த்ததில்லை."

பாபா அவரை அருகிலிருந்த வெண்மை பூசப்பட்ட சுவரைப் பார்க்குமாறு கூறி, "**சுவற்றை உற்று நோக்கி, நீங்கள் அதில் பார்ப்பதை எனக்குச் சொல்லுங்கள்**" என்றார்.

கிருஷ்ணா அதைப் பார்த்து, "ஒன்றுமில்லை, பாபா" என்று பதிலளித்தார்.

"**மனம் திறந்து பாருங்கள்!**"

"இது ஒரு சுவர், பாபா."

பாபா, உடனே எழுந்து அருகில் வந்து, கிருஷ்ணாவின் தலை முடியைக் கொத்தாகப் பிடித்து முறுக்கி, "**இப்போது பாருங்கள்!**" என்றதும் சுவரில், 'மெஹர் பாபா'வின் தத்ரூபமான பிரதிபிம்பம்' ஒன்றை, கிருஷ்ணா காண முடிந்தது. அந்த உருவம் சில வினாடிகள் மட்டுமே நீடித்தது. "**நீங்கள் அதைப் பார்த்தீர்களா?**" என்று பாபா கேட்டார்.

"ஆம், பாபா."

அப்போது பாபா விளக்கினார், "**இரண்டு மெஹர் பாபாக்கள் உள்ளனர். நான் பௌதீக உடல் வடிவத்தை எடுக்கும்போது, அது எனது பிரதிபிம்பமாக, பூமியில் வருகிறது. அவரே அவதார புருஷர். நான் வரவில்லை. நான் கடவுளுக்கு 'அப்பாற்பட்ட' நிலையில் இருக்கிறேன்.**

**“நான் கிருஷ்ணராக வந்தபோது, அது உண்மையில் எனது பிரதிபலிப்பாக இருந்தது. நான் அப்படி இல்லை. நான் கடவுளுக்கு ‘அப்பாற்பட்ட’ நிலையில் இருக்கிறேன்”** என்று அவர் மீண்டும் கூறினார்.

கிருஷ்ணா பாபாவிடம் அடிக்கடி அவரை ஆச்சரியமடைய செய்த ஒன்றைக் கேட்டார்: “பாபா, முன்பு நீங்கள் இந்துக்களுக்காக ராம் மற்றும் கிருஷ்ணராக அவதரித்தீர்கள், தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கு இயேசு கிறிஸ்துவாகவும், அதற்குப் பிறகு முஹமதாகவும் வருகை தந்தீர்கள். இப்போது நீங்கள் ஒரு ஸொராஸ்ட்ரியராக வந்துள்ளீர்கள். நீங்கள் பார்சிகளுக்காக மட்டும் வந்துள்ளீர்களா?”

**“இல்லை. இப்போது நான் அனைவருக்காகவும் வந்திருக்கிறேன்”** என்று பாபா பதிலளித்தார். **“இந்தக் காலகட்டத்தில் நான் அனைவருக்கும் ஒரே ஏக இறைவனாக, ஒரே ஒரு போதனை மட்டுமே வழங்குகிறேன். என்ன போதனை அது? என்னை நேசியுங்கள்; பிரார்த்தனை வேண்டாம், தியானம் வேண்டாம், என்னை நேசிக்க மட்டும் செய்யுங்கள்.”**

“ஆனால் உங்களை நினைவில் கொள்வதற்கு எங்களிடம் ஏதாவது இருக்க வேண்டுமே.”

**“எனது பௌதீக உடல்; நீங்கள் என் உடலை வைத்துள்ளீர்கள்.”**

“அதற்குப் பிறகு? நீங்கள் உங்கள் பௌதீக உடலைக் கைவிட்ட பிறகு?”

**“அதனால்தான் ‘என்னை நேசியுங்கள்’ என்று மட்டுமே கூறுகிறேன். அதுவே பிரார்த்தனை. ஒவ்வொன்றும், மேலிருந்து கீழ் வரை, அனைத்தும் அந்தப் பிரார்த்தனையில் அடங்கி உள்ளது. என்னை மட்டும் நேசிக்கும் இந்தப் பிரார்த்தனை ஒன்றே உங்களுக்குப் போதுமானது.”**

“நீங்கள் எந்த மதத்திற்காகவும் வந்துள்ளீர்களா?”

**“எந்த மதமும் இல்லை. அவதார புருஷர் பிறவி எடுக்கும்போது அது சுவரில் பிரதிபலிப்பதைப் போன்றது. அவர் உடலைக் கைவிடும்போது, பிரதிபிம்பம் மறைந்துவிடும், ஆனால் சுவர் (கடவுள்) அப்படியே இருக்கும். இது என்னைப் போலவே நித்தியமானது, நிரந்தரமானது.”**

1942 **செப்டம்பர்** 19 அன்று பாபா அவருடைய ‘பணி’யைப் பற்றி விளக்கினார்:

**உண்மை(ப்பொருள்) ‘உளதாயிருப்பது’; உண்மையற்ற தன்மை ‘ஒன்றுமில்லாதது’! உண்மையற்ற தன்மை, அல்லது ‘ஒன்றுமில்லாதது’ என்பது வெறுமையான காற்றைப் போன்றது. எனது பணியும் அப்படித்தான் காற்றில் செயல்படுவது, அதனால்தான், இது உங்களுக்கு நிச்சயமற்றதாகத் தோன்றுகிறது. நான் அடிக்கடி மாற்றங்களைச் செய்கிறேன் - உதாரணமாக, இது எனது கடைசி உபவாசம், இது எனது கடைசி ஏகாந்தவாசம், இது எனது கடைசி மஸ்த் பயணம் என்று பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லி இருக்கிறேன், இருந்தும் மாற்றங்களைச் செய்திருக்கிறேன்!**

**இன்னும், இந்தக் 'கடைசி'கள் அனைத்தும் எந்தத் தெளிவான முடிவும் இல்லாமல் தொடர்கின்றன. குறிப்பாக 'மஸ்த் பணியில்' நானே எல்லையற்ற துன்பத்தை அனுபவிக்கிறேன், துன்புறுத்தப்படுகிறேன், தொந்தரவுகளை சந்திக்கிறேன்; ஆனால் நீங்கள் நினைப்பது போலல்லாமல், நீங்கள் அறிந்ததை விட நான் அந்தப் பணியை மிகவும் அதிகமாக விரும்புகிறேன்!**

**எனது பணி திடமாகத் தீர்மானிக்கப்படாமல், தெளிவற்றதாகவும் காலவரையறையற்றதாகவும் இருப்பதால், இது உண்மையான பணி. இத்தகைய மிகப்பெரிய நிச்சயமற்ற நிலையில்தான், உண்மையான பணி செய்யப்படுகிறது.**

கடவுளைப் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:

**'கடவுள் உளதாயிருக்கிறார்' (GOD IS) என்று கூறுவது முற்றிலும் தவறானது. யதார்த்தமான 'இருப்பு நிலை' (IS) என்று சொல்வது மட்டுமே உண்மை. 'கடவுள் உளதாயிருக்கிறார்' என்று சொல்வதன் மூலம், இந்த எல்லையில்லா நிகழ்வில் அவர் மட்டுப்படுத்தப்படுகிறார். 'உளதாயிருக்கிறார்' என்ற வார்த்தையை கடவுளுடன் இணைப்பது வரையறுக்கப்பட்டதாகிறது. எனவே 'இருப்பு நிலை' மட்டுமே உண்மையானது; ஆனால் இந்த உண்மைப்பொருளை விவரிக்கும் பொருட்டு, அவர் 'கடவுள்' என்று அழைக்கப்படுகிறார்.**

மெஹர் பாபா, அவரது ஆன்மீகப் பணிக்காக, பதினைந்து நாட்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ள விரும்பினார்; 'ப்ராஸ்பெக்ட்' (PROSPECT) விடுதியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் அமைந்த 'க்ளென் வியூ' (GLEN VIEW) என்றழைக்கப்பட்ட பங்களா ஒன்று வாடகைக்கு எடுக்கப்பட்டது. 1942 அக்டோபர் 5 அன்று காத்கோடத்தில் அவருடன் இருந்த நான்கு மண்டலி - காக்கா, பைதூல், குஸ்தாஜி, ஆதி சீனியர் ஆகியோருடன் அங்குச் சென்றார். இதர மண்டலி - எரச், கிருஷ்ணா, மாஸாஜி, நீலு, வெங்கோபா ராவ் மற்றும் விஷ்ணு - தங்கள் விடுதிகளில் தங்கினர்.

பாபா அன்று, தண்ணீர் மற்றும் பால் இல்லாத தேநீர் மட்டும் அருந்தி உபவாசத்தைத் தொடங்கினார். 6ஆம் தேதி முதல், பால் கலந்த தேநீர், பருப்பு ஆகியவற்றை ஒரு நாளைக்கு இரண்டு முறை உட்கொண்டார். 9ஆம் தேதி, பாபாவின் அறிவுறுத்தலின் படி, சிது, முஹமது மஸ்தை மெஹராபாத்திலிருந்து லோனவாலாவிற்கு அழைத்து வந்தார். அது போல பாபாவின் விருப்பத்திற்கிணங்க உதர்மன் மஸ்தானையும் அழைத்து வர பைதூல், முந்தைய நாள், காத்கோடத்திற்குச் சென்று, அக்டோபர் 12 அன்று இருவரும் லோனவாலா வந்தனர். பாபா இந்த இரண்டு மஸ்துகளுடன் அவரது பணியைத் தொடங்கிய நாளிலிருந்து வேறு எவரையும் சந்திக்கவில்லை.

ஏகாந்தவாசத்தின் போது பாபா கடைப்பிடித்த கால அட்டவணை பின்வருமாறு:

காலை 6:00 மணி: பாபா அவரது அறையிலிருந்து வெளியே வருகை.

7:00 மணி - நீராடல்.

8:00 மணி - தேநீர்.

காலை 8:30 - 11:30 வரை - ஏகாந்தவாசத்தில் முஹமது மற்றும் உதர்மன் மஸ்தான் ஆகிய இரண்டு மஸ்துகளுடன் பணிபுரிதல். மதியம் 12:00 முதல் பிற்பகல் 4:00 மணி வரை - ஓய்வு.

மாலை 4:00 முதல் 5:00 வரை - மீண்டும் இரண்டு மஸ்துகளுடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிதல். மாலை 5:00. - விஷ்ணுவுடன் சந்திப்பு.

விஷ்ணு தினமும் வந்து பாபாவை, சில நிமிடங்கள் சந்தித்து 'க்ளென் வியூ'வில் தங்கியிருப்பவர்களின் கணக்கு வழக்குகள் அல்லது தேவைகளைப் பற்றி விவாதித்தார். பாபா அழைத்தபோது எரச்சும் வருகை தந்தார்.

1942, அக்டோபர் 8ஆம் நாள், பாபா பின்வரும் சுற்றறிக்கையை எழுத்துப்பலகை மூலமாக வழங்கி, அதை நெருங்கிய அன்பர்களுக்கு அனுப்ப உத்தரவிட்டார்:

**எனது மண்டலியில் ஒவ்வொரு நெருங்கிய உறுப்பினரும், 1942 நவம்பர் 15 முதல் டிசம்பர் 15 வரை, எந்த நேரத்திலும் என்னுடைய அழைப்பை எதிர்நோக்கி இருக்க வேண்டும்; என்னுடன் இணையவும், எனது சகவாசத்தில் இருக்கவும், எனது உலகளாவிய பணிகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன், ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நான் வழங்கும் சிறப்பு மற்றும் கூட்டாக அனைவருக்கும் வழங்கும் பொது அறிவுறுத்தல்களின்படி உலகை ஆன்மீகமயமாக்குவதற்கான எனது எதிர்வரும் பணியில் என்னுடன் பங்கெடுத்து உதவவேண்டும்.**

சுற்றறிக்கை, தட்டச்சு செய்யப்பட்டு மறுநாள் அனுப்பப்பட்டது. நான்கு நாட்களுக்குப் பின்னர், 12ஆம் தேதி, பாபா இதேபோன்ற இன்னொரு செய்தியை வழங்கினார், **அதில் 'அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடன் இணையத் தயாராக இருப்பவர்கள் சுற்றறிக்கையில் கையெழுத்திட்டு அதை அவரிடம் திருப்பித் தர வேண்டும்**' என்றும் கூறினார்.

11ஆம் தேதி முதல் விஷ்ணு, எரச் இருவருடன் நீலுவும் வர அனுமதி வழங்கப்பட்டது, அன்றைய தினம் மாஸாஜியும் பாபாவைப் பிற்பகல் 3:00 மணிக்கு சிறிது நேரம் சந்தித்தார். பாபா மறுநாள், தண்ணீர் மற்றும் பால் இல்லாத தேநீர் அருந்தி உபவாசம் கடைப்பிடித்தார், பின்பு நள்ளிரவில் சிறிது சாதமும் பருப்பும் உண்டு அவரது உபவாசத்தை நிறைவு செய்தார்.

பாபா, வெளியே இருப்பவர் எவரையும் சந்திக்கவில்லை என்றாலும், அக்டோபர் 13 அன்று, சில பணிகளைப் பற்றி விவாதிக்க நாசிக் நகரிலிருந்து ராம்ஜூவை லோனவாலாவிற்கு அழைத்தார். மூன்று நாட்களுக்குப் பின்னர், உதர்மன் மஸ்தான், முஹமது மஸ்த் இருவரையும் சிது மீண்டும்

மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர்கள் குடும்ப குவாட்டர்ஸில் தங்க வைக்கப்பட்டனர்.

மேலும் 16ஆம் தேதி, அர்னவாஸ், நர்கிஸ் இருவருடன் சாஞ்சி லோனவாலாவிற்கு அழைக்கப்பட்டார்; சாஞ்சி மறுநாளும், அர்னவாஸ், நர்கிஸ் சகோதரிகள் நான்கு நாட்களுக்குப் பிறகும் மும்பைக்குத் திரும்பிச் சென்றனர். கோஹெர் அக்டோபர் மாதத்தில் மருத்துவ கல்லூரியிலிருந்து தீபாவளி விடுமுறை நாட்களில் சில நாட்களுக்காக வந்திருந்தார்.

அர்னவாஸின் குடும்பத்தினர் அவர்களின் உறவினர் நரிமனுடன், அர்னவாஸின் திருமணம் குறித்து பாபாவுடன் ஆலோசனை செய்தபோது, பாபா அதற்கு ஒப்புதல் அளித்தார். திருமண நிச்சயதார்த்தத்தை இரண்டு மாதங்களுக்குப் பிறகு முறையாக நடத்துமாறு தெரிவித்தார்.

இதற்கிடையில், மெஹர் பாபாவைத் தீவிரமாக பின்பற்றுபவரும், கோலாப்பூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருமான ஜி.ஒய். தீக்ஷித், ஒரு புதிய 'மான்டேஸொரி' (MONTESSORI) பள்ளிக்கூடத்தின் திறப்பு விழாவில் பாபாவைப் பங்கேற்க அழைப்பு விடுத்தார். பாபா, ஏகாந்தவாசத்தில் இருந்ததால், 1942 அக்டோபர் 18 அன்று கீழ்வரும் செய்தியை வழங்க ஆதி சீனியரை அனுப்பி வைத்தார்:

**ஒருவர் தன்னலமற்ற சேவையை வழங்குவதானால், ஒரு 'மான்டேஸொரி' பள்ளிக்கூடம் எடுக்கும் சேவையின் வடிவம், நடைமுறைக்குரிய மதிப்பைக் கொண்டுள்ளதாக இருக்கும். இது ஒரு முக்கியமான பணியாகும், ஏனெனில் இது குழந்தையின் இயல்பு தன்மையை அதன் வளர்ச்சியின் பிரதான கட்டத்தில் கையாளுகிறது. குழந்தைகளின் கவலையற்ற இதயங்களும், அமைதியற்ற குறும்புத்தனங்களும் தெய்வீக குணங்களைப் பிரதிபலிப்பதோடு, மாசற்ற தன்மையின் ஆனந்தத்தையும் வெளிப்படுத்துகின்றன. குழந்தையுடன் ஒன்றான தெய்வத்தன்மை மூலம் வெளிப்படுத்தப்படும் இந்த 'தெய்வீகத்தை' மனிதனில் நீங்கள் எவ்வளவு தூரம் எடுத்துச்செல்ல முடியும் என்பதைப் பார்ப்பதே உங்கள் பணி. சிறிதளவு பொறுமை, கொஞ்சம் கருணை, எல்லையற்ற புரிதல், இனிமையான அன்பு ஆகியவை மட்டுமே மனித சேவையின் பயனை அதன் தூய்மையான வடிவில் பெற்றதற்காக ஆசிரியர்கள் திருப்பிச் செலுத்த முடியும்.**

**இந்தப் பள்ளிக்கூடம் திறக்கப்படுவதற்கு உண்மையாகப் பொறுப்பேற்ற அனைவருக்கும், அதில் கலந்து கொள்ளும் குழந்தைகளுக்கும் என்னுடைய ஆசீர்வாதங்கள்.**

'க்ளென் வியூ'வில் பாபா ஏகாந்தவாசத்தில் இருந்தபோது, போரின் முன்னேற்றங்கள் குறித்த நிகழ்வுகளில் அவர் குறிப்பாக கவனம் செலுத்தி வந்தார்.



ஒவ்வொரு காலையிலும், மெஹர் பாபா, அவரது ஆன்மீகப் பணியின் விளைவாக, பொருள் சார்ந்த மாற்றங்களை உறுதிப்படுத்துவது போல, செய்தித்தாள்களை ஆவலுடன் நோட்டமிட்டார். இந்த ஏகாந்தவாசம் நிகழும் வேளையில் மற்றும் அது நிறைவடைந்த அடுத்த கணமே, அனைத்து போர் முனைகளிலும் முன்னேறி வந்த ஜெர்மன் போர்ப்படைகள், இப்போது தொடங்கிய நேச நாட்டு தாக்குதலின் கீழ் பின்வாங்கத் தொடங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

1942 அக்டோபர் 20ஆம் நாள், ஒன்பது நாள் மஸ்த் பயணத்துடன் ஏகாந்தவாசம் மேற்கொள்ளத் திட்டமிட்டு வெளியே புறப்பட்டுச் சென்றார். அவருடன் தங்கியிருந்த ஆண் மண்டலி அனைவரும் தத்தமது இல்லங்களுக்குச் சென்றனர்; இதனால் 'க்ளென் வியூ' காலியாக இருந்தது.

மெஹர் பாபா அன்று காக்கா, பைதூல் இருவருடன் ரயிலில் தென்னிந்தியாவிற்குப் புறப்பட்டார். நள்ளிரவில் இரண்டு மணி நேரம் ஜோலார்பேட்டில் (JOLARPET) டாக்டர் டானை சந்திக்க அவர் ஒரு மாற்றுப்பாதையில் பயணம் செய்தார். அவ்வேளையில் பாபா போரைப் பற்றி இவ்வாறு கூறினார், "**நான் (அவதார புருஷர்) இந்தியாவில் இருப்பதால், போரின் உச்சக்கட்டம் இங்கே இருக்கும்**."

டான் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்தார்: "பாபா, அருமையான மனநிலையில் இருந்தார், நாங்கள் நிலவொளியில் ரயில் நிலையத்தைச் சுற்றி ஒன்றாக உலா வந்தோம்."

அக்டோபர் 23 அன்று, வட ஆஃபிரிக்காவின் 'எல் அலமெயினில்' (EL-ALAMEIN) நேச நாடுகளின் வெற்றியின் தொடக்க நாளான அன்று, பாபா மீண்டும் நாகப்பட்டினத்தில் வாழ்ந்த சிறப்புமிக்க சட்டி பாபாவைத் தொடர்பு கொண்டார். 29ஆம் தேதி லோனவாலாவிற்குத் திரும்புவதற்கு முன்னதாக, மீரஜ் (MIRAJ), பண்டர்பூர் (PANDARPUR), ஹூப்ளி (HUBLI) ஆகிய இடங்களில் சில மஸ்துகளை மறுபடியும் தொடர்புகொள்ள பாபா அவரது பயணத்தைத் தொடர்ந்தார்.

திரும்பி வந்து, கண்டாலா (KHANDALA) சாலையில் அமைந்த 'கிஸ்மத் விடுதி'யில் (KISMAT LODGE) தங்கினார். டாக்டர் கனி கடந்த நான்கு நாட்களாக லோனவாலாவில் இருந்தவர், பாபா திரும்பி வந்தபோது அவரை சந்தித்தார். ராம்ஜூவும் 29ஆம் நாள் திரும்பி வந்து, அவருடைய மகனுக்கும் டாக்டர் கனியின் மகளுக்கும் இடையேயான வரவிருக்கும் குடும்ப திருமணத்தைப் பற்றி, பாபாவுடன் விவாதித்தார். இருவரும் மறுநாள் திரும்பிச் சென்றனர்.

அந்த நாளின் பிற்பகுதியில், டாக்டர் நீலு, இடுப்பு சதையைக் குறைப்பதற்கான சில உடற் பயிற்சிகளை பாபா முன்னிலையில் நகைச்சுவையான முறையில் செய்து - பாபாவிடமும் அதைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

நான்கு ஆண்டுகள் வெளியீட்டிற்குப் பிறகு, 'மெஹர் பாபா ஜர்னல்' (MEHER BABA JOURNAL) 1942, அக்டோபர் பதிவிலிருந்து வெளியிடப்படவில்லை. கடந்த ஆண்டு எலிஸபெத், நோரினா இருவரும் அமெரிக்காவிற்குச் சென்ற பின்பு, டாக்டர் கனி, ராம்ஜூ, ஆதி சீனியர் ஆகியோர் இந்தப் பத்திரிகையை, முதலில் பெங்களூரிலும், 1942 மே மாதம் முதல் அஹமதுநகரிலும் நடத்தி வந்தனர். போர் காலத்தில் காகித கட்டுப்பாடுகள் மற்றும் வெளிநாடுகளுக்கு அஞ்சல் அனுப்புவதில் தடைகள் விதிக்கப்பட்டதன் காரணமாக, முதலில் இது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது; ஆனால் வெளியீடு மீண்டும் தொடங்கப்படவில்லை.

பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக, அவர் பெண் மண்டலியைப் பார்க்கவில்லை. ஆனால் நாகப்பட்டினத்தில் சட்டி பாபாவை சந்தித்து திரும்பிய பின்னர், அவர் மெஹரா, மணி இருவரையும் அழைக்கத் தொடங்கினார். இதர பெண்மணிகள் இந்தக் காலகட்டத்தில் அவரை மிகவும் அரிதாகவே பார்த்தனர்.

ஒருமுறை, அவர் மெஹராவுடன் இருந்தபோது, பாபா, கெய்மாயை அழைத்து, மெஹராவின் முன்னிலையில் அவரைக் கண்டித்தார்: "**நீங்கள் என்ன வகையான சப்பாத்திகளைத் தயார் செய்கிறீர்கள்? உங்கள் சப்பாத்திகள் கோதுமையிலிருந்தா அல்லது தோலிலிருந்து தயாரிக்கப்படுகின்றனவா?**" என வினவியதும், கெய்மாய் அமைதியாக இருந்தார்; பாபா, மெஹராவிடம் சுவைக்க ஒரு சப்பாத்தியைக் கொடுத்ததும், அதை ருசித்து, மெஹரா, "இந்தச் சப்பாத்தி மிகவும் நன்றாக உள்ளது, பாபா" என்று குறிப்பிட்டார்.

ஆனால் பாபா, கெய்மாய்க்கு எதிராக தனது வாக்குவாதத்தைத் தொடர்ந்து, பின்னர் அவருக்கு விளக்கினார், "**நான் கூறியதை நினைத்துக் கவலைப்படாதீர்கள். இது உங்களை என்னிடம் அழைப்பதற்காக நான் செய்த வெறும் பாசாங்குத்தனம். நான் வேறு எவரையும் பார்க்காததால், உங்களைப் பார்க்க எனக்கு ஒரு சாக்குபோக்கு தேவைப்பட்டது, அவ்வளவுதான்.**"

சப்பாத்தி செய்வதில் கெய்மாய்க்கு, ஸொல்டூன், நர்கிஸ் (கொத்வால்), ஸில்லா ஆகியோரும், அதே நேரத்தில் கேட்டி, மனு இருவரும் உணவு தயார் செய்வதிலும் உதவியாக இருந்தனர். மெஹராவும் கோர்ஷெத்தும் பாபாவின் உணவைத் தயார் செய்தனர்; கிட்டி வீட்டு வேலைகளை மேற்பார்வையிடுவதும், மணி தட்டச்சில் பணிபுரிவதும், இப்படி, பாபா அனைவரையும் ஒவ்வொரு கடமையில் ஈடுபடுத்தினார்.

கெய்மாய், சப்பாத்திகளைச் (எண்ணெய் இல்லாமல்) சுட்டுத் தயாரிக்கத் தொடங்கினார்; இதை அனைவரும் விரும்பி உண்டாலும், இதற்கு அதிக அளவில் உழைப்பு தேவைப்பட்டதால், நர்கிஸ் அதில் விருப்பம் காட்டாமல் கெய்மாயிடம், "இது என்ன ஹோட்டலா? அனைவரும் ஆர்வத்துடன் சாப்பிடுகிறார்கள், ஆனால் சமையலறையில் நாங்கள் இத்தனைப்

புகைமூட்டத்திற்கு மத்தியில் மூச்சுத் திணறி சிரமப்படுகிறோம்" என்று புகார் கூறினார்.

வாக்குவாதத்தின் போது பாபா சமையலறை பக்கம் வர நேர்ந்தது; நர்கிஸைத் திருத்தும் எண்ணத்தில் பாபா, "**என்னை ஒரு பணிப்பெண்ணாக மாற்றுங்கள் என்ற மீராபாயின் பாடலை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? அத்துடன் நான் இதையும் சேர்த்துச் சொல்கிறேன்: மாவை நன்றாக அரைத்து, மிளகாயைத் தூள் தூளாக்கி, சூடான சப்பாத்திகளைச் சுட்டெடுங்கள்!**" என எடுத்துரைத்தார்.

"நான் ஒரு பணிப்பெண்ணாக இருக்க விரும்பவில்லை. நான் ஒரு குருவாக இருக்க விரும்புகிறேன். என்னை ஒரு குருநாதர் ஆக்குங்கள், இதனால் நான் ஒரு பெரிய காரில் சுற்றி வந்து வாழ்க்கையை அனுபவிக்க முடியும்!" நர்கிஸ் முறையிட்டார்.

பாபா சிரித்துக் கொண்டே, தலையை சுட்டிக்காட்டி, "**உங்கள் திருகு தளர்ந்துவிட்டது!**" என்றார்.

பல நாட்களாக, பெண்மணிகளின் பாத அணிகளில் சில காணாமல் போயின. 'திருடனை'க் கண்டுபிடிக்க பாபா ஒரு காவலாளியை நியமித்தபோது, அது ஒரு பெரிய அலைந்து திரியும் ஆண் நாய் எனக் கண்டறியப்பட்டது. அந்த நாய், தோல் நோயால் தாக்கப்பட்டு, உடல் இரத்தக் காயத்தால் நிரம்பியிருந்தது. மெஹரா அதைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். பாபா, நாயைக் கண்டுபிடிக்க எரச்சிடம் கூறியபோது அது அங்கிருந்து ஓடி மறைந்துவிட்டது. பெண்களைத் தனக்குள்ளே சபித்துக்கொண்டு, பல மணி நேரம் அங்கும் இங்கும் தேடி அலைந்து, இறுதியில் அந்தச் 'சொறி' நாயைப் பிடித்து பாபாவிடம் கொண்டு வந்தார்.

ஒவ்வொரு நாளும் சிகிச்சைக்காக நாயை கால்நடை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுமாறு கூறி, அதை கவனிக்கும் பொறுப்பு கிருஷ்ணாவிற்கு வழங்கப்பட்டது; பாபா அதற்கு 'ஸைஃபு' (SAIFU) என்று பெயரிட்டார். கிருஷ்ணா கந்தகம், வெற்றிலை, தயிர் ஆகியவற்றின் கலவையை அதன் உடலில் தடவினார். பாபா அதன் பராமரிப்பைத் தினமும் பார்வையிட்டார், மேலும், எரச் அதை சரியான நேரத்தில் மருத்துவரிடம் எடுத்துச் சென்றார்.

ஸைஃபுவின் துன்பம் அதைக் கடவுளின் காலடியில் கொண்டு வந்தது. இரண்டே மாதங்களில், சிவப்பு-பழுப்பு நிற நாய், புலியைப் போல நேர்த்தியாகவும் வன்மை மிகுந்ததாகவும் மாறியது. ஸைஃபு பின்பு குழுவுடன் மெஹராபாத்திற்கு அழைத்து வரப்பட்டு பாதிரியின் கண்காணிப்பில் வளர்ந்து வந்தது.

ரானோ மற்றும் அரன்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த பணிப்பெண்களில் ஒருவரான (மாருதி பாட்டீலின் மகள்) தாரா (TARA), டல்வி (DALVI)

இருவருக்கும், லோனவாலாவில் சமையல் பானைகளை சுத்தம் செய்யும் பணி வழங்கப்பட்டது. ரிஷிகேஷில் ரானோ, வீட்டிற்கு தண்ணீரை இறைத்து எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது, இப்படி அவரது கடினமான கை உழைப்பு தொடர்ந்து பாத்திரங்களை சுத்தம் செய்வதில் தொடர்ந்தது.

உள்ளூர் குழந்தைகள் அந்த வீட்டைக் கடந்து செல்லும்போது, ஒரு மேலைநாட்டு பெண்மணி இத்தகைய வீட்டு வேலைகளைச் செய்யும் பணிப்பெண் போல் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். ரானோ அந்த நேரத்தில் குறுகிய கூந்தலைக் கொண்டிருந்தார், ஆண் மனிதனைப் போலத் தோற்றமளித்தார்; எனவே, குழந்தைகள் ரானோவை 'ஸாஹேப்' (SAHEB) என்று அழைத்து, அவர்களிடையே கிசுகிசுத்துக் கொண்டனர், "அந்த ஸாஹேப் சமையல் பானைகளை சுத்தம் செய்வதைப் பாருங்கள். அவர் ஏன் ஊழியரை வேலைக்கு அமர்த்தக்கூடாது?" மெஹர் பாபாவுடன், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாரபட்சம் பாராமல் அனைவரும் ஒன்றெனக் கருதப்பட்டனர்; ஒரு நாள் முதலாளி, அடுத்த நாள் தொழிலாளியாக மாறுகிறார்.

1942, நவம்பர் 5ஆம் நாள், நரிமன் தாதாசாஞ்சி, தீனா தலாட்டி மேலும் சிலருடன், சாஞ்சி லோனவாலாவிற்குத் திரும்பி வந்தார். 'நரிமன் - அர்னவாஸ்' இருவரின் முன்மொழியப்பட்ட நிச்சயதார்த்தம் குறித்து பாபா, அவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசினார். 11ஆம் நாள் கராச்சியில் இருந்து பீலாமாய், அவரது மகன்கள் விட்டல் மற்றும் பெய்லியுடன் வருகை தந்தார். பீலாமாய் லோனவாலாவில் தங்கியிருக்க, இரண்டு மகன்களும் திரும்பிச் சென்றனர்.

ராம்ஜூவின் மகன் 'பகு' (BAGGU) மற்றும் டாக்டர் கனியின் மகள் 'பீபி' (BIBI) இவர்களின் திருமணத்தில் கலந்துகொள்ள நவம்பர் 11ஆம் நாள், மெஹர் பாபா சில மண்டலியுடன் நாசிக் நகருக்குச் சென்றார். பாபாவும் பெண்டுவும் ஸரோஷுடன் அவரது காரிலும், ஆதி சீனியர், எரச், ஆதி ஜூனியர், ஸவக் ஆகியோர் வேறு ஒரு காரையும் ஓட்டிச் சென்றனர். ராவ்ஸாஹேப், காக்கா பாரியா, சாஞ்சி ஆகியோரும் மும்பையிலிருந்து வந்திருந்தனர். அதே இரவில் பாபா லோனவாலாவிற்குத் திரும்பி வந்தார்.

பகுவின் பன்னிரண்டு வயது சகோதரர் அலி (ALI), மெஹர் பாபாவின் தெய்வீகத்தன்மை குறித்து சந்தேகம் கொண்டிருந்தார். திருமணத்தின் போது, அவர்களது மூத்த சகோதரர் தாது (DADU) ஒரு நிகழ்வை காணொளி படமாக்கும் வேளையில், பாபா, தலையைத் திருப்பி, கையை உயர்த்தினார். இதைப் பார்த்த அலி, "பாபா, நன்றாக நடிக்கிறார், இந்தக் காணொளியில் அவரது சித்திரம் சிறப்பாக வெளிவரும். அவர் உண்மையிலேயே கடவுளாக இருந்திருந்தால், அவர் அதுபோன்ற விஷயங்களைப் பற்றி கவலைப்பட்டிருக்க மாட்டார். முஹம்மது நபி ஒருபோதும் அவரது தோற்றத்தை சித்தரிக்க அனுமதித்ததில்லை." இத்தகைய எண்ணங்களால் பாபாவைப் பற்றிய சந்தேகம் அலிக்கு பல ஆண்டுகளாக இருந்திருக்க வேண்டும்.

நவம்பர் 19 காலையில் ஸரோஷ், லோனவாலாவில் பாபாவை சந்திக்க வந்து, அதே நாளில் திரும்பிச் சென்றார்.

கடந்த சில நாட்களாக, 1943, பிப்ரவரி மாதத்தில் மெஹராபாத்தில் வெகுஜன கூட்டத்தை நடத்துவதற்கான யோசனையைப் பற்றி மண்டலியுடன் பாபா விவாதித்து வந்தார். ஆனால் நவம்பர் 21 அன்று பாபா, புதிய யோசனை ஒன்றை முன்வைத்தார். மெஹராபாத்தில் பெரிய கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு பதிலாக, சிறிய சிறிய கூட்டங்கள் ஒரே நேரத்தில் ஏழு வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார். பாபா, அவரது செய்தியைப் பரப்புவதற்கான முக்கிய மையங்களாக, மும்பை, பூனா, நாக்பூர், ஹைதராபாத், அலஹாபாத், லாஹூர், ஷோலாபூர் போன்ற நகரங்களைத் தேர்வு செய்தார். இந்தக் கூட்டங்களுக்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக, பாபா அவரது நெருங்கிய ஆதரவாளர்களின் கூட்டத்தை டிசம்பர் 27 அன்று மெஹராபாத்தில் நடத்த முடிவு செய்தார். பின்னர் அவரது அன்பர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர்.

**"நாம் கடவுளுக்காக வாழ வேண்டும், கடவுளுக்காக சாக வேண்டும்"** என்ற தலைப்பில் 1942 டிசம்பர் 1 அன்று பாபா வழங்கிய செய்தி; அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது:

**இந்தப் போர் ஒரு தேவையான தீமை. இது கடவுளின் திட்டத்தில் ஓர் அங்கமாகத் திகழ்வது, இது மனிதகுலத்தை உயர்ந்த மதிப்புமிக்க நிலைக்கு விழிப்படையச் செய்யும். போரின் படிப்பினைகளால் மனிதகுலம் பயனடையத் தவறினால், அது வீணான பாதிப்பு என்பதையே குறிக்கும். இந்தப் போர், சாதாரண மனிதன் கூட ஒரு தன்னலமற்ற காரணத்திற்காக, தியாகத்தின் உச்சத்திற்கு உயர முடியும் என்ற பாடத்தைப் புகட்டுகிறது. பொருளுலகைச் சார்ந்த அனைத்தும் - செல்வம், உடைமைகள், அதிகாரம், புகழ், குடும்பம் மற்றும் பூமியில் வாழும் காலம் கூட - நிலையற்றது, நீண்ட கால மதிப்பற்றது என்பதையும் இது கற்பிக்கிறது. போர் நிகழ்வுகள் கொணரும் படிப்பினைகள் மூலம், மனிதனை வென்று உண்மைப்பொருளான இறைவனை அடைய வழி வகுக்கும்; உண்மையான, நீடித்த மதிப்புகளால் ஈர்க்கப்பட்ட ஒரு புது வாழ்வைத் தொடங்கத் தூண்டுதலாக இருக்கும்.**

**மக்கள் தங்கள் தாயகம் அல்லது அரசியல் சித்தாந்தத்திற்காக அளவிலா தியாகங்களைச் செய்வதோடு, சொல்லொணா துன்பங்களைத் தாங்கிக்கொள்கிறார்கள். ஆகவே, அவர்கள் உண்மைப்பொருளான கடவுளுக்காக அதே தியாகங்களையும் சகிப்புத்தன்மையையும் கொண்டிருக்கும் திறமை வாய்ந்தவர்கள். எல்லா மதங்களும் இறை வாழ்க்கைக்காக மனிதனை, சந்தேகத்திற்கு இடமின்றி உரிமை கோரியுள்ளன. மதங்களின் பெயரில் போராடுவது சுத்த முட்டாள்தனம். எல்லா உயிர்களும் ஒன்று, மற்றும் கடவுள் ஒன்றுதான் உண்மையானதும்,**

**முக்கியமானதுமான ஒரே உண்மை என்பதைப் பற்றிய புதிய முன்னோக்குப் பார்வையை மனிதன் கொண்டிருக்க வேண்டிய நேரம் இது.**

**கடவுளுக்காக வாழும் அளவிற்கு, அதுபோல், அவருக்காக சாகும் அளவிற்கு அவர் மதிப்பும், தகுதியும் மிக்கவர். இதர அனைத்தும் வீணாக, வெறுமையாக நாடும் மதிப்பற்ற மாயை ஆகும்.**

1942 டிசம்பர் 4ஆம் நாள், பாபா, மஸ்த் பயணமாக லோனவாலாவிலிருந்து ராய்பூருக்குப் புறப்பட்டு, ஒரு வாரத்திற்குப் பின்னர், 10ஆம் நாள் திரும்பி வந்தார்.

லோனவாலாவில் தங்கியிருந்த 'ப்ராஸ்பெக்ட் லாட்ஜில்' (PROSPECT LODGE) ஒரு பேய் தொந்தரவு செய்த அனுபவம் மெஹரா, மணி, கெய்மாய் அனைவருக்கும் இருந்தது. மெஹராவின் தூக்கத்தில் அவரது கை இழுக்கப்பட்டது; மணியின் உடல் முழுவதும் அதிர்ந்தது. "**இதை எண்ணி கவலைப்பட வேண்டாம்; நான் அதை கவனித்துக்கொள்வேன்**" என்று பாபா அவர்களுக்கு உறுதியளித்தார்.

அதற்குப் பிறகு, பேய் எவரையும் தொந்தரவு செய்யவில்லை. பாபா அந்த ஆவியை விடுவித்ததால் அது இன்னொரு பிறவியை எடுக்கும் வாய்ப்பைப் பெற்றது. சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு சலவைத் தொழிலாளி காம்பவுண்டின் கிணற்றில் தற்கொலை செய்து கொண்டதால், அவரது ஆவி அந்த இடத்தில் சுற்றிக் கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது. பாபாவின் கருணை அவரது பரிதாப நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவருடைய ஆத்மாவை விடுவித்தது. பாபா, பெண்மணிகளுக்கு இவ்வாறு விளக்கினார்: "**பேய்களுக்கு அஞ்ச வேண்டாம், அவை உண்மையில் எந்தத் தீங்கும் செய்யாது. நம்மை சூழ்ந்துள்ள வாயுமண்டலம் முழுவதும் மனப்பதிவுகள் நிறைந்து காணப்படும். சில நேரங்களில், நீங்கள் ஆவி இருப்பதாக உணர்வது உண்மையில் ஆவி அல்ல, ஆனால் அதைச் சுற்றியுள்ள இடத்தில் நிலைகொண்டிருக்கும் மனப்பதிவுகள். அதனால்தான் சலவைத் தொழிலாளி தற்கொலை செய்து கொண்ட கிணற்றின் அருகே செல்ல வேண்டாம் என்று நான் உங்களிடம் கூறினேன். அவருடைய அந்த மனப்பதிவுகள் அனைத்தும் அங்கே நிலைகொண்டிருக்கின்றன, ஆனால் நான் இப்போது அவருடைய ஆவியை விடுவித்ததால், எல்லாம் சரியாகிவிட்டது.**"

மெஹரு (MEHERU), நாகு (NAGGU), தெஹ்மி (TEHMI) மூவரும் டிசம்பர் 13ஆம் தேதி, ஆதி சீனியருடன் லோனவாலாவிற்கு வந்து, கிறிஸ்துமஸ் விடுமுறையை பாபாவுடன் கழித்தனர். அன்றிலிருந்து மெஹருவை பாபா அவருடன் இருக்க அனுமதித்தார், மேலும் அவர் பெண் மண்டலியின் நிரந்தர

உறுப்பினரானார். இவ்வாறு, அவருடைய வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறியது!

'அக்பர் பிரஸ்'ஸில் (AKBAR PRESS) வாழ்ந்த ஸவக் தமானியா (SAVAK DAMANIA - 30 வயது) அவரது குழந்தை பருவத்திலிருந்தே, பாபாவின் தொடர்பில் வந்தார்; மேலும் எரச்சின் சகோதரி மெஹருவை திருமணம் செய்து கொண்டார். ஸவக்கின் நண்பர் ஹோமி பாவ்ரி (HOMI PAVRI), மெஹர் பாபாவை சந்திக்க விரும்பியதால், ஸவக் அப்போது லோனவாலாவில் இருந்த பாபாவிற்கு கடிதம் எழுதினார், பாபாவும் அவர்களை வர அனுமதித்தார்.

இருவரும் லோனவாலாவிற்கு வந்த வேளையில், ஹோமியை வாயிலுக்கு அருகில் நிறுத்தி, ஸவக் தமானியாவை மட்டும் உள்ளே வர அனுமதிக்கக் கூறி, பாபா, விஷ்ணுவை அனுப்பி வைத்தார். ஹோமி, பாபாவுக்காக மலர் மாலைகள் மற்றும் இனிப்புகளைக் கொண்டு வந்திருந்தார்; அவர் பாபாவை, தூரத்திலிருந்து பார்த்துவிட்டுப் புறப்படுமாறு விஷ்ணு மூலமாகக் கூறி அனுப்பினார். ஹோமி இதை ஏற்றுக் கொண்டார்; அவர் வாசலிலிருந்து பாபாவைப் பார்த்தார், விஷ்ணுவிடம் மாலைகள் மற்றும் இனிப்புகளைக் வழங்கிவிட்டுப் புறப்பட ஆயத்தமானார். ஸவக் உடனே பாபாவின் பக்கம் திரும்பி, "நான் அவரை ரயில் நிலையம் வரைச் சென்று வழியனுப்பி வரலாமா?" என்று கேட்டார்.

**"அவர் என்ன உங்கள் குழந்தையா?"** பாபா சட்டென்று கேட்டார். **"அவர் தனியாகச் செல்ல முடியாதா? நான் எவரையும் அனுமதிக்காத இந்த நேரத்தில், நீங்கள் என்னைப் பார்க்க வந்து நான்கு நாட்கள் இங்கு தங்க இருக்கிறீர்கள்! - ஆனால் நீங்கள் போக விரும்பினால், போகலாம்!"** என்றார்.

"நான் தங்க விரும்புகிறேன், ஆனால் என் நண்பர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?" ஸவக் கேட்டார்.

**"அதாவது, நீங்கள் முதலில் உங்கள் நண்பரைப் பற்றி நினைக்கிறீர்கள், என்னைப் பற்றி அல்ல! நீங்கள் இங்கே இருக்க வேண்டும் என்று நான் விரும்பும் போது, நீங்கள் அங்குச் சென்றால் - நான் உங்களைப் பற்றி என்ன நினைப்பேன்?"**

"என்னை மன்னியுங்கள், பாபா; நீங்கள் சொல்வது சரிதான்."

பின்பு பாபா அவரிடம், **"ஒன்றே ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்: எனது விருப்பத்தை மட்டும் சிந்தனையில் கொள்ளுங்கள், பிறரை மகிழ்விப்பதற்கான எண்ணங்கள் வேண்டாம். நீங்கள் எனது விருப்பத்திற்கு மட்டும் இணங்கி இருந்தால், உலகம் முழுவதும் உங்களுக்கு எதிராகச் சென்றாலும், அதைப் பொருட்படுத்தாமல் இருக்க நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.**

**"முழு உலகமும் என்னுள் உள்ளது. நீங்கள் எனது விருப்பத்தை மட்டுமே நினைவில் கொண்டால் அனைத்தும் சரியாகிவிடும். உங்கள் நண்பர் எதைப் பெற விரும்பினாரோ, அதை அவர், சிறிது நேரம்**

**தூரத்திலிருந்து பார்த்ததன் மூலமாகப் பெற்றுள்ளார். இப்போது அவர் சிந்திக்க எதுவும் இல்லை”** என்றார்.

நரிமன், அர்னவாஸ் தாதாஞ்சி இருவருக்கும் முறைப்படி நிச்சயதார்த்த விழா 1942 டிசம்பர் 21ஆம் நாள், மெஹர் பாபா முன்னிலையில் ‘ப்ராஸ்பெக்ட்’ லாட்ஜில் நடைபெற்றது. இரண்டு குடும்பங்களும் உடனிருந்தன, மேலும் பாபாவே நரிமன், அர்னவாஸ் இருவரின் விரல்களில் தங்க மோதிரம் அணிவித்து, அவர்களை, அவரது அன்பில் இணையவைத்தார். அவர்கள் இருவரும் ஒன்றாக பாபாவிற்கு மாலை அணிவித்தனர்.

1939க்குப் பிறகு, மெஹர் பாபா, மும்பையில் அர்னவாஸின் பெற்றோர்களான நௌரோஜி மற்றும் பச்சாமாய் தாதாசாஞ்சியின் இல்லத்தில் தங்குவதை நிறுத்திய பின்னரும், அவர் எப்போதேனும் மும்பை வழியாகச் செல்வதுண்டு. கடந்த காலத்தில், அவர் தாதாசாஞ்சியுடன் தங்கியிருந்தபோது, எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட அறையைப் பயன்படுத்தி வந்தார், அதை நௌரோஜி, பாபாவுக்காக வைத்திருந்த நாளிலிருந்து, பச்சாமாய், இரவு பகல் பாராமல் எண்ணெய் விளக்கு ஒன்றை எரிய விட்டிருந்தார்.

லோனவாலாவில் இருந்த வேளையில் பச்சாமாய், பாபாவிடம், “நீங்கள் மீண்டும் எப்போது மும்பைக்கு வருவீர்கள்?” எனக் கேட்டார்.

அதற்கு பாபா, “**அர்னவாஸ், நரிமன் இருவரின் சொந்த இல்லத்திற்கு வந்து அவர்களுடன் தங்குவேன்**” என்று பதிலளித்தார். இது எவ்வாறு நிறைவேறியது என்பதை பின்பு காணலாம்.

அர்னவாஸ் பெண் மண்டலியுடன் தங்கியிருக்க, தாதாசாஞ்சி குடும்பத்தினர் அனைவரும் லோனவாலாவிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

1942, டிசம்பர் 22 அன்று மெஹர் பாபா அனைத்து ஆண், பெண் மண்டலியுடன் மெஹராபாத் திரும்பினார், மேலும் 27ஆம் நாள் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் தொடங்கின. பெண்டு, பாதிரி இருவரும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர், மேலும் அழைக்கப்பட்டவர்களுக்கு தகவல்கள் அனுப்பப்பட்டன.

மெஹராபாத் திரும்பி வந்ததும், பாபா, அவரது மஸ்த் பணியில் முழு வீச்சில் ஈடுபட்டார். அவ்வேளையில் முஹமது மஸ்த், உதர்மன் மஸ்தான் ஆகியோர் மெஹராபாத்தில் தங்கியிருந்தனர். பாபாவின் வருகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் அவர்கள் இருவரும் குடும்ப குவாட்டர்ஸிலிருந்து மேல்மலையில் அமைந்த மஸ்த் ஆசிரமத்திற்கு அழைத்துவரப்பட்டனர். இவர்கள் இருவரையும் தவிர, காக்காவும் பைதூலும் இதர பாகங்களில் வாழும் மஸ்துகளை அழைத்து வந்தனர்; பாபா அவர்களை வழக்கம்போல நீராட்டி, உணவளித்து அவர்களுடன் அமர்ந்து பணிபுரிந்தார்.



மெஹராபாத், டிசம்பர் **1942**
(MEHERABAD, DECEMBER 1942)



சாஞ்சி, ஆதி சீனியர்,
மெஹராபாத், டிசம்பர் **1942**
(CHANJI, ADI SENIOR, MEHERABAD, DECEMBER 1942)

ஒரு முறை பாபா, மஸ்துகளுக்குச் சப்பாத்தி வழங்க விரும்பி, சமையலறையில் கெய்மாயிடம் சென்றார். அந்த நாளில் புதிதாக சப்பாத்திகள் இன்னும் தயார் செய்யாததால், நர்கிஸ் முந்தைய நாள் மிஞ்சிப்போன சிலவற்றைக் கொண்டு வந்து பாபாவிடம் கொடுத்தார். பாபா அவற்றைப் பார்த்து விமர்சித்தார்: **"நீங்கள் முழு மனதுடன், விரும்பி சப்பாத்திகளைத் தயார் செய்யவில்லை. எனது மஸ்துகள் இவற்றை உண்டால் அவர்களுக்கு வயிற்று வலி வரும்."**

பாபா, மெஹராபாத் வந்தவுடன், அவர் பெண்மணிகளை ஐந்து வெவ்வேறு சிறிய குழுக்களாகப் பிரித்தார். ஒவ்வொரு குழுவிற்கும் மெஹராபாத் மேல்மலையில் ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டது. ஒரு குழுவின் பெண்கள் பிற குழுக்களின் பெண்களுடன் பேசத் தடை விதிக்கப்பட்டது; ஒருவர் இன்னொருவருக்கு ஏதேனும் தெரிவிக்க விரும்பும் வேளையில், அவர் கிட்டி மூலமாக அவ்வாறு செய்ய வேண்டியிருந்தது, அவர் செய்தியை அந்தக் குறிப்பிட்ட பெண்மணிக்கு வழங்கி வந்தார். மெஹரா, மணி, மெஹரு மூவரும் ஒரு குழுவைக் கொண்டிருந்தனர்; நாஜா, கோர்ஷெத் மற்றும் வாலு மற்றொரு குழுவில் இருந்தனர்; மூன்றாவது கிட்டி, ரானோ, மார்கரெட்; நான்காவது மன்ஸாரி, கேட்டி, ஸொல்டுன், டவ்லா ஆகியோர்; கெய்மாய், மனு, மெஹரு (ஜெஸவாலா), ஸூனாமாசி, நர்கிஸ் மற்றும் காக்குபாய் ஐந்தாவது குழுவிலும், ஐரீன் இன்னும் உடல்நலம் சரியாகாத நிலையில், தனி அறையிலும் தங்கினர்.

பாபா, கீழ் மெஹராபாத்தில் அமைந்த அவரது குடிலில் வசித்து வந்தார்; ஆனால் அவர் தினமும் மேல்மலைக்கு மஸ்துகளுடன் பணிபுரியவும், மெஹரா மற்றும் மணியை சந்திக்கவும் செல்வது வழக்கம். இந்த நேரத்தில் அவர் குறுகிய அளவிலான ஏகாந்தவாசத்தை மேற்கொண்டதால், பாபா மேல்மலையை நோக்கி நடந்து செல்லும் வேளையில், மணி ஒலிக்கும் சத்தத்தைக் கேட்டு, மகளிர் அனைவரும் தத்தமது அறைகளுக்குள் சென்றுவிடுவதும் வழக்கமாக நடந்தது. மெஹரா, மணி இருவரையும் சந்தித்த பின்பு, பாபா மலையிலிருந்து இறங்கி வரும் வேளையில் இரண்டாவது முறையாக மணி ஒலிப்பது, இதர பெண்மணிகள் வெளியே வருவதற்கான அடையாளமாக இருந்தது.

ஒருமுறை, பாபா மேல்மலைக்குச் செல்லும் வேளையில், மணி ஒலித்தது; பாபாவை நீண்ட காலமாகக் காணாத ஏக்கத்தில் மன்ஸாரி அவரைப் பார்க்க வெளியே வந்தார். பாபா, சீற்றமடைந்து, **"நீங்கள் ஏன் வெளியே வந்தீர்கள்?"** என்றார்.

மன்ஸாரி மன்றாடினார், "எனக்கும் இதயம் இருக்கிறது, பாபா. நான் உங்களைப் பார்க்காமல் இருப்பதை நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?"

**"உங்கள் இதயம் நரகத்தை நோக்கிச் செல்லட்டும்!"** பாபா கூறினார், **"எனது விருப்பத்தை பின்பற்றாத இதயம், இதயமல்ல! இதை ஏன் இதயம் என்று அழைக்கிறீர்கள்?"**

பாபா தொடர்ந்து கண்டித்தார், “**என்னைப் பார்த்ததன் மூலம் நீங்கள் என்ன லாபம் அடைந்தீர்கள்? நீங்கள் என்னைப் பார்க்க முடியாது! நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாதபோது, என்னைப் பார்ப்பதால் என்ன பயன்? நீங்கள் என்னை ஒருபோதும் அந்த வழியில் பார்க்க முடியாது. நீங்கள் என்னைப் பார்க்க விரும்பினால், எனது கட்டளைகளைப் பின்பற்றுங்கள். எனது சீற்றத்திற்கு ஆளாகி என்னைப் ‘பார்க்க’ முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அந்தப் பார்வை, பார்வையல்ல. என்னைப் பிரியப்படுத்த, என்னை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள், ஒரு நாள் உண்மையில் நீங்கள் என்னைக் காண்பீர்கள்.**”

பாபா பின்பு மெஹரா, மணி இருவரையும் தவிர இதர எல்லா பெண்மணிகளையும், முதல் மணியோசைக் கேட்கும் போது ஒரே அறையில் ஒன்றாகவும், அடுத்த மணியோசை எழுப்பும் வரை, இணைந்தே இருக்குமாறும் கட்டளையிட்டார்.

ஏகாந்தவாசம் மேற்கொண்ட போதிலும், பாபா, மெஹராபாத் பெண்மணிகளை 1942, டிசம்பர் 24ஆம் நாள், ஒரு திரைப்படத்தைப் பார்க்க ஸரோஷ் சினிமாவிற்கு அழைத்துச் சென்றார். மூன்று நாட்களுக்குப் பின்னர் ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு வருடத்திற்கு முன்பு, ஜப்பான் போருக்குள் நுழைந்த வேளையில், 1941ஆம் ஆண்டில், பாபா, மண்டலியுடனான தனது கலந்துரையாடலின் போது, ஜப்பானியர் அஹமதுநகரை ஆக்கிரமித்தால் என்ன நடக்கும் என்று அவர்களின் கருத்துக்களைக் கேட்டார். ஒரு பரபரப்பான வாதம் உருவானது, “பாபா, நீங்கள் ஏன் அஹமதுநகரைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். ஜப்பான் நம்மை ஆக்கிரமிக்கவோ அல்லது நம் மீது குண்டு வீசவோ போவதில்லை” என்று ஸரோஷ் உறுதியாகக் கூறினார்.

பாபா அவரைக் கூர்ந்து நோக்கி, “**அஹமதுநகரில் குண்டு வீசப்படும், அது உங்கள் வளாகத்தில் விழும்**!” என்றார்.

ஸரோஷ் மற்றும் கூட்டத்தில் பங்கெடுத்த ஒவ்வொருவரும் அந்தக் கருத்தை லேசாக எடுத்துக் கொண்டு, விரைவில் அதை மறந்துவிட்டனர். ஆனால் 1942, டிசம்பர் 27ஆம் நாள், ஸரோஷ் சினிமா, பிரிட்டிஷ் ராணுவ வீரர்களால் சூழப்பட்டபோது, இடைவேளை நேரத்தில் ‘**இந்தியாவை விட்டு வெளியேறு**’ என்ற சுதந்திர இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் சினிமா வளாகத்திற்குள் ஒரு கையெறி குண்டை வீசினார். ஸரோஷ் குண்டுவெடிப்புக்கு மிகவும் அருகாமையில் இருந்தார், ஆனால் அதிசயமாக காயத்திலிருந்து தப்பினார். சினிமாவில் பணிபுரிந்த ஒரு சிறுவன் கொல்லப்பட்டான் மற்றும் பலர் காயமடைந்தனர். அப்போது பாபா அன்று கூறியதை, ஸரோஷ் நினைவு கூர்ந்தார்.

1942 டிசம்பர் 26 சனிக்கிழமையன்று, நகரத்திற்கு வெளியே வாழும் அன்பர்கள், கூட்டத்திற்காக மெஹராபாத்தை நோக்கி வரத் தொடங்கினர். காஷ்மீரிலிருந்து தவ்லத் ஸிங் வருகை தந்தார்; நாக்பூர் - தேஷ்முக் மற்றும் பங்க்ராஜ்; நாசிக் - ராம்ஜூ அப்துல்லா; ஷோலாபூர் - காடேக்கர்; மும்பை, பூனா, அஹமதுநகர் போன்ற இடங்களிலிருந்து பல நெருங்கிய மண்டலி உறுப்பினர்களும் வந்தனர். நிகழ்ச்சியில் மொத்தம் 99 ஆண்கள் கலந்து கொண்டனர். அதை 100ஆக மாற்ற, பாபா, மார்கரெட்டை கூட்டத்தில் பங்கெடுக்குமாறு அறிவுறுத்தி, அவருக்கு விளக்கினார், "**நீங்கள் எனது பணியை மேற்கில் செய்ய வேண்டியிருப்பதால் நீங்கள் அதன் உட்கருத்தை அறிந்திருக்க வேண்டும்**."

கராச்சியைச் சேர்ந்த மினூ கராஸ் அவரது நெருங்கிய உறவினரான நெய்ஸ் துபாஷ் (NAIZE DUBHASH) என்ற பெண்மணியை உடன் அழைத்து வந்தார். பாபா அவருக்கு ஒரு மோதிரத்தை அளித்து, அதை ஒருபோதும் விரலிலிருந்து அகற்ற வேண்டாம் என்று கூறினார். அந்த நாள் நெய்ஸின் பிறந்த நாள் என்பதால் அது ஒரு சிறப்பு பரிசு!

டிசம்பர் 27ஆம் நாள், மெஹர் பாபா, ராஹூரி கேபினில் காலை 8:00 முதல் 9:00 மணி வரை, தனியார் நேர்காணல்களை வழங்கினார். பல ஆண்டுகளாக பாபாவின் தரிசனத்திற்காக அவர்கள் காத்திருந்தாலும் பலர் அவரை முதல் முறையாக சந்தித்தனர். 1939ஆம் ஆண்டில், ஸாவ்னேர் (SAONER) நகரிலிருந்து ஒரு மைல் தொலைவில் அமைந்த அங்கேவாடா (ANGEWADA) கிராமத்தில், மோதிராம் கோஹகே பாட்டீல் (MOTIRAM GOHAKE PATIL) என்பவர் அன்பளிப்பாக வழங்கிய ஒரு நிலத்தில், 'மெஹர் பாபா மையம்' ஒன்றை விபூதி (VIBHUTI) திறந்து வைத்தார். இப்பகுதியில் ஆயிரக்கணக்கான பாபா அன்பர்கள் இருந்தனர்; அவர்களில், பாபாவைத் தீவிரமாகப் பின்பற்றும் தின்கர் ஹர்பாஜி போஃபலி (DINKAR HIRBAJI POPHALI) என்ற வழக்கறிஞர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவரது முழுக் குடும்பமும் பாபா மீது மிகுந்த பக்தியுடன் இருந்தது. அவர் பாபாவை நேரில் சந்தித்ததில்லை என்றாலும், அந்தப் பகுதியில் பெரிய அளவிலான பாபா பணிகளைச் செய்து வந்தார்.

பாபா, போஃபலியை அவரிடம் அழைத்தார். ஆதி சீனியர், தேஷ்முக், விபூதி, ராம்ஜூ, டாக்டர் கனி, விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர். பாபா, ராஹூரி கேபின் தரையில் கம்பளம் விரித்து அதன் மீது அமர்ந்திருந்தார். அழைக்கப்பட்டவர்கள் பாபாவை, சிரம் தாழ்த்தி வணங்குவது, அவரது பாதங்ளைத் தொடுவது அல்லது இரு கரம் கூப்பி தொழுவது போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. போஃபலி அருகில் வந்து அவரது குருநாதருக்கு முன்பாக நின்ற வேளையில், பாபா அவரைப் பாராட்டினார், "**நான் உங்களையும், ஸாவ்னேர் மையத்தால் செய்யப்படும் பணிகளையும் நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்**."

அவரது குடும்பம், தொழில் மற்றும் பலவற்றைப் பற்றி விசாரித்த பின்பு, பாபா, **“உங்களுக்கு என்ன வேண்டும்? என்னிடமிருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?”** என வினவினார்.

“நான் உங்களிடமிருந்து எந்த உலகப்பொருளையும் எதிர்பார்க்கவில்லை” என்று போ:ஃபலி நேர்மையாக பதிலளித்தார். “எனக்குப் போதுமானது என்னிடம் உள்ளது. இறை உணர்வை அடைவதில் உங்கள் உதவியை நாடி வந்துள்ளேன். அவ்வளவுதான்” என்றார்.

**“ஆனால் அதற்கு உகந்த விலையை நீங்கள் செலுத்தத் தயாராக இருக்கிறீர்களா?”**

“நீங்கள் கட்டளையிடும் எந்தத் தியாகத்திற்கும் நான் தயாராக இருக்கிறேன்.”

**“நீங்கள் கூறும் ‘தியாகம்’ என்பது உங்களைப் போலவே குடும்பத்திற்கு ஒரே ஆதரவாக இருக்கும் ஒரு மனிதனுக்கு மிகவும் கடினம். உங்கள் குடும்பத்தை அதன் தலைவிதிக்கு விட்டுவிடும்படி நான் கட்டளையிட்டால், அல்லது காலவரையின்றி உபவாசம் இருக்க, ஏகாந்தவாசம் மேற்கொள்ள, சன்னியாசியாக மாற, கிணற்றில் அல்லது நெருப்பில் குதிக்க - அல்லது வேறு எந்த உத்தரவுகளையும் உங்களுக்கு வழங்கினால் - அவற்றிற்குக் கீழ்ப்படிய நீங்கள் தயாரா?”**

“பாபா, உங்கள் கட்டளைகள் எதுவாக இருந்தாலும் நான் மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிவேன். ஆனால் நான் ஆன்மீகப் பாதையில் முழு உணர்வுடன் பயணிக்க விரும்புகிறேன், (ஒரு ஸலிக்காக), மஸ்தாக அல்ல!”

போ:ஃபலியின் பதில் பாபாவை மகிழச் செய்தது, “**நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். எதை நினைத்தும் கவலைப்பட வேண்டாம். கூட்டத்தில் கலந்துகொண்டு, திரும்பிச் சென்று, வழக்கம் போல் உங்கள் பணியைத் தொடருங்கள். எனது உத்தரவுகள் சரியான நேரத்தில் வரும். உங்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு நான் உதவுவேன், நீங்கள் விரும்புவதை உங்களுக்குத் தருவேன்**” என்றார்.

மெஹர் பாபாவைப் பின்பற்றும் மற்றொரு புதிய நபர் பிரீத்தம் ஸிங் ஸாஹ்னி (PRITAM SINGH SAHNI) ஆவார். அவர் ஒரு வெற்றிகரமான தொழிலதிபர், தாய்லாந்தில் வளமான வர்த்தகத்தை நடத்தி வந்தார். புத்தரின் பிறந்தநாளில், உள்ளூர் மக்கள் அவருக்கு மிகுந்த மரியாதை செலுத்தி, அவரைப் பெரிதும் கௌரவித்தனர். பிரீத்தம் ஸிங் அவர்களிடம், “இந்த நாளில் ஏன் என்னை நீங்கள் வாழ்த்துகிறீர்கள்?” என்று கேட்டதற்கு அவர்கள், “எங்கள் இறைவன் புத்தர் பிறந்த தேசத்திலிருந்து நீங்கள் வருகிறீர்கள்” என்று பதிலளித்தனர்.

இந்த பதில் அவர் இதயத்தை ஆழமாகத் தொட்டு, அவரது மனதுள் மறைத்திருந்த முதல் திரையை விலக்கியது. அவர் மனதில் ஓர் எண்ணம் அலைமோதியது: “நான் இந்தியாவிலிருந்து வந்தாலும் புத்தரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்பது எவ்வளவு பரிதாபத்திற்குரியது! இங்கே மக்கள்

அவரை மிகவும் பயபக்தியுடன் வணங்குகிறார்கள். எனது முழு மனமும் பணம் சம்பாதிப்பதில் மட்டுமே வெறித்தனமாக அலைகிறது, இருந்தும் இந்த மக்கள் என்னை ஆன்மீகவாதியாக மதிக்கிறார்கள்."

பிரீத்தம் ஸிங், தனது தொழிலை விட்டுவிட்டு, இந்தியாவிற்குத் திரும்பி வந்து, 'இக்காலகட்டத்தில் வாழும் புத்தரின்' தரிசனத்திற்காக ஏங்கினார். பல சாது சன்னியாசிகளை சந்தித்தும் திருப்தி அடைந்த பாடில்லை. 1936ஆம் ஆண்டில் அவர், மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரது சில புத்தகங்களைப் படிக்க நேர்ந்தது, ஆனால் தரிசனம் கிடைக்காததால், அவர் தனது இதயம் நாடும் ஒருவரை சந்திக்க ஆறு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. டிசம்பர் 27ஆம் தேதி, அவரது விருப்பம் நிறைவேறியது.

அந்த முதல் சந்திப்பை பிரீத்தம் தெளிவாக நினைவு கூர்ந்தார்:

நான், மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆதி சீனியரைப் பின்தொடர்ந்தேன்; என் இதயம் (பாபாவின்) அன்பால் நிரம்பி வழிந்தது, எனது கண்கள் ஆனந்தக்கண்ணீரால் நிறைந்தது, நீண்ட காலத்திற்கு முன்பே என்னை அவருக்கு சொந்தமாக்கிய, என் இதய தேவனை நோக்கி ஓடினேன்.

குடிலுக்குள் அடியெடுத்து வைத்ததும், சாய்ந்து அமர்ந்திருந்த என் அன்பான பாபாவின் முன்னால், நேருக்கு நேர் நின்றேன். அவரது ஒளிரும் முகம் ஒரு முழு நிலவாகப் பிரகாசிப்பதைக் கண்டேன், நான் இதுவரைப் பார்த்திராத அழகு முகம். அவரது இரண்டு அற்புதமான கண்கள், ஒரு சமுத்திரத்தைப் போல் அகலமாகவும் ஆழமாகவும் என் இதயத்தைத் துளைத்து என் ஆன்மாவை முத்தமிட்டன. அவரது அன்பின் புன்னகை, நான் அவருக்கு, அவருக்கு மட்டுமே சொந்தமானவன் என்பதை என்றென்றும் உறுதிப்படுத்தியது.

நான் அவரிடம் சிறிது நேரம் தொலைந்து போனேன், பின்னர் ஆதி எனது கையைப் பற்றிக்கொண்டு என்னை அவரருகில் அமர வைத்தார். பாபா என்னைப் பார்த்தார்; எனது லட்சக் கணக்கான வாழ்க்கையின் ஒட்டுமொத்த மகிழ்ச்சியும், பாபாவுடன் இருந்த ஒரு கணத்தின் ஆனந்தத்திற்கு நிகராகாது. பாபா, எனது கையைப் பிடித்து, என்னை அவரது இதயத்தை நோக்கி ஈர்த்து, அன்புடன் அரவணைத்த அந்தத் தருணத்தில் நான் இறை - அன்னையின் மடியில் இருக்கிறேன் என்பதை உணர்ந்தேன், அவருடைய அன்பின் நீரூற்றிலிருந்து ஆழமாகப் பருகினேன்.

"**நீங்கள் எதை விரும்புகிறீர்கள்?**" என்று பாபா கேட்டார். பிரீத்தம் ஸிங் பதில் கூறுவதற்கு முன்பு, பாபா, எழுத்துப்பலகையில் குறிப்பிட்டார், "**உங்களுக்கு என்ன வேண்டும் என்று எனக்குத் தெரியும். உங்களைப் பொறுத்தவரை வார்த்தைகள் தேவையற்றவை**" என்று கூறி பாபா அவரை மீண்டும் ஒரு முறை தழுவினார்.

ரயில் தண்டவாளங்களுக்கு அருகே ஆண்களுக்காக ஒரு பெரிய கூடாரம் எழுப்பி, நாற்காலிகள் நிரப்பப்பட்டிருந்தன. கூடாரத்தின் ஒரு பக்கத்தில்

மேடை அமைத்து, அதில் பாபாவின் ‘வாகனம்’ (GAADI) வைக்கப்பட்டிருந்தது. மேடையில் பச்சை நிற தரைவிரிப்புகள் போடப்பட்டிருந்தன, மேலும் பாபா அமரும் வாகனம் மஞ்சள் நிற பட்டு வஸ்திரத்தால் மூடப்பட்டிருந்தது. பொதுக்கூட்டம் 1942 டிசம்பர் 27ஆம் நாள் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமானது. பாபாவின் தொடக்க உரை ஆண்களுக்கு நான்கு மொழிகளில் வழங்கப்பட்டன, ஆதி சீனியர் - ஆங்கிலம், சாஞ்சி - குஜராத்தி, டாக்டர் கனி - உருது மொழி, விஷ்ணு - மராட்டி:

**எதிர்காலத்தில், அதுவும் அதிவிரைவில், என்னால் செய்யப்படவிருக்கும் பணிக்கு உரிய காரணங்கள் உள்ளன. என்னுடைய பணி மற்றும் அறிவுறுத்தல்களின் தீவிரத் தன்மை எனக்குத் தெரியும். என்னைப் பின்பற்றும் ஏறக்குறைய ஐநூறு முதல் அறுநூறு நபர்களில், நான் குறிப்பிட்ட உங்கள் சிலரை மட்டுமே அழைத்தேன்.**

**உண்மைக்கும் பொய்மைக்கும் இடையில், கடவுளுக்கும் உலகப்பொருட்களுக்கும் இடையில் எந்தவிதமான சமரசத்தையும் நான் விரும்பவில்லை என்பதால், நீங்கள் இந்தச் செய்தியை மிகவும் கவனமாகக் கேட்டு, அதற்குத் தயாராக இருக்கிறீர்களா என்பதைச் சொல்ல வேண்டும்.**

**நீங்கள் ‘இல்லை’ என்று சொன்னால் நான் அதிருப்தி அடைய மாட்டேன். ஆனால் நீங்கள் ‘ஆம்’ என்று கூறிவிட்டு அதைச் செய்யாவிடில், அது எனக்கு ஆழ்ந்த அதிருப்தியை அளிப்பதாக இருக்கும். இந்தக் கூட்டத்தில், பெண்கள் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் மார்கரெட் (க்ராஸ்கே) தவிர வேறு எந்த பெண்மணியும் அனுமதிக்கப்படவில்லை.**

**கடவுளின் பரிபூரண நிலையில், இரகசியம் எதுவும் இல்லை. இது எல்லையில்லா எளிமையை உள்ளடக்கியது. ஆனால் கடவுளின் பரிபூரண நிலையிலிருந்து இருமைத்தன்மையின் செயல்பாட்டுத் தளத்தில் வரும்போது, ஒருவித இரகசியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; இந்த ரகசியம் பிறரின் நன்மைக்காக மட்டுமே. நீங்கள் ஒவ்வொருவரும், பிறருக்காகச் செய்யும் சிறப்புப் பணிகளுக்கான எனது முதல் கட்டளையாக, நான் இப்போது உங்களுக்குச் சொல்லும் விஷயங்களை, உங்களோடு வைத்துக்கொள்ள விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில், எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும், நடைமுறை விவகாரங்களைப் பொறுத்தவரையில் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.**

**உலகின் ஆன்மீக நலனுக்காக நாம் பணியாற்றப் போகிறோம். பொறுப்பு என்னுடையது. நான் சொல்வது போல நீங்கள் செய்ய வேண்டும். இப்போது நாம் சந்திக்கும் விதத்தில் மீண்டும் சந்திக்க மாட்டோம் - எந்த விதத்திலும் வாய்ப்பு இல்லை! உங்களில் பலர் பெரும்பாலும் என்னை மீண்டும் பார்க்க மாட்டார்கள். ஜனவரி மாதம் முதல், மிகச் சிலரே என்னைப் பார்ப்பார்கள்.**

**நான் பேசும்போது மட்டுமே உலகம் என்னைப் பார்த்து அறிந்து கொள்ளும், இது மிகவும் அருகாமையில் உள்ளது.**

ஆதி ஜூனியர் பின்பு பாபாவின் எழுத்துப்பலகை மூலமாக வெளியிட்ட செய்தியை வாசித்தார்: தலைப்பு - **'மனிதகுலத்தின் ஆன்மீக சுதந்திரத்திற்காகப் பணிபுரியுங்கள்: எனது நெருங்கிய சீடர்களுக்கான அழைப்பு.'**

பாபா அதில், பல்வேறு வகையான சுதந்திரங்களை வரிசைப்படுத்தி விளக்கமளித்தார்; மேலும் "**ஆன்மீக சுதந்திரம் ஒன்றுதான் முழுமையானது, அளவிடமுடியாதது**" என்று சுட்டிக்காட்டினார்.

"**ஆன்மீக சுதந்திரம் எனும் பரிசை விட பெரிய பரிசு வேறு எதுவுமில்லை, ஆன்மீக சுதந்திரத்தை அடையப் பெற, பிறருக்கு உதவுவதை விட முக்கியமான பணியும் வேறு எதுவுமில்லை**" என்று அவர் கூறினார். ஆனால் அவர் மேலும் கூறியதாவது:

**ஆன்மீக சுதந்திரத்தை, தாமாகவே சுயமாகவும், கீழ்நிலை ஆசைகளுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் இடைவிடா போராட்டத்தின் மூலமாகவும் வெல்ல வேண்டும். சத்தியத்திற்காகப் போராடுபவர்கள், பிற அனைவருக்கும் உதவ வேண்டும், தன்னைத்தானே எதிர்த்துப் போராடி, வெற்றிகாணும் பரபரப்பான ஆற்றலைக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அதை அடையப் பெறும் நோக்கத்தில் அவர்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் உதவ வேண்டும். அவர்களின் சுமையைப் பகிர்ந்து கொள்ள இதைத்தவிர வேறு வழியில்லை.**

பாபா வழங்கிய செய்தி பின்வருமாறு நிறைவடைந்தது:

**இந்த சுமையை நீங்கள் பகிர்ந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இன்று நான் உங்களை சந்திக்கிறேன். உங்களில் பலர், எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, என் மீதுள்ள நம்பிக்கையினாலும், அன்பினாலும், பல ஆண்டுகளாக என் அறிவுறுத்தல்களைப் பின்பற்றினீர்கள்.**

**கொந்தளிப்பும், குமுறலும் நிறைந்த காலகட்டங்களிலும் துணையாக நின்று, நீங்கள் என்னையும் என் ஆன்மீகப் பணியையும் அதன் விளைவுகளையும் கெட்டியாகப் பற்றிக்கொண்டிருந்தீர்கள். இப்போது, ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்து, கடவுளை உணரச் செய்ய உதவும் எனது பணியில் உங்கள் எல்லா சேவைகளையும் வழங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.**

**கடவுள் மட்டுமே உண்மையானவர் என்ற நித்திய உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்; எந்தவோர் ஐயப்பாட்டிற்கும் இடமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும்; மேலும் அது வார்த்தைகள் மற்றும் செயல்களின் மூலம், தங்கு தடையின்றி தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். உண்மைப்பொருளைப் பரிபூரணமாக உணர்தலில், மனிதன் ஆன்மீக சுதந்திரத்தை அடைவான். ஆன்மீக அடிமைத்தனத்திலிருந்து மனிதனை விடுவிப்பதற்கும், சத்தியத்தை மரபுரிமையாகப் பெறுவதற்கும் அவருக்கு உதவுவதைத் தவிர, வேறு எந்தத் தியாகமும் பெரிதல்ல; இது**

**அனைவருக்கும் அமைதியைக் கொடுக்கும், மேலும் இது அனைவரது மிகையான அன்பால் உறுதிப்படுத்தப்பட்ட, தவிர்க்கமுடியாத உலகளாவிய நட்புணர்வைத் தக்கவைத்து, அனைவருக்கும் ஒரே உண்மைப்பொருளின் வெளிப்பாடாக விளங்கும்.**

**கடவுளின் முழு விருப்பத்தில், முன்னரே தீர்மானிக்கப்பட்ட இறை-திட்டத்தின் அடிப்படையில், ஆன்மீக சுதந்திரத்தை மனிதகுலத்திற்கு வழங்குவதற்கான பணியில், எனது நெருங்கிய அன்பர்களாகிய நீங்கள், உங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தாவது எனக்கு உதவ வேண்டும். கடவுளைக் கண்டுகொள்ள பிறருக்கு உதவ வேண்டிய உங்கள் கடமையில், ஒவ்வொரு வகையான துன்பங்களையும் தியாகத்தையும் நீங்கள் வரவேற்க வேண்டும்.**

**தனிப்பட்ட குழுக்களில், நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கென குறிப்பிடப்பட்ட கடமை குறித்து விரிவான ஆன்மீக அறிவுறுத்தல்களை அடையப் பெறுவீர்கள். எந்தவொரு விலையானாலும், எந்த சூழ்நிலையிலும் எனது ஆன்மீக வழிமுறைகளை நிறைவேற்றுவதில் உங்களுக்கு எந்தவிதமான தயக்கமும் இருக்காது என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது; மேலும் எனது அறிவுறுத்தல்களை நிறைவேற்ற, உங்கள் சுய விருப்பத்திற்கு ஏற்ப, இப்போது நான் உங்களுடன் தனித்தனி குழுக்களில் பேசுவதற்கு முன்னதாக, நீங்கள் ஒவ்வொருவரும் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று கூற விரும்புகிறேன்."**

தொடர்ந்து பாபா 99 ஆண்களையும் இரண்டு குழுக்களாகப் பிரித்து, முதல் குழுவின் 72 பெயர்களை வாசிக்கச் சொல்லி, அவர்களை அமர்ந்திருக்குமாறு கூறினார். இரண்டாவது குழுவில் இருந்த இதர அன்பர்கள் இப்போதைக்கு கூடாரத்தை விட்டு வெளியே செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**"ஆனால் நீங்கள் அனைவரும் இங்கிருந்து செல்வதற்கு முன்பு, மூன்று முக்கியமான விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்:**

**"முதலாவது: உங்களில் எவரிடமிருந்தும் எந்தவொரு பண உதவியையும் நான் விரும்பவில்லை.**

**"இரண்டாவது: நான் உங்களிடம் என்ன கேட்கக் கூடும் என்று நினைத்து நீங்கள் கவலைப்படவோ, அல்லது உங்கள் மன அமைதியை இழக்கவோ தேவையில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் என்ன செய்ய முடியும் என்று எனக்குத் தெரியும், அதன்படி அறிவுறுத்தப்படுவீர்கள்.**

**"இப்போது மூன்றாவது: உங்கள் ஒவ்வொருவரின் திறன்களையும் நான் அதிகமாகப் பயன்படுத்துவேன்."**

முதல் குழுவிற்கான (72 பேர்) வழிமுறைகள் பின்வருமாறு:

உலகில் ஆன்மீக சுதந்திரத்தை நிலைநாட்டும் எனது பணியில் உதவவும், எனது அறிவுறுத்தல்களை முற்றிலுமாகக் கடைப்பிடிப்பதாகவும் நீங்கள் அளித்த வாக்குறுதி என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது.

நான் உங்களுக்கு வழங்கும் அறிவுறுத்தல்கள் ஐந்து குறிப்பிட்ட அடித்தளங்களை அடிப்படையாகக் கொண்டவை, ஒவ்வொன்றும் அதன் செயல்பாடு மற்றும் முடிவின் அம்சத்தில் வேறுபட்டவை, இருப்பினும் இந்த வெவ்வேறு முடிவுகளின் முக்கிய விளைவின் அடிப்படையில், அனைத்தும் ஒரே மாதிரியாக இருக்கும். எனவே சுருக்கமாக, நான் அவற்றை ஐந்து தனித்தனி செயல்பாடுகளாக வகைப்படுத்தி, ஐந்து வழிமுறைகள் என்று அழைக்கிறேன்.

இந்த ஐந்து வழிமுறைகளில் ஒன்றே ஒன்றை உங்களில் ஒவ்வொருவருக்கும் வெளிப்படுத்துவேன். உங்களில் எவருக்கும் இந்த ஐந்து வழிமுறைகளில் ஒன்றுக்கு மேல் வழங்கமாட்டேன். இவற்றில் எது யாருக்கு என்பதை நான் தீர்மானிப்பேன்.

இந்த ஐந்து வழிமுறைகளும் தனிப்பட்ட முறையில் பின்வரும் ஐந்து நிபந்தனைகளாக உங்களிடம் கொண்டு வரக்கூடும்:

1. இறப்பு
2. சிறை
3. சன்னியாசம் (துறவு)
4. எல்லையற்ற உடல் கஷ்டங்கள், இது வாழ்நாள் முழுவதும் உடல் குறைபாடுகளைக் கொடுக்கக்கூடும்
5. ஏளனம், அறைதல், அவதூறுகள், பட்டினி, யாசித்தல்.

இந்த ஐந்து அறிவுறுத்தல்களும், இன்றைய எனது அறிமுக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆன்மீக சுதந்திரத்திற்கான எனது பணியை நிறுவுவதில் சம்பந்தப்பட்டதாக இருக்கும். இந்த ஐந்து அறிவுறுத்தல்கள் ஒவ்வொன்றும் ஒரு தெளிவான, தனிப்பட்ட, சுதந்திரமான அடிப்படையில் செயல்படும்போது நிலையான, திட்டவட்டமான, தனித்தனி முடிவைக் கொண்டிருக்கும், இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் முடிவுகள் தற்செயலாக ஒத்துப்போகின்றன. ஆகவே இறப்பது, சிறைக்குச் செல்வது, துறவு மேற்கொள்வது, உடல் மற்றும் மனம் சார்ந்த கஷ்டங்கள் அனைத்தும் கடவுளுக்காக மட்டுமே செய்யப்படவேண்டும்.

இந்த ஐந்து வழிமுறைகளும் உலக உறவுகளை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக விட்டுவிடுவதை இன்றியமையாததாக்கும்.

1943, பிப்ரவரி 1 அன்று, அவை எவ்வாறு, எப்போது, எங்கு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் உங்கள் ஒவ்வொருவருக்கும் தெளிவாக, அஞ்சல் வழியாக அல்லது நேரடியாக வழங்கப்படும். எப்போதேனும் நிதி தேவைப்பட்டால் அனுப்பி வைக்கப்படும். உங்கள் தற்போதைய உலக உறவுகளை நீங்கள் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாகக் கைவிட வேண்டுமா என்பது நிச்சயமாக பிப்ரவரி 1ஆம்

**தேதி உங்களுக்குத் தெரியப்படுத்தப்படும், அதாவது எனது அறிவுறுத்தல்களை நீங்கள் அடையப் பெறும் நாள், மேலும் இது 1943, பிப்ரவரி 28 அன்று நிறைவேற்றப்பட வேண்டும்.**

பாபா இவ்வாறு நிறைவு செய்தார்: "**நான் இப்போது உங்களிடம் கூறிய அனைத்தையும் நீங்கள் ஒவ்வொருவரும் முற்றிலும் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே, இந்த வழிமுறைகளைப் பற்றி இங்கு இல்லாத எவருடனும் எதையும் பகிர்ந்துகொள்ள வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**"

அதன் பின்னர் 22 ஆண்கள் அடங்கிய இரண்டாவது குழு, உள்ளே அழைக்கப்பட்டது:

73. அஸ்பந்தியார் தாதாசாஞ்சி (சாஞ்சியின் சகோதரர், கராச்சி)
74. அர்விந்த் யு. வாஸவாடா (நரிமனின் நண்பர், பெனாரஸ்)
75. பாகு - BAGGU (ராம்ஜூவின் மகன்)
76. பெஹ்லி ஜே. இரானி (பெய்லி)
77. தத்து மெஹந்தர்கே
78. ஹோமி ஜே. தமானியா
79. ஜமதார் (காவலாளி)
80. ஜங்க்ளே
81. லிம்கர்
82. மெஹர்ஜி ஸட்டா
83. மினூ போஹோவாலா
84. முல்சந்த் ஜி.பஹ்லஜனி (PAHLAJANI - ஸக்கர் நகரைச் சேர்ந்தவர்)
85. முரளி காளே
86. நூரு (ராம்ஜூவின் மைத்துனர்)
87. பங்க்ராஜ்
88. ராஜ் கிருஷ்ணா (டெஹ்ரா டூன்)
89. ரூஸி ஈரானி (பீலாமாயின் மகன்)
90. விஸ்வநாத் ஹல்தங்கர்
91. விஸ்வான் ஜி. பஹ்லஜனி (PAHLAJANI - ஸக்கர்)
92. விட்டல் போக்ரே (BHOKRE)
93. வாமன் ஸப்னிஸ்
94. யஷ்வந்த் ராவ்

இரண்டாவது குழுவிற்கான இந்த வழிமுறைகள் அப்போது அறிவிக்கப்பட்டன:

**உலகில் ஆன்மீக சுதந்திரத்தை நிறுவுவதற்கான எனது பணியில் உதவ, எனது அறிவுறுத்தல்களை நீங்கள் முழு விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் என்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் உங்களுக்கு வழங்கும் அறிவுறுத்தல்கள் நான்கு குறிப்பிட்ட அடித்தளங்களை அடிப்படையாகக் கொண்டவை, ஒவ்வொன்றும் அதன்**

**செயல்பாடு மற்றும் முடிவின் அம்சத்தில் வேறுபட்டவை, இருப்பினும் இந்த வெவ்வேறு முடிவுகளின் முக்கிய விளைவு, அடிப்படையில் ஒன்றாகவே இருக்கும். எனவே, சுருக்கமாக, நான் அவற்றை நான்கு தனித்தனி செயல்பாடுகளாக வகைப்படுத்தி, அவற்றை நான்கு வழிமுறைகள் என்று அழைக்கிறேன். இந்த நான்கு வழிமுறைகளின் அடிப்படையை உருவாக்கும் நான்கு குறிப்பிட்ட அடித்தளங்கள் பின்வருமாறு:**

1. **தற்காலிக உபவாசம்**
2. **தற்காலிக ஏகாந்தவாசம் மற்றும் தனிமை**
3. **சிறப்பு ஒருமுகப்படுத்தல் மற்றும் தியானம்**
4. **சில ஆன்மீக உண்மைகளைப் பரப்பும் நோக்கத்தில் வெவ்வேறு இடங்களுக்குச் செல்வது**

**இந்த நான்கு வழிமுறைகளும் அவற்றின் நான்கு முன்னிகழ்வுகளை கொண்டு வரக்கூடும்:**

1. **உடல் பலவீனம்**
2. **மனச்சோர்வு**
3. **தடைகள் மற்றும் சிரமங்கள்**
4. **ஏராளமான அசௌகரியங்கள்**

**இவை அனைத்தும் 'கடவுளுக்காக, கடவுளுக்காக மட்டுமே' அனுபவித்தாக வேண்டும் என்று பாபா மீண்டும் கூறினார். பிப்ரவரி 28ஆம் தேதி வரை ஒவ்வொருவருக்கும் எந்தெந்த அறிவுறுத்தலை வழங்க வேண்டும் என்பதை, தனிப்பட்ட முறையில் தீர்மானிப்பதாகவும் அவர் கூறினார், மேலும் இவை அனைத்தையும் முற்றிலும் ரகசியமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தினார்.**

மேலும் ஐந்து நபர்கள் அடங்கிய மூன்றாவது குழு ஒன்றும் இருந்தது. இந்த ஐவருக்கும் அனைத்து அறிவுறுத்தல்களிலிருந்தும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஐந்து ஆண்களின் பெயர்கள் கீழ்வருமாறு:

95. அங்கல் பிளீடர்
96. சதாஷிவ் போர்கர் (BORKER)
97. கேக்கி பஜன் (KEKI BAJAN)
98. ?
99. அலிகார் ஆளுநர்

எல்லா அறிவுறுத்தல்களும் நான்கு வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அனைவருக்கும் அவரவர் பிரதியை வழங்கிய பின்பு, காலை 11:30 மணி கூட்டத்தில் ஒவ்வொருவரும் பாபாவின் அறிவுறுத்தல்களை கவனமாகப் படித்து, கீழ்ப்படிய விரும்பினால் காகிதத்தில் கையெழுத்திட வேண்டும். மார்கரெட் பெண்கள் குழுவின் சார்பில் கையெழுத்திட இருந்தார். பிற்பகல், மூன்று மணிக்குத் தொடங்கி, பாபா மீண்டும் அவரது அறையில் தனிநபர்களுக்கு தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார்.

1942 டிசம்பர் 28 திங்கள் காலை, அரன்காவ்ம் கிராமவாசிகள் மெஹராபாத் மேல்மலையில் 9:00 முதல் 11:00 வரை ஒரு நடன நிகழ்ச்சியை நடத்தினர். பிற்பகல் 4:00 முதல் 4:30 மணி வரை பஜனை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

அதன் பின்னர், மெஹராவின் பிறந்தநாளை முன்னிட்டு மாலை 4:30 முதல் 8:30 மணி வரை, (ஆதி சீனியர் மற்றும் அப்தர் ரஹ்மானின் ஏற்பாட்டில்) மும்பையைச் சேர்ந்த குல்ஸார் (GULZAR) என்ற பெண் பாடகியின் சிறப்பு கஸல் நிகழ்ச்சி நடைபெற்றது. மெஹராவின் பிறந்தநாளை மெஹர் பாபா பகிரங்கமாக கொண்டாடியது இதுவே முதல் முறை. (மெஹரா பிற பெண் மண்டலியுடன் திரைக்குப் பின்னால் அமர்ந்து நிகழ்ச்சியை ரசித்தார்.)

அடுத்த நாள், அனைத்து ஆண்களும் தத்தமது இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர்; பாபா அவர்களின் மூலமாக தனது ஆன்மீகப் பணிகளைத் தொடங்கினார்; அனைவரும் குருநாதரிடமிருந்து தங்கள் அறிவுறுத்தல்களை எதிர்பார்த்து காத்திருந்ததன் மூலம், எல்லா மனங்களும் எல்லாம் வல்ல இறை அன்பிற்குரியவரிடம் தமது கவனம் முழுவதையும் செலுத்தின.

1943, ஜனவரி 7ஆம் நாள், மெஹர் பாபா, பப்பா-கெய்மாய் ஜெஸவாலா குடும்பத்தினரை பூனாவிற்கு அனுப்பி வைத்தார்: **"நீங்கள் இப்போது செல்ல வேண்டும், ஆனால் நான் உங்களை மீண்டும் அழைப்பேன்."** ஸர்வர், நாகு இருவரும் மேற்படிப்பிற்காக அவர்களுடன் அனுப்பப்பட்டனர். அதைத் தொடர்ந்து, பாபா, மெஹராபாத் மேல்மலையில் ஏகாந்தவாசத்தை மீண்டும் தொடங்கினார். அவ்வேளையில் விஷ்ணு வயிற்றுக்கோளாறால் பாதிக்கப்பட்டதால், டாக்டர் நீலு, பாபாவின் தனிப்பட்ட பணிகளில் கலந்து கொண்டு, அஹமதுநகரிலிருந்து ஆதி சீனியர் கொண்டு வந்த அஞ்சலை ஒரு நாளைக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை மேல்மலைக்கு எடுத்துச் சென்றார்.

மெஹர் பாபாவின் சகோதரர் பெஹராம் பூனாவில் 'பிந்த்ரா ஹவுஸ்' (BINDRA HOUSE) என்ற பங்களாவை ஜெஸவாலா குடும்பத்தினருக்காக ஏற்பாடு செய்தார். அவர்கள் அங்குச் சென்ற பின்பு, விரைவில் பாபாவின் அழைப்பை எதிர்பார்த்து, நீண்ட காலமாக தங்கள் உடமைகளை வெளியே எடுக்கவில்லை. ஆனால், ஆசிரமத்தில் தங்குவதற்கு பாபா அவர்களை ஒருபோதும் அழைக்கவில்லை; அவர் மீண்டும் அழைப்பதாகக் கூறுவதன் மூலம், அவர்களுள் அனைத்தையும் துறக்கும் ஓர் உள்ளுணர்வை உருவாக்கினார். இதனால் அவர்கள் உலகிலிருந்து தனிமைபடுத்தப்பட்டதாக உணர்ந்து, அவருடைய அழைப்பை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களைத் தொலைதூரத்தில் வைத்திருப்பதன் மூலம், பாபா அவருடன் நெருக்கமாக இருக்கச் செய்தார்; அவருடன் மறுபடியும் இணைய வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர, அவர்களுக்கு வேறு சிந்தனையோ விருப்பமோ இல்லை. அனைத்தும், பாபா அவர்களை அழைக்கும் நாளுக்காகக்

காத்திருப்பதையே மையமாகக் கொண்டிருந்தது; அவர்களின் நிச்சயமற்ற தன்மை மற்றும் நம்பிக்கையில், பாபா அவர்களுக்கு உள்ளளவிலான ஸ்திரத்தன்மையைக் கற்பித்தார்.

கெய்மாய் பூனாவில் வாழ்வதில் பாபாவின் தாயார் மெமோ மிக்க மகிழ்ச்சியடைந்தார், ஏனெனில் அவர் கெய்மாயை மிகவும் நேசித்தார், அடிக்கடி பிந்த்ரா ஹவுஸுக்கு வருவதை வழக்கமாகக் கொண்டார். '**உண்மையில், ஜெஸவாலா குடும்பத்தினரைப் பூனாவில் தற்காலிகமாகத் தங்க வைத்ததன் ஒரு காரணம், மெமோ அங்குத் தனிமையில் இருந்ததால்தான்**' என்று பாபா, கெய்மாய்க்கு ஒருமுறை விளக்கினார்.

வயதான மஸ்த் உதர்மன் மஸ்தான் கடுமையான வயிற்றுப்போக்கால் நோய்வாய்ப்பட்டார். ஜனவரி 8ஆம் தேதி, பாபா அவரை சகனுடன் அவரது கிராமமான காத்கோடத்திற்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்தார். ஆனால் மஸ்தின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால், அவர் வழியில் உயிரைத் துறந்தார்; சகன் அவரது இறுதி சடங்கை முடித்த பின்பு மெஹராபாத் திரும்பினார்.

மகாத்மா காந்தி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக ஓர் இயக்கத்தைத் தொடங்கினார், 'குடிசார் மற்றும் அதிகாரிகளின் போர் முயற்சிகளில் ஒத்துழையாமை' ஆகியவற்றை தீவிரமாக ஆதரித்தார். இதன் விளைவாக அவர் 1942, ஆகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்டு பூனா, ஆகா கான் அரண்மனையில் (AGA KHAN PALACE) போர் கால சிறை கைதியாக அடைக்கப்பட்டார்.

காந்தியுடன் தொடர்பில் இருந்த நஸர்வன் ஸட்டா (NUSSERWAN SATHA), காக்கா சிஞ்சோர்கர் (KAKA CHINCHORKAR) ஆகியோரும் நவம்பர் மாதத்தில் கைது செய்யப்பட்டதால் (அவர்கள் அழைக்கப்பட்டிருந்தாலும்), மெஹராபாத்தில் நடந்த கூட்டத்தில் அவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை.

மெஹராபாத்தில் கூட்டம் நிறைவடைந்த பின்பு, பாபா இந்தச் செய்தியை காந்திக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவித்தார். 1943, ஜனவரி 11 அன்று சாஞ்சி, வார்தாவில் காந்தியின் நண்பரிடம் அதை வழங்கினார்:

**கடவுளைத் தேடும் ஒருவரின் தனிப்பட்ட கண்ணோட்டத்தில் பார்த்தால், நீங்கள் முற்றிலும் சரியாகவே செய்தீர்கள். அதை இறுதிவரை பற்றிக்கொள்ளுங்கள். சத்தியத்திற்கு முன்னால், எல்லாமே முக்கியமற்றதாக மறைந்துவிடும்.**

**ஒருவரின் வாழ்க்கை, ஒருவரின் நாடு, ஒருவரின் தேசம், ஒருவரின் பிரபஞ்சம் - அனைத்தும் சத்தியத்தைப் பொறுத்தவரை விலக்கி வைக்கப்படுகின்றன. ஏனெனில், வாழ்வதற்கும் சாவதற்குமான ஒரே உயர்வான குறிக்கோள் கடவுளை உணர்ந்து கொள்வதும், அதன் பின்பு பிறரை கடவுளை உணர வைப்பதும் ஆகும்.**

ஸ்ரீபாய் (SRIBHAI) என்றழைக்கப்படும் ஹமீர்பூர் மாவட்டத்தைச் சார்ந்த ஸ்ரீபத் ஸஹாய் ராவத் (SRIPAT SAHAI RAWAT), நாக்பூரில் பாபாவைப் பற்றி டாக்டர் தேஷ்முக் மற்றும் பாபாதாஸ் மூலமாகக் கேள்விப்பட்டிருந்தார். நாட்டின் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தீவிர உறுப்பினராகவும் இருந்தார். காங்கிரஸ் கட்சி தலைவர்கள் அனைவரையும் பிரிட்டிஷ் அரசாங்கம் தங்கள் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டுவதற்காக, கைது செய்து கொண்டிருந்தது; மேலும் ஸ்ரீபாய் கைது செய்யப்படுவதற்கான ஆணைப்பத்திரமும் பிறப்பிக்கப்பட்டது.

அதிகாரிகளின் வலையில் சிக்காமல், ஸஹாய் 1942இல் பாபாவை சந்திக்க மெஹராபாத்திற்கு வந்தார். பாபா அவரைப் பார்த்ததும், புருவத்தை உயர்த்தி, **"நீங்கள் இங்கே இருக்கிறீர்களா? நீங்கள் சிறையிலல்லவா இருக்க வேண்டும்!"** என்றார்.

ஸ்ரீபாய் ஆச்சரியத்தில் பாபாவை நோக்கினார்; அவர் முதல் முறையாக பாபாவிடம் வருவதால், அவரிடம் எதுவும் சொல்லவில்லை. **"எனது பாதங்களைத் தொடாமல் தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்"** என்று பாபா எழுத்துப்பலகையில் தெரிவித்தார்.

அப்போது, **'அவரை மெஹராபாத்திற்கு அழைத்து வந்தது எது?'** என்று பாபா வினவினார். ஸ்ரீபாய் ஆன்மீகத்தில் தனது நீண்டகால ஆர்வத்தை விவரித்தார், மேலும் அவரது கதையை நிறைவு செய்ததும் பாபா, **"உண்மைப்பொருளைத் தேடும் உங்கள் நேர்மையான முயற்சியைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் என்னை மகிழ்வித்ததால், உங்களுக்கு என்ன வேண்டும் என்று என்னிடம் கேளுங்கள்; நீங்கள் அதை அடையப் பெறுவீர்கள். ஆனால் உங்கள் விருப்பத்தை ஒரே வாக்கியத்தில் எடுத்துரைப்பதை நான் விரும்புகிறேன்"** என்று கூறினார்.

ஸ்ரீபாய் இந்த சந்திப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டார், மேலும் அக்கணத்தில் திடீர் தூண்டுதலால் "ஆன்மீக முன்னேற்றம்" என்று பதிலளித்தார்.

ஒரு கணம் பாபா தீவிரமான தோற்றத்தில் தென்பட்டு, பின்பு, **"வழங்கப்பட்டது"** என்று சைகையால் தெரிவித்தார்.

ஸ்ரீபாய், அவரைக் காவல்துறையினர் பின்தொடர்வதாக ஒப்புக் கொண்டதும், பாபா இவ்வாறு ஆலோசனை வழங்கினார், **"அரசியல் மற்றும் ஆன்மீக வாழ்க்கைக்கு இடையிலான மோதல் இப்போது தீர்க்கப்பட்டுள்ளதாக நீங்கள் கூறுகிறீர்கள். அரசியலில் உங்களை மேலும் ஈடுபடுத்த விரும்பவில்லை என்பதால், நீங்கள் அதிகாரிகளிடம் திருப்பிச் செல்லுங்கள்; ஹமீர்பூர் மாவட்ட ஆட்சியாளருக்கு இது குறித்து ஒரு தொலைத்தந்தி அனுப்பவும்.**

**"ஓடி ஒளியாதீர்கள்"** என்று பாபா அறிவுறுத்தினார், **"நீங்களே காவல்துறையினரிடம் சரணடையுங்கள். நீங்கள் சிறைக்குச் செல்வது நல்லது, எனது பார்வை உங்கள் மீது இருக்கும்."**

ஸ்ரீபாய், கீழ்ப்படிந்து சிறையில் அடைக்கப்பட்டார். ஹமீர்பூர் மாவட்டத்திலிருந்து குருநாதரின் தொடர்பில் வந்த முதல் நபர் இவர்தான், ஹமீர்பூர் முழுவதும் இன்று மெஹர் பாபாவின் காலடியில் உள்ளது. அவரது தொடர்பு ஓர் 'இணைப்புச் சங்கிலி' என்பதை நிரூபித்தது, மேலும் அவர் சிறையில் உள்ள இதர காங்கிரஸ் தலைவர்களுக்கும் மெஹர் பாபாவைப் பற்றித் தெரிவித்தார்.

அந்த நேரத்தில், ஹமீர்பூரின் வழக்கறிஞரான கேஷவ் நாராயண் நிகம் (KESHAV NARAYAN NIGAM - **34**) என்பவரும் சிறையில் இருந்தார். கேஷவ், பாபாதாஸ் மூலமாக மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டதோடு, சில புத்தகங்களையும் புகைப்படங்களையும் பெற்றுக் கொண்டார். ஆனால் கேஷவ், பாபா மீது எந்த அக்கறையும் காட்டாமல் இருந்து, பின்னர் அந்தப் புகைப்படங்களை சாலையில் வீசி எறிந்தார்.

சிறையில் இருந்தபோது, ஸ்ரீபாய் அவரிடம் மெஹர் பாபாவைப் பற்றி மேலும் எடுத்துரைக்க, கோபமடைந்த கேஷவ் இவ்வாறு கூறினார், "மெஹர் பாபா, அவதார புருஷர் அல்ல. அவர் வெறுமனே (நாட்டிற்காக) எந்த வேலையும் செய்யாமல், மக்கள் அவரை வணங்கும் நோக்கத்தில் தன்னை அவதார புருஷர் என்று அறிவிக்கிறார். மகாத்மா காந்திஜிதான் அவதார், அவர் நாட்டுக்காக உயிரைப் பணயம் வைத்து, துன்பப்பட்டு, அதற்காக அனைத்தையும் துறந்துவிட்டார்."

ஸ்ரீபாய் முன்னிலையில் கேஷவ், மெஹர் பாபாவைத் தொடர்ந்து கடுமையாகக் கண்டனம் செய்தார். இருப்பினும், நிகழ்வுகளின் காலப்போக்கில், மெஹர் பாபாவின் இந்தக் கசப்பான 'எதிர்ப்பாளர்' அவரது மிகப் பெரிய ஊழியர்களில் ஒருவராக மாறி, தனது முழு வாழ்க்கையையும் குருநாதரின் பணிக்காக அர்ப்பணித்தார்.

ஸவக் கொத்வால் குடும்ப குவாட்டர்ஸில் வாழ்ந்து வந்தார்; அதே வேளையில் பெண்மணிகளுடன் மேல்மலையில் தங்கி வந்த அவரது மனைவி நர்கிஸ் கணவருடன் தங்க விரும்பி, பாபாவிடம் கேட்டபோது, "**நீங்கள் அவருடன் வாழலாம், ஆனால் எனக்காக வாழுங்கள்! எனது தர்பாரில் குறை கூறி முறையிடாமல் அவதிப்படும் ஒருவருக்கு, நான் மிகப் பெரிய நன்மையை வழங்குவேன்**" என்றார்.

பின்னர் அவர் ஸவக்கிடம், "**நர்கிஸ் சொக்கத்தங்கம், ஆனால் அவர் காரணமின்றி கண்கலங்கி அதை வீணடிக்கிறார்**" என்று கூறினார். நர்கிஸ் பின்பு குடும்ப குவாட்டர்ஸுக்குச் சென்றார். இவர்களின் மூன்று குழந்தைகளும் ஹைதராபாத்தில் கல்வி பயின்று வந்தனர், விடுமுறை நாட்களில் மெஹராபாத்திற்கு வந்து தங்கினர்.

ஜங்க்ளே மாஸ்டர் அவரது குடும்பத்துடன் தங்கி இருப்பதைப் போல, சகன் தனது மனைவி மற்றும் மகளுடன் குடும்ப குவாட்டர்ஸ் வளாகத்தில் வாழ்ந்து வந்தார்.

பாபாவின் சகோதரர் ஆதி ஜூனியர் 1936 முதல் 1944 வரை அவ்வப்போது மெஹராபாத்தில் ஹோமியோபதி மருந்தகம் ஒன்றை நடத்திவந்தார். ஒரு முறை நோயாளி ஒருவர் அவரிடம் வந்தபோது, அவருக்கு மருந்து வழங்கிய பின்னரும் அவர் வெளியே செல்லாமல் அமர்ந்திருந்தார். ஆதி அவரிடம், "நான் உங்களுக்கு மருந்தைக் கொடுத்துவிட்டேன்; இப்போது நீங்கள் போகலாம்" என்று கூறினார்.

அதற்கு அந்த நபர், "எனக்கு நல்ல மருந்து வேண்டும்" என்று கோரினார்.

"ஆனால் இது நல்ல மருந்துதான்" என்று ஆதி பதிலளித்தார். "இது உங்களை குணப்படுத்தும்."

"என்னை உடனடியாக குணப்படுத்தும் ஏதேனும் மருந்து கொடுங்கள்," என்று அந்த நபர் கோரினார். "நீங்கள் பாபாவின் சகோதரர், நீங்கள் மட்டுமே அத்தகைய மருந்தை கொடுக்க முடியும்."

ஆதி அவரை வெளியே அனுப்ப முயன்றார், ஆனால் அவர் அதற்கு செவி சாய்ப்பதாக இல்லை. சோர்வடைந்து, ஆதி, "தம்பி, தயவுசெய்து வெளியே செல்லுங்கள். என்னை மேலும் தொந்தரவு செய்யாதீர்கள்" என்றார். ஆனால் அந்த மனிதன் தொடர்ந்து அங்கேயே அமர்ந்திருந்தார்.

அப்போது அங்கே வந்த பாபாவிடம் ஆதி நிலைமையை விளக்கினார், "இந்த மனிதன் உண்மையிலே ஒரு தலைவலி!"

அதற்கு பாபா பதிலளித்தார், "**அவர் உங்களுக்குத் தலைவலியாக இருந்தால், அது நல்லது. நீங்கள் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். இதனால் அவர் உங்களுக்கு சகிப்புத்தன்மையைக் கற்றுத் தருகிறார். அவருக்கு நன்றியுள்ளவராக இருங்கள். அவருக்கு மருந்து கொடுப்பதன் மூலம் அவர் உங்களுக்குக் கடமைப்பட்டவரல்ல; மாறாக, பிறருக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பை வழங்கி உங்களுக்கு உதவுகிறார்.**"

ஆதி ஜூனியரின் உதவியுடன் பாதிரி, முரளி இருவரும் ஹோமியோபதி பயிற்சியை மேற்கொண்டனர், பின்பு பாதிரி அரன்காவ்ம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்குச் சென்று சிகிச்சை அளிக்கத் தொடங்கினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட ஏதோ வாக்குவாதத்தின் போது, பாபா, ஆதி ஜூனியரை ராஹுரி கேபினுக்கு அழைத்தார். ஆதியின் மனநிலை சரியில்லாமல் இருந்ததால் அவர்களுக்கிடையே சில சூடான விவாதம் ஏற்பட்டது. கடைசியாக, "**நான் உங்களுக்குச் சொல்கிறேன் நான் கடவுள் என்று! எனது பாதங்களில் விழுந்து வணங்குங்கள்**" என்று பாபா தெரிவித்தார். உடனடியாக, தனது பெரிய சகோதரரின் வார்த்தைகளின்

உண்மையை உணர்ந்ததால் ஆதியின் கோபம் தணிந்தது. பாபா, அவரைக் கடவுள் என்று நேரடியாக அவரிடம் கூறிய ஒரே தருணம் அது.

ஜனவரி 14ஆம் தேதி பிந்த்ரா ஹவுஸில் வாழ்ந்துவந்த ஜெஸவாலா குடும்பத்தினரைப் பார்க்க பாபா பூனாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரது நெருங்கிய அன்பர்களுக்காக அளித்த ஒரு சிறிய தரிசன நிகழ்ச்சி, 896, நானா பேட்டில் (NANA PETH), பிந்த்ரா ஹவுஸுக்கு எதிரே அமைந்த அஹில்யா ஆசிரமத்தில் (AHILYA ASHRAM) நடைபெற்றது. அதே நாளில் பாபா மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

சில பணிகளின் நிமித்தம், மெஹராபாத்திலிருந்து பூனாவிற்கு ஒரு முறை பாபாவுடன் தனியாக வாகனம் ஓட்டிச்சென்றதை ஸரோஷ் நினைவு கூர்ந்தார். மாலையில் திரும்பி வரும் வழியில், பாபா, அரை நிர்வாணமாக, அசுத்தமாக இருந்த ஒரு மஸ்தை எதிர்கொண்டு, ஸரோஷிடம் அவருக்குத் தேநீர் வழங்குமாறு கூறினார். பாபா காரின் முன் இருக்கையில் அமர்ந்திருந்தார், மஸ்த் பின் இருக்கையில் அமர்ந்து 'பந்த் கார்டன்' பாலத்தின் எதிரே அமைந்த ஒரு தேநீர் கடைக்கு அழைத்துச் செல்ல ஒப்புக்கொண்டார். ஸரோஷ் தேநீரை மஸ்திடம் கொடுத்தபோது, அவர் அதில் பாதியை இருக்கையில் கொட்டியதை ஸரோஷ் திகிலுடன் நோக்கினார். பாபா, அந்த மஸ்தை அவர்களுடன் மெஹராபாத்திற்கு வருவாரா என்று கேட்கச் சொன்னார், அதற்கு அவர் ஒப்புக்கொண்டார். மெஹராபாத்தில் சில நாட்கள் தங்க வைத்து பின்பு பூனாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

19ஆம் தேதி சாஞ்சி, ராவ்ஸாஹேப் இருவரும் மெஹராபாத் வந்து, பாபாவை சந்தித்துப் பேசினர். 23ஆம் தேதி, பாபா, டாக்டர் கனியிடம் பிரபல கவிஞர் ஜிகரின் சில கவிதைகளை வாசிக்கச் சொன்னார்.

இவ்வேளையில் மற்றுமொரு மஸ்த் பயணத்திற்கான ஏற்பாடுகள் தொடங்கின. இந்தப் பயணங்களின் போது பெரும்பாலும் தூய்மையான குடிநீர் கிடைக்கவில்லை. 1943, ஜனவரி 24 அன்று, ஆதி சீனியருடன், பயணத்தின் போது எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்து, கருத்துத் தெரிவிக்கையில் பாபா, "**தீவிரமான தாகம் எடுக்கும் வேளையில், அசுத்தமான நீர் அருந்தினால், அது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்காது. ஆனால் தாகம் தீவிரமாக இல்லாதபோது, அந்த நீரைப் பருகினால் அது தீங்கு விளைவிக்கும்**" என்று கூறினார்.

அடுத்த நாள், பாபா மெஹராபாத்திலிருந்து பைதூல், குஸ்தாஜி, முஹமது மஸ்த் ஆகியோருடன், ஔரங்காபாத் வழியாக குல்தாபாத்திற்குப் (KHULDABAD) புறப்பட்டார்; ஆதி சீனியர் காரை ஓட்டிச்சென்றார். காக்காவும் சகனும் அவர்களுக்குத் தங்குவதற்கான ஒரு வீட்டை முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தனர். இது மிகவும் சிறியதாக இருந்ததால், மறுநாள் அவர்கள் ரயில்

நிலையத்திற்கு அருகிலமைந்த பங்களா ஒன்றிற்குச் சென்றனர். ஆதி சீனியர் அன்றிரவு சகனுடன் ரயிலில் அஹமதுநகருக்குத் திரும்பி வந்தார்.

குல்தாபாத்தைச் சென்றடைந்த பாபா, முஹமது மஸ்துடன் ஏகாந்தவாசத்தில் தொடங்கிய பணி ஏழு நாட்கள் நீடித்தது. இக்காலகட்டத்தில், காக்கா, ஆன்மீகப் பணிக்காக 'மாய் பாப்' (MAI BAP) என்ற உயர் நிலை மஸ்தை பாபாவின் பங்களாவிற்கு அழைத்து வந்தார்.

ஜனவரி 30ஆம் நாள், பாபா ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட குதுப் ஷா (QUTUB SHAH) என்ற மஸ்தைத் தொடர்பு கொண்டார் - இவர் 'ஔரங்காபாத் நகரின் தலைவர்' என்று அழைக்கப்படுகிறார்; மஜ்ஜூப் வகையைச் சார்ந்தவர், அவரது உடல் செயல்பாடுகள் அனைத்தும் முற்றிலும் உணர்வற்ற நிலையில் இருந்தன.

பிப்ரவரி 2ஆம் தேதி தனது மஸ்த் பணியை நிறைவு செய்து பாபா, ஆதி சீனியரின் காரில் காக்கா, குஸ்தாஜி, முஹமது மஸ்த் ஆகியோருடன் மெஹராபாத் திரும்பி வந்தார். (பைதூல் ரயிலில் பயணம் செய்தார்.) மறுநாள் காலையில், பாபா அனைத்து பெண்மணிகளையும் ஸரோஷ் சினிமாவில் திரையிடப்பட்ட ஒரு தனியார் படத்திற்கு அழைத்துச் சென்றார்.

கோடைகாலத்தைக் கருத்தில் கொண்டு ஆசிரமத்தை மஹாபலேஷ்வருக்கு மாற்ற பாபா விருப்பம் தெரிவித்தார். ஆண், பெண் அனைவரும் தங்குவதற்குப் பொருத்தமான இடங்களை ஏற்பாடு செய்ய காளேமாமா அங்கு அனுப்பப்பட்டார்.

மெஹர் பாபா ஔரங்காபாத் செல்வதற்கு முன்பு, பிப்ரவரி 1ஆம் நாள், இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் வாழும் 99 அன்பர்களுக்கு, டிசம்பர் மாத கூட்டத்தில் முடிவு செய்ததற்கு இணங்க, உத்தரவுகளை வழங்குவதற்கான அறிவுறுத்தல்களுடன் ராம்ஜூ, ஜால்பாய், காளேமாமா, முரளி போன்ற சில மண்டலிகளை அனுப்பி வைத்தார். ஒவ்வொருவருக்கும் மெஹர் பாபாவின் கட்டளைகள் அடங்கிய மூடிய உறைகளை உடனடியாக வழங்கினர். முதற் குழுவில் உள்ள ஒருவருக்கு பாபா அளித்த அறிவுறுத்தல்களின் எடுத்துக்காட்டு பின்வருமாறு:

**உலகை ஆன்மீகமயமாக்கும் எனது பணியில், முற்றிலுமாக எனக்குக் கீழ்ப்படியும் விருப்பத்தைத் தெரிவித்து, நீங்கள் கையொப்பமிட்ட குறிப்பீட்டிற்கிணங்க, எந்தவோர் ஆபத்தான அல்லது உயிரைத் துறக்கும் சூழ்நிலையிலும், நீங்கள் மேற்கொள்ள வேண்டிய எனது திட்டவட்டமான வழிமுறைகள் பின்வருமாறு: 1943, பிப்ரவரி 28 முதல், உலகை ஆன்மீகமயமாக்கும் எனது பணியில் பங்கேற்க, காலவரையற்ற காலத்திற்கு, உடல் ரீதியாக என்னுடன் இணைந்திருங்கள். அதற்கிணங்க அனைத்து உலக உறவுகளையும் துண்டிக்கத் தயாராக இருங்கள்.**



மெஹர் பாபாவின் கிழக்கத்திய பெண் மண்டலி
(MEHER BABA'S EASTERN WOMEN MANDALI)
நிற்பவர்கள் (STANDING): கோர்ஷத் (KHORSHED),
நர்கிஸ் தாதாசாஞ்சி (NARGIS DADACHANJI), மெஹரா (MEHERA),
தங்கை மணிஜா (SISTER MANIJA), கேட்டி ஈரானி (KETI IRANI),
அர்னவாஸ் (ARNAVAZ)
அமர்ந்திருப்பவர்கள் (SITTING): டாக்டர் கோஹெர் (DR. GOHER),
மெஹரு (MEHERU), ஸில்லா (ZILLA)



# மஹாபலேஷ்வர், ஷோலாபூர் & மெஹராபாத்

**(Mahabhaleshwar, Sholapur & Meherabad)**

1943, பிப்ரவரி 10ஆம் நாள், பாபா ஆண், பெண் மண்டலியுடன் மஹாபலேஷ்வருக்குப் புறப்பட்டார். இந்தியப் பெண்மணிகளைத் தவிர, அவர்களுடன் நான்கு மேற்கத்தியர்கள் வாழ்ந்து வந்தனர்: ஐரீன் பில்லோ, கிட்டி டேவி, மார்கரெட் க்ராஸ்கே மற்றும் ரானோ கெய்லி. மெஹராபாத்தில் செய்ததைப் போல, மஹாபலேஷ்வரிலும் பாபா, பல குழுக்களை உருவாக்கினார், ஆனால் இப்போது அவர், ஐரீன், மார்கரெட் இருவரையும் ஒரு குழுவிலும், கேட்டி, ரானோ, கிட்டி டேவி ஆகியோர் மற்றொரு குழுவிலும் இருக்கச் செய்தார். இங்கேயும், பாபா, மெஹரா, மணி இருவரையும் தவிர வேறு எந்தப் பெண்மணிகளையும் பார்க்கவில்லை. அவர்கள் வேலி வியூ (VALLEY VIEW) எனும் பங்களாவில் தங்கியிருந்தனர். வேலி வியூ வளாகத்தில் ஒரு பழுப்பு நிற குதிரை வாங்கி வரப்பட்டது; அதில் மெஹரா சவாரி செய்தார். ரானோ ஒரு புறமும், மற்றொரு பெண்மணி மறுபுறமும் கண்காணிக்க, மெஹரா அவர்களுக்கிடையே முன்னும் பின்னும் சவாரி செய்தார்.

மஹாபலேஷ்வரில் பாபாவுடன் இருந்த ஆண் மண்டலி பைதூல், குஸ்தாஜி, டாக்டர் நீலு, விஷ்ணு, கிருஷ்ணா, வெங்கோபா ராவ் ஆகியோர் யூனியன் ஹவுஸ் (UNION HOUSE) எனும் விருந்தினர் விடுதியில் தங்கினர். பாபாவுடன் பணியில் ஈடுபடாத போதெல்லாம், எரச், காக்கா இருவரும் தொடர்ந்து மஸ்துகளைத் தேடி அலைந்தனர். மெஹராபாத் மண்டலியில் இதர உறுப்பினர்களும் மஸ்துகளைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். 22ஆம் நாள் குதிரையை கவனிப்பதில் உதவுவதற்கு சிதுவும், மும்பையிலிருந்த சாஞ்சியும் மஹாபலேஷ்வருக்கு அழைக்கப்பட்டனர்.

1943, பிப்ரவரி 14 ஞாயிற்றுக்கிழமை மெஹர் பாபாவின் 49ஆவது பிறந்த நாளன்று, மும்பை, பூனா, நாக்பூர், ஷோலாபூர், மதராஸ், லாஹூர் ஆகிய ஆறு வெவ்வேறு நகரங்களில் கூட்டங்கள் நடைபெற்றன. பாபா, ஏழாவது கூட்டத்தை ஹைதராபாத்தில் ஏற்பாடு செய்ய விரும்பினார், ஆனால் அது முடியாமலாயிற்று. 'ஆன்மீக ஊழியர்களுக்கான பணி' (THE TASK FOR SPIRITUAL WORKERS) எனும் அவரது செய்தியை வழங்க பாபா ஒவ்வோர் இடத்திற்கும் ஒரு பிரதிநிதியை அனுப்பி வைத்தார். சாஞ்சி மும்பைக்குச் சென்றார்; ஸவக் பூனா; நாக்பூருக்கு பாபாதாஸ்; பண்டோபா, காடேக்கர் இருவரும் ஷோலாபூருக்கும், டாக்டர் கனி மதராஸ் மற்றும் ஆதி சீனியர் லாஹூருக்கும் சென்றனர்.

பாபாவின் செய்தி, குறிப்பாக இந்தக் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்ட ஆன்மீக ஊழியர்களை இலக்காகக் கொண்டது. '**தெய்வீகப் பொக்கிஷம் ஒவ்வொருவரிடத்திலும் எப்பொழுதும் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு மக்களை எழுச்சியுறச் செய்யுமாறு**' பாபா அவர்களுக்கு வலியுறுத்தினார்; ஆனால் அதை உணர்வுபூர்வமாக அனுபவிப்பது ஒவ்வொரு தனி மனிதனின் கடமையாகும். இதைப் பற்றிய ஒரு சுருக்கமான பகுதி இங்கே:

**ஆன்மீகப் பாதையில், சீடருக்கான இன்றியமையா தகுதி என்னவெனில், மானிடனை இறை உணர்விற்கு நெருக்கமாகக் கொணரும் ஆன்மீக செயற்காரணத்திற்காக உழைக்கத் தயாராக இருப்பதாகும். (உங்களின்) திடமான நம்பிக்கை மற்றும் என் மீதான அன்பின் மூலம், உலகை ஆன்மீகமயமாக்கும் எனது உலகளாவிய பணியைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்தில், நீங்கள் முழு மனதுடன் உங்களை முன்நிறுத்திக் கொள்வதற்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உண்மைப்பொருளை நீங்கள் உங்களுக்காக மட்டுமே அடையாமல், ஆழ்ந்த அறியாமையால் சூழப்பட்டிருக்கும் மனிதகுலத்திற்காக, மிக உற்சாகமான மற்றும் வீரம் மிகுந்த வழிகாட்டிகளாக நீங்கள் மாறுவீர்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது...**

**முழு உலகமும் பிரிவினை என்ற தவறான எண்ணத்தில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது, மேலும் மாயையின் இரட்டைத்தன்மையில் சிக்கிக் கொண்டிருப்பதால், அதன் அனைத்து சிக்கல்களிலும் உட்பட்டுள்ளது. ஆன்மீக ஊழியர்கள் அனைத்து உயிர்களின் ஒற்றுமையின் உண்மையைப் புரிய வைப்பதன் மூலம், கற்பனையால் உருவாக்கப்பட்ட இருமைத்தன்மையின் துன்பத்திலிருந்து உலகை மீட்க வேண்டும்...**

**நான் கொணரும் நித்திய ஜீவனை மரபுரிமையாக அனுபவிக்க வேண்டுமெனில், மக்களின் மனம் எல்லா விதமான சுயநலத்தையும், குறுகிய மனப்பான்மையையும் முற்றிலும் அழிக்க வேண்டும். அவர்களின் சுயநலத்தையும் குறுகிய நோக்கங்களையும் கைவிட மக்களை வற்புறுத்துவது எளிதான காரியமல்ல.**

பாபா பின்னர், ஆன்மீக ஊழியர்களின் பணி எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பதற்கான சில குறிப்புகளை வழங்கி, இவ்வாறு கூறினார்:

**ஆன்மீகத் தொண்டர்களின் அயராத உழைப்பின் மூலம், நிலையான அமைதி, ஆற்றல்மிக்க நல்லிணக்கம், திடமான நம்பிக்கை, மங்காத பேரின்பம், அழிவற்ற இனிமை, களங்கமில்லா தூய்மை, ஆக்கத்திறன் மிக்க அன்பு, அனைத்தையும் இதயத்தால் புரிந்துக்கொள்ளும் தன்மை ஆகிய அனைத்தும் அடங்கிய புது வாழ்வில் மானிடன் வழிநடத்தப்படுவான்.**

1943, பிப்ரவரி மாதத்தில், ஆங்கிலேய அரசாங்கம் போர் காரணமாக, சோளம், கோதுமை மற்றும் பிற தானியங்களை இந்தியா முழுவதும் பங்கீட்டு முறையால் பகிர்ந்தளிக்கப்படும் என்று அறிவித்தது. இந்தச் செய்தியைக் கேட்ட மெமோ தனது அண்டை வீட்டாரிடம் முறையிட்டார், "இந்த உலகம் எந்தமாதிரியான நிலையை எட்டியுள்ளது? பகிர்ந்தளிக்கப்படும் தானியமா? அது தொடங்கும் முன்பு நான் உடலைத் துறப்பது நல்லது."

சில நாட்களுக்குப் பிறகு மெமோ ஒரு தையல்காரரை வரவழைத்து, ரவிக்கைகள் தயாரிக்கத் தேவையான துணியைக் கொடுத்து, இந்த விசித்திரமான கருத்தைத் தெரிவித்தார், "இந்த ஆடைகளை அணிய நான் உயிருடன் இருப்பேனா என்று எனக்குத் தெரியவில்லை." உண்மை என்னவெனில், சமீபத்தில் மெமோவிற்கு ஒரு கனவு வந்தது, அதில் சிவப்பு நிறத்தில் ஒரு குதிரை தனது வீட்டிற்குள் நுழைவதைக் கண்டு, அவருடைய கடைசி நாட்கள் நெருங்கிவிட்டதற்கான அடையாளமாக இதை எடுத்துக் கொண்டார்.

1943, பிப்ரவரி 21 அன்று, மெமோ கீழே விழுந்து மூளையில் ரத்தக்கசிவு ஏற்படவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, மருத்துவர்கள் அவரைக் காப்பாற்ற முடியாது, மெமோ உயிர் பிழைக்க மாட்டார் என்றும் கூறினர். அவ்வேளையில் மஹாபலேஷ்வரில் இருந்த பாபாவிற்கு, உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின்னர், 23ஆம் நாள் காலை எட்டு மணிக்கு பாபா மண்டலியின் பங்களாவிற்கு வந்து, தனது சகோதரர்களுக்கு (ஜால்பாய், பெஹராம், ஆதி ஜூனியர்) தற்போதைய நெருக்கடியில் உதவ, பூனாவிற்குச் செல்லுமாறு சாஞ்சிக்கு அறிவுறுத்தி, இவ்வாறு எடுத்துரைத்தார், "**எனது தாயார் உயிரைத் துறந்துவிடுவார், எனவே மும்பை, அஹமதுநகர் மற்றும் பிற இடங்களில் வாழும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தகவல் வழங்கி, தயாராக இருக்குமாறு தெரிவிக்கவும்**." சாஞ்சி அன்று பிற்பகல் பேருந்தில் புறப்பட்டு மாலை ஏழு மணிக்கு பூனா வந்தடைந்தார். பாபாவின் மூன்று சகோதரர்கள் மருத்துவமனையில் தங்கள் தாயாரை கவனித்துக் கொண்டனர்.

பிப்ரவரி 25 வியாழக்கிழமை மெமோ, உணர்வற்ற நிலையில் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டார். மெமோவின் முகத்தில், அவர் ஏதோ அற்புதமான ஒன்றைப் பார்ப்பது போல் இனிமையான புன்னகை மலர்ந்திருந்தது, அன்று இரவு, 9:40 மணிக்கு, மெமோ அவரது 65 வயதில் காலமானார், ஆனந்தப் பெருங்கடலில் என்றென்றும் இணைந்தார். சாஞ்சி இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

இறுதி காலம் குறிப்பிடத்தக்க வகையில் அமைதியாகவும் திடீரெனவும் இருந்தது. கால் மணி நேரத்திற்கு முன்னர் அவர் சிரமப்பட்டு சுவாசிப்பதைக் கண்டோம். ஆதி ஜூனியர், பெஹராம், நான் மூவரும் பெஹராமின் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது, ஷிரீன்மாய் அவரது கடைசி நிமிடங்களில் இருப்பதாகத் திடீர் அழைப்பு வந்தபோது, நாங்கள் அவரது படுக்கைக்கு

விரைந்தோம். மிகவும் அமைதியான இறுதி கட்டம்; பதினைந்து நிமிடங்களில் ஷிரீன்மாய் தனது இறுதி மூச்சை விடும் நேரம்; உண்மையிலேயே முடிவடையும் அந்த கணத்தை எவரும் உறுதியாகச் சொல்ல முடியாது.

அன்று இரவு தொலைத்தந்தி வந்ததும், மெஹர் பாபா மஹாபலேஷ்வரிலிருந்து பூனாவிற்கு நேரடியாக வந்தபோது நள்ளிரவில் தாமதமாகிவிட்டது, ஆனால் மெமோவின் உடலைக் கடைசியாகப் பார்க்க அவர் 'பாபா' இல்லத்திற்குள் நுழையவில்லை, மாறாக வீதியில், சற்று தொலைவில் வெளியே நின்றார். சிறிது நேரத்திற்குப் பின்னர், எரச்சுடன் 'பிந்த்ரா' ஹவுஸுக்குச் சென்றார்.

பிந்த்ரா ஹவுஸில், பாபா, கெய்மாயிடம், **"நான் வருவதற்கு முன்பே மெமோ உயிரைத் துறந்தது நல்லது. இல்லையெனில், மெமோ உயிரைத் துறப்பதை நான் அனுமதித்திருக்க மாட்டேன், அவர் பெரிதும் சிரமப்பட வேண்டியதாக இருந்திருக்கும். அவர் மெதுவாக குணமடைந்திருக்கலாம், ஆனால் அது அவரது உடலை முடக்கியிருக்கும்" என்றார்.**

மெமோ அவரது இறுதி மூச்சை சுவாசித்த வேளையில், கெய்மாய், ஷிரீன்மாயின் மூக்கு துவாரங்களிலிருந்து பல சின்னஞ்சிறிய, பளபளப்பான, தங்கக் கைகள் வெளிவந்ததைக் கண்டதாகவும், அவை மிதந்து பறந்து செல்வதற்கு முன்னர் அவர் உடல் மீது வட்டமிட்டதாகவும் பாபாவிடம் கூறினார். இதைக் குறித்த பாபாவின் இறுதிக் கருத்து: **"அவர் இப்போது விடுவிக்கப்பட்டார்."**

**"ஷிரீன்மாய்! காலம் எப்பொழுதும்**

**உங்களை நினைவில் கொள்ளும்!**

**அவதார புருஷரை ஈன்றெடுத்த**

**எவ்வளவு பெரிய பாக்கியவான் நீங்கள்!"**

காலம் இப்படிப் பறைசாற்றியது: **"உங்கள் பாக்கியத்தை வார்த்தைகளால் போதுமான அளவில் போற்றிப் புகழ முடியாது. நீங்கள் யுகத்தின் அன்னை! எதிர்வரும் காலங்களில் உங்கள் பெயர் புகழ்ந்து பாடப்படும்! ஓ, மெமோ, எங்களின் உயர்வான பிரியாவிடை உங்களுக்கு!"**

பாபாவும் எரச்சும் உடனடியாக மஹாபலேஷ்வருக்குப் புறப்பட்டனர்.

ஷிரீன்மாயின் இறுதிச் சடங்குகள் மறுநாள் மாலை நடைபெற்றது, அவரது உடல் அமைதி கோபுரத்திற்குக் (TOWER OF SILENCE) கொண்டு செல்லப்பட்டது. மும்பை மற்றும் அஹமதுநகரிலிருந்து ஏராளமான அன்பர்கள் இறுதி மரியாதை செலுத்தினர். மெஹர் பாபா அவரது பிரியமான தாயின் உடலுக்கு மூன்று முறை வணக்கத்தைச் செலுத்தியதாக சிலர் தெரிவித்தனர்.

அடுத்த நாள், பிப்ரவரி 27, பாபா பூனாவிற்குத் திரும்பி வந்து, பிந்த்ரா ஹவுஸில் தங்கினார். இந்த நேரத்தில் அவர் பாபாவின் இல்லத்திற்குச் சென்று, ஜால்பாய், ஆதி ஜூனியர், பெஹராம், அவரது மனைவி பெரின் ஆகியோரை சந்தித்தார். பெஹராம், பெரின் இவர்களின் குழந்தைகள், ஷெரூ (SHEROO - எட்டு வயது), குல்னார் (GULNAR - ஏழு), பாபாவைப் பெரிதும் நேசித்தனர். சிறிது நேரம்,

பாபா இரண்டு குழந்தைகளுடன் விளையாடினார். பின்னர் அவர் அனைவருக்கும் விளக்கினார்: “**மெமோ என்னிடம் வந்துவிட்டார்; இப்போது முழுமையான ஆனந்தத்தை அனுபவிக்கிறார். எனது பணியில் அவரது பாகத்தைச் செவ்வனே செய்து, இப்போது என்னிடம் வந்துவிட்டார். மெமோ மிகவும் துணிச்சலான பெண்மணி, முற்றிலும் அச்சமற்றவர்.**

“**போபோ உயிரைத் துறந்தபோது, நீங்கள் மூவரும்** (ஜால்பாய், பெஹ்ராம், ஆதி ஜூனியர்) **மேற்கில் என்னுடன் இருந்ததால், அவர் இங்கே பூனாவில் தனியாக இருந்தார். மெமோவின் தைரியத்தின் காரணமாக, உங்கள் மூவரையும் என்னுடன் அழைத்துச் செல்ல முடிந்தது. இப்போது மெமோ மிகவும் மகிழ்ச்சியாகவும், அனைத்து உலக உறவுகளிலிருந்தும் விடுபட்டு சுதந்திரமாக இருக்கிறார்.**”

பின்பு பாபா, தாயார் எழுதி வைத்த உயிலின்படி குடும்ப சொத்தைத் தனது மூன்று சகோதரர்களிடையே பிரித்து, அன்றிரவு பிந்த்ரா ஹவுஸுக்குத் திரும்பி வந்தார்.

அன்று பிற்பகலில், மண்டலியுடனான சந்திப்பின் போது, மாஸாஜி, பப்பா ஜெஸவாலா இருவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்பு காக்கா, சாஞ்சி இருவரிடையே, மானேக் மேத்தாவின் ‘ஜப் மண்டலின்’ நடவடிக்கைகள் குறித்து விவாதம் நிகழ்ந்தது. சாஞ்சி அவரது நாட்குறிப்பில் பதிவு செய்தபடி:

மெஹர் பாபா, திட்டவட்டமாக இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு இங்கு வந்து தங்கி, இந்தப் புயலை (விவாதத்தை) உருவாக்கியது போலத் தோன்றியது. அவர் சொன்னது போல், இறுதியில் இது அவரது லீலை (தெய்வீக விளையாட்டு). இந்தச் சூடான விவாதத்தின் போது, பாபா அமைதியான பார்வையாளராகத் தனது பங்கை வகித்ததோடு, அதை ரசித்தது போலவும் தோன்றியது. (விவாதத்தில் பங்கெடுத்தவர்கள் சீற்றத்தில் ஆத்திரமடைந்தாலும்) அவர் விரும்பியபடி ‘திருவிளையாடல்’ அரங்கேற்றப்பட்டது. சம்பந்தப்பட்ட அனைவரின் பலவீனங்களையும் இது எவ்வளவு அற்புதமாக வெளிச்சமிட்டுக் காட்டியது! இது ஒவ்வொருவரின் நரம்புகளை முறுக்கச்செய்த அதே வேளையில் சகிப்புத்தன்மையின் வலிமையை சோதித்தது. என்ன ஒரு விளையாட்டு! என்ன ஒரு தெய்வீக லீலை! என்ன ஒரு வாழ்க்கை அனுபவம்!

பாபா பிந்த்ரா ஹவுஸில் அன்றிரவைக் கழித்து, பிப்ரவரி 28, ஞாயிற்றுக்கிழமை, பூனாவிலிருந்து அஹமதுநகருக்கு, குல்மாய், கோர்ஷெத் தமானியா, ஆதி சீனியர் ஆகியோருடன் ஸரோஷின் காரில் புறப்பட்டார்.

காக்கா, குஸ்தாஜி இருவரும் சையதுடன் (ஓட்டுநர்) வேறொரு காரில் சென்றனர். பாபா அக்பர் அச்சகத்தில் மதிய உணவை உண்டு, பின்பு குஷ்ரு குவாட்டர்ஸுக்கு விஜயம் செய்து, இரவு 8:30 மணிக்கு மெஹராபாத் வந்து சேர்ந்தார். அரை மணி நேரம் மண்டலியுடன் பல விஷயங்களைப் பற்றி விவாதித்தப் பிறகு, பாபா மேல்மலையை நோக்கி நடந்து சென்று, சமாதி

அறையில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். மறுநாள் தொடங்கி, தினமும் காலையிலும் மாலையிலும் இரண்டு முறை பால் சேர்க்காத தேநீர் மட்டுமே அருந்தினார். மார்ச் 2ஆம் தேதி முதல், இரண்டு ஆண் மண்டலி, ஒருவரைத் தொடர்ந்து ஒருவர், அவருடன் 24 மணி நேரம் உபவாசம் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

பாபா, மண்டலியில் சிலரை அவரது பணி நிமித்தம் மேல்மலையில் சந்தித்தார். எவ்வாறாயினும், காக்கா, குஸ்தாஜி, பைதூல் மூவரும் பாபாவின் ஏகாந்தவாசத் தேவைகளை கவனிக்க அவருடன் மேல்மலையில் தங்கியிருந்தனர். ஏகாந்தவாசத்தின் கடைசி சில நாட்களில், பாபா தினமும் மாலை ஐந்து மணிக்கு ஸெயிலர், பெண்டு, சகன், முரளி ஆகியோரை சீட்டு விளையாட அழைத்தார், மேலும் வேடிக்கையான கதைகளையும் நகைச்சுவை துணுக்குகளையும் கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

மார்ச் 6 மற்றும் 7ஆம் நாள் நள்ளிரவில் ஒரு டம்ளர் ஆரஞ்சு ரசத்துடன் பாபா அவரது உபவாசத்தை நிறைவு செய்து, "**இனிமேல், ஏகாந்தவாசம் இல்லை. தேவைக்கேற்ப நான் அவ்வப்போது தரிசனத்திற்காக வெளியே வருவேன்**" என்று குறிப்பிட்டார்.

மார்ச் 7 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு பாபா மேல்மலையிலிருந்து இறங்கி வந்து, மண்டலியின் குவாட்டர்ஸில் ஒரு கிண்ணம் பருப்பு மற்றும் காஃபி அருந்தினார். மதிய வேளையில் ஒரு கிண்ணம் காய்கறி சூப்பும் உட்கொண்டார். அடுத்த நாள், ஸரோஷ் சினிமாவில் மண்டலியுடன் ஒரு நகைச்சுவை திரைப்படத்தைப் பார்க்கச் சென்று, பிற்பகல் 2:30 மணிக்கு, நிகழ்ச்சி முடிந்ததும், பெரும்பாலான மண்டலியுடன் குஷ்ரு குவாட்டர்ஸுக்கு விஜயம் செய்து, மாலை ஏழு மணிக்கு மெஹராபாத் திரும்பினார்.

ஷோலாபூர், பர்ஸி (BARSI) போன்ற இடங்களில் வாழும் அன்பர்களின் வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் விதமாக, பாபா தரிசன நிகழ்ச்சிக்காக இணக்கம் தெரிவித்து, 1943, மார்ச் 9ஆம் நாள் காலை 6:30 மணிக்கு குல்மாய், ஆதி சீனியர், அமீர், ஸரோஷ் ஆகியோருடன் அவரது காரில் புறப்பட்டார். அவர், பூனா பாபா இல்லத்தில் சொத்து சம்பந்தமான சில விஷயங்களைச் சீர் செய்து, பின்பு பிந்த்ரா மாளிகைக்கு விஜயம் செய்தார். காக்கா, ஆதி சீனியர் இருவரும் மாலை ரயிலில் பெட்டி படுக்கைகளுடன் புறப்பட்டுச் சென்ற அதே நேரத்தில், பாபா, எரச், குஸ்தாஜி, பைதூல் ஆகியோர் ஸரோஷின் காரில் டோண்ட் (DHOND) ரயில் நிலையம் சென்று அவர்களுடன் இணைந்தனர். பாபாவின் வருகைக்காக அன்புடன் ஏற்பாடுகளைச் செய்த டோண்ட் ரயில்வே காவலரின் குவாட்டர்ஸில் பாபா தமது அன்பர்களுக்கு தரிசனம் வழங்கிய பின்பு, பாபாவும் குழுவும் ரயிலில் பயணத்தைத் தொடங்கினர். ஜால்பாய், பப்பா ஜெஸவாலா இருவரும் டோண்ட் ரயில் நிலையத்தில் மூன்றாம் வகுப்பில் முன்பதிவு செய்ய பூனாவிலிருந்து டோண்டிற்கு ரயிலில் பயணம் செய்தனர்.



ஷோலாபூர் & பர்ஸி, மார்ச் **1943** (SHOLAPUR & BARSI, MARCH 1943)

குருதுவாடி ரயில் நிலையத்தில் பாபாவை சந்திக்க ஆவலுடன் காத்திருந்த ஏராளமான அன்பர்களுக்கு, தமது ஆசீர்வாதங்களை வழங்கிய பின்பு, பாபாவும் மண்டலியும் பயணத்தைத் தொடர்ந்து, நள்ளிரவில் ஷோலாபூரில் ராமச்சந்திர காடேக்கரின் (RAMCHANDRA GADEKAR) இல்லத்தை வந்தடைந்தனர். இரவு உணவிற்குப் பிறகு, காடேக்கரின் குடும்பத்தினர் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டபோது அதிகாலை 3:00 மணி ஆனது. பாபா மற்றும் மண்டலி ஓய்வெடுக்க காடேக்கரின் இல்லத்திற்கு அருகில் அமைந்த டாக்டர் கோட்னியின் (DR. KOTNI'S) பங்களா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மெஹர் பாபாவின் ஷோலாபூர் நிகழ்ச்சிக்கான திட்டத்தை அறிவித்ததும், டாக்டர் கனி, பண்டோபா, பாபாதாஸ், அண்ணா 104 ஆகியோர் முன்கூட்டியே அங்கு அனுப்பப்பட்டனர். திரை அரங்குகளுக்கு முன்னால் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்கள் மூலம் நிகழ்ச்சிகளை வெகுஜனங்களுக்கு அறிவிக்கும் முக்கிய கடமையைத் தவிர, உள்ளூர் ஊழியர்களின் உதவியுடன் டாக்டர் கனி, பாபாவின் வருகையோடு தொடர்புடைய மூன்று முக்கியமான நிபந்தனைகளை, வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட வரவேற்புக் குழுக்களுக்கு விளக்கினார்.

- **பார்வையாளர்கள் தூரத்திலிருந்து கூட மெஹர் பாபாவின் பாதங்களைத் தொடவோ அல்லது அவருக்கு முன் சிரம் பணிந்து வணங்கவோ கூடாது.**
- **தனியார் நேர்காணல்களுக்கு அனுமதி இல்லை.**
- **தரிசனத்திற்காக வருபவர்கள் எவரும் பொருளுலக ஆசைகள் எதையும் வெளிப்படுத்தக்கூடாது.**

பெண்டு, பாதிரி, காளேமாமா, முரளி, மாஸாஜி ஆகியோர் மெஹராபாத்திலிருந்து வந்தனர். காடேக்கரின் மனைவி குணாதாய் (GUNATAI) அனைவருக்கும் சிறப்பு உணவை ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அதே வேளையில், காடேக்கர், தரிசன நிகழ்ச்சிக்கான அனைத்து தேவைகளையும் மேற்பார்வையிட்டார். காடேக்கரின் அயராத பணியின் காரணமாக, மாவட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் மெஹர் பாபாவின் ஆன்மீக நோக்கத்தை அறிய முடிந்தது.

1943, மார்ச் 10 அன்று திட்டமிடப்பட்ட தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது; மெஹர் பாபா, காடேக்கரின் வீட்டருகில் எழுப்பப்பட்ட ஒரு மண்டபத்தில் இரண்டு மணி நேரம் தரிசனம் வழங்கினார். பின்னர், ஒரு மணி நேரம் அதை நிறுத்தி, பாபாதாஸ், அண்ணா 104 ஆகியோர் அழைத்து வந்த ஏழு மனநிலை பாதிக்கப்பட்ட மற்றும் மஸ்துகளை பாபா நீராட்டி, புத்தாடை அணிவித்து அவர்களுக்கு உணவூட்டினார்.

பிற்பகல் இரண்டு முதல் நான்கு மணி வரை, பாபாவை மகிழ்விக்க, கிருஷ்ணாராவ் என்பவரின் கவாலி நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியின் போது, சிலர் மெஹர் பாபாவை முதல் முறையாக சந்திக்க வந்தனர். சித்தேஷ்வர்

கோயிலின் (SIDDHESHWAR TEMPLE) அறங்காவலர் திரு. வரத் (MR. VARAD), பக்திமிக்க ஓர் இந்து, கோயிலின் பக்தர்களுக்கு தரிசனம் வழங்குமாறு பாபாவிடம் கோரிக்கை விடுத்தார். பாபா, அன்று மாலை ஏழு மணிக்கு அங்கு வருகை தருவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து, மாலை நான்கு முதல் ஏழு மணி வரை, ஆயிரக்கணக்கானோர் பங்கெடுத்த, பொது தரிசன நிகழ்ச்சியை நிறைவு செய்து, அங்குள்ள பக்தர்களை சந்திக்க பாபா, சித்தேஷ்வர் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கோயிலின் அறங்காவலர்கள் மெஹர் பாபாவை, பிரமாண்டமான பாணியில் வரவேற்றனர். பாபா, அந்தக் கோயில் அர்ச்சகருக்கு எழுத்துப்பலகை மூலமாக, "**சிவபெருமானே உங்கள் சிவன் கோவிலில் பிரார்த்தனை செய்ய வந்துள்ளார்**" என எடுத்துரைத்தார்.

ஒரு கட்டத்தில், பாபா ஷோலாபூரில் தங்கியிருந்தபோது, அவர் இந்த அறிக்கைகளை வெளியிட்டார்:

**நான் இப்போது வெவ்வேறு வழிகளில் பயன்படுத்த முடிகிற ஒரு கல் போன்றவன். உங்கள் இல்லத்தின் சுவரில் செங்கலாக என்னைப் பயன்படுத்தலாம், உங்கள் கழிவறையின் ஒரு பகுதியாகப் பயன்படுத்துவதன் மூலம் என்னைக் கழிவால் அசுத்தப்படுத்தலாம் - அல்லது ஒரு புனித சிலையாக இறை பீடத்தில் பூக்களால் என்னை ஆராதிக்கலாம்.**

**இப்போதிலிருந்து ஏகாந்தவாசம் என்பது இனி இல்லை. அனைவரையும் பொதுவில் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன், ஊர்வலங்களில் கூட நான் பங்கெடுக்கலாம்.**

**நீங்களும் நானும் அனைவரும் சமம். உங்களுக்கு வழங்க (புதிதாக) எதுவும் இல்லை. நான் வழங்க இருப்பது உங்களுடன், உங்களுக்குள்ளே உள்ளது. ஒரே ஒரு வேறுபாடு என்னவெனில், நான் அதைப் பார்க்க முடியும், அதேவேளை உங்களால் முடியாது. நான் செய்ய வேண்டியது என்னவெனில் உங்கள் கண்களைத் திறப்பது ஒன்றுதான். அப்போது அதை நீங்களே காண்பீர்கள்.**

கோவில் தரிசனத்திற்குப் பிறகு, பாபா, ருஸ்தம் நகர்வாலாவின் (RUSTOM NAGARWALA) பங்களாவிற்குச் சென்றார், அங்கு ஷோலாபூரில் வாழ்ந்த ஸொராஸ்ட்ரியர்களில் பெரும்பாலோர் ஒன்றிணைந்து மரியாதை செலுத்தினர். அதைத் தொடர்ந்து, பாபா எட்டு மணிக்கு, காடேக்கரின் இல்லத்திற்குச் சென்று, ஷோலாபூர் நகரின் மெஹர் ஆன்மீக மையத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களை ஒரு மணி நேரம் சந்தித்தார். பாபா அவர்களுக்கு சில ஆன்மீக உண்மைகளை விளக்கி, கருத்துத் தெரிவித்தார்:

**உங்களை எதுவும் கவலையடையச் செய்யாதபோது, நீங்கள் ஆன்மீகப் பாதையின் தொடக்கத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் எதன் மீதும் ஆசை கொள்ளாதபோது, நீங்கள் ஆன்மீகப் பாதையின் நடுவில்**

**இருக்கிறீர்கள். ஒன்றுமில்லாத ஒன்று எல்லாமாக ஆகும் தருவாயில், நீங்கள் பரிபூரண இறைநிலையை அடைகிறீர்கள்!**

**வணிகர்களும், நாத்திகர்களும் கடவுளை உணர முடியும், ஆனால் நயவஞ்சகர்களால் (பாசாங்குத்தனம் படைத்தவர்கள்) முடியாது.**

**சாதாரண மனிதர்களில், உடல் ஒன்று மட்டுமே, பிணைப்புகள், தேவைகள், ஆசைகள், பசி மற்றும் பலவற்றின் மூலம் மனதைக் கட்டுப்படுத்துகிறது. ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்ட உயர்நிலை ஆத்மாக்களில், மனம், உடலைக் கட்டுப்படுத்தும். மஜ்ஜூப்களுக்கு மனம் இல்லாததால், அவர்களின் உடல்களைக் கடவுளே கட்டுப்படுத்துகிறார். ஆனால் சத்குருக்களின் மனம் உலகளாவிய மனம் என்பதால், மனம், உடல் இரண்டையும் கட்டுப்படுத்துவதும் கடவுள்தான். அவர்களின் உலகளாவிய மனம் தானாகவே கடவுளின் விருப்பத்தின் வெளிப்பாடாக மாறுகிறது.**

இரவு 9:00 முதல் 11:00 மணி வரை, பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது; அதற்குப் பிறகு பாபா இரவில் ஓய்வெடுக்கச் சென்றார். மறுநாள் காலை, 11ஆம் தேதி, மெஹர் பாபா மண்டலியுடன், கார் மற்றும் பேருந்துகளில் 44 மைல் தூரம் பயணம் செய்து ‘பர்ஸி’ (BARSI) என்ற ஊருக்குச் சென்றார், அங்கு பண்டோபா, பாபாதாஸ் இருவரும் இந்த நிகழ்ச்சிக்கான மிகச்சிறந்த ஏற்பாடுகளை மேற்கொண்டனர். பத்து மணியளவில், பாபாவை, திறந்த நான்கு சக்கர குதிரை வண்டியில் அமர வைத்து ஏறக்குறைய நான்கு மணிநேரம் நகரத்தைச் சுற்றி, மேள தாளங்களுடன் அணிவகுத்துச் சென்றனர்.

உள்ளூர் பக்தரான மகன்லால் லக்கானியின் (MAGANLAL LAKHANI) இல்லத்தில் பாபாவின் வாகனம் சிறிது நேரம் நின்றது; பின்னர் ஒரு பள்ளிக்கூடம், மற்றும் பர்ஸியில் புதிதாக நிறுவப்பட்ட மெஹர் பாபா மையத்தையும் ஆசீர்வதிக்க அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம், அன்றைய நிகழ்ச்சிகள் நடைபெற்ற பயணிகள் தங்கும் பங்களாவில் நிறைவுற்றது.

தரிசனம் தொடங்குவதற்கு முன்பு பாபா முதலில் ஏழு ஏழை எளியவர்களை (அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவர்களை) நீராட்டி, உணவூட்டினார். கிட்டத்தட்ட 5,000 பேர் கலந்துகொண்டனர். உள்ளூர் பாதிரியார் ஒருவரிடம், பாபா கருத்துத் தெரிவிக்கையில், “**நான் இங்கு வந்த சில நிமிடங்களில் உங்கள் அனைவரையும் ‘பார்த்துவிட்டேன்’. இப்போதைய கேள்வி என்னவெனில், எனது ‘உண்மையான ரூபத்தை’ நீங்கள் எவ்வளவு விரைவில் பார்க்க முடியும் என்பதுதான்!**” ‘**ஏக இறைவன்**’ **எல்லோரிடமும் எல்லாவற்றிலும் இருக்கிறார்**’ என்பதை விளக்கி, பாபா, ஒரு குறுகிய சொற்பொழிவை நிகழ்த்தினார்; பாபாவின் கண்கள் திறந்திருக்கும் அதே வேளையில், இதர அனைவரிலும் அவை மூடப்பட்டுள்ளன. “**அறியாமையின் திரை விலக்கப்படும்போது, ஒளிமயமாக இருக்கும், ஒருவர் எல்லா இடங்களிலும் பார்க்க முடியும். கண்களை மூடிக்கொண்டு ஒருவர்**

**உண்மைப்பொருளைக் கற்பனை செய்து உணர முடியும். கண்களைத் திறந்து பார்த்தால், ஒருவர் அதைப் பார்க்க முடியும்; எந்த சந்தேகத்திற்கும் அல்லது நிச்சயமற்ற தன்மைக்கும் இடமே இல்லை."**

ஒவ்வொருவரும் அவரிடமிருந்து பிரசாதத்தைப் பெற முன் சென்றபோது, ஆன்மீக கீதம் மேடையில் இசைக்கப்பட்டது. ஸெயிலர் மாமாவின் மருமகன் ஹோமி, ஒரு புகைப்படக் கலைஞர், புகைப்படங்களை எடுத்தார்.

மதிய உணவிற்குப் பிறகு, பிற்பகலில் ஓய்வெடுப்பதற்கான இடைவேளையின் போது, இரண்டு பேருக்கு தனியார் நேர்காணல் வழங்கப்பட்டது. ஒருவர் திரு. கேர் (MR. KHER), மற்றொருவர் திரு மஹிந்திரக்கர் (MR. MAHINDRAKER) என்ற வழக்கறிஞர், அவர் தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தாலும், பணிவு நயம் மிக்க, நேர்மையான, பக்தியுள்ள மனிதர். பாபா கேலி செய்தார், **"தத்துவத்தின் மூலம் உண்மையை அறிவதாகக் கூறுபவர்கள் அவர்களின் பட்டத்தை** (ஆங்கிலத்தில்) **'எம்.ஏ.டி.' யாக மாற்றுவதற்கு ஒரு 'டி' மட்டும் சேர்க்க வேண்டும்! கடவுளைத் தேடுபவர்கள் தங்களின் பட்டத்தை 'எம்.ஏ.' யிலிருந்து 'ஏ.எம்.'** (அதாவது ஆங்கிலத்தில் 'ஐ ஆம்' காட் - 'I AM GOD') **ஆக மாற்ற வேண்டும், அவ்வளவுதான்."**

கிருஷ்ணராவ் என்ற பாடகர் கஸல்கள் மற்றும் பஜன்களைப் பாடினார்; அதைத் தொடர்ந்து சோப்டே புவா (CHOPDE BUA) என்பவரின் கீர்த்தனை நிகழ்ச்சி மாலை 7:00 முதல் 9:30 மணி வரை நடைபெற்றது. காலம் இதைக்கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தது. "பிரியமானவரின் மதுபான சத்திரத்தின் கதவுகள் முழுவதுமாகத் திறக்கப்பட்டன; அனைவரும் இறையருளின் வீற்றிருப்பை அவரவர் தாகத்திற்கு ஏற்ப பருகிக் கொண்டனர். தாகம் இல்லாதவர்கள் அதை உருவாக்குவதற்கான விழிப்புணர்வை அடையப் பெற்றனர்; இதனால், இரவில் நீண்ட நேரம், நிகழ்ச்சி மகிழ்ச்சிகரமான மனநிலையில் தொடர்ந்தது."

மெஹர் பாபா, இரவு 10:30 மணியளவில் பர்ஸியிலிருந்து ஷோலாபூருக்குத் திரும்பி வந்தார். 24 மைல் தொலைவில் அமைந்த அக்கல்கோட்டில் (AKKALKOT) வாழும் நீதிபதி, எம்.ஜி. பெண்ட்ரே (M.G. BENDRE) என்பவரின் அழைப்பை ஏற்று, அடுத்த நாள் அதிகாலை 6:00 மணிக்கு பாபா, மண்டலியுடன் அவர் இல்லத்திற்குச் சென்றார். புறப்படுவதற்கு முன்பு, பாபா, காடேக்கர், குணாதாய் இருவரையும் பாராட்டினார்: **"உங்கள் இருவரின் அன்பையும், எனக்கும் மண்டலிக்கும் நீங்கள் செய்த அருமையான ஏற்பாடுகளையும் நினைத்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என் அன்பில், எனது பெயரை மக்களிடையே எடுத்துச் செல்வதில் நீங்கள் செய்யும் அயராத பணியைத் தொடர விரும்புகிறேன்."** பின்பு பாபா, காடேக்கரின் மகள் நளினி (NALINI), அவரது மகன் திகம்பர் (DHIGAMBAR) இருவரையும் அன்புடன் தழுவி முத்தமிட்டு, அக்கல்கோட்டிற்குப் புறப்பட்டார்.

மும்பை மற்றும் பூனாவிலிருந்து பல அன்பர்கள் வந்து தங்குவதற்கு இடம் தேவை என்பதால், காடேக்கர், டாக்டர் கோட்னியின் பெரிய பங்களாவை

ஷோலாபூரில் வாடகைக்கு எடுத்திருந்தார். "**இந்த பங்களாவை ஒரு வருடத்திற்கு திருப்பிக் கொடுத்து விடாதீர்கள்**, **உரிய வாடகையை நான் செலுத்துவேன்**" என்று பாபா காடேக்கருக்கு அறிவுறித்தினார்.

காடேக்கர் குடும்பம் சிறியதாகவும், டாக்டர் கோட்னியின் பங்களா நிச்சயமாக அவர்களுக்கு மிகப் பெரியதாக இருந்தபோதிலும், பாபா ஏன் இதைப் பரிந்துரைத்தார் என்று அவருக்குப் புரியவில்லை. ஆனால் பாபாவின் வருகைக்குப் பின்னர், அவரைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் அதிகமான அளவில் மக்கள் வந்த வண்ணம் இருந்ததால், வாராந்திர கூட்டங்களும் நிகழ்ச்சிகளும் நடத்த ஷோலாபூரில் இது ஒரு மையமாக உருவெடுத்தது. பாபா ஏன் இந்த பங்களாவை வைத்துக் கொள்ள விரும்பினார் என்பதை காடேக்கர், பின்பு புரிந்து கொண்டார். "**பங்களாவை வைத்துக் கொள்ளுங்கள்**, **நான் எப்போதாவது வருகை தருவேன்**" என்றும் பாபா குறிப்பிட்டிருந்தார். 1943இல் பாபாவின் இந்த விஜயத்திற்குப் பின்னர் அவர் ஷோலாபூருக்கு இரண்டு முறை வருகை தந்த வேளையில், அவர் கோட்னியின் பங்களாவில் தங்காமல் பயணிகள் விடுதியில் தங்கியிருந்தார். இருப்பினும், டாக்டர் கோட்னியின் வீட்டில் அவர் வீற்றிருக்கும் உணர்வின் அலைகள் வியாபித்திருந்ததை உணரமுடிந்தது, ஏனெனில் அவரது அன்பர்கள் ஒவ்வொரு வாரமும் அவரது பெயரைப் புகழ்ந்து பாடிவந்தனர்.

ஒரே வருடத்தில் காடேக்கர் ஷோலாபூரிலிருந்து அஹமதுநகர் மற்றும் பூனாவிற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டார். ஒரு வருடத்திற்கு மட்டுமே கோட்னிஸ் பங்களாவை வாடகைக்கு எடுக்குமாறு பாபா கூறியதன் காரணம் இப்போது அவருக்குப் புலனானது.

அக்கல்கோட்டில், நீதிபதி பெண்ட்ரே ஏற்பாடு செய்த தரிசன நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டனர். சமீபத்திய பொது தரிசன நிகழ்ச்சிகள், மெஹர் பாபா கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கிய முதல் தரிசனங்கள் ஆகும் (அதுவும் ஷோலாபூர் மாவட்டத்தில் முதன்முதலில் வழங்கப்பட்டது), எனவே அவர் எங்குச் சென்றாலும் வரவேற்புகள் பெரிய அளவிலும் மிகவும் அன்பான முறையிலும் நடைபெற்றன.

அக்கல்கோட் தரிசனத்திற்குப் பிறகு, பாபா ரயிலில் காலை 8:45 மணிக்குப் புறப்பட்டு விஜயவாடா (VIJAYAWADA) மற்றும் தென்னிந்தியாவின் பிற இடங்களில், ஏழு நாட்கள் மஸ்த் பயணம் மேற்கொண்டார். கோட்டலங்கா (KOTTALANKA) என்ற இடத்தில் மிக முக்கியமான தொடர்பு ஒன்று நிகழ்ந்தது; அங்கு, பாபா அந்தப் பகுதியின் ஆன்மீகப் பொறுப்பாளரான 'ஸையித் அஹ்மத் அலிஷா' (SAIYID AHMAD ALISHAH) என்பவரைத் தொடர்பு கொண்டார். ஸையித் அஹமத் ஒரு வயதான, முற்றிலும் நிர்வாண நிலையில், நிஜத்தில் ஓர் எலும்புக்கூடாக வாழ்ந்து வந்த மஸ்த். ஜமாலி (சாந்தம்) மற்றும் ஜலாலி (கோபம்) குணாதிசயங்களின் கலவையான இந்த மஸ்த் வழக்கமாக ஒரு பிராமணரின் வீட்டு வராந்தாவில் தங்கியிருந்தார். அந்த பிராமணர் ஸையித்

அஹமதை ஒரு துறவியாக மதித்து, அவரது வீட்டின் எதிரே வணங்க வந்தவர்களுக்கு ஒரு தர்மசாலையைக் கட்டினார்.

பைதூல் ஆரம்பத்தில் ஸையித் அஹமதை அணுகி, மெஹர் பாபா நகரத்தில் இருப்பதைக் குறிப்பிட்டு, “ருஸ்தம் வந்துவிட்டார்” என்றார்.

ஸையித் அஹமத் உடனே, “இல்லை, ஒரு காகம் வந்துள்ளது” என்று பதிலளித்தார், அதாவது, ஒரு நண்பர் அப்போது வரவிருந்தார் என்பதை அது அடையாளப்படுத்தியது.

பைதூல் வெளியேற எழுந்து நின்றபோது, மரியாதையின் நிமித்தம் அந்தத் துறவியின் கால்களைத் தொட்டார்.

திடீரென, ஸையித் அஹமத் எழுந்து நின்று, மிகுந்த சக்தியுடன் தனது முட்டியால் பைதூலை வயிற்றில் தாக்கி, அமரச் சொன்னார். சுமார் அரை மணி நேரம் பைதூல் அங்கே அமர்ந்திருந்து, பின்பு புறப்பட ஆயத்தமானபோது ஸையித் அஹமத் மெதுவாக, “நீங்கள் இப்போது செல்ல அனுமதிக்கப்படுகிறீர்கள், ஆனால் திரும்பி வருவதாக உறுதி கூறுங்கள்” என்றார்.

அந்த நாளின் பிற்பகுதியில், ஸையித் அஹமதைத் தொடர்பு கொள்ள பைதூல், பாபாவை பிராமணரின் இல்லத்திற்கு அழைத்து வந்தார். புறப்படுவதற்கு முன்பு, ஸையித் அஹமத் தூங்குவதற்காக ஒரு புதிய மெத்தை மற்றும் மஸ்த் விரும்பிய சில வாசனைத் திரவியங்களை வாங்கவும் பாபா, அந்தப் பிராமணரிடம் ரூ. 20 கொடுத்தார்.

தென்னிந்தியாவில் மேற்கொண்ட மஸ்த் பயணத்திற்குப் பின்னர், 1943 மார்ச் 19 அன்று மாலை, மெஹர் பாபா, மஹாபலேஷ்வருக்கு வந்தார். வழக்கம் போல, கிருஷ்ணா, வெங்கோபா ராவ் இருவரும் ‘வேலி வியூ’ (VALLEY VIEW) பங்களாவிற்கு வெளியே இரவுக் கண்காணிப்பாளர்களாகப் பணிபுரிந்தனர். ஒரு நாள் இரவு புலி ஒன்று வீட்டின் அருகே வந்தபோது. கிருஷ்ணா அதைக் கண்டு அஞ்சினாலும் அவரது இடத்திலிருந்து நகரவில்லை. புலி பயங்கரமாக அச்சுறுத்தும் முறையில் புருவங்களைத் தூக்கி சீறியது. கிருஷ்ணா அவரிடமிருந்த துப்பாக்கியை எடுத்து குறிவைத்த அந்தத் தருணத்தில், பாபா, கையைத் தட்டினார். கிருஷ்ணா உள்ளே வந்து பாபாவிடம் அருகில் ஒரு புலி இருப்பதாகக் கூறி, “நான் அதைச் சுடட்டுமா, பாபா?” என வினவினார்.

“**பொறுமையாக இருங்கள், நான் வருகிறேன்**” என்று பாபா சைகையால் தெரிவித்தார். ஆனால் பாபா ஐந்து நிமிடங்கள் வரவில்லை, அந்த நேரத்தில் புலி அங்கிருந்து விலகிச் சென்றது. “**இப்போது சுடுங்கள்**” என்று பாபா சுட்டிக்காட்டியதும், புலி சென்ற திசையில் கிருஷ்ணா துப்பாக்கியால் சுட்டார், ஆனால் குண்டு ஒரு மரத்தின் மீது பாய்ந்தது.

பாபா அவரிடம், “**நீங்கள் அஞ்சினீர்களா?**” எனக் கேட்டதற்கு, கிருஷ்ணா ‘ஆமாம்’ என்று ஒப்புக்கொண்டார். “**அஞ்ச வேண்டாம்**” என்று பாபா

சைகையால் கூறினார். "**புலி உங்களை விழுங்காது. நீங்கள் ஏன் அஞ்ச வேண்டும்?**" கிருஷ்ணாவால் விளக்க முடியவில்லை.

அவரைக் கிண்டல் செய்த பாபா, "**அது உங்களை சாப்பிட்டிருந்தால் எனது சுமை குறைந்திருக்கும்!**" என்றார். இந்த சம்பவத்திற்குப் பிறகு, பாபா கிருஷ்ணாவிடம் இரவு காவல் புரியும் வேளையில் நீலப்பேருந்தில் அமருமாறு அறிவுறுத்தினார்.

பிலார் (BHILAR) கிராமம், மஹாபலேஷ்வருக்கும் பஞ்ச்கணிக்கும் இடையிலான தொலைதூர, காடுகள் நிறைந்த பகுதி. காளேமாமா, விஷ்ணு, சாஞ்சி ஆகியோருடன் பாபா மார்ச் 22 அன்று ஜல்கியின் (JALKI) பங்களாவைப் பார்க்க அங்குச் சென்றார். அவர் அதை, காளேமாமாவிடம் வாடகைக்கு எடுக்குமாறும், மேலும் பெண்மணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் முறையில் மூங்கில் பாயால் காம்பவுண்டை மறைக்குமாறும் கட்டளையிட்டார்.

எரச் மறுநாள் பாபாவையும் பெண்மணிகளையும் புதிய பங்களாவைப் பார்வையிட பிலாருக்கும் அதைத் தொடர்ந்து 24ஆம் நாள் அவர்களை நீலப்பேருந்தில் பிரதாப்கர் கோட்டைக்கும் (PRATAPGHAR FORT) அழைத்துச் சென்றார்.

அடுத்த நாள் காலை ஒன்பது மணிக்கு அப்பகுதியைச் சேர்ந்த நகர மக்களுக்கு மெஹர் பாபா, மஹாபலேஷ்வரில் தரிசனம் வழங்கினார். எரச் தரிசன நிகழ்ச்சிக்குப் பிறகு பூனாவிற்குத் திரும்பிச் சென்றார். பாபா, மலையில் பயணம் செய்ய உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில், ஸரோஷ் ஒரு குதிரை வண்டி மற்றுமொரு குதிரையையும் ஒரு பெரிய திறந்த சரக்கு வண்டியில் அனுப்பி வைத்தார். சிது, பாபாவை 'யூனியன்' ஹவுஸிலிருந்து (UNION HOUSE) 'வேலி வியூ'விற்கு அந்தக் குதிரை வண்டியில் ஓட்டிச் சென்றார். பாபா, பெண்மணிகளுடன் பிலாருக்கு செல்லவிருந்ததால், குதிரையும் வண்டியும் ஸரோஷுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

29ஆம் நாள் பாபாவை சந்தித்த ராவ்ஸாஹேப், பின்பு சாஞ்சியுடன் புறப்பட்டுச் சென்றார்.

பாபாவும் குழுவும் 1943, மார்ச் 31 புதன்கிழமை பிலாருக்கு இடம் பெயர்ந்தனர்; ஆதி சீனியர், பாபாவை அடுத்த நாள் அங்கு சந்தித்தார். ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பாபா பிலாரில் தங்கியிருந்த பெண் மண்டலியிடமிருந்து விலகி இருக்கத் திட்டமிட்டு, மெஹராபாத்தில் மற்றொரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். பிலாரில் தங்கியிருந்த பெண்மணிகளின் பொழுது போக்கிற்காக, மூன்று குதிரைகள் வாங்கப்பட்டன - அவற்றில் ஒன்றை மெஹரா, மற்றொன்றை ஐரீன் பில்லோ, மூன்றாவது குதிரையை மணி, மெஹரு, கேட்டி ஆகியோர் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. இதற்கிடையில், பாபா தொடர்ந்து மெஹரா, மணி

இருவரை மட்டுமே சந்தித்தார், ஆனால் பெண்மணிகள் குழுக்களிடையே பேசக்கூடாது என்ற கட்டுப்பாட்டை நீக்கிவிட்டார்.

அக்காலகட்டத்தில் மெஹரா எதையும் வாசிக்கவோ எழுதவோ அனுமதிக்கப்படவில்லை; சிறுவயதிலிருந்தே குதிரை சவாரி செய்வதில் அதீத ஆர்வம் இருந்ததால், பாபா இந்தப் பொழுதுபோக்கை பிலாரில் அவருக்காக ஏற்பாடு செய்தார். (அவர் அனைவரையும் பிலாருக்கு மாற்றியதன் முக்கிய காரணம், அவர்கள் மஹாபலேஷ்வரில் தங்கியிருந்த இடம் குதிரை சவாரிக்கு ஏற்றதல்ல.) ரானோ மைதானத்தின் ஒரு பக்கத்திலும், பீலாமாய் மறுபக்கத்திலும் கண்காணித்தனர். ஒருமுறை, கேட்டி சவாரி செய்யும் போது, அந்தக் குதிரை திடீரென பீதியில் வெளியே ஓடத் தொடங்கியது. கேட்டி பயத்தில் பாபாவின் பெயரைக் கூறி அழைத்தார். ரானோ, அதன் பின்னால் ஓடி குதிரையை நிறுத்த முடிந்தது. மணி ஒரு முறை குதிரையிலிருந்து தூக்கி எறியப்பட்டார், ஆனால் காயம் ஏதுமில்லை.

1943, மார்ச் 21 அன்று, பாபா அவரது நெருங்கிய அன்பர்கள் அனைவரையும் மே 15 முதல் ஜூன் 15 வரை ஒரு மாத காலம் மெஹராபாத்திற்கு வரவழைக்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் ஏப்ரல் 1ஆம் நாள், அவர் ஒரு மாத காலத்தை ஐந்து நாட்களாகக் குறைத்து, 1943 ஆகஸ்ட் மாதத்தில், ஒரு மாதத்திற்கு இரண்டாவது முறையாக அழைக்க முடிவு செய்தார்.

அழைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே ஒரு மாதத்திற்குத் தங்கள் பணிகள் மற்றும் குடும்பங்கள் தொடர்பான அனைத்தையும் ஏற்பாடு செய்திருந்தனர். இப்போது திட்டம் மாற்றப்பட்டதால், ஆகஸ்ட் மாதத்திற்கும் அவர்கள் மீண்டும் அதே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. இது அனைவருக்கும் ஒரு சிறந்த சோதனை காலமாக நிரூபிக்கப்பட்டது.

1943, ஏப்ரல் 1 அன்று அனுப்பப்பட்ட அவரது சுற்றறிக்கையில், மெஹர் பாபா அவர்களுக்கு இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

**சாத்தியமான சிரமங்களைக் கருத்தில் கொண்டு, மண்டலிக்கான நேரம், சந்தர்ப்ப சூழ்நிலைகள் (எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கீழ்ப்படியத் தயாராக உள்ளவர்கள்), மேலும் உங்கள் அனைவருடனும், உலகத்துடனும் எனது வெளிப்பாட்டுடன் இணைந்துபோகும் எனது பணிகளையும் கவனத்தில் கொண்டு, இறுதியாக நீங்கள் மே 15 அன்று மெஹராபாத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளேன்.**

**இந்த நேரத்தில், ஆகஸ்ட் மாதத்தில் இலட்சியங்களை அடையப் பெறுவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் தயாராக இருக்க வேண்டிய முறையை நான் உங்களுக்கு அறிவுறுத்துவேன். அப்போது நீங்கள் உங்கள் இடங்களுக்குச் சென்று, ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 30 வரை, ஒரு மாதத்திற்கு என்னுடன் இணைந்திருக்க வேண்டும்.**

**இயற்கையாகவே, உங்கள் விவகாரங்களை மாற்றியமைப்பதன் மூலமும், இப்போது ஏற்கனவே மாற்றியதை மறுசீரமைப்பு செய்ய வேண்டியிருப்பதால் நீங்கள் சிரமப்படுவீர்கள். எந்தவொரு தியாகத்திற்கும் கட்டுப்பட ஒப்புக்கொண்டதற்கு இணங்கி, இப்போது அல்லது எதிர்காலத்தில் எப்போதும், ஒவ்வொரு வகையான சிறிய அல்லது பெரிய அசௌகரியங்களை, ஊக்கம் மற்றும் உற்சாகத்துடன் மனமார எதிர்கொள்ள வேண்டும்.**

**சுருக்கமாகக் கூறினால், நீங்கள் மே 15 அன்று ஆறு நாட்களுக்கும், ஆகஸ்ட் 1 முதல் ஒரு மாதத்திற்கும் மெஹராபாத்தில் இருக்க வேண்டும். மெஹராபாத்தில் தங்கியிருக்கும் இந்த ஆறு நாட்களில் நீங்கள் என்னிடம் எந்த கேள்வியும் கேட்க மாட்டீர்கள், ஆனால் தெளிவாகவும் துல்லியமாகவும் இருக்கும் எனது அறிவுறுத்தல்களைக் கேட்பீர்கள்.**

**இந்தக் கடிதத்தை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக மெஹராபாத் முகவரிக்கு உங்கள் ஒப்புதல் குறிப்பை அனுப்புங்கள்.**

காலம் இதை இவ்வாறு விவரித்தது: "குருநாதரின் திட்டங்களை மாற்றுவது அவரது அன்பர்களுக்கு, தேவையான, பயனுள்ள படிக்கற்களாக அமைந்தது. இது குருநாதருக்குக் கீழ்ப்படியத் தயாராக இருப்பதற்கும், உலக பிணைப்புகளில் அலட்சியம் காட்டுவதற்கும் ஒரு படிப்பினையாகவும் இருந்தது. மெஹர் பாபாவின் செயற்பாடுகளைச் சுற்றியுள்ள உறுதியற்ற தன்மையிலிருந்து, உள்ளளவில் ஸ்திரத்தன்மை உருவானது; அவரது திட்டங்களில் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றத்தின் காரணமாக, மனம் அவர் மீது மேலும் மேலும் கவனத்தைச் செலுத்தியது மட்டுமின்றி, உலகப்பொருட்களின் மீதான பிணைப்பு படிப்படியாகக் குறைந்து வந்தது."

காடேக்கர், பி.என். லிம்கர் (P.N. LIMKAR) இருவரும் கிருஷ்ணராவின் இசைக்குழுவை 1943 ஏப்ரல் 3 சனிக்கிழமையன்று பிற்பகல் 4:00 முதல் 8:00 மணி வரை மீண்டும் ஒரு இசை நிகழ்ச்சிக்காக அழைத்து வந்தனர். அடுத்த நாள், ஆதி சீனியர், பாபாவை மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்று, கூட்டத்திற்கான திட்டத்தைத் தொடங்கினார். (அவர்கள் செல்லும் வழியில் பூனாவில் டாக்டர் டான், பாபாவை சிறிது நேரம் சந்தித்தார்.) பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, தாயார் ஷிரீன்மாயின் நினைவாக, பெண்டு, ஏப்ரல் 5 மாலை, மெஹராபாத்தில் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார். 6ஆம் நாள் மண்டலியின் பெரிய கூட்டம் நடைபெற்றது. பாபா, (டிசம்பர் கூட்டத்தில் கலந்து கொண்டவர்) அவரது பணியை ஒருவர் செய்வது குறித்தும், அதைச் செய்யும் தருவாயில் 'மிகப்பெரிய வீழ்ச்சியைக் கொண்டுவரும் சுய உணர்வு மேலோங்கி நிற்பதைத் தவிர்க்க வேண்டியது' குறித்தும் மானேக் மேத்தாவுடன் பேசினார். டாக்டர் தேஷ்முக் 7ஆம் நாள் பாபாவை சந்தித்து, டெல்லி, ஆக்ரா, ஜபல்பூர் நகரங்களுக்கு விஜயம் செய்வதற்கான திட்டங்களைப் பற்றி

விவாதித்தார். டாக்டர் கனி மற்றும் ஸெயிலர் மாமாவின் குடும்பத்தினரும் மறுநாள் மெஹராபாத்தில் பாபாவை சந்தித்தனர்.

ஏப்ரல் 9 அன்று பாபா, ஸரோஷின் காரில் காக்கா, ஆதி சீனியர், குஸ்தாஜி, பைதூல், சாஞ்சி ஆகியோருடன் பூனா, மும்பை, சூரத் (SURAT), ஜல்காவ்ம் (JALGAON) போன்ற இடங்களுக்கு மஸ்துகளைத் தொடர்பு கொள்ள புறப்பட்டார். பாபா, அவரது சொந்த காரணங்களுக்காக, மும்பை உள்பகுதியில் அடியெடுத்து வைக்க விரும்பாததால், அவர் பாந்த்ராவிலிருந்து குர்லா ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ரயில் நிலையத்தில் பயணிகளின் கூட்டம் மிக அதிகமாக இருந்ததால், பாபா, அவரை அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்க்கும் நோக்கத்தில் போரிவில்லிக்குச் சென்று ரயிலில் பயணம் செய்தார்.

ஒரு வாரத்தில் மஸ்த் பணி முடிந்ததும், பாபா, ஏப்ரல் 17 அன்று மெஹராபாத் திரும்பி வந்தார். பாபா இரண்டு நாட்கள் அங்கேயே இருந்து, எதிர்வரும் கூட்டத்தைப் பற்றி விவாதித்து, பின்னர் 20ஆம் நாள் பிலாரில் தங்கியிருக்கும் மெஹரா மற்றும் மணியைப் பார்க்கப் புறப்பட்டுச் சென்றார்.

பிலாரில், பெண்மணிகளின் பங்களாவைச் சுற்றி எல்லா பக்கங்களும் உயரமான புற்களால் சூழப்பட்டிருந்தது. பாம்புகள் உள்ளே வருவதைத் தடுக்க வாலு அதை அவ்வப்போது வெட்டி எரித்துவிடுவது வழக்கம். ஒரு நாள், புற்களை அப்புறப்படுத்தும் வேளையில், ஒரு பலமான சூறாவளி காற்று வீசியதில், புல் நெருப்பிற்கு இரையாகி எரிந்தது; வாலு அதில் சிக்கிக்கொண்ட இக்கட்டான சூழ்நிலையில் பாபாவின் பெயரைக் கூறி கத்தினார். இதர பெண்மணிகள் ஓடி வந்து தீயை அணைத்த அவ்வேளையில் தீப்பிழம்பின் நடுவே இருந்தபோதிலும், பாபாவின் பார்வை வாலுவை எந்தப் பாதிப்பும் இல்லாமல் பாதுகாத்தது.

மற்றொரு நாள், வறண்ட கோடை காலத்தில், பாபா வெளியே இருந்தபோது, பிலாரில் உள்ள அடர்ந்த காடு தீப்பிடித்ததைத் தொடர்ந்து, காற்றின் வேகம் அதை அவர்களின் பங்களாவின் அருகே கொண்டு வந்தது. கிருஷ்ணா, வெங்கோபா ராவ் இருவரும் தீயை அணைக்க முயன்றனர், ஆனால் அருகிலேயே தீ பொங்கி எழும் வலிமைக்கு எதிராக அது பெரிய அளவில் பயனளிக்கவில்லை. ரானோ, மார்கரெட், கிட்டி ஆகியோர் வாயில் துணியைக் கட்டிக்கொண்டு, தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்; பச்சை மரக் கிளைகளால் தீப்பிழம்புகளைத் தாக்கியும் அது பயனளிக்காமல் போயிற்று. நெருப்பு அந்த அளவிற்கு உயர்ந்து, பரந்து விரைந்ததைப் பார்த்தால் முழுப் பங்களாவையும் தாக்கித் தரைமட்டமாக்கி விடுவதைப் போலத் தோன்றியது. அனைவரும் உதவிக்காக, பாபாவை, உரத்த குரலில் அழைக்கத் தொடங்கினர்; அதிசயமாக, காற்று திடீரெனத் தணிந்தது; உடனடியாக, பெண்களும் கிருஷ்ணா, வெங்கோபா அனைவரும் இணைந்து தீப்பிழம்புகளைக் கட்டுப்படுத்த முடிந்தது.

சம்பவம் குறித்தத் தகவல் கிடைத்ததும், பாபா திரும்பி வந்து கிருஷ்ணாவிடம், "**உங்களுக்கு ஏதேனும் தீக்காயங்கள் ஏற்பட்டனவா?** என்று கேட்டதற்கு,

"அதிகம் இல்லை; சிறிய அளவில் இங்கேயும் அங்கேயும்" என்றார் கிருஷ்ணா.

பாபா அவரிடம், "**நீங்கள் எரிந்திருந்தால் நான் மகிழ்ச்சியாக இருந்திருப்பேன்**" என்று குறிப்பிட்டார்.

கிட்டி சமையலறையை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த வேளையில், உணவு எதையும் வீணடிக்கக் கூடாது என்ற பாபாவின் நிலையான உத்தரவு அமலில் இருந்தது. அவர் தினமும் பஜாரிலிருந்து புதிய ரொட்டியை வாங்கிவரக் கோரினார்; ஆனால் ஒவ்வொரு நாளும் சில ரொட்டித் துண்டுகள் மிஞ்சிவிடுவதுண்டு. ஒரு நாள் கிட்டி பழைய ரொட்டிகளை சேகரித்து ஒரு வகையான இனிப்பு பண்டத்தைத் தயார் செய்தார். ஒருவரும் அதை விரும்பி உண்ணாததால் கணிசமான அளவு மிஞ்சிவிட்டது. எதையும் வீணாக்க வேண்டாம் என்ற பாபாவின் உத்தரவினால், அதைத் தூக்கி எறிய முடியாமல், என்ன செய்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்தார். ஒரு தீர்வையும் எட்டமுடியாத நிலையில், நான்கு மணி நேரம் ஓரிடத்தில் அமர்ந்து அந்த உணவை தானே உட்கொண்டார்; இதன் மூலமாக, கிட்டி தனது குருநாதரின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

இந்தக் காலகட்டத்தில், ஏற்கனவே குறிப்பிட்டபடி, மெஹரா மற்றும் மணியைத் தவிர வேறு எந்தப் பெண்மணிகளையும் பாபா சந்திக்கவில்லை. ஆனால், மெஹராபாத்தில் வரவிருக்கும் கூட்டத்திற்கு, அவர் இரண்டு வரைபடங்களைத் தயாரிக்க விரும்பியதால், ரானோவை அழைத்து, அனைத்தையும் விளக்கினார்; ரானோ அந்த வரைபடங்களை வரையத் தொடங்கினார்.

மார்கரெட், ரானோவின் அறையைப் பகிர்ந்து கொண்டிருந்தார்; மேற்கத்திய நாடுகளுடனான தகவல் போக்குவரத்தை மார்கரெட் கையாண்டார். அமெரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் வாழும் பாபாவின் 'பறவைகள்' இந்திய தகவல்களுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தன, எனவே மார்கரெட், பாபாவின் செயல்பாடுகள் குறித்த செய்திகளைத் தவறாமல் அவர்களுக்கு வழங்கி வந்தார். ஆனால் ரானோ விளக்கப்படங்களைத் தயாரிக்கத் தொடங்கியபோது, பாபா அவற்றைப் பார்வையிட, அல்லது சில விஷயங்களை விளக்க அந்த அறைக்கு வந்த நேரத்தில், மார்கரெட் வெளியே சென்று விடுவது வழக்கம்.

ஒரு நாள் பாபா, ரானோவின் பணியை ஆய்வு செய்ய வந்தார்; அவ்வேளையில் பாபாவின் அறிவுறுத்தல்களை கவனத்தில் கொண்டு, மார்கரெட் அவர் வருவதற்கு முன்பே வெளியே சென்றுவிட்டார். பாபா விளக்கப்படங்களை ஆராய்ந்த பின்னர், மார்கரெட்டை மீண்டும் அழைத்து வர

ரானோவை அனுப்பினார், ஆனால் பாபா அறையில் இருந்ததை மார்கரெட்டிற்குச் சொல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார். மார்கரெட் உள்ளே நுழைந்ததும், பாபாவைப் பார்த்து திடுக்கிட்டார். "ரானோ, பாபா இங்கே இருப்பதாக ஏன் சொல்லவில்லை?" என மார்கரெட் கோரினார்.

"**கவலைப்படாதீர்கள், நான்தான் உங்களை அழைத்தேன்**" என்று பாபா சிரித்தார்.

வரைபடங்கள் காரணமாக, பாபாவைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததால், ரானோ மிக்க மகிழ்ச்சியடைந்தார். இருப்பினும், சில நாட்களுக்குப் பிறகு, பாபா, ரானோவின் பணியை ஆய்வு செய்ய வருவதை நிறுத்திவிட்டார், மேலும் ரானோ அவரைப் பார்க்கும் வேறு எந்த வாய்ப்பும் இல்லாமலாயிற்று. ஒரு முறை, சிக்கலான ஒரு விஷயத்தை ரானோவால் புரிந்துகொள்ள முடியாதபோது, அவர் அதை எழுதி, பாபாவிற்கு, அந்தக் குறிப்பை டாக்டர் நீலு மூலம் அனுப்பிவைத்தார். ஆனால், பாபா இன்னும் ரானோவை அழைக்கவுமில்லை அல்லது அவருடைய அறைக்குச் செல்லவுமில்லை; அவர் நீலுவின் மூலம் ஒரு குறிப்பை மட்டும் அனுப்பிவைத்தார்.

பாபாதாஸ், விஷ்ணு இருவரும் 1943, ஏப்ரல் 22 அன்று டாக்டர் தேஷ்முக்குடன் பிலார் வந்தடைந்தனர். இந்திய இராணுவத்தின் மருத்துவ சேவையில் பணிபுரிந்து வந்த டாக்டர் டான் விடுமுறை நாட்களில் வரும்போதெல்லாம் பாபாவை சந்திக்கத் தவறுவதில்லை. பாபாவும் அவ்வப்போது அவருக்குக் கடிதம் எழுதினார். போர்க்காலத்தில் ஒரு முறை, பாபா டானுக்கு இந்தக் கவிதையை அனுப்பி வைத்தார்:

**போர் சமாச்சாரம் மிகவும் மோசமானது,**
**உலகம் பைத்தியமானதாகத் தென்படுகிறது.**
**ஆனால் ஒருபோதும் சோகமாக இருக்க வேண்டாம்!**
**திறவுகோலை இயக்குவது யார் என்பது**
**உங்களுக்குத் தெரியும், எனவே**
**மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்!**

ஏப்ரல் 24ஆம் நாள் மதியம், டான் ஒரு நாள் விடுமுறையில் பிலார் வந்தார். அடுத்த நாள் காலை, டானுடன் போரைப் பற்றி உரையாடியபோது, பாபா அவரது எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

**எங்கும் போரைப் பற்றிய இந்தக் கூக்குரல் ஒலிக்கிறது, இங்கு ஒலிப்பதோ எனது பணியைப் பற்றியது. ஆகஸ்ட் மாதத்தில் எனது பணிகள் உண்மையிலேயே தொடங்கும் போது, வேகம் இரு மடங்காக அதிகரிக்கும். அனைத்திற்குமான திறவுகோலை நான் வைத்திருக்கிறேன், நான் அதைச் சுழற்றும்போது, அனைத்து விஷயங்களும் நிகழும். இது 'குருநாதரின் திறவுகோல்'** (MASTER KEY)**.**

**இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஒரு பெரிய கொலைவெறி தாக்குதல் நடக்கும். குண்டு வெடிப்பு, துப்பாக்கிச்சூடு**

**மற்றும் கொலை, கொள்ளைகள் அன்றாடம் நிகழும் சம்பவங்களாக மாறும், மேலும் பெண்கள், குழந்தைகள் கூட இதிலிருந்து தப்ப வாய்ப்பில்லை. ரயில் மற்றும் இதர போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்படும்.**

**மிகப்பெரிய அளவிலான நாசவேலை காரணமாக ரயில்கள் சூறையாடப்பட்டு தடம் புரளும். பெரும் வன்முறைக் கொலைகள் நிகழும். ஜப்பான் வங்காளத்தையும், நாட்டின் பிற பகுதிகளையும் தங்கள் கடற்படை ஆயுதங்களுடன் தாக்க முயற்சிக்கும். (வங்காளத்தின் பாதி பகுதி ஜப்பானுடன் இணைக்கப்படும்.)**

**இந்தியாவில் நிகழும் இந்தக் குழப்பங்கள் அனைத்தும் ஐரோப்பா, அமெரிக்க நாட்டின் போர் நிகழ்வுகளைச் சிறியதாகச் தோன்றச் செய்யும். துனிஸியா (TUNISIA) வீழ்ந்தாலும் ஜெர்மனி எளிதில் தோற்கப் போவதில்லை. போரின் மோசமான அம்சம் ஆகஸ்ட் மாதத்தில் வெளிப்படும்.**

**ரஷ்யாவை நசுக்க விரும்பும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுடன் ரஷ்யா நட்புறவில் இல்லாதபோதும், ஃபிராங்கன்ஸ்டைனைப் (FRANKENSTEIN) போல ரஷ்யாவிற்கு அஞ்சுவதால் அதனுடன் போர்த்தொடுக்கத் தயங்கின. ஸ்டாலினுக்கு இது தெரியும், அவர் இப்போது ஜெர்மனியுடன் போராடுவதில் மும்முரமாக இருப்பதால், அமைதியாக இருந்து, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுடன் தோழமையோடு இருப்பதாகப் பாசாங்கு செய்கிறார். ஆனால் தக்க தருணத்தில், அவர் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வார். ரஷ்யா, ஜெர்மனி மற்றும் நேச நாடுகளுடன் ஒன்றிணைய போவதில்லை.**

**இது ஒரு பரிதாபமான நிலை. ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளையும் ஸ்டாலின் வெறுக்கிறார். ஜப்பானுடனான ரஷ்யாவின் நட்பு குறிப்பிடத்தக்கதாகும். ஜப்பானியர்கள் ஆரம்பத்தில் இருந்தே அதி தந்திரகாரர்கள்.**

**இந்தக் கொந்தளிப்பு அனைத்தும் தணிந்து ஒரு தீர்விற்கு வர இன்னும் பல ஆண்டுகள் ஆகும்.**

ஆச்சரியமூட்டும் விதத்தில், 1940ஆம் ஆண்டில் பிரிட்டனை ஆக்கிரமிக்காதது ஹிட்லரின் தவறு என்பதைக் குறித்து நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் குழுவுடன் சர்ச்சில் பேசியபோது, ”சில ‘வழிகாட்டும் கை’ இதில் தலையிட்டதாக எனக்கு ஓர் உள்ளுணர்வு உள்ளது. நாங்கள் ஒரு மகத்தான நோக்கத்தைக் கருத்தில் கொண்டு சேவை செய்வதால், எங்களுடன் ஒரு ‘ரட்சகன்’ இருந்ததாக எனக்கு ஓர் உள்ளுணர்வு இருக்கிறது; அந்த நோக்கத்திற்காக நாங்கள் உண்மையாக சேவை செய்யும் வரை அந்த ‘ரட்சகன்’ எங்களுடன் இருப்பார்” என்றது செய்தித்தாள்களில் வெளிவந்தது.

சாஞ்சி இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: “பேச்சாளர், தான் அறியாமலேயே இவ்வண்ணம் பேசினாலும், அவர், பாபா விளக்கியபடி, ‘தெய்வீக திட்டத்தின் ஓர் அம்சத்தை’ உண்மையில் விவரிக்கிறார்.”

டாக்டர் டானுடன் பாபா உரையாடிக் கொண்டிருந்த வேளையில், டாக்டர் தேஷ்முக், பாபாதாஸ், டி.ஜி. ஷஹஸ்த்ரபுத்தே (D.G. SHAHASTRABUDHE) ஆகியோரும் கூட்டத்தில் இணைந்தனர். பாபா, பிற்பகல் நான்கு மணி வரை பெரும்பாலான நாட்களை மண்டலியுடன் கழித்தார். அன்று பாபா இருந்த நல்ல மனநிலையில் அவர்களைப் பாராட்டினார்:

**டான் போன்ற ஆண்மகன்களைப் பார்க்கும்போது, நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தனக்குப் பிரியமான அனைவரையும், அனைத்தையும் துறப்பதென்பது என்னவொரு சுய தியாக உணர்வு மற்றும் தன்னலமற்ற தன்மை; மேலும் அரசாங்கத்திற்காக சேவை செய்யும் போது, அனைத்தையும் எனக்காக அர்ப்பணிக்கிறார். இதைவிடச் சிறப்பாக வேறு என்ன தியாகமும் சேவையும் இருக்க முடியும்? எனது ஆண்மகன்களின் (மண்டலியின்) அந்தக் குணம் ஒன்றுதான் என்னை மகிழச் செய்கிறது. அந்த வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் அவர்கள் 'ஆண்மகன்கள்' (வீரர்கள்).**

**இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பானவர்களில் 24 பேர் - மேலும் வட்டத்தின் இதர உறுப்பினர்களும் மிக உயர்ந்த அனுபவத்தைப் பெறும் நேரம் மிக அருகாமையில் உள்ளது.**

அன்றைய தினம் அங்கு வருகை தந்த ரூபாமாய் மற்றும் தீனா தலாட்டியையும் பாபா சந்தித்தார், மேலும் அவர்கள் மும்பைக்குத் திரும்புவதற்கு முன்னர் அன்றிரவை அங்குக் கழிக்க அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் அங்கு வந்த பார்வையாளர்களில் ஒரு முக்கிய பஹாய் தலைவரின் (BAHAI LEADER) மகன் மணி எச். மேத்தா (MANI H. MEHTA) மற்றும் ஒரு சில பஹாய்கள் அடங்குவர். மேத்தா, விஷ்ணுவை பஜாரில் சந்தித்த வேளையில், மெஹர் பாபாவைப் பற்றி தெரிய வந்து, அவரை சந்திக்கும் ஆர்வத்தைத் தெரிவித்தார். பாபா, வெளி நபர்களை சந்திக்கவில்லை என்று விஷ்ணு விளக்கிய பின்னரும், அன்று பாபா மண்டலியின் பங்களாவில் இருந்ததால் அவர்கள் அது ஒரு வாய்ப்பாக அமையும் என்ற எண்ணத்தில் அங்குச் சென்றனர். பாபா, வழக்கத்திற்கு மாறாக அவர்களுக்கு ஒரு கணம் தரிசனம் வழங்கினார். அவர் ஏன் பஞ்ச்கணிக்கு வந்தார் என்று மேத்தா ஒரு சவாலான தொனியில் கேட்டபோது, பாபா, "**அதை இப்போது விளக்க வேண்டிய தேவையில்லை. நீங்கள் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் அறிந்து கொள்வீர்கள். அப்போது நான் விஷயங்களை விளக்குவேன்**" என்று பதிலளித்தார்.

பாபா, முஹமது மஸ்துடன் பணிபுரிவதற்காக, சிது அவரை பிலாருக்கு அழைத்து வந்தார். மெஹராபாத்தில் முஹமது மஸ்தை கவனிக்கும் முக்கிய கடமையை, சிது, அவருடைய வாழ்நாள் முழுவதும் செய்துவந்தார்.

ஏப்ரல் 28 இரவு, சிது மலம் கழிப்பதற்காகக் காட்டுக்கு உள்ளே சென்றார். பிலார் அடர்ந்த காடுகளுக்கு நடுவே அமைந்திருந்ததால் புலிகளின் தொந்தரவு அதிகமாக இருந்தது. சிது தனது காலுறையைக் கீழே இறக்கி அமர்ந்திருந்தபோது, ஒரு புலி இருட்டிலிருந்து வெளியே வந்து, ஒளிரும் கண்களுடன் சிதுவைப் பார்த்து உறுமியது. சிது, பாபாவின் பெயரை உரத்த குரலில் கத்த விரும்பினார், ஆனால் அவரது நாக்கு வாயின் மேல்பாகத்தில் ஒட்டிக்கொண்டது. அவர் அச்சத்தில் வியர்த்துப்போய் மயக்கமானார்.

அந்த நேரத்தில், சிதுவிற்கு ஒரு தகவலை வழங்கக் கூறி பாபா கிருஷ்ணாவை அனுப்பினார். சிது அவரது அறையில் இல்லாததை பாபாவிற்குத் தெரிவித்ததும், அவரைக் கண்டுபிடிக்க விளக்குகளுடன் காட்டுக்குள் செல்லுமாறு மண்டலிக்கு பாபா அறிவுறுத்தினார். சகன், நீலு, விஷ்ணு, மாஸாஜி ஆகியோர் தண்டாயுதங்களுடன் மண்ணெண்ணெய் விளக்குகளை ஏந்தி சிதுவைத் தேடிப் புறப்பட்டனர். அவர்களைக் கண்டதும் புலி பாய்ந்து ஓடியது. சிது அச்சத்தில் ஒரு வார்த்தைக் கூட பேச முடியவில்லை. சிரமத்துடன், அனைவரும் சிதுவைத் தூக்கி நிறுத்த முயன்றும் அவரால் நிற்க முடியாத அளவிற்கு கால்கள் நடுங்கின. மண்டலியின் உதவியுடன் அவரது அறைக்கு அழைத்துச் சென்ற ஒரு மணி நேரத்திற்குப் பிறகு தடுமாற்றத்துடன் அரைகுறையாக பேச முயன்றார்: “பாபா... காப்பாற்றினார்... என்னை!”

1943, மே 1 சனிக்கிழமையன்று, ஆதி சீனியர், பாபாவை பிலாரிலிருந்து மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார். சாஞ்சி அவர்களுடன் பூனாவிற்குச் சென்று, அங்கிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆதி ஜூனியர் பூனாவிலிருந்து பாபாவுடன் பயணம் செய்தார். மெஹராபாத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில், ஆதியின் கார் சக்கரம் பழுதானதால், ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸிலிருந்து உதவி வரும் வரை, பாபா ஒரு மரத்தின் கீழ் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது.

பாபா மே 5ஆம் நாள் ஸரோஷுடன் பிலாருக்குச் சென்று, இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் மெஹராபாத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தின் இறுதி தயாரிப்புகளை மேற்பார்வையிட்டார்.

மே 8ஆம் நாள் பாபா, மீண்டும் பிலாருக்குச் சென்று, மூன்று நாட்களுக்குப் பிறகு மெஹராபாத் திரும்பி வரும் வேளையில், பூனாவில் எரச்சையும் சந்தித்தார். காக்கா மறுநாள் மும்பையிலிருந்து மெஹராபாத் வந்தடைந்தார். (மே 12ஆம் தேதி, ஜெர்மன் இராணுவம் துனிஸியாவில் (TUNISIA) சரணடைந்தது, கிட்டத்தட்ட 300,000 கைதிகள் சிறைப்பிடிக்கப்பட்டனர்.)

1943, மே 13 அன்று பிற்பகல் கீழ் மெஹராபாத்தில் அமைந்த மண்டபத்தில், பாதிரியின் கட்டிலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வேளையில், பாபா, மேல்மலையின் தகரக் குடில் மிகவும் சூடாக இருந்ததாகக் குறிப்பிட்டார். அப்போது பாபா, அனைத்து மண்டலியையும் அங்கே அழைத்தார்; சிலர் பஜனை

பாடல்களைப் பாடினர்; அண்ணா 104 கீதையின் சில பகுதிகளையும், டாக்டர் கனியின் புத்தகத்திலிருந்து சில உருது கவிதைகளையும் வாசிக்கும் வேளையில் டாக்டர் தேஷ்முக், பாபாதாஸ், டாக்டர் கனி மூவரும் உள்ளே நுழைந்தனர். நல்ல மனநிலையில் இருந்த பாபா, எழுத்துப்பலகை மூலமாக இவ்வாறு விளக்கினார்:

**அவதார புருஷர் கற்பிக்கும் மூன்று வழிமுறைகள்:**

1. **சாதாரண மொழியில் மதத்தின் பழக்க முறைகள்** (CUSTOM - ஷரியத்) **மற்றும் சடங்குகளைப் பின்பற்றும் மக்களுக்கு, அவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் கற்பிப்பது.**
2. **சில மேல்நிலை ஆத்மாக்களுக்கு சாதாரண மற்றும் இறை மொழியில் கற்பிப்பது.**
3. **வட்டத்து உறுப்பினர்களுக்கு முற்றிலும் மாறான இறை மொழியில் கற்பிப்பது.**

**அந்தக் காலகட்டத்தில் ஸொராஸ்டர், மக்களுக்கு, அவர்கள் நன்கு புரிந்து கொள்ளும் விதத்தில் 'நல்ல சிந்தனைகள், நல்ல சொற்கள், நல்ல செயல்கள்'** (GOOD THOUGHTS, GOOD WORDS & GOOD DEEDS) **என்ற பழக்கவழக்க நெறிமுறைகளை** (ஷரியத்) **வழங்கினார். அவர் தெளிவான வார்த்தைகளில் 'செயல்படுங்கள், ஆனால் செயலின் விளைவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்' என்று கூறவில்லை - ஏனெனில் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை. எனவே ஸொராஸ்டர் அதையே வேறு வழியில் எடுத்துரைத்தார்.**

**முஹமது கூறினார்: "உங்களின் முழு கவனமும் செயலில் மட்டுமே இருக்கட்டும். நீங்கள் சிறப்பாக செயல்பட்டால், சொர்க்கம் செல்வீர்கள்; தீய வழியில் நடந்தால் நரகம் நிச்சயம்."**

**கிருஷ்ணர் இவ்வாறு கூறினார்: "செயல்படுங்கள், ஆனால் முடிவுகளைக் கண்டுகொள்ளாதீர்கள், அவற்றை என்னிடம் விட்டுவிடுங்கள்" - ஏன்? ஏனெனில் அப்போதைய சூழ்நிலையில் மக்கள் போரிடும் உணர்ச்சிமிக்க மனநிலையில் இருந்தனர்.**

**இயேசுவும் அதையே எடுத்துரைத்தார்: "செயல்படுங்கள், ஆனால் தியாக உணர்வுடன் செயல்படுங்கள்."**

**அவதார புருஷர்கள் வழங்கிய போதனைகள் அனைத்தும் அந்தந்த காலகட்டத்தின் இன்றியமையா தேவைகளுக்கு ஏற்ப இருந்தன.**

ஸெயிலர் மாமாவின் மருமகன் ஹோமி மானேக்ஜி பக்ரிவாலா ஒரு (HOMI MANEKJI PAGHRIWALA) புகைப்படக் கலைஞராக இருந்தார், அவருக்கு பாபா (புகைப்பட கருவி வாங்க ரூ 500 மற்றும் சில மாதங்களுக்கு ரூ 100 உதவித்தொகையாக வழங்கி) உதவினார். அவரும் அவரது மனைவி ஜீனியும் (JEANNIE) மெஹராபாத்தில் தங்கி, இப்போது மகனுடன் அஹமதுநகரில் ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தனர். பாபா, மே 13 அன்று (அக்பர் அச்சகம் மற்றும்

குஷ்ரு குவாட்டர்ஸுக்கு விஜயம் செய்து) ஹோமி குடும்பத்தினரை சந்தித்தார். இசைத்தட்டுகளை ஒலிக்க செய்து, பாபாவின் புகைப்படமும் எடுக்கப்பட்டது.

மெஹராபாத்தில் நிகழும் கூட்டத்திற்கு, பெண்டு மேலாளராக இருந்து, பந்தலுக்கு ஏற்பாடு செய்வதிலும், நிகழ்ச்சிக்கான இதர தேவைகளை கவனிப்பதிலும் நிபுணராக இருந்தார். பாதிரி பொறியியலில் அனுபவம் மிக்கவர், தண்ணீர் மற்றும் விளக்கு ஏற்பாடுகளின் பொறுப்பாளராக இருந்தார். மாஸாஜி, சகன் ஆகியோர் உணவு தயார் செய்யும் பணிகளை கவனித்தனர். ஆதி சீனியர் விருந்தினர்களின் வருகை மற்றும் புறப்படுவதற்கான போக்குவரத்தை கவனிப்பதும், நிகழ்ச்சியின் போது பாபாவின் எழுத்துப்பலகையை வாசிப்பதையும் பொறுப்புடன் செய்தார்.

இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்து மொத்தம் 125 ஆண்கள் 1943, மே 14, வெள்ளிக்கிழமை மெஹராபாத்தில் ஒன்று திரண்டனர்; இதில் போ:ஃபலி பிளீடரின் ஸாவ்னேர் குழுவிலிருந்து 28 பேரும், மானேக் மேத்தா தலைமையில் மும்பை ‘ஜப் மண்டல்’ அமைப்பிலிருந்து 15 பேரும் அடங்குவர். டாக்டர் டானும் விடுப்புப் பெற்று வர முடிந்தது (ஆனால் அவர் 15ஆம் தேதி மாலை வந்ததால் முதல் நாள் நிகழ்ச்சிகளைத் தவறவிட்டார்). முழுமையான கீழ்ப்படிதலுக்கான வாக்குறுதி அளித்தவர்களும், குருநாதரின் குறிப்பிட்ட செயற்காரணத்தில் பணியாற்றத் தயாராக இருந்தவர்கள் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

14ஆம் நாள் அனைத்து உறுப்பினர்கள் வந்ததும், பாபா அவர்களைத் தனித்தனியாக சந்தித்தார். காலம் இதை இப்படிப் பதிவுசெய்தது: “பாபா, மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார், அவரது முகம் ரோஜா மலரைப் போலத் தோற்றமளித்தது! அவரது கண்கள் ஒளியின் தீப்பொறிகளை வெளிப்படுத்தி, வந்த அனைவரின் இதயங்களையும் மகிழ்வித்தன. இந்த மகிழ்ச்சிக்கு முன்பு, சொர்க்கலோகத்தின் மகிழ்ச்சி ஒன்றுமேயில்லை; சொர்க்கலோகத்தின் மகிழ்ச்சி தங்கச் சங்கிலிகளாலும், நரகத்தின் துன்பம் இரும்புச் சங்கிலிகளாலும் பிணைக்கப்பட்டிருந்தன. ஆன்மீக நிலைப்பாட்டிலிருந்து பார்ப்போமேயானால், சொர்க்கம், நரகம் இவை இரண்டின் பிணைப்புகளும் கற்பனையே, அவை ஒருபோதும் விடுதலையின் கதவுகளைத் திறக்க முடியாது. ஆனால் மெஹராபாத்தில், வியாபித்திருந்த இந்த மகிழ்ச்சி, அன்பர்களை ஆன்மீகப் பாதைக்கு அப்பால் அழைத்துச் சென்று, அன்பிற்குரியவரின் நிமித்தம், எல்லா வகையான மகிழ்ச்சி மற்றும் வேதனையிலிருந்தும் அவர்களை விலக்கிவைத்தது.”

ஆண்கள் அனைவரும் கீழ் மெஹராபாத்தில் தங்க வைக்கப்பட்டனர்; பாபா மெஹராபாத் மேல்மலையில் இரவில் அவரது குடிலில் அல்லது சமாதி அறையில் ஓய்வெடுத்தார். மே மாதத்தில் மெஹராபாத்தில் வெப்பம் தீவிரமாக இருந்தது, மேலும் அன்பர்கள் அனைவரும் தங்கியிருந்த ஐந்து நாட்களில் ஒரு

நாளைக்கு ஒரு வேளை உணவும், தேநீரும் மட்டுமே அருந்தி உபவாசத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது.

1943 மே 15 சனிக்கிழமையன்று, பாபா அனைவரையும் ஒன்றிணைத்து உரையாற்றினார். மேல்மலையில் சமாதிக்கு வெளியே அமைந்த மேடையில் மாலை 7:30 மணிக்குப் பிறகு, சில நேரங்களில், பாபா நகைச்சுவை துணுக்குகளைப் பரிமாறி, சொற்பொழிவுகளை வழங்கி, அல்லது ஒன்றுதிரண்ட அன்பர்களின் பாடல்கள் மற்றும் வேடிக்கையான கதைகளைக் கேட்டு ரசித்தார்.

ஸாவ்னேர் குழுவில் ராகோ பட்டேல் (RAGHO PATEL) என்ற பெயரில் ஒருவர் இருந்தார். பாபா அவரிடம், **"உங்கள் கழுத்தை எனக்குக் கொடுப்பீர்களா? உங்கள் உயிரை எனக்காகத் தியாகம் செய்வீர்களா?"** என்று கேட்டார்.

ராகோ திகைப்பில் வாயடைத்துபோய் எதுவும் சொல்லமுடியாமல், அவரது குழு தலைவரான போ∴பலியைப் பார்த்து அவரிடம், "போ∴பலி ஸாஹேப், நீங்கள் என்னை இங்கே தரிசனத்திற்காக அழைத்து வந்தீர்கள், இப்போது பாபா எனது தொண்டையைக் கேட்கிறார்! எனது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு என்னவாகும்?" என வினவினார்.

இது அனைவரையும் சிரிக்க வைத்தது, பாபா மீண்டும் புன்னகையுடன் கேட்டார், **"நீங்கள் மரணத்திற்கு அஞ்சுகிறீர்களா?"**

"நான் அவ்வாறு அச்சத்தை வெளிப்படுத்தினால்தான் என்ன? நான் கவனித்துக்கொள்ள ஒரு மனைவி மற்றும் குழந்தைகள் இருக்கும்போது..." அவர் பதிலளித்தார்.

**"இறப்பது எளிதல்ல"** என்று பாபா அவரிடம் கூறினார். **"அனுதினமும் ஆயிரக்கணக்கானோர் இறக்கின்றனர், ஆனால் அது இறப்பல்ல! இறப்பது முழுமையான மரணமாக இருக்க வேண்டும்; பின்னர் அது நித்திய ஜீவனாக மாறுகிறது."**

"உங்களுக்காக நான் எனது கழுத்தை வழங்கினால், நீங்கள் என்னை நித்தியமாக உயிரோடு வைத்திருப்பீர்களா?"

**"உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளைப் பற்றி நீங்கள் கவலைப்படும்போது, உங்கள் கழுத்தை எவ்வாறு வழங்க முடியும்?"**

"இப்போது நான் தயாராக இருக்கிறேன், பாபா."

**"முற்றிலும் தயாராக?"**

"நான் எனது கழுத்தை உங்களுக்கு வழங்குகிறேன் - அதை வெட்டிவிடுங்கள்! நீங்கள் என்னை உயிருடன் வைத்திருந்தாலும் இல்லாவிடிலும் எனக்கு இப்போது கவலையில்லை."

**"இப்போது, நீங்கள் மிக்க தைரியசாலி ஆகிவிட்டீர்கள்,"** என்று கூறி, பாபா குலுங்கி குலுங்கி சிரித்தார்.

மெஹர் பாபா, அண்ணா 104விடம் கீதையிலிருந்து சில ஸ்லோகங்களை வாசிக்குமாறு கூறியதும், அவர் அதைச் செய்தார். பாபா அதன் அர்த்தத்தை ஆங்கிலத்தில் விளக்க, டாக்டர் கனி அந்தக் கருத்துக்களை

இந்தியில் மொழிபெயர்த்தார். டாக்டர் தேஷ்முக்கிடம் அவற்றை மராட்டியில் மொழிபெயர்க்குமாறு கூறியபோது, அவர் குழப்பமடைந்து பாபாவை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமல் பேந்த பேந்த விழித்தார்!

மராட்டி வடிவத்தில் உரையை வழங்குமாறு கூறியபோது, தேஷ்முக் தூக்கத்திலிருந்து விழித்தெழுவதைப் போலத் தோற்றமளித்தார். அவரால் மொழிபெயர்க்க முடியவில்லை, ஏனெனில் அவர் சரியாக, செவிகளில் வாங்கிக்கொள்ளாததால், சொன்னது நினைவில் இல்லை.

டாக்டர் தேஷ்முக்கைப் பற்றி பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"எந்தவொரு சீடரிலும் மிகவும் அரியதொரு கலவையான தலை (அறிவு) இதயம் (அன்பு) இரண்டையும் கொண்ட ஒரு மனிதர் இங்கே இருக்கிறார். நான் எடுத்துரைக்கும் கருத்துகளிலிருந்து (மெஹர் பாபா) ஜர்னலில் எனது கட்டுரைகளை (சொற்பொழிவுகளை) மிகவும் சிறப்பாக எழுதுகிறார் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் இப்போது எனது முன்னிலையில் காதல் கசிந்ததில் தொலைந்து போய், அவர் ஒரு மஸ்த் போல மாறிவிட்டார்!"**

மீண்டும் முக்கியமான விஷயத்தில் கவனத்தைத் திருப்பி, பாபா இவ்வாறு விளக்கினார்:

**டாக்டர் கனி, டாக்டர் தேஷ்முக் இருவரும் 'தெய்வீக கருப்பொருள்' பற்றிய விளக்கப்படத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்தையும் அக்கு வேறு ஆணி வேறாகப் புரிந்து கொண்டுள்ளனர், அதனால் எனக்கு விளக்க எதுவும் இல்லை. இருப்பினும், நான் அதை மிகவும் தெளிவாகவும் எளிதாகவும் விளக்கும் வேளையில், கடவுள் உங்கள் பிடியில் இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். அறிவுபூர்வமான நம்பிக்கையில் அவர் உங்கள் கைகளில் இருப்பதைப் போல நீங்கள் உணர்வீர்கள். எனவே அனைவரும் நாளை மூன்று மணி நேர விளக்கத்தைக் கேட்க முழுமையான தயார் நிலையில் வரவேண்டும்.**

**நீங்கள் ஒவ்வொருவரும் ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் ஒரு மாதம் இங்கு இருக்க வேண்டும். ஆகஸ்ட் மாத வாய்ப்பை இழந்தால் 'அற்புத' வாய்ப்பை இழந்தது போலாகிவிடும்.**

**ஜூலை 25 முதல் 31 வரை, ஏழு நாட்கள், சாதகமான சூழ்நிலையில், தண்ணீர் மட்டுமே அருந்தி, உபவாசம் மேற்கொள்ளும் 25 ஆண்களை நான் விரும்புகிறேன். 'சாதகமான சூழ்நிலை' என்பதன் அர்த்தம் என்னவென்றால், சம்பந்தப்பட்ட நபர் எந்தவொரு பொறுப்பிலிருந்தும் முற்றிலும் விடுபட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, டாக்டர் கனி 'அது அவரது மனைவியை அழ வைக்கும்' என்று கூறுவதானால், அது எனது பணிக்குத் தடையாக இருக்கும்.**

**சுருக்கமாகச் சொன்னால், சுதந்திரமாக, எந்த இடையூறும் இல்லாமல் உபவாசம் மேற்கொள்ள முடிகிற நபர்களை நான்**

**விரும்புகிறேன். ஒன்றில் உபவாசம் அல்லது மௌனம். நீங்கள் 40 ஆண்டு காலம் உபவாசம் மேற்கொள்வதாக இருந்தாலும், ஒருபோதும் இறை உணர்வை அடைய முடியாது. இல்லையெனில், உலகில் உள்ள ஒவ்வொரு முட்டாளும் இறை உணர்வை அடைந்துவிடக் கூடும்! ஆதி சீனியர் 28 நாட்களாக தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் இருந்தார். கராச்சியைச் சேர்ந்த பீலாமாய் 31 நாட்கள் தண்ணீரில் உபவாசம் இருந்த காலம் முழுவதும் அவரது வீட்டு கடமைகளைச் செய்வதில் சுறுசுறுப்பாக இருந்தார். நான் இங்கிருந்து உபவாசத்தைக் கைவிடக் கோரி தகவல் அனுப்பிய பின்னரே அவர் உணவு உண்ணத் தொடங்கினார். கிட்டி மற்றும் எர்னஸ்ட் (ERNEST - அவரது சகோதரர்) லண்டனில் 40 நாட்கள் தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் இருந்தனர்; இதேபோல மற்றும் பலர்.**

**ஆனால் இந்த உபவாசத்திற்கும் மௌனத்திற்கும் கடவுளுடனோ, ஆன்மீகப் பாதையுடனோ எந்த சம்பந்தமும் இல்லை. இதற்கான காரணம் என்னவென்றால், நாளை நீங்கள் அதைத் தெரிந்துகொள்வீர்கள்; நல்லது, தீயது இரண்டுமே பிணைக்கப்படுகின்றன. உண்ணுவது உண்ணாமல் இருப்பதைப் போலவே பிணைப்பை உருவாக்குகிறது. சுருக்கமாகச் சொன்னால் உபவாசமும் உண்ணுவதும் இரண்டுமே பிணைப்புகள்தான். கடவுள் இரண்டிற்கும் அப்பாற்பட்டவர். அவர் நம்பிக்கைக்கும் அப்பாற்பட்டவர்.**

**நீங்கள் உபவாசம் இருப்பது ஏன்? நிச்சயமாக, அது பொருள் அல்லது ஆன்மீகம் சார்ந்த நம்பிக்கையின் பேரில் இருக்கும். உண்மை என்னவென்றால், உபவாசம் அல்லது உபவாசத்தைத் தொடங்குவது குறித்த எண்ணம் பிணைப்பாகும். ஒருவர் உடல்நலம் குன்றி இருப்பதாலோ அல்லது பசியின்றி இருந்தாலோ உண்ணாமல் இருக்கிறார். எந்த ஒரு நோக்கமும் இல்லாமல் எவரும் உபவாசம் மேற்கொள்ளத் தயாராக இருக்க முடியாது. உயிரைத் துறப்பதுவரை உபவாசம் இருப்பதாக நினைப்பது கூட பிணைப்பை உருவாக்கும். 'கடவுளைக் காணும் நோக்கத்தில் நான் உயிரைத் துறக்கும் வரை உபவாசம் இருப்பேன்!' என்ற எண்ணம் எப்போதும் இருக்கும். ஆனால் மிக அரிதான ஆத்மாக்கள் மட்டுமே இத்தகைய அச்சுறுத்தலால் கடவுளைக் காண முடியும். இது ஒரு வீரச்செயல் ஆனால் மிகவும் அரிதானது.**

**முதன்மையாக, ஆகஸ்ட் மாதத்தில் எனது ஆன்மீகப் பணிக்காக 25 ஆண்கள் ஏழு நாட்கள் உபவாசம் இருப்பதை நான் விரும்புகிறேன்,**

**'உபவாசம் இருப்பதாக உறுதியளிக்கும் விதத்தில் 50 நபர்கள் அவர்களின் கைகளை உயர்த்தினால், அவர்களில் 25 நபர்களைத் தேர்ந்தெடுப்பது கடினம்,'** என்று கூறி பாபா ஒரு நல்ல நகைச்சுவையான முறையில் சமாளித்தார். உபவாசத்தைப் பற்றிக் குறிப்பிடுவதில் எப்போதும் முணுமுணுக்கும் டாக்டர் கனி, கடைசி நபராகக் கையை உயர்த்தியது அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. பாபா அவரைப் புகழ்ந்து,

புன்னகைத்து, **“நீங்கள் எனது குழந்தை பருவ நண்பராக இருக்கத் தகுதியானவர்”** என்று குறிப்பிட்டு, பாபா அவரைத் தழுவி, உபவாசம் இருக்காதவர்களுடன் அமருமாறு பணித்தார். பாபா, டாக்டர் கனியை ஏற்றுக்கொண்டாலும், அவர் ‘உபவாசிகளில்’ ஒருவராக இல்லை.

இவ்வாறு, மேலும் 15 முதல் 20 ஆண்களைத் தழுவி, பாபா அவர்கள் உபவாசம் இருக்க வேண்டாம் என்று கட்டளையிட்டார், இருப்பினும் அவர்கள் எடுத்த முயற்சியிலும், அளித்த வாய்ப்பிலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். வேடிக்கையான பேச்சு மற்றும் கலகலப்பான சிரிப்புக்கு மத்தியில், பாபா 25 நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பின்வருமாறு அறிவுறுத்தினார்:

**ஜூலை 25 முதல் நீங்கள் தத்தமது இடங்களில் உபவாசத்தைத் தொடங்கலாம். 31ஆம் நாள் மெஹராபாத்திற்கு வந்து, ஆகஸ்ட் 1 அன்று பால் அருந்தி, எனது முன்னிலையில் உங்கள் உபவாசத்தை நிறைவு செய்து கொள்ளுங்கள். பாலை நானே உங்களுக்கு வழங்குவேன்.**

**இப்போது நாம் நாளைய நிகழ்ச்சியைப் பற்றி பேசுவோம். நீங்கள் என்னை நகைச்சுவை பொங்கி வழியும் மனநிலையில் காண்பீர்கள், ஏனெனில், நான் உங்கள் இடத்தில் இருந்திருந்தால், அன்பான சிரிப்புடன் நகைச்சுவை மிக்க ஒரு கடவுளை நான் நேசித்திருப்பேன்; வறண்டுபோன, சோம்பேறியான ஒருவரை அல்ல. புன்னகைத்துக் கொண்டே உயிரைப் பறிக்கும் கடவுளை நான் நேசிக்கிறேன்! அவர் உங்கள் உயிரைப் பறித்தாலும் சிரித்துக்கொண்டே இருப்பார்.**

**நாளை பல விஷயங்களுக்கு நேரம் மிகவும் குறைவாக உள்ளதால் நீங்கள் அனைவரும் மும்முரமாக இருப்பீர்கள்; மேலும் 17 மற்றும் 18ஆம் தேதிகளும் கடினமாக இருக்கும். சுற்றறிக்கைகள் அனைத்தும் தயாராக வைக்கப்பட்டுள்ளன, அதை நான் நாளை விரிவாக விளக்குகிறேன்.**

**நாளை, 16, மெஹர்-ராஜாங்கத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இரவு.**

**17ஆம் தேதி துன்பமும் துயரமும் நிறைந்த இரவு.**

**18ஆம் தேதி கொலைவெறியின்** (கர்பலா) **இரவு.**

**19ஆம் தேதி இறைவனின் இரவு - திருவிழா மற்றும் விருந்து.**

**சாதாரணமாக, இது எளிதாகத் தோன்றும், ஆனால் நாளை நான் விரிவாகச் சொல்லும்போது, உங்களுக்கு கடினமாக இருக்கும். மௌனம், ஏகாந்தவாசம், தியானம் இவற்றைப் பற்றி நாளை விளக்குகிறேன்.**

அனைவரும் அங்கிருந்து கலைந்து செல்வதற்கு முன்பு, தட்டச்சு செய்யப்பட்ட குறிப்பிட்ட வழிமுறைகளின் சுற்றறிக்கை அனைவருக்கும் வழங்கப்பட்டது.

அவை பின்வருமாறு:

**இங்கே வழங்கப்படும் வழிமுறைகள், முழு மனதுடன் நிறைவேற்றப்பட்டால், உலகை ஆன்மீகமயமாக்கும் எனது பணியில் உதவ உங்களை அனுமதிக்கும். அவை நீண்டகாலமாக நிலைகொண்டிருக்கும் அறநெறி சார்ந்த உரைகளைப் போல பாவித்து, படித்து, கேட்டு பின்பு**

மறந்துவிடுவதற்காக அல்ல. சொற்பொழிவுக்கென்றே வெறுமனே அளிக்கப்பட்ட தத்துவ கோஷங்களின் வெளிச்சத்தில் அவற்றைப் புரிந்து கொள்ளப்படக்கூடாது. அவை எளிமையான, நித்திய சத்திய வாக்குகள், நீங்கள் அனைவரும் அவற்றை வாழ்ந்து வழிநடத்த முயற்சிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

வழிமுறைகள்:

1. உங்கள் அனைத்து கடமைகளுக்கும் பிணைப்புகளுக்கும் மத்தியில், உங்கள் எல்லா எண்ணங்களின் பின்னணியும் ஒரே ஒரு சிந்தனையாக இருக்கட்டும்: "இறைவன் ஒருவரே உண்மையானவர், இதர அனைத்தும் மாயை."
2. இறைவனின் உண்மையான, எல்லையற்ற தன்மையில் அவரை அறிந்து கொள்வதே அனைத்து வாழ்க்கையின் இறுதி குறிக்கோள் என்ற கருத்தை, பிறர் அறிந்து கொள்ளும் முறையில் எடுத்துச் சொல்லுங்கள்.
3. அதற்காக நீங்கள் சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருந்தாலும், பிறரை மகிழ்விக்க முயற்சிப்பதன் மூலம், உங்களைப் பற்றிக் குறைவாகவும் பிறரைப் பற்றி மிகையாகவும் சிந்தியுங்கள்.
4. நீங்களாகவே கற்றுக் கொள்ளுங்கள், மேலும் இறைவனின் சித்தத்தை அங்கீகரிப்பது என்பது உங்களைப் பற்றிக் குறை கூறி முறையிடுவது அல்ல என்பதைப் பிறருக்குக் கற்றுக் கொடுங்கள்; மனதைக் கட்டுப்படுத்துவது என்பது துரதிர்ஷ்டங்களால் வருந்தி வேதனைப்படக்கூடாது என்பதாகும்; அனைவரையும் ஒரே இறைவனின் குழந்தைகளைப் போல நேசிப்பது என்பது எவரையும் பொறாமைப்படச் செய்யக்கூடாது, யார் ஒருவருடைய உணர்வுகளையும் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது என்பதாகும்.

இப்போது மிகவும் கவனமாகக் கேளுங்கள்:

ஒரு மாத காலம், 1943 மே 15 முதல் 1943 ஜூன் 14 முடிவது வரை எனது ஆன்மீகப் பணியின் மிக முக்கியமான காலம். இந்த முழு மாதத்திலும், நீங்கள் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டியவை கீழ் வருமாறு:

1. நீங்கள் திருமணமானவராக இருந்தாலும் கடுமையான பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2. திரைப்படங்கள் பார்க்க வேண்டாம்.
3. திரையரங்குகளுக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கும் செல்ல வேண்டாம்.
4. விருந்துகளில் கலந்து கொள்ள வேண்டாம்.
5. பொழுதுபோக்குகளைத் தவிர்க்கவும்.
6. தினமும் காலையில் முதல் விஷயம் என்னவாக இருக்கவேண்டுமென்றால், இறைவனையும் அவரின்

**விருப்பத்தையும் நீங்கள் புரிந்துகொள்ளும்படி இறைவனின் ஒரு நேர்மையான பிரார்த்தனையைச் சொல்வது.**

அனைவரும் 1943, மே 16, ஞாயிற்றுக்கிழமை காலை 6:30 மணிக்கு எழுந்து, தயாராகி, 7:30 மணிக்கு தேநீர் அருந்திய பின்னர், மெஹர் பாபா இரண்டு மணி நேரம் காலை 8:00 முதல் 10:00 வரை நேர்காணல்களை வழங்கினார்.

மெஹர் பாபா வருவதற்கு முன்னதாக, கூட்டம் 10:00 மணிக்கு ஒன்று திரண்டது; பாபா வந்ததும் இவ்வாறு விசாரித்தார், **"நேற்று இரவு நீங்கள் நன்றாகத் தூங்கினீர்களா? நான் இதைக் கேட்பதன் காரணம் என்னவென்றால், நீங்கள் அனைவரும் இன்றிரவு 7:30 முதல் 10:30 மணி வரை மூன்று மணி நேரம் 'விழிப்புடன்' விழித்திருக்க வேண்டும்."**

அனைவரும் நன்றாகத் தூங்கியதாக பதிலளித்ததும், பாபா நீண்ட நேரம் தொடர்ந்து கூறினார்:

**இப்போது, கவனமாகக் கேளுங்கள். 1,200 நாட்களுக்கு இணையான மௌனத்தை நீங்கள் அனைவரும் 18ஆம் தேதி 12 மணி நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்! இந்த மௌனம் உள்ளேயும் வெளியேயும் இருக்க வேண்டும் - வெளியளவிலான மௌனம் எளிதானது, ஆனால் உள்ளளவிலான மௌனம் மிகவும் கடினம்.**

**இப்போது, உள்ளளவிலான மௌனம் என்பதன் அர்த்தம் என்ன? அதாவது பன்னிரண்டு மணி நேரம் உங்கள் மனதை அமைதிப்படுத்த வேண்டும். நீங்கள் நாவால் பேசும்போது, அது பேச்சு. உதடுகள் மூடப்பட்டிருக்கும் போது, அது வெளியளவிலான மௌனம். இப்போது, மனதிலும் பேசுவதற்கென ஒரு நாக்கு உள்ளது. மனம் தொடர்ச்சியாக வேலை செய்வது, தொடர்ந்து பேசுவதற்கு நிகரானது. மனதில் ஒரு சிந்தனையை உருவாக்குவது, உள்ளளவில் பேசுவது போன்றது. எனவே மனதின் 'உதடுகள்' மூடப்பட வேண்டும்.**

**மனதை பன்னிரண்டு மணி நேரம் அமைதியாக வைத்திருப்பது என்பது பன்னிரண்டு மணி நேரம் மனதில் எந்தவிதமான சிந்தனையும் இல்லாமல் இருப்பது போலாகும். ஆனால் மனம் பன்னிரண்டு வினாடிகள் கூட சிந்திப்பதை நிறுத்தாது! மனதின் எண்ணங்களை யாராவது உணர்வுபூர்வமாக பன்னிரண்டு வினாடிகள் அமைதியாக வைத்திருக்க முடிந்தால், அவர் மிகவும் மேம்பட்ட ஆன்மீக நிலையை அடைந்தவர் என்று அர்த்தம்.**

**நீங்கள் ஒரு கணம் அல்லது அதற்கும் அதிகமான நேரங்களில் வெறுமையாக உணர்கிறீர்கள், ஆனால் அது மனதின் வேலை நிறுத்தப்பட்டதாக அர்த்தமல்ல. மனதை, சிந்திப்பதிலிருந்து தடுப்பது அல்லது அதை சிந்திக்க வைத்து ஒரே சிந்தனையில் கவனத்தைச் செலுத்துவது இரண்டும் சமம். மனதை, சிந்தனையிலிருந்து தடுக்க**

முடியாவிட்டால், ஒரு குறிப்பிட்ட பொருளில் கவனம் செலுத்துவதன் மூலம் அதை ஈடுபடுத்த முயற்சிப்பதே சிறந்த பரிகாரமாகும்.

ஆகஸ்ட் மாதத்தில் அனுபவத்தை மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் எனக்காக பணிபுரிவதற்கான அறிவையும் பெற, நான் விரும்புவது போல், உங்கள் ஆழ் இதயத்திலிருந்து நீங்கள் உண்மையிலேயே விரும்பினால், நாளை மற்றும் 18ஆம் நாள், நான் உங்களுக்குச் சொல்வது போலச் செய்யுங்கள்.

காலை ஏழு முதல் மாலை ஏழு மணி வரை வெளியளவில் மௌனம் கடைப்பிடியுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் ஆறிலிருத்து ஏழு அடி தூரத்தில் அமர்ந்து, (தெய்வீகக் கருப்பொருள்) வரைப்படத்தில் இன்றிரவு நான் உங்களுக்கு விளக்குவதைத் தவிர, வேறு எதையும் சிந்திக்க முயற்சிக்காதீர்கள். மனதின் எண்ணங்களைத் துரத்தி விரட்டுவது என்பது தேவையற்ற பிற எண்ணங்களை வரவழைக்கவோ ஊக்குவிக்கவோ கூடாது என்பதாகும்.

உங்கள் உயிருக்கு ஆபத்தான ஒரு கட்டத்திலிருந்து உங்களைப் பாதுகாக்கும் ஒரு சிறப்பு கண்காணிப்புக் கடமையில் இருக்கிறீர்கள் எனக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இந்தக் ‘கண்காணிப்பு’ என்பது, உங்களைக் கொல்ல உறுதியாக இருக்கும் கொடிய எதிரிகளிடமிருந்து எதிர்பாராத மற்றும் திடீர் தாக்குதல்களை கவனமாகக் கண்காணிப்பதாகும். இன்றிரவு நான் உங்களுக்கு வழங்கும் மற்றும் விளக்கும் அனைத்தையும் உங்கள் மனதில் திரும்பத் திரும்ப நினைவுகூர்ந்து, அந்த நேரத்தில் மனதில் கொள்ளவேண்டும். இந்தச் செயற்பாட்டின் போது எதிரிகளைப் போன்ற பிற எண்ணங்கள் தலையிடும் வேளையில், நீங்கள் எச்சரிக்கையாக இருந்து அவற்றைத் துரத்தி விரட்ட முயற்சிக்க வேண்டும். இந்தப் பன்னிரண்டு மணி நேர தியானம் என்பது சாதாரண தியானம் அல்ல. இப்படியான சூழ்நிலைகளில் நீங்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். உங்களை இப்படியே வைத்துக் கொள்ளுங்கள்.

18ஆம் தேதி, வெளியளவிலான மௌனம் காலை 7:00 முதல் 8:30 வரை. பின்னர் உள்ளளவிலான, மிகவும் கடினமான மௌனம் காலை 8:30 முதல் 11:30 மணி வரையும், மீண்டும் பிற்பகல் 3:00 முதல் 6:00 மணி வரைத் தொடர வேண்டும். நீங்கள் விரும்பினால் இந்த மௌனத்தின் போது தனிமையில் அமர நீங்கள் அமைதியான இடத்திற்காக மேல்மலைக்குச் செல்லலாம். இந்த மௌனம் யோகிகளின் உள் மௌனம் போன்றது அல்ல; இது உங்களுக்காகவும் இல்லை. ஆனால், இது எனது பணிக்காக. இயற்கையின் அழைப்பு போன்றவற்றிற்காக நீங்கள் செல்லலாம், ஆனால் அதே ஒரே நிலை சிந்தனையை மையமாகக்கொண்டு தொடர்ந்து மௌனம் கடைப்பிடிக்க வேண்டும். சாதாரண வெளிப்புற மௌனத்தின் போது நீங்கள் இடைவெளி விட்டு ஒதுங்கி அமர்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

**ஆனால் ஆழ் மன மௌனத்திற்கு இது மிகவும் அவசியம். இக்காரணத்தினால்தான், நாளை மறுநாள், 18ஆம் தேதி, 'கொலைவெறி'யின் (கர்பாலாவின்) நாள் என்றும், துன்பங்களும், துயரங்களும் மிகப் பெரிய அளவில் இருக்கும் என்றும் நான் சொன்னேன்.**

**இந்தத் தனிச் சிறப்புமிக்க முழு உலகமும் இருப்பது உங்கள் மனம் இருப்பதால்தான். உங்கள் மனம் செயல்படுவதால் மட்டுமே இது அனைத்தும் உள்ளது. மனம் நின்றவுடன், நிகழ்வுகளின் உலகமும் நின்றுவிடும். எனவே, 18ஆம் தேதி நீங்கள் இந்தப் போரில் வெற்றி பெற வேண்டும். அத்தகைய சந்தர்ப்பம் மீண்டும் வராது. உங்களில் யார் யார் இதைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறீர்கள் என்பதைப் பார்ப்போம்.**

**இந்தச் செயற்திட்டம் ஒரு பெரிய ஆன்மீக முக்கியத்துவத்தையும் மகத்துவத்தையும் உள்ளடக்கியது. இந்த ஒரு நாளைய பணியை, உங்கள் ஆழ் இதயத்திலிருந்து உண்மையாகச் செய்தால், 50 வருட கால ஜபம், தவம் (பிராயச்சித்தம், துறவறம் போன்ற நடவடிக்கைகள்) மற்றும் ஒரு துறவி கடைப்பிடிக்கும் உபவாசத்திற்கு நிகராக இருக்கும், ஏனெனில் அவதார புருஷர் உலகிற்கான அவருடைய பணியில் நீங்கள் பங்கேற்பதை விரும்புகிறார். இது இப்போது அவர் உங்களுக்காக செய்து வரும் பணியின் உச்சக்கட்டமாகும்.**

**எனவே நான் உங்கள் அனைவரையும் உணரவைக்க விரும்புவதெல்லாம், நீங்கள் செய்வதை அன்புடன் செய்ய வேண்டும், தோல்வியுறுவோம் என்ற பயமின்றி செய்ய வேண்டும். நீங்கள் அதை மனப்பூர்வமாகச் செய்தால், எந்தத் தோல்விக்கும் இடமில்லை, ஏனெனில் நான் அதை நீங்கள் செய்யும்படிப் பணிக்கிறேன், எனவே நானே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். இதன் விளைவாக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை; இல்லையெனில், நீங்கள் அதை உங்கள் சொந்த விருப்பப்படி செய்வதானால், அது மிகவும் கடினமான செயலாக இருக்கும். இந்த எண்ணத்தை உங்கள் மனதில் ஆணித்தரமாகக் கொண்டிருக்க வேண்டும், அதாவது: "நான் இதை, பாபாவுக்காகச் செய்ய வேண்டும், எனது தனிப்பட்ட முன்னேற்றத்திற்காக அல்ல."**

பக்தி இசை நிகழ்ச்சி நண்பகல் வரை தொடர்ந்தது, மதிய உணவு 2:00 மணிக்கு வழங்கப்பட்டாலும் உபவாசத்தின் காரணமாக அது அன்றைய ஒரே உணவாக இருந்தது.

அன்று இரவு, பாபா அவரது சகவாசத்தை சமாதி அறைக்கு வெளியே அமைக்கப்பட்ட மேடையில் மாலை 7:30 முதல் 9:30 மணி வரை வழங்கினார். தரிசன நிகழ்ச்சியில் பங்கெடுத்த அனைவரும் ஒரு கம்பளத்தின் மீது தரையில் அமர்ந்திருந்தனர், பாபா மேடையில் தனது வாகனத்தில் வீற்றிருந்தார்.

பாபா கூறினார்:

**இப்போது, நீங்கள் தெய்வீக கருப்பொருளின் வரைபடம், அதன் விளக்கம், வடிவம், நிறம் மற்றும் பலவற்றைப் பற்றி சிந்திக்கும்போது,**

**உங்கள் முயற்சியையும் கடந்து, பிற எண்ணங்கள் அலை பாய்வதானால், நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் அவற்றை உள்ளே அனுமதிக்காமல், பயத்துடன் அல்ல, ஆனால் பாபா மீதான நேசத்தால், முயற்சிக்க வேண்டும். அதையும் மீறி இந்த எண்ணங்கள் உங்களைத் தொந்தரவு செய்தால், நீங்கள் தோல்வியடைந்து விட்டதாக எண்ணிக் கவலைப்பட வேண்டாம், உள்ளளவிலான மௌனத்தைக் கடைப்பிடிக்க முடியவில்லை என்று விரக்தியடையவும் வேண்டாம். உங்கள் மனதை, எண்ணங்கள் இல்லாமல், பன்னிரண்டு வினாடிகள் கூட வைத்திருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்.**

**இந்த எண்ணங்களுடனான போராட்டத்தைத் தொடருங்கள் - நீங்கள் வென்றாலும் அல்லது எண்ணங்கள் வென்றாலும், இதைப் பிரச்சினையாகப் பார்க்கக்கூடாது. இதனால் கவலையடைய வேண்டியதுமில்லை. நீங்கள் உண்மையாக, தொடர்ந்து போராட வேண்டும். எனது திறவுகோல் நீங்கள் பல்வேறு எண்ணங்களைப் பெறும் விதத்தில் சுழலும்! ஏனெனில், நீங்கள் போராடி வெற்றிவாகை சூடவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**நீங்கள் (தெய்வீகக் கருப்பொருளின்) வரைபடம், விளக்கம், வடிவம் மற்றும் வண்ணங்களில் கவனம் செலுத்த வேண்டும், இது உங்கள் மனதை பிற எண்ணங்களிலிருந்து விலக்கி வைக்கத் தானாக உதவும். உங்களுக்கு வேறு எண்ணங்கள் வராவிடில் போராட்டத்தைக் குறித்தக் கேள்விக்கு இடம் எங்கே? மேலும், எனது சொந்த காரணங்களுக்காக, இந்தக் குறிப்பிட்ட நேரங்களில் நீங்கள் மனதளவில் தொடர்ந்து போராட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**போராடாமல் எதையும் இழக்கக்கூடாது. வலிமையான எண்ணங்களுக்கு எதிராகப் போராடாமல், தோல்வியைக் கண்டு துவண்டு அதை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.**

இங்கே, பாபா கூட்டத்திலிருந்து இரண்டு நபரை அழைத்தார், ஒருவர் வலுவான, உறுதியான நபர்; மற்றொருவர், ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா, இதற்கு நேர்மாறான - மெலிந்த பலவீனமான நபர். அவர்களைச் சுட்டிக்காட்டி, பாபா விளக்கினார்:

**இந்த இருவரையும் பாருங்கள்; ஒருவர் மிகவும் வலிமைமிக்க, உடலளவில் பெரிய மனிதர், மற்றொருவர் நோஞ்சான், மிகவும் பலவீனமானவர். பலவீனமானவர் தனது எதிரியின் தோற்றத்திற்கு பயந்து விளையாட்டைக் கைவிட்டால், எதிரி போராடாமல் வெற்றி பெறுவார். இதில் பயன் எதுவுமில்லை. ஆனால் பலவீனமானவர், அவரது உருவம் மெலிந்திருந்தாலும், தன் எதிரியை எதிர்கொள்ளும் அளவிற்கு உற்சாகமாகவும், மன தைரியமும் உடையவராக இருந்தால், எதிரி எவ்வளவுதான் வலிமை மிக்கவராகத் தோன்றினாலும், அவர் குறைந்த பட்சம் ஒரு நல்ல போட்டியை முன்வைக்கிறார்.**

**எனவே நீங்கள் விரக்தியடைய வேண்டியதில்லை, ஆனால் ஒரு வலுவான போட்டியைக் கொடுக்க வேண்டும். (பலவீனமான) ஃபெராம், இல்லாத எதிரி ஒருவரோடு போராடுவதாகக் கற்பனை செய்து பாருங்கள். அது அவரது கைமுட்டிகளை காற்றில் அசைப்பது போலத் தோன்றும்! அது முட்டாள்தனம் - சுத்த பைத்தியக்காரத்தனம். எனவே, போராட்டம் என்றால் எதிர்ப்பாளர் இருக்க வேண்டும். எதிர்ப்பாளர் ஒருவர் எவ்வளவு வலிமையாக இருக்கிறாரோ, அந்த அளவிற்குப் போட்டி அதிக உற்சாகமானதாகவும், மேலும் பாராட்டத்தக்க வெற்றியுடன் கூடிய முடிவாகவும் இருக்கும். எனவே மன எதிர்வினையுடன் அச்சமின்றி போராட்டத்தைத் தொடருங்கள்.**

1943 மே 17 திங்களன்று காலை 7:30 மணிக்கு, மெஹர் பாபாவின் '**தெய்வீக கருப்பொருள்**' (DIVINE THEME) வரைபடத்தின் விளக்கத்தைக் கேட்க அனைவரும் ஒன்றுதிரண்டனர்:


**இது மிகவும் இன்றியமையாதது என்பதால், இதை நீங்கள் கவனமாகப் பின்பற்ற வேண்டும். 'உள்ளார்ந்த' மௌனத்தின் போது, நாளை, நீங்கள் அதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். உருது, குஜராத்தி, மராட்டி மொழிகளில் விளக்கங்கள், பின்னர் சம்பந்தப்பட்ட நபர்களால் வரைபடத்தின் உதவியுடன் மீண்டும் வழங்கப்படும். இவற்றில் பெரும்பகுதி ஏற்கனவே குறுகிய பாகங்களாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இப்போது இவை அனைத்தையும் ஒன்றிணைத்து, முழுக்கதையையும் நான் உங்களுக்கு விளக்கப்போகிறேன்.**

பாபா ஏற்கனவே எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த மராட்டி மொழிபெயர்ப்பை, டாக்டர் தேஷ்முக் வாசித்தார்.


தேஷ்முக் சத்தமாக வாசித்த வேளையில், இடையிடையே, பாபா சில விஷயங்களைத் தெளிவுபடுத்தி விளக்கினார். ஒரு கட்டத்தில், பாபா அவரைத் தடுத்துக் கூறினார், "**நாம் 'காலம்' என்று கூறுவது தவறு. அளவிறுதியற்ற தன்மைக்கு 'காலம், நேரம்' போன்ற எதுவும் இல்லை. ஆனால் இருமைத்தன்மையில் காலம், நேரம் இருப்பதை நாம் சொல்லியாக வேண்டும்.**"

டாக்டர் தேஷ்முக் வாசித்து முடித்ததும், பாபா அவரது விளக்கத்தைத் தொடங்கினார்: "**இன்று, 'கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார்' என்று சொல்வதன் மூலம் நாம் ஆரம்பிக்கலாம். கடவுளுக்கு அப்பாற்பட்ட ஒன்று இருந்தால், அதுவும் கடவுளே, எனவே நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளுள் இருக்கிறீர்கள்.**"

தேஷ்முக் வரைபடத்தின் முன்னுரையை வாசித்தார்; அப்போது பாபா கூறினார்: "**நான் இதையெல்லாம் முன்பே விளக்கியுள்ளேன், ஆனால் இன்று அதன் மீது அதிக வெளிச்சமிட்டுக் காட்டி அதைத் தெளிவுபடுத்துவேன்.**"




**ம ன க் க ண் க ள்**



பரிணாமத்தில் புறக்கண்கள் வெளி உலகங்களைப் பார்க்கும்
உட்சுழற்சியில் அகக்கண்கள் உள் உலகங்களைப் பார்க்கும்

அவர் இந்த வரைபடத்தை கரும்பலகையில் வரைந்தார்:

(1915ஆம் ஆண்டில்) **நான் நர்கோலில்** (NARGOL - குஜராத்) 25 **நாட்கள் ஆசிரியராக இருந்தபோது, இந்த வரைபடத்தை வரைந்தேன். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.**

**வரைபடத்தின் விளக்கத்தைக் கேட்பதற்கு முன்னர், இந்தப் புள்ளியில் உங்கள் கவனம் ஒரு கணம் இருக்கட்டும். மனம், உடல் எனும் இரண்டு திரைகளின் காரணமாக, துளி** (ஆத்மா), **பெருங்கடலைக்** (பரமாத்மா) **காணமுடிவதில்லை.**

**இப்போது என்ன நிகழ்கிறது என்பதைப் பாருங்கள்! உடலைத் துறக்கும் வேளையில், மனம் அப்படியே இருக்கிறது. உடலைத் துறந்ததும், அதன் மனப்படிவங்கள் உடனடியாக வெளிப்பட்டு, அவற்றை வியாபிக்கச் செய்து, ஒரு புதிய உடலைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றன. மனப்படிவங்கள் உடல் வழியாக வெளிப்பாட்டை விரும்புவதால், புதிய உடல் இந்த மனப்படிவங்களின் பிரதிபலிப்பாக இருக்கும்.**

**இவ்வாறு, ஒவ்வொரு உடல் வடிவத்தையும் துறக்கும் தருவாயில், மனப்படிவங்கள் வேறு ஓர் உடலை எடுக்க விரும்புகின்றன. இந்த மனப்படிவங்கள் சீரற்றதாக இருந்தால் - அதாவது தீங்கு அல்லது ஊறு விளைவிக்கின்றதாக இருந்தால் - உடலும் சீரற்றதாக - எடுத்துக்காட்டாக நோயுற்றதாக இருக்கும். தீய மனப்படிவங்கள், உடலுக்குத் துன்பம் தரும் வலி, வேதனை போன்றவற்றை அனுபவிக்கச் செய்யும்; அவை நல்லதாக இருந்தால், மனம் மகிழ்ச்சியாக இருக்கும்.**

**மனம் இருக்கும் வரை, மனப்படிவங்களும் இருக்கும், இவற்றுடன் உடலும் இருக்கும். இந்த மனப்படிவங்கள் அழிக்கப்படும் வரை, ஆன்மா கடவுளைக் காணமுடியாது. எனவே உடலைத் துறப்பதால் எந்தப் பயனுமில்லை, ஆனால் மனம் மறையும்போது, மனப்படிவங்கள் மிஞ்சியிருக்காது. அவை மறைந்துவிடும். அதே வேளையில் இதில் முரண்பாடாகத் தோன்றுவது என்னவெனில், உடலைத் துறந்து, மனப்படிவங்கள் (தன்னைத்தானே அழிக்கத் தேவையான) புதிய உடலை எடுக்கும் தருவாயில், ஆத்மா (துளி) படிப்படியாக, பரமாத்மாவைப் (பெருங்கடல்) பார்க்கும் சுய உணர்வை அடைய உதவுகின்றன.**

**அப்படியானால் வேறு என்ன தேவை? மனம் மறைந்தாக வேண்டும்; அப்போது சேகரித்து வைக்கப்பட்ட இந்த மனப்படிவங்கள் தானாகவே மறைந்துவிடும். அப்போது உடல் - துளியாகிய ஆன்மா - பெருங்கடலைப் பார்க்கிறது. இது கடவுளின் அசலான நிலையாக இருந்தாலும், அந்த நேரத்தில் ஆத்மா கண்களை மூடித் தூங்கிக் கொண்டிருந்தது.**

பாபா கண்களை மூடிக்கொண்டார்; பின்னர், அவற்றைத் திறந்து அவரது விளக்கத்தைத் தொடர்ந்தார்.

**மனம், உடல் இவற்றின் மீதான திரை மறைந்துவிட்டதால் இப்போது கண்கள் திறக்கப்பட்டுள்ளன.**

நீங்கள் கவனமாகக் கேட்டால், உங்கள் கண்களும் திறக்கும்!

'தெய்வீக கருப்பொருள்' வரைபடத்தின் விளக்கம் குறித்த முக்கிய விஷயங்களைத் தொடர, பாபா, சைகையால் தேஷ்முக்கிற்குத் தெரிவித்தார். சிறிது நேரம் கழித்து, பாபா ஒரு பெரிய வரைபடத்தைச் சுட்டிக்காட்டி இவ்வாறு விளக்கமளித்தார்:

இந்த ஆன்மா - 'ஏ' (A)யிலிருந்து தொடங்கி - 'இஸட்' (Z) கடவுளாக வேண்டும். உண்மையில், இரண்டும் ஒன்றுதான் - ஏக இறைவன். ஆனால் இந்த 'ஏ' (A), 'இஸட்' (Z)ஆக மாற, அது பரிணாமம் (EVOLUTION), மறுபிறவி (REINCARNATION) உட்சுழற்சி (INVOLUTION) எனும் செயல்முறைகள் வழியாக இறை உணர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

இப்போது, வரைபடத்தில் என்ன குறிப்பிடப்படுகிறது? சிவப்பு நிறம் மனப்படிவங்களையும், நீல நிறம் உணர்வு நிலையையும் குறிக்கிறது. 'எஸ்' (S – INDIVIDUAL SOUL) ஆத்மாவைக் குறிக்கிறது. சிவப்பு, நீலம் இவ்விரண்டையும் குறித்து, 'ஏ' யிலிருந்து 'இஸட்' வரையிலான பயணத்தில் நீங்கள் காண்பது என்னவெனில், இரண்டும் மனித வடிவம் வரை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

ஆனால், இறை உணர்வை நோக்கிச் செல்லும் செயல்முறையில், நீங்கள் என்ன காண்கிறீர்கள்? சிவப்பு நிறம் படிப்படியாகக் குறைந்து, நீல நிறம் மாறாமல் அப்படியே இருக்கும் மற்றும் 'இஸட்' நிலையில் சிவப்பு முற்றிலும் மறைந்து, நீலம் மட்டுமே இருக்கும். அதாவது மனித வடிவம் வரை, பரிணாம வளர்ச்சியின் போது, மனப்படிவங்கள் அதிகரிக்கின்றன, அத்துடன் உணர்வு நிலையும் முழுமையடைகிறது. இறை உணர்வை நோக்கிப் பயணிக்கும் செயல்முறையில், மனப்படிவங்கள் படிப்படியாகக் குறைய, முழு உணர்வு மட்டுமே இருக்கும்.

மீண்டும், வரைபடத்தைச் சுட்டிக்காட்டி, பாபா, விளக்கத்தைத் தொடர்ந்தார்:

மனப்படிவங்கள் 'பின்னிப் பிணைந்திருப்பது' (WINDING) இவ்வாறு காட்டப்பட்டுள்ளது, மேலும் அது 'ஏ'யிலிருந்து தொடங்குகிறது. 'பிணைந்திருப்பதைப் பிரிக்கும்' (UNWINDING) செயல்முறை இந்த வழியில் 'இஸட்'டை நோக்கிக் காட்டப்பட்டுள்ளது. 'ஏ'யிலிருந்து தொடங்கும் 'பின்னிப் பிணைந்திருக்கும் செயல்முறை' (WINDING PROCESS) பரிணாம வளர்ச்சியின் ஏழு நிலைகள் 'கீழ்நிலை' (DESCENT) என்று குறிப்பிடப்படுகிறது; மேலும் 'இஸட்' 'மேல்நிலை'யைக் (ASCENT) காட்டுகிறது, அதாவது உட்சுழற்சி (INVOLUTION - இறைநிலையை அடையும் செயல்முறை) இவை இரண்டும், வரைபடத்தில் தலைகீழாகத் தோற்றமளிக்கின்றன.

இப்போது, இதில் கவனம் செலுத்துங்கள். இவை அனைத்தும் ஆத்மாக்கள், ஆனால் கல், உலோகம், காய்கறி, விலங்கு, போன்ற பல வடிவங்களில் பரிணாம வளர்ச்சியில் இருக்கும் ஆத்மாக்கள். நான் இப்போது உங்களுக்குச் சொல்வதை நினைவில் கொள்ளுங்கள்.

**உண்மையில் இந்த வடிவங்கள், உலகங்கள் எதுவுமே இல்லை. இருப்பது 'ஜீவாத்மா'** (தனிப்பட்ட ஆத்மாக்கள்) **மற்றும் 'பரமாத்மா' மட்டுமே. இரண்டும் ஒன்றுதான். ஆனால் விளக்கத்திற்காக, நாம் ஒன்றை ஜீவாத்மாவாகவும், மற்றொன்றைப் பரமாத்மாவாகவும் எடுத்துக்கொள்கிறோம். அவை முற்றிலும் வித்தியாசமாகத் தோன்றினாலும், உண்மையில் அவை ஒன்றே ஒன்றுதான்.**

காடேக்கர், பாபாவின் விளக்கத்தில் முழுமையாக மூழ்கி, ஆழ்ந்த சிந்தனையில் இருந்ததை, டாக்டர் கனி பார்த்து, சிரித்துக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகு பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இது அப்படித்தான் இருக்க வேண்டும். இதையெல்லாம் நாம் புன்னகையுடன் எடுத்துச் செல்ல வேண்டும்; இல்லையெனில் சிரமமாக இருக்கும்.**

**இந்த வரைபடத்திலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்? முதலில், கவனமாகக் கேளுங்கள். இது மிகவும் எளிது.**

**இதைப் பெருங்கடல்** (**பரமாத்மா** - PARAMATMA) **என்று வைத்துக்கொள்வோம். நாம் அனைவரும் இதில் ஆத்மாக்கள்** (SOULS), நம் **உடல்கள் 'நீர்குமிழ்கள்'** (BUBBLES). **அவை பெருங்கடலில் எண்ணற்ற துளிகள். ஒரு துளி என்பது பெருங்கடலில் இருந்து எந்த வகையிலாவது வேறுபடுகிறதா? இல்லை, ஆனால், சாதாரண கடலில் நீர்குமிழ்கள் மேற்பரப்பில் தோன்றும். இந்தப் பெருங்கடலில்** (பரமாத்மா) **அவ்வாறு இல்லை. நீர்குமிழ்கள் உள்ளன, ஆனால் அவை பெருங்கடலுக்குள் ஒன்றோடு ஒன்றாக உள்ளன.**

**ஆரம்பத்தில், பெருங்கடல் மிகவும் அமைதியாகவும் முற்றிலும் அலைகள் இல்லாமலும் இருந்தது. அசல் விருப்பத்தின்** (LAHAR - ORIGINAL WHIM) **தூண்டுதல், ஒரு தென்றலைப் போல் உருவாகி, நீர்குமிழ்கள் உருவாக்கப்பட்டன.**

**ஆனால், இந்தப் பரமாத்மா எனும் பெருங்கடலில், அந்த 'அசல் விருப்பம்' மற்றும் 'தூண்டுதல்' இரண்டும் பெருங்கடலுக்குள் உள்ளன; உள்ளே இருப்பதால் அது அதிர்வலைகளை உருவாக்க முடியாது. மேற்பரப்பில் எந்த அதிர்வுகளும் தோன்றாததற்கு இதுவே காரணம். இந்த விஷயத்தை உங்கள் மனதில் மிகத் தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள்.**

**தெளிவாக புரிந்து கொள்ள, மேலும் ஒரு முக்கியமான விஷயம் உள்ளது. நீங்கள் இதை சரியாகப் புரிந்துகொண்டால், சற்று கடினம் என்றாலும், எல்லாம் தெளிவாக இருக்கும். இது 'பின்னிப் பிணைந்திருப்பதும்'** (WINDING) மற்றும் **'பிணைந்திருப்பதைப் பிரிப்பதும்'** (UNWINDING) **பற்றியது, அதாவது ஏழு திருப்பங்கள்** (ஆத்மாவின் பயணத்தின் போது 'ஏ' யிலிருந்து 'இஸட்' வரையிலான திருப்பங்கள் - வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன).

தன்னை சுட்டிக்காட்டி, பாபா மீண்டும் தொடர்ந்தார்:

**சிந்தித்துப் பாருங்கள், இந்த உடல், ஆன்மா. இது வெறுமனே விளக்கத்திற்காக மட்டுமே, ஏனெனில், உண்மையில் அது அவ்வாறு இல்லை. உடல் ஆன்மா அல்ல.**

**ஆரம்பத்தில், உணர்வு என்பது கண்களைத் திறப்பது போன்றது.**

பாபா, கண்களை மூடி, பின்னர் சிறிதளவு திறந்தார்.

**ஆரம்பத்தில், ஆன்மா இருந்த நிலையில் 'கண்கள்' மூடப்பட்டிருந்ததால், என்னை என்னால் பார்க்க முடியாத நிலை.**

**இப்போது என்ன நடக்கிறது பாருங்கள்! 'என்னை நானே பார்க்க' என்னுள் ம(உ)றைந்திருந்த அந்தத் 'தூண்டுதல்'** (URGE) **ஓர் அதிர்வை** (WHIM) **ஏற்படுத்தியது. உதாரணமாக, இறை ஞானத்தில் அறியாமை மறைந்திருக்கும். எல்லையற்ற நிலையில் வரையறுக்கப்பட்டவை மறைந்திருக்கும். ஒருவரால் கடவுளுக்கு எதிரானவை என்று கருத்தில் கொள்ள முடிகிற அனைத்தும் கடவுளில் ம(உ)றைந்திருந்தன, ஏனெனில் கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லாததால், கடவுளே கடவுளுக்கு எதிராக இருக்கும் நிலையில் 'தன் இறைத்தன்மையை அறிந்து கொள்வது' என்ற எதிர் வேட்கையும் ம(உ)றைந்திருந்தது.**

**எனவே, முதல் 'அதிர்வால்', கண்கள் சற்றே திறக்கப்பட்டன, அவை இயற்கையாகவே அவற்றை எதிர்கொள்ளும் பொருட்களின் மீது வீழ்ந்தன. சிறிது நேரம் கண்கள் ஒளியைக் கண்டன. கண்கள் திறந்ததும், ஆன்மா தொடர்ந்து ஒளியைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், அது சோர்வடைந்தது; அதன் விளைவாக உடலுக்கு ஒரு 'திருப்பம்' (**TWIST**) கிடைத்தது. அந்தத் திருப்பத்தால், ஆரம்பத்தில் சற்று திறந்திருந்த கண்கள், மேலும் சிறிதளவு திறந்தன, இப்போது முன்பை விட அதிகமாக அதைக் காண முடிந்தது. ஆகவே, கல்லில் இருந்து மனித நிலைக்கான பரிணாம வளர்ச்சியின் போது, ஒன்றன் பின் ஒன்றாக, மேலும் பல திருப்பங்களைத் தொடர்ந்து அடையும் தருவாயில், கண்கள் மேலும் மேலும் திறந்து (விரிவடைந்து), அதிக அளவில் பார்க்க முடிந்தது; இவ்வாறு தொடர்ந்து, ஆன்மா ஒரு பெரிய திருப்பத்துடன் மனித வடிவத்தை அடைந்த வேளையில், அதன் கண்கள் முழுமையாகத் திறக்கப்பட்டன; அது வானத்தையும் நட்சத்திரங்களையும், உலக நிகழ்வுகள் போன்ற அனைத்தையும் காண முடிந்தது.**

**இது 'கீழ்நிலை'** (DESCENT) **எனும் பரிணாம வளர்ச்சியின் ஏழு செயற்பாட்டு நிலைகளைக் கடக்கும்போது நிகழ்கிறது.**

**அதன் பின்னர் என்ன நடந்தது? மனித வடிவம் எடுத்த அடுத்த கணமே, ஆன்மா அதன் 84 லட்சம் மறுபிறவியை எடுக்கும் தருணத்தில், எல்லாவற்றையும், இங்கும், அங்கும், எங்கும் அதாவது எல்லா இடங்களிலும் தொடர்ந்து பார்த்தது. இறைநிலையை அடையும் தலைகீழான செயற்பாட்டின் போது, ஏழு புதிய திருப்பங்களைப் பெறும்**

தருவாயில், அதன் கண்கள் பிரமித்துப்போய், தன்னைத் தானே கீழ் நோக்கிப் பார்க்கத் தொடங்குகிறது; முதலில், கால்களிலிருந்து மேல்நோக்கி, அது தன்னை முழுமையாகப் பார்க்கும் வரைத் தொடரும். இந்தத் 'தன்னைத் தானே நோக்கும்' உட்சுழற்சியின் செயற்பாடு மேல்நிலையில் (ASCENT) நிகழும்.

நாம் 'ஏ' என்ற புள்ளியில் இருக்கும் ஆன்மாவை, அறிவுப்பூர்வமாக 'இஸட்'க்கு எடுத்துச் செல்வோம். இப்போது, மேலும் ஒரு கருத்தைத் தெளிவுபடுத்திய பின்பு நாம் வரைபடத்தை எடுத்துக்கொள்ளலாம். அனைத்தும் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த ஏழு மனப்படிவங்களின் திருப்பங்களுக்கு ஏழு முக்கிய வடிவங்கள் உள்ளன - கல் அல்லது உலோகம், காய்கறி, புழு, மீன், பறவை, விலங்கு மற்றும் மனிதன். மனப்படிவங்களின் ஒவ்வொரு திருப்பமும் அடுத்த வடிவத்திற்கு வழிவகுக்கிறது; இவ்வாறு ஏழு வடிவங்களுக்கு ஏழு திருப்பங்கள் உள்ளன, மேலும் கல் வடிவத்திற்கு முன்னர் ஆறு முந்தைய வடிவங்களும் உள்ளன. ஆன்மாவிற்கு கிடைத்த முதல் வடிவம் குமிழி, இது வாயு நிலையில் இருந்தது. கல் வடிவம் உருவாகும் வரை, ஐந்து மிகத்துல்லியமான வடிவங்களும் உள்ளன. கல்லிலிருந்து உலோகம் மற்றும் உலோகத்திலிருந்து காய்கறி வரை - இப்படி ஒவ்வொன்றும் ஏழு நிலைகளைக் கொண்டுள்ளது.

எனவே, உண்மையான திருப்பம் கல் வடிவத்திலிருந்து தொடங்கி, மனித வடிவம் வரை மொத்தம் ஏழு திருப்பங்கள் உள்ளன. கல்லிலிருந்து மனிதன் வரை ஒவ்வொரு முக்கிய வடிவத்திலும் 14 லட்சம் இனங்கள் உள்ளன. அதாவது, ஆறு வடிவங்களில் (மனிதனை உள்ளடக்காமல்) 6 x 14 லட்சம் = 84 லட்சம் (84,00000) இனங்கள் = 84 லட்சம் பிணைப்புகள் உள்ளன; அதாவது 84 லட்சம் பிணைப்புகள் மற்றும் ஏழு திருப்பங்கள் உள்ளன. ஒவ்வொரு ஏழாவது கட்டத்திற்கும் பிறகு, (வடிவம்) ஒரு திருப்பத்தை எடுக்கும்.

ஆன்மா முதலில் (ஒரு குமிழியின்) வாயு வடிவத்தைப் பெறுகிறது. அது கல் வடிவத்தை எட்டும் வரை, ஏழு வடிவங்களைக் கடந்து செல்கிறது. அதனால்தான் இந்த விஷயங்களை அறிந்த ஆனால் அவற்றை உலகிற்கு வெளிப்படுத்த முடியாத ரிஷிகள் ஒவ்வொரு முக்கிய வடிவத்தின் கடைசி வடிவத்தை வழிபடுவதை ஒரு சம்பிரதாயமாக நிறுவினர், அதாவது காய்கறி வகைகளில் துளசி செடி, விலங்குகள் ராஜ்யத்தில் குரங்கு ஹனுமான், மற்றும் பல.

ஆன்மா அடையப்பெறும் திருப்பங்களால், அது சுய உணர்வை அடைகிறது. ஆனால் பரமாத்மாவைப் பற்றிய உணர்வு மிக மிகக் குறைவான கண நேரத்திற்கு மட்டுமே இருக்கும். உணர்வு நிலை முழுதாக இல்லாததால் ஒரு திருப்பத்தின் அனுபவத்தைப் போலவே நெடு நேரம்

நீடிக்காது. ஒவ்வொரு திருப்பத்திலும், இந்த உணர்வு சுயத்தை அறிய பயன்படுத்தப்படும் காரணத்தால் திருப்பங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**இப்போது, இந்த விஷயத்தை தெளிவுபடுத்துவதற்காக, ஆத்மா கண்களை மூடிக்கொண்டிருந்த முதல் நிலைக்கு மீண்டும் செல்கிறோம். முதன்முதலாக, கல் வடிவத்தில், மிகச்சிறிய அளவில் கண்கள் திறந்த பின்பு, கண்கள் மேல்நோக்கி படிப்படியாக ஈர்க்கப்பட்டு, இரண்டாவது நிலையை எட்டித் தொடும் தருணத்தில், கண்கள் மேலும் சிறிதளவு திறக்கின்றன. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள முதல் ஆறு தொடுதல்கள் மென்மையானவை, எளிதானவை ஆனால் ஏழாவது வலுவானது, கடினமானது.**

பாபா தனது பாதத்தை ஆறு முறை லேசாகத் தட்டுவதன் மூலம் செயல்விளக்கம் அளித்தார்; ஏழாவதாக, மென்மையாகத் தட்டுவதற்கு பதிலாக, அவர் தனக்குத் தானே ஒரு கிள்ளலைக் கொடுத்தார்; அதாவது, ஆறு மென்மையான தொடுதல்களுக்கும் ஏழாவது கடினமான கிள்ளலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைத் தெளிவாக விளக்கினார்.

**இவ்வாறு, ஒவ்வொரு திருப்பத்திலும், கடினமான கிள்ளலைக் கொடுப்பதன் மூலமாக, கண்கள் மேலும் அகலமாகத் திறக்கப்படுகின்றன; இவ்வண்ணம், ஆன்மா தன்னை மேலும் மேலும் தெரிந்துகொள்ளத் தூண்டப்படுகிறது. இந்த ஏழு திருப்பங்கள் மூலமாகவும், பரிணாம வளர்ச்சியில் உருவெடுக்கும் இனங்கள், வடிவங்கள் மூலமாகவும் மற்றும் 84 லட்சம் மாற்றங்கள் மூலமாகவும், மீண்டும், மறுபிறவியில் நிகழும் ஏழு திருப்பங்கள் மற்றும் 84 லட்சம் சுற்று பிறப்பு இறப்புக்கள் மூலமாகவும், இந்தத் திருப்பங்கள் மற்றும் மாற்றங்கள் அனைத்திலும் ஆன்மா அடையப்பெறும் 'நடுக்கம்' அல்லது 'அதிர்வுகள்' தளர்த்தப்படும்.**

**பரிணாமம் மற்றும் மறுபிறவியில் நிகழும் மாற்றங்கள் மேலும் பிறப்பு-இறப்பு சுற்றுகளையும் சேர்த்து 84 லட்சம் பிறவிகளாக எடுத்துக்கொள்வதில் 99 சதவீதம் பண்டிதர்கள் தவறு இழைத்துள்ளனர். அவர்களின் அறியாமையில், இந்த 84 லட்சம் மாற்றங்கள் மனித வடிவத்தை எட்டுவது வரை மட்டுமே என்றும், மனித வடிவத்திற்குப் பின்னர், உடல் நான்கு அல்லது ஐந்து முறை மட்டுமே மறுபிறவி எடுக்கிறது, அதற்குப் பிறகு முக்தி (விடுதலை) அடைந்து, பிறப்பு, இறப்பு எனும் சங்கிலியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறது என்றும் கூறுகின்றனர்.**

**மீண்டும் திருப்பங்களுக்கு வருவோம் - இந்தத் திருப்பங்கள் நிகழும்போது, ஒவ்வொரு முறையும் ஒரு 'அதிர்வு' கொடுக்கப்பட வேண்டும். ஏழு திருப்பங்களுடன் பரிணாம வளர்ச்சியின் போது 84 லட்சம் அதிர்வுகள் என்ற எண்ணிக்கை முற்றிலும் சரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பரிணாம வளர்ச்சி நிறைவடைந்ததும், ஆன்மா மனித வடிவத்தில் உருவெடுத்து, அதே எண்ணிக்கையில் ஏழு தலைகீழான**

**திருப்பங்களும், 84 லட்சம் பிறப்பு இறப்புகளின் அதிர்வுகளையும் எதிர்கொள்கின்றன.**

பாபா ஒரு கணம் விளக்குவதை நிறுத்தி, நகைச்சுவையாக எடுத்துரைத்தார், **"நான் அதை நீண்ட நெடிய முறையில் தெளிவாக விளக்கவில்லை என்றால், நீங்கள் உங்கள் முட்டிகளை காற்றில் அசைக்கத் தொடங்கிவிடுவீர்கள்!"**

**இந்தத் திட பௌதீக நிலையிலிருந்து கடவுளின் நிலை வரை, ஏழு 'பிணைப்பு நிலை'**களும் (WINDING STAGES) **ஏழு 'பிணைப்பைப் பிரிக்கும்" நிலைகளும்** (UNWINDING STAGES) **உள்ளன. கல் வடிவம் வரை, பிணைப்பும், திருப்பமும் கிடையாது அதுபோல, கல் வடிவம் வரை இனங்களும் இல்லை. அதற்குப் பிறகு, பரிணாம வளர்ச்சியில் (முதல் மனித பிறவி எடுக்கும் வரை) ஆறு வடிவங்கள் ஒவ்வொன்றிலும் 14 லட்சம் இனங்களாக மொத்தத்தில் 84 லட்சம் இனங்கள் வாழுகின்றன. இந்த ஏழு திருப்பங்களிலும், ஒவ்வொரு வடிவமும் மேலும் ஓர் உயர்ந்த இனமாக மாறும்; இந்த ஏழு முக்கிய இனங்களும் தடித்த, திடமான பௌதீக உடல்களாக இருக்கும்.**

**இப்போது, மனித வடிவம் 84 லட்சம் மறுபிறவிகள் எடுத்த பின்னர், ஆன்மா எவ்வாறு சூட்சும உலகில் (நுட்பமான** - SUBTLE WORLD) **நுழைகிறது என்பதைப் பார்ப்போம்!**

**நுட்பமான அனுபவங்களை அனுபவிக்கும் ஆத்மாக்களில் எப்போதும், நித்தியமாக 84 லட்சம் பேர் உள்ளனர். அவர்களில், ஏழு பேர் 'முக்கியஸ்தர்கள்' சூட்சும உடல்களுடன் இருந்தாலும் 'ஆழ் மன' உலகை** (MENTAL WORLD) **அனுபவிக்க முடியும். இந்த ஏழு பேருக்கும் குறிப்பிட்ட கடமை உள்ளது. 84 லட்சம் நுட்பமான அனுபவங்கள் இன்றும் உள்ளன. எண்ணிக்கை எப்போதும் நிலையானது. ஆழ் மன உலகத்தை அனுபவிக்கும் ஆத்மாக்களும் சம எண்ணிக்கையில் உள்ளனர். ஆனால் ஒவ்வொரு புதிய 'பிணைப்பைப் பிரிக்கும்' நிலையில், கடமையுடன் நிலைபெற்ற ஏழு முக்கியஸ்தர்களில் ஒருவர் குறைந்த கடமையுடன் இருக்கிறார், அதாவது அவருக்கு சாதாரண உணர்வோ கடமையோ கிடைக்காது. எனவே, ஏழு முக்கியஸ்தர்களில் எத்தனை பேர் சூட்சும உலகில் கடமையைப் பெறுகிறார்கள்? ஏழு. ஆழ் மன உலகில், ஆறு பேருக்கு கடமை உள்ளது; இறைநிலையை அடைந்தவர்களில் ஐந்து. இவ்வாறு நாம் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்:**

| **நிலைகள் / தளங்கள்** | **அங்கம் வகிப்பர்கள்** | **முக்கியஸ்தர்கள்** |
|---|---|---|
| **பௌதீக தளம்** (PHYSICAL) | **லட்சக்கணக்கான மனிதர்கள்** | ___ |

| | | |
|---|---|---|
| **சூட்சும தளம்** (SUBTLE) | **84 லட்சம் சூட்சும உணர்வுடன்** | **7 பேர் கடமையுடன்** |
| **ஆழ் மன தளம்** (MENTAL) | **84 லட்சம் - ஆழ் மன உணர்வுடன்** | **6 பேர் கடமையுடன் ஒருவர் செயலற்ற நிலை** |
| **இறைநிலை** (GOD-REALIZED) | **56** | **5 பேர் கடமையுடன் 2 பேர் மஜ்ஜூப்கள்** |

**உலகத்தில் கோடிக்கணக்கான மனிதர்கள் இருந்தாலும், பௌதீகத் தளத்தில் 84 லட்சம் மறுபிறவிகள் எடுத்தாக வேண்டும்.**

**சூட்சும** (நுட்பமான) **தளத்தில் சூட்சும உலகை அனுபவிக்கும் ஆத்மாக்கள் 84 லட்சம்.**

**சூட்சும உலகை அனுபவிக்கும் இந்த 84 லட்சங்களில் ஏழு முக்கியஸ்தர்கள் உள்ளனர்; அவர்களுக்கு குறிப்பிட்ட கடமைகள் உள்ளன. இந்த ஏழு முக்கியஸ்தர்களும் ஆழ் மன ஆன்மீகத் தளத்தைக் கடக்கும்போது, ஆறு பேருக்கு மட்டுமே கடமையின் பொறுப்பு இருக்கும், ஒருவர் செயலற்ற நிலையில் இருக்கிறார். இந்த ஆழ் மன நிலையிலிருந்து இறைநிலைக்குக் கடந்து செல்லும்போது, ஐந்து பேருக்கு மட்டுமே கடமை இருக்கும், இருவர் செயலற்றவர்களாக இருக்கிறார்கள். இறைநிலையை அடைந்த 56 பேர்களில் ஐவர் கடமையுடன் கூடிய தலைவர்களாகவும், இரண்டு மஜ்ஜூப்களும் உள்ளனர். மஜ்ஜூப் நிலை ஏழாவது ஆன்மீகத் தளத்தில் அடையப்படுகிறது.**

**குரங்கின் கடைசி விலங்கு வடிவத்திற்குப் பின்னர், ஒருவர் பெறும் முதல் மனித வடிவம், முழுமையடைந்த மனித வடிவமாக இருக்காது. இதற்கு உடலளவில் ஆண், பெண் என்ற பாலின வேறுபாடு இல்லை. முதல் மனித வடிவம் ஒரு 'திருநங்கை' (ஆண், பெண் என்ற அடையாளமற்றவர்) ஆவார். அதாவது, முதல் மனித வடிவம் ஆணோ பெண்ணோ அல்ல. அதன் பின்னர் என்ன நடக்கும்? அதே வடிவம் ஓர் ஆண் பாலின அல்லது பெண் பாலின உறுப்புடன் வேறுபட்ட வடிவத்தை உருவாக்கும். இது மனப்படிவங்களின் பரிமாற்றத்தால் நிகழ்வது.**

**இது எவ்வாறு நிகழ்கிறது? இது உடலுறுப்பு ஒன்றின் திடீர் 'அசைவு', 'நடுக்கம்' அல்லது 'சிலிர்ப்பு' போன்றது; திடீரென மின்னி மறையும் ஒளியின் தீப்பொறி போன்றது. ஓர் இரயில், பாதையின் தடங்களை மாற்றும்போது, அதன் விளக்கு மின்னி ஒளிர்கிறது; இங்கேயும் அப்படித்தான். முதல் மனித வடிவத்தில் ஆண், பெண் எனும் இருபாலாரும் உள்ளளவில் மறைந்திருக்கின்றனர். எனவே, முதல் மனித வடிவம் ஒரு திருநங்கையின் வடிவம். அந்தத் திருநங்கை ஆண் அல்லது பெண் எனும்**

**வேறொரு வடிவத்தை எடுக்கும்போதுதான் உறுப்புகள் தென்படும். இது முக்கியமாக மறுபிறவி செயல்முறை தொடங்குவதற்குக் காரணமாகிறது.**

**ஐந்து சத்குருக்களில் நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.**

**முந்தைய அவதார காலகட்டத்தில் அறிவார்ந்த முறையில் வெளிப்படுத்தப்படாத இந்த இரகசியங்கள், நாளைய 'போராட்டத்திற்கு' மிகவும் அவசியம் - இன்றியமையாதது.**

பாபா இது குறித்து சுருக்கமாக எடுத்துரைத்தார்:

**நீங்கள் அனைவரும் ஆத்மாக்கள், உடல்கள் அல்ல. உங்களைத் துளிகளாகவும், உங்கள் உடல்களைக் கடலின் குமிழிகளாகவும் சித்தரித்து, கற்பனை செய்து பாருங்கள். இப்போது, ஒவ்வொரு துளிகளும், உங்கள் சொந்த துளி-நிலையையோ அல்லது பிற அனைவரின் துளி-நிலையையோ காண்பதில்லை. உங்கள் சொந்த குமிழி, பிறரின் குமிழிகள் மற்றும் உலகெனும் இந்தப் பெரிய குமிழியையும் நீங்கள் காண்கிறீர்கள்.**

**சூட்சும உலகில் நுழைவோர் தங்கள் சொந்த சூட்சும உடலையும் சூட்சும உலகையும் பார்க்கிறார்கள், ஆனால் அவர்கள் பௌதீக உலகைப் பார்ப்பதில்லை. மேல்நிலையை அடைந்த இந்த ஆத்மாக்கள் தங்கள் மற்றும் பிறரின் உடல்களின் உணர்வைக் கொண்டுள்ளனர்; ஆனால் அவர்கள் பௌதீக உலகைக் காண்பதில்லை. கல்லில் இருந்து மனிதனின் முந்தைய வடிவங்கள் அனைத்தையும் அவர்கள் காணலாம்; ஆனால் சூட்சும தளத்தில் இருப்பவர்கள் எல்லாவற்றையும் சூட்சும உணர்வோடு பார்க்கிறார்கள். அவர்கள் பௌதீக மனித நிலையை நுட்பமான சூட்சும உணர்வுடன் பார்க்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த மனப்படிவங்களையும் பார்க்கலாம். எனவே ஆழ் மன தளத்தில் முன்னேறிய ஆத்மாக்கள் எல்லாவற்றையும் மனரீதியாகப் பார்க்கிறார்கள். அவர்கள் பௌதீக, சூட்சும தளங்கள் மற்றும் முந்தைய அனைத்து வடிவங்களிலும் எல்லாவற்றையும் ஆழ் மன தளத்திலிருந்து ஆழ் மன உணர்வுடன் பார்க்கிறார்கள்.**

**உங்கள் பௌதீக மற்றும் சூட்சும வடிவங்களை என்னால் காண முடியும் மேலும் உங்களை ஆழ் மன நிலைக்குக் கொண்டு வர உதவ முடியும். ஆழ் மன தளத்தில் இருப்பவர்கள், ஆழ் மன நிலையை அனுபவிக்கும் போது, உயிரைத் துறந்தவர்களைக் கூட உயிர்பிக்க முடியும், ஏனெனில் அவை நேரடியாக ஆழ் மன தளத்தில் நிகழ்வன.**

மேலும் சில கருத்துகளை முன்வைத்து பாபா விளக்கினார்:

**சூட்சும உடல் பௌதீக உடலில் ம(உ)றைந்திருக்கும். சூட்சும தளத்தில் இருப்பவர்கள், பௌதீக உடலில் உள்ளவர்களை தங்கள் சூட்சும உடல் வழியாகத் தொடர்பு கொள்ளலாம், ஏனெனில் அவர்கள் பௌதீக உடலைப் பார்க்க முடியாது.**

**ஒரு மஜ்ஜூப் கட்டுக்கடங்காத கடவுளின் சக்தியால் இறைநிலையில் மூழ்கிப்போகிறார். எனவே, அவருக்கு உலகம் பற்றி எதுவும் தெரியாது. அவருக்கு மனம் இல்லை. அவருக்கு உடல் உள்ளது, ஆனால் அதைப் பற்றிய உணர்வில்லை. அப்படியானால் யார் அவருக்கு உணவூட்டுவது? அவரது எல்லையற்ற நிலை (அவரது உடலுக்கு உணவளிக்கிறது). மஜ்ஜூப் தனது சொந்த உடலையோ, வேறு யாருடைய உடலையோ பார்ப்பதில்லை.**

**ஒரு சத்குரு கடவுளையும் இதர எல்லா உலகங்களையும் - பௌதீக, சூட்சும, ஆழ் மன உலகங்களையும் - ஒரே நேரத்தில் தொடர்பு கொள்கிறார். அவர் எல்லா ஆத்மாக்களுக்கும் உதவுகிறார். அவர் ஸுஃபி இலக்கியத்தில் 'ஒட்டக-ஓட்டுநர்'** (CAMEL-DRIVER) **என்று அழைக்கப்படுகிறார். அவர் அனைத்திற்கும் மையமாக இருக்கிறார்.**

**சத்குரு அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் பணிபுரிய வேண்டும், அவர் தொடர்ந்து ஏழாவது ஆன்மீகத் தளத்தில் ஓய்வெடுத்து அந்தத் தளத்தின் பேரின்பத்தை அனுபவிக்கிறார்.**

**இறைநிலைக்கே உரிய எல்லையில்லா பேரின்பம், அறிவு, சக்தி இவற்றின் காரணமாக அவர் பேரின்பம் மற்றும் துன்பம் எனும் இரண்டு நிலைகளையும் சமநிலைப்படுத்துகிறார்.**

முடிவில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**நாளை நீங்கள் செய்ய வேண்டியதை நான் உங்களுக்கு விளக்கினேன். அதை நினைவில் கொள்ளுங்கள். பிற விவரங்களுடன் தலையிட முயற்சிக்காதீர்கள். நீங்கள் 'ஏ' யிலிருந்து 'இஸட்'டிற்குச் செல்ல வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பரிணாம வளர்ச்சியின் அனைத்து நிலைகளையும் கடந்து, நீங்கள் இங்கு, மனித வடிவத்திற்கு வந்துள்ளீர்கள். இப்போது, நான் உங்களை இங்கிருந்து 'இஸட்'டிற்கு அதாவது மனித நிலையிலிருந்து இறைநிலைக்கு அழைத்துச் செல்வேன்!**

கூட்டத்தில் ஒருவர் கேட்டார், "வரைபடத்தில் வெவ்வேறு இனங்கள் மற்றும் தேசங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களில், ஒருவரை விட உயர்ந்தவர் எவரேனும் உள்ளனரா?"

அதற்கு பாபா பதிலளித்தார்:

**இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெவ்வேறு சாதிகள், மதங்கள் மற்றும் தேசிய இனங்களின் ஆத்மாக்கள் அனைத்தும் சமமானவை, அவை எந்தவிதமான மேன்மை அல்லது தாழ்வு மனப்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. வரைபடத்தில் உள்ள வரிசையில் எண் மதிப்பு எதுவும் இல்லை. வெவ்வேறு தேசங்களைச் சார்ந்த பூமியில் வாழும் அனைத்து ஆத்மாக்களும் இப்போது (இரண்டாம் உலகப் போரில்) முட்டாள்தனமாக தங்களுக்குள் போரிட்டுக் கொண்டிருப்பவர்கள், மேலும் அனைவரும் ஒன்றுதான். பௌதீக உலகில் கருதப்படுவது போல் அவர்கள் கொல்லுவதும் இல்லை, கொல்லப்படுவதும்**

**இல்லை, ஏனெனில் இவை அனைத்தும் பௌதீக உலகின் கற்பனையின் மொத்த உருவம்.**

**சிலர் பரமாத்மா எனும் பெருங்கடலை அல்லா என்றும், சிலர் அவரை ஈஷ்வர் என்றும், சிலர் அஹுரமஸ்தா என்றும், சிலர் கடவுள் என்றும் அழைக்கிறார்கள்.**

**நான் அவரை 'மெஹர் பாபா' என்று அழைக்கிறேன்.**

பாபாவின் விளக்கத்திற்குப் பிறகு, காலை 9:00 முதல் 11:00 மணி வரை, தொடர்ந்து கடவுளின் நாமத்தையும், பிற்பகல் 3:00 முதல் 5:30 வரை மெஹர் பாபாவின் பெயரையும் தொடர்ந்து உச்சரிக்கும்படி கூட்டத்தில் அனைவரையும் கேட்டுக்கொள்ளப்பட்டது; மாலை 7:00 முதல் 8:30 மணி வரை, பாபா தனிப்பட்ட மற்றும் சில குழுவிற்கு நேர்காணல்களை வழங்கினார்.

17ஆம் தேதி கீழ் மெஹராபாத்தில் அமைந்த மண்டபத்தில், மெஹர் பாபா ஐந்து சத்குருக்கள் மற்றும் இறை உணர்வை அடைந்த இதர ஆத்மாக்களைப் பற்றி எடுத்துரைத்தார்:

**நித்தியமாக ஐந்து சத்குருக்கள் உள்ளனர் - நான்கு ஆண் மற்றும் ஒரு பெண். இது இப்போது மண்டலிக்கு விளக்கப்படும் ஒரு புதிய விஷயம். நான்கு ஆண் சத்குருக்கள் ஒவ்வொருவரும் முறையே பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட வட்டங்களையும், பெண் சத்குரு ஒரு உறுப்பினர் அடங்கிய வட்டத்தையும் கொண்டுள்ளனர். இவ்வாறு 56 இறை உணர்வை அடைந்த மனிதர்களுள், இரண்டு மஜ்ஜூப்களும் அடங்குவர்; விபரங்கள் பின்வருமாறு:**

- **4 ஆண் சத்குருக்கள் = 4**
- **1 பெண் சத்குரு = 1**
- **12 உறுப்பினர்களைக் கொண்ட 4 சத்குருக்களின் 4 வட்டங்கள் = 48**
- **பெண் சத்குருவின் வட்டத்தின் 1 உறுப்பினர் = 1**
- **2 மஜ்ஜூப்கள் = 2**
- **மொத்தம் = 56**

**அவதார புருஷரின் வட்டம் 120 உறுப்பினர்களை உள்ளடக்கியது. எனவே எனது வட்டத்தில் 120 உறுப்பினர்கள் உள்ளனர், அவர்கள் விரைவில் என்னை உணர்ந்து கொள்வார்கள். ஒரு மனித ஆன்மா இறை உணர்வை அடைவதற்கு தெய்வீக நியதிப்படி 84 லட்சம் மறுபிறவிகள் தேவை என்றாலும், ஒரு சத்குரு எந்த நேரத்திலும் எந்த உணர்வு நிலையை வழங்கவும், நேரடியாக மேல்நிலைக்கு எடுத்துச்செல்லவோ அல்லது பரிபூரணமாக்கவோ முடியும்.**

**எனவே ஒரு சத்குருவுடன் தற்காலிக தொடர்பில் வருபவர்கள் கூட, அவர்களின் பிறப்பு மற்றும் மறுபிறவிகளின் பல கட்டங்களைத் தவிர்க்கலாம் அல்லது கடந்து செல்லலாம்.**

**என் அன்பான குழந்தை துக்காராம்,** “(குருநாதரான) **“பொன்மாற்றுச்சித்தர்** (ALCHEMIST) **தங்கத்தை உலோகத்திலிருந்து மட்டுமல்ல, தூசியிலிருந்தும் உருவாக்க முடியும்” என்று கூறியுள்ளார். எனது மற்றொரு மகன் ஹ:ஃபீஸூம் இதைப் போலவே கூறுகிறார்.**

1943, மே 18 செவ்வாய்க்கிழமை, அன்று, பாபாவின் விருப்பதிற்கு இணங்க, கூட்டம் நாள் முழுவதும் காலை 7:00 முதல் மாலை 7:00 மணி வரை, ‘**தெய்வீகக் கருப்பொருள்**’ விளக்கத்தை நினைத்து தியானத்தில் ஈடுபட்டது.

காலை 11:30 மணிக்கு பாபா, அனைவரையும் அழைத்துக் கூறினார்:

**நீங்கள் அனைவரும் உங்கள் நிலையிலிருந்து சிறப்பாக முயற்சித்தீர்கள், கிட்டத்தட்ட நல்லதொரு போராட்டத்தை முன்வைத்தீர்கள். நான் முற்றிலும் திருப்தி அடைகிறேன். ஒரு குறைபாட்டைக் கண்டுபிடிக்க நான் எனது தெய்வீக முயற்சியை மேற்கொண்டாலும், என்னால் ஒன்றைக் கூட கண்டுபிடிக்க முடியாது. நான் உங்கள் அனைவரையும் அணுகினேன்,** (தியான வேளையில் தூங்கி விழுவது போன்ற) **எதுவும் இல்லை. நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்.**

**அதிர்ஷ்டவசமாக டாக்டருக்காகவும், துரதிர்ஷ்டவசமாக எனது நகைச்சுவை உணர்விற்காகவும், எனது ஆகஸ்ட் திட்டத்தை நான் ஒத்திவைக்க வேண்டிய தேவையில்லை.** (டாக்டர் கனி கைதட்டினார்.) **மேலும் நீங்கள், உங்கள் முழு இதயத்துடனும், ஆத்மாவுடனும் பணிபுரிந்ததற்கான உறுதியான அறிகுறி என்னவெனில், நீங்கள் தியானித்த மூன்று மணி நேரமும் மேகமூட்டமாகவே இருந்தது; அனைவரும் தியானத்திலிருந்து எழுந்ததும், இப்போது சூரியன் வெளிவந்து பிரகாசிக்கத் தொடங்கியது என்று நான் குறிப்பிட்டேன். எனது சகோதரர் ஜால்பாய், டாக்டர் கனி இருவரும்** (தியானத்தில்) **கடினமாகப் போராடுவதைக் கண்டால் எனக்குத் தலைவலியே வந்துவிடும் போலத் தோன்றியது! நாளை காலை தேனீருடன் கேக்கும் வழங்க முடிவு செய்துள்ளேன்.**

அன்று மாலை, பாபா மீண்டும் குழுவுடன் பேசினார். ஒரு கட்டத்தில் பாபா இவ்வாறு அறிவுறுத்தினார், “**பரிதாபமாக இங்கேயும் அங்கேயும் பறக்கும் துகள்கள் போலாக வேண்டும். ஆனால் அதே துகள், பானைகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் அதை உங்கள் தலையில் வாரி இறைத்தாலும் அல்லது உங்கள் காலடியிலிட்டு மிதித்தாலும் அது ஒருபோதும் புகார் கூறுவதில்லை.**”

மறுநாள் காலை 9:30 முதல் 10:30 மணி வரை, பாபா மேலும் பல நேர்காணல்களை வழங்கினார். அவரது உலகளாவிய பணியைப் பற்றிக் குறிப்பிடுகையில்: “**ஆகஸ்ட் மாதத்தில், இங்கே செய்யப்படும் பணியின் முக்கியத்துவத்தை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இதை நான் மேலும் தெளிவுபடுத்துவேன். இப்பூவுலகில் ‘இறங்கி வந்து’ நான் பல விஷயங்களைச் செய்ய வேண்டியிருந்தது - உபவாசம், மௌனம், ஏகாந்தவாசம், ஏழைகளையும் மஸ்துகளையும் நீராட்டி, சுத்தம் செய்வது**

**போன்ற பல. இவை அனைத்தும் எனக்காக அல்ல, எனது பணிக்காகச் செய்யவேண்டி இருந்தன. இப்போது, இவை அனைத்தும் ஆகஸ்ட் 1ஆம் நாள் நிறைவிற்கு வரும்.**"

பாபா அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்: "**முகமலர்ச்சியுடன் வெளியளவில் மகிழ்ச்சியாக இருங்கள்; இதயத்திலிருந்து உதிரம் கசிந்தாலும், உங்கள் மனதை அமைதியாகவும் குளிர்ச்சியாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.**"

பாபா, டாக்டர் கனியின் ஈரடி கவிதை ஒன்றை வாசிக்கக் கோரினார்: "இதயம் துண்டு துண்டாக வெட்டப்பட்டாலும், முகமலர்ச்சியுடன் மகிழ்ச்சியாக இருப்பவர்களை நான் மிகவும் விரும்புகிறேன்."

அர்ஜுனன், கிருஷ்ணரிடம் சரணடைந்ததைப் பற்றி, கீதையின் ஒரு பாகத்தை அண்ணா 104 வாசித்தார்.

காலை 11:00 மணிக்கு, பாபா ஏழைகளை நீராட்டத் தொடங்கினார். அண்ணா 104, பைதூல் இருவரும் 50 ஏழை எளிய மக்களை ஒன்று திரட்டி, முந்தைய இரவு மெஹராபாத்திற்கு அழைத்து வந்தனர். கூட்டத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு பைஜாமா அல்லது வேட்டியை பாபாவிடம் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

பாபா 50 பேருக்கும் உணவளித்து, லட்டு மற்றும் ஆடைகளை வழங்கி, பின்னர் அவர்களின் கால்களைக் கழுவி, திருப்பி அனுப்பி வைத்தார். நிகழ்ச்சி நிறைவடைந்ததும் பாபா அனைவரிடமும் விடைபெற்று, மேல்மலைக்குச் சென்றார்.

இவ்வாறு, ஐந்து நாட்கள் வழங்கிய அவருடைய தெய்வீக சகவாசத்திற்குப் பிறகு, கூட்டத்திற்காக வந்த அன்பர்கள் அனைவரும் தத்தமது இல்லங்களுக்கு 19ஆம் நாள் புறப்பட்டுச் சென்றனர். கூட்டத்தின் போது பாபா 'மகிழ்ச்சியான மனநிலையில்' இருந்தார் என்று சாஞ்சி தனது நாட்குறிப்பில் பதிவு செய்திருந்தார்: "(பாபாவை) எந்நேரமும் பார்க்க முடிந்தது ஓர் உண்மையான விருந்தாக இருந்தது - அந்த ஒளிரும் புன்னகை, (எப்போதும் அவர்) அனுபவித்த அந்த ஆனந்த நிலையை சித்தரிக்கும் வெளிப்பாடு, மேலும் அனைவரிடமும் அவரது தெய்வீக மகிமையை வியாபிக்கச் செய்தது - இவை அனைத்தையும் ஓர் அற்புதமான விருந்து என்றால் மிகையாகாது."

ஏற்கனவே தங்கள் பெட்டி படுக்கைகளைப் பேருந்துகளில் வைத்துவிட்டு, அனைவரும் புறப்படத் தயாராக இருந்தனர், அப்போது பலத்த மழை பெய்யத் தொடங்கியது. பாபா, மழையில் நனைந்த வண்ணம் மலையிலிருந்து கீழே நடந்து செல்வதைக் காண முடிந்தது, முரளி ஒரு குடையுடன் அவரை நோக்கி விரைந்தார். பாபா, அவரைத் தூரத்தில் நிற்குமாறு சைகையால் தெரிவித்து, மழையில் நனைந்தபடியே நடந்தார். சிறிது நேரத்தில் மழை முற்றிலுமாக நின்றுவிட்டது, அனைவரும் 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' எனும் பாராட்டுக் கோஷங்களுடன் ரயில் மற்றும் பேருந்து நிலையங்களுக்குப் புறப்பட்டனர்!

திடீர் மழை காரணமாக அவர்கள் புறப்படுவது மிகவும் தாமதமானது. பஸ் ஓட்டுநர்களில் ஒருவர் வராததால், பெண்டு பேருந்தை, தானே ஓட்டிச் சென்றார். அவர் சிறிது தூரம் சென்றதும், பேருந்து சேற்றில் சிக்கி, சாலையிலிருந்து கீழே இறங்கி, ஒரு பெரிய கற்பாறை மீது மோதி, ஆழமான பள்ளத்தில் சென்றது. பாபாவின் பார்வையால் பேருந்து கவிழாமல் பாதுகாக்கப்பட்டதோடு அனைவரின் உயிரும் காப்பாற்றப்பட்டதாக உணர்ந்தனர்.

இந்த நேரத்தில் மற்றொரு பேருந்து வந்தது, அனைவரும் அதில் ஏறி ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டனர். விபத்து பற்றிய செய்தி பாபாவின் காதுகளை எட்டியபோது, **"பெண்டுவிற்கு இன்னும் ஏராளமான பணிகள் உள்ளன, எனவே நான் அவரைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. பேருந்து கவிழ்ந்திருந்தாலும், பெண்டு கொல்லப்பட்டிருக்க மாட்டார். ஆனால் அவர் ஏன் முதலில் பேருந்தை ஓட்டினார்? நான் அவரை வாகனம் ஓட்டத் தடை விதித்துள்ளேன், அவர் எனது கட்டளையை மறந்துவிட்டாரா?"** என வினவினார்.

பெண்டு உண்மையிலேயே பாபாவின் அறிவுறுத்தலை மறந்துவிட்டார். பாபாவின் அன்பர்கள் தங்கள் ரயிலை தவறவிடக்கூடாது என்பதற்காக, புறப்படும் வேகத்தில், பெண்டு அவர்களுக்கு உதவ முயன்றார். அவ்வாறு செய்ததன் மூலம் சிறப்புமிக்க பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டார், அன்றிலிருந்து மீண்டும் ஒருபோதும் வாகனம் ஓட்டவில்லை.

கீழ் மெஹராபாத்தில் அமைந்த உணவு வளாகத்தின் கூரை கீழே வீழ்ந்தது, எனவே பெண்டு, பாதிரி இருவரும் நான்கு தூண்களை எழுப்பி அதை நிலைநிறுத்தினர். ஒருமுறை பாபா, தூணில் சாய்ந்தபடி அமர்ந்துகொண்டு, கூரையை சரிசெய்யும் விஷயத்தைப் பற்றி விவாதித்தார். பெண்டு அதைப் பழுதுபார்ப்பதற்கு ஆதரவாக இருந்தார், ஆனால் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"இந்தக் கூரையை நான்கு தூண்களில் நிலைநிறுத்த வேண்டியது குறிப்பிடத்தக்கது. நான்கு தூண்கள் மெஹராபாத்தின் 'நான்கு தூண்களை'க் குறிக்கின்றன: அதாவது பாதிரி, பெண்டு, ஆதி சீனியர் மற்றும் விஷ்ணு."**

வேறொரு தருணத்தில், பாபா, அவரது மனம்போன போக்கில் விளையாட்டுத்தனமாக ஒவ்வொரு 'தூணின்' பண்புகளைக் குறித்து எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

- **பாதிரி - செல்லம் கொடுத்து கெட்டுப்போன அல்லது பொல்லாத குழந்தை!**
- **பெண்டு - சொட்டைத் தலையன் அவரது வழிகள் என்னையும் வழுக்கை ஆக்குகின்றன!**
- **ஆதி - காட்டுப்பன்றி அல்லது எருமை மாடு!**
- **விஷ்ணு - லேசான மன நிலையில் இருக்கும் ஓர் இனிமையான முரடன்!**

'தெய்வீகக் கருப்பொருள்' குறித்த கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, சகன் தனது சமையல் பணியில் மும்முரமாக இருந்ததால், அங்கு நடந்த எதுவும் அவருக்குத் தெரியாது. அவரும், இதர சில மண்டலியைப் போலவே, நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியவில்லை; இடையிடையே எப்போதேனும் கூடாரத்தில் நுழைந்து கவனித்து வந்தார்.

சகன் தனது தலைவிதியைக் குறித்து சிந்தனை செய்துகொண்டிருந்த வேளையில் பாபா, "**நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**" என வினவினார்,

சகன் பதிலளித்தார், "பாபா, நீங்கள் தெய்வீகக் கருப்பொருளை, கூட்டத்திற்கு நன்றாக விளக்கினீர்கள் என்று கேள்விப்பட்டேன், அதைக் கேட்க எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை."

"**சரி**" என்று கூறி பாபா எழுத்துப்பலகையில் உச்சரித்தார்: "**இப்போது இதைக் கேளுங்கள், சுருக்கமாகச் சொல்கிறேன், நீங்கள் எப்பொழுதும் தண்ணீரில் வாழ்கிறீர்கள், ஆனால் தண்ணீர் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியாது! புரிந்ததா?**"

சகன் சிரித்துக்கொண்டே, "ஆமாம் பாபா, நான் அதை நன்கு தெரிந்து கொண்டேன்; அதை நன்றாகப் புரிந்துகொண்டேன்" என்று பதிலளித்தார்.

1943, மே 21 அன்று, ஆதி சீனியருடன் ஸரோஷின் காரில் பாபா மெஹராபாத்திலிருந்து பிலாருக்குப் (BHILAR) புறப்பட்டார். பெஹராம், டான் இருவரும் உடன் சென்றனர். பிலாரில் பெண் மண்டலியுடன் பைதூல், குஸ்தாஜி, கிருஷ்ணா, டாக்டர் நீலு, வெங்கோபா ராவ் மற்றும் விஷ்ணு ஆகியோர் தங்கி இருந்தனர். அடுத்த நாள் டான், பாபாவை காளேமாமாவின் மருமகன் ராவ்ஸாஹேப் பண்டித் (RAOSAHEB PANDIT) குடும்பத்தினரால் நடத்தப்படும் இந்து உயர்நிலைப் பள்ளியைப் பார்வையிட அழைத்துச்சென்று அவர்களுடன் தேநீரில் பங்கெடுத்தார்.

26ஆம் நாள், பாபா அனைத்து ஆண், பெண் மண்டலியுடன் மெஹராபாத் திரும்பினார். டாக்டர் டான் நீலப்பேருந்தை ஓட்டி வந்தார், டானுடன் பாபாவும் நீலுவும் முன் இருக்கையில் அமர்ந்திருந்தனர். மெஹராபாத்தில், பாபா மேல்மலையில் ஓய்வெடுத்தார், மண்டலியை சந்திக்க பகலில் அவ்வப்போது கீழ் மெஹராபாத்திற்குச் சென்றார்; பெண்மணிகள் மேல்மலையில் தங்கள் வழக்கமான குடியிருப்புகளை ஆக்கிரமித்தனர். பாபா, முன்பு போலவே மெஹரா, மணி இருவரையும் தவிர வேறு எந்த பெண்மணிகளையும் பார்க்கவில்லை.

மே 27 அன்று, பாபாவின் குடிலிலிருந்து டாக்டர் டான் தனது துணிமணிகள் அடங்கிய பெட்டகத்தை அகற்றியதைக் கண்ட பாபாவின் மனநிலை மாறியது; பாபா, அங்கு அதை வைத்திருக்குமாறு அறிவுறுத்தியிருந்தார். "**நீங்கள், இந்திய மருத்துவ சேவையில் பணிபுரியும் வேளையில் உங்களோடு என்னுடைய இணைப்பைத் தொடரும் நோக்கத்தில் நான் உங்களுக்கு இந்த உத்தரவை வழங்கினேன்**" என்று பாபா

விளக்கினார். பாபா, அந்தப் பெட்டகத்தை அங்கேயே திருப்பி வைக்குமாறு அறிவுறுத்தினார். தினமும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை பாபாவின் குடிலில் அமர்ந்து ‘தெய்வீகக் கருப்பொருளை’ நினைத்து தியானம் செய்யுமாறு பாபா, டானுக்கு உத்தரவிட்டார்.

இந்த நேரத்தில் ‘பத்து வட்டங்கள் அடங்கிய ஓவியத்தை நிறைவு செய்வது குறித்து ரானோ கேட்டார்; அதைத் தொடர்ந்து, டாக்டர் நீலு மூலமாக, பாபா அறிவுறுத்தியபடி, ஓவியம் நிறைவடைந்துவிட்டதாகக் குறிப்பிட்டார். 29ஆம் நாள், முதல் முறையாக, பாபா அஹமதுநகரில் வாழ்ந்த ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்தை மெஹராபாத்திற்கு அழைத்து வந்து, ஒரு நாள் அவருடன் பணிபுரிந்தார். அஹமதுநகர் பிரதான சாலையில் பேருந்து நிலையத்திற்கு அருகில் ஒரு சிறிய குடிலில் வசித்து வந்த அவர், அலி ஷா - ALI SHAH (BAPJI - பாப்ஜி) என்று அன்பாக அழைக்கப்பட்டார். பாபா அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அவருடன் நெருக்கமாகப் பணியாற்றினார். அலி ஷா, தூய, அபூர்வமான ஜமாலி வகையைச் சார்ந்தவர், பின்பு மெஹராபாத்தில் வாழத் தொடங்கினார்.

1943 மே 29 அன்று சாஞ்சி, கைக்கோபாத் தஸ்தூருடன் மெஹராபாத் வந்து, மறுநாள் பாபாவை சந்தித்தது, கைக்கோபாத்தின் வாழ்க்கையின் மிக்க மகிழ்ச்சியான நாள் என்பதை நிரூபித்தது. அவர் தனது சொத்து, சுகம் அனைத்தையும் பாபாவிற்கு அர்ப்பணித்து, அதை ஏற்றுக்கொள்ளும்படி அவரிடம் வேண்டினார். பாபா அவரது விருப்பத்தை நிறைவேற்றிய அதே நேரத்தில், அவரது வேலையை விட்டுவிடவோ அல்லது சொத்தை உடனடியாக விற்றுவிடவோ கூடாது என்று திட்டவட்டமான அறிவுறுத்தல்களை வழங்கி - நவம்பர் மாதம் அவரை அழைக்கும் வரைக் காத்திருக்குமாறு கூறினார். பாபாவுடன் நிரந்தரமாகத் தங்குவதற்கான வாய்ப்பை எண்ணி கைக்கோபாத் மகிழ்ச்சியடைந்தார். அன்றைய தினமே மாலை 4:00 மணிக்கு, சாஞ்சியுடன் திரும்பிச் சென்றார்.

1943, மே 31 அன்று ஸரோஷ் சினிமாவில் திரையிடப்பட்ட சிறப்பு பிற்பகல் காட்சியைக் காண பாபா, மெஹராபாத்திலிருந்து ஆண், பெண் அனைவரையும் அழைத்துச் சென்றார். பாபா மற்றும் ஆண், பெண் மண்டலி தங்குவதற்கு ஏற்ப பங்களாக்களை ஏற்பாடு செய்ய ஜூன் 1ஆம் தேதி டாக்டர் டானை ராவல்பிண்டிக்கு அனுப்பிவைத்த இந்தத் திட்டம் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டது. பொருத்தமான எதையும் அவரால் கண்டுகொள்ள முடியவில்லை.

1943, ஜூன் 5 சனிக்கிழமையன்று, பாபாவின் அத்தை பிரோஜா மாமி, மெஹர்ஜி கர்காரியா (MEHERJI KARKARIA), அவரது மனைவி, மகள் மற்றும் டாக்டர் அலு கம்பட்டா, ராவ்ஸாஹேப் உள்ளிட்ட 20 பேர் அடங்கிய குழு ஒன்று மும்பையிலிருந்து சாஞ்சியுடன் வந்தது. பாபா ஒவ்வொருவரையும்

தனித்தனியாக சந்தித்தார்; அனைவரும் பிற்பகல் 3:00 மணிக்குத் திரும்பிச் சென்றனர்.

மெஹர்ஜி 1929 முதல் ஈரானில் வெற்றிகரமாக வியாபாரம் செய்து வந்த வேளையில், பாபாவை சந்திக்க வாய்ப்பில்லாமலாயிற்று. 1934ஆம் வருடம் ஒரு முறை பாபாவைப் பார்க்க இந்தியாவிற்கு வந்த நேரத்தில், பாபா மேற்கத்திய பயணத்தில் இருந்தார். 1943ஆம் ஆண்டில், மெஹர்ஜி மீண்டும் மும்பைக்கு வருகை தந்தபோது, அவரது விருப்பத்திற்கு எதிராக, நண்பர் ஒருவர் அவரை ஒரு ஜோதிடரிடம் அழைத்துச் சென்றார். மெஹர்ஜியின் ஜாதகம் மற்றும் உள்ளங்கையை நோட்டமிட்ட அந்த ஜோதிடர், "நீங்கள் உங்கள் வியாபாரத்தில் கவனமாக இல்லாவிட்டால், உங்கள் செல்வத்தில் 60 சதவீதத்தை இழக்கநேரிடும்" என்றார். அந்த நேரத்தில், மெஹர்ஜி பெர்சியாவிலுள்ள தனது மேலாளருக்குத் தொலைத்தந்தி அனுப்பி, அவரது பொருட்களை முடிந்த அளவிற்கு விற்கும்படி அறிவுறுத்தினார். பின்னர் அவர் பாபாவை சந்திக்க மெஹராபாத் சென்றார்.

இந்த சந்திப்பில் மெஹர்ஜியிடம் பாபா, **"நீங்கள் பெர்சியாவில் இந்தனை ஆண்டுகள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? உங்கள் வணிகம் எப்படி நடக்கிறது?"** என்று வினவியபோது, மெஹர்ஜி பாபாவிடம் எல்லாவற்றையும் எடுத்துரைத்து, சமீபத்தில் ஜோதிடர் ஒருவரை சந்தித்ததைப் பற்றியும் கூறினார். பாபா, மெஹர்ஜியின் காதைத் திருகி, **"முட்டாள்! நீங்கள் ஜோதிடம், கைரேகை போன்றவற்றை நம்புகிறீர்களா? அதுவும் என்னிடம் சரணடைந்த பிறகு? அப்படியானால் நான் யார்?"** என்று கேட்டார்.

"நீங்கள் கடவுள், நிச்சயமாக," மெஹர்ஜி பதிலளித்தார்.

**"நீங்கள் என்னைக் கடவுளாக எடுத்துக் கொள்ளும்போது, நான் முழு உலகையும், கிரகங்களையும் உருவாக்கி அழிக்கவில்லையா? நான் நட்சத்திரங்களை உருவாக்கவில்லையா, உங்கள் உடைமைகளை இல்லாமலாக்க முடியாதா? நீங்கள் திரும்பிச் செல்லும் வரை எதையும் விற்க வேண்டாம் என்று உடனடியாக ஒரு தொலைத்தந்தியை அனுப்புங்கள்!"** என்றார்.

மெஹர்ஜி இந்தத் தகவலை எழுதியதும், பாபா, விஷ்ணுவை தொலைத்தந்தி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார். பாபா அவர் செய்துகொண்டிருந்த அந்தத் தொழிலைத் தொடருமாறு அறிவுறுத்தினார்; மெஹர்ஜி பெர்சியாவிற்குச் சென்று, பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததன் மூலம், அவரது வணிகம் முன்பை விட கணிசமாக முன்னேறியது.

45 வயதான ஸொராப்ஜி ரத்தன்ஜி ஸிகன்போரியா (SORABJI RATTANJI SIGANPORIA) தனது இரண்டு மகன்களான நோஷிர் (NOSHIR), ஹோஷிர் (HOSHIR) ஆகியோருடன் வந்திருந்தார். 16 வயதான நோஷிர், குழந்தை பருவத்திலிருந்தே

சற்று சிரமங்களை அனுபவித்தார்; ஸொராப்ஜி ஏதேனும் தெய்வீக தலையீட்டை நாடி, வெவ்வேறு புனிதர்களை அணுகும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்; மேலும் பாபாஜான், உபாஸனி மஹாராஜ், நாராயண் மஹாராஜ் ஆகியோரை சந்தித்தார். உபாஸனி மஹாராஜைப் பற்றிய ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது, அவர் மெஹர் பாபாவைப் பற்றி தெரிந்துகொள்ள நேர்ந்தது.

இருப்பினும், கர்னல் ஈரானி செய்தித்தாள்களில் மெஹர் பாபாவிற்கு எதிராகக் கிளர்ச்சிகளைச் செய்ததாலும், மும்பை பார்சி சமூகத்தினர் பாபாவைத் தாக்குவதையும் கேள்விப்பட்டதாலும், ஸொராப்ஜிக்கு, பாபா மீது உண்மையான பக்தி உணர்வு இல்லை. ஆனால் அவரது மகன் நோஷிர் காரணமாக, அவருடைய பதட்ட நிலையைப் போக்கும் நோக்கத்தில் மெஹர் பாபாவின் உதவியை நாடி மெஹராபாத்திற்கு வந்தார்.

பாபா முதலில் நோஷிரை தன்னுடன் அறையில் அமருமாறு கூறி, ஸொராப்ஜி, ஹோஷி இருவரையும் வெளியே அனுப்பினார். சில நிமிடங்களுக்குப் பின்னர் அவர்களைத் திரும்ப அழைத்து, பாபா, ஸொராப்ஜியிடம், **“எனக்கு நோஷிரைக் கொடுங்கள்; அவர் என்னுடன் இங்கே இருக்கட்டும்”** என்று குறிப்பிட்டார்.

இந்த யோசனையைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஸொராப்ஜி உடனடியாகத் தனது மகன்களுடன் வெளியேறினார். கர்னல் கூறியது உண்மைதான் என்பதை அவர் உறுதிப்படுத்தும் விதத்தில் அவரது மனம் கிளர்ச்சியில் கொந்தளிக்க, பாபாவைப் பற்றிய தரக்குறைவான எண்ணங்களைக் கொண்டிருக்கத் தொடங்கினார்.

ஆனால் இரண்டு, மூன்று மாதங்களில், அவரது மனக் கொந்தளிப்பு மறைந்து, நோஷிரை பாபாவிடம் அனுப்பி வைக்கும் மன மாற்றம் ஏற்பட்டது. நோஷிர் மேலும் அசாதாரண மனநிலையில் தென்பட்டார். சிறுவன் கல்லறைகள் மற்றும் சமாதிகளுக்கு விஜயம் செய்து, இரவை அங்கேயே கழிப்பது வழக்கமாகிவிட்டது. ஸொராப்ஜி, சிறுவனின் திருமணத்திற்காக ஏற்பாடு செய்தார், ஆனால் சிறுவனின் மனநிலை மாறியபாடில்லை.

ஸொராப்ஜி மீண்டும் பாபாவின் காலடிகளில் வந்து, தனது தவறுக்காக பெரிதும் மனம் வருந்தினார். ஆரம்பத்தில் பாபாவிடம் மிகுந்த விரோத போக்கைக் கடைப்படித்தவர் மெஹர் பாபாவின் தீவிர ஊழியராக மாறி, பல ஆண்டுகளுக்குப் பிறகு, மும்பையில் முதல் மெஹர் பாபா மையத்தை நிறுவினார்.

இந்தக் காலகட்டத்தில், மெஹராபாத் வளாகத்தில் வெளியிலிருந்து வரும் பெண்கள் அனுமதிக்கப்படாததால், அஹமதுநகரில் தரிசனம் வழங்க, உள்ளூர் பெண்மணிகள் சிலரின் கோரிக்கையை, பாபா ஏற்றுக்கொண்டார். 1943, ஜூன் 6ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை, குஷ்ரு குவாட்டர்ஸில் நடைபெற்ற ஒரு தனியார் விழாவில் அவர் பெண்மணிகளை சந்தித்தார்.

அஹமதுநகரில் வாழ்ந்து வந்த ஸெயிலர் மாமாவின் மனைவி நாஜாமாயைப் போலவே, உள்ளூர் பார்சிகளான பெரின் (PERIN), எரின் (ERIN) மற்றும் கூல் நாகர்வாலா (GOOL NAGARWALA) மற்றும் சிலர் வந்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையேயான வேறுபாடு குறித்து பாபா அவர்களுக்கு விளக்கினார்:

**சத்தியம் (உண்மைப்பொருள்), உண்மையில், வாழ்க்கையின் தலைசிறந்த கொள்கை அல்லது விதியாகும். இருப்பினும், நடைமுறை வாழ்க்கையில், இந்த உன்னதமான கொள்கையைக் கடைப்பிடிக்கும் தருவாயில், சில தேவையான, நியாயமான மாற்றங்கள், குறிப்பாக இதுபோன்ற இணக்கமுறை பிறருக்கு நற்பயனை விளைவிப்பதானால் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.**

**உதாரணமாக, ஒரு நபர் கொலை போன்ற கடும் குற்றத்திற்குத் தவறாகத் தண்டிக்கப்படுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அனைத்து சூழ்நிலை சார்ந்த ஆதாரங்களும் அவருக்கு எதிராக உள்ளன மற்றும் நீதிக்குப் புறம்பான மரண தண்டனையை அவர் சந்திக்க இருக்கிறார். ஆனால் வேறு ஒருவர் அந்த இடத்தில் தோன்றி, கடுமையான குற்றச்சாட்டிற்கு எதிராக நிரூபிக்கும் ஒன்றைச் சொல்கிறார் - உதாரணமாக, 'குற்றம் சாட்டப்பட்டவர், குற்றம் நடந்த நேரத்தில், உண்மையில் வேறொரு இடத்திலோ அல்லது தன்னுடனோ இருந்தார்' என்ற வார்த்தைகளை முன்வைப்பதானால், இந்த அறிக்கை தவறாகக் குற்றம் சாட்டப்பட்டு, தூக்கிலிடத் தயாராக இருந்த ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்றக்கூடும், அதற்காக, பொய்யான ஒன்றைச் சொல்ல வேண்டியிருந்தாலும், அது முற்றிலும் நியாயமானது. அந்த விஷயத்தில் அது பொய்யல்ல.**

**நேர்மையான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு பக்தியுள்ள மனிதர், ஓர் அப்பாவி மனிதனை, சூழ்நிலை சான்றுகளின் பேரில் தூக்கிலிடுவதை அனுமதிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம், அதே வேளையில் அவரிடமிருந்து வரும் சில வார்த்தைகள் குற்றம் சாட்டப்பட்டவரின் உயிரைக் காப்பாற்றி, குற்றமற்றவர் என்பதை நிரூபித்திருக்கும் வாய்ப்பைத் தவறவிட்டால், இதுபோன்ற சூழ்நிலைகளில் எந்தவொரு கொள்கைகளும் இல்லாத நாடோடியைவிட மோசமானவர் என்றுதான் சொல்லவேண்டும் அல்லது அத்தகைய ஒரு முக்கியமான தருணத்தில் முன்வந்து, ஆதாரங்களை - பொய்யாகக் கூட வழங்குவதற்கான தன்னிச்சையான ஆர்வம் கொண்ட நாடோடி, மரண தண்டனை விதிக்கப்படும் அப்பாவி மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதால் மேற்கூறிய கொள்கைமானை விடச் சாலச்சிறந்தவர்.**

**முதலில் கூறிய கொள்கைமான் வெறும் குழப்பமான இலட்சியவாதி, தேவைப்படும் வேளையில் உண்மையான செயலுக்கான உள் ஆர்வமும், மனப்பாங்கும் இல்லாதவர்கள், சுயநல நோக்கங்களுக்காக**

**மட்டுமே தமது கொள்கைகளை மதிக்கிறார்கள். அதேசமயம், எந்தக் கொள்கைகளும் இல்லாத, ஆனால் தேவைப்படும் போதெல்லாம் செயல்பாட்டுத் திறன் படைத்த, பிறருக்காக நெருப்பில் கூட விரைந்து செல்லும் நல்ல மனம் படைத்த நாடோடி போன்ற ஒருவர், ஆயிரக்கணக்கான கொள்கைமான்களைவிட மதிப்புமிக்கவர்!**

**ஓர் இலட்சியத்தின் மதிப்பு அல்லது பயன்பாடு, எவ்வளவுதான் உயர்வானதும், கம்பீரமானதுமாக இருந்தாலும், இது பிறரின் நலன் அல்லது சேவைக்காக ஒருவரைத் தூண்டவில்லையெனில் அதனால் என்ன பயன்?**

அதைத் தொடர்ந்து பாபா, காலை 11:30 மணிக்கு மெஹராபாத்திற்குத் திரும்பிச் சென்றார்.

1943, ஜூன் 9 அன்று, சகனின் சகோதரர் வசந்த் தேஷ்முக், மெஹராபாத்தில் பாபாவை சந்திக்க வந்தார். வசந்த், உபாஸனி மஹாராஜின் நெருங்கிய சீடராக, ஸாக்கோரியில் வாழ்ந்து வந்தார். மஹாராஜ் அவரது பூத உடலைத் துறந்துவிட்டதால், அவர் இப்போது ஆசிரமத்தில் தொடர்ந்து வாழ வேண்டுமா என்று தெரிந்து கொள்ள விரும்பினார்; மேலும், பாபா அவரிடம் அப்படியே தொடருமாறு கூறி உறுதியளித்தார்.

அரன்காவ்ம் கிராமத்தில், முதல் உலகப் போரின்போது இராணுவ முகாம் ஒன்று இருந்தது. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய வேளையில், மீண்டும் இராணுவ முகாம் ஒன்று அங்கு நிறுவப்பட்டது (கீழ் மெஹராபாத்திற்கு அருகில் காசநோய் சுகாதார மையம் அமைந்துள்ள இடத்தில்). ஆனால் மெஹராபாத் கட்டமைப்புகள், பெண்டுவிற்கு நிம்மதியைத் தரும் விதத்தில் அப்படியே விட்டுச்செல்லப்பட்டன. இராணுவ முகாம் ஒரு தனி விவகாரமாக இருந்தாலும் அது மெஹராபாத்தில் எந்த ஒரு கட்டிடத்தையும் உடைமை ஆக்கிக்கொள்ளவில்லை.

ராணுவ வீரர்களுக்காக, ஸரோஷ் அரன்காவ்மில் ஒரு சினிமா கொட்டகையைத் திறந்தார். 9ஆம் தேதி, பாபா லாஹூருக்கு ஒரு பயணத்தைத் திட்டமிட்டுக் கொண்டிருந்ததால், அவர் இல்லாத நேரத்தில் அங்குப் பணிபுரிய மண்டலிக்குக் கடமைகளை வழங்கினார். பெண்டு கொட்டகையின் மேலாளராகவும், ஸவக் பொருளாளர், பாதிரி இயக்குநராகவும், இதர மண்டலி வாயில் காவலர்களாக, நுழைவுச்சீட்டு விநியோகஸ்தர்களாகவும் பணிபுரிந்தனர். டாக்டர் கனியின் 12 வயது மருமகன் ரஷீத் (கனியின் தம்பி அப்துர் ரஹ்மானின் மகன்) இந்த நேரத்தில் அவர்களுடன் தங்கியிருந்தார், மேலும் திரைப்பட கருவியை இயக்கக் கற்றுக் கொண்டார். ஃபெராம் - FERAM (WORKINGBOXWALA - ஒர்க்கிங்பாக்ஸ்வாலா) மெஹராபாத் குடியிருப்பாளராக இருந்ததால், வணிக கடிதப்போக்குவரத்தைக் கையாண்டார்.



பாபா, ராஜா, பிரதான் & மெஹரா
(BABA, RAJA, PRADHAN & MEHERA)

இரண்டு ஆங்கில பசுக் கன்றுகளை 24 மணி நேரத்திற்குள் மெஹராபாத்திற்குக் கொண்டு வருமாறு பாபா, ஸரோஷிடம் கூறினார். ஸரோஷ் பூனா நகரின் கிர்கீயில் அமைந்த இராணுவ பால்வள மையத்திற்கு விரைந்தார். மேலாளர், சாதாரணமாக ஆண் கன்றுகளை வெளியே கொடுத்துவிடுவதால், இரண்டு கன்றுகளை வழங்க இணக்கம் தெரிவித்து, அவற்றை எடுத்துச் செல்ல ஒரு சரக்கு வாகனத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு ஸரோஷிடம் கூறினார். ஸரோஷ் தனது காரில் கன்றுகளை அழைத்துச் செல்வதாகக் கூறியதைக் கேட்ட அந்த மேலாளர், அதிர்ச்சியில், கார் அசுத்தமாகிவிடும் என்று சுட்டிக்காட்டினார்; ஆனால் ஸரோஷ் அது ஒரு பொருட்டல்ல என்று கூறி, மிகவும் சிரமத்துடன், அவற்றை தனது காரில் (ஒன்று வெள்ளை மற்றொன்று கருப்பு கன்று) குறிப்பிட்ட நேரத்திற்குள் மெஹராபாத்திற்கு கொண்டு வர முடிந்தது. அவர் கன்றுகளை பாபாவிடம் வழங்க, அவர் அதை மெஹராவின் கண்காணிப்பில் இருக்கச் செய்தார். மெஹரா கன்றுகளுக்கு பால் புட்டியில் பாலை ஊட்டினார்; பாபாவும் அவ்வப்போது கன்றுகளுக்குப் பாலூட்டுவதுண்டு. பாபா கருப்பு கன்றுக்கு 'ராஜா' (RAJA) என்றும் வெள்ளை கன்றுக்கு 'பிரதான்' (PRADHAN) என்றும் பெயரிட்டார். மெஹரா, மணியின் உதவியுடன் தோட்டத்தையும் கவனித்து வந்தார்.

மெஹர் பாபா, 9ஆம் தேதி முதல் நீர் மட்டுமே அருந்தி, உபவாசத்தைத் தொடங்கினார். 1943 ஜூன் 10 காலையிலிருந்து மாலை 3:00 மணி வரை தனது அறையை மூடிக்கொண்டு உள்ளே அமர்ந்தார். மூன்று மணியிலிருந்து மாலை 5:00 மணி வரை மண்டலியை சந்திப்பதும், பின்பு மெஹரா மற்றும் மணியைப் பார்க்க மேல்மலைக்குச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டார். பாபா அவரது உபவாசத்தை ஆறு நாட்களுக்குப் பின்னர், 14ஆம் தேதி நிறைவு செய்தார்.

பூனா நகரில் அமைந்த பார்சி 'அமைதி கோபுரத்தில்' ஷிரீன்மாயின் இறுதி சடங்குகள் நிறைவடைந்த பின்னரும், பாபா அவருக்காக ஒரு நினைவுச்சின்னத்தை எழுப்பக் கட்டளையிட்டார். ஷிரீன்மாய், ஷெரியார்ஜி இருவரின் நினைவு சின்னங்கள் (சமாதி வடிவில்) மெஹராபாத் மேல்மலையில் அமைக்கப்பட்டன; இந்தப் பணி ஜூன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. நினைவுச்சின்னம் தயாராகும் தருணத்தில், மெஹர் பாபா, அவரது கைகளால், தாய் தந்தையரின் சுய பயன்பாட்டுப் பொருட்களை அதில் வைத்தார்: ஷெரியார்ஜியின் வெள்ளி மூக்குப்பொடிப் பெட்டி மற்றும் ஷிரீன்மாயின் மூக்குக் கண்ணாடிகள். பாபா, அவர்களின் சமாதி கல்லில் பின்வரும் கல்வெட்டுக் குறிப்பைப் பதிக்கக் கூறினார்.

**மெஹர்பாபாவின் ஆசீர்வதிக்கப்பட்ட பெற்றோர்களின் நித்திய நினைவாக, இப்போது பாபாவின் முடிவில்லா நிலையுடன் இணைந்திருக்கும் ஷெரியார்ஜி மற்றும் ஷிரின்மாய்.**

அந்த மாதத்தில் நான்கு முறை திரைப்படங்களைப் பார்க்க பாபா பெண்மணிகளை, மெஹராபாத்திலிருந்து பேருந்தில் ஸரோஷ் சினிமாவிற்கு அழைத்துச் சென்றார்.

1943, ஜூன் 25 காலை 8:00 மணிக்கு, பாபா, அவரது மண்டலியுடன் சில நெருங்கிய அன்பர்களும் (பிரியமான கவிஞர்களில் ஒருவரான) ஜிகரின் (JIGAR) பாடல்கள் மற்றும் கஸல்களைக் கேட்பதற்காக, மெஹராபாத்தில் ஒரு சிறப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

பாபா குறிப்பிடத்தக்க விதத்தில் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தவர், தனது சொந்த ஈரடிக்கவிதைகளாகச் சிலவற்றை அந்த இடத்திலேயே இயற்றினார். பாபா இந்தச் சிறப்பு விளக்கத்தையும் அளித்து, மிகப் பெரிய ஆன்மீக ரகசியம் ஒன்றை வெளிப்படுத்தினார்: **"உங்களுக்கு எதுவும் தேவையில்லாத தருணத்தில், நீங்கள் அனைத்தையும் அடையப் பெறுகிறீர்கள்."**

அவர் இவ்வாறு கூறி முடித்தார், **"உங்கள் கடந்த கால தீய கர்மவினைகளுக்காக நீங்கள் அனைவரும் மன்னிக்கப்படுவீர்கள்."**

பாபா, மெஹராபாத்தில் இல்லாத நேரத்தில் மண்டலிக்கான வெவ்வேறு கடமைகளை ஏற்பாடு செய்த பின்பு, லாஹூருக்குச் செல்லத் தயாராக இருந்தார். புறப்படுவதற்கு முன்னர் அவர் தனது அன்பர்களுக்கு, பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

**1943ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்கத் திட்டமிட்ட இரண்டு மிக முக்கியமான பணிகள் என்னிடம் உள்ளன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறேன். குறிப்பிடப்பட்ட இந்த இரண்டு ஆன்மீகப் பணிகளைப் பின்வருமாறு விளக்கலாம்.**

ஒன்று: **கடந்த மே மாதத்தில் ஐந்து நாட்கள் என்னுடன் இருந்த மண்டலி, மீண்டும் ஒரு முழு மாதம் என்னுடன், என்னருகில் இருக்க வேண்டும். இந்த ஒரு மாத காலகட்டத்தில், எந்த நேரத்திலும், அவர்கள் என்னுடன் கொண்டுள்ள நெருக்கத்திற்கு இணங்க, நான் அவர்களுக்கு இறை உணர்வு, ஒளியூட்டம் அல்லது உள் அனுபவத்தை வழங்க வேண்டும். அதிர்ஷ்டமும், உரிய தகுதியும் படைத்த மண்டலிக்கான இந்தத் தெய்வீக அருள் எனது மௌனத்தைக் கலைத்து, இந்தியாவில் சில குறிப்பிட்ட இடங்களுக்குப் பயணம் புரிவதோடு இணைந்துபோகும்.**

இரண்டு: **எனது தெய்வீக வெளிப்பாட்டின் மரமானது மஷாட் -** MASHHAD **(மெஷெட் -** MESHED, **ஈரான்) நகரில் வேரூன்ற வேண்டும், அங்கு அது பரந்து வளர்ந்து இறுதியில் முழு உலகையும் உள்ளடக்கும்.**

**முதன்முதலில், மேலே குறிப்பிட்ட இரண்டு ஆன்மீகப் பணிகளை அதே வரிசையில் அதாவது, முதல் பணியை ஆகஸ்ட் மாதமும், இரண்டாவது பணியை நவம்பரிலும் செய்ய விரும்பினேன். ஆனால்**

**(நிச்சயமாக என்னால் உருவாக்கப்பட்ட) வேறு வேறு சூழ்நிலைகள், உள் மற்றும் வெளிப்புற காரணங்களுக்காக, அந்த வரிசையில் ஒரு மாற்றம் அவசியம். ஆகையால், 1943 ஆகஸ்ட் மாதத்தில் இரண்டாவது பணியையும், 1943 நவம்பரில் முதல் பணியையும் செய்ய முடிவு செய்துள்ளேன்.**


**திட்டங்களில் உருவான இந்த மாற்றத்தைத் தொடர்ந்து, நான் ஆகஸ்ட் மாதத்தில் லாஹூர், குவெட்டா, துஸ்தாப் (DUZDAB), பலுச்சிஸ்தான் வழியாக ஈரானுக்குப் பயணம் செய்ய உள்ளேன். எனவே, 1943 நவம்பர் 1ஆம் தேதி தொடங்கி ஒரு முழு மாதத்திற்கு நீங்கள் என்னுடன் இணையத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**இதை ஓர் இறுதி அறிவிப்பாகக் கருதி, மேலும் அறிவிப்புகளுக்காகக் காத்திராமல், தொழில், சேவை, விடுமுறை சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களையும், நீங்கள் இப்போதே ஏற்பாடு செய்து, ஒழுங்குபடுத்த அறிவுறுத்தப்படுகிறீர்கள். இது, ஏதோ ஒரு வகையில் தள்ளிப்போடப்படும் என்று நீங்கள் எடுத்துக்கொள்ள மாட்டீர்கள் எனவும் கருதப்படுகிறது. (எனது சொந்த காரணங்களுக்காக) இரண்டு ஆன்மீகப் பணிகள் நிகழும் நேரம், காலகட்டம் இவற்றின் மாற்றத்தை நீங்கள் தெளிவாகக் காண்பீர்கள்.**

**நான் கூறியவற்றின் திட்டவட்டமான முடிவுகளில் நீங்கள் முழு நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும், மேலும் தைரியமான இதயத்துடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதை எனது பணியின் கடைசி கட்டமாகக் கருதி, கடவுளுக்காக உயிரைத் துறந்து, கடவுளாக வாழத் தயாராக இருக்குமாறு நான் உங்களை அழைக்கிறேன்!**

காலம் இதை இப்படிப் பார்த்தது: "இது அனைத்தும் மெஹர் பாபாவின் தெய்வீக லீலை! இது 1942 டிசம்பர் மாதம் ஆரம்பமான தருணத்திலிருந்து, அவருடைய 99 ஊழியர்கள், மதுபான சத்திரத்தைத் திறப்பது குறித்து மக்கள் அறிந்துகொள்வதற்கான அவரது அறிவுறுத்தல்கள் மூலம், மதுபானத்தை சுவைக்கத் தொடங்கினர். பாபா, அவர்கள் மனதில் ஒரு சாதகமான விருப்புணர்வையும், இந்த ஊழியர்கள் உண்மையான துறவறத்தை கடைப்பிடிப்பதன் மூலம், உலகில் வாழ்ந்தாலும், அவர்கள் உலகத்தைச் சார்ந்திருக்கக்கூடாது, மேலும் தங்கள் பணியை, பொருத்தமான மற்றும் சரியான வழியில் தொடர வேண்டும் என்ற உள்ளுணர்வையும் உருவாக்கிக்கொண்டிருந்தார்.

"இவ்வாறு, மெஹர் பாபாவின் திட்டங்களின் உறுதியற்ற தன்மையும், அவற்றில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களும் இந்த நோக்கத்திற்காக நடந்தன; அது உண்மையான ஆயத்த நிலைக்குத் தயார்படுத்துவதாகும். உலகின் உணர்வை ஆன்மீகப் பாதையை நோக்கித் திசை திருப்பும் பணிகள் தொடங்கிவிட்டன; மேலும், படிப்படியாக, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில், அவருடைய செயல்பாடுகளின் வேகம் அதிகரித்து, வேறு வேறு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டன."



அலி ஷாவுடன் மெஹர் பாபா
(MEHER BABA WITH ALI SHAH)



மெஹர் பாபா
(MEHER BABA)

# போர்க்கால பயணம் - லாஹூர்

**(Wartime Travel – Lahore)**

1943 ஜூலை 4ஆம் நாள் காலை 11:00 மணிக்கு பாபா, ஆண், பெண் மண்டலியுடன் பஞ்ஜாப் மெயிலில் லாஹூருக்குப் புறப்பட்டு மறுநாள் இரவு டெல்லி வந்து சேர்ந்தார்; அங்கு அவர்கள் சில மணி நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று.

கேக்கி தேசாய், அவரது மனைவி தூன் ஆகியோருக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்களை ரயில் நிலையத்தில் சந்தித்த வேளையில், கேக்கி இரவு உணவிற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அதே ரயிலில் பயணத்தைத் தொடர்ந்து, பாபாவும் குழுவும் 6ஆம் தேதி லாஹூரை வந்தடைந்தனர். ஆண், பெண் மண்டலி மற்றும் விருந்தினர்களுக்காக சாஞ்சி இரண்டு பங்களாக்களை ஏற்பாடு செய்திருந்தார். கேக்கி தேசாயின் உறவினர் ஹோமி தேசாய் என்றழைக்கப்பட்ட உள்ளூர் பாபா அன்பரின் உதவியுடன், சாஞ்சி அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

லாஹூரில், பாபா, பதினெட்டு பெண்மணிகளை இரண்டு வெவ்வேறு குழுக்களாகப் பிரித்தார்: முதல் குழு: மெஹரா, மணி, மார்கரெட், மெஹரு, ரானோ, கிட்டி மற்றும் வாலு. இரண்டாவது குழு: டவ்லா, ஐரீன், கேட்டி, கர்மான் மாசி, கோர்ஷெத், மன்ஸாரி, நாஜா, பீலாமாய், ஸில்லா, ஸொல்டூன், ஸூனாமாசி, மற்றும் மெஹருவின் சகோதரர் ஜங்கூ.

லாஹூர் நகரத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் அமைந்த கார்டன் டவுன், 6 -'அம்ரித் குட்டி'யில் (AMRIT KUTI, GARDEN TOWN) ஒரு சிறிய பங்களாவில் பாபா, மெஹராவின் குழுவுடன் தங்கினார். அவர் தினமும் மண்டலியின் இருப்பிடத்திற்கு வருகை தந்தார். மாஸாஜி பகலிலும், கிருஷ்ணா இரவிலும் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தனர். கார்டன் டவுனிலிருந்து சற்று தொலைவில், இதர பெண்மணிகள் தங்கிய பங்களாவில், பகலில் காளேமாமா, இரவில் வெங்கோபா ராவ் இருவரும் பாதுகாவல் பணியைப் பகிர்ந்து கொண்டனர். (ஒரு கட்டத்தில், வெங்கோபா ராவ் தென்னிந்தியாவில் வாழும் தனது குடும்பத்தினரை சந்திக்கச் சென்று, பின்பு திரும்பி வந்தார்.)

பாபா, அவரது சொந்த காரணங்களுக்காக, இதர பங்களாவில் வாழ்ந்த பெண்மணிகளை ஒருபோதும் சந்திக்கவில்லை; அவர்கள் பாபா இருந்த பங்களாவை நோக்கிப் பார்க்கவும் இல்லை. மெஹராவின் குழுவைச் சேர்ந்த பெண்கள் வாரத்திற்கு இரண்டு முறை அவர்களை சந்தித்து வந்தனர்; ஞாயிற்றுக்கிழமைகளில் அவர் இல்லாதபோது அவர்கள் பாபாவின் பங்களாவிற்கு வர அனுமதிக்கப்பட்டனர்; ஆனால் பாபா மற்றும் அவரது பணி பற்றிய எந்தவொரு பேச்சும் தடைசெய்யப்பட்டது. ஏதேனும் செய்தி அந்தப் பங்களாவிற்கு அனுப்பவேண்டி இருந்தால், அது மார்கரெட் மூலமாக அனுப்பப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு, நாஜா, மெஹராவின் பங்களாவிற்கு

மாற்றப்பட்டார், மேலும் லாஹூரைச் சேர்ந்த கோர்ஷெத் இதர பங்களாவிற்குச் சென்றார். கோர்ஷெத் ஒரு நல்ல நீச்சல் வீராங்கணை; அவர், மார்கரெட்டுடன் இணைந்து, உள்ளூர் ஏரியில் பெண்களுக்கு நீச்சல் பயிற்சியைக் கற்றுத் தந்தார்.

பெண்மணிகளை இரண்டு குழுக்களாகப் பிரித்தது, இறுதியில் இந்தியா, பாகிஸ்தான் எனும் இரண்டு பிரிவுடன் ஏதேனும் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். அத்தகைய பகிர்வு நடக்கும் என்று பாபா அடிக்கடி சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார். **“இந்தியா இரண்டு துண்டுகளாகப் பிரிக்கப்படும், மேலும் இரத்த ஆறு கரைபுரண்டோடும்!”** பாபா ஒருமுறை கூறினார்.

லாஹூரில் இருந்த ஆண் மண்டலியில் அண்ணா 104, பைதூல், சாஞ்சி, டாக்டர் கனி, குஸ்தாஜி, காக்கா, காளேமாமா, கிருஷ்ணா, மாஸாஜி, டாக்டர் நீலு, விஷ்ணு ஆகியோர் அடங்குவர். அவர்கள் 294 கார்டன் டவுனில் ஒரு வீட்டில் தங்கியிருந்தனர். ஜால் கேரவாலா, பாபாதாஸ், ஆதி சீனியர், குல்மாய், தேஷ்முக் ஆகியோர் அவ்வப்போது வந்து, அந்த நிலத்தில் அமைந்த ஒரு சிறிய குடிலில் தங்கினர்; டாக்டர் டான் ஜூலை மாதத்தில் ஒரு முறை வருகை தந்தார்.

ஆதி ஜூனியர், சகன், ஃபெராம், முரளி, பாதிரி, பெண்டு, ஸவக், சிது, ஸ்லாம்ஸன், ஸெயிலர் மாமா மற்றும் அவரது மகன் தீன்ஷா ஆகியோர் அப்போது மெஹராபாத்தில் இருந்தவர்களில் அடங்குவர். மற்றுமொரு நபர் ஏ. முதலியார் குப்புசாமி என்பவர் பாபாவை, பெங்களூரில் சந்தித்து, 1942இல் ஆசிரமத்தில் இணைந்தார். குப்புசாமி பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க மௌனம் கடைப்பிடித்தார்; ஒரு வருடத்திற்கும் மேலாக மெஹராபாத்தில் தங்கியிருந்தார்.

எரச் தனது குடும்பத்தினருடன் பிந்த்ரா ஹவுஸில் தங்கியிருந்தார், ஸர்வர், நாகு இருவரும் ஏற்கனவே குறிப்பிட்டபடி, பூனாவில் கல்வி பயின்று வந்தனர். (ஜங்கூவும் பின்பு பிந்த்ரா மாளிகைக்கு அனுப்பப்பட்டார்.) நாஜூ, ஆதி கொத்வால் ஆகியோரும் பூனாவில் படிப்பைத் தொடர அனுப்பப்பட்டனர். பப்பா ஜெஸவாலாவின் பொறுப்பில் அவர்கள் பள்ளிக்கூட விடுதிகளில் தங்கியிருந்தனர். அவர்களின் சகோதரி ஹில்லா இவ்வேளையில் ஸெக்கந்திராபாத்தில் பயின்று வந்தார்.

1943, ஜூன் 29 அன்று சம்பத் ஐயங்கார், 66 வயதில், மதராஸில் காலமானார். லாஹூரில் இருந்த பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், ஜூலை 5ஆம் நாள் அவரது குடும்பத்தினருக்கு பாபா இவ்வாறு தெரிவித்தார்: **“அவர் என்னுடன் எல்லையில்லா நிலையில் இணைந்துள்ளார்.”**

ஜூலை மாதத்தில் லாஹூரில் வெப்பம் மிக அதிகமாக இருந்தது - ஆகஸ்ட் மாதத்தில் வெப்பம் 109°யையும் தாண்டியது. ரானோ, மார்கரெட் இருவரும் பங்களாவின் நடைபாதை அமைந்த கல் தரையைத் தண்ணீரால்

நனைத்துக் குளிரச் செய்தனர். வெப்பம் காரணமாக, பாபா பெண்மணிகளை, கால்வாயில் யார் ஒருவரின் பார்வையும் படாத இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஆழமற்ற நீர் பகுதிகளில் நடக்க அனுமதித்தார்.

பெண்மணிகள் உள்ளூர் ஏரியில் நீந்திக் கொண்டிருந்தனர். மணிக்கு நீச்சல் தெரியாததால் லாஹூரைச் சேர்ந்த கோர்ஷெத் அவருக்குக் கற்றுத் தந்தார். ஒரு நாள் ஏரியில், கோர்ஷெத் வேறொரு பெண்ணுடன் நிகழ்த்திய சுவாரஸ்யமான உரையாடலின் போது, அருகிலிருந்த மணி தண்ணீரில் மூழ்கிவிட்டார். திடீரென நினைவு வந்து, அக்கம் பக்கம் சுற்றிப் பார்க்கையில், மணி இல்லாததைக் கண்டு அச்சத்தில் நடுங்கிப்போனார். அனைவரும் உரத்த குரலில் பாபாவின் பெயரைக் கூறி அலறத் தொடங்கினர். கோர்ஷெத், மணியின் நீச்சல் தொப்பியைப் பற்றிக்கொண்டு வெளியே இழுத்து அவருக்கு உதவினார்.

பாபாவின் பங்களாவில் ஓர் இரவு மின்சாரம் திடீரெனத் துண்டிக்கப்பட்டது. பாபா ரானோவை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு பணித்தார். ரானோ, நிச்சயமாக லாஹூருக்கு அந்நியராக இருந்ததால், யாரைத் தொடர்பு கொள்வது, எங்குத் தொலைபேசியைக் கண்டுபிடிப்பது என்று யோசித்தார். அவர் கும்மிருட்டில் இங்கேயும் அங்கேயும் நகர்ந்து, இறுதியில் பக்கத்து பங்களாவிற்குச் சென்று கதவைத் தட்டினார். வீட்டு உரிமையாளரிடம் தொலைபேசியைப் பயன்படுத்தலாமா என்று கேட்டு, அதிகாரியிடம் தொடர்பு கொண்ட பின்பு, ரானோ வீட்டிற்குத் திரும்பி வந்தார்.

ரானோவைப் பார்த்த பாபா, "**ஏன் இவ்வளவு நேரம்?**" என்றார்.

"தொலைபேசி எங்கே உள்ளது என்று எனக்குத் தெரியவில்லை."

**"இதுபோன்ற தகவல்களை நீங்கள் ஏன் முன்பே அறிந்து கொள்ளவில்லை?"**

"மின்சாரம் துண்டிக்கப்படும் என்பதை நான் எப்படி அறிவேன்?"

**"இது இங்கே நடக்கும் ஒரு வழக்கமான நிகழ்வு என்பது தெரியாவிட்டால், உங்களுக்கு என்னதான் தெரியும்? இதுபோன்ற விஷயங்களில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நான் அடிக்கடி மஸ்த் பணிக்காக வெளியே செல்லும் வேளையில் நீங்கள் எச்சரிக்கையாக இல்லாவிடில், இங்கு வாழும் பெண்மணிகளுக்கு என்னவாகும்? அவர்கள் தனிமை வாழ்க்கையை வாழ்ந்து வருவதால், இது போன்ற வெளியளவிலான விஷயங்களை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்."**

இத்தகைய சந்தர்ப்பங்களில் அமைதி காப்பதே சிறந்தது என்பதை ரானோ இப்போது கற்றுக்கொண்டார். இந்த சம்பவத்தின் மூலம் பாபா அவருக்கு, தொலைநோக்கு பார்வையை வளர்க்கும் விதத்தை எடுத்துக் காட்டினார்.

லாஹூர் வந்தடைந்ததும் பாபா, அவரது மஸ்த் பணியைத் தொடங்கினார். அவர் நகரத்திலும், சுற்றுப்புறங்களிலும் மஸ்துகளைத் தேடி பல மைல் தூரம் நடந்து சென்றார். கடுமையான ஜூலை வெப்பம் காரணமாக, தொலைதூரம் நடந்து செல்வது சோர்வடையச் செய்யும். உள்ளூர் மக்கள் மதிய வேளையில் தங்கள் வீடுகளில் அடைபட்டுத் தூங்கும் வேளையில், தெய்வீக அன்பிற்குரியவர் இறைபோதையில் தவிக்கும் தனது பிரியமானவர்களைத் தேடி மதிய வெயிலில் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்!

பாபா அவரது தலையை ஈரமான துணியால் மூடி, பைதூலுடன் நடந்து சென்று மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். பைதூல் தண்ணீர் நிரப்பப்பட்ட கொள்கலன் ஒன்றை உடன் எடுத்துச் சென்றார், ஆனால் சில நிமிடங்களில் தண்ணீர் சூடாகிவிடும். வெப்பம் மிகவும் அதிகமாக இருந்ததால், பைதூல் தனது காலணிகளை அடிக்கடி தண்ணீரால் ஈரப்படுத்தினார். ஆனால் பாபா ஒருபோதும் அவரது வேகத்தைக் குறைத்தபாடில்லை, அல்லது அத்தகைய கடுமையான காலநிலையிலும் கூட தனது கடமையைக் கைவிடவில்லை.

ஆண், பெண் குழுவின் உறுப்பினர்கள் வெப்பம் காரணமாக ஒருவர் பின் ஒருவராக உடல்நலம் குன்றி காணப்பட்டனர். விஷ்ணு ஜூரத்தால் அவதியுற்றபோதிலும், அவர் தொடர்ந்து பெண்மணிகளுக்காக, பஜாருக்குச் செல்லத் தவறவில்லை. பாபா, பைதூல் தவிர, ஆண்கள், பெண்கள் அனைவரும் லாஹூரில் நோய்வாய்ப்பட்டனர், மேலும் பாபா அவரது மஸ்த் பணிக்காக பைதூலை உடன் அழைத்துச் சென்றதால் அவருக்கு மட்டுமே விதிவிலக்கு அளிக்கப்பட்டதாகத் தோன்றியது.

நாஜா, கேட்டி இருவரும் பக்கத்து பங்களாவில் உணவு தயார் செய்து பாபாவின் பங்களாவிற்கு அனுப்பி வைத்தனர். ஒரு நாள், பாபாவின் அனுமதியுடன், வெளியிலிருந்து பஜ்ஜி வகைகளை வாங்கி உண்டதால், எவரும் பசியை உணரவில்லை. வழக்கம் போல் அன்று வந்த உணவை எவரும் தொடவில்லை. அவ்வேளையில் சமையலறையை நிர்வகித்து வந்த கிட்டி, பாபாவின் உத்தரவின்படி உணவை வீணாக்கக்கூடாது என்பதால் சமையலறையில் அமர்ந்து மெதுவாக அனைத்தையும் உண்ணத் தொடங்கினார்.

மெஹரா அதை கவனித்து, “நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்கள் நலனுக்கு இது நல்லதல்ல; இது உயிருக்கு மிகவும் ஆபத்தானது” என்று முறையிட்டார்.

அதற்கு, கிட்டி, “நான் உயிரைத் துறப்பேன், ஆனால் முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து துறப்பேன்!” என்று கூறியதை மெஹரா, பாபாவிற்குத் தெரிவித்தபோது, பாபா மனம் விட்டுச் சிரித்து, கிட்டி இப்படி சாப்பிடுவதைத் தடைசெய்தார். இல்லையேல், கிட்டியின் இயல்பான தன்மையைப் பொறுத்தவரையில் அவர் இரவெல்லாம் சாப்பிட்டுக்கொண்டே இருந்திருப்பார்.

'மிட்டு' (MITTU) என்றழைக்கப்பட்ட பச்சைக்கிளி அம்ரித் குட்டியில் பாபா மற்றும் பெண்மணிகளுடன் வாழ்ந்து வந்தது. பாபா, பச்சைக்கிளியை மிகவும் நேசித்தார்; அதுவும் அவரை பெரிதும் விரும்பி, பாபாவின் தோள் மற்றும் விரல்களில் அமர்ந்து, பாபாவின் அன்பு முத்தத்தைப் பெற்றுக்கொள்ளும். மெஹராபாத் மேல்மலை 'மிருகக்காட்சி சாலையில்' இன்னும் பல செல்லப்பிராணிகள் இருந்தன. கோழிகள், வாத்துகள், ஒரு ஜோடி வான்கோழிகளும், நாய்களும் இருந்தன. பாபா இல்லாத வேளையில், இந்த விலங்குகளை பெண்டு கவனித்து வந்தார். அவர்கள் லாஹூரில் இருந்தபோது, பாபா, பெண்டுவிற்கு தொலைத்தந்தி அனுப்பி, 'லக்கி' (LUCKY), 'ஜம்பு' (JUMPU) என்ற இரண்டு குரங்குகளை, பாபாவின் இரண்டு அன்பர்களுக்குக் கொடுக்குமாறு கூறியதை, சகன் அப்படியே செய்தார்.

ஒரு கருப்பு நாய் லாஹூரில் பாபாவின் பங்களாவிற்கு வருவதும், அதற்குத் தினமும் உணவளிப்பதும் வழக்கமாக நடந்து வந்தது. அதற்குப் பிறகு, காயமடைந்த ஒரு நாய்க்குட்டியும் வாசலுக்கு வரத் தொடங்கியது. பெண்கள் அதன் காயங்களுக்கு மருந்திட்டு, அதை அன்பாக கவனித்து வந்தனர். ஆனால் ஒரு நாள், அந்த நாய்க்குட்டிக்கு வெறிபிடித்ததால், பாபா, மார்கரெட்டிடம் அதை டாக்டர் நீலுவிடம் கொடுத்து அழிக்குமாறு அறிவுறுத்தினார்.

சில மாதங்களுக்குப் பிறகு (1943, அக்டோபர் 1 காலை), கருப்பு நாயும் வெறித்தனத்தில் மார்கரெட்டைக் கடித்தது. கிருஷ்ணா தனது இரவு கடமையை முடித்து, ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வேளையில் தோட்டக்காரர், கிருஷ்ணாவை, பாபா உடனடியாக அழைப்பதாக அவரிடம் கூறினார். அப்போது பாபா, மார்கரெட்டுடன் நின்று கொண்டிருந்தார்; நாயும் அருகில் படுத்திருந்தது. பாபா அந்த நாயைச் சுட்டிக்காட்டி, "**இதை எடுத்துச் செல்லுங்கள்**" என்று கட்டளையிட்டார். ஏற்கனவே மார்கரெட்டைக் கடித்ததால், அதைப் பிடிப்பது கிருஷ்ணாவிற்கு மிகவும் கடினமாக இருந்தது. அதன் அருகில் சென்றால் கடிக்கலாம் என தயங்கிய கிருஷ்ணா, ஒரு மூங்கில் கழியை வடிவமைத்து, அமைதியாக நாயை அணுகி, அதன் கழுத்தை மூங்கில் கழியால் பிடித்து, அதைச் சுற்றி ஒரு கயிற்றைக் கட்டினார்.

"**இங்கிருந்து 20 மைல் தொலைவில் நாயை எடுத்துச் செல்லுங்கள்**" என்று பாபா உத்தரவிட்டார்.

அதற்குக் கிருஷ்ணா, "அது சாத்தியமில்லை, பாபா. இது வெறிபிடித்த நாய்!" என்றார்.

பாபா பிடிவாதமாக இருந்தார், "**இது என் உத்தரவு!**"

கிருஷ்ணா இவ்வளவு தொலை தூரம் நாயைக் கொண்டு செல்வது சாத்தியமல்ல என்பதை வெளிப்படுத்தினார். பாபா ஏமாற்றத்துடன் பார்த்தார், "**சரி, அதை, பதினொரு மைல் தூரம் எடுத்துச் செல்லுங்கள். மைல் கற்களை எண்ணுவதில் கவனமாகவும் உறுதியாகவும் இருங்கள்**" என்று கட்டளையிட்டார். மேலும் எதிர்ப்புத் தெரிவிக்க கிருஷ்ணாவிற்கு

வாய்ப்பளிக்காமல் பாபா உள்ளே சென்றார்.

கிருஷ்ணா தனது சைக்கிளில், அதை இறுக்கமாகக் கயிற்றால் கட்டி, மூங்கில் கழியையும் எடுத்துக் கொண்டு, நாயைத் தூக்கிச் சென்றார். இது ஒரு கடினமான பணி. சிறிய கூழாங்கற்களைப் பயன்படுத்தி, அவர் கடந்து செல்லும் மைல்களை எண்ணினார். பதினொரு மைல் சைக்கிளில் செல்ல அவருக்கு ஐந்து மணி நேரம் பிடித்தது. ஒரு சிறிய ஏரியில், கிருஷ்ணா அந்த நாயை தண்ணீருக்கு அருகில் அழைத்துச் சென்றார். நாய் தண்ணீரை அதன் வாயால் தொட்டதும், அது இறந்துவிட்டது. கிருஷ்ணா கோபமும் எரிச்சலுமடைந்தார். "நாய் இறப்பதாக இருந்திருந்தால், அதை லாஹூரில் ஏன் கொன்றிருக்கக்கூடாது?" என எண்ணி ஆச்சரியப்பட்டார். "பதினொரு மைல் தூரத்திற்கு அதை எடுத்துச் சென்று இத்தனை சிரமங்களை ஏன் அனுபவிக்க வேண்டும்?"

நாயின் சடலத்தை விட்டுவிட்டு, கிருஷ்ணா பங்களாவிற்குத் திரும்பி வந்தபோது கிட்டத்தட்ட மதியம் இரண்டு மணி ஆகிவிட்டது. பாபா உடனடியாக அவரைப் பார்க்க விரும்புகிறார் என்பதை அவருக்குத் தெரிவிக்க, டாக்டர் நீலு காத்திருந்தார். பாபா வராந்தாவில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார். "**நீங்கள் நாயை விட்டுவிட்டீர்களா**?" என்று கேட்டார்.

"ஆம். ஆனால் அது இறந்துவிட்டது."

பாபா மிகவும் மகிழ்ச்சியாகத் தென்பட்டார். "**நீங்கள் பதினொரு மைல் தூரம் சென்றீர்களா**?" கிருஷ்ணா ஆமாம் எனத் தலையசைத்தார்.

"**கற்களால் மைல்களை எண்ணினீர்களா**?" கிருஷ்ணா அதற்கும் ஆம் எனத் தலையசைத்தார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீங்கள் என்ன ஒரு சிறப்பான பணியைச் செய்துள்ளீர்கள்! உள்ளே சென்று மதிய உணவை உண்ணுங்கள்**" என்றார்.

கிருஷ்ணா அசையாமல் அங்கே நின்றுகொண்டிருந்தார். "பாபா, இது என்ன? நான் ஏன் அந்த நாயை பதினொரு மைல் தூரத்திற்கு எடுத்துச் செல்ல விரும்பினீர்கள்?" என்று கேட்டார்.

பாபா அவருக்கு அறை ஒன்றைக் கொடுத்து தலைமுடியைப் பிடித்து முறுக்கினார். "**வெளியே செல்லுங்கள்! என் பார்வையிலிருந்து வெளியேறுங்கள்!**" என சைகையால் தெரிவித்தார்.

இருப்பினும் கிருஷ்ணா அங்கிருந்து நகராமல், வாயிலுக்கு வெளியே நின்றார். பாபா அவரிடம் '**உங்களுக்கு என்ன வேண்டும்**' என்று கேட்க, கிருஷ்ணா, "என்ன காரணம், பாபா? சொல்லுங்கள். முதலில் நீங்கள் 20 மைல், பின்னர் 11 மைல் போகச் சொன்னீர்கள். நான் அந்த நாயை அப்படியே அவ்வளவு தூரம் அழைத்துச் சென்ற பின்னர், அது அங்கேயே இறந்துவிட்டது. நீங்கள், அது உயிரை விடுவதை விரும்பியிருந்தால், நான் அதை ஐந்தே நிமிடங்களில் இங்கேயே செய்திருக்கலாம்!

“நீங்கள் ஏன் என்னை அந்தச் சிக்கலையெல்லாம் சந்திக்கச் செய்தீர்கள்? அந்த நாய் அங்கு இறந்ததில் என்ன நிகழ்ந்து விடும்? நீங்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தீர்கள்?”

பாபா, கிருஷ்ணாவைத் திரும்ப அழைத்து, ஒரு குச்சியை எடுத்து தரையில் ஒரு கோடு வரையுமாறு தெரிவித்தார். பாபா, தனது காலால் அந்தக் கோட்டை அழித்து, மற்றொன்று வரையுமாறு சுட்டிக்காட்ட, கோடு வரைந்ததும் ‘**அது சரியானது**’ என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

தொடர்ந்து பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார், “**எதிர்காலத்தில் இன்றைய இந்தியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிக்கப்படும். இந்தக் கோடு இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எல்லைக் கோடாக இருக்கும்.**”

நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பிரிவு நிகழும் நேரத்தில், கிருஷ்ணா பாபாவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தார். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சரியான எல்லைக் கோடு, 11 மைல்கள் அல்லது 20 மைல்கள் தூரத்தில் இருக்க வேண்டுமா என்பது குறித்து சர்ச்சை ஒன்று எழுந்தது.

பாபா அவருடன் அஹமதுநகரில் வாழ்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட துப்புரவாளரின் மகன் அமீர் ஸையத் (AMIR SYED) என்பவரை உடன் அழைத்து வந்திருந்தார். அவரது சகோதரி பெண்மணிகளுக்காகப் பணிபுரிந்து கொண்டிருந்தார், மேலும் அந்தப் பணிப்பெண் தனது சகோதரரை அங்கேயே வைத்திருக்குமாறு பாபாவிடம் வேண்டினார். பாபா இந்த ஏழை சிறுவனை ராஜ பாணியில் வைத்திருந்தார், மேலும் அவனுக்கு சேவை செய்யும் கடமை கிருஷ்ணாவிற்கு வழங்கப்பட்டது. பாபா, அமீரை மிகவும் விரும்பியதாகத் தோன்றியது; மேலும் அதிக செல்லம் கொடுத்து வந்தார். (கிருஷ்ணாவின் கூற்றுப்படி, ‘மாலை 5:00 மணிக்கு, அமீர் அதிகாலை ஐந்து என்று அறிவித்தால், பாபா அவன் சொன்னது சரிதான் என்று கூறிவந்தார்!”)

ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமையும், கிருஷ்ணா சிறுவனை ஆறு மைல் தொலைவில் அமைந்த சினிமா கொட்டகைக்கு, திரைப்படம் பார்க்க அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. கிருஷ்ணா, அமீருக்கான நுழைவுச்சீட்டை வாங்கிய பின்பு, (பதினெட்டு வயதுக்கும் குறைவான இளைஞன் என்பதால்) தியேட்டருக்குள் அனுமதிக்கப்படவில்லை. அந்த சிறுவன் கிருஷ்ணா திரும்பி வரும் வரை வெளியே காத்திருக்க வேண்டியிருந்தது. ஒரு நாள், அவர்கள் திரைப்படத்திற்குப் பிறகு திரும்பி வருகையில், ஒரு சரக்கு வண்டி தூசால் நிரம்பிய மேகம் ஒன்றை எழுப்பிச் சென்றது, அது அமீரின் நேர்த்தியான ஆடையைப் பாழாக்கி, கண்களிலும் தூசியை வீசிச்சென்றது.

சிறுவன் கொதிப்படைந்தான். “எனது முகத்தில் தூசி பறக்கிறது” என்று கத்தினான். “இத்தனை மோசமான சாலையில் என்னை ஏன் அழைத்து வந்தீர்கள்?”

“இது சினிமாவிற்குச் செல்ல ஒரே வழி. வேறு வழியில்லை” என்றார் கிருஷ்ணா.

அந்த சிறுவனால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை; சகட்டு மேனிக்கு கிருஷ்ணாவைத் திட்டித் தீர்த்தான். கிருஷ்ணா பொறுமையிழந்து “அட முரட்டுப் பயலே! நான் பாபாவுடன் மட்டும் இருந்திருக்காவிட்டால் உன்னைத் துண்டு துண்டாக்கி குப்பையில் வீசியிருப்பேன்! ஒரு சரக்கு வண்டி இந்த வழி கடந்து சென்று தூசியை எழுப்பியது எனது குற்றமா? இதை நான் தடுத்திருக்க முடியுமா?” என்று கூறி சபித்தார்.

அமீர் திரும்பி வந்து நேரடியாக மண்டலியின் பங்களாவில் பாபாவின் முன்னால் நின்று அழ ஆரம்பித்தான். கிருஷ்ணாவைக் குறித்து அமீர் கடுமையாகப் புகார் கூறினான். பாபா உடனடியாக கிருஷ்ணாவை அழைத்து, **“ஏன் இந்த சிறுவனை இவ்வளவு மோசமான சாலை வழியாக அழைத்துச் சென்றீர்கள்?”** என வினவினார்.

கிருஷ்ணா உடனே, “அவன் என்னை கண்டபாட்டுக்குக் கத்திக் கொண்டிருந்தான், சாலையில் என்னை சபித்துத் திட்டினான். இந்த இளவரசனுக்காக நான் ஒரு சிறப்பு நெடுஞ்சாலையைக் கட்ட வேண்டுமா?” என்றதும் முதல் முறையாக, பாபா கிருஷ்ணாவை அறைந்தார். அமீரை அவரது கைகளால் அரவணைத்து, அவனது அறைக்குச் செல்லும்படிக் கட்டளையிட்டார்.

அமீர் அங்கிருந்து சென்றதும், பாபா, கிருஷ்ணாவிடம், **“நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”** என வினவினார்.

“பாபா, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நான் தவறு செய்யவில்லை. நான் எந்தத் தவறும் செய்யவில்லை, இருந்தும் நீங்கள் என்னை அறைந்தீர்கள்?”

**“நீங்கள் அவரை வெறுக்கிறீர்கள், ஏனெனில் நீங்கள் ஒரு பிராமணர், அவர் ஒரு துப்புரவாளர். இந்த வெறுப்பை உங்கள் இதயத்திலிருந்து விலக்க, அவருக்கு சேவை செய்யும் இந்த வேலையை நான், வேண்டுமென்றே உங்களுக்கு வழங்கியுள்ளேன்.**

**“இந்தத் தவறான எண்ணத்தை உங்கள் இதயத்திலிருந்து ஒழிக்க உதவியதற்காக நீங்கள் அமீருக்கு நன்றி சொல்ல வேண்டும். நீங்கள் அவரை வெறுக்கிறீர்கள், நீங்களும் பொறாமைப்படுகிறீர்கள். அவர் உங்களை வெறுக்கவோ பொறாமை கொள்ளவோ இல்லை. அமீர், ஓர் உண்மையான அமீர்** (பிரபு) **என்பதையும், நீங்கள் ஓர் ஏழை என்பதையும் இது காட்டுகிறது.”**

“அப்படியானால் அவன் ஏன் இத்தனை கோரிக்கைகளை முன்வைக்கிறான்?” என்று கிருஷ்ணா கேட்டார்.

**“அவர் அவ்வளவு சுறுசுறுப்பாகவும், எளிதில் திருப்தி அடையாதவராகவும் இல்லாதிருந்தால், உங்கள் வெறுப்பு எவ்வாறு வெளிப்பட்டிருக்கும்? இந்த வெறுப்பை வெளிக்கொணர, நான் உங்களுக்கு**

**இந்த வேலையை வழங்கியுள்ளேன். அமீர் தனது வேலையைச் சிறப்பாகச் செய்கிறார். விஷம் வெளியே எடுக்கப்படாவிட்டால், நீங்கள் உயிரிழந்துவிடுவீர்கள். அவரால் நீங்கள் அஞ்சுகிறீர்கள், ஆனால் உங்களுக்கு இது பற்றி எதுவும் தெரியாது.**"

பாபா, கிருஷ்ணாவை அன்புடன் வருடிக்கொடுத்து உறுதியளித்தார்: "**இதைக் குறித்து மேலும் சிந்திக்க வேண்டாம். இது எனது பணிக்காக நிகழ்ந்தது. அவர் ஒரு முஸ்லீம், நீங்கள் ஓர் இந்துவாக இருக்கிறீர்கள். உங்கள் இருவருக்கும் இடையில் நான் செய்ய வேண்டிய சில முக்கியமான பணிகள் உள்ளன. உங்களை அறைவதன் மூலம், நான் சில முக்கியமான பணிகளைச் செய்து முடித்தேன். இப்போது அதை மறந்துவிடுங்கள்.**"

லாஹூரில் இருந்த வேளையில், பாபா ஒரு முறை கிருஷ்ணாவை எச்சரித்தார்; இரவு நேர கண்காணிப்பின் போது, அவர் பங்களாவைச் சுற்றி வருகையில், அதிக கவனமாக இருக்க வேண்டும், எப்பொழுதும் அவருடன் ஒரு குச்சி, ஒளிரும் விளக்கு இரண்டையும் எடுத்துச் செல்ல வேண்டும். பாபா இந்த எச்சரிக்கையை மூன்று முறை திரும்பத் திரும்ப எடுத்துக் கூறினார், மேலும் கிருஷ்ணா, பாபா இந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதைக் கண்டு குழப்பமடைந்தார். இரவில் கிருஷ்ணா, பாபாவைப் பார்த்த வேளையிலும், பாபா மீண்டும் அதே விஷயத்தைத் தெரிவித்தார். எனவே, அன்றிரவு கிருஷ்ணா மிகவும் கவனமாக இருந்தார், ஆனால் எதுவும் நடக்கவில்லை.

பாபா, எந்தவொரு காரணமும் இல்லாமல், அவரை பயமுறுத்துவதற்காக, தேவையின்றி விஷயங்களை மீண்டும் மீண்டும் செய்கிறார் என்ற எண்ணம் அவர் மனதில் அலை பாய்ந்தது. மறுநாள் இரவு, அவர் பாபாவுடன் இருந்தபோது, பாபா இந்த விஷயத்தை மறுபடியும் கொண்டு வந்தார். சற்றே எரிச்சலடைந்த கிருஷ்ணா, "இதை நீங்கள் என்னிடம் ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள், பாபா! இதை மீண்டும் சொல்வதில் பயன் என்ன?" என வினவினார்.

"**காரணம் உள்ளது; இல்லையேல், நான் எனது மூச்சை வீணடிப்பானேன்! இப்போது அதை மூன்று முறை என்னிடம் சொல்லுங்கள்**" என்று கூறி பாபா திட்டினார்.

எனவே கிருஷ்ணா மூன்று முறை திரும்பத் திரும்பச் சொன்னார்: "நான் இரவில் எச்சரிக்கையாக இருப்பேன், வீட்டைச் சுற்றி வரும்போது, நான் எப்பொழுதும் ஒரு குச்சி, கைவிளக்கு இரண்டையும் என்னுடன் எடுத்துச் செல்வேன்."

இவற்றையெல்லாம் மீறி பாபாவின் எச்சரிக்கையை, கிருஷ்ணா தீவிரமாக எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டார். ஓர் இரவு, அவர் வெளியே சுற்றி நடந்து வருகையில், தோட்டத்தில் சில வாழை மரங்களுக்கு அருகில் ஒரு பெரிய கருப்பு நாகப்பாம்பைக் கண்டார். கிருஷ்ணா மணலை எடுத்து அதன்

மீது வீசியதும், பாம்பு அவரை நோக்கித் திரும்பி வந்தது. அவ்வேளையில், கிருஷ்ணா அதை மரத்தடியால் தாக்கி, அதன் முதுகை உடைத்து, பின்னர் அதைக் கொன்றார்.

அந்த அரவம் பாபாவைத் தனது அறையிலிருந்து வெளியே வரச் செய்தது. **"என்ன நடந்தது?"** என்று விசாரித்தார்.

அதற்கு கிருஷ்ணா, "ஒரு பெரிய கருப்பு நாகம்..." என்றதும் பாபா மேலும் எதுவும் கேட்கவில்லை, பாபா ஏன் இடைவிடாமல் எச்சரித்தார் என்பது அவருக்கு இப்போது புலப்பட்டது.

1943, ஜூலை 15 அன்று பைதூல், டாக்டர் கனி, குஸ்தாஜி ஆகியோருடன் பாபா, மஸ்த் பயணமாக லாஹூரிலிருந்து 'சோர்கட்' (CHORKAT) கிராமத்திற்குப் புறப்பட்டார். மஸ்த் பணியை முடித்து, ரயில் நிலையத்திற்குச் செல்லும் வழியில், டாக்டர் கனி, குஸ்தாஜி இருவரும் மிகவும் களைத்துப் போயிருந்ததால் பாபா, அவர்களை அழைத்துச் செல்ல கழுதையை நியமிக்க வேண்டியிருந்தது. பாபாவும் பைதூலும் ரயில் நிலையத்தை நோக்கி விரைந்தனர். டாக்டர் கனி, குஸ்தாஜி இருவரும் சோர்வு காரணமாக கழுதைமேல் அமர முடியாமல் கீழே விழுந்து, எழுந்து தாமதமாக வந்து சேர்ந்தனர். ரயில் புறப்படவிருந்ததால், பைதூலின் வேண்டுகோளுக்கிணங்கி ரயில் நிலைய அதிகாரி ரயில் புறப்படுவதைத் தாமதப்படுத்தினார். இறுதியாக, இருவரும் மிகவும் மோசமான நிலையில் வந்து சேர்ந்தனர்.

அதைத் தொடர்ந்து அவர்கள் குல் மோக்கல் (KUL MOKAL) என்ற இடத்திற்குச் சென்று, தங்கள் பெட்டி படுக்கைகளை ஒரு பஞ்ஜாபி ஹோட்டலில் விட்டுவிட்டு, மஸ்துகளைத் தேடிப் புறப்பட்டனர். பாபா நான்கு அடி உயரமுள்ள, மெல்லிய, வயதான, ஏறக்குறைய நிர்வாணமாக, கையில் ஒரு போர்வையை மட்டும் ஏந்திய 'ஸையித் அஹ்மத் ஷா' (SAIYID AHMAD SHAH) என்பவரைத் தொடர்பு கொண்டார். இந்தப் பழைய மஸ்த் இப்பகுதியில் மிகவும் போற்றி வணங்கப்பட்டதோடு, பல சீடர்களுடன் ஆசிரமத்தில் இருந்தார்.

மெஹர் பாபா அவரது மஸ்த் பணியை முடித்துவிட்டு, அன்று நள்ளிரவில் ஹோட்டலுக்குத் திரும்பினார். நேர்மையும் நாணயமும் மிக்க சீக்கிய உரிமையாளர் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தார், இரவு உணவு தயாராக இருந்தது. இறுதியில் அவர் உரிய பணத்தையும் ஏற்க மறுத்துவிட்டார்; ஆனால், பாபாவின் வற்புறுத்தலின் பேரில், அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஹோட்டல் உரிமையாளருக்கு, பாபாவைத் தெரியாது எனினும் பாபாவின் வெளிப்படையான அம்சங்களால் மிகவும் ஈர்க்கப்பட்டு அவரை ஒரு மேம்பட்ட ஆத்மாவாகக் கருதினார்.

16ஆம் தேதி, கங்கன்பூர் (KANGANPUR) எனும் இடத்தில், பாபாவைப் பார்த்த முதல் பார்வையில், 'ஸையித் ரெஹ்மத்துல்லா' (SAIYID REHMATULLAH)

என்றழைக்கப்பட்ட மஸ்த் பரவசத்தில் நடனமாடத் தொடங்கி, பாபாவை மகிழ்ச்சியுடன் வரவேற்றார், "உள்ளே வாருங்கள், உள்ளே வாருங்கள்; உங்கள் வருகைக்காக நான் காத்திருந்தேன்; உங்களுக்காக நான் தயாராக இருக்கிறேன்" என்று கூறி, பாபாவை ஒரு மைல் தொலைவில் அமைந்த அவரது உறைவிடமான மயானம் ஒன்றிற்கு அழைத்துச் சென்றார், அங்கு பாபா அவருடன் தனியாக அமர்ந்தார். இந்த மேல்நிலை மஸ்த், பாபாவிற்கு, இரும்பு மற்றும் மரத்துண்டுகள் அடங்கிய பழைய கோணிப்பை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்; அவர் இதை சேமித்து, இந்த சந்தர்ப்பத்திற்காகப் பல ஆண்டுகள் காத்திருந்ததாகத் தெரிவித்தார்; பாபா அதை அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

மஸ்துகள் வழங்கும் எந்தவொரு பொருளையும், அது எவ்வளவுதான் விசித்திரமாக இருந்தாலும், பாபா, அதை ஒரு சிறப்பு பாதுகாப்புப் பெட்டகத்தில் மிகவும் கவனமாக வைத்திருப்பது வழக்கம்; அது பின்பு மெஹராபாத்தில் பொக்கிஷமாகச் சேமிக்கப்பட்டது. அதில் இருந்த பொருட்களை எவரேனும் பார்க்க முயன்றால், அது முழுக்க முழுக்க கல் துண்டுகள், உடைந்த கண்ணாடி, இரும்புத் துண்டுகள், மரம் மற்றும் சீரழிந்த ஆடைகளால் நிரம்பி இருந்தது. ஆனால் பாபாவைப் பொறுத்தவரை, இந்த விசித்திரமான, தனி இயல்புமிக்க பொருட்கள் அவரது பிரியமான மஸ்துகளிடமிருந்து பெறப்பட்ட விலைமதிப்பற்ற பொக்கிஷமாக இருந்தன.

லாஹூரில் வாழ்ந்த ஓர் இளம் நிர்வாண மஸ்தை, பாபா 'பாப் திக்ராவலி மஸ்த்' (BAP DIKRAWALI MAST) என்ற பெயரிட்டு அழைத்தார், அதாவது 'தந்தை, மகன் இருவருமாக இணைந்த மஸ்த்'. இந்த இளம் மஸ்தின் தந்தையார் தன்னை 'தனது மகனின் சீடர்' என்று கூறிக்கொண்டு இந்த மஸ்தை கவனித்து வந்தார். தந்தை, மஸ்த் நிலையை அடையாத போதும், தோற்றத்தில் ஒரு மஸ்தைப் போலவே இருந்தார். பாபா இந்தத் தொடர்பில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

லாஹூருக்கு அருகில், பாபா மிகவும் அரிதான ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட, இறைநிலையை எய்திய மஜ்ஜூப் (MAJZOOB) 'ஷஹாபுதீன்' (SHAHABUDDIN) என்பவரைத் தொடர்பு கொண்டார். பாபா அவரை நீராட்டிய பின்பு, மஜ்ஜூப், பாபாவைத் தனியாக ஒதுங்கிய ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

பாபா, 1943 ஜூலை 23 வெள்ளிக்கிழமை, டாக்டர் கனி, பைதூல், குஸ்தாஜி ஆகியோருடன் ராவல்பிண்டிக்குச் (RAWALPINDI) சென்றார். அடுத்த நாள், ஆதி சீனியர் பத்து நாட்கள் தங்குவதற்காக வந்து, பாபாவுடன் அவரது மஸ்த் பயணத்தில் பங்கெடுத்தார். டாக்டர் டானும் ராவல்பிண்டியில் அவர்களை சந்தித்த வேளையில், வெப்பம் காரணமாக ஒரு 'முஸாஃபர் கானா'வின் (MUSAFFAR KHANA - முஸ்லீம் தர்மசாலை) திறந்த கூரைப்பகுதியில் தூங்கினர். அந்த நாள் ராவல்பிண்டியில், பாபா 'உன்தி மாய்' (UNTI MAI)

என்றழைக்கப்பட்ட மிகப் பழைய மஸ்தானியைத் தொடர்பு கொண்டார். உடலை ஓர் அழுக்கு கோணிப்பையால் மூடியதைத் தவிர, ஏறக்குறைய நிர்வாணமாக, செங்கல் குவியலில் அமர்ந்திருந்த அந்த வயதான பெண்மணி, யார் ஒருவரும் அவரை நெருங்குவதை அனுமதிக்கவில்லை; ஆனால் பாபாவைப் பார்த்ததும் அவர் அருகில் வருமாறு அழைத்தார். பாபா அந்தச் செங்கல் குவியல் மேலே ஏறி அவருடன் அமர்ந்தார். கோணிப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நாட்பட்ட, பூஞ்சைகள் நிறைந்த ரொட்டியை அவர் பாபாவிற்குக் கொடுத்ததும், பாபாவும் அதை அவர் முன்னிலையில் உண்டார்.

ராவல்பிண்டியில், பெரும்பாலும் ஒரு திரையரங்கில் அமர்ந்திருந்த 'மஸ்தான் ஷா' (MASTAN SHAH) எனும் அமைதியாக, சாந்த நிலையில் இருந்த பழைய மஸ்தையும் பாபா தொடர்பு கொண்டார்.

மற்றுமொரு முக்கியமான தொடர்பில் வந்த 'நங்கா கான்' (NANGA KHAN), ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட நிர்வாண மஸ்த், வழக்கமாக சுமார் ஐந்து மைல் தூரத்திற்கு நகரத்தைச் சுற்றி ஓடுவதைப் பழக்கமாகக் கொண்டார். அவர் ஓடாத நேரமெல்லாம், சாலையோரம் அசுத்தமான குழி ஒன்றில் ஓய்வெடுத்தார். மஸ்த் ஒரு நெடுந்தூர ஓட்டப்பந்தய வீரரைப் போலவே செயல்பட்டார், மேலும் அவர் நகரத்தைச் சுற்றி நடக்கும் போதெல்லாம், எப்பொழுதும் வட்டங்களில் நடந்து வந்தார். இந்த மஸ்த் பணத்தைக் கேட்டு வாங்கி, அதை வழங்கும்போதெல்லாம் வீதியில் வீசி எறிவது பழக்கம்.

நங்கா கான் மஸ்தைத் தொடர்பு கொண்ட பின்பு, பாபா 'முர்ரி'க்குச் (MURREE) செல்லும் சாலையில் 'சத்ரா மைல்' (SATRA MILE - பதினேழாம் மைல்) என்ற கிராமத்தில், ஒரு மலையில் தனியாக மூன்று மணி நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். பாபாவும் மண்டலியும் ஜூலை 27 அன்று லாஹூருக்குத் திரும்பினர்.

பாபா மஸ்துகளைத் தேடிப் பயணித்தபோதெல்லாம், போரின் நிகழ்வுகள் அதி வேகத்தை எட்டிக் கொண்டிருந்தன. 1943, ஜூலை தொடக்கத்தில், ஹிட்லர், கிழக்கத்திய நாடுகளில் தனது மாபெரும் தாக்குதலின் வீழ்ச்சியால் தோல்வியை சந்தித்தது மட்டுமல்லாமல், நேச நாடுகளும் 'சிசிலி'யில் (SICILY) வந்திறங்கின. பாபா மேற்கொண்ட சமீபத்திய மஸ்த் பயணம் நிறைவடைந்த இரண்டு நாட்களுக்குப் பின்னர், 21 ஆண்டுகளாக இத்தாலியின் சர்வாதிகாரியாக இருந்த முசோலினி (MUSSOLINI) ராஜினாமா செய்தார்.

பாபாவையும் பெண்மணிகளையும் திரைப்படங்களுக்கு அழைத்துச் செல்ல, லாஹூரில் ஒரு விக்டோரியா (குதிரை வண்டி) வாடகைக்கு எடுக்கப்பட்டது. ஓட்டுநருக்கு பாபா யார் என்று தெரியாது, ஆனால் அவர் அமைதியாக இருப்பதைப் பார்த்து, ஓட்டுநர் அவர்களுடன் கை சைகைகள் மூலம் பேசிய போது, பாபாவும் கை சைகைகளால் பதிலளித்தார். அவர்கள் அந்த மனிதரிடம் பேசச் சொன்னபோதிலும், அவர் அவ்வாறே தொடர்ந்தார்;

பாபாவும், ஓட்டுநரும் அவரவர் சைகைகளைப் புரிந்து கொண்டனர். சைகையால் உரையாடும் வேளையில், ஓட்டுநரின் உடல் முழுவதும் ஒருவிதமான நடுக்கத்தால் அசைந்தது; பாபா அவருடன் 'பேசுவதை' மிகவும் ரசித்தார்.

பாபா அனைத்து பெண்மணிகளையும் ஜூலை 29 அன்று ஹோமி தேசாய் ஏற்பாடு செய்த பேருந்தில் திரைப்படத்திற்கு அழைத்துச் சென்றார்.

மெஹர் பாபாவின் ஈரான் பயணத்திற்குத் தேவையான பாஸ்போர்ட் மற்றும் விஸாக்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் லாஹூரில் செய்யப்பட்டன, ஆனால் போர்க்காலத்தில் இது குறித்த வேலையை விரைவாகச் செய்வது எளிதல்ல. இந்த நோக்கத்திற்காக, சாஞ்சி மும்பைக்கு அனுப்பப்பட்டார், ஆனால் போரின் நிமித்தம் அனைத்து பயணமும் நடைமுறையில் நிறுத்தப்பட்டதால் அவரும் பாஸ்போர்ட், விஸாக்களைப் பெற முடியவில்லை. ஜூலை 30 அன்று ஏமாற்றமளிக்கும் செய்தியுடன் சாஞ்சி லாஹூர் திரும்பி வந்தார்.

பாபா விரும்பியிருந்தால், சாஞ்சி வெற்றி கண்டிருக்க முடியும், ஆனால் பாபாவின் மனதில் வேறு ஏதோ திட்டங்கள் இருந்தன. 1943, ஆகஸ்ட் 1 ஞாயிற்றுக்கிழமை லாஹூரில் நிலைமையைப் பரிசீலனை செய்ய ஒரு கூட்டம் நடைபெற்றது. ஆதி சீனியர், ஜால் கேரவாலா, டாக்டர் கனி மற்றும் இதர ஆண் மண்டலியும் கலந்து கொண்டனர்; கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முடிவுகள் அவரது அன்பர்களுக்கு ஒரு சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டன, அவற்றில் ஒரு பகுதி பின்வருமாறு:

**இணக்கமற்ற வெளியளவிலான காரணிகளின் தலையீடு மற்றும் நேரங்கள், அசாதாரணமான சூழ்நிலைகளின் காரணமாக, இந்தியா மற்றும் ஈரான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பாஸ்போர்ட் முறைப்படி வழங்க ஒரு கணிசமான காலம்** (குறைந்தது மூன்று மாதங்கள்) **தேவைப்படும்.**

**ஆகையால், ஏற்கனவே திட்டமிட்ட ஆகஸ்ட் மாத ஈரான் பயணத்தை மேற்கொள்வது சாத்தியமாகத் தெரியவில்லை. இதன் விளைவாக, நவம்பர் மாத திட்டங்களும் தானாகவே மாற்றத்திற்கு உட்படுத்தப்படும்.**

**அனைத்து** (உள் மற்றும் வெளியளவிலான) **காரணிகளையும் கருத்தில் கொண்டு, நான் இவ்வாறு ஏற்பாடு செய்துள்ளேன்:**

**ஒன்று: மஷாத் (ஈரான்) பயணம் 1943 டிசம்பர் இறுதிக்குள் நடைபெறவிருப்பது சமீபத்தியதாக இருக்கும்.**

**இரண்டு: என்னுடன், எனக்கு அருகில் ஒரு மாதம் தங்குவதற்கான திட்டம், 1944 ஜனவரி 15 முதல் பிப்ரவரி 15 வரை - நான் பிறந்த தேதி,** (ஸொராஸ்ட்ரியன் நாள்காட்டிப் படி) **மேற்கொள்ளப்படும்.**

**எனது மௌனத்தைக் கலைப்பது தொடர்பாக எப்போதுமே திரும்பத் திரும்பத் தள்ளிவைப்பதற்கான எனது காரணங்களும், நோக்கங்களும்**

**மற்றும் உங்களுக்கு நான் வழங்கும் உண்மையென்று உறுதிப்படுத்தப்படாத தெளிவற்ற வாக்குறுதிகளும், பலவீனமானவர்களில் சந்தேகங்களை உருவாக்க வாய்ப்பாக அமையும் அதேவேளையில், மன வலிமைமிக்க தைரியசாலிகளுக்கு அது சோதனையாக இருக்கும் தருணத்தில், நான் பணிபுரியும் வழிமுறைகளைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும், ஏனெனில் நான் எப்போதுமே எல்லாவற்றையும் இயற்கையான போக்கில், வடிவமைக்க அனுமதிக்கிறேன், வெறுமனே சாதாரணமான முடிவுகளைக் கொண்டுவருவதில் நான் மிக அரிதாகவே எனது மனதைப் பயன்படுத்துகிறேன்.**

**திட்டங்களில் ஏற்பட்ட இந்தப் புதிய மற்றும் சமீபத்திய மாற்றங்கள், உங்களைத் திகைப்படையச் செய்யாது என்று நான் நம்புகிறேன். இந்த பாஸ்போர்ட் சமாச்சாரங்கள் அனைத்தும் பொருளுலகைச் சார்ந்தது ஆகையால் இவை அனைத்தும் அதே வழியில் அடையப்பெற வேண்டியது தவிர வேறொன்றுமில்லை.**

**ஆகவே, நான் கூறியதை நிறைவேற்றுவதில் நீங்கள் முழு நம்பிக்கையுடனும், கடவுளின் வழிகள், தற்போதைக்கு, அறிவிற்கு எட்டாததாகத் தோன்றினாலும், இதயத்தில் தைரியமாக இருக்குமாறு வலியுறுத்தி மீண்டும் கூறுகிறேன்.**

ஆகஸ்ட் 5ஆம் நாள், இந்தச் சுற்றறிக்கை லாஹூரிலிருந்து சம்பந்தப்பட்ட அன்பர்களுக்கு அனுப்பப்பட்டது.

1943, ஆகஸ்ட் 2 திங்கள் மாலை, பாபா லாஹூரிலிருந்து மும்பை - பெஷாவர் (PESHAWAR) விரைவு ரயிலில் 'தக்ஸிலா'விற்கு (TAXILA) டாக்டர் கனி மற்றும் பைதூலுடன் புறப்பட்டார். ஜால் கேரவாலா அவர்களுடன் பெஷாவரில் 4ஆம் தேதி வந்திணையுமாறு அறிவுறுத்தப்பட்டார். பாபா மறுநாள் எல்லையைத் தாண்டி, 6ஆம் தேதி இரவு லாஹூருக்குத் திரும்பும் வழியில் பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்.

பெஷாவரில், பாபா மஸ்த் 'அஷாக் பாபா' (ASHAQ BABA) என்பவரைத் தொடர்பு கொண்டபோது, அவருடனான முந்தைய தொடர்புக்குப் பின்னர் இப்போது அவர் ஒரு மஜ்ஜூப் நிலையை அடைந்தவர் போலத் தோற்றமளித்தார். மஸ்த் கட்டுப்படுத்த முடியாத சீரற்ற நிலையில் அவருடைய சொந்த அசுத்தத்தில் அசையாமல் குடிசையில் அமர்ந்திருந்தார்.

பெஷாவரில் 'மிஸ்கின் ஷா மலங்' (MISKIN SHAH MALANG) என்று அழைக்கப்பட்ட இறைவனைத் தேடும் ஒரு நபரை, பாபா தொடர்பு கொண்டார்; ஒரு முஸ்லீம் சன்னதியில் தங்கியிருந்து, அவர் இரவும் பகலும் ஒரு புனித நெருப்பை (துனி) வளர்த்து வந்தார்.

பெஷாவரில், பாபா, ஒரு கல்லறையில் அமைந்த குடிசையில் முற்றிலும் நிர்வாணமாக வாழ்ந்த 'அஷாக் ஷா' (ASHAQ SHAH) என்ற ஏறக்குறைய 'முரட்டுத்தனமான ஜலாலி' மஸ்தைத் தொடர்பு கொண்டார். இந்த மஸ்த் ஒரு

குழலால் புகைபிடித்த வண்ணம், அவரை அணுகும் ஒவ்வொருவரையும் வசைமொழியால் அவதூறாகத் திட்டினார். அப்போது வயதானவராகத் தோற்றமளித்தாலும் அச்சுறுத்தும் வகையில் ஒரு பெரிய கத்தியைக் கையில் ஏந்தி சுழற்றிக் கொண்டிருந்தார். எவரேனும் அவரருகில் வரும்போதெல்லாம், அவர் ஒரு மரத்துண்டைக் கத்தியால் வெட்டுவது வழக்கம். பாபா இரண்டு முறை அவரை அணுகினார், ஆனால் அவருடைய சீற்றம் நிறைந்த தன்மையால் திருப்திகரமான தொடர்பை மேற்கொள்ள முடியவில்லை.

பெஷாவரில் மற்றுமொரு விசித்திரமான, ஜலாலி வகையைச் சார்ந்த மஸ்த் ‘கயாம் பாபா’ (QAYM BABA) ஒரு சிறிய அறையில் வசித்து வந்தார்; அங்கு அவர் நூற்றுக்கணக்கான சிறிய தகர கொள்கலன்களைச் சேர்த்து வைத்திருந்தார். வெப்பமான நாட்களில் கூட, அவர் எப்பொழுதும் தனது குடிசைக்குள் நெருப்பை எரியவிட்டிருந்தார். அவர், நெருப்பின் முன்னால் அமர்ந்துகொண்டு, தனது தற்போதைய உரையாடலுடன் தொடர்புபடுத்தும் வகையில், குறிப்புகளைப் பக்கம் பக்கமாக தனது கையால் எழுதிக்கொண்டிருந்தார்; இது தற்போது அறியப்படாத காரணங்களுக்காக, கிட்டத்தட்ட குற்றம் மற்றும் தண்டனைகள் சம்பந்தப்பட்டதாக இருந்தது. கயாம் பாபா கத்திக்கொண்டே இருந்தார், “முறைகேடான அந்த சிறுவனுக்கு இரண்டு ஆண்டுகள் தண்டனை கொடுங்கள்!” அல்லது “50 ரூபாய் அபராதம் விதிக்கவும்!” அல்லது “அந்தக் கொலைகாரத் திருடனைத் தூக்கிலிடுங்கள்” “இல்லை! இல்லை! அவனை விட்டுவிடுங்கள்! அவன் நிரபராதி!” அவருடனான பாபாவின் தொடர்பு சிறப்பாக இருந்தது.

இந்தக் குறிப்பிடத்தக்க மஸ்த் பயணத்திற்குப் பிறகு, பாபா ஒரு வாரத்தில், 1943, ஆகஸ்ட் 12 அன்று பஞ்ஜாப் மெயிலில், சாஞ்சி, டாக்டர் கனி, ஜால் கேரவாலா ஆகியோருடன் புறப்பட்டு மறுநாள் காலையில் டெல்லிக்கு வந்து, கேக்கி தேசாயின் குடும்பத்தினரை சந்தித்தார்; அவர்கள் பாபாவின் அறிவுறுத்தலின்படி, ‘தன்ஸக்’ (DHANSAK) உணவை எடுத்து வந்தனர். பயணத்தைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 14ஆம் தேதி மாலை பாபா மீண்டும் மெஹராபாத்திற்கு வந்து, அங்கு அவர் மண்டலியின் செயல்பாடுகளைக் கேட்டறிந்து, தத்தமது கடமைகளைச் செய்வது குறித்து ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அடுத்த நாள், பெண்டு, டாக்டர் கனி, ஜால் கேரவாலா ஆகியோருடன் ஸரோஷ், பாபாவை, பூனாவிற்கு அழைத்துச் சென்றார். அவர்கள் பிந்த்ரா ஹவுஸில் தங்கியிருந்தனர், பாபா, ஜெஸவாலா குடும்பத்தினரையும், அவரது சகோதரர்களான ஜால்பாய், பெஹராம், பெஹராமின் மனைவி பெரின் மற்றும் அவர்களது குழந்தைகளையும் சந்தித்தார்.

இதற்கிடையில், மும்பையில், நௌரோஜி தாதாசாஞ்சியின் பதினாறு வயது மகன் தெஹம்தன் (TEHEMTAN) ஜூலை நடுப்பகுதியில் கடுமையான

குடற்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆரம்பத்தில் அவனது நிலை தீவிரமாகத் தெரியவில்லை, மருந்துகள் ஓரளவு வேலை செய்தன. பாபாவின் விருப்பத்திற்கிணங்க செவிலியர் பணியில் பயிற்சி பெற்ற அவரது சகோதரி அர்னவாஸ் அவரை கவனித்துக்கொண்டார். தெஹம்தன் தனது மருந்தை அருந்த விரும்பவில்லை என்றாலும், "பாபா, நீ அதை எடுத்துக்கொள்வதை விரும்புகிறார்" என்று அர்னவாஸ் அவனிடம் கூறிய பின்னர், அவன் அதைக் கடமையாக விழுங்கினான். அர்னவாஸ் பாபாவிற்கு இவ்வாறு எழுதினார், "தெஹம்தனின் உடல்நிலை சரியில்லாமல், அவன் உங்களையே முழு நேரமும் நினைத்துக் கொண்டிருக்கிறான். அவன் உங்கள் ஆரத்தி பாடலைத் தனக்குத்தானே பாடுகிறான், மேலும் உங்கள் இனிமையான பெயர் அவனது நாவின் நுனியில் எப்போதும் ஒலித்த வண்ணம் உள்ளது."

ஜூலை 30 அன்று லாஹூரில் சாஞ்சி, பாபாவை சந்தித்தபோது, பாபா அவரிடம் கூறினார், "**நான் தெஹம்தனை என்னிடம் அழைக்கப் போகிறேன். கவலைப்பட வேண்டாம். அவனது சொந்த நலனுக்காக, அவன் இன்னும் தூய்மையாகவும், உலகின் மாசுக்களால் களங்கப்படாமலும் இருக்கும் இந்தத் தருணத்தில், நித்திய ஜீவனுக்கு அழைக்கப்பட வேண்டும்**"

1927ஆம் ஆண்டில், தெஹம்தன் நான்கு மாத குழந்தையாக இருந்தபோது, பாபாவுடனான முதல் சந்திப்பிலிருந்து அவன் எப்பொழுதும் பாபாவை மிகவும் நேசித்தான். ஆகஸ்ட் 3 மதியம், தெஹம்தன் தனது இறுதி மூச்சை விட்டான். அவன் பச்சாமாய் மற்றும் நௌரோஜியின் மூத்த மகன், நிச்சயமாக, அவனது எதிர்பாராத மறைவு குறித்து அவர்கள் மிகவும் வருந்தினர். அவர்களை ஆறுதல்படுத்திய பாபாவை சந்திக்க பூனா வந்தவர்கள் கண்ணீருடன் அவரிடம் கூறினர், "தெஹம்தன் ஒரு திறமையான பொறியியலாளர் அல்லது மருத்துவராக இருப்பான் என்று ஒரு ஜோதிடர் எங்களிடம் கூறியிருந்தார்."

அதற்கு பாபா, "**ஆம், அவன் ஒரு நல்ல பொறியியலாளராக இருந்திருப்பார், ஆனால் அவனது வாழ்க்கை மிகவும் பரிதாபமாக இருந்திருக்கும். எனவே நான் அவன் வாழும் காலத்தைக் குறைத்து அவனை அத்தகைய பரிதாப நிலையிலிருந்து காப்பாற்றினேன். ஆனால் இது அவன் மீதான எனது கருணை என்பதை நீங்கள் உணரவில்லை.**"

அதன் பின்னர் உடனடியாக, பாபா மெஹராபாத் திரும்பினார். 18ஆம் தேதி மெஹராபாத்திற்கு வருகை தந்த மானேக் மேத்தாவிற்கு (MANEK MEHTA), பாபா ஒரு நேரடி பேட்டியை வழங்கினார்.

1943, ஆகஸ்ட் 17 அன்று, பாபா, ஆதி சீனியருடன் அரன்காவ்ம் இராணுவ சினிமா கொட்டகையில் ஒரு திரைப்படத்திற்குச் சென்றார். அவர், அடுத்த நாள் பிற்பகல் 4:00 மணிக்கு மீண்டும் அவருடன் ஐந்து பெண்மணிகளை அழைத்துச் சென்றார் - குல்மாய் மற்றும் ஸவக், சிது, சகன்,

ஜங்க்ளே இவர்களின் மனைவிமார். பின்பு பாபா, கன்டோன்மென்டில் (CANTONMENT) அமைந்த ஸரோஷின் இல்லம் 'விலூ வில்லா'விற்கும், தீன்ஷா மற்றும் அருகிலமைந்த ஸூனாவின் இல்லத்திற்கும் விஜயம் செய்தார். தொடர்ந்து பாபா, ஸெயிலர் மாமாவின் இல்லத்திற்கும் குஷ்ரு குவாட்டர்ஸுக்கும் சென்று, கான்ஸாஹேபை சந்தித்துப் பேசினார்.

மெஹர் பாபா ஆகஸ்ட் 19 அன்று லாஹூர் செல்லும் பஞ்ஜாப் மெயிலில் சாஞ்சியுடன் மன்மாடிலிருந்து புறப்பட்டு இரண்டு நாட்களுக்குப் பிறகு வந்து சேர்ந்தார்.

லாஹூர் காலநிலை இப்போது மிகவும் வெப்பமாக இருந்ததால், அனைத்து மண்டலியும் பாதிக்கப்பட்டனர். பலவீனமடைந்த விஷ்ணு, காளேமாமா இருவரும் ஜுரத்தால் அவதியுற்றனர். டாக்டர் கனி இடைவிடாத வெப்பத்தைத் தாங்க முடியாமல் லோனவாலாவிற்குத் திரும்பிச் செல்ல அனுமதி கோரினார்; பாபாவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 22 அன்று, டாக்டர் நீலு, அஹமதுநகரில் தங்கியிருந்த ஆதி சீனியருக்கு நகைச்சுவையாக இதை எழுதினார்: "இந்த இடம் 'டான்டே இன்ஃபெர்னோ' (DANTE'S INFERNO - இத்தாலிய மேதாவி டான்டே என்பவரின் நரகத்தைப் பற்றிய விளக்க உரை) போன்றது! பாபா இந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்தார் என்பது எவருக்கும் தெரியாது... இதைப் பற்றிய எனது கருத்து என்னவெனில், இன்னும் எஞ்சியிருக்கும் எங்கள் பாவங்கள் (மனப்படிவங்கள்) இங்கேயே எரிக்கப்பட வேண்டும்! அதுதான் ஒரே காரணம் என்று நான் நினைக்கிறேன்..."

1943 செப்டம்பர் 2 அன்று இரவு, ஒருவேளை வெப்பத்திலிருந்து விடுபடும் எண்ணத்தில் பாபா, மெஹரா, மணி, மெஹரு, ரானோ ஆகிய சில பெண்மணிகளுடன் ரயிலில் காஷ்மீர் (KASHMIR), ஸ்ரீநகருக்குப் (SRINAGAR) புறப்பட்டார்; ஆண் மண்டலியில் சாஞ்சி, காக்கா, பைதூல் ஆகியோர் உடன் சென்றனர். சாஞ்சியின் உதவியுடன், தவ்லத் சிங் 'தால் ஏரி'க்கு (DAL LAKE) எதிரே அமைந்த ஸாம் ஹோட்டலில் (SAM HOTEL) தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். 4ஆம் தேதி ஸ்ரீநகருக்கு வந்த பாபா, 6 அன்று மாலை முதல் தனது மஸ்த் தொடர்புகளைத் தொடங்கினார். அவர் தினமும் காக்கா, பைதூல் இருவருடன் வெளியே சென்று, அங்கு சில வெற்றிகரமான தொடர்புகளை நிறுவினார்:

'நப் ஸாஹேப்' (NAB SAHEB) என்றழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்த், கிட்டத்தட்ட 60 வயதான பெரியவர், இன்னும் தனது வயதான தாயார் மற்றும் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார். பாபா அவரை சந்தித்தபோது, இருவரும் தொப்பிகளைப் பரிமாறிக் கொண்டனர்.

'அமீர் ஸாஹேப் மாத்து' (AMIR SAHEB MATTU) எனும் மஸ்த், ஏறக்குறைய 125 வயதுக்கு மேற்பட்டவர் என்று நம்பப்படுகிறது. அவர் வழக்கமாக எல்லா

பருவகாலங்களிலும் நிர்வாணமாக, ஒரு மரத்தின் கீழே கட்டப்பட்ட சிறிய குடிசையில் வாழ்ந்து வந்தார்; எந்நேரமும் பன்னிரண்டு நாய்கள் அடங்கிய ஒரு குழுவால் சூழப்பட்டார்; வழக்கமாக அவர் தனது உணவை உண்ணுவதற்கு முன்பு நாய்களுக்கு உணவளித்தார்.

'ஹர்தார் நாம்தார்' (HARTHAR NAMDAR) என்ற மஸ்த் மிகவும் அசாதாரணமானவர், ஏனெனில் அவர் ஸலிக் மற்றும் மஜ்ஜூப் நிலைகளால் இரண்டறக் கலந்தவர். மிகவும் மேம்பட்ட மஸ்த், 105 வயதையும் தாண்டியவர்; அவர் வழக்கமாக நிர்வாண நிலையில், ஒரு மரத்தின் கீழ் தனியாக அமர்ந்திருந்தார்.

மெஹர் பாபா ஏற்கனவே தொடர்பு கொண்ட வயதான, நன்கு அறியப்பட்ட மஸ்த் 'ரஹ்மின் ஸாஹேப்' (RAHMIN SAHEB), துலமுல் (TULAMUL) கிராமத்தின் பாதைகள் மற்றும் புல்வெளிகளைச் சுற்றி அலைந்து திரிந்தார்.

'சௌத்ரி லாட்' (CHOWDHARY LATH) என்ற ஓர் உயர்நிலை ஜலாலி மஸ்த், அவர் பல அடுக்கு ஆடைகளை, வெப்பமான காலநிலையிலும் அணிந்து வந்தார். அவரது தவிர்க்க முடியாத தன்மை காரணமாக அவரைத் தொடர்பு கொள்வது மிகவும் கடினம், மேலும் பைதூல் கூட அவரை அணுகிய வேளையில் முதுகில் அறை வாங்கியது உண்டு. அவருக்கு அருகில் வரும் எந்தவொரு துணிச்சலான பெண்மணியையும் அவர் அடித்ததாகவும் கூறப்பட்டது. அவர் ஒரு கடினமான, சீற்றம் மிக்க மஸ்த், ஆனால் பாபாவின் கூற்றுப்படி அவர் ஒரு சிறப்பான மஸ்த்.

இதற்கிடையில் மணி, மலேரியா ஜுரத்தால் பாதிக்கப்பட்டார். சில நாட்களில் ஜுரம் அதிகமாகவும், சில நாட்களில் சாதாரணமாகவும் இருந்தது. ஜுரம் ஏற்பட்ட நாட்களில், அவர் சூப் (SOUP) மட்டுமே பருகினார், இதர நாட்களில் அவருடைய பசி வழக்கம்போல் இருந்தது. கிழக்கத்திய பெண்மணிகள் தனிமையைக் கடைப்பிடித்ததால், எந்த ஆண்மகனும் நேரடியாகப் பேசவும், பார்க்கவும் முடியாத நிலையில், என்ன தயார் செய்ய வேண்டும் என்று ஹோட்டல் உரிமையாளருக்கு ரானோ தெரிவித்து வந்தார். "ஒரு நாள் சூப் மட்டும்... அடுத்த நாள் முழு விருந்து?" இப்படி நினைத்து, உணவில் ஏற்பட்ட மாற்றத்தில் ஹோட்டல் ஊழியர்கள் குழப்பமடைந்தனர்.

ஒரு வாரம் கடந்தது; செப்டம்பர் 9 அன்று பாபா, ஸ்ரீநகரிலிருந்து பெண்மணிகள், பைதூல், சாஞ்சி ஆகியோருடன் மாலை 7:00 மணிக்கு ராவல்பிண்டி வந்தடைந்து, தேநீர் அருந்திய பின்னர், அவர்கள் அதே இரவில் பெஷாவர் விரைவு ரயிலில் மறுநாள் காலை 5:30 மணிக்கு லாஹூருக்கு வந்தனர்.

அடுத்த நாள், 1943, செப்டம்பர் 11 மாலை பாபா, பைதூல், சாஞ்சி மூவரும் லாஹூரிலிருந்து புறப்பட்டு ராவல்பிண்டிக்கு வந்தனர். பாபாவும் பைதூலும் 'ஜாஸ்கர்' (JASGIRAN) மலையில் மேற்கொள்ளவிருந்த நடை பயணத்திற்கு உகந்ததான ஒரு ஜோடி காலணிகளை வாங்கச் சென்றனர்.

சாஞ்சி, ரயில் நிலையத்தில் சாமான்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீநகரிலிருந்து காக்காவும் ராவல்பிண்டிக்கு ஒரு மஸ்தை அழைத்து வந்தார்; சாஞ்சி அந்த மஸ்தையும் கவனிக்க வேண்டியதாயிற்று. பின்பு பைதூல், காக்கா இருவருடன் பாபா நள்ளிரவு பயணிகள் ரயிலில் (இரண்டு மணி நேரம் தாமதமாக) தக்ஸிலா வழியாக ஹரிபூருக்குப் (HARIPUR) புறப்பட்டார்

ஹரிபூரிலிருந்து 20 மைல் தொலைவில், கடல் மட்டத்திலிருந்து 2,500 அடி உயரத்தில் இருந்த 'ஜாஸ்கர்' என்ற சிறிய கிராமத்தில் ஒரு மேல்நிலை மஸ்தைத் தொடர்பு கொள்ள பாபா விரும்பினார். அதைச் சென்றடைய ஒரே வழி கழுதை, குதிரைவண்டி அல்லது கற்பாதை வழியாகக் காலால் நடந்து செல்வது. இந்தப் பயணம் மெஹர் பாபா மேற்கொண்ட அனைத்து மஸ்த் பயணங்களிலும் மிகவும் அபாயகரமான மற்றும் மறக்கமுடியாத ஒன்றாகும்.

12ஆம் தேதி, பாபா, காக்கா, பைதூல் ஆகியோர் 20 மைல்களுக்கு மேல் நடந்து, கடுமையான வெப்பத்தில் கதகதப்பான பாறையின் செங்குத்தான மலைகளில் தாவித் தாவி ஏறிச் சென்றனர்; கீழே, மைல் தூரத்திற்கு நிழலை வழங்க பெயருக்கு ஒரு மரம் கூட இல்லாமல் இருந்தது. ஆழமான பள்ளத்தாக்குகளையும், விரைந்தோடும் நீரோடைகளையும் கடந்து பார்க்கும் மலைகளின் ஓரங்களில் ஆபத்தான, கரடுமுரடான செங்குத்தான பாதைகளை அவர்கள் கடந்து சென்றனர். உண்ணவோ கைகளில் மிளகாய், வெங்காயம் மற்றும் கடினமான, பழைய ரொட்டியைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆரம்ப கட்டங்களில் சவாரி செய்ய அவர்களுக்கு வழங்கப்பட்ட குதிரைவண்டி, கோணிக் குறுகிய பாதை வழியாகப் பயன்படுத்த முடியவில்லை. பாபாவின் தொடைகளில் புண் மற்றும் கீறல்களாக இருந்ததால், குதிரைவண்டி சவாரியைக் கைவிட வேண்டியதாயிற்று; இது சாதாரண நடை பயணத்தைக் கூட மிகவும் கடினமாக்கியது.

ஜாஸ்கர் கிராமத்தைச் சென்றடைந்த பாபா மிகவும் உயர்ந்த நிலையில் இருந்த மஸ்தைத் தொடர்பு கொள்ள முயன்றார்; அவர் ஆறாவது மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையே நிலைகொண்டிருப்பதாக வெளிப்படுத்தினார். இந்த மகத்தான மஸ்துக்கு 'நங்கா பாபா' என்று பெயர். 25 ஆண்டுகளாக, அவர் முற்றிலும் நிர்வாணமாக, ஒரு மலையடிவாரத்தில் ஒரே இடத்தில் சப்பணக்காலிட்டு அமர்ந்து - கிட்டத்தட்ட உயிருள்ள புனித சிலை அல்லது கடவுளைப் போல் - இயற்கையின் அனைத்து கூறுகளையும், சூரியன், மழை மற்றும் பனி எதையும் கண்டுகொள்ளாமல் அமர்ந்திருந்தார். துறவியின் விசித்திரமான உணவு, பாபா, பைதூல் மற்றும் காக்கா அவர் உண்ணுவதைப் பார்த்திருக்காவிடில், நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்கும். அவர் உலர்ந்த ரொட்டியை, தண்ணீரில் நனைத்து, மரம் மற்றும் கல் தூள்களால் கேக் வடிவில் செய்யப்பட்ட துண்டுகளுடன் உண்டார்; அவரது கண்காணிப்பாளரால் அந்தக் கேக் தயார் செய்யப்பட்டதைப் பார்க்கவும் முடிந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில், அந்தத் துறவி பாபாவைச் சுட்டிக்காட்டி, அங்கிருந்த சிறிய கூட்டத்தினரிடம், "அவர் என் மூத்த சகோதரர்... அவர் இந்த

முழு உலகத்தையும் சரிசெய்து பாதுகாக்கிறார்!" என்றார். பாபா மூன்று மணி நேரம் மஸ்தின் அருகில் அமர்ந்திருந்தும், அவரைத் தனியாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை, ஏனெனில் நங்கா பாபா பகலில் பக்தர்களால் சூழப்பட்டிருந்தார், இரவில் அவரது பாதுகாப்பாளர் பக்கத்தில் தூங்கினார். இந்த வகையான தொடர்புகளில் பாபா மகிழ்ச்சியடையவில்லை என்றும், துறவியுடன் தனியாக இருக்க விரும்புவதையும் வெளிப்படுத்தினார். ஏமாற்றமடைந்த பாபா, மண்டலியை மீண்டும் ஹரிபூருக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து 13ஆம் நாள் ராவல்பிண்டிக்குத் திரும்பி வந்து, பஞ்ஜாப் ஹோட்டலில் தங்கினார்.

மறுநாள் இரவு சாஞ்சி அவர்களை ராவல்பிண்டியில் சந்தித்தார். ஆனால் அன்றிரவு, அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அருகாமையில் ஒலிபெருக்கி ஒன்று எழுப்பிய ஓசை, பாபாவை ஓய்வெடுக்க விடாமல் தொந்தரவு செய்தது, பாபா அதைப் பற்றி மீண்டும் மீண்டும் அரை மணி நேரத்திற்கும் மேலாக, புகார் செய்தார். அவர்கள் எப்படியாயினும், செப்டம்பர் 15 அன்று அதிகாலை 3:00 மணிக்கு, 'குஜ்ரன்வாலா'விற்கு (GUJRANWALA) ரயிலில் புறப்பட்டனர், அங்கு பாபா மூன்று மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். 'மஸ்தான் ரெஹமத்துல்லா' (MASTAN REHMATULLAH) மிகவும் அசுத்தமான மஸ்த், அவர் தங்குமிடம் ஒரு கேரேஜ்; ரயில் நிலையத்திற்கு அருகிலமைந்த ஒரு குடிசையில் வாழ்ந்த 'நங்கா ஷா' (NANGA SHAH - நிர்வாண ராஜா) ஒரு சிறப்பான மஸ்த்.

முஹமதிய ஆலயமான 'குட்டே ஷா'வில் (KUDDE SHAH) வாழ்ந்து வந்த 'ஷேக் மலங் பாபா' (SHEIK MALANG) என்பவர் ஒரு குறிப்பிடத்தக்க மேல்நிலை மஸ்த் ஆவார். ஷேக் மலங் ஒரு மென்மையான ஜமாலி வகையைச் சார்ந்தவர், ஒரு காலத்தில் கீழ் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணிபுரிந்தார். தொடர்ந்து புகைப்பிடிக்கும் பழக்கத்துடன், இனிமையான மனநிலை படைத்த இந்த புனிதமான மஸ்தை பாபா, அஹமதுநகரின் 'அலி ஷா'வுடன் ஒப்பிட்டார்.

குஜ்ரன்வாலாவிலிருந்து, சாஞ்சி, பைதூல், காக்கா ஆகியோருடன் பயணம் செய்து பாபா அமிர்தசரஸ் (AMRITSAR) வந்ததும், ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார். அன்றிரவு ரயில்வே நடைமேடையில் ஓய்வெடுத்து, காலை 5:30 மணிக்கு 16ஆம் தேதி, மீண்டும் லாஹூருக்குச் சென்று, அங்கும் பாபா, அவரது மஸ்த் பணியைத் தொடர்ந்தார்.

1943 செப்டம்பர் 19 ஞாயிற்றுக்கிழமை பாபா, திரவ ஆகாரம், குறிப்பாக நீருடன் எலுமிச்சை ரசம் அருந்தி உபவாசத்தைத் தொடங்கி, அதை ஏழு நாட்கள் தொடர்ந்து, பின்னர் 26ஆம் நாள் நிறைவு செய்தார். இந்த உபவாசத்தின்போது, 21ஆம் நாள், எட்டு மஸ்துகள் பாபாவின் பங்களாவிற்கு அழைத்துவரப்பட்டனர்; பாபா இந்த மஸ்துகளை நீராட்டி, ஆடை அணிவித்து, உணவூட்டினார். ஒரு சிறப்பான மஸ்தைத் தவிர பிற அனைவரும் ஒரே

நாளில் திருப்பி அனுப்பப்பட்டனர். பாபா அந்த மஸ்தை இரண்டு அல்லது மூன்று நாட்கள் தன்னுடன் வைத்திருந்தார்.

காலம் நமக்கு நினைவூட்டுவது போல: “பாபா அவதார புருஷர் என்பதால், அவர் அடிக்கடி உபவாசம் கடைப்பிடிப்பது அவரை பாதிக்காமலில்லை. ஆறு நாட்கள் நீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்தது ஒரு சாதாரண மனிதனைப் போலவே அவரையும் பாதித்தது. உபவாசம் இருக்கும் வேளையிலும், பாபா, அவரது வேகத்தை குறைக்கவோ அல்லது தனது வழக்கமான மஸ்த் பயணங்களைத் தவிர்க்கவோ இல்லை. பாபாவின் சகிக்கும் ஆற்றல் உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. இப்படி நீண்ட நெடிய காலம் உண்ணாவிரதம் இருப்பவர்கள் இத்தகைய ஆற்றலுடன் இருப்பது எவ்வளவு கடினம் என்பதற்கு அவர்களே சான்று.”

செப்டம்பர் 28 அன்று, பைதூல், சாஞ்சி ஆகியோருடன் பாபா, ‘குல் மொகல்’ (KUL MOKAL) கிராமத்திற்குத் திரும்பிச் சென்று, மரியாதைக்குரிய மஸ்த் ‘ஸையித் அஹமத் ஷா’வை (SAIYID AHMAD SHAH) மீண்டும் தொடர்பு கொண்டார். இந்தத் தொடர்புக்குப் பிறகு, பாபாவிற்குப் பரிச்சயம் ஆகாத, விருந்தோம்பும் நற்குணம் படைத்த சீக்கிய ஜமீன்தார் ஒருவர், பாபாவிற்கும் மண்டலிக்கும் ரயில்வே நடை மேடையில் மிகவும் மெச்சத்தக்க வகையில் உயர்தரமான உணவை வழங்கினார். 30ஆம் தேதி காலை, லாஹூரின் புறநகர்ப் பகுதியான ‘பாக்பன்புரா’ (BAGHBANPURA) என்ற இடத்தில் ‘நவாப் அலி ஷா’வை (NAWAB ALI SHAH), பாபா தொடர்பு கொண்டார். சில நாட்களுக்கு முன்பு, பைதூல் இந்த மஸ்தைக் கண்டுபிடித்த அந்நேரத்தில் மஸ்த் அவரிடம், “நான் அலிகருக்குச் செல்ல விரும்புகிறேன், ஆனால் சாலை எனக்காக மூடப்பட்டுள்ளது… லாஹூரில் உலகப் புகழ்பெற்ற மருத்துவர் ஒருவர் இருக்கிறார்; நான் அவரது அனுமதியைக் கோருவேன், அவர் அதைக் கொடுத்தால், நான் செல்வேன்” என்றதும் பைதூல் மருத்துவரின் பெயரைக் கேட்டார். மஸ்த் பதிலளித்தார், “மௌனி, நீங்கள் அவரிடமிருந்து வந்திருக்கிறீர்கள், எனவே, நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.”



மெஹர் பாபா ஏழைகளின் கால்களைக் கழுவுதல்
(MEHER BABA WASHING THE FEET OF THE POOR)

# போர்க்கால பயணம் - கொல்கத்தா, லக்னோ

**(Wartime Travel –Kolkata, Lucknow)**

இந்தக் காலகட்டத்தில், கொல்கத்தா, லக்னோ மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் கடும் பஞ்சம் நிலவுவதாக செய்தித்தாள்களில் ஏராளமான தகவல்கள் வந்த வண்ணம் இருந்தன. செப்டம்பர் 26 அன்று, பாபா தனது சமீபத்திய உபவாசத்தை நிறைவுசெய்த அந்த நாளில், அவர் ஒரு மாதத்திற்கு கொல்கத்தாவிற்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு உணவளிக்க விரும்புவதாகவும், உணவு, உடை போன்றவற்றை அவராகவே விநியோகிக்க விரும்புவதாக, சாஞ்சியிடம் ரகசியமாகத் தெரிவித்திருந்தார்.

1943, அக்டோபர் 1 அன்று, பாபா மேலும் விளக்கினார்:

**என்னுடைய இந்தப் பணி, பிற மக்கள் செய்யும் பணிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆன்மீகக் காரணங்களுக்காக, உணவை நானே பரிமாற விரும்புகிறேன். இலவச உணவை வழங்கும் பணியில் நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன, ஆனால் அவற்றின் மூலம் நான் செயல்பட விரும்பவில்லை. நான் மக்களுக்கு உணவளிப்பதன் அர்த்தம் முற்றிலும் மாறானது. அது பசியால் வாடும் மக்களின் வயிற்றை நிரப்புவதல்ல, ஆன்மீக ரீதியில் மனிதகுலத்திற்கு உணவளிப்பதாகும்.**

**எனது பணி வெளியளவில் செய்யப்படும் நிவாரணம் மற்றும் உதவிக்காக மட்டுமல்லாமல், எப்போதும் ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. துன்பம் ஏற்படும் எல்லா இடங்களிலும் மக்களுக்கு உணவளிப்பதற்கான நிவாரணப் பணிகள், குறைந்த அல்லது அதிக அளவில் நிகழ்கின்றன. ஆனால் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில், வெகுஜன மக்கள் வீதிகளில் எண்ணற்ற அளவில் மாண்டு மடிவது ஓர் அசாதாரணமான சூழ்நிலையை உருவாக்குகிறது. கடுமையான மற்றும் உண்மையான தேவை உள்ளவர்களுக்காக, தனிப்பட்ட முறையில் உணவு, உடை போன்றவற்றை வழங்கும் எனது பணி, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இருமடங்கு முக்கியத்துவம் மற்றும் பயனளிப்பதாக இருக்கும்.**

**தற்போதைய உலக நெருக்கடி, இடர்பாடுகள் இவை அனைத்தும் மக்களிடையே, உலகப் பொருட்கள் எவ்வளவுதான் கவர்ச்சிகரமானதாக அல்லது பிரியமானதாக இருந்தாலும், மாயா மீதான வெறுப்பை உருவாக்கும். பெற்றோர்கள் தங்கள் சொந்தக் குழந்தைகளை விட்டுக்கொடுப்பது, கணவன்மார்கள் தங்கள் மனைவிகளை விட்டு விலகுவது இது போன்ற அனைத்துமே மாயாவிலிருந்து விலகிச் செல்லும் உணர்வைக் குறிக்கின்றன. இத்தகைய நிலைமைகளின் கீழ் நான்**

**பணிபுரிவது, எனது நேரடித் தொடர்பில் வரும் நபர்களுக்கு மட்டுமல்லாமல், அவர்கள் மூலமாக அது போன்ற சூழல்களை சந்திப்பவர்களுக்கும் பொதுவாக மனிதகுலத்திற்கும், மிகவும் முக்கியமானதும் நன்மை பயப்பதும் ஆகும்.**

**இல்லையெனில், ஏழைகளுக்கு உணவளிக்க ரூ 10,000 செலவழிப்பதில் என்ன பயன்? நாம் அதைச் செய்ய முடியாவிட்டாலும், ஆயிரக்கணக்கானோர் துயரத்தில் இருக்கும்போது, லட்சக்கணக்கான பணம் செலவு செய்தாலும், அது பொருளளவில் மிகக் குறைவான விளைவையே ஏற்படுத்தும். ஆனால் விரக்தியடையச் செய்யும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், எனது மண்டலியால் தேர்ந்தெடுத்து அழைத்து வரப்படும் உண்மையான ஏழை, எளிய மக்களுக்கு, நானாகவே எனது கைகளால் வழங்கும் இந்த உதவி ஒரு பெரிய முக்கியத்துவத்தையும் தொலைநோக்கு விளைவையும் கொண்டுவரும்.**

பாபா மேலும் சுட்டிக்காட்டினார், "**நான் பேசத் தொடங்கிய பின்னர், இந்தப் பணி மிக்க பலனைத் தரும்.**"

வழக்கம் போல, பாபா, அங்கு இருப்பதை மக்கள் அறிந்து, தெரிந்து கொள்வதை அவர் விரும்பவில்லை. 'அவரது அடையாளத்தை ரகசியமாக வைத்திருக்க வேண்டும், வெளிப்படுத்த வேண்டாம்' என்று அவர் உறுதியாக மீண்டும் கூறினார். கொல்கத்தாவில் இது கடினமாக இருந்தது ஏனெனில், அங்கு, டாக்டர் தேஷ்முக் 1941ஆம் ஆண்டில் பல உரைகளை நிகழ்த்தினார், மேலும் பாபாவின் புகைப்படங்கள் பல செய்தித்தாள்களில் பரவலாக அச்சிடப்பட்டிருந்தன. பாபா வகுத்த மற்றுமொரு நிபந்தனை என்னவெனில், மக்கள் அவரைப் பற்றி அறிந்துகொள்வதைத் தவிர்க்கும் நோக்கத்தில், பாபா தங்கியிருந்த இடத்திலிருந்து சற்று தொலைவில், ஒரு தனி வீட்டில் உணவளிக்க வேண்டும் என்பதாகும். இதையெல்லாம் ஏற்பாடு செய்ய, பாபா, அக்டோபர் 4 அன்று சாஞ்சி, பாபாதாஸ் இருவரையும் கொல்கத்தாவிற்கு அனுப்பி வைத்தார். 6ஆம் நாள் பூனாவிலிருந்து புறப்பட்டு அவர்களுடன் கொல்கத்தாவில் இணையுமாறு எரச்சிற்கு அறிவுறுத்தப்பட்டது.

இது ஒரு வகையில் 'ஏழை எளியவர்களுக்கு உணவளிப்பது' அல்ல. யாசிக்க முடியாத, ஆனால் சூழ்நிலைகளால் முற்றிலும் உதவியற்றவர்களாகவும், இப்போது ஆதரவற்றவர்களான நிலைக்குத் தள்ளப்பட்ட அந்தக் கீழ்-நடுத்தர மக்களைத் தொடர்பு கொள்ள பாபா விரும்பினார். பாபா திட்டமிட்டபடி, எரச், காக்கா, பைதூல் மற்றும் பாபாதாஸ் ஒவ்வொரு நாளும் 50 நடுத்தர வர்க்க நபர்களைக் கண்டுபிடித்து அழைத்து வருவதோடு, தேவையான பாத்திர பண்டங்கள் மற்றும் உணவுகளையும் ஏற்பாடு செய்தனர்.

அமைதியான இடத்தில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுக்க, சாஞ்சி தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார், ஆனால் குறுகிய கால வாடகைக்கு, ஒரு மாதத்திற்கு மட்டுமே கிடைக்கக்கூடிய ஒன்றை அவரால்

கண்டுபிடிக்க முடியவில்லை. உணவைத் தயார் செய்யவும் பரிமாறவும் வசதியான எந்த இடமும் கிடைக்கவில்லை.

மிக்க சிரமத்துடன், ஒரு தொண்டு உணவு விநியோக நிறுவனமான 'புட்டோ புக்குர்' நிவாரண மையத்தின் (PUDDO PUKUR RELIEF CENTER) தலைமை அமைப்பாளரான டாக்டர் ராய் சௌரியாவை (DR. ROY CHOWRIA) தொடர்புகொள்வதில் எரச் வெற்றி கண்டார், அவர், "மும்பையிலிருந்து ஒரு தாராள மனப்பான்மை மிக்க பார்சி பரோபகாரர் ஒருவர் ஏழைகளுக்கு உணவளிக்க விரும்புகிறார். எங்கள் வசம் நீங்கள் பொருத்தமான ஓர் இடத்தைக் கொடுப்பீர்களானால், நாங்கள் பெரிதும் கடமைப்பட்டிருப்போம்" என்று கூறினார்.

டாக்டர் சௌரியா இந்த நோக்கத்திற்காக ஒரு பள்ளி வளாகத்தை வழங்க ஒப்புக்கொண்டார். ஆனால் அதை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, சாஞ்சி பின்வரும் நான்கு எழுதப்பட்ட நிபந்தனைகளை அவர் முன் வைத்தார்:

1. **உங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் எவரும் எங்கள் எஜமானரை சந்திக்கக்கூடாது, திரு. சௌரியா மட்டுமே அந்தப் பணியில் பங்கெடுக்க முடியும். எங்கள் தலைவர் உணவு பரிமாறும் போது மௌனம் காக்க விரும்புகிறார். (இது விசேஷமாகச் சேர்க்கப்பட்டுள்ளது, இதனால் சௌரியா, பாபாவைப் பற்றி விசாரிக்கக்கூடாது.)**
2. **எங்கள் எஜமானரையும் அவரது தோழர்களையும், தூரத்திலிருந்து கூட, உணவு பரிமாறும் நேரத்தில் எவரும் கவனிக்கக்கூடாது.**
3. **எங்கள் எஜமானருக்கு அறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும், அங்கு அவர் தனியாக அமர்ந்து ஆண், பெண் அனைவருக்கும் வேட்டி மற்றும் புடவைகளை வழங்குவார்.**
4. **உங்கள் ஸ்தாபனம் முழுமையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் (ஒரு சமையல்காரர், பாத்திரங்கள், தானியங்கள், ஊழியர்கள், மற்றும் பலவற்றை வழங்குவது போன்றவை) அதற்காக அனைத்து செலவுகளும் உங்களுக்குச் செலுத்தப்படும். மேலும், உங்கள் நிறுவனம் உதவி தேவைப்படும் நடுத்தர வர்க்க நபர்களைத் தேர்வு செய்து, எங்கள் தலைவரின் பெயரில் அவர்களுக்கு அழைப்பிதழ்களை வழங்க வேண்டும், அவர்கள் அனைவரும் எங்கள் எஜமானரின் விருந்தினர்களாகப் பங்கெடுப்பார்கள்.**

டாக்டர் சௌரியா அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டார், ஆனால் பாபாவிற்கு எந்தவொரு பொருத்தமான தங்குமிடமும் ஏற்பாடு செய்ய முடியவில்லை. கொல்கத்தாவில் எல்லா ஏற்பாடுகளும் நிறைவடைந்ததும், சாஞ்சி, லாஹூரில் பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பும் வேளையில், அவர் அங்கு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், பாபாவின் வழக்கமான பழக்கப்படி, அவர் 1943, அக்டோபர் 14 வியாழக்கிழமை குஸ்தாஜி, ஸவக்

ஆகியோருடன் எதிர்பாராமல் வந்தார். தங்குவதற்கான இடங்கள் எதுவும் முன்னேற்பாடு செய்யப்படாததால், சாஞ்சி அவர்களை ஓரிரவுக்காக 'பிராட்வே' (BROADWAY) ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். ஆதி சீனியர், குல்மாய், பானுபாய், டாக்டர் தேஷ்முக், காக்கா, பைதூல் ஆகியோர் மறுநாள் வந்து சேர்ந்தனர்.

காலையில் பாபா, அவர் எந்த அளவிற்கு அதிருப்தி அடைந்தார் என்பதை, சாஞ்சிக்கு வெளிப்படுத்தி, அவரை வெகுவாகத் திட்டினார், "**சரியான ஏற்பாடுகளைச் செய்ய நான் உங்களை, பத்து நாட்களுக்கு முன்பே அனுப்பி வைத்தேன், ஆனால் நீங்கள் உருப்படியான காரியம் எதுவும் செய்யவில்லை!**"

பாபா தொடர்ந்து கூறினார், "**நான் நேற்றிரவு ஓய்வெடுக்கவில்லை. இரவு முழுவதும் நரக வேதனையாக இருந்தது. எனக்கு ஆறுதலளிக்கும் வசதிகளைப் பற்றி நீங்கள் யோசிக்கவில்லையா? நான் இப்போது தங்குவதற்குப் பொருத்தமான, அமைதியான இடத்தைக் கண்டுபிடிக்கத் தவறினால், நான் உங்களைத் தலைகீழாகத் தொங்கவிட வேண்டியதுதான்!**"

இவ்வளவு மோசமான மனநிலையில் பாபாவைக் கண்ட சாஞ்சி, ஒரு வார்த்தை கூட பேசாமல், அமைதியாக வெளியேறி, சாத்தியமற்றதை சாத்தியமாக்கினார். ஒரு மாதத்திற்கு வாடகைக்கு கொடுக்க மறுத்த வீட்டின் உரிமையாளரை மீண்டும் அணுகினார். அவர் ஒரு வருடத்திற்கு மட்டுமே தனது வீட்டை வாடகைக்கு விடுவதில் விடாப்பிடியாக இருந்தார்; மேலும் சாஞ்சியின் புகழாரமும், பரிந்துரைகளும் அவரில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

சி. ஆர். சுந்தர் ராஜன் (C.R. SUNDER RAJAN) எனும் மதராஸைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அருகில் வசித்து வந்தார். நான்கு நாட்களுக்கு முன்பு, சாஞ்சி அந்த வீட்டு உரிமையாளரை சந்தித்துப் பேசியதைச் தற்செயலாகக் கேட்டு, சுந்தர்ராஜன், "தம்பி, உங்களுக்கு என்ன வேண்டும்?" என வினவினார். துர்பாக்கியத்தை அனுபவிக்கும் மக்களுக்கு, பரோபகார பணிபுரியும் நற்பண்புள்ள அவரது தலைவரைப் பற்றி சாஞ்சி விளக்கியதைக் கேட்ட சுந்தர்ராஜன், "நான் விரைவில் செல்லவிருக்கும் எனது புதிய வளாகத்தில் அவர் தங்க முடியும்" என்று கூறினார்.

"ஆனால் உங்களுக்கு ஒரு குடும்பம் இருக்கும்" என்று சாஞ்சி சுட்டிக்காட்டி, "எங்கள் தலைவர் ஒரு காலியான வீட்டை விரும்புகிறார்" என்றதும், ஓரிரு நாட்களில் அவரது குடும்பத்தினர் மதராஸுக்குப் புறப்படுவதால், வீடு காலியாக இருக்கும் என்று சுந்தர் ராஜன் விளக்கினார்.

எனவே அக்டோபர் 15ஆம் நாள், சாஞ்சி, பாபாவை, சுந்தர் ராஜனின் புதிய வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தூரத்திலிருந்து பாபாவைப் பார்த்தது சுந்தர் ராஜன் மனதில் இனம்புரியாத தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் சாஞ்சியிடம், "நீங்கள் காலை 10 முதல் மாலை 5:00 மணி வரை, அலுவலக நேரங்களிலும் எனது காரைப் பயன்படுத்தலாம்" என்று கூறி 'தனது ஓட்டுநர்,

இலவச பெட்ரோல் அனைத்தையும் பயன்படுத்திக்கொள்ளலாம்' என்பதையும் தெரிவித்தார். அந்தப் போர்க்கால நாட்களில், பெட்ரோல் விநியோகிப்பதில் கட்டுப்பாடு நிலவியதால் மிகவும் பற்றாக்குறையாக இருந்தது; ஆனால் சுந்தர் ராஜன், விநியோகத் துறையில் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்ததால், எப்படியாவது பாபாவின் பயன்பாட்டிற்காக அதைப் பெற முடிந்தது.

பாபா, அந்த வீட்டிற்கு ஒப்புதல் அளித்ததும், சுந்தர் ராஜன் வளாகத்தில் பக்கத்திலிருந்த ஒரு சிறிய அறைக்குச் சென்றார். ஒவ்வொரு சில நிமிடங்களுக்கும் பாபா அவரைத் 'தொந்தரவு' செய்தார், 'எந்த சத்தமும் வரக்கூடாது' என்று அவருக்குக் தகவல் அனுப்பினார். சுந்தர் ராஜன் ஒரு சிலை போலத் தனது அறையில் தங்குவதில் திருப்தியடைய வேண்டியிருந்தது. அவர் வெளியே செல்லும் போதெல்லாம், தனது காலணிகளை கைகளில் எடுத்துக்கொண்டு அமைதியாக வீட்டை விட்டு வெளியேறி, வாயிலுக்கு வெளியே சென்று காலணிகளை அணிந்து வந்தார்.

மெஹர் பாபா யாரெனத் தெரியாத ஒருவருக்கு இவை அனைத்தும் விசித்திரமாகவும் நம்பமுடியாததாகவும் தோன்றலாம். ஆனால் பாபாவின் ஆளுமை, அவருடைய ஈர்ப்பு சக்தி மிகவும் வலுவானது; நாத்திகர்கள் கூட பாபாவை சந்தித்தபோது கடவுளைப் பற்றிய தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, அவருக்கு சேவை செய்யத் தயாராக இருந்தனர்.

மண்டலியில் பார்சி இனத்தைச் சார்ந்தவர்கள் 'பார்சி தர்மசாலை'யில் தங்க முடிந்தது; டாக்டர் தேஷ்முக் (ஓர் இந்து, பார்சி தர்மசாலையில் தங்க அனுமதிக்கப்படவில்லை) ஆனந்த் பவன் (ANAND BHAVAN) ஹோட்டலில் தங்கினார். அனைவரும் தினமும் காலையில் சுந்தர் ராஜனின் இல்லத்தில் பாபாவின் அறிவுறுத்தல்களுக்காகக் காத்திருந்தனர்.

பாபா அந்த வீட்டில் குடியேறியதும், தனது திட்டத்தை மாற்றிக்கொண்டார்: ஒரு மாத காலத்திற்கு, ஒரு நாளைக்கு 50 பேருக்கு உணவளிப்பதற்கு பதிலாக, இப்போது நூற்றுக்கணக்கான மக்களுக்கு ஒரே நேரத்தில் உணவளிக்க விரும்பினார்! இந்தத் திட்டத்தை, சாஞ்சி, டாக்டர் சௌரியாவிற்குத் தெரிவித்ததும் அவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவரது அமைப்பின் ஒவ்வோர் உறுப்பினரும் முழு மனதுடன் பணியாற்றினர். ஒரு முழுமையான தேர்வு செயல்முறைக்குப் பின்னர், அவர்கள் நடுத்தர வர்க்கத்தின் மிகவும் உண்மையாகத் தேவைப்படுபவர்களை விருந்துக்கு அழைத்தனர். அவர்களுக்காக, சுவையான உணவு மற்றும் வேட்டி, புடவைகள் வாங்கப்பட்டன.

'தாராள பிரபுவான எங்கள் தலைவர்' 1943 அக்டோபர் 19 செவ்வாய்க்கிழமை, இந்த நிகழ்ச்சிக்காக வந்தவர், பள்ளிக்கூட கட்டிடத்தில் ஒரு தனி அறையில் உணவை வழங்க அழைத்துச் செல்லப்பட்டார். உண்மையிலேயே தேவைப்படுபவர்கள் தவிர வேறு எவரும் நுழையாமல் இருப்பதை ஊர்ஜிதப்படுத்த மண்டலியில் ஒருவர் கண்காணிப்பாளராக அமர்த்தப்பட்டார். ஏறக்குறைய 325 ஆதரவற்ற, நடுத்தர வர்க்க மக்களுக்கு,

பாபா உணவு பரிமாறினார். ஏழை மக்கள் அனைவரும் அவரைக் கூர்ந்து நோக்கினர்; அவர்களால் அதைத் தடுக்க முடியவில்லை. பாபாவின் தனித்துவமான ஆளுமை, அவரது அற்புதமான ஒளிரும் சிறப்புகளை மறைக்க முடியவில்லை.

வந்தவர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர், "இந்தப் பார்சி பரோபகாரர் உண்மையான மஹாத்மாவாக இருக்க வேண்டும்! எந்தவொரு விளம்பரமும் இல்லாமல் எங்களுக்கு இத்தனை அன்பாக உணவளிக்கும் அவர் எவ்வளவு பெரியவராக இருக்க வேண்டும். பிறர் அனைவரும் தங்கள் பெயர்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதை விரும்புகின்றனர் மற்றும் எந்தச் சிறிய சேவைக்கும் புகைப்படக்காரர்கள் புகைப்படம் எடுப்பதை வரவேற்கின்றனர்." உணவிற்குப் பிறகு, பாபா ஒவ்வோர் ஆணுக்கும் ஒரு வேட்டியையும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு புடவையையும் அளித்தார். அவரது பெயர் ஒருபோதும் வெளிப்படுத்தப்படவில்லை, ஆனாலும் அவரது அன்பின் பெருங்கடலில் தவழும் அலை ஒவ்வோர் இதயத்தையும் தொட்டு, அவர்களுக்குத் தெரியாமலேயே அதை சுத்தப்படுத்தியது.

கடந்த சில நாட்களாக, ஏழைகளுக்கு உணவளிப்பதைத் தவிர, பாபா கொல்கத்தாவில் மஸ்துகளை வேட்டையாடுவதிலும் மும்முரமாக இருந்தார்.

10,000 சப்பாத்திகள் வீதிகளில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். பாபா சப்பாத்திகளை ஆசீர்வதித்து, தனிப்பட்ட முறையில் எரச், பைதூல், காக்கா, பாபாதாஸ் ஆகியோருடன் ரிக்‌ஷாக்களில் ரொட்டிகளை வழங்க வெளியே சென்றார். இந்தப் பணி நான்கு அல்லது ஐந்து நாட்களில் செய்யப்பட்டது.

ஒரு நாள் பாபா இனிப்பு பண்டங்களை வரவைத்து அவற்றை சிறிய துண்டுகளாக வெட்டினார். அன்று சப்பாத்தி வழங்கப்பட்ட அனைவருக்கும் இனிப்பின் ஒரு பகுதியும் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார், அவர்கள் உண்மையில் இனிப்பை விழுங்கினாலும் இல்லாவிட்டாலும், அதை அவர்கள் வாயிலிட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். (அவருடைய உத்தரவு அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது, ஏனெனில், பட்டினியால் வாடும் மக்கள் உயர்தர உணவை எளிதில் ஜீரணிக்க முடியாது.)

ஏற்கனவே குறிப்பிட்டபடி, கொல்கத்தாவில் பஞ்சம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து கொண்டிருந்தனர். போர்க்காலத்தில் உணவுப்பொருட்களின் விலை வானத்தை எட்டியது, நடுத்தர மக்களுக்குக் கூட உணவு பொருட்களை வாங்குவதில் சிரமம் ஏற்பட்டது. இதைத் தவிர, உயிரிழந்தவர்களை அப்புறப்படுத்த சரியான சுகாதார நடவடிக்கைகள் இல்லாத நிலையில், காலரா நோயும் பரவலாகத் தலைதூக்கியது. (ஒரு மதிப்பீட்டின்படி இந்த நேரத்தில் வங்காளத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை முப்பது லட்சத்தைத் தொட்டது.)

டாக்டர் தேஷ்முக் பாபாவிடம், 'காலரா நோய் நகரம் முழுவதும் பரவி வருவதால், அவர்கள் அருந்தும் குடிநீரைக் கொதிக்க வைக்க வேண்டும்' என்று

கூறினார். பாபாவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார்; தேஷ்முக் அந்த நீரை சேமிக்க ஒரு மண் பானையை வாங்கி வந்தார். ஒரு நாள், டாக்டர் தேஷ்முக், பாபாதாஸுடன் சப்பாத்திகளை விநியோகிக்கும்போது, அவருக்கு தாகம் ஏற்பட்டதால், பயத்தில் ஹோட்டலுக்கு வெளியே நீர் வாங்கி அருந்த தயங்கினார்; அடுத்த நாள், அவர் மண் பானையை உடன் எடுத்துச் சென்று, பாபாதாஸ் அதைத் தலையில் சுமந்துவரச் செய்தார். தேஷ்முக் முன்னோக்கிச் செல்ல, பாபாதாஸ் அவரால் இயன்றவரை, மண்பானையை தலையில் பத்திரமாக எடுத்துச் சென்றார்.

சாஞ்சி, ஆதி சீனியர் இருவரையும் பாபா லக்னோவிற்கு அனுப்பி அங்கு ஏழைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். பாபா கொல்கத்தாவிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பல உள்ளூர் நிவாரண மையங்கள் மற்றும் அறக்கட்டளைக்கு விஜயம் செய்தார்; மேலும் ஏழை குழந்தைகளுக்கு 2,000 உள்ளாடைகளை வாங்கி விநியோகிக்கவும், வரவிருக்கும் குளிர்கால மாதங்களில் குளிரிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் ஒரு மையத்திற்கு நிதி வழங்கினார். பாபா, 1943 அக்டோபர் 20, இரவு 9:00 மணிக்கு லக்னோ வந்தடைந்தார்; தங்குவதற்கு உகந்த ஹோட்டல் எதுவும் கிடைக்காததால், ஒரு நடுத்தர ஹோட்டலில் தங்கவேண்டியதாயிற்று. (விளக்கும் இல்லை; தூசி நிறைந்த கட்டில்கள்; குடிநீர் வசதி இல்லை, குடிநீருக்காக ஒரு கண்ணாடி டம்ளர் குவளை எதுவுமில்லை.)

'ராம தீர்த்த பப்ளிகேஷன் லீக்' (RAMA TIRTHA PUBLICATION LEAGUE) நிறுவனத்தின் திரு ஜெயப்பிரகாஷ் (MR. JAYAPRAKASH) என்பவரின் உதவியுடன் லக்னோவில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு, 23 அன்று 'வர்மா மெமோரியல் ஹால்' (VARMA MEMORIAL HALL) நூலகத்தில் நடைபெற்றது; கிட்டத்தட்ட 250 பேர் கலந்து கொண்டனர். பிராமணர் அல்லாதவர்களால் தயார் செய்யப்பட்டு, பரிமாறப்படும் உணவில் அவர்கள் பங்கெடுக்க விரும்பாமல், தங்களுக்கு தனித்தனி சமையல் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று பிராமணர்கள் வலியுறுத்தியதால் ஆரம்பத்தில் சில இடையூறுகள் ஏற்பட்டன. அவர்கள் இதர வகுப்பைச் சேர்ந்தவர்களுடன் தங்கள் உணவைப் பகிர்ந்துகொள்ள மறுத்துவிட்டனர். ஆனால் பாபா மண்டபத்திற்கு வந்த தருணத்தில், அவர்கள் பாரபட்சமான சிந்தனைகளை மறந்துவிட்டனர்.

காலம் இதை இப்படிப் பார்த்தது, "பாபாவின் உதய சூரியனைப் போன்ற தோற்றம் அவர்களின் மனதின் இருளை மறையச் செய்து, சுற்றுப்புற சூழலை மின்மயமாக்கியது; அவரது இனிமையான புன்னகை, சாதி மத பேதமின்றி அனைத்து வேறுபாடுகளையும் வென்றது - இங்கேயும் பாபாவின் உண்மையான அடையாளம் வெளிப்படுத்தப்படவில்லை!"

அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்தனர்; பாபா, தேஷ்முக், சாஞ்சி, எரச், பைதூல், ஆதி சீனியர், பாபாதாஸ் ஆகியோர் உணவு பரிமாறத் தொடங்கினர். கடவுளே, மும்பையைச் சேர்ந்த 'பாரசீக பரோபகாரர்' என்ற

போர்வையில், அவர்களுக்காக ஒரு விருந்தை வழங்கிக் கொண்டிருந்தார். அங்கிருந்த எவருக்கும் இதற்கு முன்னர், ஒருபோதும் இதுபோல் உணவு வழங்கப்படவில்லை. மேலும் உணவு உண்ணும் வேளையில், அவர்கள் தொடர்ந்து பாபாவைவே உற்று நோக்கிக்கொண்டிருந்தனர்.

உணவிற்குப் பிறகு, பாபா ஒவ்வொரு விருந்தினரையும் தனித்தனியாக அறைக்குள் அழைத்து, ஒவ்வொருவருக்கும் ஆடை மற்றும் ஒரு ரூபாயை வழங்கினார். சிலர் அந்தத் தாராள பிரபுவின் முகவரியை அறிய விரும்பினர், ஆனால் அவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இந்த நிகழ்வைப் பற்றிய தனது எண்ணங்களை, சாஞ்சி நாட்குறிப்பில் பதிவு செய்திருந்தார்:

லக்னோவில் விருந்து ஏற்பாடு செய்வது என்பது மிகவும் கடினமான காரியம், ஏனெனில் பாபாவின் புகைப்படங்கள் மற்றும் அவரைப் பற்றிய கட்டுரைகள் செய்தித்தாள்களில் வெளிவந்த விபரங்கள் பலருக்கும் தெரியும். இருப்பினும், அதிர்ஷ்டவசமாக, அதிசயமாக, பாபா திருப்தி அடையும் விதத்தில் இந்தப் பணி செய்து முடிக்கப்பட்டது. பாபாவின் மண்டலி பல முக்கியமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது - உண்மையிலேயே தகுதி வாய்ந்த (பசி, பட்டினி எனும் பரிதாப நிலையில் இருக்கும்) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான (அதாவது எண்ணிக்கையில் எந்த மாற்றமும் இல்லாமல்) மக்களை உணவளிப்பதற்காக ஒன்றிணைப்பது; அவர்களுக்கான உணவை ஒரு தனி இடத்தில் சமைக்க ஏற்பாடு செய்வது - பின்னர் இதற்கெல்லாம் உதவிய விருப்பமுள்ள தொழிலாளர்களை, பாபா விரும்பியபடி அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் சேவை செய்யும் நோக்கத்தில், வளாகத்தை விட்டு வெளியே செல்லுமாறு கேட்டுக்கொள்வது என்பது மிகவும் சிரமமான காரியம். இது போன்ற வேலைகளில், மக்களிடம் உதவி கோருவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று;

எல்லா நேரத்திலும், பாபாவின் அடையாளம் ரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டியிருந்ததால், இதற்காக அயராது பணிபுரியும் மண்டலி, உள்ளூர் தொழிலாளர்களிடம் பாபாவின் வெளிப்படையான விருப்பம் மற்றும் அறிவுறுத்தல்களின்படி இதையெல்லாம் செய்கிறார்கள் என்று மண்டலி சொல்ல வேண்டியிருந்தது. தொழிலாளர்களின் உழைப்பு, கடமை ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்வது கூட பாபாவால் தனிப்பட்ட முறையில் அறிவுறுத்தப்பட்டது. பாபாவின் விருப்பத்திற்கிணங்க உள்ளூர் மக்களை விருந்துக்கு அழைத்து வருவதற்கும், அங்கேயே உணவைத் தயார் செய்வதற்கான வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதும் அந்தத் தொழிலாளர்களின் பொறுப்பாக இருந்தது; விருந்தினர்களுக்கு சேவை செய்யும் மண்டலியில் ஒருவரைத் தவிர பிற அனைவரும் கடுமையான தனியுரிமையைப் பாதுகாத்து மௌனம் அனுஷ்டிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டனர்.

இது பாபாவின் அடையாளத்தை அவர் விரும்பியபடி மூடி மறைக்க உதவியது.

சமைக்கப்பட்ட உணவு தயாராக இருந்தது; அனைவரும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். பெரிய இலைத்தட்டுகளில் உப்பு போன்றவை ஏற்கனவே பரிமாறி வைக்கப்பட்டிருந்தது. உள்ளூர் தொழிலாளர்கள் அனைவரும் வெளியே செல்வதை ஊர்ஜிதப்படுத்தி, அனைத்து கதவுகளையும் மூடிய பின்பு பாபா, ஹோட்டல் அறையிலிருந்து, அமைதியாக அழைத்து வரப்பட்டு, அனைவருக்கும் உணவை வழங்கி, இதர சேவைகளைச் செய்ய நூலக அறைக்குள் நுழைந்தார்.

அதே நாளில் மெஹர் பாபா லக்னோவிலிருந்து ரயிலில் புறப்பட்டார். ஏற்கனவே திட்டமிட்டு, பின்னர் 1944 மே மாதம் வரைத் தள்ளிவைக்கப்பட்ட கூட்டம் குறித்து வெளியிட்ட புதிய சுற்றறிக்கை தொடர்பாக நாக்பூர், ராய்ப்பூர் மற்றும் மும்பைக்கு எரச் அனுப்பப்பட்டார்.

பாபாவும் அவரது குழுவும் 1943 அக்டோபர் 24, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:00 மணிக்கு ஜலந்தருக்கு (JULLUNDUR) வந்து, ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பஞ்ஜாப் ஹோட்டலில் தங்கினர். அடுத்த நாள் விடியற்காலையில், பாபா அவரது மஸ்த் பணியைத் தொடங்கி, குல்மாய், ஆதி சீனியர், பைதூல், சாஞ்சி ஆகியோரை உடன் அழைத்துச் சென்றார். அவர்கள் முதலில் சில மைல் தொலைவில் அமைந்த ‘ஜம்ஷேர்’ (JAMSHER) கிராமத்திற்குச் சென்று, ஒரு நெசவாளரின் வீட்டில், பாபா, ‘முன்னி பாய்’ (MUNNI BAI) என்றழைக்கப்பட்ட ஒரு குழந்தையைப் போன்ற, இனிமையான, மயக்கும் புன்னகையுடன் கூடிய மஸ்தானியைத் தொடர்பு கொண்டார்.

ஜலந்தரில், பாபா, உள்ளூர் மக்களால் மிகவும் மதிக்கப்பட்ட மற்றொரு மஸ்தானியை சந்தித்தார்; ‘புதியா மஸ்தானி’ (BUDHIA MASTANI) என்ற பெயருடைய அவர் ஹரிஜன் காலனியில் (HARIJAN COLONY) வசித்து வந்தார்.

அதே நாளில், டாக்டர் தேஷ்முக், பாபாதாஸ் ஆகியோருடன் பாபா, கபுர்தலாவிற்கு (KAPURTHALA) ரயிலில் சென்று, அங்கு அவர் 25 வயதான ஒரு மஸ்தை சந்தித்தார். அந்த இளைஞன் எப்போதும் நிர்வாணமாக இருந்தான், தோட்டக்காரர்களாக இருந்த அவனது பெற்றோர் அவனை கவனித்து வந்தனர். பாபா, மேலும் இரண்டு மஸ்துகளுடன் பணிபுரிந்து, மாலை 5:00 மணிக்கு ஜலந்தருக்குத் திரும்பி வந்தார்.

26ஆம் நாள் காலை 7:00 மணிக்கு, சாஞ்சி, பைதூல் இருவருடன் பாபா ஜலந்தரிலிருந்து புறப்பட்டு 45 நிமிடங்களில் ‘பக்வாரா’ (PHAGWARA) வந்தடைந்து, அவர் ‘ஸங்கத்பூர்’ (SANGATPUR) கிராமத்திற்கு டோங்காவில் பயணித்தார். 25 ஆண்டுகளாக தனது குடிசைக்கு வெளியே அமர்ந்திருந்த ஓர் உயர் நிலை மஸ்தான ‘நெகிஷா பாபா’வை (NEKISHSH BABA - குடிசைக்குள் அவர் ஒருபோதும் சென்றதில்லை) பாபா, அங்கேயே தொடர்பு கொண்டார். மஸ்தின் அருகில் குப்பைகளால் நிரப்பப்பட்ட ஏழு கோணிப்பைகளின் குவியலும், இரவும் பகலும்

எரியும் ஒரு துனியும் வைக்கப்பட்டிருந்தன. மஸ்த், மாட்டுச்சாணத்திலிருந்து எரிபொருள் கட்டிகளை உருவாக்கினார், கிராமவாசிகள் அவரது துனிக்கு வேண்டிய விறகைக் கொண்டு வந்தனர். நெகிஷா பாபா வழக்கமாக நெருப்பின் அருகே அமர்ந்து, தலைக்கு மேல் ஒரு போர்வையைப் போர்த்தி இருந்ததால் அவரை ஊர் மக்கள் அரிதாகவே பார்த்தனர். கிராமவாசிகளால் மிகுந்த மரியாதையுடன் போற்றி வணங்கப்பட்ட நெகிஷாவிற்கு, அவருடைய சீடர்கள் வாழும் ஒரு சிறிய ஆசிரமும் இருந்தது.

'கோரம்புரா' - KHORRAMPURA (KHURAMPUR - குராம்பூர்) கிராமத்தில், பாபா மற்றுமொரு மேல் நிலை மஸ்தான 'குடாய் பாபா'வை (KHUDAI BABA) சந்திக்க நேர்ந்தது. அவர் ஒரு விவசாயியைப் போல் உடையணிந்த வயதான மனிதர், முற்றத்துடன் கூடிய ஒரு பெரிய வீட்டில், பல கால்நடைகளுடன், சாதாரண தோற்றத்தில் நன்றாக, முறையாக வாழ்ந்து வந்தார்; அவர்களின் தொடர்புக்கு பிறகு, பாபாவிற்குத் தேநீர் வழங்கப்பட்டது.

'பக்வாரா' கிராமத்தில் ஒரு கல்லறையில் வாழ்ந்து வந்த, 'குர்ஷித் பாபா' (KHURSHID) என்றழைக்கப்பட்ட மஸ்த் ஒருவர், பிறப்பால் முஸ்லீமாக இருந்தபோதிலும், காவி நிற உடையில் ஒரு சாதுவைப் போலத் தோற்றமளித்த அவரை, பாபா அங்கேயே தொடர்பு கொண்டார்.

மற்றுமொரு மஸ்த் 'சுவாமி காளி பர்பத்' (SWAMY KALI PARBAT) என்பவர், ஒரு வயதான மனிதர், தனது ஆசிரமத்தில் சீடர்களின் குழுவையும் கொண்டிருந்த அந்தப் பகுதியில் நன்கு அறியப்பட்டவர். பக்வாராவில் இந்தத் தொடர்புகளை நிறைவு செய்து, அன்றிரவு பாபா, ஜலந்தருக்குத் திரும்பி வந்தார்.

1943, அக்டோபர் 27 அன்று பைதூல், ஆதி சீனியர், சாஞ்சி ஆகியோருடன் பாபா, காலை ரயிலில் 'ஹோஷியார்பூருக்கு' (HOSHIARPUR) பயணம் செய்து, 9:00 மணிக்கு, முதலில் தொலைத்தந்தி அலுவலகத்திற்குச் சென்று, பின்பு சிற்றுண்டி உண்ண விரும்பினார், ஆனால் பைதூல் ஒரு குறிப்பிட்ட திசையில் சென்று அருகிலுள்ள மஸ்தைத் தொடர்பு கொள்ள பரிந்துரைத்தார். எவ்வாறாயினும், டோங்கா டிரைவர் அந்த இடத்தைக் கண்டுகொள்ள முடியாமல் பாதையைத் தவற விட்டதால், நீண்ட நேரம் வீணானது, பாபாவின் மனநிலையை வருத்தத்திற்குள்ளாக்கியது. அவரது அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக அவரது திட்டங்கள் பாழாயின. இறுதியில் அந்த மஸ்தைக் கண்டுகொள்ள முடியவில்லை. இருப்பினும், பாபா, வழியில், ஒரு இளம் மஸ்தானியைக் காண நேர்ந்தது. 'மஸ்தானி பாவாஜி' (MASTANI BAVAJI) என்று அழைக்கப்பட்ட அவர் மிகவும் அழகாக, நிறைந்த முகத்துடன், கருஞ்சிவப்பு நிற ஆடைகளை அணிந்திருந்தார். அந்த மஸ்தானிக்குப் பல பக்தர்கள் இருந்தனர்.

அதற்குப் பிறகு, பாபாவும் மண்டலியும் மீண்டும் ஊருக்குள் சென்று, அன்று காலையில் உணவருந்தவிருந்த உணவகத்தைக் கண்டுபிடித்தனர். அவர்கள் வேறொரு டோங்காவில், முதலில் 'ஹர்மோயா' (HARMOYA) என்ற

இடத்திற்குச் சென்று, அங்கு பாபா ஒரு குறிப்பிட்ட மஸ்தைத் தொடர்பு கொள்ள விரும்பினார். பாபாவின் துல்லியமான வழிமுறைகளைப் புறக்கணிப்பதில் அவர் செய்த முதல் தவறு குறித்த சமீபத்திய நினைவு இருந்தபோதிலும், பாபாவின் இப்போதைய அறிவுறுத்தலையும் கண்டுகொள்ளாமல், பைதூல் மற்றொரு கடுமையான தவறை இழைக்க நேர்ந்தது. ‘ஸிஸோலி’ (SISOLI) கிராமம் அருகாமையில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய பைதூல், டோங்கா டிரைவரிடம் அங்குச் செல்லும்படி கூறினார். மிகவும் கடினமான, மணல் நிறைந்த சாலைகளில் பல மணிநேரங்கள் வீணான பயணத்திற்குப் பிறகு, பாதை தொலைந்து போயிற்று. இறுதியாக ஏராளமான வயல்கள் மற்றும் மணல் நிறைந்த பாதையைக் கடந்து சென்ற பின்னர் (ஒரு நல்ல சிறுவனை வழிகாட்டியாக உடன் அழைத்துச் சென்ற பின்னரும்), அவர்கள், ஏழே மைல் தொலைவில் இருந்த ஸிஸோலியை, பிற்பகல் 3:00 மணிக்கு வந்தடைந்தனர். 14 ஆண்டுகளாக ஒரே மரத்தின் கீழ் வாழ்ந்த ‘பாபா மஸ்தான்’ (BABA MASTAN) என்று அழைக்கப்பட்ட ஒரு பழைய மஸ்துடன் பாபா பணியாற்றினார். ஐந்து மைல் தொலைவில் அமைந்த ‘ஹர்மோயா’ என்ற கிராமத்திற்குச் செல்ல மிகவும் தாமதமானதால், பாபாவும் மண்டலியும் ஹோஷியார்பூருக்கு மாலை 5:15 மணிக்குத் திரும்பி வந்தனர். (சரியான சாலையைக் கண்டுபிடிக்க, வயல்வெளிகளில் மைல் தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்த சிரமத்தால்), பின்பு காரிலும், ரயிலிலும் பயணம் செய்து ஜலந்தருக்குச் சென்றனர்.

தீபாவளி விடுமுறை காரணமாக இரவு 8:30 மணிக்கு ரயில்கள் மிகவும் நெரிசலாக இருந்ததால், சிரமப்பட்டு வர வேண்டியிருந்தது.

அடுத்த நாள் 28 அதிகாலை 4:00 மணிக்கு எழுந்து, ஜலந்தரிலிருந்து ஏழு மணிக்கான பயணிகள் ரயிலில் புறப்பட்டு, காலை 11 மணிக்கு லாஹூருக்கு வந்தனர்; அங்கு, ஆதி சீனியர், காக்கா இருவருக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு ‘சிறந்த’ சிறுவனைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது.

1943 அக்டோபர் 29 வெள்ளிக்கிழமை, லாஹூருக்குத் திரும்பி வந்ததும், பாபா மண்டலி அனைவரையும் அழைத்து, கொல்கத்தா மற்றும் லக்னோவில் நிகழ்த்திய சமீபத்திய பணியைப் பற்றி விளக்கினார்:

**வங்காளத்தின் நிலைமை பரிதாபகரமானது, ஆனால் மண்டலியின் உதவியுடன் அங்கு எனது பணியை, முற்றிலும் அடையாளம் தெரியாமல் மறைமுகமாகச் செய்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நான் திரும்பி வந்ததும், புதிய வைஸ்ராய் (ஆர்க்கிபால்ட் -** ARCHIBALD**) வேவெல்** (WAVELL) **கொல்கத்தாவிற்கு விஜயம் செய்தார். இதைப்போன்ற நெருக்கடியான நிலைமைகளை, இந்தியா முழுவதும் குறிப்பாக மும்பை போன்ற பெரிய நகரங்கள் சந்திக்க உள்ளன. பல ஆண்டுகளாக, இந்தியா, எல்லாவற்றிற்கும் மேலாக இடர்பாடுகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் கூறி வருகிறேன். இது ஆரம்பம்தான்.**

இதற்கு முன்பு பார்த்திராத அல்லது கேட்டிராத பஞ்சத்தின் இத்தகைய மோசமான சூழ்நிலைகளில் கூட - வீதிகளிலும் திறந்த நடைபாதைகளிலும் ஆயிரக்கணக்கானோர் அனுதினமும் பட்டினியால் உயிரைத் துறந்துகொண்டிருக்கிறார்கள் - இது இன்னும் தொடர்ந்து வரும் (தொற்றுநோய் மற்றும் கொள்ளைநோய் போன்ற) பல கட்டங்களின் ஒரு கட்டம் மட்டுமே. பிரிட்டிஷ் அரசாங்கம் இதன் பிரதான பொறுப்பாக, அதிகாரிகளைக் குற்றம் சாட்டினாலும், அப்பாவி (லியோபோல்ட் - LEOPOLD) அமேரி (AMERY), சர்ச்சில் (CHURCHILL) ஆகியோர் தெய்வீக விருப்பத்திற்கு எதிராக என்னதான் செய்ய முடியும்?

அத்தனை துன்பங்களுக்கும் பிறகு, நாட்டின் நிலைமை சீரடையும். எனது திறவுகோல் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் அவர்களின் தலைவிதி இன்னும் மோசமாக இருந்திருக்கும்.

போர்க்கால கட்டுப்பாடுகள் காரணமாக, பாபா, ஈரானுக்குச் செல்வதற்கான அவரது திட்டத்தை மாற்றி, அனைவரும் மீண்டும் மெஹராபாத்திற்குத் திரும்பிச் செல்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்து, பின்வரும் சுற்றறிக்கையை வெளியிட்டார்:

1943 நவம்பர் மாதத்தில், நான் ஈரானுக்குப் பயணம் செய்வது தொடர்பாக ஆகஸ்ட் 1ஆம் நாள் அனுப்பிய எனது முந்தைய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளேன்; பின்னர் 1944, ஜனவரி 15 முதல் பிப்ரவரி 15 வரை, ஒரு மாதத்திற்கு முழுக்குழுவும் என்னுடன் நெருங்கிய சகவாசத்தில் இருப்பது, இவை இரண்டும் இப்போது கீழே விளக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் காரணமாக சரிசீரமைக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

போருடன் தொடர்புடைய அலுவலக வணிகத்தைத் தவிர, ஈரானுக்குச் செல்ல யார் ஒருவருக்கும் அனுமதி வழங்கும் இயலாமையை வெளிப்படுத்திய இந்திய அரசு, அனைத்து பாஸ்போர்ட்டுகளையும் ஒப்புதலின்றி திருப்பி அனுப்பியுள்ளது. இந்த முடிவிற்கு கூட, அரசாங்கம் மூன்று மாதங்களை எடுத்துக் கொண்டது. அரசாங்கத்தின் இந்த மறுப்பு, ஈரானுக்கு என்னுடன் வரவிருந்த குழுவில் ஏறக்குறைய 20 என்ற பெரிய எண்ணிக்கையின் அடிப்படையில் இருப்பதாக தெரிகிறது. அதன் பின்னர் ஒரு சிறிய எண்ணிக்கையில் அனுமதி வழங்கப்படலாம் என்பது கிட்டத்தட்ட உறுதியாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், இதற்கான அரசாங்கத்தின் பதிலை ஆண்டு இறுதிக்குள் எதிர்பார்க்க முடியாது, அதாவது டிசம்பர் 1943.

ஆனால் டிசம்பர் முதல் மார்ச் வரையிலான மாதங்கள் கடுமையான குளிரும் பனியும் நிறைந்த காலநிலையானதால், ஈரானில் நான் செய்ய விரும்பும் குறிப்பிட்ட பணிக்கு அந்தக் காலம் ஏற்றதாக இருக்காது. ஆகவே 1944 மார்ச் மாத நடுப்பகுதியில் ஈரானுக்குச் சென்று ஏப்ரல் நடுப்பகுதியில் இந்தியாவிற்குத் திரும்ப முடிவு செய்துள்ளேன்.

முழுக் குழுவுடனான இந்தக் கூட்டத்திற்காக, 1944 ஜனவரி மாதத்தில் விடுப்புப் பெறுவதில் சிரமம் இருப்பதாக, பல உறுப்பினர்களிடமிருந்து எனக்குக் கடிதங்களும் வந்துள்ளன, இருப்பினும் அவர்கள் அனைவரும் தங்கள் பணிகளை விட்டுக்கொடுப்பதற்கான தயார் நிலையை வெளிப்படுத்தி இருந்தாலும் (வேலை, படிப்பு போன்றவற்றை விட்டுவிடுவது) எந்த சூழ்நிலையிலும் ஒரு மாதம் என் அருகில் இருக்கும் ஆர்வத்தைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் என்னிடம் வைத்திருக்கும் அன்பு, பக்தி, அவர்களின் சேவை மற்றும் துறவற மனப்பான்மையுடன், எந்த சூழ்நிலையிலும் எனக்குக் கீழ்ப்படிய அவர்கள் தயாராக இருப்பதையும் நான் பாராட்டுகிறேன்; அதேவேளையில், எனது சொந்த காரணங்களுக்காக, அவர்கள் உலகக் கடமைகளை விட்டுக்கொடுப்பதை நான் விரும்பவில்லை.

இவற்றையும், இதர முக்கிய காரணங்களையும் கருத்தில் கொண்டு, ஈரானிலிருந்து நான் திரும்பிய பின்னர், 1944 மே 15 முதல் ஜூன் 15 வரை, அனைத்து மாணவர்களும் கல்வித்துறையில் பணியாற்றும் நபர்களும் எனது அருகில் இருக்க முடிவு செய்துள்ளதால், அவர்கள் கோடை விடுமுறையின் பலனைப் பெறும் அதேநேரத்தில், குழுவின் இதர அங்கத்தினர்களும் தேவையான விடுப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

இந்தக் கூட்டத்தை ஒத்திவைப்பது தவிர, முக்கியமாக நானே உருவாக்கிய நிபந்தனைகள் காரணமாக, கூட்டத்திற்கான இதர அனைத்து ஏற்பாடுகளும், எனது முந்தைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆன்மீக அனுபவங்களை நிறைவேற்றுவதற்கான திட்டங்களும், மாறாமல் இருக்கும்.

மனதில் சந்தேகம் உள்ளவர்களும், பொறுமை இல்லாதவர்களும், ஏமாற்றமடைந்தவர்களும் இந்த நிகழ்ச்சியிலிருந்து பின்வாங்கத் தயங்க வேண்டிய தேவையில்லை, ஏனெனில் அதை அவர்களுடைய பலவீனமாக நான் கருத மாட்டேன், ஆனால் நிர்ணயிக்கப்பட்ட ஆன்மீக நேரத்துடன் இணங்கிச் செல்லும் அவர்களின் ஆயத்தமற்ற சூழ்நிலையாகக் கருதப்படும், மேலும் அவர்கள் அனைவருமே எப்போதும் போலவே ஆசீர்வதிக்கப்படுவார்கள். இந்தத் தள்ளிவைக்கப்பட்ட காலத்தை, நம்பிக்கை நிறைந்த இதயத்துடன் ஏற்றுக்கொள்வதற்கான தயார்நிலையில் கையெழுத்திடுபவர்கள், இந்த ஒத்திவைப்புகளின் அர்த்தம், அந்த காலத்திற்கான தியாகங்கள் இன்னும் தீவிரமாகவும் கடுமையானதாகவும் இருக்கும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

1944 ஜனவரியில் ஏழு நாட்கள் உபவாசம் இருக்குமாறு உத்தரவிடப்பட்டவர்கள், மே 8 முதல் 14 வரை (இரண்டு நாட்களையும் உள்ளடக்கி) அவ்வாறு செய்ய வேண்டும், மேலும் 1944 மே 15 அன்று என்னுடன், என்னருகில் இருந்து உபவாசத்தை நிறைவு செய்யவேண்டும்.

**குருநாதர் அவருக்கே உகந்த முறையில் பணிபுரிகிறார். சோதனைகள் இல்லாமல் ஆயத்தம் சாத்தியமில்லை என்பதை, பாபாவின் ஊழியர்கள் படிப்படியாகக் கற்றுக்கொண்டனர். கடவுளின் பெயரை இரவும் பகலும் தியானிப்பது, மனதை ஒருநிலைப்படுத்தி குருநாதர் மீது கவனம் செலுத்துவது போன்றவை ஒப்பீட்டளவில் எளிதானது; ஆனால் உறுதியற்ற தன்மை மற்றும் எக்கணமும் மாறிக்கொண்டிருக்கும் திட்டங்களுக்கு மத்தியில், கலக்கமின்றி கண்டுகொள்ளாமல் இருப்பது உண்மையிலேயே கடினம். இதன் மூலமாக, பாபா, அவரது அன்பர்களுக்கு எளிதான தியான முறையை கற்பித்துக் கொண்டிருந்தார். அவரது திட்டங்களை மாற்றியமைப்பதும் தள்ளிப்போடுவதும் அவரை மேலும் மேலும் நினைவில்கொள்ள வழிவகுக்கும்.**

அவரது மண்டலியும் இடைவிடாமல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, பாபாவின் விசித்திரமான முறையில், அவர்கள் மூலமாகவும், அவர்களுக்காகவும், அவர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசி, அதில் பங்கேற்கச் செய்கிறார். 1943, அக்டோபர் 30ஆம் தேதி நாட்குறிப்பில் குறிப்பிடுவதைப் போல, சாஞ்சி இதை அடிக்கடி நினைவில்கொள்ள வேண்டியிருந்தது:

மனச்சோர்வு மற்றும் அதன் தீர்வு - இரண்டிலிருந்தும் விலகி இருப்பது, பாபாவிற்குத் தொந்தரவு கொடுப்பதைத் தவிர்ப்பது, குறைப்பது - எங்கள் பணியை வேறெங்கேனும் செய்வது. கேள்வி, கலந்துரையாடல், விளக்கம் - அனைவரும் (பாபாவுடன்) அமர்ந்திருப்பது. 20 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது பிரிக்க முடியாது. இவையெல்லாம் (சாஞ்சியைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவது) வேண்டுமென்றே சில காரணங்களுக்காகச் செய்யப்படுகின்றன. பல வருடங்களுக்குப் பின்னர், ஒருவர் அதைத் தெரிந்திருக்க வேண்டும்; தாங்கமுடியாத சூழ்நிலைகளில் கூட, அக்கறையற்றவராக உணர வேண்டும், அமைதியாக இருக்க வேண்டும். அதுவே ஒருவரின் புகழும், நன்மதிப்பும். ஒருவர் எளிதான, தாங்க முடிகிற சோதனைகளை எதிர்கொண்டால், புகழுக்கும், நன் மதிப்புக்கும் இடம் எங்கே? குருநாதர் அதையெல்லாம் அவர் விரும்பும், மிகவும் நேசிக்கும் ஒருவருக்கே அளிக்கிறார். இது அன்பை அடையாளப்படுத்துகிறது, ஆனால், வெளியளவில் தோன்றுவதைப் போல் அதிருப்தியை அல்ல. எவரொருவர் அதிக அளவில் அமைதியாகத் துன்பப்படுகிறாரோ, அவர் குருநாதரின் பிரியத்திற்கு உரியவராகிறார், குருநாதர் அதை வெளிப்படுத்தாவிடிலும் கூட. மாறாக, வெளிப்புற நிகழ்வு அனைத்தும் நேர்மாறானது. ஆனால் அது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக; உண்மையான உள் உணர்வாக அதை எடுக்கக்கூடாது.

சில மாதங்களுக்குப் பிறகு, பாபா அவரை அன்பாக நடத்தியபோது, சாஞ்சி இவ்வாறு பதிவு செய்திருந்தார் (1944, ஜனவரி 30):

அனைத்திலும் பாபாவின் மிகப்பெரிய பிடிப்பு என்பது அவரது 'அன்பு'. அது அனைவரையும் அவரிடம் ஈர்க்கும் இனம்புரியாத, விவரிக்க முடியாத

ஒன்று. அனைத்து விஷயங்களையும் கையாளும் அவரது மர்மமான வழிகள் இருந்தபோதிலும், அவரது பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேறாத நேரத்திலும் (முதலில் அவை எங்கள் சொந்த நலனுக்காக, உற்சாகம் மற்றும் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக வழங்கப்பட்டது) - எவரும் அதைப் புரிந்து கொள்ள முடியாது; பிரிவினையின் விளைவால் வரும் கடுமையான துன்பங்களுக்கு மத்தியிலும் (அவருடைய அன்பினால் தானே உருவாகி எங்களில் அதை எழுச்சியுறச் செய்து, எங்களுக்கு அளிக்கப்பட்டது), வாழ்க்கையில் இதர இடர்பாடுகள் வழியாகவும், மேலும் குடும்பம் அல்லது வணிக விஷயங்களில் ஏற்படும் சிரமங்கள், சிக்கல்கள், தாங்க முடியாத சூழ்நிலைகள், அல்லது வர்த்தகம், தொழில், பணி (வேலைவாய்ப்பு) போன்ற கேள்விகள் - அல்லது வேறு எந்த வாழ்க்கைத் துறையிலும் நம்மைக் குழப்பி, திகைக்க வைக்கும் பிரச்சினைகள் - சில நேரங்களில் வாழ்க்கையை அர்த்தமற்றதாகவும் பயனற்றதாகவும் மாற்றும் ஏமாற்றங்கள் மற்றும் விரக்திகள், இதுபோன்ற இன்னும் பல வழிமுறைகள். அனைவரையும் சமமாக ஈர்க்கும் அந்த நுட்பமான கவர்ச்சி என்ன? எவராலும் வரையறுக்கவோ விவரிக்கவோ முடியாது, இருந்தாலும் இது உண்மைகளிலும் உண்மை!

1943 நவம்பர் 8ஆம் நாளன்று ஜம்முவில் தொடரும் மஸ்த் பணிக்காக, சாஞ்சி, காக்கா, பைதூல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர்களில் ஒருவருடன் பாபா லாஹூரிலிருந்து புறப்பட்டார். ஆதி சீனியர் நாசிக் திரும்பிச் சென்றார். பாபாவும் குழுவும் பிரீமியர் ஹோட்டலில் (PREMIER HOTEL) தங்கியிருந்து, மறுநாள் காலையில் நான்கு மஸ்துகளைக் கண்டுபிடித்து, அவர்களைத் தொடர்பு கொண்டு, அதன் பின்னர் அன்றிரவு லாஹூரை நோக்கி ஒரு நெரிசலான ரயிலில் புறப்பட்டனர். ஒரு முரட்டுத்தனமான பட்டான் வம்சாவளி, அவர்களுக்கு இடம் கொடுக்க மறுத்துவிட்டதால், பாபா இரண்டு அந்நியர்களுக்கு இடையில் அமர வேண்டியிருந்தது. மண்டலி சாமான் மூட்டைகளில் அமர வேண்டியதாயிற்று. லாஹூரில், பாபா அதிகாலை 3:00 மணிக்கு மண்டலியின் இருப்பிடத்திற்குச் சென்று, நீராடி, சில மணி நேரம் ஓய்வெடுத்த பின்பு, மீண்டும் ரயில் நிலையத்திற்குச் சென்று ஜலந்தர் மற்றும் ஹோஷியார்பூருக்குப் பயணத்தைத் தொடர்ந்தார்.

நவம்பர் 11ஆம் நாள், பாபா சந்தித்த பல மஸ்துகளில், இரண்டு தொடர்புகள் மிகவும் சுவாரஸ்யமானவை. ஒருவர் ஹோஷியார்பூரில் வாழும் ‘மஸ்தானி பாபா’ (MASTANI BABA) என்றழைக்கப்பட்ட வயதான பெண்மணி. அவருக்கு ஏராளமான சீடர்களும் பக்தர்களும் இருந்தனர்; மேலும் நகர நுழைவாயிலுக்கு அருகில் அவரது இருக்கை அமைக்கப்பட்டிருந்தது. அவர் உன்னதமான பாரம்பரிய தோற்றத்தைக் கொண்டிருந்தார், வழக்கமாக ஒரு ஹூக்காவை புகைத்துக் கொண்டிருந்தார். பாபா அவருக்கு சிறிதளவு உணவூட்டினார்.

அதே நாளில் இரண்டாவது தொடர்பாக, 'ஹர்மோயா' (HARMOYA) எனும் கிராமத்தில் 'பாபா ஹாஸன் வாலி' (BABA HASAN WALI) என்றழைக்கப்பட்ட ஒரு சிறப்பான மஸ்துடன் பணிபுரிந்தார். ஏறக்குறைய 60 வயதான, முற்றிலும் நிர்வாணமாக, மிகவும் தடித்த உடலைக் கொண்ட இவர் ஒரு மரத்தின் கீழ் தனது இருப்பிடத்தை அமைத்திருந்தார். கிராமப்புறங்களில் பிரசித்திபெற்ற இவருக்கு ஏராளமான சீடர்கள் இருந்தனர்.

பல ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு கிராமத்து பெண்மணி அந்த வாலியின் சீடராக விரும்பி, அவரது வேண்டுகோளைத் தொடர்ச்சியாக முன்வைத்தது அவரை மிக்க கோபத்திற்குள்ளாக்கியது. ஒரு நாள் அவர் அந்தப் பெண்மணியின் தலையில் கடுமையாகத் தாக்கியதில் அவர் உயிரிழந்தார். அந்த நேரத்தில் ஹாஸன் வாலி யார் என்று பொதுமக்களுக்குத் தெரியாத தருணத்தில், அவர் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு மனிதக் கொலைக்கான தண்டனையைப் பெற்றார். பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு, விடுதலையான பின்னர், அவர் ஹர்மோயா கிராமத்திற்குச் சென்று அங்கே குடியேறினார்; படிப்படியாக நாளடைவில் ஒரு வாலியாக மதிக்கப்பட்டார்.


1943 நவம்பர் 13ஆம் நாள், பாபாவும் மண்டலியும் லாஹூருக்குத் திரும்பி வந்தனர். குல்மாய், காக்காவுடன் ரயிலில் அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அடுத்த நாளன்று, டாக்டர் டான், இரண்டு நாட்களுக்காக வருகை தந்தார். நவம்பர் 18 அன்று மினூ கராஸ் வந்தபோது, எதிர்வரும் மே மாதம் மெஹராபாத்திற்கு வரவும், ஒரு மாதம் அங்கேயே தங்கியிருக்கவும் பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

ஐந்து மாதங்களுக்கும் மேலாக லாஹூரில் தங்கியிருந்த பின்பு, நவம்பர் 20 அன்று பெரும்பாலான ஆண், பெண் மண்டலி அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். மன்மாட் வழியாக மெஹராபாத் சென்றனர். பெண்கள் குழுவை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட பீலாமாய், பயணத்தின் போது, எந்தவோர் ஆண்மகனும் தங்கள் பெட்டியில் நுழைய முயன்றால், பீலாமாய் உருது மொழியில் 'ஜனானா! ஜனானா!' (JANANA) இது ஒரு 'மகளிர்கான' பெட்டியாகும், எந்த ஆண் மகனும் நுழையக்கூடாது எனக் குரல் கொடுத்தார். மார்கரெட் அவரை, 'பனானா! பனானா! என்று கூறி கேலி செய்தார்.

பாபா, மறுநாள் லாஹூரிலிருந்து காரில் புறப்பட்டு, அமிர்தசரஸில் அமைந்த பொற்கோயிலுக்கு (GOLDEN TEMPLE) மெஹரா, மணி, மெஹரு, கிட்டி ஆகியோருடன் சென்றார். உடன் சென்ற சாஞ்சி பயண ஏற்பாடுகளை கவனிப்பதிலும், பைதூல், பாபாவின் மஸ்த் பணியிலும் உதவியாக இருந்தனர்.

பின்னர் அவர்கள் ரயிலில் மறுநாள் காலை டெல்லி வந்தடைந்து, பாபா, நிக்கல்ஸன் சாலையில் அமைந்த கேக்கி தேசாயின் இல்லத்திற்கு சில

மணிநேரம் விஜயம் செய்து, பிற்பகல் **4:00** மணிக்குப் புறப்படும் டெல்லி எக்ஸ்பிரஸில் தனது பயணத்தைத் தொடர்வதற்கு முன்பு குதுப் மினாருக்கும் (KUTUB MINAR) சென்று வந்தார். முதல் குழு நவம்பர் 22ஆம் தேதி மெஹராபாத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, பாபாவும் மண்டலியும் மூன்று நாட்கள் உதய்பூர் பயணத்திற்குப் பின்னர், **29**ஆம் தேதி வந்து சேர்ந்தனர்.



பெண் மண்டலியுடன் மெஹர் பாபா

(MEHER BABA WITH WOMEN MANDALI )

(இ - வ, L - R) **மன்ஸாரி** (MANSARI)**, மெஹரு ஜெஸவாலா** (MEHERU JESSAWALA)**,**
**ஸூனாமாசி** (SOONAMASI)**, கெய்மாய்** (GAIMAI)**, குல்மாய்** (GULMAI)

# பிம்பல்காவ்ம் & ஔரங்காபாத்

**(Pimpalgaon & Aurangabad)**

1940ஆம் வருடம் ஏலத்தில் வாங்கப்பட்ட 'பிம்பல்காவ்ம்' (PIMPALGAON) ஓய்வு இல்லம் பின்பு 'மெஹராஸாத்' (MEHERAZAD) என்று பெயரிடப்பட்டது. மெஹராபாத் திரும்பி வந்ததும், 1943 நவம்பர் 30 செவ்வாய்க்கிழமை அன்று ஸரோஷின் காரில் ஆதி சீனியர், காளேமாமா, பாதிரி, பெண்டு, ஸரோஷ் ஆகியோருடன் பாபா அதைப் பார்வையிடச் சென்றார்.

மாஸாஜி, குஸ்தாஜி, அவருடைய சகோதரர் ஸ்லாம்ஸன் மூவரையும் பாபா, பிம்பல்காவ்மில் வாழ அனுப்பி வைத்து, பெண் மண்டலிக்கு இந்தத் தகவலை வழங்கினார்: "**எனது பணிக்காக, நான் பிம்பல்காவ்மில் மெஹரா, மணி, மெஹரு, மார்கரெட், வாலு ஆகியோருடன் வசிக்க வேண்டும். எஞ்சியுள்ள நீங்கள் அனைவரும் தொடர்ந்து மெஹராபாத்தில் தங்கியிருந்து எனது பணியில் உதவ வேண்டும்.**"

மன்ஸாரியைப் பார்த்து பாபா, "**நீங்கள் மெஹராபாத் மலையில் தனியாக இருந்தால் நான் மிக்க மகிழ்ச்சியடைவேன்**" என்று கூறினார்.

மன்ஸாரி அழத் தொடங்கினார், "நான் உங்களுடன் தங்க வந்திருக்கிறேன், பாபா. நான் எப்படித் தனியாக இருக்க முடியும்?"

பாபா அவரிடம், "**நீங்கள் என்னுடன் தங்க விரும்பினால், எனது விருப்பத்திற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும். நீங்கள் அதைச் செய்ய முடியாவிட்டால், உடல் ரீதியாக என்னுடன் இருந்தாலும், நீங்கள் என்னுடன் இல்லாதது போலத்தான். எனது விருப்பத்தை ஏற்று, என்னை மகிழ்விப்பதாக இருந்தால், தொலைதூரத்தில் இருப்பதன் மூலம், நீங்கள் உண்மையிலேயே என்னுடன் எப்பொழுதும் இருப்பீர்கள்!**"

மன்ஸாரி தேம்பித் தேம்பி அழுதார், பாபா தீவிரமான தொனியில், "**நீங்கள் சுத்த பைத்தியம்! நான் உங்களை என்னிடமிருந்து விலக்கி வைக்கவில்லை. நீங்கள் என்னிடமிருந்து விலகியிருக்க விரும்பினாலும், நான் அதை அனுமதிக்க மாட்டேன்**" என்று கூறினார்.

பாபா, பெண்மணிகளை 1943 டிசம்பர் 3 அன்று ஸரோஷ் சினிமாவில் ஒரு காலை காட்சிக்கும், ஒரு வாரத்திற்குப் பின்னர் 10ஆம் நாள் சித்ரா டாக்கீஸில் வேறொரு திரைப்படத்திற்கும் அழைத்துச் சென்றார்.

1943 டிசம்பர் மாதத்தில், ஈரானி இனத்தைச் சார்ந்த ஒருவர் மெஹராபாத்திற்கு வந்து 500 ரூபாயை பாபாவின் காலடியில் வைக்க விரும்பினார். பாபா, அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால் அந்த மனிதர் மீண்டும் மீண்டும் கெஞ்சி வேண்டிக் கொண்டதால், பாபா அதை எரச்சிடம் கொடுக்கும்படி அவரிடம் கேட்டுக்கொண்டார், "**நீங்கள் (எரச்) இந்த தொகையை மிகவும் ஏழ்மையான, அதேநேரத்தில் கைகளை ஏந்தி யாசிக்க**

**முடியாத ஒரு குடும்பத்திடம் ஒப்படைக்க வேண்டும். இதுபோன்ற ஒரு குடும்பம் இருக்கும் இடத்தை நீங்கள் இயற்கையாகவே அறிந்து கொள்வீர்கள்.**"

டிசம்பர் இறுதியில் பூனா நகரில் தரிசனம் வழங்க பாபா இணக்கம் தெரிவித்தபோது, எரச் முன்கூட்டியே அங்கு அனுப்பப்பட்டார். அஹமதுநகரில் அத்தகைய குடும்பத்தைத் தேட எரச்சிற்கு நேரமில்லாததால், அவர் பூனா சென்றபோது, அவருடன் 500 ரூபாயையும் எடுத்துக் சென்று, தனது தேடலைத் தொடங்கினார். ஒரு நாள் அவர், ஒரு கடையில் கரும்புச் சாற்றைப் பருகிக் கொண்டிருந்த வேளையில், வேறு சில வாடிக்கையாளர்கள் தங்களுக்குள் பேசியது அவருடைய செவிகளில் விழுந்தது. ஒருவர், "என்ன ஆச்சரியம் பாருங்கள், செல்வந்தர்கள் மிகவும் ஏழ்மையானவர்களாகவும், வறியவர்கள் பெரிய பணக்காரர்களாகவும் மாறியிருப்பது! என்னே கடவுளின் செயல்" என்று கூறினார்.

கடைக்காரர் அவர் கூறியதற்கு உடன்பட்டுத் தலையசைத்து இவ்வாறு கூறினார்: "'போர்' (BHOR) கிராமத்தில் மிகவும் நம்பிக்கைக்குரிய ஒருவரை நான் அறிவேன். முன்னதாக, தலைமை எழுத்தராக இருந்து, பின்னர் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். முற்றிலும் நேர்மையானவர் என்ற நற்பெயரைக் கொண்டிருந்ததால், நீதிக்காகப் போராட அவர் அஞ்சவில்லை. எப்பொழுதும் லஞ்சத்தை ஏற்றுக் கொள்ளும் அவரது மேல் அதிகாரிகள் அவரைக் கண்டு பொறாமை கொண்டு, ஏழ்மை நிலைக்குத் தள்ளி, அதீத துன்பங்களை சந்திக்கச் செய்தனர். ஏழை மனிதனுக்கு, திருமண வயதில் இரண்டு மகள்கள் உள்ளனர், ஆனால் இப்போது அவர் காசு, பணம், உண்ண உணவு, உடை எதுவுமின்றி திண்டாடுகிறர்."

வாடிக்கையாளர்கள் சென்ற பின்னர், எரச் அந்த நபரின் பெயரையும் முகவரியையும் கேட்டறிந்து, போர் கிராமத்திற்கு விரைந்தார். வீட்டைச் சென்றடைந்ததும், குடும்பத்தாரின் பரிதாப நிலையைக் கண்டு, எரச்சின் இதயம் நெகிழ்ந்தது. மகள்கள் பழைய கந்தலான ஆடைகளை அணிந்திருந்தனர், அவர்களின் சிறிய வீடு பாழடைந்த நிலையில் இருந்தது. எரச், காக்கி உடை அணிந்திருந்ததால், அவரைப் பார்த்ததும், இருவரும் பயந்துபோயினர், அவர் ஓர் இராணுவ அதிகாரி அல்லது போலீஸ்காரர் என்று அவர்கள் நினைத்தனர். ஒரு மகள் அழுது கண்ணீர்விட்டுக் கதறினார், "நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை; கடவுளின் நிமித்தம், எங்களை விட்டு விடுங்கள்."

"சகோதரி, பயப்படாதீர்கள்; நான் உங்களுக்கு உதவ வந்துள்ளேன். எனது மூத்த சகோதரர் உங்களுக்கு உதவி செய்ய என்னை அனுப்பியுள்ளார்" என எரச் அவரை ஆறுதல் படுத்தினார்.

இதர மகள், "எனது தந்தை வேலையில்லாமல் இருக்கிறார், அவர் இப்போது வெளியே சென்றுள்ளார், இரவில் திரும்புவார். தயவுசெய்து நாளை வாருங்கள், ஏனெனில் நாங்கள் எந்தக் கடனையும் செலுத்த முடியாது."

"நான் எந்தக் கடனையும் வசூலிக்க வரவில்லை" என்று எரச் விளக்க முயன்றார்: "நான் அவருக்கு எனது மூத்த சகோதரரின் அன்பளிப்பை வழங்க வந்துள்ளேன். தயவுசெய்து உங்கள் தந்தையிடம் நாளை இங்கே இருக்கச் சொல்லுங்கள்."

எரச் பூனாவிற்குத் திரும்பி வந்து, மறுநாள் மீண்டும் 'போர்' கிராமத்திற்குச் சென்று அந்த நபரை சந்தித்தார். எரச் தனது பணியை அவருக்குத் தெரிவித்ததும், அந்த நபர், "உங்களை அனுப்பியவர் யார்?" என வினவினார்.

பாபாவின் பெயரைச் சொல்லக்கூடாததால். "கடவுளின் வழிகாட்டுதலுக்கு இணங்க, எனது மூத்த சகோதரர் என்னை இங்கு அனுப்பியுள்ளார். இந்தப் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கோரி, பாபாவின் அறிவுறுத்தலின்படி எரச் அந்த மனிதனின் கால்களைத் தொட்டு, பணத்தை அவரிடம் கொடுத்தார்.

அந்த நபர் அழுதுகொண்டே இவ்வாறு வெளிப்படுத்தினார், "நண்பரே, நீங்கள் இன்று வந்திருக்காவிட்டால், நான் நாளை உயிருடன் இருக்க மாட்டேன்! நான் தற்கொலை செய்ய முடிவு செய்திருந்தேன். திருமண வயதில் இந்த சிறுமிகளின் சுமையோடு, எனது கழுத்து வரை இருக்கும் கடனுடன் நான் எவ்வளவு காலம் வாழப்போகிறேன்? எங்கள் நிலையை நீங்களே பார்க்க முடியும். எங்களுக்குத் துணிமணிகளும் இதர பொருட்களும் உடனடியாகத் தேவை. ஆனால் கடவுளோ கருணையின் பெருங்கடல்! எங்களுடைய நன்மைக்காகவே அவர் எம்மை இவ்வாறு வைத்திருக்கிறார்."

பக்திமிக்க அந்த மனிதனை வணங்கி, எரச் திரும்பிச் சென்றார். அன்பான பாபாவின் இறை நாடகம் அப்படித்தான்! அவர் ஒவ்வொரு நொடியிலும் ஒவ்வொருவரையும் பாதுகாப்பவர், அவரிடமிருந்து எதுவும் மறைக்கப்படுவதில்லை!

1943, டிசம்பர் 25 அன்று சுவிட்சர்லாந்தில் வால்டர் மெர்டென்ஸ் காலமானதாகத் தொலைத்தந்தி வந்தது. பாபா, ஹெடி மெர்டென்ஸுக்கு ஆறுதலான, அன்பான செய்தியை அனுப்பி வைத்தார். ஹெடி, இறுதி நாட்களில் தனது கணவரின் படுக்கையருகில் தொடர்ந்து இருந்தார். ஆனால் அவர் வெளியே சென்ற அந்த ஒரு நிமிடத்தில் வால்டர் உயிரைத் துறந்தார். ஹெடி பின்பு பாபாவிடம் ஏன் அந்த கணத்தில் அவர் இறக்க வேண்டும் என வினவினார். பாபா அவரை ஆறுதல்படுத்தினார், "**அதுவே அவர் செல்ல முடிந்த ஒரே தருணம். உங்கள் அன்பு அவரைத் தடுத்து வைத்திருந்தது.**"

மெஹராவின் பிறந்தநாளை முன்னிட்டு பப்பா ஜெஸவாலா, எரச், சதாஷிவ் பாட்டீல் ஆகியோர் பூனாவில் ஒரு சிறிய தரிசன விழாவை ஏற்பாடு செய்தனர்; டிசம்பர் 30ஆம் நாள் ஸரோஷ், பாபாவை அங்குக் காரில் அழைத்துச் சென்றார்; மெஹரா, மணி, மார்கரெட், மெஹரு, வாலு

ஆகியோரும் உடன் சென்றனர். பெண்மணிகள் பிந்த்ரா ஹவுஸில் தங்கியதால், அவர்களைப் பார்க்கக் கூடாது என்பதற்காக, பப்பாவும் எரச்சும் கேரேஜுக்குள் தங்க வேண்டியிருந்தது.

பாபா தனது நெருங்கிய அன்பர்களுக்கு 1943 டிசம்பர் 31 வெள்ளிக்கிழமை பிந்த்ரா ஹவுஸுக்கு எதிரே அமைந்த 'அஹில்யா ஆசிரம பள்ளி' (AHILYA ASHRAM SCHOOL) மண்டபத்தில் தரிசனம் வழங்கினார். பல அன்பர்கள் கஸ்பாபேட், அஹமதுநகர், ஷோலாபூர், மும்பை, நாசிக் போன்ற இடங்களிலிருந்து வந்திருந்தனர். காலை 9:00 முதல் மதியம் வரை, பிற்பகல் 3:00 முதல் இரவு 10:00 மணி வரை தரிசன நிகழ்ச்சி தொடர்ந்தது. பக்தர்கள் பாபாவின் பாதங்களைத் தொடக்கூடாது என அறிவுறுத்தப்பட்டனர், ஆனால் கைகளால் வணங்கி, ஒரு பெரிய அத்திப்பழத்தைப் பிரசாதமாகப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியின் மறுநாள், மெஹர் பாபா, பப்பா ஜெஸவாலாவை, பிந்த்ரா ஹவுஸ் வாயிலுக்கு அருகில் கண்காணிக்கும்படி உத்தரவிட்டார்; எவரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்று கூறியதும், பப்பா தனது பணியைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு வாசலில் நின்றார்.

சிறிது நேரத்தில், பாபாவைப் பார்க்க வந்த டாக்டர் கனியை, பப்பா, உள்ளே நுழையவிடாமல் தடுத்தார். கோபமடைந்த கனி, "நான் உள்ளே செல்ல முடியாது என்று சொல்ல நீங்கள் யார்?" என வினவினார்.

"இது பாபாவின் உத்தரவு" என்றார் பப்பா.

"உள்ளே போய் நான் வந்திருப்பதாக, பாபாவிற்குத் தெரிவிக்கவும். அவரே என்னை அழைத்தார், நான் அவரைப் பார்க்கவேண்டியது அவசியம்."

"எவரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்று மட்டும் பாபா என்னிடம் கூறினாரே தவிர, யாருடைய வருகையையும் அவருக்குத் தெரிவிக்கும்படி அவர் சொல்லவில்லை."

ஜன்னலிலிருந்து சிறிது நேரம் இந்தக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்த பாபா இருவரையும் உள்ளே அழைத்து, **"நான் உங்களை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் 100 சதவிகிதம் உங்கள் கடமையைச் செய்கிறீர்கள். இதுவே எனக்குக் கீழ்ப்படியும் வழி. ஓர் அரசன் வந்தாலும், அவரை உள்ளே நுழைய அனுமதிக்காதீர்கள்! நீங்கள் மட்டுமே எனக்கு முழுமையாகக் கீழ்ப்படிகிறீர்கள். நீங்கள் ஒரு நம்பகமான மனிதர்"** என்றார்.

பப்பா பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டிருந்த வேளையில், டாக்டர் கனி கிண்டலாகக் கேட்டார், "அவரை நம்ப முடியும், ஆனால் எங்களை அல்ல?"

பாபா, **டாக்டர்** கனியைப் பார்த்து கண்களால் ஜாடை செய்ததும், அவர் அமைதியாக இருந்தார்.

பப்பா உடனே, "நான் எவரையும் உள்ளே நுழைய அனுமதிக்க மாட்டேன், பாபா. ஆனால் நீங்களும் எவரையும் அழைக்கக்கூடாது" என்றார்.

"**இது முற்றிலும் உண்மை**," என்று பாபா சைகையால் தெரிவித்து, "**நான் வேறு எவரையும் அழைக்க மாட்டேன்**" என்றார்.

பாபா உறுதியளித்ததும், பப்பா, வாயிலின் அருகே சென்று தனது பணியை மீண்டும் தொடங்கிய சிறிது நேரத்தில், பழைய மண்டலியில் ஒருவரை சந்திக்க நேர்ந்தது - அஹமதுநகரின் டாக்கே.ஃபால்கர். பப்பா அவரைத் தடுத்ததும், டாக்கே கோபமடைந்தார். பின்பு பப்பா, பாபாவிடம் சென்று, "என்ன வகையான படிப்பறிவற்றவர்கள் உங்களிடம் வருகிறார்கள்? அவர்களுக்கு, கீழ்ப்படிதல் பற்றி எதுவும் தெரியாது. டாக்கே, ஒரு பீரங்கியால் சுடப்பட வேண்டும்! அவர் ஒரு மோசமான மண்டலி, உங்கள் தரிசனத்தை நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றார்.

பாபா, உடனே மெஹர்வானை அழைத்து, "**டாக்கே.ஃபால்கரை வெளியேறச் சொல்லுங்கள். அவருடைய கருமூஞ்சியை நான் பார்க்க விரும்பவில்லை!**" இது பப்பாவிற்கு மனநிறைவாக இருந்தது, அவர் அமைதியடைந்தார். சிறிது நேரத்தில், பாபா ஒரு வேலையின் நிமித்தம் பப்பாவை அனுப்பிவிட்டு, டாக்கேயை உள்ளே அழைத்தார். பாபா அவரை சந்தித்ததும், அவர் திரும்பிச் சென்றார்.

பப்பா திரும்பி வந்து வாயிலில் தனது கண்காணிப்பை மீண்டும் தொடர்ந்தார். அப்போது காடேக்கர் தனது மனைவி குணாதாயுடன் வந்தார். பப்பா, பாபாவிற்குத் தகவலைத் தெரிவித்ததும், பாபா அவரைக் கேலி செய்தார், "**நீங்கள் ஒரு ராஜாவைக் கூட உள்ளே அனுமதிக்க மாட்டீர்கள் என்ற முழு நம்பிக்கையை உங்களிடம் வைத்துள்ளேன். காடேக்கர் உங்களை எப்படி மயக்கினார்?**"

"பாபா, அவர்கள் இருவரும் உங்களின் மிகப் பெரிய அன்பர்கள்; ஒரு பேரரசரை விட மேலானவர்கள்! அவர் உங்கள் அன்பை எல்லா இடங்களிலும் பரப்புகிறார்."

"**நீங்கள் இந்த அளவிற்குப் புகழ்வதால், நான் அவர்களை சந்திக்கிறேன், உள்ளே அனுப்புங்கள்**." காடேக்கரும் அவரது மனைவியும் உள்ளே சென்று பாபாவை சந்தித்தனர். உண்மையில், பாபா அவர்களைப் பார்க்க விரும்பினார், பப்பாவின் புகழ்ச்சி அவருக்கு ஒரு சாதகமான சாக்குப்போக்காக அமைந்தது.

சில நாட்களில், காடேக்கர் அஹமதுநகருக்கு மாற்றப்பட்டார், அங்கு அவர் குடும்பத்துடன் 'முத்தா பங்களா'வில் (MUTHA'S BANGALOW) வாழ்ந்து வந்தார். வீட்டில் ஒரு சிறப்பு அறை, பாபாவுக்காக வைக்கப்பட்டது. ரயில் நிலையம் போகும் பாதையில் பங்களா அமைந்திருந்ததால், பாபா மெஹராபாத் செல்லும் வழியில் அங்கேயே நின்றுவிடுவது வழக்கம்; ஆனால் அவர் தனது வருகையைக் குறித்து முன்கூட்டியே தெரிவித்ததில்லை. ஒருமுறை குணாதாய் அவரிடம் புகார் கூறினார், "பாபா, எங்களுக்குத் தெரியாமல் ஏன் எதிர்பாராமல் வருகிறீர்கள்? வீடு சில நேரங்களில் இதுபோன்ற குழப்ப

நிலையில் இருக்கும். நீங்கள் வருவதை நாங்கள் அறிந்தால், எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்திருக்க முடியும்."

பாபா சிரித்தபடி, "**இது உங்கள் வீடா? இது எனது வீடு. நான் எனது சொந்த வீட்டிற்கு வருவதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமா?**" அவர்கள் பாபாவிற்கு அவரது அறையைக் காண்பித்தார்கள், பாபா, மிக்க மகிழ்ச்சி அடைந்தார், ஆனால் "**இந்த ஒரே அறையில் மட்டும் என்னைப் பூட்டி வைக்க விரும்புகிறீர்களா? ஒவ்வோர் அறைக்கும் நான் செல்ல விரும்புகிறேன்**" என்று குறிப்பிட்டார். அவரது ஆய்வுப் பயணத்திலிருந்து சமையலறைக் கூட விடுபடவில்லை.

ஒரு முறை பாபா, காடேக்கர் வீட்டிற்கு வந்து, "**இன்று நானே சமையல் செய்ய விரும்புகிறேன்**" என்று சுட்டிக்காட்டி, உருளைக்கிழங்கைத் தோலுரித்து, பஜ்ஜி தயார் செய்யத் தொடங்கினார்.

1944, ஜனவரி 1ஆம் நாள், பாபா பூனாவிலிருந்து மெஹராபாத் திரும்பி வந்தார். அடுத்த சில வாரங்களில், பாபா மெஹராபாத், பிம்பல்காவ்ம் இரண்டு இடங்களுக்குமிடையே முன்னும் பின்னுமாகப் பயணம் செய்தார். அவர் பெண் மண்டலியுடன் தங்குவதற்கு வசதியான ஒரு வீட்டைக் கண்டுகொள்ள ஜனவரி 3 இரவு ஆதி சீனியருடன் ரயிலில் ஔரங்காபாத் சென்றார். 'பிரேம் பஸேரா' (PREM BASERA) என்ற பங்களாவில் அவர்கள் ஒரு நாள் தங்கியிருந்தனர், அதன் உரிமையாளர் அந்த வீட்டை வாடகைக்குக் கொடுத்து, பாபாவிற்கும் மண்டலிக்கும் உணவு வழங்கவும் தயாராக இருந்தார்.

பாபா ஜனவரி 9 முதல் பிம்பல்காவ்மில் தங்கத் தொடங்கினார்; ஆதி சீனியர், முஹமது மஸ்தை 10ஆம் தேதி ஒரு நாளுக்காக அங்கு அழைத்து வந்தார். குல்மாயும் ஜனவரி 15 அன்று மதியம் 1:00 மணிக்கு பிம்பல்காவ்ம் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அவ்வேளையில் துப்புரவாளரின் மகன் அமீர் மெஹராபாத்தில் தங்கியிருந்தார். மகளிர் அறைகள் மற்றும் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்காக அவரது தாயும் இரண்டு சகோதரிகளும் மெஹராபாத் மேல்மலைக்கு அழைத்து வரப்பட்டனர். சகோதரிகளில் ஒருவரான காஜா (KHAJA) என்பவருக்கும், அமீருக்கு அளித்ததைப் போலவே சிறப்பு கவனிப்பும், பராமரிப்பும் வழங்கப்பட்டது; பெண் மண்டலி அவரை பிரமாண்டமான பாணியில் நடத்திவந்தனர். இரண்டாவது சகோதரியும் அங்கேயே இருந்தார், ஆனால் அவர் ஒரு சில சிறிய வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. இயற்கையாகவே தனது புதிய அந்தஸ்தை அனுபவித்த காஜாவிற்கு எல்லா பெண்மணிகளும் மரியாதை செலுத்த வேண்டியிருந்தது.

காஜா அஹமதுநகரில் தனது தந்தையின் இல்லத்திற்குச் செல்லும்போது, அவர் சாதாரண உள்ளூர் பேருந்தில் பயணம் செய்யவில்லை. அனைத்து பக்கங்களிலும் திரைச்சீலைகள் வரையப்பட்டு, சிதுவால்

இயக்கப்படும் தனியார் டோங்காவில் அவர் பயணம் செய்தார். சிது அவரைப் பார்ப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது; காஜாவின் வீட்டின் முன்னால் டோங்காவை நிறுத்தும் வேளையில், அவர் வீட்டிற்குள் நுழையும் வரை, சிது, சிறிது தொலைவில் மறைந்து நின்று கொண்டிருந்தார். வழிப்போக்கர்கள் காஜாவை மிகவும் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்று நினைத்தனர்.

பாபா, காளேமாமாவை ஷோலாபூருக்கு அனுப்பி, அங்கு இந்தக் குடும்பத்தினர் தங்குவதற்குப் பொருத்தமான ஒரு நல்ல பங்களாவைக் கண்டுபிடித்தார்; எல்லா பக்கங்களிலும் மூங்கில் விரிப்பால் மறைக்கப்பட்டிருந்தது. பங்களா தயாரானதும், பாபா ஆதியின் காரில் தாயார், காஜா, அவரது சகோதரி மற்றும் அமீரை பிப்ரவரி 1ஆம் நாள் ஷோலாபூருக்கு அனுப்பி வைத்தார். அவர்களை கவனிக்கும் பொறுப்பு காளேமாமாவிற்கு வழங்கப்பட்டது.

முன்னதாக, அவர்கள் குற்றேவல் பணிபுரியும் துப்புரவாளர்களாக இருந்தனர் - கழிவறைகளை சுத்தம் செய்து, வீட்டு ஊழியர்களாக பணிபுரியும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் - இப்போது இளவரசிகள் மற்றும் இளவரசர்களாக ராஜபோக வாழ்க்கையை வாழத் தொடங்கினர்! ஒரு பிராமணராக இருந்த காளேமாமா, அவர்களை கவனித்து, அவர்களின் வசதிக்கு ஏற்ப அனைத்தையும் ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. அமீருக்கு கிருஷ்ணா பணிவிடை செய்ததைப் போலவே, அவரது பாரபட்சம் பார்க்கும் தவறான எண்ணங்களின் மனப்படிவங்களைத் துடைக்க, பாபா, அவருக்கு இந்த கடமையை வழங்கியிருந்தார், மேலும் அவர் அந்தக் குடும்பத்தாரின் ஒவ்வொரு மனம்போன போக்கின் தேவைகளுக்கும் தலைவணங்க வேண்டிய கட்டாயம்.

ஹரிஜன மக்களுக்கு சேவை புரியும் இந்த இடைஞ்சலான சூழ்நிலையை எதிர்கொள்வது தவிர, ஷோலாபூரில் காளேமாமாவிற்குப் பலரைத் தெரியும். பங்களாவில் புதிதாகக் குடிவந்தவர்கள் யார் என்று விசாரிக்கும் வேளையில், காளேமாமா என்ன சொல்ல முடியும்? அவர் தனக்குப் பரிச்சயமானவர்களிடமிருந்து ஒளிந்துகொண்டு அவர்களின் சங்கடமான கேள்விகளைத் தவிர்க்க முயற்சித்தார். ஆனால் பஜாருக்குச் சென்றபோது, அவர் யாரேனும் ஒரு நபரை அல்லது இன்னொருவரை எதிர்கொள்ளும் நிலை உருவாயிற்று. அவர் நண்பர்களைத் தவிர்க்க முயற்சிப்பதன் காரணத்தை வினவியபோது, காளேமாமா இவ்வாறு பதிலளித்தார்: “பக்தியில் ஒன்றிணைந்த யாத்ரீகருக்கு ஆன்மீகப் பாதையில் இடையூறுகள் விளைவிக்கும் எந்த இடத்திற்கும் அவர் செல்ல அனுமதிக்கப்படவில்லை.”

பாபாவின் சகோதரர் பெஹராமின் மகன் மற்றும் மகள், ஷெரூ, குல்னார் இருவரின் ஸொராஸ்ட்ரியன் நவ்ஜோத் (NAVJOT - புனித நூல்) விழா 1944, ஜனவரி 29 அன்று மெஹராபாத்தில் பாபா முன்னிலையில் நடைபெற்றது.

ஒரு வாரத்திற்குப் பிறகு, பிப்ரவரி 5ஆம் நாள், மெஹரா, மணி, மெஹரு, மார்கரெட், வாலு ஆகியோருடன் பாபா ஔரங்காபாத்திற்குப் புறப்பட்டார். நகரத்தின் 'காட்டி' (GHATI) வட்டாரத்தில் ஆதி சீனியர் ஏற்பாடு செய்த 'பிரேம் பஸேரா' பங்களாவில் பெண்மணிகளும், அதை ஒட்டியிருந்த உறைவிடத்தில் சாஞ்சி, காக்கா, ஆதி சீனியர், மாஸாஜி ஆகியோருடன் பாபாவும் தங்கியிருந்தனர். வெங்கோபா ராவ் இரவு காவலுக்காக அழைக்கப்பட்டார்; பின்பு கிருஷ்ணாவும், சில நேரங்களில் காக்கா, மாஸாஜி அவர்களும் இரவு கண்காணிப்புக் கடமையைப் பகிர்ந்து கொண்டனர்.

பாபா, பின்பு மெஹராபாத்தில் இருந்த இதர பெண்மணிகளையும் ஒரு வாரம் ஔரங்காபாத்தில் வந்து தங்குவதற்காக அழைத்தார். வந்ததும் பெண்மணிகள், பாபாவும் மண்டலியும் இருந்த வீட்டை ஆக்கிரமிக்க, அவர்கள் 'பிரேம் வில்லா' (PREM VILLA) எனும் வேறொரு வாடகை பங்களாவிற்கு இடம் பெயர்ந்தனர். பாபா அனைவரையும் தௌலாதாபாத் கோட்டை (DAULATABAD FORT) மற்றும் எல்லோரா குகைகளைப் (ELLORA CAVES) பார்க்க அழைத்துச் சென்றார்; ஒரு வாரத்திற்குப் பிறகு, மெஹராபாத் பெண்மணிகளைத் திருப்பி அனுப்பினார்.

பிரேம் வில்லாவில் பாபாவின் மஸ்த் பணியைத் தொடரும் நோக்கத்தில், அவர்களைத் தேடி அழைத்து வர பைதூல் ஔரங்காபாத்திற்கு அழைக்கப்பட்டார். பாபா, இந்த மஸ்துகளுடன் பிப்ரவரி 12ஆம் நாளிலிருந்து தினமும் காலை எட்டு மணி முதல் நண்பகல் வரை பணிபுரிந்தார். 1939ஆம் ஆண்டில் பாபா, குல்தாபாத்தில் (KHULDABAD) தொடர்பு கொண்ட 'மாய் பாப்' (MAI BAP) என்றழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்தை ஆதி சீனியர் அழைத்து வந்தார். மாய் பாப் என்பது மக்களால் வழங்கப்பட்ட பெயர், அதற்கு, தாய்-தந்தை என்று பொருள்.

பிரேம் வில்லாவில் இந்த மஸ்த் சுமார் 20 நிமிடங்கள் பாபாவுடன் தனியாக அமர்ந்து, பின்னர் அறையை விட்டு வெளியே வந்து, "இந்தக் காட்டில் பல முட்கள் உள்ளன!" என்று கத்தினார்.

அவரை எப்படியோ இணங்கச் செய்து, பாபாவுடன் மீண்டும் அமர்ந்த அடுத்த பதினைந்து நிமிடங்களில் மீண்டும் கத்திக்கொண்டே வெளியே வந்து: "ஆணி ஒன்று என்னைத் துளைத்துவிட்டதால் வலியைத் தாங்க முடியவில்லை!" என்றார்.

இது, பாபா அவருக்கு வழங்கிய சில கடினமான ஆன்மீகப் பணிகளைக் குறிப்பதாக, காக்கா நினைத்தார். 'மாய் பாப்' மஸ்தை மீண்டும் குல்தாபாத்திற்கு அழைத்துச் சென்று, தொடர்ந்து ஏழு நாட்கள் அவரை அழைத்து வருமாறு காக்காவிற்கு அறிவுறுத்தப்பட்டது. இருந்தாலும், மஸ்த் மாய் பாப், மறுநாள் காக்காவுடன் வர மறுத்துவிட்டதால், பாபா ஒவ்வொரு மாலையும் அவர் தங்குமிடத்தில் அவரைத் தொடர்பு கொள்ளச் சென்றார்.

14ஆம் நாள், பாபா ஒரு மணி நேரம் சிக்கந்தர் (SIKANDER) என்ற மஸ்துடன் பணிபுரிந்து, அதே நாளில் மேலும் இரண்டு மஸ்துகளைத் தொடர்பு

கொள்ள காரில் வெளியே சென்றார். 17ஆம் தேதி அதிகாலையில் குல்தாபாத் சென்று, அவர் மாய் பாப் மற்றும் ‘வக்கீல்வாலா’ (VAKILWALLA) என்ற மற்றொரு மஸ்தையும் தொடர்பு கொண்டு, இருவரும் தொடர்புக்கு ஏற்றவர்கள் என்று மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

1944 பிப்ரவரி 21ஆம் நாள், மெஹர் பாபாவின் சகோதரர் ஆதி ஜூனியர் மற்றும் விலூவின் தங்கை குலு (GULU) ஆகியோரின் திருமணம் பூனாவில் நடந்தது. பாபா தனது ஆசீர்வாதங்களை ஔரங்காபாத்திலிருந்து அனுப்பி வைத்தார், ஆனால் திருமண விழாவில் கலந்து கொள்ளவில்லை. ஆதி சீனியர் 22ஆம் தேதி அதிகாலையில் பாபாவை டோக்கா (TOKA) கிராமத்திற்கு அழைத்துச் சென்றார்.

அவர் வங்காளத்தில் செய்ததைப் போல், அப்பகுதியின் ஏழை மக்களுக்கு, தானியங்கள் மற்றும் ஆடைகளை விநியோகிக்கும் திட்டத்தை, பாபா, வேகமாக வகுத்துக் கொண்டிருந்தார். எரச், ஜால்பாய் இருவரும் இந்தப் பணியில் உதவுவதற்காக பூனாவிலிருந்து அழைக்கப்பட்டனர். முதல் நிகழ்ச்சி 1944 பிப்ரவரி 25 அன்று நடைபெற்றது, இதில் ஔரங்காபாத் ‘டவுன் ஹாலில்’ (TOWN HALL) கூடியிருந்த ஒவ்வோர் ஏழை எளிய மக்களுக்கும் பாபா இரண்டு மீட்டர் துணியும் மூன்று கிலோ தானியமும் விநியோகித்தார். பிற்பகல் 1:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை கிட்டத்தட்ட 1200 பேருக்கு பாபா தொடர்ந்து பிரசாதத்தை வழங்கினார். தானியங்கள் சரக்கு வண்டிகளில் கொண்டு வரப்பட்டன, மேலும் இரண்டு மீட்டர் துணியில் மூன்று கிலோ தானியத்தை மண்டலி மூட்டைகளாகக் கட்டித் தயார் செய்தனர். இந்த மூட்டைகளைத் தயாரிப்பது சில காலமாக இரவு பகலாக நடந்து கொண்டிருந்தது. இதில் அற்புதம் நிறைந்த உண்மை என்னவென்றால், அந்த நாட்களில் உணவிற்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவியதால் மக்களுக்கு, தானியங்கள் பங்கீட்டு (RATION - ரேஷன்) முறையில் வழங்கப்பட்டன, மேலும் தானியம் சந்தையில் கிடைக்கவுமில்லை. தானியம், துணி ஆகியவை அரசாங்கத்திடமிருந்து மிக்க சிரமத்துடன் வாங்கப்பட்டன.

ஏழை மக்களைக் கண்டுகொள்வதில் மேலும் பல சிக்கல்கள் எழுந்தன. எரச் ஒரு டோங்காவில் நகரத்தைச் சுற்றி வந்து, ஒலிபெருக்கி மூலம் அறிவித்தார்: “ஏழை சகோதரர்களே! பிப்ரவரி 25 மதியம் 1:00 மணிக்கு ‘ஔரங்காபாத் டவுன் ஹாலில்’ இலவசமாக, தினை மற்றும் துணி விநியோகிக்கப்படும். இதை ஏற்றுக்கொள்வதன் மூலம் நீங்கள் எங்களுக்குப் பெரிய உதவியாக இருப்பீர்கள்.”

எரச் இந்த அறிவிப்பை வெளியிட்ட வேளையில், ஏமாற்றத்திற்கும், சினத்திற்கும் ஆளான சில குடிமக்கள், “எங்கள் கடைசி மூச்சு போகும் நிலையில், இந்த விநியோகம் செய்யப்படுகிறது” என்ற விரக்தி தோய்ந்த தொனியில் கூறினர். சிறுவர்கள் எரச்சின் டோங்காவைப் பின்தொடர்ந்து, சிரிப்பொலியோடு எரச்சின் வார்த்தைகளைக் கேலி செய்தனர்.

1944, மார்ச் 3 அன்று குல்தாபாத்தில் அமைந்த 'பானி பேகம் கார்டனில்' (BANI BEGUM GARDEN), இரண்டாவது முறையாக விநியோகம் நடைபெற்றது; இதை பைதூல், காக்கா, எரச், ஆதி சீனியர், ஜால்பாய் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

அவர்கள் ஏழைகளின் வீடுகளுக்கு முன்கூட்டியே சென்று, அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டனர். மக்களுக்கு இதை நம்புவது கடினமாக இருந்தது, ஏனெனில் அந்த நேரத்தில் தானியங்களை வாங்குவது கூட கடினமாக இருந்தது. இதன் விளைவாக, பலர் வர தயங்கினர்; இன்னும் பலர் இது ஒரு தயவற்ற புரளி என்று தவறான வதந்திகளை பரப்பினர். மண்டலிக்கு ஏற்கனவே சிரமமான இந்தப் பணி இதனால் மிகவும் கடினமாக இருந்தது.

மூன்றாவது விநியோக ஏற்பாடு 1944 மார்ச் 18 அன்று 'பைத்தான்' (PAITHAN) கிராமத்தில் நடைபெற்றது. பாபா 14ஆம் தேதி ஆதி சீனியர், ஜால்பாய் ஆகியோருடன் அங்குச் சென்று, ஐந்து நாட்களில் கிட்டத்தட்ட 3,000 பேருக்கு தானியங்கள் வழங்கினார். மண்டலி வீடு வீடாகச் சென்று அடையாள சீட்டுகளை விநியோகித்து, மக்களிடம் அதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். பாபாவே தனிப்பட்ட முறையில் அறநல பணிகளை மேற்பார்வையிட்டார்.

ஏழைகளுக்கு இந்த விநியோகங்களைச் செய்யும் வேளையில், பாபா தனது மஸ்த் பணியையும் தொடர்ந்தார். 'பிர்' (BIR) கிராமத்தில், பாபா 'சன்டு மியான்' (CHANDU MIAN) என்றழைக்கப்படும், வீதியில் வாழ்ந்த 'பாதிப் பைத்தியம், பாதி மஸ்தை' தொடர்பு கொண்டார், ஆனால் அந்த மஸ்த் தனியாக ஓரிடத்தில் சந்திப்பதை மறுத்துவிட்டார். இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகக் காத்திருந்த பின்னரும், பாபா, ஏமாற்றத்துடன் வெளியேறினார். 'ஷாந்தி பாய்' (SHANTI BAI) என்ற மஸ்தானி ஒரு வீட்டு வராந்தாவில் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார், ஆனால் இங்கேயும் அவரை சூழ்ந்திருந்த கூட்டம், பலமுறை வேண்டிய பின்னரும் கலைந்து செல்லாமல் நின்றது. மண்டலி பாபாவின் தொடர்புக்காக, கதவுகளை மூடியபோது மஸ்தானி பயந்து போனார். மஸ்தானியை பிர் கிராமத்தில் வாழும் உள்ளூர் பெண்கள் மிகுந்த மரியாதையுடன், நீராட்டி, ஆடை அணிவித்து உணவூட்டினர்; சில நேரங்களில் அழுக்குத் துணிகளுக்கு பதிலாக அழகான புடவையை அணியச் செய்தனர். ஷாந்தி பாயைச் சுற்றி சாதாரணமாக ஐந்து முதல் ஆறு நாய்கள் காணப்பட்டன; நாய்களை நேசிக்கும் பெரும்பாலான மஸ்துகளைப் போலவே, ஷாந்தி பாயும் தான் உண்பதற்கு முன்பே நாய்களுக்கு உணவளித்தார்.

பைத்தானில் கண்டுகொள்ளப்பட்ட 'மால்வி அப்துல் வஹாப்' (MAULVI ABDUL WAHAB) என்ற மஸ்த் பாபாவின் தொடர்புக்காக ஔரங்காபாத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவருடைய அசாதாரண தனித்தன்மையை, பாபா விரும்பினார். வியப்பாகத் தோன்றும் அளவிற்கு இந்த மஸ்த் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையில், ஒரு குறிப்பிட்ட பாடத்தை

கற்பிக்கவில்லை என்றாலும்,. “ஒரே கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை” என்று மீண்டும் மீண்டும் மாணவர்களுக்கு, புத்திமதி கூறி, கடவுளை வணங்கி வழிபடுமாறு மாணவர்களை வற்புறுத்தினார். இந்த மஸ்தை மிகுந்த மரியாதையுடன் நடத்தி, பள்ளிக்கூட பதிவேட்டில் கையெழுத்திட ஒரு நாளைக்கு ஒரு முறை அங்கு அழைத்து வர ஒரு உதவியாளர் மாநில அதிகாரிகளால் நியமிக்கப்பட்டார். அரசாங்கம் அவருக்கு வழங்கிய சம்பளம் அவரது மனைவியிடம் தரப்பட்டது, மேலும் அதில் ஒரு சிறிய பாகம் மஸ்துக்கு உணவளிக்க ஒரு கடைக்காரருக்கும் வழங்கப்பட்டது.

அப்துல் வஹாப் இதற்கு முன்பு ஸுஃபி (SUFI) பாரம்பரியத்தில் இணைந்து கற்றறிந்தவராக இருக்க வேண்டும், ஏனெனில் அவர் தனது தொடர்பின் போது பாபா, பைதூல் ஆகியோரிடம் ஒரு முறை மஜ்ஜூபை ஒத்த (MAJZOOB-LIKE) நிலையில் உள்வாங்கப்பட்டிருப்பதைக் குறித்து தெளிவாக விளக்கமளித்தார், மேலும் அவரது ஆன்மீக அனுபவங்களைப் பற்றி, சில குறிப்புகளையும் எழுதியிருந்தார். அவரது தற்போதைய உணர்வு, சில நேரங்களில் ஸலிக் (SALIK) நிலையிலும், இதர நேரங்களில் மஜ்ஜூபைப் போல இருப்பதையும் அவர் மேலும் விளக்கினார்.

மெஹர் பாபா, அவரது பணியை நிறைவு செய்து ஔரங்காபாத்திற்குத் திரும்பி வந்ததும், 100 ஏழை குடும்பங்களுக்கு உதவ விரும்புவதாக மண்டலிக்குத் தெரிவித்தார், ஆனால் அவர்கள் கையேந்தி யாசிப்பதில் தயக்கம் காட்டுபவர்களாக இருக்கும் நிபந்தனையை முன்வைத்தார். அத்தகைய குடும்பங்களை (அஹமதுநகர் மற்றும் பூனா நகரங்களுக்கு இடையே அமைந்திருந்த) நாராயண்காவ்ம் (NARAYANGAON), ஆலே (ALE), ரஜூரி (RAJURI), ஜுன்னார் (JUNNAR) போன்ற இடங்களில் கண்டுபிடிக்குமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார். அவர் இந்த நிகழ்ச்சியை மே 7ஆம் நாள் நடத்தத் திட்டமிட்டார்.

ஔரங்காபாத்திலிருந்து, பாபா அவரது அன்பர்களுக்கு 1944, மார்ச் 13 அன்று வெளியிட்ட சுற்றறிக்கையில், அவருடைய திட்டங்களின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து அவர்களுக்குத் தெரிவித்தார். பயண ஆவணங்களைப் (PASSPORTS) பெறுவதில் உள்ள சிரமம் இன்னும் தீர்க்கப்படாததால், ஈரானுக்குச் செல்வது கேள்விக்குறியாக உள்ளது. உணவு பங்கீட்டு (ரேஷன்) விதிமுறைகள் காரணமாக, எந்தவொரு குறிப்பிட்ட இடத்திலும் எந்த நேரத்திலும் 50க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உணவளிக்க முடியாத நிலையும் உருவாகியுள்ளது. கையெழுத்திட்ட 200 அன்பர்களுடன் மெஹராபாத்தில் ஒரு மாதம் தங்குவதற்கான பாபாவின் திட்டங்கள் சாத்தியமற்றதாகத் தோன்றுகிறது. இந்த எல்லா சிரமங்களுக்கும் தீர்வுகாண, பாபா 24 மண்டலி மற்றும் பல்வேறு குழுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தை ஜூன் மாதம் அஹமதுநகரில் நடத்த அழைப்பு விடுத்தார்.

மெஹர் பாபா இவ்வாறு கூறி, சுற்றறிக்கையை முடித்தார்:

**ஏழு நாட்கள் உபவாசத்தைக் கடைப்பிடிக்க ஏற்கனவே கட்டளையிடப்பட்டவர்கள், 1944 மே 15ஆம் தேதி, காலை 8:00 மணி முதல் 24 மணி நேரம் தண்ணீர் அருந்தாமல் 'சிறப்பு' உபவாசம் மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர், ஏற்கனவே உத்தரவிட்ட ஏழு நாட்கள் உபவாசம், இறுதி சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தேதியில் கடைப்பிடிக்கப்படலாம், இது ஜூன் 10 மற்றும் 11 தேதிகளில் நிகழவிருக்கும் சிறப்புக் கூட்டத்திற்குப் பின்னர் அனைவருக்கும் அனுப்பப்படும்.**

**இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சிரமங்களும், அவற்றின் பௌதீக தன்மையில் மற்றும் உலக நடைமுறைக் கண்ணோட்டத்தில் 'உண்மையானவை', மேலும் அவை 'குறைபாடற்ற மெய்மை நிகழ்வுகள்'. இப்படி இருந்தும், நான் என்னுடைய உண்மை நிலையில், சர்வ ஞானியாகவும், சர்வ வல்லமைமிக்கவராகவும், அனைத்தையும், அனைவரையும் அறிந்திருப்பதால், நான் விரும்பியபடி எல்லாவற்றையும் ஏற்பாடு செய்திருக்க முடியும். அப்படியெனும்போது, இதன் இயல்பான ஒரே முடிவு என்னவெனில், நானே என்னுடைய தீர்மானங்களைத் தள்ளிப்போடுவதற்காக, இந்தச் சிரமங்களையும் சூழ்நிலைகளையும் உருவாக்கியுள்ளேன், இது ஒரு துல்லியமான நோக்கத்தையும், அதன் பின்னால் திட்டவட்டமான, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட காரணங்களையும் கொண்டுள்ளன என்பதாகும்; அதை, அதிர்ஷ்டசாலிகள் மட்டுமே அதி விரைவில் அறிந்துகொள்வர்.**

**அதனால்தான் எனது கடைசி சுற்றறிக்கையில் நான் அவ்வாறு குறிப்பிட்டிருந்தேன்: "மனதில் சந்தேகம் உள்ளவர்களும், பொறுமை இல்லாதவர்களும், ஏமாற்றமடைந்தவர்களும் இந்த நிகழ்ச்சியிலிருந்து பின்வாங்கத் தயங்க வேண்டிய தேவையில்லை, ஏனெனில் அதை அவர்களுடைய பலவீனமாகக் கருதாமல், நிர்ணயிக்கப்பட்ட ஆன்மீக நேரத்துடன் இணங்கிச் செல்லும் அவர்களின் ஆயத்தமற்ற சூழ்நிலையாகப் பார்க்கப்படும், மேலும் அவர்கள் அனைவருமே எப்போதும் போலவே ஆசீர்வதிக்கப்படுவார்கள்."**

**இந்த ஒத்திவைப்பைத் தவிர, முக்கியமாக என்னால் உருவாக்கப்பட்ட இத்தகைய நிலைமைகள் காரணமாக, குழு சந்திப்பு மற்றும் ஒரு மாத காலம் என்னுடன் தங்குவதற்கான இதர அனைத்து ஏற்பாடுகளும், திட்டங்களும், முந்தைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆன்மீக அனுபவங்களை நிறைவேற்றுவது போலவே மாறாமல் உள்ளன.**

'பிரேம் பஸேரா' (PREM BASERA) வளாகத்தில் சிறிய தொட்டி போன்ற குளம் ஒன்று இருந்தது, ஆனால் அதை நிரப்ப குழாய் தண்ணீர் இல்லை; அதற்காக, தொலைதூர கிணற்றிலிருந்து நீரை இறைத்து வர ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டனர். காளை வண்டி மற்றும் மோட்டார் தள்ளுவண்டி மூலம்

அவர்கள் அதை எருமை தோல்களைக் கொள்கலன்களாகப் பயன்படுத்திக் கொண்டு வந்தனர். காக்காவின் மேற்பார்வையின் கீழ், அது மார்ச் 22 அன்று முற்றிலுமாக நிரப்பப்பட்டது. மார்கரெட் பெண்மணிகளைத் தொட்டியில் நீந்த அனுமதிக்க வேண்டும் என்று பரிந்துரைத்ததற்கு இணங்க, சில நாட்கள் அவர்கள் அவ்வாறு செய்தனர். (காக்கா, பைதூல் இருவரும் பாபாவின் அறிவுறுத்தலின் படி, மூங்கில் தடுப்புச்சுவர்களை அமைத்தனர்.) இருப்பினும், தொட்டி ஆழமின்றி, நீச்சலுக்கு உகந்ததாக இல்லாததால், நீரை வடிகட்டவும் வாய்ப்பில்லாத நிலையில், சில நாட்களில் தண்ணீரைப் பயன்படுத்த முடியாமல் மாற்றவேண்டிய கண்டிப்பில், பாபா, மார்கரெட்டிடம் தண்ணீரை மாற்றுவதற்கு வேண்டியதை கவனிக்குமாறு கூறினார். இது கோடைகாலமாக இருந்ததால், மார்கரெட் வெப்பமான வெயிலில் அதை மேற்பார்வையிட வேண்டியிருந்தது. குளம் சிறியதாக இருந்தாலும், நீரை அப்புறப்படுத்த நீண்ட நேரம் பிடித்தது. இது ஒருவரைச் சோர்வடையச் செய்யும் வேலை ஆதலால், சில நேரங்களில், என்ன ஒரு தலைவலி என்று தனக்குத்தானே நினைத்துக் கொண்டார்.

அப்போது பாபா, மார்கரெட்டிடம், **"குளத்தை நிரப்ப நீங்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது?"** என வினவ மார்கரெட் விளக்கினார், அவர் முதலில் அசுத்தமான நீரை வெளியேற்றி, பின்பு புதிய நீரால் நிரப்பினார். பாபா எழுத்துப்பலகை வழியாக உச்சரித்தார், **"உங்களுக்குள்ளும் அசுத்தமான நீர் உள்ளது, என் அன்பெனும் புதிய நீரை நிரப்ப, நான் அதை வெளியே எடுத்தாக வேண்டும். இவ்வாறு, வெவ்வேறு வழிகளில், அனைவரிடமிருந்தும் அசுத்த நீரை வெளியே எடுத்து, நான் உங்களுக்கு பயிற்சி அளிக்கிறேன், இதனால் நீங்கள் ஒரு நாள் எனது பெருங்கடலில் ஆழமாக மூழ்கி புதையலை அடையப் பெறுவீர்கள்."**

1944 மார்ச் மாதத்தில் சாஞ்சி, மன்மாட் (MANMAD) மற்றும் டோண்டிற்கு (DHOND) அனுப்பப்பட்டார், மேலும் பயணத்தின் போது கோப்பர்காவ்ம் (KOPARGAON) ரயில் நிலைய மேடையில் முன்னாள் பிரேம் ஆசிரம சிறுவர்களில் ஒருவரான 'லோபாஜி'யை (LOBHAJI) சந்தித்தார். லோபாஜி ஒரு சாதுவைப் போல உடையணிந்து, சத்தாராவில் வசிப்பதாகத் தெரிவித்தார். அவர் மூன்று முறை மெஹராபாத் சென்றிருந்ததாகவும், ஆனால் ஒவ்வொரு முறையும் பாபா வெளியே பயணத்தில் இருந்ததாகவும் கூறி, சாஞ்சி மூலமாக தனது மரியாதையைத் தெரிவித்தார்.

1944 ஏப்ரல் 1 முதல் 6 வரை, மெஹர் பாபா மீண்டும் சாஞ்சி, பைதூல் இருவருடன் மஸ்த் பயணமாக, குவாலியருக்குச் (GWALIOR) சென்றார். அவ்வேளையில் தூரத்து வட பகுதிக்கு அனுப்பப்பட்ட டாக்டர் டான், அவர்களை ஜான்சியில் (JHANSI) சந்தித்து, அங்கு ஒரு பயணிகள் விடுதியில் குழு தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

அடுத்த நாள் பாபா அங்கு ஏழு மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்.

அவர்கள் அங்கிருந்து குவாலியருக்குப் புறப்பட்டு ஹோட்டல் 'டி குவாலியரில்' (HOTEL DE GWALIOR) தங்கினர். இங்கேயும் பாபா ஏழு மஸ்துகளைத் தொடர்பு கொள்ள முடிந்தது. பின்னர் அவர்கள் 5ஆம் நாள் அதிகாலை 4:30 மணிக்கு ஜான்ஸிக்குத் (JANSI) திரும்பி வந்து, ஹோட்டலில் ஓய்வெடுத்தனர்.

டான் நீராடச் சென்றபோது, பாபா ஒரு கவிதையை எழுத்துப்பலகை மூலமாக, சாஞ்சிக்கு எடுத்துரைத்தார், இது டானின் பிறந்தநாளுக்காக (உண்மையில் பிறந்தநாள் நவம்பரில் இருந்தாலும்) என்று கூறினார்:

**இன்று பாபா, டானுக்கு வழங்கும் பிறந்தநாள் பரிசு...**

**நான் குறிப்பிட்ட நான்கு இடங்களில் ஒன்றிற்கு நீங்கள் வந்தாலும் அல்லது நீங்கள் மெக்கா, மதீனா, மொராக்கோ, முல்தான், முர்ரிக்கு அனுப்பப்பட்டாலும், சுருக்கமாக, உங்களுக்கு என்ன நேர்ந்தாலும், என் மீதுள்ள உங்கள் நம்பிக்கையும், அன்பும் முன்பை விட வலுவாக இருக்க நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.**

**நிலவின் வெளிச்சத்தில் தனியாக நீங்களும் நீயும் நானும்.**
**எல்லாம் ஒளிமயமான வேளையில் நீங்களும் நானும்.**
**இருளில் அல்லது ஒளியில் நீங்களும் நானும்.**
**தவறில் அல்லது சரியில் நீங்களும் நானும்.**
**தீய ஆவி பறக்கும் நேரத்தில் நீங்களும் நானும்.**
**ஆண்டவன் பார்வையில் படும் வேளையில் நீங்களும் நானும்.**
**சத்தியம் சர்வ வல்லமையாகும் தருணத்தில் நீங்களும் நானும்.**
**சிரமங்கள் லேசாக மாறும் காலத்தில் நீங்களும் நானும்.**
**எங்கும் நெருக்கடி நிலவுகையில் நீங்களும் நானும்.**

**நீங்கள் எனது உள் வட்டத்தில் இருப்பதால், உங்களுக்கான அனைத்தும் 'தெய்வீக விருப்பத்தால்' தீர்மானிக்கப்படுகின்றன; அதன்படி, இந்த மூன்று நாட்கள் என்னுடன் இருப்பது, உங்களுக்கான எதிர்கால பணிகளைக் கருத்தில் கொண்டு உங்கள் அனைத்து விஷயங்களும் சரிசெய்யப்படும்.**

– பாபா

ஏப்ரல் 5 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் ஔரங்காபாத்திற்கு வந்தார்.

ஔரங்காபாத்தில் தனது பணியை நிறைவு செய்து, மெஹரா, மணி, மெஹரு, மார்கரெட் ஆகியோருடன் 1944 ஏப்ரல் 10 திங்களன்று பாபா பிம்பல்காவ்ம் திரும்பிவந்த போது வாலுவும் அவர்களுடன் இணைந்தார். சமையல் மற்றும் வீட்டு வேலைக்காக லக்ஷி, ரக்மா என்ற பணிப்பெண்களும் அழைத்து வரப்பட்டனர். பிம்பல்காவ்மில் பாபாவுடன் குஸ்தாஜி, மாஸாஜி (சிறிது காலத்திற்கு), ஸ்லாம்ஸன், கிருஷ்ணா, வெங்கோபா ராவ் ஆகியோர் இருந்தனர். காக்கா, பைதூல், எரச் மூவரும் பாபா குறிப்பிட்டபடி பூனாவிற்கு

அருகிலமைந்த நான்கு இடங்களில் ஏழைக் குடும்பங்களைத் தேடிச் சென்றனர், ஆதி சீனியர் குஷ்ரு குவாட்டர்ஸுக்குத் திரும்பி வந்தாலும், அவர் தினமும் பாபாவை சந்திக்கச் சென்றார்.

பிம்பல்காவ்ம் கிராம சுற்றுப்புற சூழ்நிலைகள் மெஹர் பாபாவின் பரிசுத்தமான மகிமையின் மதுபானத்தால் நிரம்பி வழிந்தது. பழங்காலத்தில் புகழ்பெற்ற துறவியான 'கோரக்நாத்' (GORAKHNATH) என்பவரின் பெயரில் அமைந்த மலையை தூரத்தில் காணலாம், மேலும் ஒன்பது சிறிய குன்றுகளும் உள்ளன.

பிம்பல்காவ்ம் நிலத்தின் ஒரு பக்கத்தில் கண்டோபாவின் (கிருஷ்ணரின்) கோயிலுடன் ஒரு சிறிய மலை இருந்தது. தோட்டத்தின் பின்னால் அமைந்த 'தெம்பி ஹில்' (TEMBI HILL) - பின்பு பாபாவின் பணி காரணமாக 'மனோனாஷ்' (MANONASH) அல்லது 'ஸெக்ளுஷன் ஹில்' (SECLUSION HILL - ஏகாந்தவாச மலை) என்று அறியப்பட்டது. சாலையில் சிறிது தூரத்தில் அழகிய பிம்பல்காவ்ம் ஏரி இருந்தது, இந்த புனித இடத்தின் அழகு, அமைதி, தனிமை போன்ற காரணங்களுக்காக பாபா இதை தனது இல்லமாகத் தேர்ந்தெடுத்தார்.

மெஹர் பாபா முதன்முதலில் இந்த நிலத்தைப் பார்வையிடச் சென்றபோது, ஏறக்குறைய 60 முதல் 40 சதுர அடி அளவில் ஒரு குடிசை இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒரு மோட்டார் கொட்டகை, ஒரு குதிரை கொட்டகை, ஒரு சமையலறை மற்றும் ஒரு வெளி மாளிகைக்கூடமும் இருந்தன. அனைத்தும் பாழடைந்த நிலையில் இருந்தாலும், பாபா இந்த இருப்பிடத்தைப் பெரிதும் விரும்பினார். பாபா ஔரங்காபாத்தில் தங்கியிருந்தபோது, மண்டலி ஒரு சிறிய வீட்டைக் கட்டியெழுப்பி பழுதுபார்த்துத் தயாராக வைத்திருந்தனர்.

பிம்பல்காவ்ம் கிராமத்திற்குச் சென்ற பிறகு, பாபா, மெஹராபாத்திலிருந்து ரானோ, கிட்டி ஆகியோரை, சில வாரங்கள் அங்குத் தங்க அழைத்தார்; ஆனால் இதர ஆண், பெண் மண்டலியைப் பார்க்க, பாபா, தவறாமல் மெஹராபாத் செல்வது வழக்கம்.

அஹமதுநகரிலிருந்து ஆதி சீனியர் தினமும் வந்து, மஸ்துகளை சந்திப்பதற்காக, பாபாவை அழைத்துச் செல்வது தொடர்ந்து நடந்து வந்தது. அவ்வேளையில் ஆதியின் தாயார் குல்மாய் மற்றும் அக்பர் அச்சகத்தில் ஸட்டா குடும்பத்தினரையும் அவ்வப்போது சந்தித்தார்.

கோஹெர் அவரது 28 வயதில், மருத்துவ படிப்பை முடித்துவிட்டு, அஹமதுநகரில் தனது குடும்பத்துடன் வந்திணைந்தார். அவர் பாபாவுடன் ஆசிரமத்தில் இணைய விரும்பினாலும், அவரது தாயார் கோர்ஷெத், அதை நினைத்து அழுது அல்லல்பட்டார். கோஹெரின் சகோதரி, கேட்டி, 1938 முதல் பெண் மண்டலியில் ஒருவராக வாழ்ந்து வந்ததால், தாயார் கோர்ஷெத், கோஹெர் மருத்துவராகப் பணிபுரிந்து பெற்றோருடன் வாழ்வதை விரும்பிய

அதே வேளையில் தந்தையார் ரூசி பாப் எந்த ஆட்சேபனையும் இல்லாமல், அது அவளுடைய உண்மையான விருப்பமாக இருந்தால், பாபாவுடன் இருப்பதையே அவர் விரும்பினார். ஆனால், டாக்டர் கோஹெர் தனது தாயாரின் வாழ்காலத்தில் பெற்றோருடன் வாழப்போவதாக, பாபாவிற்குக் கடிதம் எழுதினார்.

பாபா ஆதி சீனியரை அங்கு அனுப்பி டாக்டர் கோஹெரிடம், **"உங்களுக்கு என்னுடன் இருக்க வேண்டாமா?"** என வினவினார்.

"உங்களுடன் இருப்பதை விட என் வாழ்க்கையில் வேறு எந்த மகிழ்ச்சியும் இல்லை. நான் எல்லாவற்றையும் விட உங்களுடன் இருப்பதையே விரும்புகிறேன்! ஆனால், எனது தாயார் அதை நினைத்து அழுது கண்ணீர் சிந்துகிறார்" என்று கோஹெர் பதிலளித்தார்,

**"நான் உங்களை சிறிது காலம் இங்கே தங்க வைத்து, பின்பு, திருப்பி அனுப்புவதாகக் கூறுங்கள்"** என்று பாபா அறிவுறுத்தினார்.

எனவே, 1944இல் பிம்பல்காவ்மில் தங்கியிருந்த காலத்தில், இந்த விஷயங்களைப் பற்றி விவாதிக்க பாபா, கோஹெரை அவ்வப்போது அழைத்தார்.

கோஹெர் அவரது கல்லூரி நாட்களிலிருந்தே, விடுமுறை காலங்களில் பாபாவிடம் அடிக்கடி வருவதுண்டு.

55 வயதான கைக்கோபாத் தஸ்தூர் 1927ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது பாபாவை சந்தித்தார். பிம்பல்காவ்ம் கிராமத்தில் தங்கியிருந்த வேளையில், அவர் மீண்டும் பாபாவிடம் வந்து, "நானும் எனது குடும்பத்தினரும் உங்களிடம் சரணடைந்துவிட்டோம், எனது ஒவ்வோர் உடைமையும் உங்கள் காலடியில் உள்ளது" என்று கூறினார்.

கைக்கோபாத் தஸ்தூர் குடும்பத்துடன் சரணடைவதற்கான வாய்ப்பை பாபா ஏற்றுக்கொண்டார். 'ஸன் லைஃப் ஆஃப் கானடா இன்சூரன்ஸ் கம்பெனி' (THE SUN LIFE OF CANADA INSURANCE COMPANY) நிறுவனத்தின் தலைமை காசாளராகப் பணிபுரிந்த கைக்கோபாத்தை மும்பைக்குத் திரும்பும்படி அவர் அறிவுறுத்தி, அவர்களின் ஆடைகளைத் தவிர இதர அனைத்தையும் விற்றுவிட்டு அவருடைய அழைப்புக்காகக் காத்திருக்குமாறு கூறினார். கைக்கோபாத் மும்பைக்குச் சென்று, பாபாவின் அறிவுறுத்தல்களை உண்மையுடன் நிறைவேற்றினார்.

1944ஆம் ஆண்டு, இந்தக் காலகட்டத்தில், மெஹராபாத், பிம்பல்காவ்ம் இரண்டு இடங்களிலும் அவரது உத்தரவின் கீழ் மெஹர் பாபாவுடன் சுமார் 26 ஆண்கள், 33 பெண்மணிகள் மற்றும் பத்து குழந்தைகள் தங்கியிருந்தனர். அவர்களின் பெயரும், அறியப்பட்ட வயதும் கீழ்வருமாறு:

மெஹராஸாத்தில் இருந்த ஆண்கள்:

பைதூல், 54 குஸ்தாஜி, 55

| | |
|---|---|
| கிருஷ்ணா, 19 | ஸ்லாம்ஸன், 44 |
| வெங்கோபா ராவ், 23 | |

மெஹராஸாத்தில் இருந்த பெண்மணிகள்:

| | |
|---|---|
| மெஹரா, 37 | மணி, 25 |
| மெஹரு, 16 | நாஜா, 36 |
| வாலு, 44 | மார்கரெட், 52 |

மெஹராபாத்தில் வாழ்ந்த ஆண்கள்:

| | |
|---|---|
| அம்ரத்லால் கே. தேஷி | அண்ணாஸாஹேப் காளே, 71 |
| பாலா தம்பத் | சாஞ்சி, 52 |
| சகன், 38 | ஜமதார், 58 |
| ஜங்க்ளே, 33 | காளேமாமா, 69 |
| குப்புசாமி | லாலா காம்ப்ளே, 28 |
| மாஸாஜி, 77 | முரளி காளே, 31 |
| பாதிரி, 41 | பெண்டு, 41 |
| ராம்சந்தர் கெய்க்வாட், 26 | ஸெயிலர்மாமா, 54 |
| ஸவக், 41 | சிது, 42 |
| துக்காரம், 30 | விஷ்ணு, 40 |

மெஹராபாத்தில் வாழ்ந்த பெண்மணிகள்:

| | |
|---|---|
| பாகுபாய், 23(ஜமதார் மனைவி) | காக்குபாய், 58 |
| டவ்லா, 21(பைதூலின் மகள்) | ஐரீன் (பில்லோ), 28 |
| கேட்டி, 24 | கோர்ஷெத், 34 |
| கிட்டி, 53 | மன்ஸாரி, 34 |
| நாகு, 14(மெஹருவின் சகோதரி) | நர்கிஸ் கொத்வால், 36 |
| பீலாமாய், 50 | ராதாபாய், 26 (சிதுவின் மனைவி) |
| ரானோ, 42 | ஸர்வர், 15 (பைதூலின் மகள்) |
| சாந்தபாய் (சகனின் மனைவி) | ஸில்லா, 24 |
| ஸொல்டூன், 45 | ஸூனாமாசி, 60 |
| முக்தாபாய், 29 (ஜங்க்ளேயின் மனைவி) | |

மெஹராபாத்தில் வாழ்ந்த குழந்தைகள்:

ஆதி 8, ஹில்லா 13, மற்றும் நாஜூ கொத்வால் 16 (கோடை விடுமுறை நாட்களில் வந்தவர்கள்); ஜங்கூ 6 (மெஹருவின் சகோதரர்); சகுந்தலா 10 (சகனின் மகள்); கஸம் 17, மற்றும் அலி 14, (ராம்ஜூவின் மகன்கள்); நரேஷ் 4, சுரேஷ் 2, மற்றும் லீலா 2 மாதங்கள் (ஜங்களேயின் குழந்தைகள்).

ஆசிரமத்தில் வாழ்ந்த இவர்களைத் தவிர, எரச் 28, காக்கா 54, நீலு 41, ஆகியோர் பூனா, மும்பையிலிருந்து இடையிடையே வந்து சென்றனர். ஆதி சீனியர் 41, அஹமதுநகரில் குஷ்ரு குவாட்டர்ஸில் வாழ்ந்து வந்தார்.

காலம் இதை இவ்வண்ணம் நினைவு கூர்ந்தது: “பாபாவின் நிரந்தர ஆண், பெண் மண்டலி அனைவரும் அன்பிற்குரியவருக்காக அர்ப்பணித்த மக்கள் ஆவர். அவர்கள் அவரை முழுமையாக நம்பியிருந்தவர்கள். அவர்கள் தங்கள் சுய ஆசைகள் அனைத்தையும் துறந்து, அன்பிற்குரியவரின் விருப்பத்திற்கு ஏற்ப, அவருடன் வாழப்பிறந்தவர்கள். அதனால்தான் அன்பிற்குரியவரின் மீதுள்ள அன்பிலும் நம்பிக்கையிலும் அவர்கள் உறுதியுடன் இருக்க முடிந்தது. அத்தகைய நெருங்கிய அன்பர்களின் தியாகத்தையும் சரணடைதலையும் ஒருவர் கருத்தில் கொள்ள முடியாது. அவ்வப்போது பாபாவுடன் வாழ்ந்தவர்கள் பலர் இருந்தனர், ஆனால் அவரது நெருங்கிய மண்டலியின் தொடர்பு முற்றிலும் வேறுபட்டது. அவருடன் இருந்த ஒவ்வொரு நெருங்கிய மண்டலியும் தரையில் தவழும் தூசியாக மாறி அவருடைய பாதங்களில் சரணடைந்தவர்கள்!”

1944 ஏப்ரல் 18 அன்று, அதற்கு முந்தைய ஆண்டு நஸிராபாத்தில் (NASIRABAD) பாபா தொடர்பு கொண்ட ஓர் அரிய வகை மஸ்தான ‘ஜிப்ரா பாபா’வை (JIBRA BABA) பாபாதாஸ், பிம்பல்காவ்மிற்கு அழைத்து வந்தார். பாபா, ஒரு நாள் மட்டுமே அவருடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்து, அதே இரவில் மீண்டும் அவரது கிராமத்திற்கு அனுப்பிவைத்தார்.

அஹமதுநகரில் வாழ்ந்த ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்த் அலி ஷா (ALI SHAH) என்பவரும் அதே நாளில் பிம்பல்காவ்மிற்கு அழைத்து வரப்பட்டு, பாபா அவருடன் சில நாட்கள் பணிபுரிந்தார். ஆண், பெண்மணிகள் வாழ்ந்த அறைகளுக்கு இடையே அமைந்த அறையில் பைதூல் மஸ்தை கவனித்து வந்தார். மாலை நேரங்களில், பாபா அங்குச் செல்லும் போதெல்லாம், மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று வெளியே தவறாமல் எரிந்துகொண்டிருக்கும். ஒரு நாள் மாலை, பாபா வருத்தத்தில் பைதூலிடம், **“நீங்கள் எவ்வளவு அலட்சியமாக இருக்கிறீர்கள்! இந்த முதியவரை ஏன் கவனிக்கவில்லை?”** என்று கேட்டதற்கு, ஒவ்வொரு மாலையும் தவறாமல் விளக்கை ஏற்றி வைத்ததாக, பைதூல் வலியுறுத்திக் கூறினார்.

அன்று இரவு, பைதூல் அந்த அறையிலேயே காத்திருந்தார். திடீரென விளக்கு தானாகவே சுழன்று மேலே ஏறி மறுபடியும் கீழே விழுந்து அணைந்ததைக் கண்டு அவர் திகைத்துப் போனார்! சற்று பயந்து போய் நடந்ததை அவர் பாபாவிடம் கூற, பாபா **“ஆமாம், அங்கே ஆவி ஒன்று உள்ளது, ஆனால் அது எவரையும் காயப்படுத்தாது”** என்று உறுதியளித்தார்.

அடுத்த நாள், அலி ஷா வசைமொழியால் அந்த ஆவியிடம் “நீ எப்போதும் என்னைத் தொந்தரவு செய்கிறாய். இங்கிருந்து வெளியேறு!” என்று கூறி, ஏட்டுத்தாள் ஒன்றை எடுத்து, கண்ணுக்கு தெரியாத ஆவியை துரத்தி விரட்டினார்.

ஒரு நாள் இரவு பாபா, கிருஷ்ணாவிடம் அலி ஷாவைப் பார்க்க அனுப்பி வைத்த வேளையில், மோசமான மனநிலையில் இருந்த அலி ஷா மண்ணெண்ணெய் விளக்கை கவிழ்த்துப் போடுவதைக் கண்டார். கிருஷ்ணா விளக்கை எடுத்து, சரியாக வைத்துவிட்டு நடந்ததை, பாபாவிற்குத் தெரிவித்தார். பாபா உடனே, அலி ஷாவின் அறைக்கு வந்து அவருடன் சிறிது நேரம், வழக்கமான அமைதியான நிலை திரும்பும் வரை அமர்ந்திருந்தார்.

அடுத்த நாள், பாபா, பூனாவிலிருந்து பிம்பல்காவ்ம் வருமாறு எரச்சிற்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார். அவர் வந்ததும், பாபாவின் அறையில் அவருக்கு அருகில் தூங்குமாறு அறிவுறுத்தினார். எரச் சாதாரணமாக, பேய்களை நம்ப மறுத்தார்; பாபா, பலமுறை, பௌதீக உடலைத் துறந்த ஆவிகளைப் பற்றி விளக்கியபோதிலும், இந்த முழு யோசனையையும் அவரால் ஏற்றுக்கொள்ளக் கடினமாக இருந்தது.

அன்றிரவு, எரச் தூங்கிக்கொண்டிருந்த வேளையில், திடீரென விழித்ததும், அவரது மார்பில் ஏதோ கடுமையான அழுத்தத்தை உணர்ந்தார்; யாரோ ஒருவர், பார்க்க முடியாத போதும், அவரது மார்பில் அமர்ந்திருப்பதைப் போல் உணர்ந்தார். கண்ணுக்குத் தெரியாத ஊடுருவும் அந்த நபரிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவர் போராடினார், ஆனால் அவரால் ஒரு வார்த்தைக் கூட உச்சரிக்க முடியவில்லை. தூக்கி எறியப்பட்டு தரையில் வீழ்ந்ததும், எரச் மிக்க வியப்பில் ஆழ்ந்தார்; பாபா தனது படுக்கையிலிருந்து எரச்சின் போராட்டத்தை கவனித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து, ஆவி தானாகவே புறப்பட்டுச் சென்றபோது, பாபா, "**இப்போது, நீங்கள் பேய்களை நம்புகிறீர்களா?**" என வினவினார்.

எரச் தனது பாடத்தை கற்றுக் கொண்டு, "நான் நிச்சயமாக இப்போது நம்புகிறேன்" என்று கூறினார். அடுத்த நாள், அவர் பூனாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார். இந்த அனுபவத்தை அவருக்கு வழங்க மட்டுமே பாபா அவரை அழைத்ததுபோலத் தோன்றியது.

இதற்கிடையில், எரச், பப்பா ஜெஸவாலா, சதாஷிவ் பாட்டீல், ஜால்பாய் ஆகியோர் பூனா 'அஹில்யா' ஆசிரம மண்டபத்தில் 1944, ஏப்ரல் 23 ஞாயிற்றுக்கிழமை அன்று, மற்றுமொரு தரிசன நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். பிம்பல்காவ்மிலிருந்து காலையில் ஆதி சீனியர், தேஷ்முக் ஆகியோருடன் பாபா காரில் வந்து மண்டபத்தில் மதியம் 2:00 முதல் 3:00 மணி வரை ஏறக்குறைய 300 பக்தர்களுக்கு தரிசனம் வழங்கினார். மும்பை, பூனா, நாசிக் மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த ஸொராஸ்ட்ரியர்கள், அவர்களில் பெரும்பாலோர் பல ஆண்டுகளாக, பாபாவைப் பார்க்கவில்லை. வரவேற்பு உரையாற்றிய மானேக் மேத்தாவின் விரிவுரைகள் மூலம் பாபாவைப் பற்றி பலர் முதல்முறையாகக் கேள்விப்பட்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சாஞ்சி, மும்பையில் வாழும் அவரது மருமகள்களுக்கு இந்த விளக்கத்தை எழுதினார்:

நீண்ட கால பிரிவிற்குப் பின்னர் அன்பான பாபாவைக் கண்டு அனைவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். தரிசனம், அடிபணிந்து வணங்குவது எதுவும் இல்லை என்ற நிபந்தனைகளுக்கு மத்தியில், மெஹர் பாபா, கூட்டத்தை எதிர்கொண்டு அமர்ந்திருந்தார்; அவர் அணிந்திருந்த சத்ராவை லேசாகத் தொடும் ஆர்வத்தில் பலர் பாபாவின் அருகில் வந்தவண்ணம் இருந்தனர்; இறுதியில் அவர் வெளியேற எழுந்தபோது, மக்கள் கூட்டம் அவரை நோக்கி அவசரமாக அலைமோதியது, கிட்டத்தட்ட நெஞ்சைத் தொடும் நிகழ்வாக, விளக்கத்திற்குரிய ஊக்கத்தை அளிப்பதாக இருந்தது... காரில் பாபா கூட்டத்தைக் கடந்து செல்லும் போது, அவரது கைகளைத் தொடுவதற்காக, கூட்டத்தினூடே விரைந்த அனைவரின் பரவச புன்னகை, அவரது ஆழ்ந்த அன்பின் மந்திர சக்தியின் மகிமை என்ன என்பதை வெளிப்படுத்தியதாகத்தான் பொருள்கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், மிகவும் சரியாகவும் எதிர்பாராத விதமாகவும் நிகழ்ந்த இவை அனைத்தும், மூன்று முறை காலம் தாழ்த்தி, ஆசீர்வதிக்கப்பட்ட அழைப்புக்காக ஆவலுடன் காத்திருந்த ஒரு மாதத்திற்கான ஆழ்ந்த ஏக்கத்திற்கும் ஈடுசெய்ததாக அமைந்தது. இது புனித பைபிளில் விவரிக்கப்பட்ட காதல்-விருந்துகளின் ஒரு காட்சி, பூமியில் இன்று வாழும் கிறிஸ்துவால் நமது காலத்தில் உயிர்ப்பிக்கப்பட்டது.

பெஹராம், பெரின் மற்றும் அவர்களின் குழந்தைகளை சந்திக்க பாபா அவரது குடும்ப இல்லத்திற்கும் சென்றார்.

குல்னார், ஷெரூ - இருவரும் குழந்தை பருவத்திலிருந்தே பாபாவின் அரவணைப்பில் இருந்தனர். பாபா அவர்களிடம், **“நான் யார்?”** என்று கேட்க,

“கடவுள்!” என இருவரும் இணைந்து கோஷமிட்டனர்.

**“கடவுள் எதைப்போல் இருக்கிறார்?”**

“பாபாவைப் போல!” குல்னார் கூறினார்.

“வானத்தை விடப் பெரியது!” என்று ஷெரூ கத்தினான்.

பாபா கேட்டார், **“நீங்கள் என்னை அதிகமாக நேசிக்கிறீர்களா அல்லது உங்கள் பெற்றோரையா?”**

“நாங்கள் உங்களை அதிகமாக நேசிக்கிறோம்.”

**“ஏன்?”**

“ஏனெனில் நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்!” அவர்கள் பதிலளித்தனர்.

மெஹர் பாபா பிந்த்ரா ஹவுஸில் இரவைக் கழித்து, அடுத்த நாள் பிம்பல்காவ்ம் புறப்பட்டுச் சென்றார். நான்கு நாட்களுக்குப் பின்னர், 1944 ஏப்ரல் 27 காலை 7:00 மணிக்கு, பைதூல், சாஞ்சி, நீலு, பெண்டு ஆகியோருடன் ஸரோஷின் காரில் வைஜாபூர் (VAIJAPUR) நகரில் ஒரு மஸ்தைத் தொடர்பு கொள்ளச் சென்றனர். ‘ரஹாட்டா’ (RAHATA) வழியாகச் செல்லும் போது, பாபா,

உபாஸனி மஹாராஜ் மற்றும் சாய்பாபாவின் சமாதிகளைச் சுட்டிக்காட்டி, காரில் இருந்துகொண்டே அவர்களுக்குத் தலை வணங்கினார்.

பாபா தேடி அலைந்த ஹரிகிரி மஹாராஜை (HARIGIRI MAHARAJ), கிராமத்தில் எங்கும் கண்டுகொள்ள முடியவில்லை. ஒரு கிராமவாசி அவர்களை அணுகி, "இன்று காலை யாரோ ஒருவர் அவரிடம் வரவிருப்பதாகவும், இங்கே இருப்பது அவருக்கு நல்லதல்ல என்றும் கூறி அவர் இங்கிருந்து மறைந்துவிட்டார்" எனத் தெரிவித்தார். பெண்டு, பைதூல் இருவரும் அவரைத் தேடிச் சென்று, கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் தேடியும், மஸ்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பாபா, சாஞ்சியை வைஜாபூர் நகரில் வாழும் சில உள்ளூர் மக்களை அணுகி, மஸ்தைத் தேடும்படி அறிவுறுத்த, அவர்களும் இறுதியில் தோல்வியடைந்தனர்; ஆனால் அவர்களின் முயற்சிக்கு உரிய ஊதியம் வழங்கப்பட்டது. இறுதியாக, பாபா குறிப்பிட்டார், "**நாம் அவரை நான்கு மணிக்குள் கண்டுபிடிக்கவில்லை என்றால், திரும்பிச் செல்வோம்**." நான்கரை மணியளவில், எதிர்பாராத விதமாக, கிராமத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பெரியவர் அவர்களை அணுகி மஸ்த் இருக்கும் இடத்தைத் தெரிவித்ததும், நீலு, சாஞ்சி இருவரையும் அழைத்துக்கொண்டு பாபா அந்த முஸ்லிம் பெரியவருடன் ஒரு நதியைக் கடந்து சென்றார்.

ஒரு மைல் தூரம் நடந்து சென்ற பின்பு, கிராமவாசிகளால் சூழப்பட்டு, ஒரு தோட்டத்துப் பண்ணையில் மஸ்தைக் கண்டுகொண்டனர். பாபாவைப் பார்த்ததும், ஹரிகிரி மஹாராஜ், "நாம் நமது சொந்த வீட்டுக்குச் செல்வோம்" என்று கூறி, பாபாவின் கையைப் பற்றிக்கொண்டு அவர்கள் தனிமையில் அமரக்கூடிய ஒரு கோவிலின் பக்கம் அழைத்துச் சென்றார். ஒரு கூட்டத்தின் நடுவில் மண்டலி, மஸ்தைக் கண்டபோது, அவரை ஒரு ஒதுங்கிய இடத்திற்கு எப்படி அழைத்துச் செல்வது என்று யோசித்துக்கொண்டிருந்தனர்; பாபா எப்போதும் ஒரு மஸ்துடன் பணிபுரியும் வேளையில் தனிமையை விரும்பினார். ஆச்சரியமூட்டும் விதத்தில், மஸ்த் அவராகவே அவர்களைச் சிக்கலிலிருந்து காப்பாற்றினார்.

சிறிது நேரத்தில் மஸ்தும், அவரைத் தொடர்ந்து பாபாவும் திரும்பி வந்து, அவர் வறண்ட நதிக்கரையோரத்தில் அமர்ந்ததும், பாபாவும் அவரருகில் அமர்ந்தார். மக்கள் கூட்டம் அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தது, பாபா, பொதுவாக தனியாக இருக்க விரும்பினாலும், இந்த முறை அவர் அனைத்து கிராமவாசிகளின் முன்னிலையில் மஸ்துடன் தொடர்ந்து பணியாற்றினார். அவர் ஹரிகிரி மஹாராஜின் கால்களை ஒரு மணி நேரம் அழுத்தி, பின்னர் அவரது பணியை முடித்துவிட்டதாக அறிவித்தார்.

மெஹர் பாபா, மஸ்துகளுடனான பணியில் ஆன்மீக உள்தளங்களில், அவர்களின் முன்னோக்கிய பயணத்தில் ஓர் உந்துதல் வழங்குவது மட்டுமல்லாமல், அவருடைய உலகளாவிய பணியின் சில சுமைகளையும் அவர்களுடன் பகிர்ந்துகொண்டார். சில மஸ்துகள் இந்தச் சுமையைத் தங்கள்

தோள்களில் தாங்க விருப்பமின்றி, ஹரிகிரி மஹாராஜ் செய்தது போல, பாபாவின் தொடர்பைத் தவிர்க்க முயற்சித்தனர்.

பாபா 27ஆம் நாள் பிம்பல்காவ்ம் கிராமத்திற்குத் திரும்பிவந்து, மறுநாள் காலை 7:00 மணிக்கு பைதூல், பெண்டு, காக்கா, சாஞ்சி ஆகியோருடன் ‘ஆலே’ (ALE) கிராமத்திற்குச் சென்றார். இம்முறையும் ஸரோஷின் ஓட்டுநர் சாபு (CHHABU), பாபாவைக் காரில் அழைத்துச் சென்றார்; சாலைகளின் மோசமான நிலை காரணமாக அவர்கள் பழைய காரில் சென்றனர். ஆலே கிராமத்தில், பாபா, ‘வாசுதேவ் சுவாமி’ (VASUDEV SWAMI) என்ற ஒரு குள்ளமான, வயதான யோகியைத் தொடர்பு கொண்டார், அவர் ஒரு முடமான குழந்தையைப் போலத் தோற்றமளித்தார். வாசுதேவ் ஒருபோதும் படுத்து தூங்கியதில்லை, ஆனால் அமர்ந்து, ஒரு தலையணை மீது சாய்ந்து தூங்குவது வழக்கம் எனக் கூறப்பட்டது. பாபா இந்த ‘மஸ்தை-ஒத்த’ யோகியை, பிம்பல்காவ்ம் கிராமத்திற்கு அழைத்து வந்து, அவருடன் மூன்று நாட்கள் பணிபுரிந்து, மே 1 அன்று பைதூல் மற்றும் பாபாதாஸுடன் ஒரு பொது பேருந்தில், விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்ட இருக்கைகளில் திருப்பி அனுப்பி வைத்தார். வாசுதேவ் சில ஆன்மீக அல்லது யோகப் பயிற்சிகளைச் செய்ய முற்பட்டபோது, அது அவரை இறை-பைத்தியமாக ஆக்கியது; பாபா அவரிடம் மிக்க அன்புடன் பாசத்தைக் காட்டி, அவரை ஒரு தொலைந்துபோன, காயமுற்ற குழந்தையைப் போல நடத்தினார்.

இதற்கிடையில் எரச், பைதூல், காக்கா மூவரும் நாராயண்காவ்ம் (NARAYANGAON), ஆலே, ரஜூரி (RAJURI), ஜுன்னார் (JUNNAR) ஆகிய இடங்களில், பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, வறிய ஏழைக் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, மற்றுமோர் ‘ஏழை நிகழ்ச்சி’க்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பாபா, ஆதி சீனியர் மற்றும் காக்காவுடன், 1944, மே 7 ஞாயிற்றுக்கிழமை பூனாவிற்குச் செல்லும் வழியில் உத்தரேஷ்வரில் (UTTARESHWAR) ‘ஏழைகள் நிகழ்ச்சி’ பற்றி அர்ச்சகர் ஒருவரை (இந்து பூசாரி) சந்தித்துப் பேசினார். பின்பு பூனா சென்றடைந்து, அன்று மாலை எரச், ஜால்பாய் இருவருடன் நாராயண்காவ்ம் வந்து பி.டபிள்யூ.டி. (P.W.D.) பயணிகள் விடுதியில் தங்கினர்.

மே 8ஆம் நாள் பதினாறு ஏழை குடும்பங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியைத் தயார் நிலையில் வைத்து, பைதூல் அவர்களுக்காகக் காத்திருந்தார். பாபா, தனி அறையில் ஒவ்வொரு நபரின் பாதங்களையும் கழுவி, தலையால் தொட்டு வணங்கி ஒவ்வொருவருக்கும் ரூ 50 வழங்கினார். பயணிகள் பங்களாவிற்கு வந்திருந்த சில பிச்சைக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு ரூபாய் கொடுத்தார். நாராயண்காவ்ம் மற்றும் ஜுன்னாரிலிருந்து ஏழைகள் இரண்டு பேருந்துகளில் பயணிகள்

பங்களாவிற்கு அழைத்து வரப்பட்டு, நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும் திரும்பிச் சென்றனர்.

மே 9 அன்று, பாபா ரஜூரிக்குச் சென்று, அந்த கிராமத்தைச் சேர்ந்த நான்கு குடும்பங்கள், மற்றும் ஆலே கிராமத்திலிருந்து பேருந்தில் அழைத்து வரப்பட்ட நான்கு குடும்பங்களின் உறுப்பினர்களின் பாதங்களைக் கழுவி வணங்கிய பின்பு, பாபா ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ 50 மற்றும் ஒவ்வொரு பிச்சைக்காரருக்கும் இரண்டு ரூபாயும் வழங்கினார். 'ஏழை நிகழ்ச்சி' நிறைவடைந்ததும் பாபா, பூனா வழியாக 'மெஹராஸாத்' (பிம்பல்காவ்ம்) திரும்பிச் சென்றார்.

மே 15 அன்று, முழு நாளும் பாபா மெஹராபாத்தில் இருந்தார். அவர் காலை 8:00 மணியளவில் மெஹராஸாத்திலிருந்து பெண்மணிகளுடன் புறப்பட்டுச் சென்று, காலை வேளையை மேல்மலையில் மகளிர் குழுவுடன் கழித்தார். கீழ் மெஹராபாத்தில், பாபா, மூன்று மணி முதல் ஆறு மணி வரை தனித்தனியாக மண்டலியை சந்தித்து, ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினார்; மாலை ஏழு மணிக்கு மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

மே 26 வெள்ளிக்கிழமையன்று, மீண்டும் மெஹராஸாத்திலிருந்து பைதூல், சாஞ்சி, எரச், குஸ்தாஜி, ஜால்பாய், காக்கா ஆகியோருடன் பாபா 'காண்ட்வா' (KHANDWA) கிராமத்திற்குப் புறப்பட்டு, அஹமதுநகரிலிருந்து ரயிலில் பயணம் செய்தனர். கிருஷ்ணா, டாக்டர் நீலு, வெங்கோபா ராவ், விஷ்ணு ஆகியோர் பெண்மணிகளை கவனிக்க மெஹராஸாத்தில் இருந்தனர்.

பாபா மறுநாள் காலையில் காண்ட்வா சென்றடைந்து, பைதூல், குஸ்தாஜி இருவருடன் மசூதிக்கு அருகே வாழ்ந்த 'கோரப் ஷா' (GORAB SHAH) என்ற மஸ்தைத் தொடர்பு கொள்ளப் புறப்பட்டார். பாபா மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்த மஸ்தை சந்தித்தபோது, ஆன்மீகப் பாதையில் மிகவும் முன்னேறிய ஆன்மா என்று குறிப்பிட்டார். தொடர்பு திருப்திகரமாக இருந்தது, பாபாவை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது.

பிற்பகல் தேநீருக்குப் பின்னர், அற்புதமான மனநிலையில் இருந்த பாபா, ஈரான், இந்தியா நாடுகளின், கடந்த கால, இக்கால சத்குருக்கள் மற்றும், சாதுக்களைப் பற்றிக் குறிப்பிட்டார்: **"அவர்கள் மனிதகுலத்தின் உண்மையான மலர்கள் - ஆன்மீக சக்திமிக்க மலர்கள்! ஈரானில், 'ஷாம்ஸ்-இ-தப்ரிஸ்'** (SHAMS-E-TABRIZ), **'மௌலானா ரூமி'** (MAULANA RUMI), **'ஹாஃபீஸ்'** (HAFIZ) **அனைவரும் பரிபூரணமானவர்கள். 'உமர் கயாம்'** (UMAR KAYAM) **இறையுணர்வை எய்தவில்லை எனினும் ஆன்மீகப் பாதையில் மிகவும் முன்னேறியவர்.**

**"உலகில் பணிபுரிவதற்கு, மேல்நிலையை அடைந்த மஸ்துகள் எனக்கு மிகச்சிறந்த ஊடகமாக இருப்பதால், அவர்களைத் தொடர்பு கொள்ள நான் மிகவும் முயற்சி செய்கிறேன்"** என்று பாபா வெளிப்படுத்தினார்.

இதற்கிடையில், பாபா, ஏழை எளிய மக்களைக் கண்டுபிடித்து ஒன்றுதிரட்ட எரச், காக்கா, ஜால்பாய் ஆகியோரை அனுப்பி வைத்தார். 'கோரப் ஷா'வுடன் பணிபுரிந்த பின்பு, பாபா, காண்ட்வா பாலத்திற்கு அருகிலமைந்த ஜெயின் தர்மசாலையில் சுமார் 60 ஏழைகளின் கால்களைக் கழுவி, தலையால் தொட்டு வணங்கி, ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் நாணயத்தை வழங்கினார்.

பாபா, ஏழைகளின் கால்களைக் கழுவும்போதெல்லாம், முழு நிகழ்வும் மிகவும் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டது, அது ஓர் இராணுவப் பயிற்சி போன்றது என்று சிலர் குறிப்பிட்டனர். அது அப்படித்தான் இருக்க வேண்டும். பாபா எப்பொழுதுமே அதி வேகத்தில் பணிபுரிந்தார்; எந்த விதமான வீண் நகர்வுகள் அல்லது நேரத்தையும் பொறுத்துக்கொள்ள மாட்டார். பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து, ஏழை மக்களை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒன்று சேர்த்து, கால்களைக் கழுவ மிதமான நீரைத் தயாராக வைத்து, பிரசாதத்தைப் பெற்றதும், ஒவ்வொருவரும் சீரான முறையில் வெளியேறுவதைக் கண்காணிப்பது - இவை அனைத்தும் மற்றும் இதர வேலைகளும் ஒரே நேரத்தில் நடந்தன.

காண்ட்வாவிலிருந்து மெஹர் பாபா, 'ஷிவானந்த் பிரம்மச்சாரி' (SHIVANAND BRAHMACHARI) என்ற மேல்நிலை யாத்ரீகரைத் தொடர்புகொள்ள ஒரு காளை வண்டியில், 'போர்காவ்ம்' (BHORGAON) கிராமத்திற்கு அன்று இரவு புறப்பட்டார். 'சுவாமி' (SWAMI) என்று ஊர் மக்களால் அறியப்பட்ட அவர், பாபா யார் என்பதை அடையாளம் கண்டுகொண்டார், மேலும் அவர் இருக்கையிலிருந்து எழுந்து, பாபாவை அணுகி மரியாதையுடன் வரவேற்றார். அவர் பாபாவிற்கு வழங்கிய உணவை அவர் பணிவுடன் மறுத்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா விரைவாக வெளியேறினார். பாபா, ஒரு மஸ்த் அல்லது துறவியால் அறிந்து, அங்கீகரிக்கப்படும் போதெல்லாம், அவருக்கே உரித்தான சில காரணங்களால், அது அவரது பணியை மிகவும் கடினமாக்குகிறது, எனவே அவர் உடனடியாக வெளியேற விரும்பியதாகத் தெரிவித்தார்.

அன்றிரவு காண்ட்வா திரும்பி வந்த பாபா, அடுத்த நாள், 28ஆம் தேதி, 'ஸனாவட்' (SANAWAD) கிராமத்திற்குச் சென்று 'சமேலி பாபா'வைத் (CHAMELI BABA) தொடர்பு கொண்டார். பின்னர், 'பர்வா' (BARWAH) கிராமத்தில் அமைந்த தர்மசாலையில், பாபா 40 ஏழை மக்களின் கால்களைக் கழுவி, அன்பின் அடையாளமாக ஒரு ரூபாய் நாணயத்தை வழங்கி அவர்களை ஆசீர்வதித்தார்.

மே 29 அன்று, பாபா, 'பூர்ஹான்பூர்' (BURHANPUR) நகரத்திற்குப் பேருந்தில் பயணம் செய்து, 'ராவோஜி மாமா' (RAOJI MAMA) என்ற ஹரிஜன மஸ்துடன் பணிபுரிந்தார். ரயில் நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மஸ்த், வயதானவராகவும் பலவீனமாகவும் தோன்றினாலும், அவர் கட்டுமீறிய முனைப்புடன் கோபத்தை வெளிப்படுத்தும் ஜலாலி வகையைச் சார்ந்தவர். காக்கா அவருக்கு உணவு வழங்கியதும், மஸ்த் அவரைக் கன்னத்தில்

கடுமையாக அறைந்தார். ராவோஜி மாமா தனிச் சிறப்புமிக்க மஸ்தாக இல்லாமல் இருந்தாலும், பாபா அவரை விரும்பினார். பின்பு பாபாவும் மண்டலியும், ரயிலில் 30ஆம் தேதி மாலை அஹமதுநகருக்கு வந்தனர்.

இந்த மஸ்த் பயணத்திற்குப் பிறகு, பாபா, மெஹராஸாத் திரும்பி வந்தார். இந்தக் காலகட்டத்தில், 'கெஸு' - GESU (GEISHA - கீஷா) என்றழைக்கப்பட்ட ஸியாமிஸ் (SIAMESE) பூனை ஒன்று பாபாவிற்கு கொடுக்கப்பட்டது; அங்கு அது பெண்மணிகளின் செல்லப்பிராணியாக, பாபாவின் கட்டளைப்படி, மார்கரெட்டின் கண்காணிப்பில் வளர்ந்து வந்தது. 1944 ஜூன் தொடக்கத்தில், ஓர் இரவு கடுமையான மழை பெய்து கொண்டிருந்த வேளையில், பாபா திடீரென மார்கரெட்டிடம் பூனையை வெளியே எறியும்படி கட்டளையிட்டார். மார்கரெட் தயக்கத்துடன், "ஆனால் பாபா, மழை பலமாகப் பெய்கிறது..." என்று கூறியதும் பாபா கண்டுகொள்ளாமல் அறையை விட்டு வெளியேறினார்.

அடுத்த நாள் இரவு, அதே காட்சி மீண்டும் நிகழ்ந்தது. கொட்டும் மழையில், பாபா, மார்கரெட்டின் அறைக்கு வந்து, கெஸுவை வெளியே தூக்கி எறிய உத்தரவிட்டார். மீண்டும், மார்கரெட் ஏதோ சொல்ல முயன்ற போது, பாபா முகத்தைச் சுளித்து, **"எப்படியாயினும் அது யாருடைய பூனை, உங்களுடையதா அல்லது என்னுடையதா?"** என வினவினார்.

"உங்களுடையது பாபா," என்று பதிலளித்து பாபா சொன்னதற்கிணங்க கெஸுவை வெளியே எறிந்தார்.

சில நாட்களுக்குப் பிறகு, மார்கரெட் செய்தித்தாள்களில் அந்த 'முக்கிய நாளைப்' ('டி-டே' - D-DAY) பற்றி வாசிக்க நேர்ந்தது - ஜூன் 6 அன்று 'நார்மண்டி'யில் (NORMANDY) 'நேச நாடு'களின் ஆக்கிரமிப்பிற்கான படையெடுப்பு தொடங்கிது - மேலும் பாபாவின் விசித்திரமான கட்டளையின் பின்னால் அடங்கிய முக்கியத்துவத்தை அவரால் உணர முடிந்தது. தற்செயலாக, அதே நேரத்தில் 'ஆங்கில கால்வாய்' (ENGLISH CHANNEL - இங்கிலிஷ் சேனல்) மீது கடும் புயலும், கொந்தளிப்புமான வானிலை காரணமாக, கிட்டத்தட்ட முப்பது லட்சம் துருப்புக்களைக் கடக்க அனுமதிப்பது பற்றி ஐஸென்ஹோவர் (EISENHOVER) மற்றும் பிற தளபதிகளுக்கு இடையே ஒரு விவாதம் நடந்தது.

700க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் மற்றும் 4,000 தரையிறங்கும் நீர்ப்படை கலம்கள் அடங்கிய படையெடுப்பு ஏற்கனவே ஒரு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. தனது முடிவில் உறுதியாக இருந்த ஐஸென்ஹோவர் இப்படிப் பொருள்படும்படிக் கூறினார்: "இங்கே கட்டளையிடுவது யார் - நீங்களா அல்லது நானா?" பாபா, மார்கரெட்டிடம் கூறிய அந்த வார்த்தைகளுடன் இந்த சம்பவம் சரியாக ஒத்துப்போனது.

மூன்று வருடங்களுக்கு முன்பு நோரினா மாட்சபல்லி இந்தியாவிலிருந்து புறப்படுவதற்கு முன்னதாக, பாபா இவ்வாறு கூறி

வழிநடத்தினார், **“என்னை உங்களின் ‘தனிப்பட்ட கடவுளாகக்’ கண்டுகொள்ள நான் உங்களுக்கு உத்தரவிட்டேன். நீங்கள் என்னை அவ்வாறே கண்டுகொண்டீர்கள். உலகெங்கும் சென்று இதைச் சொல்லுங்கள். நீங்கள் எனது குரலை உங்கள் ஆழ் இதயத்தில் கேட்பீர்கள். வேறு எந்தக் குரலையும் கேட்கமாட்டீர்கள்.**” நோரினா அமெரிக்கா திரும்பியதும், நியூயார்க் நகரம் மற்றும் பல இடங்களில் பாபாவைப் பற்றிய தொடர் சொற்பொழிவுகளை வழங்கினார். நோரினாவின் பேச்சுக்கள் வளமையும், ஊக்கமிக்கதாகவும் இருந்தன; பல நபர்கள் அவர் மூலம் பாபாவைப் பற்றி அறிந்து கொண்டனர், பின்னர் அவரை நேசித்தனர்.

பாபாவுக்கான ஓர் உலகளாவிய ஆன்மீக மையம், இந்தியாவில் இன்னும் நடைமுறைக்கு வராத நிலையில், நோரினாவின் தொடர் சொற்பொழிவு பணியைத் தவிர, எலிஸபெத்தும், அவரும், மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, அமெரிக்காவில் பொருத்தமான மையத்திற்குத் தேவையான இடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். அவர்கள் செல்வதற்கு முன்பு, பாபா, சில நிபந்தனைகளை விதித்தார். இப்போது அவர்கள் இறுதியாக அதற்கான இடத்தைக் கண்டுபிடித்ததாகத் தோன்றியது.

அவர்களுடைய தேடலின் வரலாற்றுப் பின் நிகழ்வுகளை விவரித்து எலிஸபெத், பாபாவிற்கு எழுதிய கடிதம் பின்வருமாறு:

**ஜூன் 4, 1944**

பிரியமான பாபா,

தெற்கு கரோலினாவில் அமைந்த நிலத்தைக் குறித்து, நான் அனுப்பிய பல தொலைத்தந்திகளை நீங்கள் பெற்றுள்ளீர்கள்; அமெரிக்காவில் நிறுவ இருக்கும் உங்கள் ஆன்மீக மையங்களில் ஒன்றாக இதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். நான் முதன்முதலில் தொலைத்தந்தி அனுப்பிய வேளையில், இந்த நிலம் தந்தையால் எனக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது, ஆனால் அது ‘மர்டில் பீச் ஃபார்ம்ஸ் கம்பெனி’ (MYRTLE BEACH FARMS COMPANY) எனும் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குச் சொந்தமானதாக இருந்ததால், அதைக் கைப்பற்ற கணிசமான நேரம் பிடித்தது. உண்மையில், 1800 ஏக்கரின் முழுப் பகுதியும் பங்குதாரர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட பலராலும் வேட்டையாடவும், மீன்பிடிக்கவும் பயன்படுத்தப்பட்டதால், இப்போது சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டு, தந்தையின் பங்கு, தோராயமாக இந்த மரங்கள் நிறைந்த நிலமான 800 ஏக்கர் இரண்டு ஏரிகளையும் உள்ளடக்கியது. அட்லாண்டிக் பெருங்கடலுக்கு மிக அருகில் அமைந்த நீரூற்றுகளால் உருவாக்கப்பட்ட ஆறு நன்னீர் ஏரிகளைக் கொண்ட இந்த வனப்பகுதி தனித்துவமானதாக இருந்தாலும், இது இனிமையான நீராக எப்படி இருக்க முடியும் என்று அனைவரும் ஆச்சரியப்படுகிறார்கள்!

நாங்கள் ஐந்து பேர், இப்போது ஜூன் மாதத்தில் உங்கள் ‘மர்டில் பீச்’ (MYRTLE BEACH) மையத்தில் வாழ்கிறோம், (ஃபிராங்க்) ஈட்டன் (FRANK EATON) -

தம்பதிகள், டார்வின் ஷா, நோரினா மற்றும் நான். டார்வின் வேலைக்குச் செல்லும் வேளையில், ஜான் பாஸ் (JOHN BASS) இங்கு வருகிறார். மால்கம் (MALCOLM SCHLOSS) கலிஃபோர்னியாவிலிருந்து வரமுடியாத நிலை; நீங்கள் ஏற்கனவே அறிந்தபடி, ஜீன் (JEAN ADRIEL) தற்போது தனது நேரத்தை, லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து சற்று தூரத்தில் அமைந்த ஒரு பகுதியில் செலவிடுகிறார். உண்மையில், அமெரிக்க நாட்டில் ஐந்து ஆன்மீக மையங்கள் நிறுவுவதற்கான திட்டத்தை, 1931இல் நீங்கள் முதன்முதலில் இங்கு வந்தபோது வகுத்து, அவற்றை வெவ்வேறு ஆன்மீக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவீர்கள் என்று எங்களிடம் எடுத்துரைத்தீர்கள்.

தெற்கு கரோலினா மையத்தை இறுதியாகக் கண்டுபிடிக்கும் சூழ்நிலைகளைக் கோடிட்டுக் காட்ட, 1941 ஜூன் மாதத்தில், நாங்கள் இந்தியாவை விட்டுச் செல்லும்போது, அமெரிக்க தேசத்தில் உங்களுக்கும் உங்களுடைய 60 சீடர்களுக்கும் பொருத்தமான ஒரு நிலத்தைப் பார்க்குமாறு நீங்கள் நோரினாவிற்கும் எனக்கும் சொன்னீர்கள். நீங்கள் நிலத்திற்குத் தேவையான ஐந்து நிபந்தனைகளையும் வழங்கினீர்கள், ஆனால் இந்த நாட்டில் அது எங்கு அமைந்திருக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லவில்லை; அவை: **அந்த இடம் (சமமான) தட்பவெப்ப காலநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.**

**தூய்மையான (இதுவரை எவரும் பயன்படுத்தாத) நிலம்.**

**போதுமான தண்ணீர்.**

**அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு தன்னிறைவு தரக்கூடிய நிலம். அந்த நிலம் இதயத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டும்.**

நாங்கள் திரும்பி வந்த நாளிலிருந்து நானும் நோரினாவும் ஒவ்வோர் இடத்திலும், அத்தகைய நிலம் இருக்கிறதா என்று பார்த்து, தேடி அலைந்தோம்.

குறிப்பாக நாங்கள் கலிஃபோர்னியாவில் தேடினோம். உங்கள் நிபந்தனைகளுக்கு ஏறக்குறைய ஏற்றாற்போல 'ஸான் ஃபிரான்சிஸ்கோ'வின் விரிகுடாவில் 'ஃபெயர்ஃபாக்ஸ்' (FAIRFAX) நகரம் இருந்தது. ஒரு ஸூஃபி தலைவி, இந்தியாவில் சில காலம் வாழ்ந்த ஒரு சிறப்பான பெண்மணி, நீங்கள் அமெரிக்கா வரும்போது உங்கள் சீடர்களுடன் அங்கேயே தங்க விருப்பம் தெரிவித்தவர். அவருடைய இந்த அன்பளிப்பு இதயத்திலிருந்து வந்ததாகத் தோன்றியதால் ஒருவேளை நீங்களே அதைச் செய்கிறீர்கள் என்று நம்புகிறோம்; மேலும், நாங்கள் அங்கு சந்தித்த அந்தப் பெண்மணி ஆன்மீகப் பாதையில் மிகவும் முன்னேறிய மற்றும் புரிந்துகொள்ளும் தன்மைமிக்க ஆன்மா என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். அவர் பெயர் 'ரபியா மார்ட்டின்' (RABIA MARTIN). நாங்கள் அங்குச் சென்றபோது அவர் உங்களுக்காக மேஜையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை அமைத்தார், எல்லாமே உங்களுக்காக முதன்முதலில் ஆழ்ந்த பக்தி முறையில் பரிமாறப்பட்டது. வளமான நாட்டில் இந்த நிலம் தூய மண்ணில் இருந்ததோடு ஒவ்வொரு நிபந்தனையையும் பூர்த்திசெய்வதாகத் தோன்றியது. நாங்கள் அங்குச் சென்ற அந்த நாள் திடீரென

மிகவும் குளிராக மாறியது, அவர்கள், இத்தகைய காலநிலை எப்போதும் கலிஃபோர்னியாவில் ‘அசாதாரணமானது’ என்று கூறுகிறார்கள் - ஆனால் வடக்குப் பகுதியில் ஸான் ஃபிரான்சிஸ்கோ வரை சமமான காலநிலை இல்லை என்று நாங்கள் நினைத்தோம், இருப்பினும் கடந்த கோடையில் ‘ஸான் மேற்றியோ’ (SAN MATEO) நகரத்தை நாங்கள் விரும்பினோம், அதுவும் அருகாமையில் உள்ளது.

கடந்த செப்டம்பரில், நாங்கள் லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குச் சென்றபோது, ஜீன், மால்கம், மார்கி ஆகியோருடன் காரில் பல இடங்களைப் பார்வையிடச் சென்றோம், ஆனால் இந்த மாகாணத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதாகத் தெரிகிறது.

திரும்பி வரும் வழியில், விஸ்கான்சின் (WISCONSIN), ஜெனீவா ஏரியில் (LAKE GENEVA) அமைந்த குடும்ப நிலத்தைப் பார்வையிடச் சென்றேன் (நான் உங்களுக்கு அங்கிருந்துதான் கடிதம் எழுதினேன்); பல ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் தோட்டப் பண்ணைகளைப் பார்த்தபோது, நாடு எவ்வளவு அழகாகவும் வளமாகவும் இருந்தது என்பதை உணர்ந்தேன், ஆனால் நிச்சயமாக குளிர்காலம் மிகவும் கடுமையாக இருக்கும், மேலும் நீங்கள் விரும்பும் சமமான காலநிலையும் இல்லை.

கடந்த குளிர்காலத்தில் நான் பல முறை வடக்குக் கரோலினாவின் ‘பைன்ஹர்ஸ்ட்’ நகரில் (PINEHURST, NORTH CAROLINA) அமைந்த குடும்ப வீட்டிற்குச் சென்றேன்; எனது தாயார் இதயக் கோளாறு ஏற்பட்டு ஓய்வெடுத்ததால் நானும் அங்கேயே தங்கியிருந்தேன். நான் அத்திப்பழ தோட்டம், மற்றும் பங்குதாரர் என்ற முறையில் தந்தைக்குச் சொந்தமான இதர நிலங்களையும் பார்வையிடச் சென்றேன். இங்கு காலநிலை சமமானதாக இருந்தது, ஆனால், கோடையில் வெப்பம் மிகையாக இருப்பது மட்டுமின்றி, மண், மணல் நிறைந்து பல வகையான பயிர்களை வளர்ப்பதற்கு ஏற்றதான ஏரி அல்லது ஆறு எதுவுமில்லை.

நாங்கள் இந்தியாவில் இருந்தபோது ‘மர்டில் பீச்’சைப் (MYRTLE BEACH) பற்றி நீங்கள் பலமுறை குறிப்பிட்டதும், குழுவுடன் நீங்கள் அமெரிக்கா வரும் வேளையில் இங்குத் தங்கும் வாய்ப்புள்ளதைப் பற்றியும் கூறியதை நினைவில்கொண்டு, நோரினாவும் நானும் அங்குச் செல்லத் திட்டமிட்டோம்; சரியான நேரத்தில் உங்கள் கடிதம் (1943, நவம்பர் 12) மார்கரெட்டிடமிருந்து வந்தபோது, நீங்கள் மீண்டும் மர்டில் பீச்சைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

எனது தந்தையார் அவரது இல்லத்தோடு இணைந்த பங்களாவை, கென்னத்துக்கும் (KENNETH) எனக்கும் கொடுத்தபோது, நாங்கள் 1944 பிப்ரவரி மாதம் அங்குச் சென்றோம். பல முறை நான் நினைத்துப் பார்த்ததுண்டு, தந்தை ஏன் எனக்கு எல்லா வகையிலும் நல்ல ஒரு வீட்டை கொடுத்தார் என்று, தவிர ஆன்மீக நோக்கங்களுக்காக அல்லது தியான வாழ்க்கைக்குப் பயன்படும் அளவிற்கு ஒதுங்கியதாகவும் இல்லை, கடற்கரையில் இருந்ததால் எவரேனும் உரிமையோடு நடக்க முடிந்திருக்கும் அவ்வளவுதான். இல்லையேல், ஒன்பது

படுக்கையறைகள் மற்றும் ஐந்து குளியலறையும் அடங்கிய இந்த வீடு, உங்களுக்கும், குழுவிற்கும் கூடப் பெரியதாக இருந்திருக்கும். நாங்கள் ஐவரும், உங்கள் 'மர்டில் பீச்'சிற்குச் செல்லும் முன்பு, மூன்று நாட்கள் இந்த பங்களாவில் தங்கியிருந்தோம்; இப்போது ஜூன் மாதம், அந்தக் காடுகளில் முகாம் அமைத்து, வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து பொருட்களையும் சேகரித்துள்ளோம்.

இந்தக் கதையைத் தொடர, நான் கடந்த பிப்ரவரியில் வேட்டை மற்றும் மீன்பிடிப்பதற்கு ஏற்ற இடங்களைப் பற்றி விசாரித்த வேளையில், தந்தை 'அந்த ஆறு ஏரி'களைப் பார்க்க எங்களை அழைத்துச் சென்றார். மியாமியிலிருந்து (MIAMI) நியூயார்க் (NEW YORK) செல்லும் பிரதான நெடுஞ்சாலை இந்த நிலத்தின் வழியாகச் சென்றது, ஆனால் இப்போது மணல் நிறைந்த சிறிய சாலை, கிட்டத்தட்ட இல்லாததுபோல் ஆகிவிட்டது. இது வாஷிங்டன், (WASHINGTON) லா஑பாயெட் (LAFAYETTE) இவர்களால் பயன்படுத்தப்பட்ட பழைய கிங்ஸ் நெடுஞ்சாலை, மற்றும் ஏரிகளுக்கு அருகில் (அவர்கள் இங்கு முகாமிட்டு மீன்பிடித்தனர் என்பதில் சந்தேகமில்லை)... குறிப்பாக நீண்ட, குறுகலான மற்றும் கடலை நோக்கி இருந்த மிகப்பெரிய ஏரியைக் கண்டு நாங்கள் மெய்மறந்துபோனோம்.

இங்கே, நிச்சயமாக, அளவிலா அமைதிக்குப் பஞ்சமே இல்லை, மேலும் நீங்கள் விரும்பும் நான்கு நிபந்தனைகளும் அதில் இருப்பதாகத் தோன்றியது; ஐந்தாவது ஒன்றை மட்டும் செய்ய வேண்டியிருந்தது - அதாவது 'இதயத்திலிருந்து' அன்புடன் வழங்குவது.

ஏற்கனவே கூறியது போல, நிலம் தந்தைக்குத் தனிப்பட்ட முறையில் சொந்தமாக இல்லை; மாறாக, ஒரு நிறுவனத்தின் பங்காளியாக, அல்லது அதை விட்டுக்கொடுக்க நினைத்ததும் இல்லை, அல்லது வேட்டையாடும் வனப்பகுதிக்கு அப்பால் அதன் பயன்பாட்டைப் பற்றி யோசித்ததுமில்லை (இதுவே, சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர், அவர் தெற்கு கரோலினாவிற்கு, (SOUTH CAROLINA) முதன் முதலாக வருவதற்கான காரணம்; இருந்தும் பல ஆண்டுகளுக்கு முன்னர் (அவர்) தனது வயது காரணமாக வேட்டையாடுவதை கைவிட்டார்). இருப்பினும், 'மர்டில் பீச் ஃபார்ம்ஸ் கம்பெனி' (MYRTLE BEACH FARMS COMPANY), இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், எதிர்கால திட்டமாக, தங்கள் இதர நடவடிக்கைகளிலிருந்து ஏழு மைல் தொலைவில் அமைந்த இந்த ஏரி மாகாணத்தை (LAKE DISTRICT) விற்றுவிடலாம் என்றும் திட்டமிட்டது.

நோரினாவும் நானும் உங்கள் ஆன்மீக மையத்திற்கான சாத்தியக்கூறுகளை ஒரே நேரத்தில் பார்த்தோம், அது கிடைத்தால் மட்டுமே, மிகப்பெரிய ஏரியைக் கொண்ட ஒரு கடல் முன்னால் ஒரு மைல் மற்றும் பிரதான நெடுஞ்சாலையைத் தொட்டு, சதுரமாக இருக்கும் ஏறக்குறைய 500 ஏக்கர் நிலம் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. நிச்சயமாக, நான் உற்சாகமாக இருந்தேன், அது இதர சூழ்நிலைகளுடன் இணைந்து (எனது சகோதரி விர்ஜீனியா (VIRGENIA) இறுதியில் ஜெனீவா ஏரி, விஸ்கான்சின்

பண்ணையைச் சொந்தமாக்க விருப்பம் தெரிவித்தது, அதே சமயத்தில் தந்தையார் அவரது சொத்தில் மூன்றில் ஒரு பகுதியாக மூன்று குழந்தைகளுக்கும் உயில் தயார் செய்வதைப் பற்றிய பேச்சும் எழுந்தது), இந்த 500 ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக்கி, மர்டில் பீச்சைச் சுற்றி என் இதய ஏக்கங்களை ஒருமுகப்படுத்தும் விருப்பத்தை எடுத்துரைக்கும் வாய்ப்பைப் பெற்றேன். இருப்பினும், அவர் வாழ்நாள் வரை காத்திருப்பதை விட இப்போது அதை அடையப்பெறுவது மிகவும் நன்றாக இருக்கும், மேலும் அதன் பயன்பாட்டை நான் அனுபவிப்பதில் அவர் நிச்சயமாக அதிக மகிழ்ச்சி அடைவார். மேலும், இது மனிதாபிமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும், இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு முன்பு நீங்கள் என்னிடம் கூறியது போல, போருக்குப் பிறகு வீடுகளை இழந்து தவிக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இந்த மையங்களில் ஒன்று பயன்படுத்தப்படும் என்று நீங்கள் கூறியதும் எனது நினைவில் உள்ளது.

எனது தந்தை வழக்கத்துக்கு மாறாக மறுமொழி கூறக்கூடியவர் என்று நான் சொல்லியாக வேண்டும், ஏனெனில் 'மர்டில் பீச்' (MYRTLE BEACH) அவரது இதயத்திற்கு நெருக்கமாக இருந்ததால், கடந்த காலத்தில் அவர் தனது குழந்தைகள் எவரும் அதில் ஆர்வம் காட்டவில்லை என்று பல முறை கூறியிருக்கிறார். அவருடைய வாழ்க்கையில் அவரது மத நலன்களே பிரதானமாக இருந்ததுபோல, நான் எனது வாழ்க்கையில் முதலாவதாகக் கருத்தில் கொள்ள என் ஆன்மீக ஆர்வங்கள் இருப்பதாக நான் அவரிடம் கூறினேன், மேலும் இங்கு எனது சொந்த வழியில் பணிபுரிய, அதாவது இந்த நிலத்தில் ஒரு மையத்தை உருவாக்க முடியும் என்ற உண்மையான ஆர்வம் எனக்கு இருந்தால் நான் நிச்சயமாக மர்டில் பீச் நிலத்தில் ஆர்வம் காட்டுவேன் என்றும் கூறினேன்.

இவை அனைத்திற்கும் பின்னால், ஆன்மீக ரீதியில் நீங்கள் இருப்பதை நான் உணர முடிந்தது, ஏனெனில் 1800 ஏக்கர் நிலத்தைப் பிரிப்பதற்கு வசதியாகப் பல சூழ்நிலைகள் எளிதாக வந்தது மட்டுமல்லாமல், எனது தந்தையின் காலத்திற்குப் பிறகு பங்குதாரர்களும் வாரிசுகளும் பலர் இருப்பதால் பல சிக்கல்கள் வர வாய்ப்பிருந்தது. ஆயினும், தந்தையார் எனக்கு 500 ஏக்கர் மர்டில் பீச் நிலம் வழங்குவதாக வாக்குறுதி அளித்தார் என்று நான் தொலைத்தந்தி அனுப்பிய போது, எவரும் எதிர்பார்த்ததை விட இது சிறப்பாக முடிவிற்கு வந்தது, ஏனெனில் அருகில் இருந்த 300 ஏக்கர் நிலம் ஏற்கனவே உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததால், இந்த 500 ஏக்கர் நிலத்தின் ஒப்பந்தம் நிறைவடைந்து பத்திரம் என் வசம் வர இன்னும் ஒரு வருடம் பிடித்திருக்கும். ஆனால் சாதகமான சூழ்நிலையில் 500 ஏக்கர் நிலம் உண்மையில் எனது பெயரில் 1944, மே 15 அன்று பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

உங்களுடைய ஆன்மீகக் காரணத்திற்காக இந்த நிலத்தை உங்களுக்கு என்றென்றும் வழங்க வேண்டும் என்பதுதான் என் ஒரே ஆசை. அதை எப்படிச் செய்வது என்பதை நீங்கள் வரும்போது முடிவு செய்யலாம்... அது

'இதயத்திலிருந்து' கொடுக்கப்படும் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம். மேலும், 'இதயத்திலிருந்து' தந்தையார் அதை எனக்குக் கொடுத்தார் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எதுவாயினும், இறுதியில் உங்கள் ஆன்மீக மற்றும் மனிதநேய நோக்கங்களுக்காக அது பயன்படுத்தப்படும் என்பதை அவர் நன்கு அறிவார். நீங்கள் இங்கே ஒரு பெரிய மையம் அமைக்க வேண்டும் என்பது என் வாழ்க்கையின் கனவாக இருக்கும். உங்கள் உலகளாவிய நோக்கத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். நீங்கள் அதை முடிவு செய்யும் வரை மெஹர் பாபாவின் 'மையம்' "THE CENTER" FOR MEHER BABA என்பதைத் தவிர வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படமாட்டாது.

டார்வின் - DARWIN (SHAW - ஷா), ஃபிராங்க் - FRANK (EATON - ஈட்டன்) இருவரும் இன்று நிலத்தை ஆராய்ந்து, கண்டுபிடிக்கும் மிகப்பெரிய மரங்களைக் கொண்ட மிகவும் உயரமான இடம், நீங்கள் மௌனத்தைக் கைவிடும் நாட்களில் ஒரு சிறந்த அரங்கம் அமைப்பதற்கு ஏற்றதாக இருக்கும்... எனது தந்தையார் உறுதியளித்த அந்த நிலம் விரைவில் எனது கைகளுக்கு வந்ததும், நாங்கள் 'உங்கள் குடில்' என்று அழைக்கப்படும் ஒரு திரையிடப்பட்ட தாழ்வாரத்துடன் இரண்டு அறைகள் கொண்ட ஒரு வீட்டைக் கட்டத் தீர்மானித்துள்ளோம். இந்தக் குடில் மலையில் அமைந்துள்ளது, அங்கிருந்து நீங்கள் ஏரியையும் கடலையும் பார்க்க முடியும்...

இது வளர்ச்சிக்கான சிறந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. நீங்கள் எதை முதன்மையாக செய்ய விரும்புகிறீர்கள் என்பதை, தயவுசெய்து எழுதுங்கள்; மேலும் அதைப் பற்றிய உங்கள் பொதுவான கருத்துக்களை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

நீங்கள் வந்ததும் அதை ஏற்றுக்கொண்டு என்னை மகிழ்விப்பீர்கள் என்று தயவுசெய்து சொல்லுங்கள். எங்கள் ஒவ்வோர் எண்ணமும் செயலும் இப்போது உங்களுடையது.

- எலிஸபெத்

1944ஆம் ஆண்டில் மேலும் ஒரு கடிதத்தில், எலிஸபெத் பாபாவிற்கு எழுதினார்:

'ஸாந்தா பார்பரா'வில் (SANTA BARBARA) இருந்தபோது, ஓஹாய் பள்ளத்தாக்கில் (OJAI VALLEY) கிருஷ்ணமூர்த்தியைப் (KRISHNAMURTI) பார்க்க நாங்கள் சென்றோம் என்பதைக் குறிப்பிட மறந்துவிட்டேன். நோரினா ஏற்கனவே அவருக்கு அறிமுகமானவர், அவருடன் நன்றாக பேசினார். உங்களை சந்திப்பது ஒரு பாக்கியமாக இருக்கும் என்று கூறினார்.


நான் சிகாகோவில் (CHICAGO) ஒரு விரிவுரையும் வழங்கினேன். நாங்கள் இந்தியாவிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, சிகாகோ ஆன்மீக ரீதியில் முக்கியமான நகரம் என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள், ஆனால் எனது விரிவுரைக்கு மக்களின் வருகை பெரிய அளவில் இல்லை.


மெஹர் பாபா, நோரினாவிற்கு 1944, ஜூலை 13 அன்று கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**‘மர்டில் பீச்’ பற்றிய உங்கள் அனைத்து கடிதங்களிலும், நான் தனிப்பட்ட முறையில் மற்றும் ஆன்மீக ரீதியாக ஒப்புதல் அளித்து ஏற்றுக்கொண்ட அனைத்தையும் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். மர்டில் பீச் மையத்தை ஆன்மீக உறைவிடமாக மாற்ற என் அன்பர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.**



அக்பர் பிரஸ் விஜயத்தின் போது
(DURING A VISIT TO AKBAR PRESS)





ஆண் மண்டலியுடன் மெஹர் பாபா

(MEHER BABA WITH MEN MANDALI)

(இ - வ, L - R) விஷ்ணு (VISHNU), காக்கா பாரியா (KAKA BARIA),

பெண்டு (PENDU), ஆதி சீனியர் (ADI SENIOR), பாதிரி (PADRI),

ராம்ஜூ அப்துல்லா (RAMJOO ABDULLAH),

ஸரோஷ் ஈரானி (SAROSH IRANI), மினூ பரூச்சா (MINOO BAROOCHA)

# ராய்ப்பூர் & காஷ்மீர்

**(Raipur & Kashmir)**

1944, மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, 200 கையெழுத்திட்ட அன்பர்கள் பாபாவுடன் ஒரு மாதகாலம் தங்கியிருப்பது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க, ஜூன் மாதம் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஊருக்கு வெளியே வாழும் அன்பர்கள் 1944, ஜூன் 9 வெள்ளிக்கிழமை வந்து மெஹராபாத்தில் தங்கினர். அடுத்த நாள், 10ஆம் தேதி, மாலை 3:00 மணிக்கு குஷ்ரு குவாட்டர்ஸ், அஹமதுநகரில் நடந்த கூட்டத்தில் இருபத்து நான்கு ஆண் மண்டலி கலந்து கொண்டனர்; கூட்டத்தில் பாபா கூறியது பின்வருமாறு:

**எனது சமீபத்திய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விஷயங்களைப் பற்றி விவாதித்து, முடிவெடுக்க எனது மண்டலி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து நான் உங்களை அழைத்துள்ளேன். இந்த விஷயங்கள் அனைத்தும் போருக்கு முன்னதாக அல்லது போர் தொடங்கிய உடனேயே தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தியிருக்கலாம். போர் முன்னேறி வந்த வேளையில், இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மேலும் மேலும் கடினமாகிவிடும் என்று தெரிந்தும், இதற்கான நேரத்தை நான் தள்ளி வைத்துக்கொண்டே இருந்தேன். அவற்றைத் தீர்ப்பது அதீத கடினமாக இருந்தாலொழிய, எனது பணியைக் குறைபாடற்ற முழுநிறைவுடன் செய்ய முடியாது. இப்போது, அந்தப் பணியைச் செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது.**

இந்தக் கூட்டத்தில், பாபா, செப்டம்பர் மாதத்தில் நாக்பூருக்கும், அக்டோபரில் அலஹாபாத்திற்கும் தரிசன நிகழ்ச்சிகளுக்காகச் செல்வார் என்றும், கையெழுத்திட்டவர்கள் டிசம்பர் மாதத்தில் ராய்ப்பூரில் ஒரு மாதம் அவருடன் இருப்பார்கள் எனவும் முடிவு செய்யப்பட்டது. ஈரான் நாட்டுக்குச் செல்லத் தேவையான பயண ஆவணங்களைப் (விஸா) பெறுவதில் உள்ள சிக்கல் காரணமாக, 1944ஆம் ஆண்டின் முடிவிற்கு முன்பு, பாபா, அவரது ஆன்மீகப் பணிக்காக, பெஷாவரில் (PESHAWAR) 'மனித அதிகாரத்தின் கீழில்லாத நிலத்திற்கு' விஜயம் செய்யப் போவதாக முடிவு செய்யப்பட்டது.

பாபா, அப்போது சாஞ்சியின் பக்கம் திரும்பி, அங்கிருந்தவர்கள் முன்னிலையில், "**நீங்கள் அஹமதுநகர் மற்றும் அலஹாபாத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம் - உயிருடன் இருந்தால்!**" என்றார்.

சாஞ்சி உடனே, "பாபா எப்பொழுதும் என்னை இப்படி ஒரு கேலிப்பொருளாகப் பாவிக்கிறார்" என்றதும் அனைவரும் சிரித்து அதை இலகுவாக எடுத்துக் கொண்டனர். ஆனால் இந்த முறை, பாபா கேலி செய்யவில்லை. ஜால் கேரவாலாவின் உதவியுடன் அனைத்து

ஏற்பாடுகளையும் செய்ய, சாஞ்சி நாக்பூர் மற்றும் ராய்ப்பூருக்கு அனுப்பப்பட்டார்.

மாலை 7:00 மணிக்கு கூட்டம் நிறைவுற்றதும், அனைவரும் மெஹராபாத் திரும்பினர். பாபா, மெஹராஸாத் சென்று அடுத்த நாள் அவரது அன்பர்களை மீண்டும் சந்திக்க மெஹராபாத் சென்றார். அனைவரும் 12ஆம் தேதி தத்தமது இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

ஸையத் ஸாஹேப் ஆரம்பகால மண்டலியில் ஒருவராக இருந்தார், அவர் 1920ஆம் ஆண்டில் 'மெஹர் பாபா' என்ற பெயரை முதன்முதலாகப் பரிந்துரைத்தார். அவர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை எனினும், ஜூன் 13 அன்று பாபாவை சந்திக்க நாசிக் நகரிலிருந்து வந்து, இரண்டு நாட்கள் மெஹராபாத்தில் தங்கியிருந்தார்.

சாஞ்சி அஹமதுநகர் திரும்பிவந்து, ஜூன் 28 அன்று மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்து தனது அறிக்கையை வழங்கினார். அவர் நாக்பூர் மற்றும் சிந்த்வாரா (CHINDWARA) பகுதிகளில் பங்களாக்களைத் தேடினார், ஆனால் பாபா ராய்ப்பூரை விரும்பினார். அதைத் தொடர்ந்து, ரயிலில் முன்பதிவு செய்வதற்காக, சாஞ்சி மும்பைக்குச் சென்றார்.

1944, ஜூலை 7 அதிகாலையில் பாபா, மெஹராஸாத்திலிருந்து மும்பைக்கு, மெஹரா, மணி, மெஹரு, ரக்மா (பணிப்பெண்) மற்றும் மூன்று மாத நாய்க்குட்டி டைஃபூனுடன் (TYPHOON) ஸரோஷின் காரில் புறப்பட்டு, நண்பகல் 2:30 மணியளவில் மும்பையில் வாழ்ந்த காக்காவின் சகோதரி பானு கன்ஃபெக்ஷனரின் இல்லத்திற்கு வந்து களைப்பாறினர். (டாக்டர் டான் பாபாவை இங்கு சந்தித்தார்.) கோஹெர் அவர்களுடன் மும்பையில் இணைந்து, அனைவரும் ரயிலில் ராய்ப்பூர் சென்றனர். ஆண் மண்டலியில் பைதூல், சாஞ்சி, காக்கா, டாக்டர் நீலு, விஷ்ணு, கிருஷ்ணா, வெங்கோபா ராவ் ஆகியோர் உடன் சென்றனர். குஸ்தாஜி, மாஸாஜி இருவரும் மெஹராஸாத்திலும், இதர மண்டலி அனைவரும் மெஹராபாத்திலும் இருந்தனர். மார்கரெட், பூனை கௌஸூவுடன் மெஹராபாத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

ராய்ப்பூரில், உணவு ஆணையராகப் (FOOD COMMISSIONER) பணிபுரிந்த ஜால் கேரவாலா, பாபா மற்றும் பெண் மண்டலி தங்குவதற்கு 'தூங்காஜி'யின் பங்களாவில் (DOONGAJI BANGALOW) சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆனால், பாபா ராய்ப்பூர் வந்த போது, அவருடைய அறிவுறுத்தல்களுக்கு மாறாக, ரயில் நிலைய நடைமேடையில் மக்கள் கூட்டம் பாபாவின் தரிசனத்தை நாடி காத்திருந்தது. பாபா, பெண்மணிகளுடன் ரயிலின் மறுபக்கத்தில் இறங்கி, சரக்கு ரயிலின் பின்னால் மறைந்து கொண்டதும், ஜால் கேரவாலா அவர்களை சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட காரில் வேகமாக அழைத்துச் சென்றார்.

ராய்ப்பூரில், ஜூலை 11 அன்று, மெஹர் பாபா, ஆன்மீக சக்திகளுடன் ஒப்பிடும் வேளையில் யோகிகளின் (SIDDHIS - ஸித்தி) சக்திகளைப் பற்றி விளக்கமளித்தார்:

**பலவிதமான யோகப் பயிற்சிகள் மூலம், ஒருவர் தண்ணீரில் நடப்பது, தூரத்து நபர்களுடன் பேசுவது, மந்திரங்களை உச்சரிப்பதன் மூலம் பாம்பின் விஷத்தைத் தடுப்பது போன்ற விசித்திரமான சக்திகளைப் பெற முடியும். யோகப் பயிற்சிகள் வழியாக அடையப்பெறும் இந்த சக்திகளின் வெவ்வேறு அதிர்வுகள், பல்வேறு விளைவுகளைக் கொண்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட அதிர்வைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஒரு சாதாரண மனிதனால் இயலாத சில சாதனைகளை ஒரு யோகியால் செய்ய முடிகிறது.**

**ஆனால் இந்த யோக சக்தியின் தனித்தன்மை என்னவென்றால் அது ஒரு குறிப்பிட்ட அதிர்வை மட்டுமே கட்டுப்படுத்த முடியும். அவ்வாறு கட்டுப்பாட்டில் கொண்டுவரும் அதிர்வின் மூலம், தண்ணீரில் நடக்க முடிகிற ஒருவர் வேறு எதுவும் செய்ய முடியாது. அதேபோல, பாம்பு கடித்த விஷத்தின் விளைவுகளைப் போக்கும் திறன் படைத்த யோகி, அதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. யோகா பயிற்சிகள் மூலம் பெறப்படும் இந்த வெவ்வேறு சக்திகள் அனைத்தும் தனித்தன்மை வாய்ந்தவை, எனவே நிலையற்றவை, உண்மையற்றவை. இவற்றிற்கு ஆன்மீகம் அல்லது ஆன்மீக சக்திகளுடன் எந்த சம்பந்தமும் இல்லை; ஆன்மீக சக்திகள், அனைத்திலும் அனைவரிடத்திலும் ஏற்கனவே மறைந்திருக்கின்றன; ஆனால் இறை உணர்வை அடைந்த சில குறிப்பிட்ட நபர்களிடம் மட்டுமே வெளிப்படுகின்றன.**

**எல்லா உயிர்களும் சில நுட்பமான அதிர்வுகளைச் சார்ந்துள்ளது** (பிராணம்); **ஆகாய சக்தி அல்லது பிராண வாயு** (ETHER) **உடனான அவற்றின் இணைப்பு உலகளாவியது. உதாரணமாக, ஒரு யோகி தான் விரும்பும் ஒரு குறிப்பிட்ட இணைப்பை அதன் மூலமாகப் பெற விரும்புகிறார்.**

**பௌதீக உலகில் எண்ணற்ற பொருட்கள் இருப்பது போல, நுட்பமான சூட்சும உலகிலும் எண்ணற்ற பல்வேறு சக்திகள் உள்ளன. ஒரு யோகி இந்த சக்திகளில் ஏதேனும் ஒரு சக்தியைப் பற்றிக்கொள்கிறார்; மேலும் அந்தக் குறிப்பிட்ட சக்தியுடன் தொடர்புடைய அதிர்வின் மீதான கட்டுப்பாட்டை அவர் பெறுகிறார்.**

**ஆன்மீக ஞானிகள் - பரிபூரண நிலையை அடைந்த ஆன்மாக்கள், இந்த விதமான சிறிய விளையாட்டுகளில் ஈடுபட வேண்டியதில்லை, ஏனெனில் கடவுளை உணர்ந்த பின்னர், அனைத்து சக்திகளும் அவரிடம் வந்து, அவரிடமிருந்து வெளிப்படுகின்றன. இது, அவரே அனுபவிக்கும் ஆனந்த நிலை; இந்த ஆனந்தம் அனைத்தையும், அனைவரையும் ஊடுருவி பாய்கிறது!**

ராய்ப்பூரில் சாஞ்சிக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆனபோது, அவரை கவனித்துக் கொள்ளுமாறு கோஹெரிடம் கூறப்பட்டது. சாஞ்சி ஓரளவு குணமடைந்ததும், வேண்டிய ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்ய அவர் ஜூலை 12 அன்று ஸ்ரீநகருக்கு அனுப்பப்பட்டார்.

1944, ஜூலை 14 வெள்ளிக்கிழமை, காக்கா மற்றும் பைதூலுடன், பாபா ராய்ப்பூரிலிருந்து அமராவதி (AMRAOTI), எலிச்பூர் (ELLICHPUR), பாஸிம் (BASIM), பட்னேரா (BADNERA), டாட்டாநகர் (TATANAGAR) மற்றும் பிற இடங்களுக்கு மஸ்த் தொடர்புகளுக்காகப் புறப்பட்டார். 'தாமன்காவ்ம்' (DHAMANGAON) கிராமத்தில், பாபா, 'முங்ஸாஜி மஹாராஜ்' (MUNGSAJI MAHARAJ) என்ற புனிதமான மஸ்துடன் பணிபுரிந்தார். ஜூலை பருவமழை காலமானதால் பாபா மஸ்துகளைத் தொடர்பு கொள்ளும் வேளையில் கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது; பாபா, மண் மற்றும் சேறு வழியாக மூன்று மைல் தூரம் நடந்து சென்று, முங்ஸாஜியை சந்தித்து, திரும்பும்போது, மிகவும் கடினமான சாலைகளில் பதினைந்து மைல்கள் காளை வண்டியில் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

முங்ஸாஜி மஹாராஜ் மத்திய இந்தியா முழுவதும் பிரபலமானவர். மெஹர் பாபாவைப் பற்றி கேட்டபோது, முங்ஸாஜி அவரை 'பேரரசர்' என்று குறிப்பிட்டார். அவர் உயிரைத் துறந்த பின்னர் அவரது சன்னதியாக (சமாதியாக) அடையாளப்படுத்தும் நோக்கத்தில் உள்ளூர் மக்களால் உருவாக்கப்பட்ட குகையில் முங்ஸாஜி அமர்ந்திருந்தார். வாரத்திற்கு ஒரு முறை நிகழும் திருவிழாவில் அவர் பொது தரிசனம் அளித்ததோடு, சுற்றியுள்ள ஏழை மக்களுக்கு இலவசமாக உணவு வழங்கினார்.

பத்னேராவில், மெஹர் பாபா தொடர்பு கொண்ட 'பத்ரி பாபா' (BADRI BABA) என்ற வயதான மஸ்த், மஜ்ஜூப் போன்ற (MAJZOOB-LIKE) நிலையில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் (சில நேரங்களில் நீண்ட நேரம்) அசையாமல் ஒரு குறிப்பிட்ட நிலையில் கற்சிலைபோல நின்று கொண்டிருந்தார். சில நேரங்களில் அவர் இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஒரே இடத்திலும், அசையாமலும், தரையில் படுத்துக் கொள்வதையும் பழக்கமாகக் கொண்டார்.

எலிச்பூருக்கு அருகிலுள்ள 'கரஞ்ச்காவ்ம்' (KARANJGAON) கிராமத்தில், பாபா, மீண்டும் குலாப்ஷாவுடன் (GULABSHA) பணிபுரிந்தார், அவரை 1939ஆம் ஆண்டு ஜபல்பூர் மஸ்த் ஆசிரமத்திற்கு அழைத்து வந்தபோது, பாபா முதலில் தொடர்பு கொண்டார். ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்த 'குலாப்ஷா' 'காட்டுத்தனமான வெறி'யுடன் கூடிய மஸ்த்--துறவி என்று பெரிதும் போற்றப்பட்டார். மெஹர் பாபா மீது அவர் கொண்டிருந்த மரியாதை அனைவருக்கும் தெளிவாகப் புலப்பட்டது; பாபா முன்னிலையில் "உங்கள் அருகில் அமர நான் தகுதியற்றவன்" என்று குலாப்ஷா கூறிவந்தார்.

எலிச்பூரில் 'மஸ்தக் மியான்' (MASTAK MIAN) என்றழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்த், மசூதியின் நுழைவாயிலுக்கு அருகிலமைந்த சுவரில் எப்பொழுதும் அமர்ந்திருப்பதைப் பழக்கமாகக் கொண்டார். மசூதிக்குள்

நுழைவதற்கு முன், பக்திமிக்க முஸ்லீம்கள் அவரது கையை முத்தமிடுவது வழக்கம்; மஸ்த் அவ்வேளையில் அவர்களைக் கேலி செய்தார், "உங்கள் பிரார்த்தனையைக் கேட்க மசூதியில் எவரும் இல்லை! நீங்கள் ஏன் அங்குச் செல்கிறீர்கள்?"

டாடாநகரில், பாபா 'சுன்னி பாபா' (CHUNNI BABA) என்ற மஸ்தைத் தொடர்பு கொண்டார்; அவர் தினமும் இரண்டு அவுன்ஸ் புகையிலையில் சுண்ணாம்பு கலந்த ஒரு விசித்திரமான கலவையை உண்டு வந்தார். பாபா, அவருடன் விமானத் தாக்குதலால் சேதமடைந்த முகாம் ஒன்றில் பணிபுரிந்தார். மேலும் பாபா, 'புத்தி' (BUDHI) என்றழைக்கப்பட்ட மஸ்தானி பெண்மணியுடன் அமர்ந்திருந்தார்; அவர் எப்பொழுதும் வெற்றிலையை மென்று உண்பதில் பெயர் போனவர். மிகவும் குள்ளமான, வயதான மஸ்தானி, பாபாவிற்கு வழங்கிய வெற்றிலையை அன்போடு ஏற்றுக்கொண்டு அவருடன் தொடர்பு கொள்ளும் வேளையில் அதை உண்டார்.

மெஹர் பாபா அவரது மஸ்த் பயணத்தை நிறைவுசெய்து, 1944 ஜூலை 21 (22) அன்று ராய்ப்பூர் திரும்பி வந்தார்.

1944 ஏப்ரல் மாதத்தில், மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்த பிறகு, கைக்கோபாத் தஸ்தூர் மும்பைக்குத் திரும்பிச் சென்றதும், பாபா அவரையும் அவரது குடும்பத்தையும் ஆசிரமத்தில் வந்திணைய அழைப்பார் என்ற நம்பிக்கையில், தனது உடைமைகள் அனைத்தையும் விற்றுவிட்டார். ஜூன் மாதம் நடந்த சந்திப்பில், பாபாவை மீண்டும் பார்த்த அவ்வேளையிலிருந்து, பாபாவின் அழைப்புக்காகக் காத்திருந்தார். ஆனால் மனதளவில், அவர் மிகவும் அமைதியற்றவராகவும், பொறுமை இழந்தும் காணப்பட்டார்; இறுதியாக ஆகஸ்ட் மாதத்திற்குள் அவரை அழைக்காவிட்டால் பாபாவுடன் இணையப்போவதில்லை என்று முடிவு செய்தார்.

கைக்கோபாத்தின் மனநிலையை அறிந்த பாபா, 1944 ஜூலை 26 அன்று ராய்பூருக்கு அவரை அழைத்து தொலைத்தந்தி அனுப்பினார். அவர் வந்ததும், பாபா, உடனடியாக மும்பைக்குத் திரும்பிச் சென்று, அவருக்குச் சொந்தமான பெட்டி படுக்கைகளுடன் மெஹராபாத்திற்குச் செல்லும்படி அறிவுறுத்தினார். பாபா, பின்பு, மெஹராபாத்தில் ஆண், பெண் மண்டலியின் விவகாரங்களை கவனித்து வந்த பெண்டு, பீலாமாய் இருவருக்கும் தகவல் அனுப்பினார்.

கைக்கோபாத் மற்றும் அவரது குடும்பத்தினர் 31ஆம் நாள் இரவு மெஹராபாத் வந்து, தங்கள் வாழ்நாள் முழுவதும் அங்கேயே இருந்தனர். கைக்கோபாத்தின் மனைவி ஜெர்பாய் (46), அவர்களின் மூன்று மகள்கள், மெஹரு (23), குலு (GULU, 21), மற்றும் ஜலு (JALU - 18), இதர பெண்மணிகளுடன் மெஹராபாத் மேல்மலையில் வாழ்ந்து வந்தனர்; கைக்கோபாத் கீழ் மெஹராபாத்தில், (பழைய குளியலறை கட்டிடம் இருந்த இடத்தில்) கட்டப்பட்ட ஒரு சிறிய குடிலில் தங்கினார். அவரது மகன், ரத்தன், அஹமதுநகரில் தங்கி,

ஸரோஷ் சினிமாவில் ஃபிலிம் ப்ரொஜெக்டரை (FILM PROJECTOR) இயக்கும் பணியைச் செய்துவந்தார்.

மெஹர் பாபா அவரது மஸ்த் பயணத்திலிருந்து திரும்பி வந்தபோது, ராய்ப்பூரில் பொது தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யும் எண்ணத்தில் ஜால் கேரவாலா அனுமதி கேட்டார்; பாபாவும் அதற்கு ஒப்புக்கொண்டார். ஜால் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்; இந்த நிகழ்ச்சி ஆகஸ்ட் 6 அன்று நடத்தத் திட்டமிடப்பட்டது; ஜால், மாவட்டத்தின் பல செல்வாக்குமிக்க குடிமக்களையும் தரிசனத்திற்காக அழைத்தார்.

நாக்பூரிலிருந்து டாக்டர் தேஷ்முக், பங்க்ராஜ் ஆகியோரும், ஸாவ்னேரிலிருந்து போஃபலி பிளீடரும் உதவிக்கு வந்தனர்.

விபூதி, பாபாதாஸ் இருவரும் தரிசனத்தைப் பற்றி, பல நாட்களுக்கு முன்பே மக்களுக்குத் தெரிவிப்பதில் தீவிரமாக இருந்தனர், ஆனால் அதே நேரத்தில் தங்களுக்குள் மோதிக் கொண்டனர். இதை அறிந்த பாபா, அவர்களைத் தனியாக அழைத்து அறிவுரை வழங்கினார்: "**நீங்கள் இருவரும் என்னை நேசிக்கிறீர்கள். என் அன்பை மக்களிடையே கொண்டு செல்ல, செய்திகளை வழங்கி, துண்டு பிரசுரங்களை விநியோகித்து அயராது உழைக்கிறீர்கள். பிறரிடையே என் அன்பைப் பரப்பும் அதேவேளையில் உங்களுக்குள் நீங்கள் மோதிக்கொள்வதைப் பார்க்க எனக்கு வியப்பாக உள்ளது! நீங்கள் எதைச் செய்ய விரும்புகிறீர்களோ, அதை நேர்மையுடன் செய்யுங்கள். ஏன் சண்டையிட்டு ஒருவரையொருவர் விமர்சிக்க வேண்டும்? நேர்மை, பணிவிற்கு வழிவகுத்து, பிறரை விமர்சிப்பதைத் தடுக்கிறது. நேர்மை, புகார் கூறாமல் பணியை கோருகிறது, அதன் முடிவை என் தெய்வீக விருப்பத்திற்கு விட்டுவிடுகிறது.**"

தொடர்ந்து பாபா, அவர்களிடம் '**ஒருவரையொருவர் மன்னிக்கவும், நடந்ததை மறந்து அரவணைக்கவும்**' கேட்டுக்கொண்டார்.

ஜால்பாய், எரச், ஆதி சீனியர் மூவரையும் 1944, ஆகஸ்ட் 5ஆம் நாள் பாபா ராய்ப்பூருக்கு அழைத்தார். அன்று மாலை, டாக்டர் தேஷ்முக், மெஹர் பாபாவைப் பற்றி உற்சாகமூட்டும் உரை ஒன்றை நிகழ்த்தினார், இது நூற்றுக்கணக்கான மக்கள் மனங்களில் மெஹர் பாபாவின் தரிசனத்திற்கான ஆர்வத்தைத் தூண்டியது. அடுத்த நாள் 'நாக்பூர் டைம்ஸ்' (NAGPUR TIMES) பத்திரிகையில் வெளிவந்த அந்த விரிவுரையைப் பலர் படிக்க நேர்ந்தது.

ஆகஸ்ட் 5ஆம் தேதி இரவு, பாபாவின் உடல்நிலை திடீரென மோசமானது. பொது தரிசனம் அடுத்த நாள் நடைபெற இருந்ததால், ஜால் கேரவாலா கவலையுற்றார். மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்ட, ஆனால் அவரை சந்திக்காத பல முக்கிய நபர்களை - பாக்பஹாரா மஹாராஜா (BAGHBAHARA) மற்றும் பிற முக்கிய அரசு அதிகாரிகள் உட்பட பலரை - அவர் அழைத்திருந்தார். ஜால், இயற்கையாகவே திட்டத்தை ரத்து செய்வதால் ஏற்படும் விளைவுகளைக் குறித்துக் கவலையடைந்தார்.

பாபா அவரிடம், "**இப்போது, இந்த நிலையில், நான் எப்படி தரிசனம் வழங்க முடியும்? நான் மிகவும் மோசமாக உணர்கிறேன். முழு நிகழ்ச்சியையும் ரத்து செய்யுங்கள்!**" என்றார்.

பீதியடைந்த ஜால், பல்வேறு மருந்துகளைக் கொண்டு வந்து, அனைத்தையும் பாபாவின் படுக்கைக்கு அருகில் மேஜையில் அடுக்கி வைத்தார். ஆனால் அவை எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை, பாபா வாந்தி எடுக்கத் தொடங்கினார்.

மறுநாள் காலையில், மக்கள் தரிசனத்திற்காக, பங்களாவிற்கு வரத் தொடங்கினர். பாபா, ஜாலை அழைத்து, "**நான் மிகவும் பலவீனமாக உணர்கிறேன். என்னால் நிற்க கூட முடியவில்லை! மயக்கம் போல் உணர்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?**" என்று கேட்டார்.

ஜால் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டார். விழாவிற்காக, பல வாரங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது. அவர் என்ன செய்ய முடியும்? அவர் நிகழ்ச்சியை ரத்து செய்தால், மக்கள் அவரைப் புறங்கூறத் தொடங்குவார்கள், ஏனெனில் அழைக்கப்பட்டவர்கள் பாபாவிடம் முதல்முறையாக வருபவர்கள். அவரும் பாபாவின் பெயரை மக்கள் அவதூறாகப் பேசுவதை விரும்பவில்லை; ஏனெனில், பல நாட்களாக, குஜராத்தி செய்தித்தாள்களில் நகர மக்களை தவறாக வழிநடத்துவதாக, பாபாவிற்கு எதிரான பிரச்சார கட்டுரைகள் வெளிவந்தன. ஜால், அவர்கள் பாபாவை நேரில் பார்க்கவும், அனைத்து குற்றச்சாட்டுகளும் உண்மையா என்பதை அவர்கள் நேரடியாகப் பார்த்துத் தீர்மானிக்கவும் விரும்பினார்.

இத்தகைய எண்ணங்கள் அவருடைய மனதில் அலைமோதும் வேளையில் பாபா, சைகையால் தெரிவித்தார்: "**நான் உங்களுக்காக முயற்சி செய்கிறேன்; முடிந்தால் தரிசனத்திற்காக அமர்ந்திருப்பேன்; இல்லையேல் எனது அறைக்குத் திரும்பி விடுவேன்**" என்று கூறி, ஜாலின் கையைப் பற்றிக் கொண்டு, பாபா, சிரமத்துடன் படுக்கையில் அமர்ந்தார். பின்னர் அவர் எழுந்து நின்று ஒரு சில அடிகள் எடுத்து வைத்துத் தடுமாறினார். ஜாலின் இதயம் துடித்தது, அவரது கைகள் நடுங்கின.

ஆனால் பாபா அறையை விட்டு வெளியே வந்ததும், ஒளிர்விடும் முகத்துடன் அவர் திடீரென ஆற்றல் மிக்கவராகத் தோன்றி, வேகமாக மேடையில் தனது இருக்கைக்குச் சென்றார்; அவருடைய தெய்வீக புன்னகை, கூட்டம் முழுவதும் மகிழ்ச்சியின் கதிர்களை வியாபிக்கச் செய்தது.

ஜால் கேரவாலாவைப் பொறுத்தவரை, இது ஒரு தனித்துவமான அனுபவமாக இருந்தது, மேலும் குருநாதரைப் பற்றி அவருக்குப் புதியதொரு புரிதல் ஏற்பட்டது. காலை முதல் மாலை வரை தரிசனம் இடைவிடாமல் தொடர்ந்து நடந்தது; தரிசனத்திற்காக அவரை அணுகியவர்களுக்கு, பாபாவின் புன்னகை அமிர்தம் போல் இருந்தது. கவாலி பாடகர்கள் ஒருபுறம் கூட்டத்தை மகிழ்விக்க, அவரது தெய்வீக மகிமையின் ஒளி ராய்ப்பூர் நகரெங்கும் பரவியது.



ராய்ப்பூர், ஆகஸ்ட் **1944**
(RAIPUR, AUGUST 1944)

இடையிடையே, பாபா கூட்டத்திலிருந்த மக்களுக்கு ஆன்மீக விளக்கங்களை வழங்கினார். அந்த நாளில் கிட்டத்தட்ட 5,000 நபர்கள் பாபாவின் தரிசனத்தில் பங்கெடுக்க, சிலர், நிகழ்ச்சிக்குப் பிறகு தனிப்பட்ட நேர்காணலுக்கு வந்தனர். இவர்களில் ஒருவர் 'குஞ்ச் பிஹாரி சௌபே' (KUNJ BEHARI CHOUBEY) என்பவர், பின்பு, பாபாவின் அனைத்து சொற்பொழிவுகளையும் ஹிந்தியில் மொழிபெயர்த்தார். சௌபேயின் படைப்புகளைத் திருத்தம் செய்த பிலாஸ்பூர் கல்லூரியின் முதல்வர் 'டாக்டர் பல்தேவ் பர்ஷாத் மிஸ்ரா'வும் (DR. BALDEV PARSHAD MISHRA) இந்த நேரத்தில் பாபாவுடன் மிக நெருக்கமாக வந்தார்.

காலை 9:00 மணி முதல் மூன்று மணி நேர தரிசனம், மதியம் வரை பாபா சிறிதளவும் சோர்வடைந்ததாகத் தெரியவில்லை, மேலும், ஜால் கேரவாலா, பாபாவின் தெய்வீக லீலையைக் கண்டு வியந்து தலையை மட்டும் அசைத்தார்.

ராய்ப்பூர் தரிசன நிகழ்ச்சிக்குப் பிறகு, காஷ்மீருக்குப் பயணம் செய்வது குறித்துத் திட்டமிடப்பட்டது. காஷ்மீருக்குச் செல்வதற்கு முன்பு, பாபா, கோஹெர் மற்றும் ரக்மா என்ற பணிப்பெண்ணை திருப்பி அனுப்பி வைத்தார். பாபாவுடன் நிரந்தரமாக வந்திணைவதற்கு முன்பு (அவர் விரும்பியபடி) கோஹெர் மும்பை மருத்துவமனையில் பணிபுரிந்தார். பாபா, ரானோவை தனிமையைப் பாதுகாக்கும் இந்திய பெண் மண்டலிக்குத் துணையாக உடன் அழைத்துச் சென்றார்.

1944, ஆகஸ்ட் 9, புதன்கிழமை அன்று, மெஹர் பாபா, ஜால் கேரவாலாவின் காரில் ராய்ப்பூரிலிருந்து மெஹரா, மணி மற்றும் மெஹருவுடன் புறப்பட்டார்; பைதூல், காக்கா, ஜால்பாய், எரச், ரானோ ஆகியோர் வேறொரு காரில் பின்தொடர்ந்தனர். பயணத்தின் ஓர் அங்கமாக அவர்களுடன் சிறுவன் ஒருவனும் இருந்தான். இதர மண்டலி - விஷ்ணு, டாக்டர் நீலு, கிருஷ்ணா, வெங்கோபா ராவ், சாஞ்சி ஆகியோர் ஆகஸ்ட் 6ஆம் தேதி ரயிலில் புறப்பட்டுச் சென்றனர். இயந்திரக் கோளாறு காரணமாக, இரண்டு கார்களும் பல முறை பழுதடைந்தன. இறுதியில், முற்றிலும் பழுதடைந்த நிலையில், அனைவரும் 'முர்தாஸாபூர்' பங்களாவில் (MURTAZAPUR BANGALOW), இரண்டு நாட்கள் கார்கள் பழுதுபார்த்து, சரியாகும் வரைக் காத்திருக்க வேண்டியதாயிற்று.

பாபா, காஷ்மீருக்குச் செல்லும் வழியில் மஸ்துகளை சந்திக்கும் நோக்கத்தில், காரில் செல்ல விரும்பினார், ஆனால் இப்போது அவர் அந்த யோசனையைக் கைவிட்டு, ரயிலில் பயணம் செய்ய முடிவு செய்தார். அவர்கள் புறப்பட இருந்த அந்த நாள் மாலையில், பெண்மணிகளைத் திரைப்படம் பார்க்க, அழகான ஆடைகளை அணிந்து செல்லுமாறு பாபா கேட்டுக்கொண்டார். அவர்களின் ஆடைகள் அனைத்தும் பயணத்திற்கான தயார் நிலையில் பெட்டிகளில் இருந்ததால், அனைவரும் தங்கள் டிரங்குகளிலிருந்த ஆடைகளை உடுத்தி, திரைப்படத்திற்குச் செல்லத் தயாராயினர். பாபா,

அனைவருடன் காரில் அமர்ந்த போது, இயந்திரம் செயலிழந்து புறப்பட முடியாமலாயிற்று. எவ்வளவோ முயன்றும் முடியாத நிலையில் பாபா, கால தாமதமாகிவிட்டதாகக் கூறினார். காரிலிருந்து பெண்மணிகள் வெளியேற முயன்றபோது அதன் பின்பக்க கதவு திறக்காததைக் கண்டனர். ஜால் வெளியே இருந்து கதவுகளைத் திறக்க முயற்சிக்க, உள்ளே இருந்த ரானோ அவற்றைத் தள்ள வேண்டியதாயிற்று.

இந்த நிலையில், அப்பகுதியில் ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்ட பின்னர் அன்று இரவில், பாபா குழுவுடன் ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டார். ரயில் நிலையம் சிறியதாக இருந்ததால், ரயில் ஒரு நிமிடம் மட்டுமே நிற்பதாகவும், ரயில் அங்கே நுழைந்ததும், விரைந்து ஏறும்படியும் அவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

காக்கா மற்றும் பைதூலுடன் பாபா இருந்தார், அதே வேளையில் மூன்று பெண் மண்டலியையும் ரானோ கவனித்து வந்தார். ரயில் வரும் போது நள்ளிரவைத் தாண்டிவிட்டது; ரானோ பெண்களின் பெட்டி மூடப்பட்டிருப்பதைக் கண்டு, கதவுகளைத் தட்டி, எவரேனும் கதவைத் திறக்குமாறு கத்தினார்; ஆனால் அனைவரும் உள்ளே ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததால், ஒரு ஜன்னலைத் தட்டி, ஒரு பயணியை எழுப்பினார், அதிக பருமனாக இருந்த ஒரு பெண்மணி, அவர்களுக்காகக் கதவைத் திறந்து உதவினார். அவர்கள் தங்கள் பெட்டி படுக்கைகளை உள்ளே சிரமப்பட்டு நுழைத்து, ரயில் புறப்படும் அந்தக் கடைசி நேரத்தில் ஏறினர்!

பாபா மண்டலியுடன் 'கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ்' (GRAND TRUNK EXPRESS) ரயிலில் பயணம் செய்து, ஆகஸ்ட் 14 அன்று டெல்லி வந்து, கேக்கி தேசாய் இல்லத்தில் இரவில் தங்கினார். பாபாவின் வருகையை ஒரு முழு இரகசியமாக வைத்திருக்கக் கோரி, கேக்கிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. நீங்கள் இந்தத் தகவலை எவரிடமேனும் தெரியப்படுத்தினால் உங்களை பாபா ஒருபோதும் மன்னிக்க மாட்டார் என்று சாஞ்சி அவர்களுக்கு எழுதியிருந்தார்.

ஜால் கேரவாலாவின் காரை, காளைகள் ஒரு வாகனங்கள் பழுதுபார்க்கும் இடத்திற்கு இழுத்துச் சென்றன. அதை சரிசெய்து எரச், ராய்ப்பூருக்கு திருப்பி அனுப்பிய பின்னர், அவர் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

டெல்லியில், பாபா, மிகவும் உன்னதமான மேல்நிலை மஸ்த் 'நகாபி ஹாஃபிஸ்ஜி'யைத் (NEQABI HAFIZJI) தொடர்பு கொண்டார்; பாபா குறிப்பிட்டபடி, (ஏற்கனவே சந்தித்த) கண்பார்வையற்ற துறவி 'ஹாஃபிஸ்ஜி நபீனா'வின் (HAFIZJI NABEENA) மறைவிற்குப் பின்னர், இவர் டெல்லியின் ஆன்மீகப் பொறுப்பாளராக இருந்தார். நகாபி ஹாஃபிஸ்ஜி ஒரு மர்மமான துறவி, அவர் எப்பொழுதும் ஒரு முகத்திரையை (நகாப்) அணிந்து வந்ததால் அவரது முகத்தை அரிதாகவே பார்க்க முடிந்தது.

ஒரு மஸ்தின் சாதாரண வழக்கத்திற்கு மாறாக, அவர் நல்ல, சுத்தமான ஆடைகளை அணிந்து வந்ததோடு, ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவரும் கூட. புனிதமான இவர் இரவில் டெல்லியின் வீதிகளில் அலைந்து திரிவதையும், பகலில் வீதியில் அமர்ந்திருப்பதையும் பழக்கமாகக் கொண்டார். அவர் இத்தகைய பெரிய நகரம் முழுவதும் அலைந்து திரிந்ததால், அவரைத் தொடர்புகொள்வது கடினமாக இருந்தது, ஆனால் பாபா இறுதியில் அதிகாலையில் ஒரு கிணற்றின் அருகே அவரைக் கண்டுபிடித்து, தொடர்பு கொண்டார்.

அதற்குப் பிறகு, பாபா காஷ்மீருக்குப் பயணத்தைத் தொடர்ந்தார். பயணத்தின் ஒரு கட்டத்தில், சாஞ்சி குழுவுடன் வந்திணைந்தார். ரானோவிற்குப் பயண அனுமதி இல்லாததால், காஷ்மீருக்குள் நுழைய அவருக்குத் தடையாக இருந்தது. சாஞ்சி அவரை, டோமல் (DOMEL) அரசாங்க அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு அவர் அனுமதி வழங்க விண்ணப்பித்திருப்பதாகவும், அவர் அதை இன்னும் பெறவில்லை என்றும் அதிகாரிகளிடம் கூறினார். ரானோ திரும்பி வந்து மேலும் விசாரிக்க பாபாவுடன் தொலைத்தந்தி அலுவலகத்திற்குச் சென்றார். ரானோவின் விளக்கங்களைக் கேட்ட எழுத்தர், கோர்த்து வைத்த அலுவல்களைச் சரிபார்க்கத் தவறிவிட்டார்; அவற்றை ஒரு முறை பார்க்குமாறு வலியுறுத்திக் கூறும்படி பாபா, ரானோவிற்கு சைகையால் தெரிவித்தார். கடைசியாக, எழுத்தர் ஒப்புக்கொண்டு, “அனுமதி கிடைத்துள்ளது, ஆனால் அது முறையான அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதற்கு முன்னர், எங்களால் அதை யாரிடமும் காட்ட முடியாது” என்றார். பாபா விரும்பியபடி, சாஞ்சி அவருக்கு வேண்டிய பணத்தை வழங்கி, அந்த ஆவணத்தை நேரடியாக அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று, ரானோ அனுமதியைப் பெற முடிந்தது.

1944, ஆகஸ்ட் 18 வெள்ளிக்கிழமை மாலை பாபா குழுவுடன் ஸ்ரீநகரை வந்தடைந்தார். இதர மண்டலி மூன்று நாட்களுக்கு முன்பே வந்துவிட்டனர். சாஞ்சி கடுமையான ஜுரத்தால் பலவீனமாக இருந்தபோதிலும், அவர், ஸ்ரீநகரிலிருந்து ஆறு மைல் தொலைவில், குப்தகஞ்சா சாலையில் (GUPTAGANJA) அமைந்த நிஷாத் - NISHAT (அல்லது SHALIMAR - ஷாலிமார்) குடியிருப்பில் ஒரு பெரிய, ஒதுங்கிய பங்களாவை வாடகைக்கு எடுக்க முடிந்தது. ‘பகத் வில்லா’ (BHAGAT VILLA) என்ற விலாசத்தில் அமைந்த பங்களா, கரம்சந்த் பகத் (KARAMCHAND BHAGAT) என்ற நபருக்குச் சொந்தமானது. நவீன சுகாதார வசதிகளுடன் தனிக் குடில்களாலான வளாகம் மண்டலிக்கும் இடமளிக்கும் விதத்தில் இருந்தது. இருப்பினும், அது இன்னும் முழுமையாகத் தயாராகாததால், அனைவரும் ஸ்ரீநகர் மெஜஸ்டிக் ஹோட்டலில் (SRINAGAR MAJESTIC HOTEL) ஒரு வாரம் தங்க வேண்டியிருந்தது.

ஸ்ரீநகரில் புகழ்பெற்ற மருத்துவராக இருந்த டாக்டர் தவ்லத் சிங் (DR. DAULAT SINGH), ஸ்ரீநகர் பகுதியில் மெஹர் பாபாவின் அன்பின் செய்திகளைப்

பரப்பி வந்தார், இதன் விளைவாக மூன்று முக்கியமான நபர்கள் குருநாதரின் சகவாசத்தில் வரும் வாய்ப்பைப் பெற்றனர்: திரெயிலோக்யா நாத் தார் (TRAILOKYA NATH DHAR), பி.என்.கஞ்சூ (P.N. GANJOO) மற்றும் வாஸ் தேவ் கெயின் (WAS DEO KAIN). மூவரும் பாபாவின் தரிசனத்திற்காக ஆர்வத்தோடு இருந்தனர். உண்மையில், பாபா, மெஜஸ்டிக் ஹோட்டலில் தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்ட தார், 19ஆம் தேதி அவரை சந்திக்க அங்குச் சென்றார். பாபா, அடையாளத்தை வெளிப்படுத்தாமல் பயணம் செய்ததால், அந்தப் பெயரில் ஹோட்டலில் எவரும் இல்லையென அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

தார், பாபாவை விட்டபாடில்லை, ஹோட்டலில் பணிபுரியும் இளம் சிறுவன் ஒருவனிடம், நீண்ட தலைமுடி மற்றும் மீசையுடன் விருந்தினர் எவரும் இங்கே இருக்கிறாரா என்று கேட்க, சிறுவனும் உடனடியாக, "**ஆமாம், காது கேளாத, ஊமை மஹாராஜா ஒருவர் மேல் மாடியில் தங்கியிருக்கிறார்**" என்று பதிலளித்தார். ஒரு கணம் கழித்து, பாபா அவரது தலையை மாடியின் ஜன்னலுக்கு வெளியே நீட்டிய அந்த நேரத்தில், தார், தனது பிரியமான பாபாவின் முதல் பார்வையைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. பாபா அவரை சந்திக்க சில நிமிடங்கள் அனுமதித்த நேரத்திலிருந்து தார், வாழ்நாள் முழுவதும் அவரைப் பின்பற்றி வந்தார்.

இந்தக் காலகட்டத்தில் சாஞ்சியின் உடல் நிலை மிகவும் மோசமாகி, இறுதியில் டைஃபாய்டு (TYPHOID) ஜுரத்தால் தாக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டது. ஆகஸ்ட் 20 அன்று, சாஞ்சி 'காஷ்மீர் நர்ஸிங் ஹோமில்' (KASHMIR NURSING HOME) அனுமதிக்கப்பட்டார், அங்கு டாக்டர் தவ்லத் ஸிங் அவரை, ஐரோப்பிய ஊழியர் டாக்டர் மற்றும் டாக்டர் ரோலின்ஸ் என்ற ஆங்கிலேயருடன் கவனித்துக்கொண்டார். ராய்ப்பூர் நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபா தரிசனம் அளிப்பதை நிறுத்திவிட்டதால் கெய்ன், கஞ்சூ இருவரும் காத்திருக்க வேண்டியதாயிற்று; ஆனால் அவர்கள், தார் என்பவருடன், தினமும் சாஞ்சியை மருத்துவமனையில் சந்தித்து, வேண்டிய மருத்துவ உதவி அனைத்தும் செய்தனர்.

சாஞ்சி டைஃபாய்டு நோயால் பாதிக்கப்பட்டது ஒரு சுவாரஸ்யமான கதை. அவர் வேகவைத்த உருளைக்கிழங்கை மிகவும் விரும்பினார், ஆனால் அவற்றை உண்ண வேண்டாம் என்று பாபா சாதாரணமாக உத்தரவிட்டார். "**நீங்கள் உருளைக்கிழங்கை உண்ணுவதானால், அது, உங்களை உண்டுவிடும்!**" என்று பாபா எச்சரித்தார். ஆனால், சாஞ்சி, இந்த உத்தரவை லேசாக எடுத்துக் கொண்டார். பாபா, ஸ்ரீநகருக்கு வந்து, சாஞ்சியின் அறைக்குள் நுழைந்த அவ்வேளையில், அவர் உருளைக்கிழங்கு உண்பதைக் கண்டார். இதற்குப் பிறகுதான், சாஞ்சிக்கு ஜுரம் வந்தது.

ஸ்ரீநகரில் ஹோட்டலுக்கு வந்ததும் பாபா, மஸ்துகளைத் தேடத் தொடங்கினார். 20ஆம் தேதி, 'ஸுபான் மாத்து' (SUBHAN MATTU) என்றழைக்கப்பட்ட மஸ்தை பாபாவிடம் அழைத்து வந்தனர். மஸ்த் பாபாவைப் பார்த்ததும்,

பரவசத்தில் மூழ்கி, தரையில் உருண்டு புரண்டு, ஆனந்தத்தில், உரத்த குரலில் "நீங்கள் அல்லா!" என்றழைத்து, அவர் தனது தலைப்பாகையை, பாபாவின் தலையில் வைத்து, பாபாவின் சால்வையால் அவரைப் போர்த்திக்கொண்டார். இந்த மஸ்த், ஒரே உருவத்தில் வெகு தொலைவில் உள்ள பல இடங்களில் மிகக் குறுகிய நேரத்தில் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

காக்கா, பைதூல் இருவருடன் பாபா ஷாலிமாரில் 'மீரக் ஷா வாலி' (MIRAK SHAH WALI IN SHALIMAR) என்றழைக்கப்பட்ட புனிதமான மஸ்தை சந்திக்கச் சென்றபோது, அவர் அருகில் அமர்ந்திருந்த 'ஹபிபுல்லா பேக்' (HABIBULLAH BAIG) என்ற உள்ளூர் காஷ்மீரியை எதிர்கொண்டனர். பாபா சற்று தொலைவில் நின்றுகொண்டிருக்க, காக்காவும் பைதூலும் முன்னால் சென்று ஹபிபுல்லாவை சிறிது நேரம் அவர்களுடன் செல்லுமாறு பணிவுடன் கேட்டுக்கொண்ட வேளையில், அவர் "நான் ஏன் போக வேண்டும்?" என வினவினார்.

"மும்பையிலிருந்து ஒரு பெரிய (முக்கியமான) மனிதர் மீரக் ஷாவைப் பார்க்க வருகிறார், அவர் வேறு எவருடைய முன்னிலையிலும் அவரைப் பார்க்க விரும்பவில்லை" என்று பைதூல் கூறியும், ஹபிபுல்லா செவி சாய்ப்பதாக இல்லை; ஆனால் வாலி அவரைப் போகச் சொன்னபோது, அவர் எழுந்துச் சென்றார். பாபாவின் பெயரை வெளிப்படுத்தக்கூடாது என்ற நிலையில், டாக்டர் தவ்லத் ஸிங் மட்டுமே அந்தப் பகுதியில் அவரைப் பற்றி அறிந்திருந்தார். அதனால்தான் பைதூல், பாபாவை "மும்பையிலிருந்து ஒரு பெரிய மனிதர்" என்று குறிப்பிட்டார்.

ஹபிபுல்லா சென்ற பிறகு, பைதூல், பாபாவை அழைத்து வந்து, வாலியைத் தொடர்பு கொண்டார். மீரக் ஷா காஷ்மீர் முழுவதும் பிரசித்தி வாய்ந்த ஒரு முஸ்லீம் துறவி ஆவார், மேலும் புகழ்பெற்ற ஷாலிமார் பூந்தோட்டம் அருகே அவருடைய ஆசிரமம் இருந்தது. அவர் ஸலிக் போன்ற தன்மை படைத்தவர், அழகானவர், நல்ல நிறம், நடுத்தர வயதில் மிக நேர்த்தியான ஆடைகளை அணிந்திருந்தார். மீரக் ஷா, அவரை சந்தித்து மரியாதை செலுத்துவோரிடமிருந்து பணம் சேகரித்து, ஏழைகளுக்கு இலவச உணவை விருந்தாக வழங்க பயன்படுத்தினார்.

பாபா, வாலியைத் தொடர்பு கொண்ட பின்பு, மீரக் ஷா, ஹபிபுல்லாவை அழைத்து, பாபாவைச் சுட்டிக்காட்டி, அவரிடம், "உங்களுக்கு ஒரு வேலை வேண்டுமல்லவா? இப்போது இந்தப் பெரியவரின் சேவையில் இருங்கள். அவர் உங்களுக்கு மாதம் ரூ.100 வழங்குவார்" என்றதும்,

பைதூல் மூலம், பாபா, "மாதம் ரூ 150 வழங்குவேன்!" என்றார். அப்போது ஒரு வேலைக்காரனுக்கு இது மிகையான, நம்பத்தகாத ஊதியம்.

மெஹர் பாபா மும்பையில் வாழும் ஒரு செல்வந்தராக, முக்கியமான மனிதராக நினைத்து, ஹபிபுல்லா மகிழ்ச்சியில் பாபாவுடன் ஸ்ரீநகருக்கு வந்தார்; ஹபிபுல்லா எந்நேரமும் மஸ்துகளின் சகவாசத்தில் இருக்க விரும்பினார். பாபாவும், மண்டலியும் அவருடன் பேசி, அந்தப் பகுதியில் வாழும் பல்வேறு மஸ்துகளின் பட்டியலைத் தயார் செய்து, அவர்கள் அங்குத்

தங்கியிருக்கும் வேளையில் அவர்களுக்கு வழிகாட்டியாகச் செயல்படுவதே அவரது வேலை என்று கூறினர். ஹபிபுல்லா, இப்படி ஒரு பட்டியலை உருவாக்குவது எப்படி என்று புரியாத நிலையில், அவர் மீண்டும் மீரக் ஷாவிடம் சென்று, வாலியின் உதவியுடன் பட்டியலைத் தயாரிக்கத் தொடங்கினார்.

மீரக் ஷாவும் அவருடைய ஆழ் இதய உணர்வுகளை வெளிப்படுத்தி, பாபாவிற்கு எழுதிய கடிதத்தில், "நீங்கள் கடவுள், நான் உங்களுடன் வந்து வாழ விரும்புகிறேன். எனது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

மெஹர் பாபாவின் காஷ்மீர் பயணம், போரில் ஒரு தீர்க்கமான விளைவைக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. அமெரிக்க படைகள் இப்போது ஐரோப்பா முழுவதும் பரவி வந்தன, மேலும் 1944, ஆகஸ்ட் 23 அன்று, முன்னேறிச் செல்லும் நட்பு நாடுகளால் பாரிஸ் விடுவிக்கப்பட்டது. 'ஜெனரல் டி கோவ்ல்' (GENERAL DE GAULLE) இரண்டு நாட்களுக்குப் பிறகு பாரிஸ் நகரைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார்.

24ஆம் தேதி அன்று, மெஹரா, மணி, மெஹரு, ரானோ ஆகியோர் நிஷாத்தில் (NISHAT) அமைந்த 'பகத் வில்லா'விற்குச் (BHAGAT VILLA) செல்ல இருந்தனர். அதற்கு முன்பு, பாபா, கிருஷ்ணாவை அழைத்து, அனைத்து சாமான்களையும் எடுத்து வரும் சரக்கு வண்டியுடன் வரவும், சைக்கிளில் வர வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார். ஆனால் எல்லா பொருட்களையும் வண்டியில் ஏற்றிய பின்னர், சைக்கிளுக்கு இடமில்லாததால், கிருஷ்ணா சைக்கிளிலும், விஷ்ணு சரக்கு வண்டியிலும் நிஷாத்துக்குச் சென்றனர்.

அவர்கள் வந்ததும், பாபா, கிருஷ்ணாவைத் திட்டினார், "**ஏன் எனது உத்தரவை நிறைவேற்றத் தவறிவிட்டீர்கள்? உங்களிடம் சைக்கிள் ஓட்ட வேண்டாம் என்று நான் சொன்னேன்.**"

"சைக்கிளுக்கு லாரியில் இடமில்லை. ஓட்டுநர் அதை எடுத்துவர மறுத்துவிட்டார், நான்..." என்று பதிலளித்து கிருஷ்ணா கெஞ்சினார்.

"**நீங்கள் சைக்கிளை வீசி எறிந்திருக்க வேண்டும்!**" பாபா குறுக்கிட்டார். "**எனது வார்த்தைகளை விட நீங்கள் ஒரு சைக்கிளை அதிகம் மதிக்கிறீர்களா? எனது கட்டளைகளை விட உங்கள் சைக்கிள் பெரியதா? நீங்கள் ஏன் எனக்குக் கீழ்ப்படியவில்லை?**" என்று கேட்டு, பின்பு பாபா, "**சாஞ்சி வருவதானால், நீங்கள் செல்ல வேண்டியதுதான்**" என்றார்.

கிருஷ்ணாவிற்கு எதுவும் புரியாதபோது, பாபா எழுத்துப்பலகையில் இவ்வாறு உச்சரித்தார்: "**சாஞ்சி, உடல்நலம் சீராகித் திரும்ப வந்தால், நீங்கள் உடலைத் துறந்துவிட வேண்டியதுதான்.**"

அன்றிரவு, கிருஷ்ணாவிற்குக் காய்ச்சல் வந்தது, டாக்டர் நீலு அவருக்கு சிகிச்சை அளித்தார். இதற்கிடையில், சாஞ்சிக்கு, சிறப்பான சிகிச்சை அளித்தபோதிலும், உடல்நிலை சீரானபாடில்லை. 1944 ஆகஸ்ட் 25 அன்று,

வெள்ளிக்கிழமை காலை 5:30 மணிக்கு, பாபாவின் பெயரை உதடுகளில் உச்சரித்த வண்ணம், சாஞ்சி, இப்பூவுலகைக் காணும் தனது கண்களை நிரந்திரமாக மூடி, பரிசுத்தமான வாழ்வில் தெய்வீக அன்பிற்குரியவரைக் காணும் கண்களைத் திறந்தார்! அப்போது அவருக்கு 52 வயது.

கடந்த ஜூன் மாதத்தில் சாஞ்சியிடம் பாபா கூறிய வார்த்தைகள் (**'நீங்கள் அஹமதுநகர் மற்றும் அலஹாபாத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம் - உயிருடன் இருந்தால்!**) இப்போது அவற்றின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தின. உண்மையில், 1929ஆம் ஆண்டில், பாபா, ஸ்ரீநகரிலிருந்து ஹர்வன் (HARVAN) கிராமத்திற்குச் சென்றபோது, **'உங்கள் சமாதி இங்கேதான்'** என்று சாதாரணமாக, சாஞ்சியிடம் குறிப்பிட்டார். சாஞ்சியும் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு, 'நான் இறக்கும்போது, காஷ்மீரில் இறக்க விரும்புகிறேன் - அது மிகவும் அழகான இடம்.' பாபா, இறுதியில் சாஞ்சியின் ஆர்வத்தைப் பூர்த்திசெய்தார்.

பாபா, அவராகவே பார்சி கல்லறையில் சாஞ்சியின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அவரது உடல் மீது மலர்களைத் தூவினார். பாபாவின் தனிப்பட்ட செயலாளராக இந்தியாவிலும் வெளிநாட்டுப் பயணங்களிலும் இருந்த 20 பரபரப்பான ஆண்டுகளுக்குப் பிறகு, சாஞ்சிக்கு இறுதியாக ஓய்வு அளித்து அவரது சமாதியில் ஒரு நினைவுக்கல் எழுப்பப்பட்டது.

பயணங்களின் போது, நெரிசலான மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளில் கூட, சாஞ்சி ஒரு சிறிய தட்டச்சுப்பொறியை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டார்; சில நேரங்களில் நள்ளிரவிலும் கடிதங்களையும் அவரது நாட்குறிப்புகளையும் தட்டச்சு செய்து வந்தார். அவரது நேர்மையான உழைப்பு இருந்தபோதிலும், அவர் எப்பொழுதும் பாபாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பலி ஆடாகத்' திகழ்ந்தார். பாபா அவரை அறைந்தபோது (அதை அவர் பல முறை செய்தார்), சாஞ்சி, "பாபா... என்னை இப்படி நடத்த உங்களுக்கு உரிமை உண்டு... நீங்கள் எங்கள் குருநாதர், உங்களுக்கு அந்த அதிகாரம் உள்ளது" என்று கூறினார்.

ஆனால், காலத்திற்குத் தெரிந்தாற்போல், "இதெல்லாம் குருநாதரின் வசைமொழி அல்ல, சீடருக்கான அவரது ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடு. குருநாதரின் காலடியில் அனைத்தையும் அர்ப்பணித்த ஓர் அடியார் மீது அவர் காட்டும் வெளியளவில் தோன்றும் கொடுமையானது, உண்மையில் அவருடைய நல்லெண்ணத்துடன் கூடிய கருணையாகும். இதைத் தவறாக நடத்துவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது; அது அவருடைய அன்பின் ஊற்றாகப் பெருக்கெடுத்து, இதயத்தை என்றென்றும் ஊறவைத்தது. சாஞ்சி போன்ற ஒரு சீடர் உண்மையில் ஒப்பற்றவர்!

"சாஞ்சி, உங்களுக்கு எங்கள் வணக்கங்கள்! நீங்கள் எங்களுக்காக விட்டுச் சென்ற அனைத்திற்கும் காலம் உங்களை நன்றி பாராட்டுகிறது. நீங்கள் பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்த மெஹர் பாபாவின் தெய்வீக வார்த்தைகளும் பணிகளின் ஆதாரங்களும், ஓர் உண்மையான சீடரின் அன்பின்

நினைவுச்சின்னமாக என்றென்றும் விளங்கும். உங்கள் குறிப்பேடுகள் உலகின் எதிர்கால சந்ததிகளை ஊக்குவிக்கும்! உங்கள் வாழ்க்கையின் மூலம் நீங்கள் மெஹர் பாபாவின் ஆசீர்வாதத்திற்கான வழியை அனைவருக்கும் காட்டியுள்ளீர்கள்."

சாஞ்சியை அடக்கம் செய்த பின்பு, பாபா உடனடியாக ஸ்ரீநகரிலிருந்து நிஷாத்துக்குச் சென்றார், மேலும் விஷ்ணுவிடம் ஆதி சீனியர் மற்றும் சாஞ்சியின் குடும்பத்தினருக்கு அவரது மறைவு குறித்து தெரிவிக்கும்படி அறிவுறுத்தினார். கீழ்வரும் தொலைத்தந்தியை, பாபா எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்:

"**சாஞ்சி என்னிடம் நிரந்தரமாக வந்துவிட்டார். அவர் என்றென்றும் என்னுடன் ஒன்றாக இணைந்துவிட்டதால் எவரும் கவலையடைய வேண்டியதில்லை**."

நிஷாத்திலிருந்து ஸ்ரீநகருக்குச் சென்று தொலைத்தந்தியை அனுப்ப எவரும் இல்லை, ஆனால் ஹபிபுல்லா அதைச் செய்யத் தயாராக இருந்தார்; விஷ்ணு அவருடைய செலவுகளுக்காக ரூ 100 வழங்கினார். ஹபிபுல்லா ரூ 90 பாக்கி தொகையை மறுநாள் விஷ்ணுவிடம் கொடுத்தபோது, பாபா அதை வைத்துக் கொள்ளுமாறு சைகையால் தெரிவித்தார். ஹபிபுல்லா, "நான் ஏன் இவ்வளவு பணம் வைத்திருக்க வேண்டும்? எனக்கு அதிகபட்சம் பத்து ரூபாய் போதுமானது" என்றார்.

ஆனால் பாபா பதிலளித்தார், "**நீங்கள் என்னுடைய ஒரு மிக முக்கியமான பணியைச் செய்துள்ளீர்கள். அதற்கு முன்னால் தொண்ணூறு ரூபாய் ஒன்றுமில்லை! அந்தப் பணத்தை வைத்து உங்களுக்கு வேண்டிய ஆடைகளை வாங்கிக்கொள்ளுங்கள்**."

ஹபிபுல்லா அதை ஏற்றுக்கொண்டார், அவருடைய இதயம் பாபா மீதான அன்பால் நிரம்பி வழிந்தது. பாபா இனிமேல் அவருக்கு 'மும்பையிலிருந்து வந்த செல்வந்தர்' அல்ல. அன்று முதல் அவர் ஹபிபுல்லாவின் இதயத்தின் தோழர்.

சாஞ்சியின் மரணம் குறித்த செய்தி கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் பாபாவின் அன்பர்களை வேதனைக்குள்ளாக்கியது. அவர்தான் பாபாவின் தற்போதைய செயல்பாடுகள் குறித்து அவர்களுக்கு தெரியப்படுத்தினார். சாஞ்சியின் முயற்சியால், மும்பையில் வாழும் பலர் மெஹர் பாபாவின் அரவணைப்பில் வந்தனர். அவரது மறைவு அனைவரையும் மிகவும் வருத்தமடையச் செய்தது. பச்சாமாய், அர்னவாஸ், நர்கிஸ் மற்றும் நௌரோஜி ஆகியோர் குறிப்பாக வருத்தத்தில் ஆழ்ந்தனர். காலம் இதைக் கண்டு இப்படி வியந்தது, "பாபாவின் வாழ்க்கை நிகழ்வுகளின் அனைத்து விவரங்களையும் யார் இப்போது தெரிவிப்பார்கள்? அன்பிற்குரியவரின் போதையூட்டும் மதுவால் நிரம்பிய கதைகளை இனி யார்தான் வழங்குவார்கள்?" ஆனால் இது அனைத்தும் பாபாவின் விருப்பம், அவரின்

சொந்த காரணங்களுக்காக, அவர் தனது பிரியமான செயலாளர் சாஞ்சியை இந்த நேரத்தில் அவரிடம் அழைத்தார்.

ஒரு சீக்கியருக்குச் சொந்தமான வாடகை காரில், 1944, ஆகஸ்ட் 28 அன்று காக்கா, பைதூல், ஹபிபுல்லா ஆகியோருடன் பாபா ஒரு மஸ்த் பயணம் மேற்கொண்டார். 'ரஹீம் ஸாஹேப்' (RAHIM SAHEB), பாபா இதற்கு முன்னதாகத் தொடர்பு கொண்ட ஒரு வயதான நன்கு அறியப்பட்ட மஸ்த், 'துலாமுல்' (TULAMUL) கிராமத்தின் பாதைகளில் அமைந்த புல்வெளியில் அலைந்து திரிந்தார். அன்றைய தினம் ரஹீம் ஸாஹேபை பாபா தொடர்பு கொண்டபோது, அந்த மஸ்த் பாபாவிற்கு ஒரு பழைய தூரிகை மற்றும் ஒரு செங்கல் துண்டைக் கொடுத்தார்.

மற்றுமோர் இடத்தில், பாபா, ஒரு மரத்தின் கீழ் நின்றுகொண்டு, உடனிருந்த மூவரையும் ஒரு மஸ்தை சந்திக்க அனுப்பி வைத்தார். அவர்களைக் கண்டதும், மஸ்த் கற்களை வீசத் தொடங்கினார்; அவர்கள் அங்கிருந்து விலகிச் செல்லாததால், அவர் தனது நாய்களை விட்டு விரட்டி அவர்களைத் துரத்தினார்.

நாய்களின் சீற்றம் மற்றும் மஸ்தின் கோபத்தால் பயந்துபோன காக்கா, பைதூல், ஹபிபுல்லா மூவரும் பாபாவிடம் ஓடி வந்து நடந்ததைக் கூறினர். பாபா, மூவரையும் தனித்தனியாக மூன்று பக்கங்களிலும் அமர்ந்துகொண்டு, எவரையும் மஸ்திடம் வர அனுமதிக்க வேண்டாம் என அறிவுறுத்தி, பின்பு மஸ்தின் அறைக்குச் சென்றார். ஹபிபுல்லா அதைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினார். காக்கா அவரிடம் காரணத்தைக் கேட்டபோது, அவர் கேலியாக பதிலளித்தார், "மஸ்த் இப்போது நம் தலைவரை மிகுந்த மரியாதையுடன் ஏற்றுக்கொள்வார்!"

பாபா, ஒரு மணிநேரம் மஸ்துடன் அமர்ந்திருந்தார்; இது ஹபிபுல்லாவைத் தீவிரமாக சிந்திக்க வைத்தது: "இப்போது, நம் தலைவர் திரும்பி வரமாட்டார்... நாய்கள் அவரைச் சின்னாபின்னமாக்கி இருக்கும்." ஆனால் பாபா, புன்னகையுடன் வெளியே வந்தபோது காக்கா, பைதூல் இருவரிடமும் ஹபிபுல்லா கேட்டார், "நமது தலைவர் எப்படிப்பட்டவர்?"

"மும்பையிலிருந்து வந்த ஸாஹேப்" என்று அவர்கள் பதிலளித்தனர்.

ஆனால், பாபா, அவர் யார் என்று அறிந்துகொண்டதை விட இன்னும் மேலானவர் என்று ஹபிபுல்லா இப்போது புரிந்து கொண்டார். அவர்கள் சிறிது தூரம் சென்ற பின்பு, பாபா காரை நிறுத்தி, ஹபிபுல்லாவைப் பார்த்து, "**இது உங்களின் நமாஸ் செய்வதற்கான நேரம். மறந்துவிட்டீர்களா? அதை முழு மனதுடன் இங்கு வழங்குங்கள். நாங்கள் உங்களுக்காகக் காத்திருப்போம்**" என்றார்.

ஒரு முஸ்லீமாக இருந்ததால், ஹபிபுல்லா அனுதினமும் பிரார்த்தனைகளை முழு முனைப்புடன் தவறாமல் செய்து வந்தார்; இந்த முறையும் அதைச் செய்தார், ஆனால் அவருடைய சிந்தனைகள் 'தலைவரைச்'

சுற்றி அலைபாய்ந்தன: "இந்தத் 'தலைவர்' இத்தனை சிறப்பாக இருக்கிறார், எனது நல்வாழ்வில் அக்கறை காட்டுவது தவிர, அவர் பிரார்த்தனைக்கான நேரத்தையும் எனக்கு நினைவூட்டுகிறார்."

வெகுதூரம் சென்ற பின்னர், அவர்கள் மேலுமொரு மஸ்தைத் தொடர்பு கொண்டனர். பாபா, அவரிடம் தனியாகச் சென்று தனது தொப்பியைக் கழற்றினார். தூரத்தில் இருந்த ஹபிபுல்லா, பாபாவின் நீளமான முடியைப் பார்த்து, ஆழ்ந்த சிந்தனையில் முணுமுணுத்தார்: "இந்த ஸாஹேப் ஒரு வாலியாக (துறவி) இருக்க வேண்டும்; அவர் ஒரு சாதாரண மனிதராக இருக்க முடியாது."

"ஆனால் அவர் ஏன் மௌனமாக இருக்கிறார்? அவர் தனது பேச்சை மீண்டும் பெறும் நோக்கத்தில் மஸ்துகளை அணுக வேண்டும்; ஆனால் ஒரு வாலி ஏன் மஸ்துகளிடம் செல்ல வேண்டும்?"

அந்த மஸ்துடனான பணி நிறைவடைந்ததும், அவர்கள் தங்கள் தேடலை மேலும் தொடர்ந்தனர். வழியில், பாபா இப்போது சீக்கிய கார் ஓட்டுநரை, காக்கா மற்றும் பைதூல் மூலமாகக் கிண்டல் செய்யத் தொடங்கி, அவரிடம், "நீங்கள் ஒரு நல்ல ஓட்டுநர் அல்ல, அப்படித்தானே? நீங்கள் உண்மையில் நன்றாக ஓட்டவில்லை." இது அவரைக் கோபமுறச் செய்தது; அவர் பதிலுக்கு ஏதோ கூறினார். அப்போது பாபா, "**உங்களுக்கு ஓட்டுநர் உரிமத்தை வழங்கியவர் யார்? நீங்கள் அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்திருக்க வேண்டும்! அவருக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள்?**" இது ஓட்டுநரின் கோபத்தையும் ஆத்திரத்தையும் மேலும் தூண்டியது; சீற்றமடைந்த ஓட்டுநர் சாப மழை பொழிந்தார்.

இறுதியில் ஓட்டுநர் கடுப்புடன், "நான் இன்று மாலை ஆறு மணிக்கு ஸ்ரீநகர் திரும்பியாக வேண்டும்" என்றார்.

"**எங்கள் பணி முடிவதற்கு முன்பு நீங்கள் எப்படித் திரும்ப முடியும்?**" பாபா கேட்டார். "**அது முடியும் வரை நீங்கள் எங்களுடன் இருப்பீர்கள் என்று உறுதியளித்தீர்கள்; வாக்குறுதியை மீறுவது நல்லதல்ல.**"

கார் ஓட்டுநரை எவ்வளவோ வற்புறுத்திய போதிலும், அவர் தொடர்ந்து செல்லத் தயாராக இல்லை. கடைசியில் பாபா ஸ்ரீநகர் திரும்ப ஒப்புக்கொண்டார்.

ஓட்டுநர் திரும்பிச்செல்ல ஆயத்தமாகி, ஏழு மைல்களைக் கடப்பதற்கு முன்னால், முன்னும் பின்னும் சக்கரங்கள் இரண்டும் பழுதாயின. அவர் பின்பக்க சக்கரத்தின் உள்குழாயை மாற்றினார், ஆனால் முன்பக்கத்திற்கான உதிரி பாகங்கள் அவரிடம் இல்லை. பொழுது சாயுங்காலம், பாபா விசாரித்தார், "**உங்களுக்கு ஸ்ரீநகரில் அவசர வேலை உள்ளது. நீங்கள் எப்படிச் செல்லமுடியும்?**" ஓட்டுநர் அமைதியாக இருந்தார்.

பாபா, ஹபிபுல்லா மூலமாக, 'மாங்கோம்' (MANGOM) கிராமத் தலைவரை அணுகி ஓரிரவை அவர் இல்லத்தில் கழிக்க ஏற்பாடு செய்தார். பாபா, கிராமத் தலைவரின் வீட்டில் ஓய்வெடுத்தார்; மேலும் ஓட்டுநருக்கு

உணவு அங்கிருந்து அனுப்பப்பட்டது. அடுத்த நாள் அதிகாலையில் எழுந்த பாபா, வீட்டிலிருந்து வெளியே சென்று, தனியாக ஒரு நதிக்கரையில் அமர்ந்தார். காக்கா, பைதூல் மற்றும் ஹபிபுல்லா அவரை அங்கே கண்டுகொண்டனர்; பாபா, ஹபிபுல்லாவை நோக்கி, **"கார் ஓட்டுநரிடம் சென்று நிலைமையைப் பார்த்து வாருங்கள்"** என்றார்.

ஹபிபுல்லா அவரை எதிர்கொண்டபோது, "அந்த மனிதன் யார்?" என்று கேட்டார்.

"உங்களுக்கு அவர் மீது ஏன் இவ்வளவு அக்கறை?" ஹபிபுல்லா விசாரித்தார்.

"நேற்றிரவு எனக்கு அவருடைய மகிமையைப் பற்றிய ஓர் அனுபவம் கிடைத்தது. அவர் ஒரு பெரிய மனிதராக இருக்க வேண்டும். நான் அவரிடம் பொய் சொன்னேன். ஸ்ரீநகரில் அப்படி அவசர வேலை எதுவும் இல்லை. அவர் விரும்பும் வரை நான் அவருடன் இருக்கத் தயாராக இருக்கிறேன்." பாபா இதைக் கேட்டதும் மகிழ்ச்சியடைந்து சீக்கிய ஓட்டுநரை மன்னித்தார்.

மாங்கோம் கிராமத்தில், மெஹர் பாபா, 'பண்டித் கஷ்காக்' (PANDIT KASHKAK) என்ற மிகவும் மேல்நிலையை அடைந்த, சக்திவாய்ந்த, ஏறக்குறைய 70 வயதான ஜலாலி மனநிலையைக் கொண்ட மஸ்துடன் தொடர்பு கொண்டார். அவரது பொறிபறக்கும் உடல் தோற்றம் பாபாவிற்கு உபாஸனி மஹாராஜை நினைவூட்டியது.

பாபா, பண்டித் கஷ்காக்குடன் தனியாகப் பணிபுரிந்தபோது, ஹபிபுல்லா சுற்றி வளைந்த மறைவான இடத்திலிருந்து மிகுந்த ஆர்வத்துடன் அறைக்குள் உற்று நோக்கினார். அவர், பாபா முழங்காலில் நின்று, தலையை மஸ்தின் பாதங்களில் பல முறை வைத்தபோது, மஸ்த் கஷ்காக், பாபாவை விட மிகவும் மேம்பட்ட நிலையில் இருக்க வேண்டும் என்று நினைத்தார். பாபா அவரது பணியை முடித்து வெளியே வந்ததும், அவர் காக்கா, பைதூல் இருவரையும் கடுமையாகத் திட்டினார், **"நான் உங்கள் இருவரையும் பாதுகாப்புடன் இருக்கும்படி கூறினேன்! நான் உள்ளே இருக்கும்போது நீங்கள் இருவரும் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?**

**"மஸ்துடன் பணிபுரியும் வேளையில் எவரும் என்னைப் பார்க்கத் தடை விதித்தேன். ஆனால் இன்று, உங்கள் கவனக்குறைவால், யாரோ ஒருவர் மிகப் பெரிய தவறிழைத்தார். நான் அவரைக் காப்பாற்றாமல் இருந்திருந்தால், அவர் சாம்பலாகி இருப்பார்."**

பாபா என்ன கூறினார் என்று காக்கா, பைதூல் இருவருக்கும் தெரியாது, ஆனால் இதன் மூலம், 'மும்பையிலிருந்து வந்த முதலாளிக்கு' எல்லாம் தெரியும் என்று ஹபிபுல்லா நம்பினார். பாபா, அவரைப் பார்க்க முடியாத அத்தகைய இடத்திலிருந்து அறையின் உள்ளே பார்த்ததை அவர் அறிந்துகொண்டார்.

அவர்கள் தங்கள் பயணத்தை மீண்டும் தொடங்கியபோது, சாலையில் ஒரு வயதான பெண்மணியிடமிருந்து ஆப்பிள் வாங்குவதற்காகக் காரை

நிறுத்தினர். ஹபிபுல்லாவை அந்தப் பெண்மணியிடம் பாபா அனுப்பியபோது, அவர் ஒரு ரூபாய்க்கு பதினாறு ஆப்பிள்களை வழங்கினார். ஹபிபுல்லா அவருடன் பேரம் பேசி மேலும் இரண்டு ஆப்பிள்களைப் பெற்றுக்கொண்டார். அவர் பழத்துடன் திரும்பி வந்து, காரில் பயணத்தைத் தொடர்ந்து, ஒரு மைல் தூரம் கடந்ததும் காரை நிறுத்தி சிற்றுண்டிக்காக ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தனர். ஹபிபுல்லா, பாபாவிடம் பதினாறு ஆப்பிள்களைக் கொடுத்தபோது, அவர் அதை அனைவருக்கும் பகிர்ந்தளித்தார். பாபா, மேலும் இரண்டு ஆப்பிள் ஹபிபுல்லாவிடம் இருப்பதை கவனித்து, '**அவற்றை எங்கிருந்து பெற்றீர்கள்?**' என்று கேட்டதும் அவர், "அந்த வயதான பெண்மணி அவற்றை என்னிடம் கொடுத்தார்," என்று பதிலளித்தார்.

**"நீங்கள் அவருக்குப் பணம் கொடுத்தீர்களா?"**

"அவர் அவற்றை எனக்கு இலவசமாகக் கொடுத்தார்."

**"மறுபடியும் அவரிடம் சென்று அவற்றைத் திருப்பித் தாருங்கள்"** என்று பாபா கட்டளையிட்டார். எனவே ஹபிபுல்லா அந்த இரண்டு ஆப்பிள்களைத் திருப்பித் தர ஒரு மைல் தூரம் நடந்து சென்றார். உண்மை என்னவெனில், அவர் ஏற்கனவே ஒரு ரூபாய்க்கு பதினாறு வாங்க ஒப்புக்கொண்ட பின்னர், தனது இனிமையான பேச்சினால் (ஏமாற்றி) மேலும் இரண்டு பழங்களைத் தரகாகப் பெற்றுக்கொண்டார்.

அதற்குப் பிறகு, 'சுண்டன்கம்' (CHHUNDANGAM) கிராமத்தில், தனது குழந்தைகள் மற்றும் வயதான தாயுடன் வாழ்ந்து வந்த, கிட்டத்தட்ட 60 வயதான, உயரமான 'நவாப் ஷா' (NAWAB SHAH) என்ற மஸ்தை மெஹர் பாபா தொடர்பு கொண்டார். சந்திப்பின் போது, மஸ்த் பாபாவின் தொப்பியை, தனது தலையில் வைத்து, அவருடைய அழுக்கு பட்டான் தொப்பியை, பாபாவின் தலை மீது வைத்தார்.

குழு ஆகஸ்ட் 29 அன்று நிஷாத்துக்குத் திரும்பி வந்தது. இதற்கிடையில், பாபா அங்கு இல்லாத வேளையில், கிருஷ்ணாவின் உடல்நிலை மோசமடைந்தது. டைபாய்டு ஜுரத்தால் தாக்கப்பட்ட அவர், உயிரைத் துறந்துவிடுவாரோ என்று டாக்டர் நீலு கவலைப்பட்டார். பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது, அவர் அடுத்த நாள் திரும்பி வருவதாகக் தகவல் தெரிவித்தார். பாபா வந்தபோது, கிருஷ்ணா உணர்வுடன் இருந்தார். பாபா அவருக்கு இரண்டு அல்லது மூன்று கரண்டி கஞ்சியை ஊட்டி, டாக்டர் நீலுவிற்கு மேலும் அறிவுறுத்தல்களை வழங்கினார். படிப்படியாக, கிருஷ்ணாவின் உடல்நிலையில் முன்னேற்றம் தென்பட்டது.

மெஹர் பாபா திரும்பி வந்த இரண்டு நாட்களில் மீண்டும் மஸ்த் தொடர்புக்காகப் புறப்பட்டார். 31ஆம் தேதி, அவர் 'வன்காம்' (WANAGAM) எனும் கிராமத்தில் 'அஸத் ஸாஹேப்' (ASAT SAHEB) என்றழைக்கப்பட்ட உயர்நிலை மஸ்தை சந்தித்தார். நிர்வாண நிலையில், உலர்ந்த, செதில்களை ஒத்த தோலைக் கொண்டிருந்த அந்த மஸ்த் அவரது முதுகை வருடுமாறு கேட்டபோது, பாபா அதை மிகுந்த மகிழ்ச்சியுடன் செய்தார்.

‘குருஜி’ (GURUJI) என்ற மஸ்தையும் பாபா அன்று தொடர்பு கொண்டார். சமையல் எண்ணெயை உட்கொள்ளும் பழக்கத்தைக் கொண்ட அவருடைய ஆடையும் முழு உடலும் எண்ணெயில் ஊறி இருந்தது. மேலும் எண்ணெய் வாங்க பாபா அவருக்கு ஐந்து ரூபாய் வழங்கிய வேளையில், மஸ்த் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

1944, செப்டம்பர் 1 வெள்ளிக்கிழமை அன்று, பாபா ‘சிண்ட்லூர்’ (CHINDLUR) கிராமத்தில் ‘நூர் ஷா’ (NOOR SHAH) என்றழைக்கப்பட்ட உயர்நிலை மஸ்தை தொடர்பு கொண்டார். மஸ்த், பாபாவிற்குப் பரிசாக அளித்த வெள்ளரிக்காயை அவர் பின்பு வேகவைத்து உண்டார்.

செப்டம்பர் முழுவதும், பாபா, ஸ்ரீநகர் சுற்றுப்புறத்தில் தொடர்ந்து சந்தித்த ஏறக்குறைய 20 மஸ்துகளில் ஒரு மஸ்தானி, புல்லுடன் சாதத்தை உண்டு வாழ்ந்தார். இவர்களில் ஐந்து மஸ்துகள் புனிதமான சாதுக்களாகக் கருதப்பட்டனர்.

காஷ்மீரில் தனது மஸ்த் பணியின் இந்தக் கட்டத்தை நிறைவு செய்து, பாபா, புலனாகாத முறையில் மண்டலிக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்: “**இரண்டு மலைகள் ஒன்றோடொன்று மோதி, தனித்தனியாகப் பிரியும். இரண்டிற்கும் இடையே இருக்கும் ஒரு மலையின் காரணமாக, அதன் பின்பு மோதல்கள் தொடரும்.**”

இந்த நாடு, இந்தியா, பாகிஸ்தான் - என்று இரண்டு பகுதிகளாகப் பிரிவதை, பாபா குறிப்பிடுகிறார்; மேலும், காஷ்மீர் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான மோதலுக்குக் காரணமாகப் பல்லாண்டு காலம் தொடரும்.

மெஹர் பாபா, குழுவுடன் தங்கியிருந்த காலத்தில், அவர் ஒருமுறை பெண்மணிகளை ஹர்வன் கிராமத்திற்கு அழைத்துச் சென்று, 1929இல் பாபா, ஏகாந்தவாசம் மேற்கொண்ட இடத்தை அவர்களுக்குக் காட்டினார். மலைப் பகுதியில் அமைந்த ஓரிடத்தில், பாபா, சிலுவையின் அடையாளத்தைக் காட்டி, “**அங்கேதான் இயேசுவின் உடல் புதைக்கப்பட்டது**” என்றார். பாபா, அதற்குப் பிறகு பெண்மணிகளை ஸ்ரீநகருக்கு சுற்றுலா அழைத்துச் சென்று மனம் கவரும் சிறப்பான இடங்களையும் காட்டினார்.

ஸ்ரீநகரில் ஒரு நாள், ஹபிபுல்லாவுடன் மலை மீதமைந்த ஒரு சன்னிதிக்கு பாபா சென்றார். கீழே இறங்கும் வேளையில், ”**உங்கள் வீடு எங்கே?**” என்று கேட்டதற்கு, ஹபிபுல்லா அது அருகாமையில் இருப்பதாகக் கூறியதும், பாபா அங்குச் செல்ல விருப்பம் தெரிவித்தார். முக்கியமான நபர்கள் பாபாவை சந்தித்து, தரிசனம் செய்வதைக் கூட அனுமதிக்காமல் அவர் ஹபிபுல்லாவின் இல்லத்திற்கு விஜயம் செய்யும் விருப்பத்தைத் தெரிவித்தது அவரை வியப்படையச் செய்தது.

ஹபிபுல்லா, அவரது இதயம் நிரம்பி விட்டதாகக் கூறி, “பாபா, நான் ஓர் ஏழை, மேலும் என் வீடு…” என்று தயங்கினார்.

பாபா, அவரைக் கட்டியணைத்து, “**நானும் மிகவும் ஏழைதான். உங்கள் வீட்டிற்குச் செல்வது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தரும்**” என்று சைகையால் தெரிவித்தார்.

ஹபிபுல்லா பாபாவைத் தனது குடும்பத்தின் எளிமையான இல்லத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில், பாபா, ஹபிபுல்லாவின் இளைய சகோதரர் மஜித்தை (MAJID) கைகளால் தழுவி, தரையில் அமர்ந்து அவருடன் விளையாடத் தொடங்கினார். பாபா, ஹபிபுல்லாவின் மூத்த சகோதரர் அமீனிடம் (AMIN) பத்து ரூபாய் கொடுத்து, தந்தையிடம் நலம் விசாரித்தார். தந்தை உடனே, “நான் நலமாக இருக்கிறேன், ஆனால் என் மகன் ஹபிபுல்லா ஆஸ்துமா நோயால் அவதிப்படுகிறான்” என்றார்.

பாபா, இவ்வாறு பதிலளித்தார், “**அவர் உங்கள் மகன் அல்ல, என்னுடையவர். எனவே அவரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.**” பாபாவின் அன்பு குடும்பத்தில் ஒவ்வொருவரிடமும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது; ஹபிபுல்லா, பாபாவுடன் நிரந்தரமாக வாழ நினைத்தார்.

ஹபிபுல்லா ஒளிவு மறைவாக தொடர்ந்து புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். அவரது வீட்டிலிருந்து திரும்பிய பாபா, “**நீங்கள் உண்மையில் ஆஸ்துமாவால் அவதிப்படுகிறீர்களா?**” என்று கேட்டார்.

ஹபிபுல்லா, “ஆம், கடந்த பல ஆண்டுகளாக” எனத் தெரிவித்தார்.

“**நீங்கள் புகைப்பிடிப்பதுண்டா?**” பாபா வினவியபோது, ஹபிபுல்லா ஆமாம் என ஒப்புக் கொண்டார். பாபா, உடனே சைகையால் தெரிவித்தார், “**புகைப்பிடிப்பதைத் தொடருங்கள்.**” அன்று முதல், பாபா, தானாகவே ஹபிபுல்லாவிற்கு ஒன்றன் பின் ஒன்றாக, சிகரெட்டுகளை வழங்கினார், அதை ஏற்றுக்கொள்வது அவருக்கு தர்மசங்கடமாக இருந்தது. தினமும், பாபா அவருக்குத் தொடர்ந்து அளித்து வந்ததன் விளைவாக ஹபிபுல்லா புகைப்பிடிப்பதைக் கைவிட்டது மட்டுமல்லாமல் அவரது ஆஸ்துமாவும் மறைந்துவிட்டது!

பாபா நிஷாத்தில் தங்கியிருந்த காலத்தில், 1944, செப்டம்பர் 15 அன்று ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது, அதில் பாபா, அவரது மிகவும் பிரியமான சீடர் சாஞ்சியின் மரணத்தின் காரணமாக, தானே தனது செயலாளராகச் செயல்படப் போவதாகத் தெரிவித்திருந்தார். ஒரு மாத கால சந்திப்புத் தொடர்பாக, ஆதி சீனியர் செப்டம்பர் இறுதியில், சம்பந்தப்பட்ட அனைவரையும் சந்தித்து, அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர், 1945, பிப்ரவரி 15 மற்றும் மே 15க்கு இடையில், கூட்டத்திற்கான தேதி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் தெரியப்படுத்தினார். பாபா, நவம்பர் மாதத்தில் நாக்பூர், ஸாவ்னேர் (SAONER) ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வதோடு, ஆண்டு இறுதியில் ‘மனித அதிகார வரம்பிற்குள் உட்படாத நிலத்தில்’ (NO MAN’S LAND) ஆன்மீகப் பணிக்காக, பெஷாவர் (PESHAWAR) செல்ல இருப்பதாகவும் தெரியப்படுத்தினார்.

இவ்வாறு, ஒரு மாத கால கூட்டம் என்பது பலமுறை ஒத்திவைக்கப்பட்டது, இது இயற்கையாகவே சம்பந்தப்பட்டவர்களிடம் ஒரு பற்றற்ற உணர்வை உருவாக்கியது. படிப்படியாக, பாபாவின் நம்பகமான ஊழியர்கள், ஆழமாக வேரூன்றியுள்ள நிலையற்ற மாய வாழ்க்கையால் பாதிக்கப்படாமல் இருந்ததோடு, பாபாவின் வார்த்தைகளைப் பின்பற்றுவதில் அவர்களிடையே அதிகரித்து வரும் ஆர்வம், அனைவரையும் படிப்படியாக அவரது அன்பிற்காக மட்டுமே தூண்டியது.

டாக்டர் தவ்லத் ஸிங், மெஹர் பாபாவின் பெயரை ஸ்ரீநகரில் மிகச் சிறப்பாகப் பரப்பி வந்ததைத் தொடர்ந்து, பாபாவின் தரிசனத்திற்காக, பல பக்தர்கள் ஆர்வம் காட்டினர். சாஞ்சியின் இறுதி அடக்கத்தின் போது, கஞ்சூ (GANJOO), கெய்ன் (KAIN) இருவரும் பாபாவை (தார் - DHAR, பாபாவை ஏற்கனவே சந்திக்க நேர்ந்தது) முதன்முதலில் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றனர்; மேலும், பாபாவின் புன்னகை (அந்த நேரத்திலும்) அந்தத் துயர நிகழ்வை ஒரு மகிழ்ச்சியான கொண்டாட்டமாக மாற்றியது. அவருடைய சகவாசத்தின் வாய்ப்பை வழங்குமாறு ஏனைய அனைவரும் அவரிடம் பிரார்த்தனை செய்தனர்.

ஒரு நாள் பாபா, டாக்டரிடம் '**அவர் என்ன நினைக்கிறார்**' என்று கேட்டதற்கு, தவ்லத் ஸிங், "எனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் சிலர் உங்கள் தரிசனத்திற்காக மிக்க ஆர்வமாக உள்ளனர், ஆனால் உங்கள் அனுமதியின்றி நான் அதை விரும்பவில்லை" என்று பதிலளித்தார்.

மெஹர் பாபாவின் அன்பில் தவ்லத் ஸிங் முற்றிலும் மூழ்கியிருந்ததால், அவரை ஏமாற்றமடையச் செய்ய பாபாவிற்கு மனம் இல்லை. அவர் சிரித்துக்கொண்டே, "**நீங்கள் அதற்காகப் பிரார்த்தனை செய்யவில்லை என்றால், அவர்கள் அனைவரையும் 20ஆம் தேதி ஒரு மணி நேரத்திற்கு இங்கு அழைத்து வரும்படி நான் உங்களிடம் பிரார்த்தனை செய்கிறேன். ஆனால் என்னால் ஒரு மணி நேரத்திற்கு மேல் அனுமதிக்க முடியாது**" என்றார்.

தவ்லத் ஸிங் மிக்க மகிழ்ச்சியடைந்து ஆர்வலர்களுக்கு உடனடியாகத் தகவல் தெரிவித்தார். அதற்கிணங்க, 1944, செப்டம்பர் 20 புதன்கிழமை நிஷாத்தில் அமைந்த கரம்சந்தின் (KARAMCHAND) பங்களாவில் தரிசனம் நடைபெற்றது. கிட்டத்தட்ட 500 பேர் கலந்து கொண்டனர். ஒவ்வொருவரையும் சிறிது நேரம் சந்தித்து அனுப்பி வைத்ததும், தவ்லத் ஸிங், அவரது குடும்பம், வாஸ் தேவ் கெய்ன் மற்றும் சிலருக்கு பாபா அதிக நேரத்தை வழங்கினார்.

அவரை சந்திப்பதற்கு முன்பு கெய்ன், மெஹர் பாபாவின் பல காட்சிகளைக் காண நேர்ந்தது, இந்தத் தருணத்தில் அவர் இவ்வாறு விவரிக்கிறார்:

நான் பாபாவுடன் தனியாக இருந்த வேளையில், எனக்கு என்ன வேண்டும் என்று பாபா என்னிடம் கேட்க, நான் அவரிடம், "கோபம், காமம்,

பேராசை ஆகிய மூன்று எதிரிகளும் எப்போதும் என்னைப் பின்தொடர்கிறார்கள். நான் அவர்களை அகற்ற விரும்புகிறேன்!” என்றேன்.

பாபா, “**அதைப் பற்றி கவலைப்படாதீர்கள். நான் அவர்களைப் பார்த்துக் கொள்கிறேன். என்னை நேசிக்க மட்டும் செய்யுங்கள்**” என்றார். அவர் அதைச் சொல்லி மறைந்து போவதைப் பார்த்தேன். ஏழாவது வானுலகிலிருந்து வந்ததைப் போல, சிரிப்பொலியை என்னால் கேட்க முடிந்தது, எங்கும் ஒரே வெளிச்சமாக இருந்தது. எவ்வளவு வெளிச்சம்; எத்தனை பிரகாசம். பாபாவின் பாதங்களை மட்டுமே என்னால் பார்க்க முடிந்தது, வேறு எதுவும் இல்லை.

ஒரே நொடியில், பாபா மறுபடியும் தோன்றினார். மீண்டும், அந்த அழகான முகம், அதே புன்னகை, அளவிலா அன்பு. பாபாவின் உண்மையான சுய ரூபத்தைக் கண்ட நான் ஓர் அதிர்ஷ்டசாலி என்று உணர்ந்தேன். நான் கடவுளை நேருக்கு நேர் பார்த்தேன்.

அன்று பாபாவை சந்தித்தவர்களில் ஒரு சாது, பாபாவிடம் அவரது துறவறம், மேலும் அவர் சந்தித்த பல்வேறு துறவிகளைக் குறித்தும் விவரித்தார். பாபா அவரைப் பாராட்டினார், அனைவருடனும் உரையாடிக்கொண்டிருந்தபோது, ”**தவ்லத் ஸிங் ஒரு மாணிக்கக் கல்**!” என்று குறிப்பிட்டார்.

துறவி அறிவார்ந்த புன்னகையுடன் பதிலளித்தார், “அவர் ஒரு மாணிக்கம், ஆனால் அவர் இன்னும் உலகைக் கைவிடாமல் அதிலேயே இருக்கிறார்.”

பாபா, எதுவும் கூறாமல் புன்னகைத்து வேறு எதையாவது விவாதிக்கத் தொடங்கினார், சிறிது நேரத்தில், “**எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது, கேட்க விரும்புகிறீர்களா?**” அனைவரும் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியதும் பாபாவின் விரல்கள் எழுத்துப்பலகையில் பறந்தன, அதை விஷ்ணு விளக்கினார்:

**ஒரு மனிதர் உலகைத் துறந்து, தியானம், தனிமை, கடவுளின் பெயரை உச்சரிப்பது, மற்றும் பல துறவிகளை, மகாத்மாக்களை சந்திப்பதில் தனது நேரத்தைச் செலவிடுகிறார். இப்படி வருடங்கள் கடந்தன. ஒருமுறை அவர் ஒரு சத்குருவை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். இறைநிலையை அடைவதற்காக அவரிடம் பிரார்த்தனை செய்த வேளையில், சத்குரு அவரைத் தனது ஆசிரமத்தில் தங்கும்படி கூறினார்.**

**அங்கு குருநாதரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து வாழும் பலர் இருந்தனர். ஆசிரமத்தில் எந்தவிதமான ஆன்மீகப் பயிற்சியும் அளிப்பதை அவர் கவனிக்காததால், இந்தத் துறவி, அங்கு வாழ்ந்த அனைவரும் பயனற்றவர்கள் என்று நினைத்தார். சிலர் சமைத்துக் கொண்டும், சிலர் துணி துவைத்து, சுத்தம் செய்து கொண்டும், குருநாதரின் கட்டளைகளுக்கு ஏற்ப, தத்தமது பணிகளில் மும்முரமாக இருந்தனர்.**

இப்போது குருநாதருடன் வாழ்ந்தாலும், துறவி தனது ஆன்மீக நடைமுறைகளைத் தொடர்ந்தார். ஒரு நாள் அவர் குருநாதரிடம், “நான் எப்போது கடவுளைக் காண்பேன்?” என்று கேட்டார்.

குருநாதர் பதிலளித்தார், “நீங்கள் எனது கட்டளைகளின்படி செயல்பட்டால், விரைவில் கடவுளைக் காண்பீர்கள்.” துறவி அதற்கு இணக்கம் தெரிவித்து, தலையசைத்தார். சத்குரு, ஒரு சிறிய கல்லை எடுத்து, அவரிடம் கொடுத்து, “பஜாருக்குச் சென்று, அதற்கு ஈடாக, ஐந்து ஸீர் (ஒரு எடை அளவீடு) காய்கறிகளை வாங்கி வாருங்கள்” என்று கூறினார்.

கல்லைப் பார்த்து, துறவி, “மஹாராஜ், இது ஒரு கல். அதற்கு ஈடாக ஐந்து ஸீர் காய்கறிகளை யார் கொடுப்பார்கள்? யாரும் அதைத் தொடமாட்டார்கள்” என்று பதிலளித்தார்.

குருநாதர் கூறினார், “நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவதாக உறுதியளித்தீர்கள், இப்போது நீங்கள் வாதிடுகிறீர்கள்! நான் சொல்வது போலச் செய்யுங்கள், உங்களுக்குக் கடவுளின் தரிசனம் கிடைக்கும்!”

துறவி, பஜாருக்குச் சென்றபோது எந்த விற்பனையாளரும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை, அனைவரும் கேலி செய்து சிரித்தனர். மிகுந்த சிரமத்துடன், ஒருவர் அவருக்கு இரண்டு ஸீர் காய்கறிகளைக் கொடுக்க ஒப்புக்கொண்டார். மறுத்து, துறவி திரும்பி வந்து, குருநாதரிடம், “மஹாராஜ், இந்தப் பரிமாற்றம் முட்டாள்தனம் என்று நான் ஆரம்பத்திலிருந்தே உங்களுக்குச் சொன்னேன். ஒரு கல்லுக்கு ஐந்து ஸீர் காய்கறிகளை யார் தருவார்கள்? என்னால் எதுவும் பெற முடியவில்லை” என்று கூறினார்.

சத்குரு உடனே, “இப்போது ஒரு மிட்டாய் கடைக்குச் சென்று, இந்தக் கல் துண்டுக்காக ஐந்து ஸீர் மிட்டாய்களை வாங்கி வாருங்கள்” என்றதும், குருநாதரின் மனநிலை சரியில்லாமல் போய்விட்டதாக நினைத்து, அங்கிருந்து சென்றார். ஐந்து ஸீர் இனிப்புகளைக் கொடுக்க எவரும் தயாராக இல்லாத நிலையில், ஒரு கடையில் அவர் வாதாடி அதிகபட்சம் மூன்று ஸீர் வரை அளிப்பதாக இணக்கம் தெரிவித்தார். அதனால் துறவி வெறுங்கையுடன் திரும்பினார்.

சத்குரு, பின்னர் அவரை ஒரு தங்க நகைத் தொழிலாளியை அணுகி, ரூ 5,000க்கு குறையாமல் வாங்கி வருமாறு கூறினார்! இப்போது துறவி, குருநாதர், முற்றிலும் பைத்தியம் என நம்பினாலும், ஒரு பொற்கொல்லரிடம் சென்றார். பொற்கொல்லர் அந்தக் கல்லை பரிசோதித்து ரூ 1,000 கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். இது, அந்தத் துறவியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது, ஏனெனில் ஐந்து ஸீர் காய்கறிகள் கூடக் கிடைக்காத ஒரு கல்லுக்கு ஈடாக, இப்போது அவருக்கு ரூ 1,000 கிடைக்க இருந்தது.

**சத்குருவிற்கு அவர் என்ன செய்கிறார் என்று நன்றாகத் தெரியும், மேலும் அவர் கண்களால் கண்டதை விட வேறு ஏதோ அதில் மறைந்துள்ளது என்று துறவி நினைத்தார்.**

**துறவி, குருநாதரிடம் திரும்பி வந்து, நடந்ததை சொன்னபோது அவர் அந்தத் துறவியிடம், அடுத்து ஒரு நகைக்கடைக்குச் சென்று, கல்லை ரூ 100,000க்கு விற்கச் சொன்னார்! அதற்கிணங்க, துறவி நகைக்கடைக்குச் சென்றதும், விற்பனையாளர் ஒப்புக்கொண்டு அவருக்குத் தொகையை வழங்கினார். துறவி, பணத்தைக் கொண்டு வர, குருநாதர் அவரிடம் கூறினார், "உங்களுக்கு அந்தக் கல்லின் மதிப்பு தெரியவில்லை, ஆனால் நகைக்கடைக்காரருக்கு அதன் உண்மையான மதிப்பு தெரியும்; அது ஒரு வைரம் என்பதை அவர் தெரிந்துகொண்டார்! ஒரு நகைக்கடைகாரரின் கண்ணால் மட்டுமே கல்லின் உண்மையான மதிப்பை அறிய முடியும்.**

**"காய்கறி விற்பனையாளர், மிட்டாய் கடைக்காரர், பொற்கொல்லர் - அனைவரும் முகத்திரையால் மறைக்கப்பட்டவர்களைப் போன்றவர்கள்; அவர்கள் தத்தமது உணர்விற்கு ஏற்ப மட்டுமே மதிப்பீடு செய்ய முடியும்."**

**குருநாதர், அதன் பின்னர் துறவியிடம் கூறினார்: "நான் ஒரு நகை வியாபாரி, என்னைச் சுற்றியுள்ளவர்களின் தனித்திறனையும், செயல் வல்லமையையும் நான் அறிவேன். அவர்கள் சொந்த விருப்பத்தை விட்டுவிட்டு எனது விருப்பப்படி செயல்படுகிறார்கள், நகைக்கடையில் இருப்பவர்கள் உண்மையிலேயே ஆன்மீகவாதிகள். பல வருடங்களாக அலைந்து திரிந்த காலத்தில், நீங்கள் அணுகிய அனைவரும் காய்கறி விற்பனையாளர், மிட்டாய் கடைக்காரர், பொற்கொல்லர் போன்றவர்கள் - அவர்கள் குறுகிய கண்ணோட்டத்தால் வரையறுக்கப்பட்டவர்கள். எனவே, உங்கள் உண்மையான மதிப்பை அறிந்த ஒரு நகைக்கடைக்காரருடன் நீங்கள் இருப்பது நல்லது; இறுதியில் நீங்களும் ஒரு நகை வியாபாரியாக மாறி விடுவீர்கள்."**

இதனால், துறவிக்கு அசைக்க முடியாத நம்பிக்கை வரவே, குருநாதரின் பாதங்களைப் பற்றிக் கொண்டார்.

மேலும் பாபாவின் முன்னால் அமர்ந்திருந்த துறவியும் இந்தக் கதையிலிருந்து குறிப்பாக டாக்டர் தவ்லத் ஸிங் பற்றிய ஒரு சிறப்பான பாடத்தைக் கற்றுக்கொண்டார்.

1944, செப்டம்பர் 21 வியாழக்கிழமை, பாபா ஸ்ரீநகரிலிருந்து ராவல்பிண்டிக்கு, பைதூல், காக்கா இருவருடன் சென்றார். (அவர்களுடன் இருந்த ஆதி சீனியர், பின்பு நாக்பூர் மற்றும் ராய்ப்பூருக்கு அனுப்பப்பட்டார்.) பெஷாவர் நகரில் பாபா, 'கஃபூர் ரஹ்மான்' (GHAFUR REHMAN) என்ற வயதான மஸ்தைத் தொடர்பு கொண்டார். கஃபூர் ஒரு நல்ல மஸ்தாக இருந்தார்; பாபா கூறியபடி, அவர் அனைத்து விதமான குப்பைகளுடன் ஒரு பொதுத் தோட்டத்தின் அருகிலமைந்த குடிலில் அமர்ந்திருந்தார்.

பைதூல், இதர மஸ்துகளைத் தேடிச் சென்றபோது, அவரை நினைவில் வைத்திருந்த ஒரு மனிதரை சந்தித்தார், 1943ஆம் ஆண்டு, பெஷாவரில் வாழும் மஸ்த் அஷாக் பாபாவை (ASHAQ BABA) மெஹர் பாபா தொடர்பு கொண்டதிலிருந்து, அந்த மஸ்த் ஒரு சிறிய குடிசையில், கட்டுக்கடங்கா நிலையில் தனது சொந்த மலக்கழிவில் அமர்ந்திருந்தார். அவருடைய தோற்றத்திலிருந்து, 'அஷாக் ஒரு மஜ்ஜூப்பாக மாறிவிட்டார்' என்று அந்த நபர் கூறினார். அஷாக்கின் தற்போதைய நிலை குறித்து பாபாவிடம் தெரிவித்தபோது, அவர் அஷாக்கைப் பார்க்கச் செல்லவில்லை.

பெஷாவரிலிருந்து, பாபா ஆஃப்கானிஸ்தான் (AFGHANISTAN) நாட்டின் எல்லைப்பகுதியின் தரிசு நிலமான 'மனித அதிகார வரம்பிற்கு உட்படாத' இடத்திற்குச் சென்று, அவர் ஏற்கனவே குறிப்பிட்டபடி சில நாட்கள் ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருந்தார். இவ்வேளையில் பைதூல், காக்கா இருவரும் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தனர். பாபா மண்டலியுடன் மீண்டும் லாஹூருக்குச் சென்று, செப்டம்பர் 26ஆம் தேதி ஸ்ரீநகரிலிருந்து புறப்பட்டுச் சென்ற பெண் மண்டலி (மெஹரா, மணி, மெஹரு, ரானோ) மற்றும் இதர ஆண்களை (கிருஷ்ணா, டாக்டர் நீலு, வெங்கோபா ராவ், விஷ்ணு) சந்தித்தார்.

ஹபிபுல்லா பேக் அவர்களுடன் லாஹூருக்கு வந்து பாபாவுடன் இருக்க விரும்பினார்; பாபா அவரிடம், "**என்னுடன் வாழ்வது மிகவும் கடினம். என்னுடன் வாழ்பவர்கள் முட்கள் மீது நடக்கிறார்கள்**" என்று தீவிரமான தொனியில் எடுத்துரைத்தார்.

"நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்," என்று ஹபிபுல்லா மீண்டும் உறுதியாகக் கூறினார்.

ஆனால் பாபா, "**உங்கள் தந்தையாருக்கு வயதாகிவிட்டது. நீங்கள் என்னுடன் இருப்பதற்கு பதிலாக அவரை கவனித்துக் கொள்ளுங்கள்**" என்று அறிவுறுத்தியதற்கு ஹபிபுல்லா உடன்பட்டதால், பாபா அவருடைய குடும்பத்திற்கு மாதாந்திர உதவித்தொகையை ஏற்பாடு செய்து, அவரை ஸ்ரீநகருக்குத் திருப்பி அனுப்பினார். எனினும் ஹபிபுல்லா விட்டபாடில்லை, பல ஆண்டுகளுக்குப் பின்னர் அஹமதுநகரில் பாபாவைப் பார்க்க வந்தார்.

லாஹூரிலிருந்து, பாபா ஆக்ராவிற்குப் புறப்பட்டு, 30ஆம் நாள் நள்ளிரவில் வந்து சேர்ந்தார். பைதூல், கேக்கி தேசாயுடன் ஒரு வாரத்திற்கு முன்னர் ஆக்ராவிற்குச் சென்று கரியப்பா சாலையில் (CARIAPPA ROAD) அமைந்த ஆக்ரா ஹோட்டலில் (AGRA HOTEL) தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். 1944, அக்டோபர் 2 அன்று ஆக்ராவில், பாபா ஐந்து மஸ்துகளைத் தொடர்பு கொள்ள முடிந்தது. அவர்களில் மிகவும் மேல் நிலையை அடைந்த 'ராஜா நாம்' (RAJA NAM), 'மஹாத்மா' என்றும் அழைக்கப்பட்டார், அவர் ஜமுனா நதிக்கரையின் மணல் கழிவுகளில் மனித தொடர்பிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட சிறிய கோட்டை போலமைந்த குடிலில் தனியாக வாழ்ந்து வந்தார்.

மறுநாள் பிற்பகல் பாபா, பைதூல், காக்கா மூவரும் பஞ்ஜாப் மெயிலில் ஆக்ராவிலிருந்து டெல்லிக்குப் புறப்பட்டனர். அவர்கள் கேக்கி தேசாயின் வீட்டில் உணவு உண்டு இரவைக் கழித்தனர். மறுநாள் நண்பகலில், கேக்கியுடன், டெல்லியிலிருந்து மதுராவிற்கு ரயிலில் சென்று, பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டனர், இவர்களில் அந்தப் பகுதியில் வாழ்ந்த, ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட 'இனையத்துல்லா' (INAYATULLA) என்பவர் மதுராவின் ஆன்மீகப் பொறுப்பாளராக இருந்தார். இந்தத் துறவி மிகவும் குறுகிய உடலமைப்புடன் கூடிய முதியவர், முற்றிலும் நிர்வாணமாக இருந்த அவர் இனிப்புப் பண்டங்களைப் பெரிதும் விரும்பினார்.

மதுராவில் தனது மஸ்த் பணியை முடித்து, அதே மாலையில் பாபா டெல்லி வந்து, மீண்டும் கேக்கி தேசாயின் இல்லத்தில் உணவு உண்டு ஓய்வெடுத்தார். அக்டோபர் 5 காலை 7:45 மணிக்கு , காக்கா, பைதூல், கேக்கி ஆகியோருடன் பாபா பெஷாவர் எக்ஸ்பிரஸ் ரயிலில் பானிபட் சென்றடைந்து, அங்கும் பாபா, சில மஸ்துகளை மீண்டும் தொடர்பு கொண்டார். மஸ்த் பணியை நிறைவு செய்து, பாபா, அன்று மாலை மும்பை எக்ஸ்பிரஸில் பயணத்தைத் தொடர்ந்தார். கேக்கியின் மனைவி தூன், வேண்டிய உணவை எடுத்து வந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா, மெஹரா மற்றும் இதர பெண்கள், மண்டலி ஆகியோருடன் பஞ்ஜாப் மெயிலில் ஆக்ராவிலிருந்து புறப்பட்டு, 8ஆம் நாள் முற்பகல் ஔரங்காபாத்தை வந்தடைந்தனர். ஆதி சீனியர் அவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அவர், முன்பு பாபா தங்கியிருந்த 'பிரேம் பஸேரா' பங்களாவின் ('காட்டி' - GHATI பகுதியில்) உரிமையாளருக்குச் சொந்தமான வேறொரு பங்களாவை ஏற்பாடு செய்திருந்தார்.

இதற்கிடையில் அமெரிக்காவில் பாபாவின் நெருங்கிய அன்பர்களுடன், மர்டில் பீச் மற்றும் பிற அமெரிக்க மையங்களின் திட்டங்கள் குறித்து, கடிதப் போக்குவரத்துத் தொடர்ந்தது. 1944, செப்டம்பர் மாதத்தில், ஜீன் அட்ரியல் அவரது "அவதார்" என்ற தலைப்பிலான புத்தக வெளியீடு மற்றும் மெஹர் பாபாவின் நோக்கத்திற்காக 'அலெக்ஸாண்டர் மார்கி'யின் ஆர்வத்தையும், ஆதரவையும் பற்றி எழுதினார். எலிஸபெத் தனது கடிதத்தில் எழுதியது போல, ஜீன், மார்கி இருவரும் மெஹர் பாபாவின் செய்திகளைப் பரப்புவதற்காக, 'புது வாழ்வின் அறக்கட்டளை'யை நிறுவி, கலிபோர்னியாவில் ஒரு மையத்தை நிறுவ முயன்றனர். இறுதியில் ஜீன், மார்கி இருவரும் இந்த நோக்கத்திற்காக 'க்ளென்டேல்' (GLENDALE) நகருக்கு அருகிலமைந்த 'லா கிரெஸெண்டா'வில் (LA CRESCENTA) 500 ஏக்கர் நிலத்தை வாங்கினர்.

எலிஸபெத், நோரினா இருவரும் 1944 செப்டம்பர் மாதத்தில் மீண்டும் 'மர்டில் பீச்'சிற்குச் சென்று, அக்டோபர் 2 அன்று, முழு நிலமும் இறுதியாக

உறுதி செய்யப்பட்டது. மர்டில் பீச்சின் முக்கிய முன்னேற்றங்கள் குறித்து எலிஸபெத் எழுதிய கடிதம் பின்வருமாறு:

**130 ஈ - 67ஆவது தெரு,**
**நியூயார்க்,**
**அக்டோபர் 8, 1944**

பிரியமான பாபா,

நோரினாவும் நானும் நேற்று 'மர்டில் பீச்'சிலிருந்து திரும்பி வந்தோம். நாங்கள் அங்குச் சென்ற அதே நாள், எதிர்காலத்திற்கான நிலத்தை ஏற்றுக்கொள்ளும் உங்கள் தொலைத்தந்தியை அடையப் பெற்றோம். அதைத் தொடர்ந்து, 'நாங்கள் கவலைப்பட வேண்டாம்' என்று குறிப்பிடப்பட்ட மற்றொரு தொலைத்தந்தியையும் பெற்றுக் கொண்டோம் - இது ஒரு சிரமமான சூழ்நிலைக்கு சற்று முன்னதாக வந்தது. உங்கள் நடவடிக்கைகள் அங்கு தொடங்கும் போது, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்திலிருந்த இதுவரைப் பயன்படுத்தப்படாத மரங்களை அகற்றி, நூற்றுக்கணக்கான மக்களுக்கு ஏற்ற வகையில் மையமாக உருவாக்குவது என்பது ஒரு முன்னோடியான முயற்சியாகும். எவ்வாறாயினும், போர்க்கால கட்டுப்பாடுகள் காரணமாக, கட்டிடங்கள் கட்டுவதற்கு உகந்த தருணமல்ல என்றாலும், அரசாங்கம் பல்வேறு வகையான உதவிகளை வழங்குவதால், விவசாய நிலங்களை மேம்படுத்துவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகத் தெரிகிறது.

மேலும், நியூயார்க்கிலிருந்து ஃபுளோரிடா (FLORIDA) செல்லும் பிரதான நெடுஞ்சாலை 'மர்டில் பீச்' நிலம் வழியாகச் செல்வதை, எனது தோராயமாக வரையப்பட்ட வரைபடத்திலிருந்து நீங்கள் காணலாம். நமது மையத்திற்கான (நெடுஞ்சாலையில்) மின் விளக்கு மற்றும் தொலைபேசி கம்பங்கள் தற்போதைய கட்டுப்பாடுகள் காரணமாக, போருக்குப் பின்னரே இணைக்கப்படுவதாகத் தோன்றுகிறது.

'மர்டில் பீச்' மையத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்கும் தருணத்தில், கொசுக்களின் தொந்தரவு எங்களை அச்சுறுத்தியது… இதனால், நோரினா 'மலேரியா காய்ச்சலால்' பாதிக்கப்பட்ட விபரங்களை மருத்துவர் தெரிவித்தபோது, இது எங்களுக்கு ஓர் எச்சரிக்கையாக இருந்தது. இந்த சிரமங்களை சந்தித்த அந்த நேரத்தில் 'நீங்கள் கவலைப்பட வேண்டாம்' என்று தொலைத்தந்தி அனுப்பியதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நாங்கள் உடனடியாக முகாமிலிருந்து மர்டில் பீச்சில் அமைந்த தந்தையின் இல்லத்திற்குச் சென்றோம்; நோரினாவின் காய்ச்சல் மூன்று நாட்கள் மட்டுமே நீடித்தது… எதுவாயினும், சதுப்பு நிலத்தைக் குறித்த பிரச்சினையை நாங்கள் உடனடியாகத் தீர்க்கத் தொடங்கினோம்… தந்தை எங்கள் சொத்தை, 'மர்டில் பீச் ஃபார்ம்ஸ்' நிறுவனத்திடமிருந்து தவணை முறையில் வாங்கும் செயல்முறையும் நடந்து வருகிறது.

கட்டிடத்தைப் பொறுத்தவரை, அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் பண்ணை கட்டிடங்களுக்காக $1,000 செலவழிக்க அனுமதிக்கிறது மற்றும் நாங்கள் இரண்டு அறைகளுடன் கூடிய திரையிடப்பட்ட தாழ்வாரத்துடன் (அதை நாங்கள் உங்கள் அறை என்று அழைக்கிறோம்) மற்றும் ஓர் அறையுடன் இணைக்கப்பட்ட திரை தாழ்வாரம் சமையல் மற்றும் சாப்பாட்டு அறையாக ஒரு வருடத்தில் கட்டி எழுப்பத் திட்டமிட்டுள்ளோம். நோரினா மற்றும் என்னுடன் வந்தவர்கள், டார்வின் ஷா, ஃபிராங்க் & கே ஈட்டன், ஜான் பாஸ் ஆகியோர், அவர்கள் தங்கியிருந்த, 'எளிதாக எடுத்துச் செல்ல முடிகிற' சிறிய வீடுகளை இங்கே அனுப்பி வைத்தனர். 'அன்னா டில்' (ANNA TILL) இந்தப் பயணத்தில் எங்களுடன் வந்து எங்கள் அனைவருக்கும் வேண்டிய உணவைத் தயார் செய்தார். அன்னா, ஆன்மீகத்தில் ஆர்வம் மிக்கவராக இருந்து எங்கள் பணிகளில் பங்கெடுத்தார். அவர் உங்களை சந்திக்கப் பேராவலாய் உள்ளார்.

பலர் தங்கக்கூடிய அளவிற்கு இடம் தேவைப்படுவதால், அடுத்த ஆண்டு $1,000 மட்டுமே செலவழிக்க முடியும் என்பதாலும், நாங்கள் பல இடங்களில் தேடி அலைந்து, 50x30 அடி சைப்ரஸ் மரத்தாலான, கவர்ச்சிகரமான வடிவத்தில் ஒரு பெரிய கொட்டகையைக் கண்டுகொண்டோம். இந்தக் கட்டிடத்தை $1,000க்கு வாங்கி, பாகங்களாகப் பிரித்து நமது மையத்திற்குக் கொண்டு செல்லலாம். எனவே, அடுத்த ஜனவரி மாதம் நாங்கள் அதை அனைத்து அரசாங்க கட்டுப்பாட்டிற்குள் அடங்கும்படியான குடியிருப்புகளாக மாற்ற முடியும் என்று நம்புகிறோம்...

இதயப்பூர்வமான அன்புடன்,
எலிஸபெத்.

ஔரங்காபாத்திற்கு வந்த பாபா, மெஹராபாத்திலிருந்து இதர பெண்மணிகளை அழைத்தார் - டவ்லா, ஐரீன், காக்குபாய், கேட்டி, கோர்ஷெத், கிட்டி, மன்ஸாரி, மார்கரெட், நாஜா, ஸொல்டுன், ஸூனாமாசி, வாலு மற்றும் கைக்கோபாத்தின் குடும்பம். பாபா, அவர்களிடம் காஷ்மீர் விஜயத்தைப் பற்றி விவரித்தார்; சில நாட்களுக்குப் பின்னர், அவர்களை மீண்டும் மெஹராபாத்துக்கு அனுப்பிவைத்தார். ரானோ அவர்களுடன் திரும்பிச் செல்ல, கிட்டியும், வாலுவும் தங்க அனுமதிக்கப்பட்டனர்.

1944 அக்டோபர் மாதத்தில் அர்னவாஸ், நரிமன் இருவரும் ஔரங்காபாத்திற்கு அழைக்கப்பட்டனர். அர்னவாஸுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த அவரது சிறிய தந்தை சாஞ்சியின் மரணத்தால் மனச்சோர்வடைந்த அவர், பாபாவிடம், "நீங்கள் ஏன் சாஞ்சி காக்காவை எங்களிடமிருந்து எடுக்க வேண்டும்? நாங்கள் அவரை மிகவும் நேசித்தோம்" என்று கேட்டார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார், "**நீங்கள் ஏன் சாஞ்சியை நினைத்து வருத்தப்படுகிறீர்கள்? அவருடைய இழப்பை நீங்கள் உணர்கிறீர்கள், எனக்குத் தெரியும், ஆனால் அது எனக்கு எவ்வளவு பெரிய இழப்பு என்று**

**உங்களுக்குத் தெரியுமா?"** அர்னவாஸ், பாபாவின் வார்த்தைகளில் அடங்கிய உண்மையை உணர்ந்து அதை அவரது விருப்பமாக ஏற்றுக்கொண்டார். பாபா அவரை ஆறுதல் படுத்தினார், "**அவர் என்னைப் பின்பற்றுபவர் மட்டுமல்ல - எனது தோழர் கூட!"**

1944, அக்டோபர் 23 திங்கள் அன்று, அஹமதுநகரில் வாழும் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட 'அலி ஷா'வை, ஔரங்காபாத்திற்கு அழைத்து வந்து, அவருடன் சுமார் ஐந்து நாட்கள் பணிபுரிந்த பின்பு திருப்பி அனுப்பினார். டாக்டர் டான் 26ஆம் நாள் பாபாவைப் பார்க்க வந்தவர், மூன்று நாட்கள் தங்கியிருந்தார்.



**நாக்பூர், நவம்பர் 1944**
(NAGPUR, NOVEMBER 1944)

# நாக்பூர் & ஸாவ்னேர்

**(Nagpur & Saoner)**

பாபா இப்போது நாக்பூர் (NAGPUR) மற்றும் ஸாவ்னேரில் (SAONER) நடைபெறவிருக்கும் தரிசன நிகழ்ச்சிக்கான திட்டங்களை வகுக்கத் தொடங்கினார். பாபாதாஸ், விபூதி இருவரும் வேண்டிய ஏற்பாடுகளை கவனிக்க அங்கு ஏற்கனவே அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, டாக்டர் நீலுவும் உடனிணைந்தார். டாக்டர் நீலு அவரது படுக்கை, கொசு வலை போன்றவற்றை நாக்பூருக்குக் கூடவே எடுத்துச் சென்றதைப் பார்த்த டாக்டர் தேஷ்முக்கின் மனைவி இந்துமதி கேட்டார், "நீலு, ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் உங்களுக்கு - ஏன் இத்தனை வசதிகள்?"

நீலு பதிலளித்தார், "என் அருமை தாயே, ஆன்மீகத்திற்கும் வெளியளவிலான இந்த சௌகரியங்களுக்கும் என்ன சம்பந்தம்? ஆன்மீகம் என்பது உள்ளளவிலான வாழ்க்கை; வெளிப்புற வாய்ப்பு, வசதிகளின் தோற்றத்தை வைத்து ஒருவரை எடைபோட முடியாது. உணவு, உடை மற்றும் சௌகரியங்களுடன் ஆன்மீகத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்பதை பாபா நமக்குக் கற்றுத் தந்தார். உண்மையில், நாம் நல்ல ஆடைகளை அணிந்தாலும், நிர்வாணமாக இருக்கிறோம்; நல்ல உணவு உண்டாலும், பசியை உணர்கிறோம். இதுவே நமது ஆன்மீகம்!"

1944, நவம்பர் 10 அன்று, அனைத்து பெண் மண்டலி மற்றும் கிருஷ்ணா, விஷ்ணு, வெங்கோபா ராவ் ஆகியோரை ஔரங்காபாத்தில் விட்டுவிட்டு, ஆதி சீனியர், பைதூல், குஸ்தாஜி, ஜால்பாய் ஆகியோருடன், பாபா மன்மாட் புறப்பட்டுச் சென்றார். மன்மாட் ரயில் நிலையத்தில், பப்பா ஜெஸவாலா, பண்டோபா, டாக்டர் கனி, மானேக் மேத்தா மற்றும் குருத்வாடியில் (KURUDWADI) பள்ளி ஆசிரியராக பணிபுரிந்த 'சிந்தாமணி விஷ்ணு (பால்) நாத்து' (CHINTAMANI VISHNU - BAL - NATU) ஆகியோர், மும்பையிலிருந்து காக்கா ஏற்பாடு செய்திருந்த சிறப்பு பெட்டியில், பாபாவுடன் இணைந்து நாக்பூருக்குச் சென்றனர். மறுநாள் காலை பத்து மணிக்கு நாக்பூரை வந்தடைந்த வேளையில், ரயில் நடைமேடையில் ஒரு கூட்டம் ஆனந்த கோஷமிட்டு, பாராட்டுகளுடன் பாபாவை வரவேற்றது.

டாக்டர் தேஷ்முக், பங்க்ராஜ், நீதிபதி எம். பவானி ஷங்கர் நியோகி (JUSTICE M. BHAVANI SHANKAR NIYOGI) மற்றும் நீதிபதி டபிள்யூ.ஆர். புரானிக் - JUSTICE W.R. PURANIK (இருவரும் நாக்பூர் உயர் நீதிமன்றத்தின் முக்கிய நீதிபதிகள்), நூற்றுக்கணக்கானவர்களுடன் நாக்பூர் ரயில் நிலையத்தில் பாபாவை மலர் மாலைகள் சூழ வரவேற்றனர்.

பூக்களுடன், பாபா காரில் கே.கே.தாக்கூர் (K.K.THAKUR) என்ற வழக்கறிஞரின் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். டாக்டர் தேஷ்முக் 'தன்தோலி' (DHANTOLI) பகுதியில் அமைந்த இந்த பங்களாவில் பாபா மற்றும்

மண்டலிக்குத் தங்குமிடம் ஏற்பாடு செய்திருந்தார். அங்கிருந்து ஒரு ஃபர்லாங் தொலைவில் அமைந்த தேஷ்முக் இல்லத்தில், பாபாவின் உணவு தயார் செய்யப்பட இருந்தது. பால் நாத்துவிற்கு, (25 வயது) பாபாவை சந்திக்கும் முதல் வாய்ப்பு இது. அவர் ஓராண்டு காலமாக, பாபாவின் தரிசனத்திற்காகக் காத்திருந்தார். அவரது உடல் ஆரோக்கியம் காசநோயால் பாதிக்கப்பட்டபோதிலும், அவர் பாபாவின் அருகாமையில் இருக்கும் நோக்கத்தில் குருதுவாடியிலிருந்து நாக்பூருக்கு வந்தார். பால் நாத்துவின் அன்பு அவரை அழைத்து வந்து, அதற்குரிய வெகுமதியை அளிக்க இருந்தது.

பாபா பயணம் செய்த அதே ரயிலில் பால் நாத்து மன்மாடிலிருந்து பயணம் செய்திருந்தாலும், அவரது இருக்கை வேறொரு பெட்டியில் இருந்தது. நாக்பூர் ரயில் நிலைய மேடையில், பாபா எவ்வளவு அழகாகவும் அற்புதமாகவும் தோற்றமளிப்பதை, வைத்த கண் வாங்காமல், மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்த பால் நாத்துவின் பாக்கெட்டில் இருந்த பணப்பையை, திருடன் ஒருவன் திருடிச் சென்றான். பாபா அங்கிருந்து வெளியே சென்றதும் பால் நாத்துவிற்கு நினைவு வந்தது; பணப்பை பறிபோய்விட்டது; பயணச்சீட்டும் அந்தப் பையில்தான் இருந்தது. பயணச்சீட்டு பரிசோதகரைப் பார்த்த பால் நாத்து இப்போது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், அவர் தோளில் யாரோ ஒருவர் தட்டுவதை உணர்ந்த அவர் குழம்பிப்போனார். திரும்பிப் பார்த்தால் அங்கே பயணச்சீட்டு சோதகர். ஆனால் அந்த நபர் அவரது பழைய நண்பர் என்பதைக் கண்டுகொண்ட அவர் நிம்மதியடைந்தார்.

எனவே, பால் நாத்து முதல் முறையாக, பாபாவின் தரிசனத்தில், அவர் தன்னை மட்டுமல்ல தனது உடைமைகளையும் இழந்தார்! அவர் தனது நண்பருக்கு உண்மை நிலைமையை விளக்கிவிட்டு ரயில் நிலையத்தை விட்டு வெளியேறி, இதர அனைவருடன் தாக்கூரின் பங்களாவில் தங்கினார்.

டெல்லியைச் சேர்ந்த கேக்கி தேசாய், காஷ்மீரிலிருந்து தவ்லத் ஸிங், காடேக்கர் தம்பதிகள், கே.எம். மதன் மற்றும் மும்பை, நாசிக், அஹமதுநகரைச் சேர்ந்த இதர அன்பர்களும் அங்கு வந்து, தங்கள் அன்புக்குரியவருக்கு மனமார்ந்த வரவேற்பை அளித்தனர். நாக்பூரிலிருந்து திரள் திரளாக வந்த கூட்டம், பாபாவை வீட்டின் முன் வரவேற்கக் காத்திருந்தது. சற்று தூரத்திலிருந்து தரிசனம் வழங்கிய பின்பு, பாபா தனது அறையில் ஓய்வெடுக்கச் சென்றார். ஆனால் மக்களின் 'மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற ஆனந்த கோஷத்தை இடைவிடாமல் கேட்ட பாபா, திரும்பி வந்து வீட்டின் இரண்டாவது மாடியில் நின்று கையசைத்தார். அவர்களைத் திருப்தி படுத்துவதற்கு முன்னர் அவர் இதை மூன்று அல்லது நான்கு முறை செய்ய வேண்டியதாயிற்று; அதன் பின்னரே பயணக்களைப்பில் இருந்த பாபா, கை, கால் முகத்தைக் கழுவி ஓய்வெடுக்க முடிந்தது.

தாக்கூரின் வீட்டு மேல் மாடியில் ஆண்களும் பெண்களும் குழுக்களாக வரத் தொடங்கியதும், அங்கு, பாபா அவர்களை சந்தித்தார், தரிசனத்தை அனுமதித்தார், ஒவ்வொருவரிடமும் உரையாடினார். இது மாலை வரை நீடித்தது; பின்னர் அவர் மண்டலியுடன் தினேஷ் நந்தினி சோர்டியாவின் (DINESH NANDINI CHORDIA) இல்லத்திற்கு இரவு உணவிற்காகச் சென்றார்.

தினேஷ் ஒரு பெண் கவிஞர், இதற்கு முன்பு பாபாவை சந்தித்துள்ளார். அவர் ஒரு பெரிய செல்வந்தர், பாபாவை வரவேற்க மிகுந்த அக்கறையுடன் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பாபா நடந்து செல்லும் இடங்களெங்கும் - வீட்டுத் தரைகளிலும், படிக்கட்டுகளிலும் அழகான பட்டுப் புடவைகள் பரப்பப்பட்டிருந்தன.

**1944,** நவம்பர் **11,** சனிக்கிழமை இரவு, **9:30** மணிக்கு, தரிசனம் தொடங்கியது. கோராக்ஷன் (GORAKSHAN) மைதானத்தில், கிட்டத்தட்ட **30,000** மக்கள் கூடினர். பாபா ‘கடவுளும் மதமும்’ (GOD AND RELIGION) என்ற தலைப்பில் ஒரு செய்தியை வழங்கினார்; அதை நீதிபதி நியோகி வாசிக்க, டாக்டர் தேஷ்முக் மராட்டியிலும், மானேக் மேத்தா ஹிந்தியிலும் மொழிபெயர்த்தனர். அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

**உலகின் ஒழுங்கமைக்கப்பட்ட மதங்கள், பெரும்பாலும் அவை இருப்பதற்கான உத்வேகத்தின் ஊற்றாக இருந்தவர்களின் உண்மையான தொலைநோக்குப் பார்வை மற்றும் நோக்கத்தை வெளிப்படுத்தத் தவறிவிடுகின்றன. கோட்பாடுகள், நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள் இவை அனைத்தும் ஒருபோதும் உண்மையான ஆன்மீக வாழ்வின் சாரமாக இருக்க முடியாது. மதம் வெறுமனே வெளிப்புற பூஜை புனஸ்காரங்களின் நிகழ்வுகளாகத் திகழும்போது, அது ஆன்மாவின் கூண்டாக மாறிவிடுகிறது. ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுவதும், மாற்றுவதும் எந்த வகையிலும் உதவாது. இது ஒரு கூண்டிலிருந்து இன்னொரு கூண்டுக்கு செல்வது போன்றது. ஆன்மீக அடிமைத்தனத்திலிருந்து ஆன்மாவை விடுவித்து, கடவுளை உணர மதம் மனிதனுக்கு உதவவில்லை என்றால், அது எந்த மகத்தான நோக்கத்தையும் அடைய வழிவகுக்கவில்லை என்றுதான் அர்த்தம். கடவுளுக்கு இடமளிக்க மதம் மறைய வேண்டிய நேரம் இது!**

**எனவே, ஒரு புதிய மதத்தை நிறுவுவதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை. உலகம் ஏற்கனவே கொள்கை, கோட்பாடுகள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் எண்ணற்ற பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளது. நான் மனிதனுக்காக இன்னொரு கூண்டைக் கொடுக்க வரவில்லை, ஆனால் உலகுக்கு அளவிறுதியற்ற உண்மையை அளிக்க வந்துள்ளேன். விழிப்படைய செய்வது ஒன்றே உலகின் இன்றியமையா தேவை; வாய்மொழியும் அறிவுறுத்தல்களும் அல்ல; அதற்கு இறை வாழ்வின் சுதந்திரமும், வளமையும் தேவை; இயந்திரத்தனமான ஆடம்பர**

**வெளித்தோற்றங்களின் மேலோட்டமான தன்மை அல்ல; அதற்கு அன்பு தேவை, அதிகாரத்தின் காட்சியும், காழ்ப்புணர்ச்சியும் அல்ல.**

**நான் செய்யவேண்டிய உலகப் பணி, குறிப்பாக ஆக்கப்பூர்வமானது. உண்மையாகச் சொன்னால், உங்களில் எவரும் என்னிடமிருந்து தெய்வீகத்தை அடைய வேண்டியதில்லை; ஆனால் நான் கொடுக்க வேண்டியது என்னவெனில் நம் அனைவரின் 'ஒருமை', 'ஒற்றுமை' பற்றிய அறிவும் அனுபவமும் மட்டுமே.**

**அகங்கார வாழ்வின் கவர்ச்சிகளிலிருந்து மனிதன் விலக்கப்படவேண்டும். அவன் தனது சொந்த தெய்வீகத்தை முழுப் பாரம்பரிய முறையில் அடையப்பெறுவான், மேலும் அவன் தன்னைத்தானே மூலமுதலான கடவுளைத் தவிர வேறு யாருமல்ல என்பதை அறிந்துகொள்வான்; மேலும், ஆற்றல்மிக்க தெய்வீக அன்பை வியாபிக்கச் செய்யும் விதத்தில் அவனது இதயம் திறந்து வழிவிடும். தெய்வீக அன்புக்கு எந்தவிதமான அழிவு, அச்சம் அல்லது ஊழல் என்பதும் தெரியாது, ஏனெனில் அது எல்லா உயிர்களும் ஒன்று என்ற தெளிவான புரிதலால் ஒளிரும். உண்மையான அந்தஸ்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பவர்கள் என்னுடைய இந்த அழைப்பைக் கேட்கட்டும்; சத்தியம் மற்றும் அன்பின் புதிய சகாப்தத்தைக் கொண்டு வருவதில் அவர்களுக்கு போதுமான பங்கு இருக்கும்.**

மெஹர் பாபா மைதானத்திற்கு வந்தபோது, அவரை நாக்பூர் நகரின் பெரிய துறவியான துக்டோஜி மஹாராஜ் (TUKDOJI MAHARAJ), 'ஸ்ரீ சத்குரு மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற ஆனந்த கோஷங்களுக்கு மத்தியில் வரவேற்று, மேடைக்கு அழைத்து வந்தார். துக்டோஜி மஹாராஜ் பஜனைகள் பாடி, பாபாவின் அன்பின் போதையில் இருந்தார்!

நள்ளிரவு இரண்டரை மணி வரை தரிசன நிகழ்ச்சி தொடர்ந்தது, மக்கள் மெஹர் பாபாவின் அற்புதமான ஆளுமையால் கவரப்பட்டனர். அவருடைய ஒளியின் கடலில் மூழ்கியது போல் அனைவரும் உணர்ந்தனர்! வைத்த கண் வாங்காமல் அவரைப் பார்த்தது, அனைவரையும் மெய்மறக்கச் செய்தது.

காலம் இதை இப்படி விவரித்தது: "வானில் நிலா வெட்கத்தில் முகத்தை இரவின் முந்தானைக்குள் மறைத்தது. ஆனால் முழு மைதானமும் அன்பிற்குரியவரின் கீதத்தால் ஒளிர்ந்து, 30,000 இதயங்கள் அந்த குளிர்ச்சியான, ஆனந்தத்தை ஊக்குவிக்கும் இசைக்கருவியின் இனிமையான மெல்லிசையின் எதிரொலிகளைக் கேட்டு ரசித்தன.

நள்ளிரவில், துக்டோஜி மஹாராஜ் அவரது பாடலை நிறுத்தி, பாபா கூட்டத்தை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக் கொண்டார். பிரபஞ்சத்தின் இறைவன், அவரது முழு மகிமையில், எழுந்து நின்று கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தபோது, அவரது தலைமுடி தோள்களில் விழுந்து, முகம் பிரகாசித்தது; முழுமையான அமைதி எங்கும் வியாபித்தது.

அன்புக்குரியவர் அனைவரையும் கவர்ந்திழுக்கும் அளவிற்கு என்ன ஓர் அழகைக் கொண்டிருந்தார்! கூட்டத்திலிருந்த மக்கள் சிறிது நேரம் அனைத்தையும் மறந்து, அவரது உயிர்துடிப்பும், ஊக்கமும், உற்சாகமும் உடைய அற்புதமான அம்சங்களைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் தத்தளித்தனர். நிரம்பி வழியும் மக்கள் கூட்டத்தை ஆசீர்வதித்த வேளையில் அமைதியின் ஆழத்திலிருந்து 'ஸ்ரீ சத்குரு மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற குரல் முழக்கம், கூட்டத்தை அதிர வைத்தது. மக்கள் மேடையை நோக்கி ஓடத் தொடங்கியதும் துக்டோஜி மஹாராஜ், பாபாவைத் தோளில் சுமந்து, காரை நோக்கிச் சென்றார். பாபா புறப்பட்டுச் சென்ற பின்னரும் கூட்டத்தின் ஆரவாரம் ஒலித்துக்கொண்டே இருந்தது.

1944 நவம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை அன்று, தாக்கூரின் குடியிருப்பு முன்பு பாபாவின் தரிசனத்திற்காக ஒரு பெரிய கூட்டம் கூடி அவரை அழைத்தது. பாபா வெளியே வந்து சிறிது நேரம் தரிசனம் வழங்கினார். பின்பு, நாக்பூரின் செல்வந்தரான போஹ்ரா (BOHRA - முஸ்லீம்) தொழிலதிபர் கான் பகதூர் எம்.எஃப்.ஆர். மலக்கின் (KHAN BAHADUR M.F.R. MALAK) அழைப்பை ஏற்று, பாபா நகரத்தின் இதர முக்கியஸ்தர்கள் கூடியிருந்த இடத்திற்குச் சென்றார்.

சிறிது நேரம் அங்கேயே இருந்த பாபா, மாலை ஐந்து மணிக்கு ராமகிருஷ்ணா ஆசிரமத்தைப் பார்வையிடச் சென்றார், அங்கு சுவாமி பாஸ்கரேஷ்வர் ஆனந்தா (BHASKARESHWAR ANANDA) அவரை அன்புடன் வரவேற்றார். '**ஒரே உண்மைப்பொருளான இறைவன்**' (GOD AS THE ONLY REALITY) என்ற பாபாவின் செய்தியை நீதிபதி புரானிக் வாசிக்க, டாக்டர் தேஷ்முக் மராட்டியிலும், மானேக் மேத்தா ஹிந்தியிலும் மொழிபெயர்த்தனர். அதன் ஒரு பகுதி கீழ் வருமாறு:

**இறை-உணர்வு என்பது சில நேரங்களில் தவறாக வரையறுக்கப்பட்ட தனிநபரின் சுயநல நோக்கமாகக் கருதப்படுகிறது. இறை உணர்வில் எந்த சுயநலத்திற்கும் அல்லது வரையறுக்கப்பட்ட தனித்துவத்திற்கும் இடமில்லை. மாறாக, இறை உணர்வு என்பது 'நான்' எனும் தனி மனித அகந்தையின் வரையறுக்கப்பட்ட மற்றும் குறுகிய வாழ்க்கையின் இறுதி நோக்கமாகும். இறை உணர்வை அடைந்த குருநாதரின் வாழ்க்கை, அனைத்து மனித குலத்திற்கும் ஒரு கள்ளங்கபடமில்லா, தூய ஆசீர்வாதம்.**

சுவாமி, ஆசிரமத்தின் அனைத்து உள்வாசிகளையும் பாபாவின் முன்னிலையில் அறிமுகப்படுத்தினார்; பாபா அவர்களை '**கொல்கத்தாவின் சத்குரு ராமகிருஷ்ணாவின் போதனைகளின்படி வாழ்க்கையை வாழ**' அறிவுறுத்தினார்; மெஹர் பாபா, ராமகிருஷ்ணாவை '**அவதார காலத்தின் அதிகாரபூர்வமான இறை தூதர்**' என்று குறிப்பிட்டார்.

அதே மாலை 7:30 மணியளவில், தேஷ்முக் 'தன்தோலி'யில் அமைந்த 'தேசிய கல்லூரி' மண்டபத்தில் (NATIONAL COLLEGE HALL IN DHANDOLI) குருநாதரைப்

புகழ்ந்து கீர்த்தன் பாராயணத்தை வழங்கினார், அதில் பாபா, மண்டலியுடன் கலந்து கொண்டார். மண்டபம் நிரம்பி வழிந்தது. ஒரு வழக்கறிஞர், ஏ.வி.கரே (A.V. KHARE) என்பவர், 'கடவுளும் அன்பும்' (GOD AND LOVE) என்ற தலைப்பிலான பாபாவின் செய்தியை வாசித்தார்:

**ஆன்மீகப் பாதை என்பது குன்றுகள், முட்கள் நிறைந்த மரங்கள் மற்றும் செங்குத்தான, அபாயகரமான பள்ளத்தாக்குகள் வழியாகப் பயணித்து, மலை உச்சியை எட்டுவது போன்றது. பாதுகாப்பான மற்றும் உறுதியான பயணத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று என்று இருந்தால் அது 'அன்பு' மட்டுமே. மயிரிழையும் பிழையாத அந்த அன்பு மொழியின் வழிகாட்டுதலை உண்மையாகப் பின்பற்றினால், இறைநிலை எனும் உச்சத்தை அடைய விரும்பும் ஆர்வலர்களுக்கு அவசியமான இதர அனைத்து குணங்களும் அவர்களிடம் வந்து சேரும் என்பது உறுதி.**

**இந்த வழிகாட்டுதலின் கவசத்தை நீங்கள் இழக்க நேர்ந்தால், விரக்தி மட்டுமே அதன் விளைவாகக் காத்திருக்கும். தெய்வீக அன்பின் அமைதியற்ற நெருப்பில் 'நான்' எனும் தனி மனித வாழ்வை இழக்க தைரியம் இல்லாத ஒவ்வொருவருக்கும், கடவுளோடு ஐக்கியமாகும் உயர் நிலையின் நுழைவாயில் உறுதியாக மூடப்படும்!**

டாக்டர் தேஷ்முக் பாபாவின் முன்னிலையில் இதைக் கேட்டு மிகப்பெருமளவில் உணர்ச்சிவசப்பட்டு இவ்வாறு அறிவித்தார், "பாருங்கள்! அவதார புருஷர் இங்கு வந்திருப்பதைப் பாருங்கள்! பரிபூரணமான அவதார புருஷர்! தெய்வீக உருவின் பாரம்பரிய வருகைக்காக, உலகம் காலமெல்லாம் காத்திருக்கும் அதே இறை மனிதர்!"

அடுத்த நாள் பாபாவிற்கு ஓய்வு நாளாகக் கருதப்பட்டாலும், மக்கள் தன்தோலியில் அவர் இருந்த இல்லத்திற்கு வந்து, சில தருணங்கள் பாபாவின் சகவாசத்தைப் பெறும் வரை அந்த இடத்தை விட்டு விலகவில்லை. பாபா, கனிவோடு அவர்களுக்கு தரிசனத்தை அனுமதித்து, சிறிது நேரம் உரையாடினார். அன்று பிற்பகல் மூன்று மணியளவில், பாபாவின் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த 'மெஹர் பாபா வரவேற்புக் குழு'வின் உறுப்பினர்கள் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர், மேலும் அவர் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருடன் ஒரு கவாலி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தத் தருணத்தில் 'தெய்வீகத்தின் இரண்டு அம்சங்கள்' (TWO ASPECTS OF DIVINITY) பற்றிய பாபாவின் செய்தி, டாக்டர் கனியால் வழங்கப்பட்டது, அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

**இருள் சூழ்ந்த மேகங்களும், வருந்த வைக்கும் வலி, விரக்தி, வேதனை எதுவாக இருந்தாலும், மனிதகுலம் அனுபவிக்க வேண்டிய மகிழ்ச்சி, நம்பிக்கை இரண்டையும் உள்ளடக்கும் ஆன்மீக உண்மை, அதன் பார்வையிலிருந்து விலகிவிடக்கூடாது; அதை நான் இன்று உங்களுக்கு இங்குத் தெரிவிக்கப் போகிறேன்.**

உலக விவகாரங்களில், எப்போதும், தெய்வீகத்தின் இரண்டு அம்சங்கள் நிரந்தரமாக, நித்தியமாகச் செயல்படுகின்றன: ஒன்று - தெய்வீகத்தின் 'அழிவை விளைவிக்கும்' அம்சம், இது, பாரசீக மொழியில் 'ஷாமா-இ-ஜலால்' (SHAMA-E-JALAL) இதன் பொருள் 'இறை-மகிமை' என்பதாகும்; இரண்டு - தெய்வீகத்தின் 'ஆக்கபூர்வமான' அம்சம், இது, பாரசீக மொழியில் 'ஷாமா-இ-ஜமால்' (SHAMA-E-JAMAL) அதாவது 'இறை-இன்பம்' எனப் பொருள்படும். கடவுளின் 'இறை-மகிமை' எனப்படும் இந்த அம்சம், வெளிப்படையாகச் செயல்படும்போது, மிகப்பெரிய அளவில் துன்பத்தையும் அழிவையும் உருவாக்கும். 'இறை-இன்பம்' எனும் அம்சம், அது தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்போது, அமைதியையும், வளமையையும் விளைவிக்கும்.

'இறை-மகிமை' எனும் அம்சத்தில், தெய்வீகம் அதன் சுய படைப்பின் மூலம் தன்னைத் துரத்துகிறது அல்லது வெறுக்கிறது; மற்றும் 'இறை-இன்பம்' எனும் அம்சத்தில், தெய்வீகம் அதன் சுய படைப்பின் மூலம் தன்னை ஈர்க்கிறது அல்லது நேசிக்கிறது. முதல் அம்சம் எதிர்மறை முறை, அடுத்தது நேர்மறை முறை. மேலும் இந்த இரண்டு முறைகளும் தெய்வீக ஞானத்தின் கருவிகளாக இயங்கி, தெய்வீக பாரம்பரியத்திற்கு மனிதகுலத்தை எழுச்சியுறச் செய்து, இறை உணர்வை வழங்கும்.

மேலும், இங்குக் குறிப்பிடப்பட்ட தெய்வீகத்தின் இரண்டு அம்சங்களும், தனித்தனியாகவும் இணைந்தும் மனிதகுலத்தை பாதிப்பது மட்டுமல்லாமல், அவற்றின் தாக்கமும் சக்தியும் நேரடியாக, ஒன்றை மற்றொன்று சார்ந்துள்ள விகிதத்தில் இருப்பதோடு, அவை, காலச்சுழற்சியின் அலைகளில் தங்களை நிலைநிறுத்துகின்றன. இப்போது அழிவுகரமான கட்டம் வலுவிழக்கும் தருவாயில், தெய்வீக குணத்தின் அம்சம் கிட்டத்தட்ட நடைமுறைக்கு வர உள்ளது; மேலும் வரவிருக்கும் இந்த ஆசீர்வாதத்தைப் பயன்படுத்த மனிதகுலத்திற்கு அழைப்பு விடுப்பதே வாழ்க்கையில் எனது தெய்வீக நோக்கம்.

தற்போதைய உலகப் பேரழிவில், குற்றவாளிகளும் நிரபராதிகளும், போராளிகளும் பொதுமக்களும், உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர், அதேபோல, விரைவில் வெளிப்படும் இறை-இன்பம் எனும் அம்சத்தில், தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் தகுதியற்றவர்களுக்கும், அவர்கள் தற்போதைய சூழ்நிலைகளைப் பற்றிய பரந்த விழிப்புணர்வுடன் இருந்தால், தெய்வீக அருளைப் பெறும் நல் வாய்ப்பை நல்கும்; இது, காலச்சுழற்சியில், மிகவும் அரிதான மற்றும் தனித்துவமான நிகழ்வாகும்.

எனது செய்தியைக் கேட்ட மற்றும் கேட்காத அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

தேஷ்முக்கின் ஒன்பது வயது மகள் சஞ்ஜீவனி, பின்னர் ஒரு நடன நிகழ்ச்சியை வழங்கினார். முழு தேஷ்முக் குடும்பமும் பாபாவின் அரவணைப்பில் இருந்ததோடு டாக்டர் தேஷ்முக் மெஹர் பாபாவின் 'சார்புக்குரலாக' (MOUTHPIECE) மாறினார்! சி.டி. தேஷ்முக் பொது நிகழ்ச்சிகளில் சொற்பொழிவுகள் வழங்குவதோடு, செய்தி இதழ்கள் மற்றும் செய்தித்தாள்களில் விரிவான கட்டுரைகள் மூலம் இந்தியா முழுவதும் பாபாவின் செய்தியைப் பரப்புவதில் மேற்கொள்ளாத முயற்சியே இல்லை.

மாலையில் மெஹர் பாபா, ராம்தாஸ் செளராசியாவின் (RAMDAS CHAURASIA) இல்லத்திற்கு விஜயம் செய்த வேளையில் அவருடைய இரண்டு குழந்தைகளை (மகன்கள் ஷங்கர்லால் - SHANKARLAL மற்றும் கணேஷ்லால் - GANESHLAL) பாபா அவரது கைகளில் ஏந்தி, மடியில் வைத்து, மீண்டும் மீண்டும் முத்தமிட்டார். பாபாவின் ஆரத்தியைப் பாடியதும் அவர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார்.

வீட்டை விட்டு வெளியே வந்த பாபா சாலையில் நின்றுகொண்டு பேருந்துக்குள் நுழையாமல் அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினார்.

பாபா அவ்வாறு நடந்துகொண்டதன் காரணம் பின்னரே தெரிய வந்தது; கூட்டத்தில் பாபாதாஸ் இல்லாததால் அவரை அழைத்து வர, பாபா பேருந்தை அனுப்பினார். அதன் பின்பு பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, அந்த இடத்தில் கூடிய உள்ளூர் மில் தொழிலாளர்களுக்கு தரிசனம் கொடுக்கத் தொடங்கினார். பாபாதாஸ் வந்த பின்னர், அனைவரும் பல் மருத்துவர் டாக்டர் சோபே (DR. CHOBE) இல்லத்தில் நடந்த ஒரு சிறிய நிகழ்ச்சியில் பங்கெடுத்து, தன்தோலிக்குத் திரும்பி வந்தனர்.

**1944**, நவம்பர் **14** அன்று, நாக்பூர் 'தியோஸொஃபிகல் ஸொஸைட்டி'யில் (THEOSOPHICAL SOCIETY) தரிசன நிகழ்ச்சிக்காக, பாபா காலை பத்து மணிக்குப் புறப்பட்டுச் சென்றார். அந்த அமைப்பின் செயலாளர் 'அன்பின் ஆற்றல்' (DYNAMICS OF LOVE) என்ற தலைப்பில் பாபாவின் உரையை வாசித்தார். அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

**உண்மையான அன்பு என்பது, விரைவில் மறைந்துபோகும் உற்சாகமான உணர்ச்சியின் வெளிப்பாட்டிலிருந்து அல்லது தூங்கும் இதயத்தின் உற்சாகமூட்டும் மயக்கநிலையிலிருந்து மிகவும் வித்தியாசமானது. சுயநல ஏக்கங்களால் கருமையாகி அல்லது நிலையற்ற பொருட்களின் கவர்ச்சிகள் மற்றும் தூண்டுதல்களைத் தொடர்ந்து நம்புவதால், உணர்வுபூர்வமாக பலவீனமடைந்த இதயத்தில் இந்த அன்பு ஒருபோதும் வர முடியாது. ஆனால் தூய்மையும் எளிமையுமான உள்ளம் படைத்தவர்களுக்கு, உண்மையான அன்பு ஒரு குருநாதரின் செயல்திறன்மிக்க கருணையால் பரிசாக வருகிறது.**

**ஒரு சத்குருவிடம் தம்மை ஒப்படைக்க, தைரியமும் ஞானமும் உள்ளவர்கள் அவருடைய அருளை அடையப் பெறுவார்கள். அவ்வாறு வரும்வேளையில், அது மனித இதயத்தில் இறை அன்பைத் தூண்டி, ஆர்வலர்களைக் கடவுளுடன் ஒன்றிணையச் செய்கிறது.**

**அன்பை விட பெரிய சக்தி எதுவும் இல்லை!**

பிற்பகல் மூன்று மணி முதல் ஐந்து வரை, பாபா தாக்கூரின் இல்லத்தில் நேரடி பேட்டிகளை வழங்கினார். மாலை 7:30 மணிக்கு, நாக்பூர் பல்கலைக்கழகத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாபெரும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. மண்டபம் நிறைந்து வழிந்ததால், சிலர் வெளியே நிற்க வேண்டியிருந்தது. நீதிபதி புரானிக் மற்றும் நீதிபதி நியோகி, பாபாவிற்கு மாலை அணிவித்து வரவேற்றனர். ஒரு சில மாணவிகள் வரவேற்பு பாடலைப் பாடினர். பாபா மீது மிகுந்த பற்றும் மரியாதையும் கொண்டிருந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நீதிபதி புரானிக், “மனிதகுலம் இறை உணர்வை அடையச்செய்வதே மெஹர் பாபாவின் பணி, அவர் இங்கு வருகை தந்தது நாக்பூர் பல்கலைக்கழகத்தின் பேரதிர்ஷ்டம்” என்றார்.

நீதிபதி நியோகி மெஹர் பாபாவின் ஆன்மீக அந்தஸ்து மற்றும் அவரது பணி குறித்துப் பேசினார், பின்னர், ‘அனைத்து உயிர்களின் ஒருமைப்பாடு’ (THE UNITY OF ALL LIFE) என்ற பாபாவின் செய்தியைக் கூட்டத்தில் வாசித்தார். அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

**பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத இறை-வாழ்க்கை எனும் கடலில், நீங்கள் அறியாமையின் மூலம், பாலினம், இனம், தேசியம், மதம், சமூகம் ஆகியவற்றின் அடிப்படையிலான அழிவை விளைவிக்கும் பிளவுகளை உருவாக்கியுள்ளீர்கள். மேலும் இந்தச் சுய-பிரிவினைகள் உங்கள் இதயத்தை விஷமாக்கவும் உங்கள் உறவுகளைத் தடுக்கவும் நீங்கள் அனுமதிக்கிறீர்கள். நிதானமாக ஆனால் நிச்சயமாக, நீங்கள் இந்த உண்மையை, இறை ஞானியின் காலடியில் சரணடைந்து உள்ளீர்த்துக்கொள்ள வேண்டும்.**

**நிதானமாக, ஆனால் நிச்சயமாக, நீங்கள் பாரபட்சங்களை உதறித் தள்ளிவிட்டு மேலோட்டமான வேறுபாடுகளிலிருந்தும் விலகிச் செல்லவேண்டும். நிதானமாக, ஆனால் நிச்சயமாக, நீங்கள் உருவமற்ற மற்றும் பெயரற்ற ஏக இறைவனின் பாதையில் செல்ல வேண்டும்.**

**பெயரற்ற ஏக இறைவனை உங்கள் இதய (மனதின்) அரியணையில் அமர்த்தும்போது, நீங்கள் இரட்டைத்தன்மையின் வேடிக்கை விளையாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தேவையில்லை. படைப்பு எனும் நாடக மேடையில் நீங்கள் இருமைத்தன்மையில் சிக்கிக்கொள்ளாமல் உங்கள் நாடக பாத்திரத்தை வகிக்க வேண்டும். வாழ்க்கையின் மாறுபட்ட அனுபவங்களுக்கு மத்தியில், அதே வாழ்க்கையின் ஒருமைப்பாட்டுத் தன்மையை அனுபவித்து வெளிப்படுத்த**

**வேண்டும். எல்லா உயிர்களும் ஒன்றே, எல்லா பிரிவுகளும் வெறும் கற்பனையே.**

**நான் கொண்டுவரும் இந்த நித்திய சத்தியத்தில் நீங்கள் உங்களை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்!**

இந்த உரையின் மராட்டி தொகுப்பை நீதிபதி புரானிக் மற்றும் ஹிந்தி தொகுப்பை மானேக் மேத்தாவும் வாசித்தனர். மானேக், பார்சி வம்சத்தைச் சார்ந்தவர் ஆகையால் ஹிந்தி சரளமாகத் தெரியாது, ஆனால் அவர் அதை வாசிக்க விரும்பினார். அவர் நடந்து கொள்ளும் விதம், அவரது தோற்றம் (நீண்ட தலைமுடியுடன் வெள்ளை உடையணிந்து இருந்தார்) விசித்திரமாக இருந்தது, மேலும் அவரது உச்சரிப்பு அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது. கூட்டத்தில் மக்கள் சிரிப்பதைப் பார்த்து, அவர் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்: "அமைதி, அமைதி."

மாணவர்கள் சிரித்து, கூச்சலிட்டு "அமருங்கள்.." என்றனர்.

பாபாவும் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் அமைதியாக இருக்கும்படி சைகையால் தெரிவித்தார். மாணவர்களும் கீழ்ப்படிந்தனர், மானேக் எப்படியோ தட்டுத் தடுமாறி உரையை முடிக்க முடிந்தது. பாபா சிரிப்பதைப் பார்த்து, மாணவர்கள், அவரும் தங்கள் நிலைக்கு இறங்கி வந்திருப்பதை உணர்ந்து மகிழ்ச்சியடைந்தனர்.

அதைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி தொடங்கிய போது, பாபா, கை சைகைகள் வழியாக பங்க்ராஜுக்குத் தெரிவித்த போது அவரும் அதே வழியில் பதிலளித்தார். பாபா நாக்பூரில் இருந்த வேளையில், பங்க்ராஜ், விஷ்ணுவின் தொலைத்தந்திகளை எடுத்துவர ஒவ்வொரு நாளும் தேஷ்முக் இல்லத்திற்குச் சென்று வருவது வழக்கம். பாபா, தரிசனங்கள் அல்லது மஸ்த் பணிக்காகப் பயணம் செல்லும் போதெல்லாம், விஷ்ணு, ஔரங்காபாத்தில் வாழும் பெண்மணிகளின் உடல்நிலை குறித்து ஒவ்வொரு நாளும் ஒரு தொலைத்தந்தி அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டார். நாக்பூரில், தேஷ்முக் இல்லத்து முகவரியில் தபால்கள் பெறப்பட்டன.

எதிர்பார்த்தது போல மூன்று நாட்கள் தொலைத்தந்தி வந்தது, ஆனால் நான்காவது நாளில், பங்க்ராஜ் அலுவலகத்தில் தொலைத்தந்தி எதுவும் வரவில்லை என்பதைக் கண்டறிந்தார். பாபா, பங்க்ராஜிடம் காரணத்தைக் கேட்டபோது, "நான் விசாரித்தேன், ஆனால் ஔரங்காபாத்திலிருந்து எந்தத் தொலைத்தந்தியும் வரவில்லை" என்று பதிலளித்தார்.

பாபா உடனே, "**விஷ்ணு, தொலைத்தந்தி அனுப்பத் தவறுவதில்லை**" என்றார்.

"இது போர்காலம், இராணுவ தொடர்புகளுக்கு எப்போதுமே தனி நபரைப் காட்டிலும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒருவேளை அதனால்தான் இன்று நாம் எதையும் பெறவில்லை" என்று பங்க்ராஜ் கருத்துத் தெரிவித்தார்.

பாபா அவரைத் தொலைத்தந்தி அலுவலகத்திற்கு மறுபடியும் சென்று விசாரிக்கும்படி அறிவுறுத்தினார். **"எங்காவது ஏதேனும் தவறு**

**நிகழ்ந்திருக்கலாம்**" என்று பாபா முடித்தார். பங்க்ராஜ் அலுவலகம் சென்றும், மர்மத்தைக் கண்டுபிடிக்கும் அளவிற்கு அவரால் நெருங்க முடியவில்லை.

பல்கலைக்கழகத்தில் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது, பங்க்ராஜ் தொலைத்தந்தி அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தார். இசை நிகழ்ச்சிக்கு நடுவில், '**தந்தி வந்ததா?**' என்று பாபா சைகையால் கேட்க, பங்க்ராஜ் 'இல்லை' எனத் தலையசைத்தார்

பல்கலைக்கழகத்தில் பொது நிகழ்ச்சி, வெளியளவில் மிகப்பெரிய வெற்றியாகத் தோன்றியது; பின்பு பாபா, தன்தோலிக்குத் திரும்பிச் சென்றார். தேஷ்முக்கின் இல்லத்தில் இரவு உணவை முடித்து, பாபா, பங்க்ராஜிடம், "**நான் நாளை காலை அனைவருடனும் ஸாவ்னேருக்குச் செல்கிறேன். நீங்கள் எங்களுடன் வர வேண்டாம்; விஷ்ணுவின் தொலைத்தந்தி வருவதுவரைக் காத்திருங்கள், பின்பு பேருந்தில் வாருங்கள்**" என்று கூறினார்.

இது பங்க்ராஜை சிந்திக்கத் தூண்டியது: "தொலைத்தந்தியில் என்ன முக்கியமான விஷயம் இருக்கப் போகிறது? ஒவ்வொரு நாளும் 'எல்லாம் சரியாக உள்ளது' என்ற ஒரே மாதிரியான தகவல்தான்; பாபாவிற்குத் தினசரி பல தந்திகள் வருகின்றன; அவர் ஏன் அவற்றிற்கு பதிலளிப்பதில்லை? அவருடைய மண்டலி என்ன அந்த அளவிற்கு உயர்ந்தவர்களா? அவர் ஏன் இவ்வளவு கவலையடைகிறார்? அவர் ஏற்கனவே எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும்; அப்படியானால் அவர் ஒரு சாதாரண தொலைத்தந்திக்காக ஏன் இவ்வளவு அமைதியற்றவராக இருக்க வேண்டும்?"

சாஞ்சியின் மறைவிற்குப் பிறகு, பங்க்ராஜ் அவரை, பாபாவின் தனிப்பட்ட செயலாளராக நியமிக்கும்படி கடிதம் எழுதியிருந்தார், ஒருவேளை இது அவருடைய செயலாளர் பதவிக்கு ஒரு சோதனையாக இருக்கலாம். பின்னர், இரவு ஒன்பது மணிக்கு, பாபா மீண்டும் பங்க்ராஜை அழைத்து, கவலை தோய்ந்த முகத்துடன், "**ஔரங்காபாத்தில் நிச்சயமாக ஏதோ தவறு நிகழ்ந்துள்ளது**" எனக் குறிப்பிட்டார்.

கலக்கத்தில் பங்க்ராஜ் உளறினார், "என்னால் இயன்ற அனைத்தையும் செய்துவிட்டேன்! இனி என்னால் எதுவும் செய்ய முடியாது, பாபா."

பாபா வேதனையுடன் ஆதி சீனியரை நோக்கி, "**சாஞ்சி உயிருடன் இருந்திருந்தால், அவர் என்ன பதிலளித்திருப்பார்?**" என்று வினவ,

ஆதி உடனடியாக பதிலளித்தார், "நிச்சயமாக, பங்க்ராஜைப் போல் அல்ல! சாஞ்சி சொல்லியிருப்பார்: 'நான் மீண்டும் முயற்சிக்கிறேன், பாபா' என்று."

தனது அருகிலிருந்த பங்க்ராஜை அழைத்து, பாபா அவரது காதைத் திருகி, "**நீங்கள் சாஞ்சியின் பாதணிகளுக்குப் பொருத்தமற்றவர் என்பதை இப்போது உணர்ந்தீர்களா?**" என்று கேட்டார்.

பங்க்ராஜ் தனது நயமற்ற நடத்தையை எண்ணி வருந்தினார், ஆனால் அதே நேரத்தில் பாபா, அவரது காதைத் திருகியதில் மகிழ்ச்சி அடைந்தார், ஏனெனில் அவர் தனக்கு மிகவும் நெருக்கமானவர்களுடன் மட்டுமே இதைச்

செய்ய முடியும். இருப்பினும், அன்று இரவு அவர் மனம் மீண்டும் அமைதியற்ற நிலையில், என்ன நடந்தது என்று சிந்தித்துக் கொண்டிருந்தது.

நள்ளிரவில், காக்கா, பங்க்ராஜை எழுப்பி, பாபா அவரைப் பார்க்க விரும்புவதாகக் கூறினார். சற்று பயத்துடன், அவர் பாபாவின் அறைக்குள் நுழைந்தபோது, அவரை மகிழ்ச்சியான மனநிலையில் கண்டார். பாபா அவரிடம் கூறினார், **"யாரோ ஒருவர் காக்காவிடம், குளியலறைக்குச் செல்லும் வழியில் தொலைத்தந்தியைக் கொடுக்க, அவரும் அதை மேசை டிராயரில் வைத்து, பின்னர் அதை மறந்துவிட்டார். சிறிது நேரத்திற்கு முன்னர் அவர் டிராயரைத் திறந்தபோது தொலைத்தந்தி இருப்பதைக் கண்டார். இப்போது போய் நன்றாக ஓய்வெடுங்கள். நாளை மண்டலியுடன் ஸாவ்னேருக்கு வாருங்கள்; வேறு எதைப் பற்றியும் சிந்திக்க வேண்டாம்."**

பங்க்ராஜ் அன்பு நிறைந்த இதயத்துடன் அறையை விட்டு வெளியேறினார். இந்தச் சிறிய சம்பவம் அவருக்கு வாழ்நாள் முழுவதும் ஒரு பாடத்தைக் கற்பித்தது.

1944, நவம்பர் 15, புதன்கிழமை, பங்க்ராஜ், தேஷ்முக் குடும்பத்தினர் மற்றும் பிற நாக்பூர் அன்பர்கள் உட்பட முழுக் குழுவும் 'அங்கேவாடா'விற்கு (ANGEWADA) கார் மற்றும் பேருந்தில் புறப்பட்டது. 21 மைல் தொலைவில் இருந்த அங்கேவாடா கிராமத்தின் கடைசி இரண்டு மைல் தூரத்திற்குச் சாலை அமைக்கப்படாததால், அதன் மீது கார், பேருந்து எதுவும் பயணிக்க முடியவில்லை. விபூதி அங்கேவாடாவில் 'மெஹர் ஆன்மீக மையம்' (MEHER SPIRITUAL CENTER) ஒன்றை நதிக்கரையின் அருகே நிறுவியிருந்தார், அங்கு, அண்டை கிராமங்களிலிருந்து மக்கள் பிரார்த்தனை செய்து, பஜனைகள் பாடி, மெஹர் பாபாவைப் பற்றிய பேச்சுக்களைக் கேட்க வருவது வழக்கமாக நடந்து வந்தது.

முழு கிராமமும் பாபாவை எதிர்நோக்கி நதிக்கரையில் காத்திருந்தது. அவர்கள் அதிகாலையில் எழுந்து, சிறந்த ஆடைகளை அணிந்து தயாராகி, தங்கள் காளை வண்டிகளைப் பிரகாசமான வண்ணங்களால் அலங்கரித்து, காளைகளின் கழுத்தில் மணிகளைத் தொங்கவிட்டனர். பாபா ஒரு காளை வண்டியில் ஆற்றைக் கடக்கும்படி அவர்கள் வேண்டியபோது, அதற்கு ஒப்புக்கொண்டார். பாபாவைத் தங்கள் கிராமத்திற்கு அழைத்துச் செல்லும் வழியில் கிராம மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து நடனமாடினர். முழுக் காட்சியும் கண்ணுக்கினிய வண்ணங்களுடன் மிகவும் அழகாக இருந்தது, அது கிருஷ்ணர் தனது கோபால, கோபிகைகளுடன் யமுனா நதியைக் கடந்து வந்த நாட்களை நினைவுபடுத்தியது!

மெஹர் பாபா நேரடியாக, புதிதாக நிறுவப்பட்ட மையத்திற்குச் சென்றார், அங்கு விபூதி, பாபாவின் ஆரத்தியை நிகழ்த்திய பின்பு பாபாவின் சித்திரம் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது. பிரசாதத்தை விநியோகித்த பிறகு,

பாபா இரண்டு மைல் தொலைவில் அமைந்த ஸாவ்னேருக்குப் புறப்பட்டார்; காரில் சௌராஸியாவின் இரண்டு சிறுவர்களையும் அழைத்துச் சென்றார்.

பாபா ஸாவ்னேரை பத்து மணிக்குச் சென்றடைந்த வேளையில், அங்கு மீண்டும் ஊர் முழுவதும் அவரது தரிசனத்தை நாடி வந்தது. போஃபலி (POPHALI) மற்றும் பி.டி. ஹர்கரே (P.D. HARKARE) என்ற மற்றொரு வழக்கறிஞர் விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். பாபா, பவல்கர் பிளீடரின் (BHAWALKAR PLEADER) இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பங்களாவைச் சுற்றி அனைத்து பக்கங்களிலும், கடல்போலத் தென்பட்ட மக்களின் தலைகளைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியவில்லை. ஆறு அல்லது ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள பல நாட்களாக காத்திருந்தனர். பாபா, அவர்களின் இதயங்களில் ஏற்கனவே இடம் பிடித்திருந்தார். அந்தப் பகுதியில் பாபாவின் செய்திகளையும் அன்பையும் பரப்புவதில் போபஃலி ஒரு மிகச்சிறந்த பணியைச் செய்திருந்தார். இதன் விளைவாக, ஏறக்குறைய 40,000 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மெஹர் பிரபுவின் தரிசனத்திற்காக ஆவலுடன் வந்திருந்தனர். பாபா, கூட்டத்தை ஆசீர்வதிக்க, பலமுறை வீட்டை விட்டு வெளியே வந்தார், ஆனால் அவர்கள் திருப்தி அடைந்ததாக இல்லை, அங்கிருந்து கலைந்து போகவுமில்லை.

இந்தக் கூட்டத்தின் நடுவில், சௌண்டே மஹாராஜ் (CHAUNDE MAHARAJ) என்ற பிரபலமான நபர் ஒருவர் பாபாவிடம் வந்து, கூப்பிய கைகளுடன், "எனது வாழ்க்கையின் செயல்பாடுகளில் வெற்றிபெற என்னை தயவுசெய்து ஆசீர்வதியுங்கள்" என்று கண்ணீருடன் பிரார்த்தனை செய்தார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார், "**மின் இயந்திரத்துடன் மின் கம்பிகள் சரியாக இணைந்திருந்தால், அது மின்சக்தியை வழங்க ஒருபோதும் தவறுவதில்லை.**"

இதயக்குரலின் ஒலியாக 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' எனும் அன்பின் வெளிப்பாடுகள், காற்றை நிரப்பியது மட்டுமின்றி ஒரு காட்டுத்தனமான களிப்பூட்டும் உற்சாகம் எங்கும் பரவியது. பஜனை பாடல்கள் முழங்கின, அன்பிற்குரியவரின் புன்னகையின் போதையில் மக்கள் உலகையும் தங்கள் பிரச்சினைகளையும் மறந்துவிட்டனர். அதைத் தொடர்ந்து, பாபாவும், மண்டலியும் மதிய உணவிற்குப் பிறகு, ஸாவ்னேரில் நிறுவப்பட்ட 'மெஹர் ஆன்மீக மையத்திற்கு' அழைத்துச் செல்லப்பட்டனர். ஹர்கரே, கண்களில் கண்ணீருடன், பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினார்; போஃபலியின் குடும்பத்தினர் பாபாவை தரிசனம் செய்தனர். பாபா இங்கேயும் ஒரு செய்தியை வழங்கினார், 'ஆன்மீக ஏக்கத்தின் அணையா நெருப்பு', (THE UNQUENCHING FIRE OF SPIRITUAL LONGING) என்ற தலைப்பில் ஹர்கரே அந்த உரையை வாசிக்க, காடேக்கர் மராட்டியில் அதை மொழிபெயர்த்தார். உரையின் ஒரு பகுதி பின்வருமாறு:

**ஆசைகளால் நிரம்பிய வாழ்க்கை, எப்போதும், தவிர்க்கமுடியாத அளவிற்கு மகிழ்ச்சி--துன்பம், திருப்தி--ஏமாற்றம், நல்லது--தீயது ஆகியவற்றின் இடையேயான முடிவிலா ஊசலாட்டத்திற்குக் கட்டாயப்படுத்தப்படுகிறது. ஆனால், அகங்கார வாழ்வின் கொந்தளிப்பான வலிகள் மற்றும் இன்பங்களுக்கு மத்தியில், ஒரு விடிவுகாலம் வரும்; அதாவது, அனுபவத்தின் முதிர்ச்சியாலும், குருநாதரின் கருணையாலும், வாழ்வின் பொய்யும் போலியுமான நிலையற்ற வடிவங்கள் மூலம் நிறைவேற்ற விரும்பும் ஆசைகளின் முற்றிலும் பயனற்ற தன்மையின் தெளிவான கருத்து அப்போது புலனாகும்.**

**இது ஆன்மீக ஏக்கம் நிறைந்த வாழ்க்கையின் ஆரம்பம், அதைத் தொடர்ந்து உண்மை, பொய் இரண்டையும் பாகுபடுத்திப் பார்க்கும் நிலையான பண்பும் சேர்ந்து வரும். ஆன்மீக ஏக்கம் இவ்வண்ணம் விழிப்படையும்போது, அதை முழுமையாகத் தள்ளி வைக்கவோ அல்லது தவிர்க்கவோ முடியாது. அது தணியாத நெருப்பாக மாறி ஆசைகளை வேரோடு எரித்து அழிக்கிறது. இப்படி, ஓர் ஆர்வலர் தீவிரமான ஆன்மீக ஏக்கத்தின் மூலம் அமைதியின் இருப்பிடத்திற்கு வருகிறார்.**

மெஹர் பாபா நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு எதிரே அமைந்த திறந்த மைதானத்திற்குச் சென்றார்; அங்கு பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அங்கே கூடிய ஆயிரக்கணக்கான மக்களுக்கு இது போதுமானதாக இல்லை. கூட்டம் மிகவும் அதிகமாக இருந்ததால் கட்டுப்படுத்துவது கடினமாக இருந்தது.

'மனிதனின் தெய்வீக பாரம்பரியம்' (THE DIVINE HERITAGE OF MAN) என்ற பாபாவின் செய்தியை, ஜால் கேரவாலா வாசித்தார், அதை ஹர்கரே பிளீடர் மராட்டியில் எடுத்துரைத்தார்:

**எல்லா காலநிலையிலும், எல்லா இடங்களிலும், மனிதன் மகிழ்ச்சியாக இருக்க, தொடர்ந்து முயற்சிக்கிறான்; ஆனால் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் மிகக் குறைவு, ஏனெனில் மகிழ்ச்சியின் ரகசியத்தை உண்மையாக அறிந்தவர்கள் மிகக் குறைவு.**

**மனிதன் தொடர்ந்து தடுக்கப்பட்டு, மட்டுப்படுத்தப்பட்டவனாக உணர்கிறான், அவன் எப்போதுமே விடுவிக்கப்படாத வேதனை அல்லது துன்பத்தின் பிடியில் சிக்கித் தவிக்கிறான், ஏனெனில், அவனது சுய இயல்பை அறியாமல், அவன் தன்னை உடல் அல்லது ஆசைகள் அல்லது வரையறுக்கப்பட்ட தனிமனித மனதுடன் அடையாளப்படுத்திக் கொள்கிறான், அதன் மூலம் அவற்றின் குறிப்பிடப்பட்ட வரம்புகள் மற்றும் துன்பங்களுக்குப் பலியாகிறான். இவை எல்லாவற்றிலிருந்தும், மேலும் அதற்கு அப்பாலும் தன்னை வேறுபடுத்திக் கொள்வதன் மூலம் மட்டுமே அவன் சுதந்திரமாக மகிழ்ச்சியை நிலைநாட்டும் தெய்வீகப் பாரம்பரியத்தில் நுழைய முடியும்.**

**ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் ஆர்வலருக்கு, கருவின் உருவாக மறைந்திருக்கும் ஒன்றைத் தவிர வேறு எதையும் குருநாதர் கொடுப்பதில்லை. அவர் ஆர்வலருக்கு உண்மைப்பொருளான ஏக இறைவனை மட்டும் வெளிப்படுத்தி, அவருக்குச் சொந்தமான தெய்வீக பாரம்பரிய அந்தஸ்தை அடைய உதவுகிறார்.**

பாபா பின்னர் அறிவித்தார்: “**ஸாவ்னேர் மற்றும் அங்கேவாடாவில் நடந்த தரிசன நிகழ்ச்சிகள் என் எல்லையில்லா இதயத்தைத் தொட்டன. இங்குள்ள அன்பால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.**”

சௌன்டே மஹாராஜ் பஜன் கீர்த்தனைகளைப் பாடினார்; பின்னர் அவர் “மெஹர் பாபா அனைத்து மதங்களின் சந்திப்பு!” என்று கூறி தலை வணங்கினார்.

சௌன்டே மஹாராஜ், பாபா முன்னிலையில் தரையில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து ‘மனிதகுலத்தின் துயரங்களை இல்லாமல் செய்வீர்களாக’ என்று பிரார்த்தனை செய்தார்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, மெஹர் பாபா மேடையில் எழுந்து, கைகளை உயர்த்தி, மக்களை ஆசீர்வதித்தார். கிராமவாசிகள் பலரின் முகங்களில் கண்ணீர் வழிய, பாபா விடைபெற ஆயத்தமானது அவர்களின் ஆழ் இதயத்தை நெகிழச் செய்தது; அனைவரும் உள்ளம் நொறுங்குவதுபோல் உணர்ந்தனர்.

ஸாவ்னேரில் வாழும் ஜெயநாராயண் என்பவர் பாபாவையும், மண்டலியையும் தனது இல்லத்திற்கு விருந்திற்காக அழைத்திருந்தார். மாலையில் பாபா அங்குச் சென்று, வீட்டிலுள்ள அனைவரையும் ஆசீர்வதித்தார். அதற்குப் பிறகு, நாக்பூருக்குப் புறப்பட வேண்டிய நேரம் என்று குறிப்பிட்டு, புறப்படுவதற்கு முன்பு, போஃபலி குடும்பத்தினரிடம் விடைபெறுவதற்காக அவர்கள் வீட்டில் சில நிமிடங்கள் நின்றார். போஃபலியின் மனைவி, மகன் ஸ்ரீராம், மகள் அனைவரும் கண்கலங்கினர். பாபா, போஃபலியை ஆறுதல்படுத்தி, “**உங்கள் மனைவியும் குழந்தைகளும் என்னை ஆழமாக நேசிப்பது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம். உங்கள் குடும்பம் என்னுடையது. நீங்கள் அனைவரும் என்னுடையவர்கள்**” என்றார்.

பிரியமான தேவனின் இந்த அன்பின் வார்த்தைகள் போஃபலி குடும்பத்தினர் அனைவரும் வாழ்நாள் முழுவதையும் அவருக்கு அர்ப்பணிக்க வழிவகுத்தது. கண்களில் நீர் வழிய, குடும்பத்தினர் அவருக்குப் பிரியாவிடை அளித்தனர்.

மெஹர் பாபா நாக்பூருக்குத் திரும்பியபோது இரவு பத்து மணி; அங்கு அப்துல் மஜித் கான் (ABDUL MAJIT KHAN) என்பவர் ஒரு கவாலி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார். கான், பல வருடங்களுக்கு முன்பு, பாபாவைப் பற்றி நோரினாவின் உரைகள் மூலமாகக் கேள்விப்பட்டு, வெகுவாக ஈர்க்கப்பட்டார்,

மேலும் அவரை ‘அன்னை நோரினா’ என்று குறிப்பிட்டார். கவாலி பாடகர்கள் நள்ளிரவு வரை பாடினர், பகல்நேர நிகழ்ச்சிகளால் பாபா மிகவும் சோர்வடைந்திருந்தாலும், அவர் மஜித் கானை ஏமாற்றமடையச் செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் இறுதி வரை அமர்ந்திருந்தார்.

1944, நவம்பர் 16 வியாழக்கிழமை காலை, பாபா, நாக்பூரில் உள்ள ‘பௌத்தர்கள் ஸொஸைட்டி’க்கு (BUDDHIST SOCIETY) விஜயம் செய்தார். ஆதி சீனியர், ‘மறைந்திருக்கும் தெய்வீகப் புதையல்’ (THE HIDDEN TREASURE OF THE SELF) என்ற மெஹர் பாபாவின் செய்தியை வாசித்தார். பின்வருவது அதன் ஒரு பகுதி:

**சமுத்திரத்தை நோக்கித் தனது வழியில் வளைந்து நெளிந்து செல்லாத நதியும் இல்லை, அதுபோல் உயர்வான இறுதி இலக்கை அடைய விதிக்கப்படாத உயிரினமும் இல்லை. ஆனால் மனித உருவத்தில் மட்டுமே உணர்வு அந்த அளவிற்கு முழுமையாக வளர்ந்திருப்பதால், அது, தன்னுள் மறைந்திருக்கும் உண்மைப்பொருளின் மகிமையையும் பரிபூரணத்தையும் பிரதிபலித்து வெளிப்படுத்தும் திறன் கொண்டதாகத் திகழ்கிறது - அதே நேரத்தில், அதுவே ஒவ்வொருவரின், ஒவ்வொன்றின் ஏக இறைவன் எனவும் அறியப்படுகிறது.**

**ஒன்றன் பின் ஒன்றாக, பொய்யும் போலியுமான பல வண்ணமயமான பிணைப்புகள் கைவிடப்பட வேண்டும், மேலும், ஒன்றன் பின் ஒன்றாக, கட்டுண்ட அகந்தை மனதின் வஞ்சக நெருப்புக்கு இரையாகத் திகழும் மனப்படிவங்கள், உண்மைப்பொருளாகிய (சத்தியத்தின்) சக்திமிக்க சுடரின் கட்டாய கோரிக்கைகளுக்கு ஆதரவாக சரணடைய வேண்டும். ஒவ்வொருவரிடமும் குடிகொண்டிருக்கும் உண்மைப் பொருளாகிய இறைவனின் அழியாத ஒளியால், உணர்வு எனும் வானத்தில் ஒளிரும் மனப்படிவங்களாகிய மேகங்கள், முற்றிலும் மறைந்து போக வேண்டும். உண்மைப்பொருளாகிய ஏக இறைவனின் இந்த மறைக்கப்பட்ட புதையலை அடைய உங்களுக்கு உதவுவதே எனது குறிக்கோள்; அதை ஆர்வத்துடன் தேடும் அனைவருக்கும் எனது ஆசீர்வாதங்கள்.**

அதைத் தொடர்ந்து, ரயில் நிலையத்திற்குச் செல்வதற்கு முன்பு, பாபா நீதிபதி நியோகி மற்றும் புரானிக் ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்றார். அவரது பெரும்பாலான அன்பர்கள், பிரியமான பாபாவை மேலும் ஒருமுறை பார்க்கும் ஆர்வத்தில் கூடியிருந்தனர். ரயில் நிலைய மேடையில் மக்கள் மலர் மாலைகளுடன் பிரியாவிடையளிக்கக் காத்திருந்தனர். அது ஒரு பிரகாசமான குளிர்கால காலைப் பொழுது என்றாலும், அன்பர்களின் இதயங்களில் இருந்து தூறல் மழை பொழிந்தது.

இந்த உருக்கமான காட்சி மற்றும் கடந்த ஐந்து நாட்களில் மெஹர் பாபா மீதான தன்னிச்சையான அன்பின் வெளிப்பாடு இவற்றைக் கண்டு காலம் வியந்தது. தேவதூதர்கள் கூட இந்த நகர மக்கள் மீது பொறாமை கொண்டனர்,

ஏனெனில் இறை அன்பின் தூறலில் நனைந்த இந்த அதிர்ஷ்டசாலிகளைப் பார்த்து, மனித உருவத்தில் பிறவி எடுக்கும் அவர்களின் ஏக்கம் புதிய உச்சத்தை எட்டியது!

ரயில் பயணத்தின்போது, பாபாவுடன் வந்தவர்கள் நகைச்சுவை துணுக்குகள் மற்றும் கதைகளை எடுத்துரைக்க, சிலர் பாடல்களைப் பாடி பாபாவை மகிழ்வித்தனர். பாபாவுடன் மீண்டும் பயணித்த பால் நாத்து, பாபாவுக்காக ஒரு பாடலை ஏன் பாடக்கூடாது எனத் திடீரென நினைத்த அந்த நேரத்தில், பாபா அவரிடம் பாடும்படி சைகையால் தெரிவித்தார். பால் நாத்து உடனடியாக, பாடல் ஒன்னறைப் பாடி, குருநாதரின் சர்வ ஞானத்தின் நேரடி அனுபவத்தை அடையப் பெற்றார்.

பாபா, அனைவருக்கும் பழங்களைப் பகிர்ந்தளித்தார், சிறிது நேரத்தில் பாபா அவரது இருக்கையில் சாய்ந்து, ஒரு வெள்ளைப் போர்வையால் தன்னைப் போர்த்திக்கொண்டு, ஆன்மீக உள் பணியைச் செய்யத் தொடங்கியதும், அனைவரும் அமைதியாக இருந்தனர்.

நவம்பர் 17 அன்று பாபா மன்மாட் வழியாக, மண்டலியுடன் ஔரங்காபாத்திற்குச் சென்றார். பாபாவுடன் பயணம் செய்த இதர அன்பர்கள் தத்தமது இல்லங்களுக்குச் சென்றனர்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, நவம்பர் 24ஆம் தேதி அதிகாலையில் பாபா, ஆதி சீனியர், பைதூல், விஷ்ணு ஆகியோருடன் எல்லோராவைக் கடந்து ஒரு கிராமத்திற்குச் சென்று, ஆன்மீக ஆர்வலர் ஒருவரைத் தொடர்பு கொண்டார். மற்றுமொரு சிறிய கிராமத்தில் பாபா ஓர் இளம் முஹமதியரை சந்தித்தார், அவர் ஒரு மஸ்த் அல்ல, ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டவர் என்று கூறினார். அன்று மாலையில் ஔரங்காபாத் திரும்பி வந்தனர்.

அடுத்த நாள் மதியம் 2:00 மணிக்கு, ஆதி சீனியர், பைதூல், காக்கா ஆகியோருடன் பாபா அஜந்தாவிற்குச் சென்று 100 வயதையும் தாண்டிய ‘மியான் ஸாஹேப்’ (MIYAN SAHEB) என்றழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்தைத் தொடர்பு கொண்டார். பாபாவுக்காக அந்த மஸ்த் காத்திருந்ததாகத் தோன்றியது. ஆதி சீனியர் இவ்வாறு நினைவு கூர்ந்தார், “நான் பாபாவை அங்குக் காரில் அழைத்துச் சென்றபோது, மஸ்தைக் கண்டுகொள்வதில் வழக்கமான பிரச்சினை இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பாபா, ‘**காரை நிறுத்துங்கள். அவர் அங்கிருந்து வருகிறார்**!’ என்றார். பாபாவை இதுவரை அவர் சந்தித்ததில்லை என்றாலும், இந்த வலிமையான, உடலளவில் பருமனான இந்த மஸ்த் (அடையாளம் கண்டுகொண்டு) பாபாவைப் பார்க்கும் அதீத ஏக்கத்தில் இருந்தார். அவர் பாபாவைப் பார்த்ததும், அன்போடு அரவணைத்து, தனியாக ஒரு பக்தரின் வீட்டு மேல் மாடியில் அமைந்த அறைக்கு பாபாவை அழைத்துச் சென்றார். மியான் ஸாஹேப், பாபாவை ஸோஃபாவில் அமரவைத்து அருகில் அமர்ந்து பாபாவின் முகத்தை வருடிக்கொடுத்து வாய்விட்டு அழுதார்.

ஒரு கட்டத்தில், வெளியே காத்திருந்த மண்டலி, மியான் ஸாஹேப் ஒரு பாரசீக ஈரடி கவிதை பாடியதைக் கேட்டனர், 'உங்கள் சுய விருப்பத்தின் பேரில் நீங்கள் சுதந்திரமாக இருந்தீர்கள், ஆனால், உலக நலனுக்காக, நீங்கள் கட்டுண்டு இருக்கிறீர்கள்'.

இந்தத் தொடர்பால் பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவர் காரை நோக்கித் திரும்பியபோது, மஸ்த் மியான் ஸாஹேப் சொன்னதையும், அவர் எவ்வளவு விதிவிலக்கானவர் என்பதையும் பாபா மண்டலிக்கு வெளிப்படுத்தினார்: **"பெரும்பாலான மஸ்துகள் மற்றும் மகான்கள் என்னை அவதார புருஷர் என்று அறிவதில்லை, ஆனால் அவர்கள் தங்கள் ஆன்மீக நிலைக்குத் தகுந்தாற்போல் என்னை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். அவர்கள் இருக்கும் இடத்திற்கு அப்பால் - அவர்கள் முன்னேறி நிலைகொண்ட ஆன்மீகத் தளத்திற்கு அப்பால் 'பார்க்க'மாட்டார்கள்."**

மாலை 6:00 மணிக்கு பாபா குழுவுடன் ஔரங்காபாத் திரும்பி வந்தார்.

28ஆம் நாள், பாபா, ஔரங்காபாத்திலிருந்து ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத் புறப்பட்டு, அதே நாளில் வந்து சேர்ந்தார். அவர் குழுவுடன் வந்ததும் கிட்டி, வாலு இருவரையும் மெஹராபாத்துக்குத் திருப்பி அனுப்பினார்.

1944 டிசம்பர் 1 அன்று, பாபா, ஆதி சீனியர் அலுவலகம் வழியாக வெளியிட்ட சுற்றறிக்கையில், அவர் ஏப்ரல் மாதம் அலஹாபாத்திற்குச் செல்லவிருப்பதாகவும், மே மாதத்தில் ஒரு மாத கால கூட்டத்தை நடத்தப்போவதாகவும் குறிப்பிட்டிருந்தார். கூட்டத்தில் பங்கெடுக்கும் அன்பர்களின் எண்ணிக்கை இப்போது 500ஐ எட்டியது. சுற்றறிக்கையில் கீழ்வரும் குறிப்பும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அஹமதுநகரில் அவ்வேளையில், பாபா, தனிப்பட்ட முறையில் அவரது கைகளால் ரூ 10,000 மதிப்புள்ள தானியங்களை ஏழைகளுக்கு ஒரே நாளில் வழங்க முடிவு செய்துள்ளார். இதை ஒரு தொண்டாகப் பார்க்கக்கூடாது, ஆனால் ஏழைகளுடனான அவரது நேரடி தொடர்போடு இவ்வாறு வழங்கப்படும் பிரசாதம், உலகின் ஏழைகளுக்கு பயனளிக்கும். இந்தத் திட்டத்தைப் பற்றிய எந்தவிதமான விளம்பரமும் வெளியிடக்கூடாது என்று பாபா விரும்பினார்.

மும்பையிலிருந்து நரிமன் மற்றும் அர்னவாஸ் தாதாசாஞ்சியை அழைத்து, பாபா அவர்களின் வரவிருக்கும் திருமணத் திட்டங்களைப் பற்றி விவாதித்து, டிசம்பர் மாதத்தில் திருமணத்தை நடத்த அறிவுறுத்தினார். இருவரும் அதற்கு இணக்கம் தெரிவித்தபோது, **"மாதம் என்னுடையது, நாள் உங்களுடையது. பொருத்தமான எந்தத் தேதியையும் நிர்ணயிக்கவும்"** என்று அவர் குறிப்பிட்டார். அர்னவாஸ் டிசம்பர் 21ஆம் தேதியைத் தேர்ந்தெடுத்ததும் பாபா அதற்கு ஒப்புக்கொண்டார்.

மெஹராவின் பிறந்த நாள், அந்த ஆண்டு அன்பர்கள் மத்தியில் கொண்டாடப்பட இருந்தது, மேலும் மெஹராபாத்தில் அதற்கான ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டன. மண்டலி மதிய உணவைத் தயார் செய்யவும், விழாவுக்காக ஒரு கூடாரம் அமைப்பதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். மாஸாஜி சமையல் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, வேண்டிய பாத்திர பண்டங்களை வாடகைக்கு எடுத்துவர அவர் பூனா செல்ல வேண்டியிருந்தது. மும்பை, பூனா, அஹமதுநகர், நாசிக் மற்றும் வேறு சில இடங்களில் வாழும் அன்பர்களுக்கு விழாவில் பங்கேற்க அழைப்புகள் விடுக்கப்பட்டன. தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும் என்று அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. பெண்டு பெரிய பந்தல் ஒன்று அமைப்பதிலும், பாதிரி மின்சாரம் மற்றும் தண்ணீருக்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் மும்முரமாக இருந்தனர்.

1944, டிசம்பர் 18 அன்று, மாஸாஜி தேவையான பொருட்களுடன் சரக்கு வாகனத்தில் மெஹராபாத் திரும்பி வந்தார். ஆனால் திறந்த வெளியில் கடும் வெயிலில் பயணம் செய்தது முதியவரின் உடல்நிலையைப் பெரிதும் பாதித்தது. அவரது மகன் பெண்டுவின் முன்னால் வாகனத்தில் இருந்த பொருட்களை இறக்கிய பின்னர், உள்ளே பொருட்களைப் பத்திரமாக வைக்கக் கூறிவிட்டு, மாஸாஜி சென்று தனது கட்டிலில் சாய்ந்தார். விஷ்ணுவின் தாயார் காக்குபாய் அவரது அறைக்கு வந்து, அவருடன் சமையல் விவரங்களைப் பற்றி விவாதித்தார். அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்ததை எவரும் உணரவில்லை.

அன்றிரவு மாஸாஜி தூங்கினார், அடுத்த நாள் மதிய உணவிற்குப் பிறகு அவரது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார். மதியம் 1:30 மணிக்கு ஜங்க்ளே பஜாரிலிருந்து பொருட்கள் வாங்க வேண்டியது குறித்து, கேட்க வந்தபோது கதவைத் தட்டினார், ஆனால் பதில் எதுவுமில்லை. மெதுவாகக் கதவைத் திறந்தபோது, மாஸாஜியின் தலை அவரது படுக்கையின் விளிம்பில் சிறிது சாய்ந்திருந்ததைக் கண்டார். ஜங்க்ளே அவரை அழைத்தார் - ஆனால் மாஸாஜி இறுதி நேர மரண தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தார். ஜங்க்ளே பெண்டுவை அழைத்து குரல் கொடுக்க, பெண்டு, பாதிரி, நீலு, விஷ்ணு அனைவரும் ஓடி வந்தனர். டாக்டர் நீலு, மாஸாஜியின் இதயத் துடிப்பை உணர்ந்து, எதுவும் செய்ய முடியாமல், இதயம் செயலிழந்ததைத் தெரிவித்தார். அஹமதுநகரைச் சேர்ந்த ஒரு மருத்துவர் வரவழைக்கப்பட்டார், ஆனால் மாஸாஜி ஏற்கனவே உயிரைத் துறந்துவிட்டார். அவருக்கு வயது 77.

பாபா, மெஹராஸாத்திலிருந்து வந்து, ரயில் பாதையின் அருகே (மெஸ் குவார்ட்டர்ஸுக்கு எதிராக) சாலையின் மறுபக்கத்தில் கல்லறை ஒன்றை எழுப்ப உத்தரவிட்டார். ஒரு சவப்பெட்டியில் மாஸாஜியின் உடலை வைத்து, அதனை மூடுவதற்கு முன்பு பாபா உடலைத் தொட்டார். மண்டலி சவப்பெட்டியைத் தோளில் எடுத்துச் சென்றபோது, பாபாவும் கை கொடுத்தார்; அதைத் தரையில் இறக்குவதற்கு முன்பு, பாபா மீண்டும் அதைத் தொட்டார்,

பூமியிலிருந்து மண்ணெடுத்து அதன் மீது முதலில் தூவினார். மண்டலி ஒவ்வொருவரும் ஒரு கையளவு மண்ணை வீசினர்; இறுதியாக, பாபா கல்லறைக்கு மேல் பூக்களை வைத்தார்.

ஆரம்பத்திலிருந்தே, பாபாவின் பிரியமான, தாய்வழி சிறிய தந்தையார் ருஸ்தம் மாஸா அவருடன் இருந்தார். அவர் பாபாவின் சேவையில் தனது வாழ்க்கையை முழுவதுமாக அர்ப்பணித்தார், மேலும் அவரது மகள் (நாஜா), மகன் (பெண்டு) ஆகியோரும் பாபாவின் காலடியில் சரணடைந்தனர். மாஸாஜி மண்டலிக்கு சமையல்காரராகவும், பாபாவிற்கு அருகில் இரவு கண்காணிப்பாளராகவும், டோக்கா ஆசிரமத்தில் வாழ்ந்த பெண்மணிகளின் கழிவறைகளை சுத்தம் செய்தும், இது போன்ற பல்திறன் படைத்தவராகப் பணியாற்றினார். எளிதாகக் கோபப்பட்டு எரிச்சலடையும் மனப்பாங்கு உள்ளவர் - ஆனால் யதார்த்தமான நகைச்சுவை துணுக்குகளைக் கூறி இன்பப் பொழுதுபோக்கில் ஈடுபடுவதுண்டு. அவர் ஒரு வலிமையான, வன்மைவாய்ந்த, கோபாவேசமான மனிதர்; இறுதிவரை பாபாவை இதயபூர்வமாகப் பின்பற்றியவர்.

மாஸாஜி! உங்களின் பற்றற்ற தன்மை, உங்கள் சேவை, உங்கள் வலிமை மற்றும் உங்கள் அன்பு ஓர் உண்மையான சீடருக்கான தகுதியை உள்ளடக்கியது. உங்களுக்கு எங்கள் வணக்கங்கள்! நித்தியமாக விழிப்படைய நீங்கள் தூங்குகிறீர்கள்!

டிசம்பர் 19 மாலை, நரிமன், அர்னவாஸ் மற்றும் மும்பையிலிருந்து 86 திருமணக்குழு உறுப்பினர்கள் அஹமதுநகருக்கு வந்தனர். அடுத்த நாள், பாபா அவர்களைப் பார்க்கச் சென்று அனைவருக்கும் தரிசனம் வழங்கினார்.

1944, டிசம்பர் 21 வியாழக்கிழமை, நரிமன் 31, அர்னாவாஸ் 26, ஆகியோரின் திருமணம் அஹமதுநகர் அக்யாரியில் (நெருப்புக்கோவில்) காலை 10:00 மணிக்கு கோலாகலமாக நடைபெற்றது. அன்று மாலை, புதுமண தம்பதிகளை, பாபா, மெஹராஸாத்திற்கு அழைத்தார்; அர்னவாஸின் சகோதரி நர்கிஸ் மற்றும் தாயார் பச்சாமாய் அவர்களுடன் சென்றனர். பாபா, தம்பதியரை அன்புடன் வாழ்த்தி, பின்னர் அவர் பச்சாமாயின் கையைப் பற்றிக்கொண்டு பிம்பல்காவ்ம் நிலத்தைச் சுற்றிக் காண்பித்தார்.

பாபா கேட்டார், **"நீங்கள் இந்த இடத்தை விரும்புகிறீர்களா?"**

பச்சாமாய் பதிலளித்தார், "மிகவும் விரும்புகிறேன்."

**"சிறிது காலம் கழித்து, நான் உங்களை இங்கே என்றென்றும் வைத்திருப்பேன்"** என்று பாபா குறிப்பிட்டது அர்னவாஸை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது; அவருடைய தாயாரின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தது மட்டுமின்றி, மேலும் ஒரு குடும்பத்தையும் பேணி பாதுகாக்கவேண்டி இருந்தது. ஆனால் இரண்டு வருடங்களுக்கு பிறகு, பச்சாமாய் அவரது இறுதி மூச்சை விட்டபோது, அர்னவாஸ், பாபா கூறியதைப் புரிந்து கொண்டார்.

அர்னவாஸ், நர்கீஸ் இருவரையும் மெஹராஸாத்தில் இருக்கச் சொல்லி, பாபா, நரிமன், பச்சாமாய் இருவரையும் திருப்பி அனுப்பினார். டிசம்பர் 22ஆம் நாள், மெஹராபாத்தில் தங்குவதற்காக, பாபா, பெண்மணிகளுடன் புறப்பட்டார்; அடுத்த நாள் ஒரு தனித்துவமான சம்பவம் நிகழ்ந்தது.

டிசம்பர் 23, சனிக்கிழமை, மெஹர் பாபா, அஹமதுநகரிலிருந்து தனது அன்பர்கள் மற்றும் நரிமன்-அர்னவாஸ் அவர்களின் திருமணத்தில் கலந்து கொண்ட அனைத்து விருந்தினர்களையும் மெஹராபாத்திற்கு அழைத்தார்.

மாஸாஜியின் கல்லறைக்கு அருகில் இரண்டு அடி ஆழத்தில் குழி தோண்டி, சாஞ்சியின் படுக்கைகளை அதில் வைத்து புதைத்து, பாபா அதன் மீது ரோஜா மலர்களைத் தூவினார். அதன் பின்னர், ஆதி சீனியர், பாபாவின் அனைத்து சீடர்களுக்கும் 'நினைவு கோபுரம்' எழுப்ப அடிக்கல் நாட்டும் விழாவில் பாபாவின் செய்தியை வாசித்தார்:

**இன்று நீங்கள் காண்பது மிகவும் முக்கியமான, புனிதமான ஒரு நிகழ்வு. எந்த நேரத்திலும் கண்ணை விட்டு மறைந்துபோகும் பொருட்கள் மற்றும் பிற விஷயங்களில் உலகம் பரபரப்பாக இருந்தாலும், குருநாதரின் கருணையால், வாழ்க்கையின் உண்மையான முன்னோக்குப் பார்வையை அடையப் பெறுபவர்கள் எப்போதும் உள்ளனர். இந்த அதிர்ஷ்டசாலிகள் சிலர் தங்கள் முழு வாழ்க்கையையும், அழியாத, முடிவற்ற, உலகளாவிய, காலங்கடந்த இறை வாழ்க்கைக்கு எப்போதும் புதுப்பிக்கப்பட்ட உணர்வுடன் கூடிய, இடைவிடாத அர்ப்பணிப்பைச் செய்யத் தயாராக உள்ளனர். அனைத்து சுய எண்ணங்களையும் ஒதுக்கி வைத்து, தமது வாழ்க்கையைக் குருநாதரின் தவிர்க்க இயலாத, தெய்வீகக் காரணத்திற்காக அர்ப்பணிப்போரின் ஆன்மீக மாட்சிமையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஆனால், அத்தகைய விளக்கங்களை மிஞ்சும் அதே வேளையில், அது அந்த ஆன்மாக்களுக்கு மகுடம் சூடும் ஆபரணத்தை விட மிகையானதாக இருக்கும். கோபுரம் போன்ற கண்ணுக்குத் தெரியும் ஒரு நினைவுச்சின்னம், அவர்களின் வாழ்க்கையின் வாய்மை தவறாத நம்பிக்கை மற்றும் அன்பைக் குறிக்கிறது; இது வருங்கால சந்ததியினரை ஊக்குவிக்கும் ஓர் ஊடகமாக விளங்கும்.**

**இந்த இடத்தில் அமைக்கப்படும் எனது மறைந்த அன்பர்களின் 'நினைவு கோபுரம்', பின்வரும் தலைமுறைகளுக்கு உத்வேகம் மற்றும் சக்தியின் களஞ்சியமாகத் திகழும். அவர்களைப் பற்றிய நினைவு நீடித்திருக்க வேண்டும் என்பதற்காக அல்ல; பேரும், புகழும் அடைவதில் அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. ஆனால் அவர்களைக் குறித்த நினைவு, நிலைத்து நிற்க வேண்டியதன் காரணம் என்னவெனில், இது, இப்போது வாழும் மற்றும் வாழ இருப்பவர்களுக்கும், ஓர் உதாரணமாக இருக்கும். அன்பை அடிப்படையாகக் கொண்ட தியாக வாழ்க்கை ஒருபோதும் மறைந்துவிடுவதில்லை. இது அழகானதும், பலனளிப்பதும்**

மட்டுமல்லாமல், ஆக்கத்திறன் படைத்த உத்வேகத்தைப் பின்னால் விட்டுச் செல்கிறது.

இந்தக் கோபுரத்தின் அடித்தளம் என் அன்புக்குரிய சீடர்களில் ஒருவரான தாதாசாஞ்சியின் படுக்கையோடு எனது பிரியமான மாஸாஜியின் கல்லறையின் மீது வைக்கப்பட்டுள்ளது. புவாஸாஹேப், முன்ஷிஜி, சம்பத் ஐயங்கார் போன்றவர்களும் உள்ளனர்; அவர்கள், தங்கள் உடலைத் துறப்பதற்கு முன்னர், எனது ஆன்மீக நோக்கத்திற்காக செய்த தன்னலமற்ற சேவை, இதயப்பூர்வமான பக்தி மற்றும் தனித்துவம் மிக்க சாமர்த்தியத்தைக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒவ்வொருவருக்கும், கோபுரத்தின் அடித்தளத்தில் ஒரு தனி மலர் வைக்கப்படுகிறது; மேலும், இங்கு எழுப்பப்படும் புகழ்வாய்ந்த கோபுரத்தில் அவர்கள் அனைவரின் பெயர்களும் பொறிக்கப்படும்.

மலர்கள் மூலம் அடையாளச் சின்னமாகக் பிரதிநிதித்துவ படுத்தப்படும் பிரிந்த ஆன்மாக்கள், வெவ்வேறு சமூகங்களில் பரவலாக நடத்தப்படும் தனிப்பட்ட அடக்கம் அல்லது தகன நிகழ்ச்சிகளைத் தேவையற்றதாகப் பார்க்க வைக்கிறது. இந்த மலர்கள் அனைத்தையும் ஒரே அடித்தளத்தில் வைப்பது, இந்த அன்பர்களின் உடல்கள் வேறுபட்டிருந்தாலும், அவை அனைத்தும் ஒரே நித்திய மற்றும் பிரிக்க முடியாத ஆன்மாவின் பாகங்கள் என்ற உண்மையை வலியுறுத்தும் நோக்கம் கொண்டது. நினைவு கோபுரம், பிரிந்த ஆன்மாக்களின் பௌதீக உடல்களை முற்றிலும் தேவையற்றதாகப் பார்க்கச் செய்கிறது, ஏனெனில் பௌதீக உடல் என்பது ஆன்மாவின் மாயையான நிழல் மட்டுமே. இந்தக் கோபுரத்தில் பொறிக்கப்படும் பெயர்களிலான அன்பர்கள், அவர்களின் மறைவிற்குப் பிறகு, தங்கள் உடல்களை அவர்களின் விருப்பத்திற்கு இணங்க எந்த முறையையும் கையாளலாம். அவர்களின் உடல்கள் அந்தந்த மதச் சடங்குகளின்படி அல்லது அவர்களின் வாழ்நாளில் வெளிப்படுத்திய எந்தவொரு விருப்பத்தின் படி, அமைதி கோபுரத்தில் புதைக்கப்படலாம் அல்லது எரிக்கப்படலாம் அல்லது வேறு எந்த வழியிலாவது அகற்றப்படலாம்; மேலும் இந்த நினைவு கோபுரத்தில் அவர்கள் தத்தமது பெயர்களால் மட்டுமே குறிப்பிடப்படுவார்கள்.

கோபுரம் வெவ்வேறு மதங்களைச் சார்ந்த மனிதர்களின் நினைவுச்சின்னமாக இருக்கும், உண்மையில், அனைத்து பெரிய உலக மதங்களின் அடிப்படை ஒருமைப்பாட்டைக் குறிக்கும். அனைத்து பெரிய உலக மதங்களும், தங்கள் சொந்த வழியில், நான் மறுபடியும், புதிதாக, வேறொரு முறையில் கொண்டு வரும் ஒரே உண்மையை வெளிப்படுத்தியுள்ளன. உலகின் அனைத்து முக்கிய மதங்களின் சின்னங்களையும் கோபுரத்தில் வைப்பதன் மூலம், அனைத்து மதங்களின் இந்த ஒற்றுமை, ஒருமைப்பாடு தெளிவாக வலியுறுத்தப்படும். கோபுரம் அனைத்து மதங்களின் ஒற்றுமையின் அமைதியான பறைசாற்றலாக

**விளங்கும். நித்திய வாழ்க்கையின் அசைக்க முடியாத அமைதியும், உணர்வுப்பூர்வமான தெய்வீகத்தின் மங்காத மகிமையும் இந்த நினைவு கோபுரத்தால் குறிப்பிடப்படும் ஆன்மாக்களுக்கு முடிசூட்டப்படுவதாக இருக்கும்.**

**அவர்கள் அனைவரும் என்றென்றும் என்னுடையவர்கள். அவர்கள் அனைவரையும் நான் ஆசீர்வதிக்கிறேன்.**

அதற்குப் பிறகு, பாபாவின் விருப்பப்படி, ஆதி சீனியர் சில நாட்களுக்கு முன்பு பாபா பட்டியலிட்ட அனைத்துப் பெயர்களையும் வாசித்தார். ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டு, ஒவ்வொரு பெயரையும் அழைத்த வேளையில், பாபா அடித்தளத்தில் ஒன்றன் பின் ஒன்றாக ரோஜா மலரை வைத்தார். காலம் இதை இப்படிக் குறிப்பிட்டது, “பாபா, அந்த அன்பர்கள் எல்லையற்ற தெய்வீக பெருங்கடலோடு ஒன்றிணைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டுவது போலத் தோன்றியது. ஒவ்வொருவருக்காகவும் ஒரு ரோஜா மலரை அஸ்திவாரத்தில் வைப்பதன் மூலம், பாபா அவரது ஒவ்வோர் அன்பரும் எதிர்காலத்தில் ஒரு தருணத்தில் அந்தப் பெருங்கடலில் ஒன்றிணைவார் என்பதைத் தெரிவித்தார்.

“இது நிகழும் தருவாயில், பாபாவின் முகத்தில் ஆனந்தக் கதிர்கள் ஒளிர்ந்தன - அவரது அன்பர்கள் ஒவ்வொருவரின் மறைவும் அவரை மேலும் பாபாவின் அன்பில் மூழ்கடிக்கும் ஊடகமாக இருந்தது என்பதற்குச் சான்று. நினைவுக் கோபுரம் கட்டப்படும் வேளையில், அது உலகிற்கு ஒரு நீடித்த நினைவூட்டலாக இருக்கும். மதம் ஒன்றே ஒன்று, அனைத்து வேறுபாடுகளும் மாயை.”

24ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஒரு சோகமான சூழ்நிலை உருவானது. ஆதி ஜூனியரின் மனைவி குலு, தாரா என்ற மகனை ஈன்றெடுத்த ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் அஹமதுநகரில் காலமானார். காலை 5:00 மணிக்கு, பாபா, மெஹராபாத்திலிருந்து ஸரோஷின் இல்லம், ‘விலூ வில்லா’வில் குலுவைப் பார்க்கச் சென்றார். இறுதி மூச்சை விடுவதற்குச் சில நொடிகளுக்கு முன்பு பாபா, அவரது தலையில் கை வைத்தார். குலு, பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தது போலத் தோன்றியது. அவருடைய ஆசியைப் பெற்று, குலு 30 வயதில் இறைவனடி சேர்ந்தார்.

1944, டிசம்பர் 25 அன்று, மெஹராபாத் சூழ்நிலை கலகலப்பாக மாறியது, ஏனெனில் மெஹராவின் பிறந்தநாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. கீழ் மெஹராபாத்தில் கவாலி இசை நிகழ்ச்சியில் மகிழ்ச்சி வெள்ளம் பெருகியது. காலம் இதை இப்படிப் பார்த்தது: “பாபாவின் தெய்வீக அவையில் மகிழ்ச்சி, துக்கம் இரண்டிற்கும் இடமில்லை - ஆனந்தத்தின் பரவலான கதிர்கள் மட்டுமே இருக்கும். இந்த ஆனந்தம் எப்பொழுதும் வலி

நிறைந்து இருக்கும், ஆனால் அது உலக இன்னல்களின் வலி அல்ல; இது இதய ஏக்கத்தின் வலி, இறுதியில் ஆனந்தத்தை அனுபவிக்கச் செய்கிறது!

மெஹரா, மணி, மெஹரு, வாலு ஆகியோருடன் பாபா டிசம்பர் 27 அன்று மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

இவ்வாறு, பாபாவின் வாழ்வில் நிகழ்வுகளால் நிரம்பிய ஒரு வாரம் கழிந்தது. டிசம்பர் 19ஆம் நாள், மாஸாஜி காலமானார்; 21ஆம் நாள், நரிமன்-அர்னவாஸ் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்; 23 அன்று, நினைவு கோபுர அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது; 24ஆம் நாள், ஆதி ஜூனியரின் மனைவி குலு காலமானார் மற்றும் அவரது மகன் தாரா பிறந்தார்; 25 அன்று, மெஹராவின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. 1944 டிசம்பர் மாதத்தில் இந்த நம்பமுடியாத ஒரே வாரத்தில், பாபா அவரது நெருங்கிய அன்பர்கள் அனைவருக்கும் இறப்பு, பிறப்பு, இறுதிச் சடங்கு, திருமணம், பிறந்தநாள் போன்ற ஏற்ற இறக்க ஊசலாட்ட அனுபவத்தைக் கொடுத்ததோடு, அவரது இடைவிடா சகவாசத்தையும் அளித்தார். உலகமும் அதன் விவகாரங்களும் வெறும் கனவு, மற்றும் பிறப்பு, இறப்பு என்பது தூங்குவது, விழிப்பது தவிர வேறொன்றுமில்லை என்பதை அனுபவபூர்வமாக அனைவரையும் உணரச் செய்தார்.

பால் நாத்து மற்றும் பர்ஸி கிராமத்தைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் வாசுதேவ் ஜகந்நாத் கேர் (VASUDEO JAGANNATH KHER), 24ஆம் தேதி இரவு மெஹராபாத்திற்கு வந்து இரண்டு நாட்கள் தங்கியிருந்தனர். புறப்படுவதற்கு முன்பு, பால் நாத்து, பாபாவிடம் குருதுவாடி கிராமத்தில், தியானத்தில் ஆனந்தத்தை அனுபவிக்கும் ஒரு சிறுவனைப் பற்றிக் கூறினார். அவன் தியானத்தில் மெஹர் பாபாவின் முகத்தைப் பார்க்க முடியவில்லை என்றும், ஆனால் பாபாவின் வடிவத்தைக் பார்த்ததாகவும் கூறியதைத் தெரிவித்தார். அதற்கு செவிமடுத்த பாபா, கருத்து எதுவும் தெரிவிக்காமல் எழுந்து சென்றார். பால் நாத்து அப்போது நினைத்துப் பார்த்தார்: 'இப்போது, அந்த சிறுவனிடம் நான் என்ன சொல்வேன்? பாபாவிடம் அவனைப் பற்றி சொல்வதாக உறுதியளித்தேனே, ஆனால் பாபா அவனைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.'

இப்படிப்பட்ட எண்ணங்கள் மனதில் அலைமோதிய வேளையில், பாபா, திடீரென நின்று, பால் நாத்துவை நோக்கி, **"எனது பார்வை அந்த சிறுவனிடம் இருப்பதாகச் சொல்லுங்கள். அவன் எனது முழு வடிவத்தையும் காண்பான்"** என்றதும், பால் நாத்து திருப்தி அடைந்தார்.

அவர் குருதுவாடிக்குத் திரும்பிச் சென்ற வேளையில், சிறுவன் பால் நாத்துவிற்காகக் காத்திருந்தான், "இன்று அதிகாலையில், முதன்முறையாக, மெஹர் பாபாவின் வடிவத்தையும் தெய்வீக முகத்தையும் கண்டேன்" என்றான்.

மெஹராபாத்திற்கு வந்த மேலும் ஓர் அன்பர் மானேக் ரஞ்சி (MANECK RANJI). ஒரு வார விழாக்களுக்குப் பின்னர் அவர் நாசிக் திரும்பிச் சென்றவர்,

டிசம்பர் 31ஆம் நாள் திடீரெனக் காலமானார். இறுதியாக குருநாதரின் தரிசனத்தைப் பெற்ற அதிர்ஷ்டசாலி! மானேக் சிக்கனமான, 'கையடக்கமுள்ள' தனிநபராகக் கருதப்பட்டாலும், நிதி ரீதியாக, பாபாவின் ஆன்மீக நோக்கத்திற்குப் பெருமளவில் பங்களித்ததற்காக அவரைப் பாராட்டினார்.

மினூ கராஸ், நெய்ஸ் துபாஷ் (NAIZE DUBASH) ஆகியோர் டிசம்பர் 30 அன்று, குஷ்ரு குவாட்டர்ஸில் பாபாவை சந்தித்தனர். ஸரோஷுடன் காரில் வந்த பாபா, மினூ, நெய்ஸ் இருவரையும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். இதற்கு முந்தைய சந்திப்பின் போது அவர் வழங்கிய மோதிரத்தை, நெயிஸ் இன்னும் அணிந்திருப்பதைக் கண்டு பாபா மகிழ்ச்சியடைந்தார், அதை ஒருபோதும் அகற்ற வேண்டாம் என்று கூறினார். நெயிஸ் பெண் மண்டலியுடன் இருந்தபோது, மினூ கராஸ் அவதார புருஷரின் வட்டத்தின் உறுப்பினர் என்பதை அவரிடம் பாபா மறுபடியும் உறுதிப்படுத்தினார்; மேலும், மினூ இறையுணர்வை அடைவார் என்ற அவரது வாக்குறுதியை மீண்டும் எடுத்துரைத்தார்.

திருமணத்திற்குப் பிறகு, நரிமன், அர்னவாஸ் இருவரும் இன்னும் சில நாட்கள் அஹமதுநகரில் தங்குமாறு பாபாவால் அறிவுறுத்தப்பட்டனர். பாபா, எப்போதேனும் அர்னவாஸை மெஹராஸாத்திற்கு வருமாறு அழைப்பதுண்டு. இருப்பினும், அவருக்கு உடல்நிலை சரியில்லாமல், தூங்குவதில் சிரமம் ஏற்பட்டது. ஒரு நாள் பாபா, அவரை மெஹராஸாத்திற்கு அழைத்து, அங்குத் தூங்குமாறு கூறி, ஒவ்வோர் ஐந்து நிமிடங்களுக்கும், அவர் தூங்கிவிட்டாரா என்பதைப் பார்க்கச் சென்றார். பாபாவின் தொடர் வருகையால் அர்னவாஸ் அவரது சிந்தனையில் விழித்திருந்து, இறுதியாகத் தூங்க முடிந்தது.

அதற்குப் பிறகு, நரிமன், அர்னவாஸ் இருவரும் ஒன்றிணைந்து வாழ்க்கையைத் தொடங்க மும்பைக்குச் சென்றனர். அந்த நேரத்தில், போரின் காரணமாக மும்பையில் தங்குவதற்கான பங்களாக்களைக் கண்டுகொள்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால், பாபாவின் பார்வை அவர்கள் பக்கம் இருக்கவே, வந்த சிறிது காலத்தில், அவர்கள் வசதியான 'ப்ரீச் கேண்டி' (BREACH CANDY) பகுதியில் உள்ள 'ஆஷியானா' (ASHIANA) என்ற கட்டிடத்தில் ஒரு வசதியான வீட்டை வாடகைக்கு எடுக்க முடிந்தது. 1942ஆம் ஆண்டு, லோனவாலாவில் இருந்த வேளையில், நரிமன், அர்னவாஸ் இருவரும் இணைந்து, தனியாக வாழத்தொடங்கிய பின்னரே பாபா மீண்டும் மும்பைக்கு வரப்போவதாகக் குறிப்பிட்டிருந்தார்; அவருடைய வார்த்தைகள் அவர்களுக்குத் தெரியாமலே உதவியாக இருந்ததைக் காண முடிந்தது!

1945, ஜனவரி 1ஆம் நாள் திங்கட்கிழமை, அலி ஷாவை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்து, பாபா, அவரருகில் இருக்கச் செய்தார். அடுத்த சில வாரங்களுக்கு, ஒவ்வொரு நாளும் சில மணிநேரங்கள், பாபா,

அவருடன் தனிமையில் பணிபுரிந்து, அவருடனான பணி நிறைவடைந்ததும் அலி ஷாவை 25ஆம் தேதி அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பி வைத்தார்.

ஜனவரி 3 அன்று எலிஸபெத் பேட்டர்ஸனின் தந்தை 'ஸைமன் சாப்பின்' (SIMEON CHAPIN) காலமானார், அவர் அதைத் தெரிவித்து பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பியிருந்தார். அடுத்த நாள் எலிஸபெத்திற்கு பாபா இந்தச் செய்தியை அனுப்பினார்: **"உங்கள் தந்தையார் ஆசீர்வாதிக்கப்பட்டு எனது எல்லையற்ற இதயத்தில் இடம் பிடித்துள்ளார்."**

திரு. சாப்பின் 1932ஆம் ஆண்டு நியூயார்க்கில் பாபாவை சந்தித்தார், மேலும் சமீபத்தில் 'மர்டில் பீச்' நிலத்தை மகள் எலிஸபெத்திற்கு அவர் அன்பு பரிசாக அளித்ததன் காரணமாக, அமெரிக்காவில் மெஹர் பாபாவுக்கான ஒரு மையம் உருவாக வாய்ப்பாக அமைந்தது. ஸைமன் சாப்பின் ஒரு தாராளமான, பரோபகார குணம் படைத்தவராக இருந்தார், அவர் நான்கு தொண்டு நிறுவனங்களை நிறுவியுள்ளார். அவர் அடிக்கடி இப்படிக் குறிப்பிடுவதுண்டு: "என்னை விடக் குறைவான பாக்கியசாலிகளுடன் நான் பகிர்ந்து கொள்ளாவிடில், நான் அடையப்பெற்ற எதற்கும் தகுதியுடையவனாக இருக்க மாட்டேன்." அற்புதமான மெஹர் ஆன்மீக மையத்தை சாத்தியமாக்கிய எலிஸபெத்தின் தந்தையார் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்.

பாபாவுக்கான சில பணிகளை முடித்துவிட்டு, மும்பையிலிருந்து திரும்பி வந்த காக்கா பாரியாவைப் பார்க்க, பாபா, 1945, ஜனவரி 6 அன்று மெஹராபாத் சென்றார். இந்த நாட்களில் பாபா ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே உணவு உண்டு வந்தார். ஆதி சீனியர் அறிவுறுத்தல்களுக்காக அஹமதுநகரிலிருந்து தினமும் மெஹராஸாத்திற்கு வருவதும், மெஹராபாத் செய்திகளை, பாபாவிற்கு எடுத்துச் செல்வதும் வழக்கம்.

சில சட்ட ரீதியான விஷயங்களைப் பற்றி விவாதிக்க ராஹூரியிலிருந்து வந்த டாக்கே:பால்கரை சந்திக்க பாபா 26ஆம் தேதி மெஹராபாத் சென்றார்.

ஜனவரி 31 புதன்கிழமை, பாபா, மெஹராஸாத்திலிருந்த பெண்மணிகளுடன் குஷ்ரு குவாட்டர்ஸிலிருந்து சிறிது தொலைவில் அமைந்த ரூஸி பாப் இல்லத்திற்குச் சென்றார். மெஹராஸாத்தில் காளேமாமாவின் கண்காணிப்பில் சில கட்டுமான பணிகள் திட்டமிடப்பட்டிருந்ததால், கேட்டி மற்றும் கோஹெரின் பெற்றோரின் இல்லத்திற்கு இந்தத் தற்காலிக நகர்வு தேவைப்பட்டது. அங்குச் சென்ற பிறகு, பாபா, மெஹராபாத்திலிருந்து ரானோவையும் அழைத்தார், இதனால் மெஹரா, மணி, மெஹரு, ரானோ மற்றும் வாலு இப்போது ரூஸி பாப் இல்லத்தில் பாபாவுடன் இருந்தனர்.

1945, பிப்ரவரி 2 அன்று பாபா, அஹமதுநகரிலிருந்து பைதூல், காக்கா இருவருடன் மஸ்த் பணிக்காக ஜான்ஸி (JANSI) நகருக்குச் சென்று, பிப்ரவரி 4

அன்று 14 மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். 'பஞ்ஜாபி மாய்' (PUNJABI MAI) என்றழைக்கப்பட்ட மஸ்தானியுடன் நிகழ்ந்த சந்திப்பு மிகவும் மறக்கமுடியாத ஒன்றாகும். பாபா, நீண்ட முடியும் தாடியுடன் கூடிய ஒரு நிர்வாண மஸ்தை மீண்டும் தொடர்பு கொண்டார்; அவர் பல ஆண்டுகளாக ஒரு பழைய கோபுரத்துடன் முதுகை சாய்த்து அமர்ந்து, இரவும் பகலும் சூரியன் அல்லது நட்சத்திரங்கள் ஒளிரும் வானத்தை நோக்கிக் கொண்டிருப்பதைப் பழக்கமாகக் கொண்டார்.

ஜான்ஸியில் மிக உயர்ந்த நிலையை அடைந்த மஸ்த் 'அவுலியா பாபா' (AULIA BABA) இருந்தார்; மிகவும் வயதானவராக இருந்ததால் அவரால் நடக்க முடியவில்லை, ஆனால் அவர் தனது கால்களை மட்டும் தரையில் அசைப்பது பழக்கம். இந்தப் புனிதமான மஸ்த் அசுத்தமான சூழ்நிலையில் அமர்ந்து, அடிக்கடி வழிப்போக்கர்களை வசைமாரி பொழியும் அதே வேளையில், பிறருடன் அவர் நல்ல மனநிலையில் காணப்பட்டார்.

பிப்ரவரி 6 அன்று பாபா அஹமதுநகர் திரும்பி வந்தார்.

மே மாதத்தில் திட்டமிடப்பட்ட ஒரு மாதக் கூட்டம் குறித்து, மண்டலியுடன் விவாதங்கள் நடத்தப்பட்டன. இதற்காக, பாபா முன்னும் பின்னுமாகப் பயணித்த சில சமயங்களில் அஹமதுநகர் வருமாறு மண்டலியை அழைத்தார். இறுதியாக, ஒவ்வொரு நகரத்திலிருந்தும் ஒரு குழுத் தலைவரை அழைத்து, மெஹராபாத்தில், 40 நபர்கள் (மண்டலி உட்பட) அடங்கிய ஒரு சிறிய கூட்டத்தில், ஒரு மாத கால சந்திப்பு பற்றிய இறுதி முடிவை எடுக்கவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட ஒரு மாத கால கூட்டத்திற்கு வர விரும்பும் ஆண்களின் எண்ணிக்கை 500ஐ எட்டியது. இது பல சிரமங்கள் உருவாக வாய்ப்பாக இருந்ததால், சில வாரங்களுக்குப் பின்னர் (1945 மார்ச் 1 அன்று) ஆதி சீனியர் வெளியிட்ட இந்த சுற்றறிக்கையில் பாபா விளக்கினார்:

**1944ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் தேதி அனுப்பப்பட்ட இறுதி சுற்றறிக்கையில் கையெழுத்திட்டவர்கள், 1945 மே மாதத்தில் வர அழைப்பு விடுக்கப்பட்டது. பலர், தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப இணக்கம் தெரிவித்து, மே மாதக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தயாராக இருந்தனர். பலருக்கு, உள்ளார்ந்த ஆர்வம் இருந்தபோதிலும், விடுப்பு பெறுவதில் அல்லது ஒரு மாதத்திற்குத் தத்தமது கடமையை விட்டு வருவதில் சிரமம் இருப்பதால், கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை. அது எப்படியிருந்தாலும், இந்தக் கூட்டம் பல காரணங்களுக்காக, பல முறை தள்ளிவைக்கப்பட்டது.**

**இக்கூட்டத்தின் குறிப்பிட்ட நோக்கம் ஆன்மீகம் தொடர்பானது, அது முறையாகச் செய்து முடிக்கும் வரை, கையெழுத்திட்ட பலரை மட்டுமே ஒன்றிணைப்பதால் நோக்கம் நிறைவேறிவிடாது. ஒரு மாத காலம் ஒன்றாக வந்து, சேர்ந்து வாழ்வதில் பல சிரமங்கள் உள்ளன. அவை இயற்கையான வழிமுறைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும். இந்த நேரத்தில்**

எனது உலகளாவிய மனதின் தலையீடு உகந்ததாக இருக்காது. இதில் பங்கெடுக்கும் அன்பர்கள், தங்கள் பொருளுலக தேவைகளில் கவனம் திசைதிருப்பப்படாமல், கூட்டத்தின் ஆன்மீகக் காரணத்திற்காக முழுமையாக அர்ப்பணிக்க, அனைத்து அனபர்களுக்கும் தங்கும் இடம், உணவு, மற்றும் பிற தேவைகள் அனைத்தும் முறையாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

போர்க்கால கட்டுப்பாடுகள் காரணமாக, உணவு பகிர்ந்தளிக்கப்படும் ஒரு நிலையான பிரச்சினைக்கு, வெளிப்படையாக எந்தத் தீர்வும் இல்லை. இதைத் தவிர, ஒரு மாத காலத்திற்கு நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றாக வந்திணைவதற்கான அரசாங்கக் கட்டுப்பாடுகள், தீர்வு காணப்படாத மற்றொரு பிரச்சினையாகும்; அதே வேளையில், பயணத்தால் விளையும் சிரமங்கள் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

இந்தக் கூட்டத்தின் தனிப்பட்ட மற்றும் முக்கியமான ஆன்மீக நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, இந்த சந்தர்ப்பத்தில், கூட்டத்தைத் தள்ளிப்போடுவது என்பது தற்காலிகத் தேவையாக இருந்தாலும், அது பொருத்தமற்றதாகத் தோன்றலாம். மாறிவரும் வேறுவேறு நிகழ்வுகளின் தோற்றத்தில், இறை உணர்விற்கு வழிவகுக்கும் ஒரு திட்டவட்டமான ஆன்மீக அடிப்படையில், மகத்தான கட்டமைப்பு ஒன்று வெளிப்படுவதைக் காணமுடிகிறது. ஒரு மாத கால கூட்டத்தைத் தள்ளிப்போடுவதால் ஏற்படும் மன உளைச்சல்களுக்கு அப்பால் சென்று, எந்த சூழ்நிலையிலும், எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதாக நீங்கள் ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்துக் கையொப்பமிட்டது, என் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையின் உறுதியான சான்றாகக் கருதப்படுகிறது.

1944 டிசம்பர் 1ஆம் நாள் வெளியிடப்பட்ட இறுதி சுற்றறிக்கையின்படி, 1945 மே மாதத்தில் திட்டமிடப்பட்ட ஒரு மாத சந்திப்பு நடத்தப்படமாட்டாது. எனவே, கூட்டத்தில் கலந்து கொள்வதாகக் கையொப்பமிட்ட ஒவ்வொருவரும் தன்னை விடுவித்துக் கொள்ள அல்லது விடுப்பு எடுப்பது போன்ற அனைத்து உறுதிப்பாடுகளிலிருந்தும் விலகிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட்ட தொடர் சங்கிலியில் ஒரு நிரந்தர இணைப்பை நிறுவுவதற்கு, கையொப்பமிட்ட ஒவ்வொருவரும் மே 1ஆம் நாள் முழுவதும் உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன் - 1945, மே 1 காலை 7:00 மணி முதல் மே 2 காலை 7:00 மணி வரை, 24 மணி நேரம், திட ஆகாரம், தண்ணீர் அல்லது வேறு எந்த திரவத்தையும் உட்கொள்ளக்கூடாது.

அதற்குப் பிறகு மே மாதம், மெஹராபாத்திற்கு ஒரு வாரம், பாபா அழைக்க விரும்பும் 40 நபர்களின் பெயர்களைப் பட்டியலிட்டு, 'பொதுவாகக் கையெழுத்திட்டவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, ஒரு மாத கால கூட்டத்தை, எதிர்காலத்தில் நடத்துவது குறித்து, நேரம், இடம், உணவு மற்றும்

இதர எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்வதைப் பற்றி விவாதித்து முடிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

மெஹர் பாபாவின் அன்றாட பணியில் சாஞ்சியின் வாழ்க்கை மிகவும் பரபரப்பாக இருந்ததால், அவருடைய நாளேடுகள், குறிப்புகள், கடிதங்கள் போன்ற அனைத்தையும் ஒழுங்கமைக்க அவருக்குப் போதிய நேரம் கிடைக்கவில்லை. அவர் விஷயங்களை பதிவு செய்து வெறுமனே அனைத்தையும் ஒன்று திரட்டி, அதை, பாதுகாப்பாகப் பெட்டகத்தில் சேமித்து வைத்திருந்தார். இதற்கு முன்பு கூறியது போல், எரச், ஆதி சீனியர் இருவரும் 1940ஆம் ஆண்டில் பெங்களூரில் இருந்த வேளையில் அவரது ஒரு சில குறிப்புகளை வரிசைப்படுத்திக் கொண்டிருந்தனர். சாஞ்சியின் மறைவிற்குப் பின்னர், அவரது பெட்டகங்கள் அனைத்தும் மும்பையிலிருந்து மெஹராபாத்துக்குக் கொண்டு வரப்பட்டன. மேலும், இவற்றை ஒழுங்காக சீரமைக்கும் பொறுப்பு ‘ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா’விற்கு (FERAM WORKINGBOXWALA) வழங்கப்பட்டது.

ஃபெராமைப் பொறுத்தவரை, சாஞ்சியின் கடிதங்கள் மற்றும் குறிப்புகளைப் பார்ப்பது ஒரு கடினமான, சலிப்பை உண்டாக்கும் பணியாக இருந்தது. முதலாவதாக, சாஞ்சியின் கையெழுத்து சில நேரங்களில் கண்ணுக்குத் தெரியாத அளவிற்கு நுண்ணியதாக இருந்தது; மேலும், பாபாவின் விளக்கங்களை, கைகளில் கிட்டிய எந்தக் காகிதத் துண்டிலும் எழுதி வைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்; பெரும்பாலும் தேதி, நாள், மாதம் அல்லது வருடம் இவற்றில் சிலவற்றை குறிப்பிடாமலும் வைத்திருந்தார். ஃபெராம் ஒன்பது மாதங்களில் அவரால் இயன்றவரை ஒழுங்காக சீரமைத்து, பணியை முடிக்க முடிந்தது. சொல்லப்போனால் ஃபெராம்ரோஸின் (சாஞ்சியின்) பாரம்பரிய சொத்தை ஃபெராம்ரோஸ் (ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா) மூலம் சீராகப் பராமரிக்கப்பட்டது!

சாஞ்சியின் மறைவிற்குப் பின்னர், ஆதி சீனியர், மெஹர் பாபாவின் அதிகாரப்பூர்வமான செயலாளராக இருந்து குருநாதருக்கும், அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையேயான தகவல் போக்குவரத்து பணிகளைக் கையாண்டார்; ஃபெராம் அவற்றை ஒழுங்கமைக்க ஆதிக்குத் துணையாக இருந்தார்.

ஃபெராம் ஓர் எளிய, கள்ளங்கபடமற்ற, எதையும் எளிதில் நம்பக்கூடிய மனிதர். அவர் பெரும்பாலும் மண்டலியின் கேலி கிண்டலுக்கு இலக்காக இருந்தார்; பெண்டு, நீலு இருவரும் குறிப்பாக இதில் கெட்டிக்காரர்கள். ஃபெராம் உடல்நிலை சரியில்லாமல் ஆஸ்துமாவால் அவதிப்பட்டார்; பாபா, பெண்டுவிடம் தினமும் அவருக்குப் பால் கொடுக்கும்படி அறிவுறுத்தினார். ஒருமுறை ஃபெராம், டாக்டர் நீலுவிடம் புகார் கூறினார், “பெண்டு கொண்டுவரும் பால் எனக்குப் பிடிக்கவில்லை; அது ஏதோ ஒரு வித்தியாசமான சுவையைக் கொண்டது.”

"ஏனெனில், அவர் உங்களுக்கு எருமைப் பால் கொடுக்காமல், உங்களைக் குதிரையைப் போல வலிமைப்படுத்த குதிரைப் பால் கொடுக்கிறார்!" என்று நீலு நகைச்சுவையாகக் கூறினார்.

"உண்மையாகவா? பெண் குதிரை பால் கொடுக்குமா?" என்று ஃபெராம் நம்பமுடியாமல் கேட்டார்.

"நிச்சயமாக," டாக்டர் நீலு கூறினார். ஒவ்வொரு நாளும் அஹமதுநகரிலிருந்து உணவுப்பண்டங்களை எடுத்துவர மெஹராபாத்தில் ஒரு டோங்கா வைக்கப்பட்டிருந்தது, டோங்காவை இயக்கும் குதிரை சமீபத்தில் குட்டியிட்டது. எனவே பெண்டு உண்மையில் தனக்குக் கொண்டுவரும் பால் குதிரைப்பால் என்று ஃபெராம் நம்பினார்.

அதற்குப் பிறகு, ஃபெராம் பால் குடிப்பதை நிறுத்திவிட்டார்; மேலும், நீலு, வேண்டுமென்றே சீண்டுகிறார் எனக் கூறி, பெண்டு சமாதானப்படுத்த முயன்ற போதிலும், ஃபெராம் கோபத்துடன் மறுபடியும் அவரைக் கேலிப்பொருளின் இலக்காக்கி எள்ளிநகையாடுவதாக நம்பினார்.

ஃபெராம் பால் அருந்துவதை நிறுத்திவிட்டதாக பாபாவிடம் பெண்டு தெரிவித்த போது, பாபா, ஃபெராமை அழைத்து, **"இப்போதெல்லாம் நீங்கள் ஏன் பால் அருந்துவதில்லை? அது என் உத்தரவல்லவா?"** என்று கேட்டார். ஃபெராம் அவரிடம் காரணத்தைக் கூறியபோது, பாபா அடக்க முடியாமல் குலுங்கி குலுங்கி சிரித்தார்.

**"நீங்கள் உண்மையில் ஒரு மூடன்!"** பாபா கேலி செய்தார். **"உங்களைப் போன்ற ஒரு மனிதனை நான் இதுவரை சந்தித்ததில்லை! நீலு அதை ஏன் கோழியின் பால் என்று சொல்லவில்லை என ஆச்சரியமாக இருக்கிறது! அவர்களின் நகைச்சுவையான பேச்சை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இப்போது, இன்று முதல் மறுபடியும் பால் அருந்தத் தொடங்குங்கள், நான் கூறுவது வரை நிறுத்த வேண்டாம்."**

மெஹர் பாபா அவரது மஸ்த் பணிக்காக, ஆறு மாதங்கள் ஹைதராபாத்தில் தங்க விரும்பினார். டாக்டர் டான் அப்போது ஸெக்கந்திராபாத் இராணுவ மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வந்தார்; 1945 ஜனவரி இறுதியில், பாபா மற்றும் மண்டலிக்குப் பொருத்தமான பங்களாக்களைத் தேடுமாறு அவருக்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. டான் ஹைதராபாத்தில் ஒரு சில பங்களாக்களைப் பார்த்து, பிப்ரவரி 8 அன்று மூன்று நாள் தங்குவதற்காக அஹமதுநகருக்கு வந்தபோது அவற்றைப் பற்றி பாபாவிடம் தெரிவித்தார்.

போரைக் குறித்து, பாபா, முன்பு டானிடம் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: **நேச நாடுகள் (அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து) போரை வெல்லப் போகின்றன என்றாலும், அந்த நாடுகள் அமைதியை இழக்க நேரிடும், ஏனெனில் ரஷ்யா அமைதி பேச்சுவார்த்தையில் ஆதிக்கம் செலுத்தும்.** டானின் தற்போதைய வருகையின் போது, பாபா மேலும் கருத்துத்

தெரிவித்தார், "**அமெரிக்காவும் இங்கிலாந்தும் ரஷ்யாவின் கைகளில் மிகவும் கடுமையான இராஜதந்திர தோல்வியை சந்திக்கப் போகின்றன - போரின் தோல்வியை விட ஓர் இராஜதந்திர தோல்வி, அதன் விளைவை நீண்ட காலம் நீடிக்கச் செய்யும்.**"

பாபா ஹைதராபாத் பகுதியில் சில முதல்கட்ட பணிகளைச் செய்ய விருப்பம் தெரிவித்து, 1945, பிப்ரவரி 21 புதன்கிழமை பெண்டு, பைதூல், காக்கா ஆகியோருடன் ரயிலில் ஹைதராபாத் சென்றார். டாக்டர் டான் அவர்களை அடுத்த நாள் காலை ஸெக்கந்திராபாத் ரயில் நிலையத்தில் சந்தித்து, அவர்களை 'ராக் கேஸல்' ஹோட்டலுக்கு (ROCK CASTLE HOTEL) அழைத்துச் சென்றார். டான் தேர்ந்தெடுத்த பங்களாக்களைப் பார்க்க, பெண்டு, டானுடன் அனுப்பப்பட்ட அதே நேரத்தில் பாபா, பைதூல் மற்றும் காக்காவுடன் மஸ்த் தொடர்புக்காக வெளியே சென்றார்.

பெண்டு, ஏதோ ஒரு காரணத்திற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட பங்களாக்கள் மீது அதிருப்தியைத் தெரிவித்ததால், அவர் இதர பங்களாக்களை ஆய்வு செய்யத் தொடங்கினார். ஹைதராபாத் நகரின் 'ஜூபிலி ஹில்ஸ்' (JUBILEE HILLS) பகுதியில், ஒரு புதிய பங்களா, சிறிய தோட்டம், நீச்சல் குளம் போன்ற வசதிகளுடன் கட்டுமானத்தில் இருந்ததைப் பெண்டு விரும்பி, அதைப் பார்க்க, பாபாவை அழைத்துச் சென்றார். பாபா அதற்கு ஒப்புதல் அளித்து, பெண்டுவிடம் உரிமையாளருடன் வாடகை குறித்த ஒப்பந்தத்தை முடிவு செய்யுமாறு அறிவுறுத்தினார்.

பெண்டு, டாக்டர் டான் இருவரும் வீட்டு உரிமையாளரை சந்திக்கச் சென்றனர். அவர் ஒரு வழக்கறிஞர், வந்தவர்களை அன்புடன் வரவேற்றார். இருவரும் அவருடன் பேசி, உருது மொழியில் ஒப்பந்தம் ஒன்றைத் தயார் செய்தனர். பெண்டு அன்றிரவு தாமதமாக ஹோட்டலுக்குத் திரும்பிய வேளையில், பாபா "**ஒப்பந்தத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது?**" என வினவினார்.

"பாபா, இது உருது மொழியில் உள்ளதால், அதை என்னால் படிக்க முடியவில்லை, ஆனால் அவர் நமது விதிமுறைகளின்படி அதைத் தயார் செய்தார்" என்று பெண்டு பதிலளித்தார்.

"**ஆனால் அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாம் சரியாக அறிய வேண்டியது அவசியம். இல்லையெனில், பிறகு சிக்கல் ஏற்படும்.**"

இரவு மிகவும் தாமதமாகிவிட்டதால், பெரும்பாலான மக்கள் தூங்கும் வேளையில் ஆவணத்தை மொழிபெயர்க்கக் கூடிய ஒருவரை எப்படிக் கண்டுகொள்வது? பெண்டு வெளியே சென்று, ஹோட்டலைச் சுற்றி நடந்து செல்லும்போது, மூன்று முஸ்லிம்கள் ஓர் அறையில் அமர்ந்து மது அருந்திக்கொண்டிருப்பதைக் கண்டார். உங்களில் எவரேனும் உருது வாசிப்பீர்களா என்று பெண்டு கேட்க, அவர்களில் ஒருவர், குடிபோதையில், "வாருங்கள் நண்பா, நான் உங்கள் சேவகன் - உங்களுக்குக் கீழ்ப்படியத் தயார். நீங்கள் என்ன கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்கவும், பெண்டு அவரை

பாபாவிடம் அழைத்துச் சென்றார்; அவர் தட்டுத்தடுமாறி, பாபாவுடன் கைகுலுக்கி, வியத்தகு முறையில் ஒப்பந்தத்தை உரக்கப் படிக்கத் தொடங்கினார்.

பாபா அவரது நடிப்பைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்; அவர் பெண்டுவிடம், **“மீண்டும் படிக்கக் கூறுங்கள்!”** என்றதும், போதையின் மயக்கத்தில் இருந்த முஸ்லீம் மீண்டும் ஒரு முறை வாசிக்கத் தொடங்கித் தடுமாறினார். முழு உரையையும் பல முறை படித்து, பாபாவுடன் கைகளைக் குலுக்கி, விடைபெற்று அவர் தள்ளாடிச் சென்றார்.

அவர் திரும்பிச் செல்லும்போது, ”எனது சேவை மீண்டும் தேவைப்பட்டால், என்னை அழைக்கத் தயங்க வேண்டாம்” என்றும் கூறிச் சென்றார். அதற்குப் பிறகு, பாபா இரண்டு அல்லது மூன்று திருத்தங்களைச் செய்தார், அடுத்த நாள் வழக்கறிஞருடனான ஒப்பந்தம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

பாபா 23ஆம் தேதி ஹைதராபாத்திலும், அடுத்த நாள் ஸெக்கந்திராபாத்திலும் பல மஸ்துகளுடன் பணிபுரிந்தார். பிப்ரவரி 25 ஞாயிற்றுக்கிழமை, பாபா, அஹமதுநகர் திரும்பிய அந்த நாள், அவரது 51ஆவது பிறந்தநாள், ஆனால் சிறப்பு நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை. அவர் பெண்மணிகளுடன் ரூஸி பாப் இல்லத்தில் தங்கியிருந்தார்.

இதற்கிடையில், போரில், ஜப்பானிய துருப்புக்களுக்கும் அமெரிக்க கடற்படையினருக்கும் இடையில் பசிபிக் பெருங்கடலில் அமைந்த ‘ஐவோ ஜிமா’ (IWO JIMA) தீவில், இரத்தக்களரியுடன் கூடிய கடுமையான மோதலில், பெரிய அளவிலான உயிரிழப்புகளுக்கு மத்தியில் போர் தொடர்ந்தது. பாபாவின் ஹைதராபாத் நகர்வு போரை முடிவிற்குக் கொண்டுவருவதாகத் தோன்றியது.

1945, பிப்ரவரி 28 அன்று, பாபா, மெஹராஸாத்தில் நடக்கும் கட்டுமான பணியின் முன்னேற்றத்தைப் பார்வையிடச் சென்றார், மேலும் அவர் அஹமதுநகரிலிருந்து அழைத்து வரப்பட்ட மஸ்த் அலி ஷாவுடன் சிறிது நேரம் பணிபுரிந்தார்.

பாபா, அஹமதுநகரில் தங்கியிருந்ததால், அடிக்கடி ‘அக்பர் பிரஸ்’ஸில் ஸட்டாவையும், சில நேரங்களில், குஷ்ரு குவார்ட்டர்ஸில் குல்மாய் மற்றும் ஆதி சீனியரையும் சந்திக்க நேர்ந்தது.

ஒரு நாள் அவர் அக்பர் பிரஸ் சென்று சமையலறைக்குள் நுழைந்தார். அங்கு ஒருவரும் இல்லாததைப் பார்த்து, பாபா, உணவு சேமிப்பு அலமாரியிலிருந்து ஒரு துண்டு ரொட்டி மற்றும் சில காய்கறிகளை எடுத்து உணவு தயார் செய்து, அங்கேயே நின்று சிற்றுண்டியை உண்ணும் வேளையில், குலாமாசி உள்ளே வந்து, அவரது சமையலறையில் ஏதோ ஓர் அந்நியன் நிற்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அவர் பாபாவை அடையாளம் கண்டுகொள்வதற்கு முன்பு, “யார் அங்கே?” என்று கத்திய சத்தத்தைக் கேட்டு, ஷிரின், அவரது மகள்கள், மெஹரு மற்றும் கோர்ஷெத் ஆகியோர்

சமையலறைக்கு ஓடி வந்தனர். பாபாவைப் பார்த்ததும், அவர்கள் திகைத்துப் போயினர். குலாமாசி, “பாபா, நீங்கள் ஏன் எப்போதும் இரவில் வரும் திருடனைப் போல வருகிறீர்கள்?” என வினவினார்.

**“ஆமாம், நான் ஒரு திருடன்; நான் உங்கள் இதயங்களைத் திருடாவிடில், நீங்கள் என்னை எப்படி நினைவில் கொள்வீர்கள்?”** என்று சைகையால் கேட்டார்.

பாபா, பின்னர் அவர்களிடம் ‘**திருடன்! திருடன்!**’ என்று சத்தமாகக் கத்தும்படிக் கூறினார். அவர்கள் கதறும் குரலைக் கேட்டு, குடும்பத்தின் அனைத்து ஆண்களும் சமையலறைக்கு விரைந்து வந்து, அங்கு என்ன பரபரப்பு என்பதைப் பார்த்து, அனைவரும் திடுக்கிட்டுப் போயினர்; அவர்கள் மத்தியில் பாபாவைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தனர். பாபாவின் நகைச்சுவை நாடகம் அனைவரும் ரசிக்கும்படியாக இருந்தது.

பாபா, நஸர்வானிடம் திரும்பி, **“உங்களுக்குத் தெரியுமா, உங்களிடமிருந்து 1925இல் எடுத்துக்கொண்ட கம்பளி போர்வையை நான் இன்றும் பயன்படுத்துகிறேன்”** என்றார்.

நஸர்வான் 1925இல் பாபாவின் தரிசனத்திற்காக மெஹராபாத் சென்றிருந்த வேளையில், குளிருக்காக ஒரு கம்பளி போர்வையைத் தோளில் அணிந்திருந்தார். பாபா அவரிடம் அதைக் கேட்க, நஸர்வானும் மனமுவந்து கொடுத்தார். இரவு நேரங்களில் பாபா அதைப் போர்த்திக்கொள்வதில் குறிப்பாக இருந்தார். முழு ஸட்டா மற்றும் தமானியா குடும்பங்களும் பாபாவின் நெருங்கிய தொடர்புக்கு வந்ததன் ஊடகமாக இந்தக் கம்பளி போர்வை நிரூபித்தது, ஏனெனில் அந்த நிகழ்விற்குப் பின்னர், இரண்டு குடும்பங்களின் இதர உறுப்பினர்களும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். பாபா அந்தப் போர்வையை மிகவும் பத்திரமாக வைத்து, பல வருடங்களாக அதைப் பயன்படுத்தி, இந்த பாக்கியவான்கள் மீதான அன்பையும் தொடர்பையும் வெளிப்படுத்தினார்.

1925ஆம் ஆண்டில், மெஹராபாத்திற்குப் பாபாவைப் பார்க்க வந்த வேறொரு தருணத்தில் (பாபாவின் மௌனம் தொடங்குவதற்கு முன்பு), நஸர்வான், பாபாவிடம் தியானம் செய்ய ஒரு மந்திரத்தைக் கேட்க விரும்பினார். இது நீண்ட காலமாக அவரது மனதில் இருந்தாலும் அவர் அதைக் குறித்து பாபாவிடம் எதுவும் சொன்னதில்லை. அவர் மெஹராபாத்திற்கு வந்தபோது, பாபா அவரை தனது குடிலுக்குள் அழைத்துச் சென்று, **“இன்று, நான் உங்களுக்கு ஒரு குரு மந்திரத்தை வழங்கப் போகிறேன்”** என்று கூறி, நஸர்வானின் காதில் முணுமுணுத்தார், **“அஹுரமஸ்தாவை** (AHURAMAZDA) **தினமும் உங்கள் இதயத்திலிருந்து நினைவில் கொள்ளுங்கள்.”**

இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு, நஸர்வானிடம் பாபா, **“உங்களுக்கு மேலும் ஒரு மந்திரம் வேண்டுமா?”** என்று கேட்டார்.

நஸர்வான் பதிலளித்தார், "இல்லை பாபா, அது தேவையில்லை. உங்கள் அன்பைப் பெறுவதுதான் எனது மந்திரம்."

மெஹரு தமானியா, பாபாவிடம், "இப்படி எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வாருங்கள். இப்போதெல்லாம் நீங்கள் அடிக்கடி வருவதில்லை" என்று கூறினார்.

"**ஆனால் நான் எப்பொழுதும் இங்கே இருக்கிறேன்**" என்று பாபா அறிவித்தார்.

"நாங்கள் உங்களைப் பார்ப்பதில்லை," என்றார்.

"**என்னைப் பார்க்க முயற்சி செய்யுங்கள்; எப்பொழுதும் என்னை உண்மையாக நினைத்து, என்னுள் தொலைந்து போவீர்களேயானால், நீங்கள் என்னைப் பார்ப்பீர்கள். நீங்கள் உங்களை முன்னால் வைத்து, என்னைப் பின்னால் வைப்பீர்களேயானால், என்னை எப்படிப் பார்க்க முடியும்,? 'உங்களை' நீக்கி, நீங்கள் என்னைப் பாருங்கள்!**"

பாபா, மெஹருவின் மாமாவான பிலூ மாமாவிடம் திரும்பி, எழுத்துப்பலகையில் உச்சரித்தார், "**நீங்கள் விரும்பும் வரை என்னைப் பாருங்கள். நீங்கள் என்னைப் பார்க்க விரும்பும் நேரம் வரும்போது, நான் தெரிய மாட்டேன். உங்களிடையே, உங்களுடன் சுவாரஸ்யமாகவும் வேடிக்கையாகவும் உரையாடிப் பேசும் அளவிற்கு நீங்கள் அனைவரும் எவ்வளவு பாக்கியவான்கள். இதன் முக்கியத்துவத்தை நீங்கள் பின்னர் அறிவீர்கள்.**"

மக்னிராம் (MAGNIRAM) என்றழைக்கப்பட்ட மார்வாடி ஒருவர், அக்பர் பிரஸ்ஸுக்கு வழக்கமாக வருவதுண்டு. மிக்க செல்வந்தரான அவர் ஒரு முறை மெஹராபாத் சென்று, பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்ட மக்னிராம் அவரிடம், "நான் உங்களுக்கு சில தானியங்களைப் பரிசாக அனுப்பலாமா?" என்று கேட்டார்.

பாபா அவரிடம், "**எனக்கு பரிசுகள் வேண்டாம், எனக்கு உயிர்கள் வேண்டும்! ஆனால், தன் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் ஒருவரை நான் கண்டுகொள்ள முடியவில்லை**" என்றார்.

மக்னிராமை நினைவுகூர்ந்து, பாபா நகைச்சுவையாக நஸர்வானிடம் கூறினார், "**இப்போது எனக்குத் தானியங்கள் தேவைப்படும் வேளையில்** (ஒரு மாதக் கூட்டத்திற்கு), **அதை எனக்கு வழங்க எவரும் தயாராக இல்லை! இன்று, நான் அவருடைய ரொட்டியைச் சாப்பிட்டேன் என்பதற்காக, ஷிரின் எப்படி என்னை ஒரு திருடனாக எடுத்துக்கொள்கிறார் பாருங்கள்!**"

ஷிரின் கூறினார், "நீங்கள், சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு திருடன் - ஆனால் உங்கள் திருட்டுத்தனத்தை நாங்கள் விரும்புகிறோம்."

"**நீங்கள் அத்தகைய சுவையான உணவைத் தயார் செய்கிறீர்கள், அதைத் திருடி சுவைப்பதை என்னால் தவிர்க்க முடியாது.**"

“நீங்கள் அதைத் தினமும் திருடினால், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்!”

**“அதை நான் செய்வேன், ஆனால் எவரேனும் என்னைப் பிடித்து அடித்தால்.... அப்போது?”**

இவ்வாறு, தனது பழைய, நெருக்கமான அன்பர்களுடன் சுவாரஸ்யமாக உரையாடி, தனது நேரத்தைக் கழித்த பிறகு, பாபா, ரூஸி பாப் இல்லத்திற்குத் திரும்பி வந்து, ஹைதராபாத் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

# ஹைதராபாத் & மெஹராபாத்

**(Hyderabad & Meherabad)**

மெஹர் பாபா, முன்கூட்டியே பெண்டு, பைதூல், கிருஷ்ணா மூவரையும் ஹைதராபாத்துக்கு அனுப்பிவிட்டு, 1945, மார்ச் 9 வெள்ளிக்கிழமை அன்று, இதர ஆண், பெண் மண்டலி மற்றும் செல்லப்பிராணியான நாய் டைஃபூனுடன் புறப்பட்டு அனைவரும் அடுத்த நாள் வந்து சேர்ந்தனர். 'ஜூபிலி ஹில்ஸ் பங்களா' இன்னும் தயாராகாத நிலையில், பெண்டு, டாக்டர் டான் இருவரும் ஸெக்கந்திராபாத்தில், பெண்மணிகளுக்கு வசதியாக வேறொரு வீட்டை மூன்று வாரங்களுக்கு வாடகைக்கு எடுத்தனர். பாபாவுடன் வந்த பெண் மண்டலி - மெஹரா, மணி, மெஹரு, நாஜா, வாலு, ரானோ, கிட்டி மற்றும் மார்கரெட். மெஹராபாத்தில் இருந்த இதர பெண்மணிகள், அடுத்த ஆறு மாதங்களில் ஒவ்வொரு குழுவாக அழைக்கப்படுவதாகத் திட்டம்.

பாபாவுடன் அப்போது இருந்த ஆண்களில் ஆதி சீனியர் (இடையிடையே வந்து சென்றார்), பைதூல், டாக்டர் கனி, குஸ்தாஜி, காக்கா, கிருஷ்ணா, டாக்டர் நீலு, விஷ்ணு, வெங்கோபா ராவ் ஆகியோர் அடங்குவர். இதர மண்டலி மெஹராபாத்திலும், எரச் பூனாவில் பிந்த்ரா ஹவுஸிலும் வாழ்ந்து வந்தனர். பாபா, அவ்வப்போது எரச், பாதிரி, பெண்டு, காளேமாமா ஜால்பாய் ஆகியோரை அழைப்பதுண்டு. டாக்டர் தேஷ்முக் நாக்பூரிலிருந்து பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் ஹைதராபாத் வருவது வழக்கம்; பாபாவின் அறிவுறுத்தலின்படி அவர் எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

ஹைதராபாத் வந்ததும், மெஹர் பாபா தனது மஸ்த் பணியைத் தொடங்கி, தினமும் காக்கா, பைதூல் இருவருடன் வெளியே சென்றார். மேல்நிலை மஸ்துகளில் 'மக்தும்' (MAQDUM) என்பவர் ஒரு பழைய துறவி, எங்குச் சென்றாலும், "யா ஹுஸைன்... யா ஹுஸைன்..." (YA HUSSAIN... YA HUSSAIN..) என்று படுகொலை செய்யப்பட்ட முஹம்மது நபியின் பேரனுக்காகக் கதறிவந்தார். அவர் நகர சிறைக்கு அருகிலுள்ள ஒரு சிறிய அறையில் வசித்து வந்தார், அதில் அவர் மஸ்துகளைப் போல, குப்பைக் கூளங்களை சேகரித்தார். பாபா அவரை சந்தித்த வேளையில், அவரது இல்லத்தில் பல அலைந்து திரியும் நாய்க்குட்டிகள் இருந்தன.

'சமன் அலிஷா' (CHAMAN ALISHAH), என்றழைக்கப்பட்ட ஆழ் மன உணர்வு நிலையில் இருந்த மேலும் ஒரு மேல்நிலை மஸ்த், சுமார் 40 வயது, உயரமான மற்றும் தாடியுடன், அவர் ஒரு கருப்பு மேலங்கியை அணிந்து, புறாக்களை செல்லப்பிராணிகளாக வைத்திருந்தார். அவர் தொடர்ந்து வேறு வேறு குரலில் தனக்குத்தானே உரக்க பேசுவது வழக்கம்; அவருடைய பேச்சுக்குச் செவிமடுத்த வழிப்போக்கர், பல மனிதர்கள் ஒன்றாகக் கூடிப் பேசிக்கொண்டிருந்ததாக நினைத்ததுண்டு. பாபா அவரைப் பார்த்தபோது, சமன்,

ஆச்சரியத்துடன், “மேர்வான் நேற்று வரவிருந்தார், ஆனால் அவர் இன்று வந்துவிட்டார்!” என்று கூறியதைக் கேட்க முடிந்தது.

‘குலாம் ஹுஸீன்’ (GHULAM HUSSEIN) என்பவர் ஓர் உயர் நிலை ஸலிக்கை போன்ற மஸ்த், எப்பொழுதும் மிகவும் அழகாக உடை அணிந்து வந்ததால், ‘ஜென்டில்மேன் சாது’ (GENTLEMAN SADHU) என்று குறிப்பிடப்பட்டார். அவர் ஹைதராபாத் நகரில் நன்கு பிரபலமானவர் மற்றும் மரியாதைக்குரியவர், அவர் எங்குச் சென்றாலும் மக்கள் அவரைப் போற்றி வணங்கினர்.

‘அப்காரி’ (ABKARI - கப்பல் தலைவன் என்று பொருள்) ஒரு மாலுமியைப் போல, நீல நிற டெனிம் (DENIM) உடையுடன், கருப்புக் கண்ணாடியும் அணிந்திருந்த உயரமான முதியவர். அவர் ஒரு தகர கொள்கலனைக் கையில் எடுத்துச் சென்று, அதை ஒரு மத்தளம் போல் அடித்தார். அவரது அர்த்தமற்ற வார்த்தைகளை எந்த ஒரு சாதாரண மனிதனாலும் புரிந்து கொள்ள முடியாது. ஒரு விசித்திரமான தோற்றம் மற்றும் பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தபோதிலும், அவர் ஒரு நவாபின் ((முஸ்லிம் இளவரசர்) அரச மாளிகையில் மரியாதையுடன் நடத்தப்பட்டு, இரவில் அங்கேயே தூங்கினார்.

மேலும், பாபா விரும்பிய ஒரு நபர், அவர் மஸ்த் நிலையை எட்டாத ஆனால் ஒரு தீவிர ஆர்வலர் என்றாலும், ‘இஸ்லாம் சௌவுஸ்’ (ISLAM CHAOUS) என்றழைக்கப்பட்ட அவர் ஓர் அரேபியராக இருந்தார், எப்பொழுதும் மகிழ்ச்சிகரமான மனநிலையைக் கொண்டிருந்தார். அவர் அனைவருடனும் நகைச்சுவையாகப் பேசி, பழகி, இரவில் கல்லறையை அவரது தங்குமிடமாக அமைத்து, எவ்வேளையிலும் ஆச்சரியமூட்டும் அளவிற்கு மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். பாபா, இஸ்லாம் சௌவுஸின் நல்லியல்பையும் நகைச்சுவையையும் பெரிதும் விரும்பினார்.

‘காக்கி ஸாஹேப்’ (KHAKI SAHEB), ஒரு வயதான மஸ்த், ‘பாபா ஷரா:ஃபுதீன்’ (BABA SHARAFUDDIN) என்ற சாதுவின் சன்னதிக்கு எதிரே ஓர் எளிமையான வீட்டில் வாழ்ந்து வந்தார். அவர் தன்னை முற்றிலும் தனிமைப்படுத்தி, பெரும்பாலான நாட்களை வீட்டின் அறையில் தனியாகக் கழித்தார்.

1945ஆம் ஆண்டில், ஸையத் முய்னுதீன் - SAYYED MU’INUDDIN (மஜ்ஜூப் மியான் - MAJZOOB MIAN என்றும் அழைக்கப்படுகிறார்), ஒரு முடமான முதியவர், ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட, அச்சுறுத்தும் குணம் படைத்த ஜலாலி மஸ்த். அந்தக் காலகட்டத்தில் அவர் ஹைதராபாத்தின் ஆன்மீகப் பொறுப்பாளராக இருந்தார். இருப்பினும், அவர் தன்னடக்கத்துடன் அவரது கைகளால் சாலையை சுத்தம் செய்து, விரும்பிய இனிப்பான பர்ஃபியைக் (BARFI) கேட்டு வாங்குவதோடு அதிக அளவில் தொடர்ந்து சிகரெட் புகைப்பதையும் பழக்கமாகக் கொண்டிருந்தார். அவருடைய மூர்க்கத்தனமான குணத்தால் அவரை அணுகுவது சிரமம் என்ற நிலையில், பாபாவும் மண்டலியும் அவரை முதல்முறையாக அணுகியபோது, மஸ்த் வண்ணமயமான சாப மழை பொழிந்து துரத்தினார்; உண்மையில், பைதூல் அவரை நெருங்க முயன்றபோது,

முய்னுதீன் அவரை ஒரு கல்லால் அடித்து விரட்டினார். இறுதியில், அவருக்குப் பிடித்தமான சிகரெட்டுகள் மற்றும் இனிப்புகளை வழங்கி, பைதூல், மஸ்தின் மனநிலையைத் தணியச் செய்த அவ்வேளையில், விரைவில் பாபா அவரை வெற்றிகரமாகத் தொடர்பு கொள்ள முடிந்தது மட்டுமல்லாமல், இந்தத் தொடர்பு பாபாவை மிகவும் மகிழ்வித்தது.

ஹைதராபாத் நகரில் மெஹர் பாபா தொடர்பு கொண்ட பிற மஸ்துகள் மற்றும் யாத்திரிகர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். கெய்ராதாபாத் (KHAIRATABAD) நகரின் உள்ளூர் பகுதியில், ரயில் நிலையத்திற்கு அருகில், மஸ்துகளுடன் பணிபுரிய ஒரு மண்டபமும் வாடகைக்கு எடுத்து, அங்கு பாபா அவர்களுடன் தனியாக அமர்ந்திருந்தார். மெஹர் பாபா ஹைதராபாத்தில் மஸ்துகளுடன் பணியாற்றியது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில், இந்தியாவில் வேறு எந்த நகரத்திலும், ஹைதராபாத்தில் செய்ததைப் போல மஸ்துகளுடன் பணிபுரியவில்லை - ஏறக்குறைய 70 மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்! இந்த நேரத்தில் பல மஸ்துகளுடனான பாபாவின் தொடர்புகள் இரண்டாம் உலகப் போரை முடிவிற்குக் கொண்டுவந்ததாகத் தோன்றியது.

1945, ஏப்ரல் 1 அன்று, எரச், ஜால்பாய் இருவரும் பூனாவிலிருந்து ஹைதராபாத்திற்கு வந்த அதே நாளில், பாபாவும் பெண்மணிகளும் 'ஜூப்ளி ஹில்ஸ்' பங்களாவிற்குச் சென்றனர். ஏப்ரல் 10 அன்று, ஹைதராபாத்தில் ஒரு மாதம் தங்கிய பிறகு, காக்கா, பைதூல், எரச் ஆகியோருடன் பாபா, பீதர் (BIDAR) கிராமத்திற்குச் சென்று, நான்கு மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். 'மௌலானா அப்துல் ஹக்' (MAULANA ABDUL HAQ) என்றழைக்கப்படும் ஒரு மஸ்த், ஆடைகளை அடுக்கடுக்காக வித்தியாசமாகவும், மேலும் டன்லப் (DUNLOP) டயர் விளம்பரங்களில் இடம்பெறும் 'உருளை உருவ' பாத்திரத்தை ஒத்திருக்கும் ஒரு தலைப்பாகையையும் அணிந்திருந்ததால், பாபா அவருக்கு 'டன்லப்' என்று பெயர் சூட்டினார்.

'ஸித்திக் ஷா' (SIDDIQ SHAH) எனும் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மேல்நிலையை அடைந்த மஜ்ஜூப்பை ஒத்த துறவியை, பாபா பீதரில் தொடர்பு கொண்டார். வயதான, உயரமான, மெல்லிய மனிதர், அவர், லேசான ஜமாலி குணத்தை வெளிப்படுத்தினார்; எப்பொழுதும் மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தார். விந்தையான விஷயம் என்னவெனில், சித்திக் ஷா எப்போது, எங்கு சென்றாலும், அவருக்கு அரைகுறை மஸ்த் அல்லது அரைப் பைத்தியம் என்ற தோற்றத்தோடு ஒரு நகைச்சுவையான பக்கமும் இருந்தது.

உள்ளூர்வாசிகள், எப்பொழுதுமே புரிந்துகொள்ள முடியாத பொருளற்ற முறையில் ஒன்றாகப் பேசுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

ஏப்ரல் 12 அன்று கன்டஹார் (KANDAHAR) கிராமத்தில், பாபா 'ஃபத்ரு மியான்' (FATRUH MIAN) என்ற மிகச்சிறந்த மஸ்தைக் கண்டுகொண்டார்; அவர் தண்ணீரில் நின்று 'குரானை' பல மணிநேரம் சத்தமாக வாசித்தார். முதலில் இந்த மஸ்த் அவரது 'மயக்க' நிலையிலிருந்து வெளியே வரவில்லை, ஆனால்

அவரது சகோதரரின் தீவிரமான வற்புறுத்தலின் காரணமாக, “தொலை தூரத்திலிருந்து வந்த பெரியவர்’ இவரைப் பார்க்க வேண்டும் என்று அறிவுறுத்திய வேளையில் ‘ஃபத்ரு’, குரான் படிப்பதை நிறுத்திவிட்டு தனிப்பட்ட முறையில் பாபாவுடன் தொடர்பு கொண்டார்.

கன்டஹாரில் இருந்த வேளையில், பாபா மற்றும் மண்டலி, ஏழு மைல் தொலைவில் அமைந்த ‘லாகா’ (LAWHA) கிராமத்தில் ‘நிவ்ருத்தி மஹாராஜ்’ (NIVRUTI MAHARAJ) என்ற சிறந்த ஒரு மஸ்த் இருப்பதைக் கேள்விப்பட்டு, அந்தக் கிராமத்திற்கு போக்குவரத்து இல்லாததால், அவர்கள் ஒரு மாட்டு வண்டியை வாடகைக்கு எடுத்து, மேடு பள்ளம் நிறைந்த மண் சாலை வழியாக மிகவும் சிரமப்பட்டு சவாரி செய்தனர். இறுதியில், வெறிச்சோடிய அந்த இடத்தைச் சென்றடைந்தபோது, அவர்களின் உடல்கள் முழுவதும் தூசியால் மூடப்பட்டிருந்தன. ஏற்கனவே சோர்வடைந்த நிலையில், அந்த மஸ்த் அங்கிருந்து மறைந்துவிட்டதை அறிந்து ஏமாற்றத்துடன், வந்த வழியில், கும்மிருட்டில், அதே பயங்கரமான, கடினமான சாலையில் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது.

அவர்கள் திரும்பி வந்த வேளையில், அமெரிக்க அதிபர் ஃபிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் (FRANKLIN D. ROOSEVELT) அன்று மரணமடைந்தார் என்ற செய்தி அவர்களின் காதுகளை எட்டியது.

மெஹர் பாபா, மஸ்தைத் தொடர்பு கொள்ள மட்டுமே இத்தனை சிரமங்களையும் அனுபவித்தார், ஆனால் எந்த விதமான உள் தொடர்பும் இல்லை என்று சொல்ல முடியாது. ஆன்மீகத் தளங்களில் முன்னேறிய ஆன்மாக்களைத் தொடர்பு கொள்வதற்கு, பாபா அவருக்கே உரித்தான பல்வேறு வழிகளைக் கொண்டிருக்கும் விதத்தில் அவரது ‘கண்ணுக்குத் தெரியாத’ தொடர்புக்கான சாத்தியத்தை நிராகரிக்க முடியாது. மேல்நிலை ஆன்மீகத் தளங்களில் தொடர்பை சாத்தியமாக்க, பாபா எல்லா வழியிலும் பயணம் செய்வது அவசியமாக இருக்கலாம். (பின்னர், ஆகஸ்ட் 1945இல், நிவ்ருத்தி மஹாராஜை நேரடியாகத் தொடர்பு கொண்டார்.)

ஏப்ரல் 14ஆம் நாள் ‘நான்தேட்’ (NANDED), ‘போங்கிர்’ (BHONGIR) போன்ற இடங்களுக்குப் பயணம் செய்த பின்பு, பாபா ஹைதராபாத் திரும்பிய அன்றைய தினம், ஆதி சீனியர் குறிப்பிட்ட பணிக்காக அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அஹமதுநகரிலிருந்து ஏப்ரல் 21 அன்று ஹைதராபாத்துக்கு அழைத்து வரப்பட்ட ‘அலி ஷா’வுடன், அடுத்த பத்து நாட்கள் பாபா தனிமையில் பணிபுரிந்தார். அவ்வேளையில் நேச நாட்டுப் படைகள் ஜெர்மன் பகுதிக்குள் நுழைந்தன. பல ‘நாஸி’ ஒருங்கிணைப்பு முகாம்களிலிருந்து, போர்க்கைதிகள் விடுவிக்கப்பட்ட இந்த நேரத்தில்தான் 60 லட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் அழிக்கப்பட்ட முகாம்களில் நடந்த இனப்படுகொலையின் கொடூரத்தின் முழு அளவையும் உலகம் முதலில் அறிந்துகொண்டது.

1945, ஏப்ரல் 22 அன்று டாக்டர் தேஷ்முக் ஹைதராபாத் வந்து ஒரு வாரம் தங்கினார்.

25ஆம் தேதி நண்பகலில், பாபா தன்னிச்சையாக இந்தக் கவிதையை இயற்றினார்:

**தேவாலயத்தில் பிறப்பது ஒரு பாக்கியம்**
**அதில் இறப்பதோ ஒரு சாபம்.**
**நம்பிக்கையின்மையை ஒரு குருநாதரின்**
**சகவாசம்தான் விலக்க முடியும்.**

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், 1940இல், மெஹர் பாபா, '**முஸோலினி இறுதியில் வன்முறையில் கொல்லப்படுவார்; ஹிட்லர் தற்கொலை செய்து கொள்வார்**' என்று கூறினார். 1945 ஏப்ரல் மாதத்தில், முஸோலினி சுவிட்சர்லாந்து நாட்டுக்குத் தப்பி ஓட முயன்றபோது, அவர், இத்தாலிய தீவிர ஆதரவாளர்களால் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். அதன் பின்னர், அவரது உடல் மிலனுக்கு (MILAN) கொண்டு வரப்பட்டு, அங்கு பெட்ரோல் நிலையத்தில் பொதுமக்கள் பார்வைக்காக, தலைகீழாகத் தொங்கவிடப்பட்டது.

1945, மே 1 செவ்வாய்க்கிழமை அன்று, அலி ஷா அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டார், மேலும் பாபா, 'குளுக்கோஸ் டி' (GLUCOSE D) கலந்த தண்ணீரில் பத்து நாட்கள் உபவாசத்தைத் தொடங்கி, கடைசி இரண்டு நாட்களில் தண்ணீர், ஆரஞ்சு ரசம் போன்றவற்றைப் பருகினார். அதே நாளில், இந்தியா முழுவதும், மார்ச் மாதம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க, பாபாவின் நெருங்கிய மண்டலி ஒரு நாள் உபவாசம் கடைப்பிடித்தனர். உபவாச வேளையிலும், பாபா, மஸ்த் தொடர்புகளுக்காக நகரத்திற்கு வெளியே சென்றார். அலி ஷாவுடனான பாபாவின் பணி மற்றும் அவரது உபவாசத்தின் முக்கியத்துவத்தை, மே 1ஆம் நாள், நேச நாடுகள் ஒன்றிணைந்து பெர்லின் நகரைக் கைப்பற்றப் போவதை அறிந்த அடோல்ஃப் ஹிட்லர் (ADOLF HITLER), முந்தைய நாள் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தியை வானொலியில் கேட்டபோது, மண்டலி அனைவராலும் உணர முடிந்தது. பின்னர், அனைத்து 'நாஸி' தலைவர்களுக்கும், தங்கள் செயல்களின் எதிர்வினைகளை சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது போல, ஹிட்லர் அவரது செயல்களின் விளைவுகளை எதிர்கொள்ளாமல் தன்னைக் தானே கொன்றுவிட்டார் என்பதில் பாபா, தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

1933ஆம் ஆண்டில் ராவல்பிண்டியைச் (RAWALPINDI) சேர்ந்த கிஷன் ஸிங் (KISHAN SINGH) என்பவர், மெஹர் பாபாவைப் பற்றி முதல்முறையாகக் கேள்விப்பட்டார். அவர் 1941 மே மாதம் அவரை, டெஹ்ரா டூனில் சந்திக்க முயன்ற நேரத்தில், பாபா ஏற்கனவே அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். அதன் பின்னர், ஆதி சீனியர் மூலம் பாபாவுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினார், மேலும் அவரது தரிசனத்திற்காக ஏங்கினார். மே 24ஆம் தேதி திட்டமிடப்பட்ட கூட்டத்திற்கு அழைக்கப்பட்டாலும் உத்தியோகபூர்வமான பணி காரணமாக விடுப்பு பெற இயலாத நிலையில், அவர் கலந்து கொள்ள முடியாமலாயிற்று.

இறுதியாக, 1945 மே 3 அன்று, கிஷன் ஸிங், இத்தனை வருடங்களுக்குப் பிறகு, பாபாவின் தரிசனத்தைப் பெறும் தீர்மானத்துடன் ஹைதராபாத்திற்கு வந்தார். பாபா தங்கும் இடத்தின் முகவரி சரியாகத் தெரியாமல், நகரம் முழுவதும் தேடி அலைந்து, பின்னர் ஒரு டோங்கா டிரைவர் அவரை மண்டலி இல்லத்திற்கு அழைத்து வந்தார்; அங்கு அவர் விஷ்ணுவை சந்தித்தபோது, விஷ்ணு அவரைக் கடுமையான வார்த்தைகளால் வரவேற்றார்: "பாபா எவரையும் பார்க்கவில்லை. அவர் உபவாசம் கடைப்பிடிக்கிறார். இப்போது நீங்கள் புறப்பட்டாக வேண்டும்."

கிஷன் அவ்வளவு எளிதாக மனம் தளராமல், "பாபாவே இந்த தரிசனத்திற்கான அமைதியின்மையை என் இதயத்தில் உருவாக்கியுள்ளார், அவருடைய தரிசனம் இல்லாமல் நான் போகமாட்டேன்" என்று பதிலளித்தார்.

"பாபா உங்களை அழைத்ததால், நீங்கள் இங்கு வந்தீர்களா?" என விஷ்ணு கேட்டுக்கொண்டே, "இப்போது, நீங்கள் திரும்பிச் செல்லவேண்டியது பாபாவின் கட்டளை" என்றார்.

கிஷன் பிடிவாதமாக இருந்தார். "நான் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன். நான் செல்வதை நீங்கள் விரும்பினால், அவருடைய தரிசனத்தை எனக்கு அனுமதிக்கவும்."

"நீங்கள் போகவில்லை என்றால், நான் உங்களை வலுக்கட்டாயமாக வெளியே அனுப்ப வேண்டியது வரும்!" என்று விஷ்ணு மிரட்டினார். "பாபாவின் அனுமதியின்றி, ஓர் அரசன் கூட அவரைப் பார்க்க முடியாது!"

உண்மையில், கிஷன் ஸிங் ஒரு செல்வாக்கு மிக்க அரசு அதிகாரி; இருப்பினும், 'பாபாவின் மண்டலி, அவரால் அறிவுறுத்தப்பட்டால், தாழ்மையுடன் ஏழை மற்றும் பிச்சைக்காரர்களுக்கும் கூட துப்புரவாளராகப் பணியாற்றக்கூடியவர்கள், அதேநேரத்தில் பேரரசர்கள் பாபாவின் முன்னிலையில் நுழைவதைத் தடுக்கும் திறனும் படைத்தவர்கள்' என்று அவருக்குத் தெரியாது,.

கிஷன் ஸிங், மே மாதத்தில் வரமுடியாதது குறித்த தனது கஷ்டங்களை விளக்கிய வேளையில், விஷ்ணு அனுதாபப்பட்டார்: "நான் உதவியற்றவனாக இல்லாவிடில், உங்களை அவரிடம் அழைத்துச் சென்றிருப்பேன், ஆனால் அது அவருடைய கட்டளை. இந்த நேரத்தில், பாபா உபவாசம் கடைப்பிடிப்பதால் எவரையும் பார்ப்பதில்லை. இது அவரது பத்து நாள் உபவாசத்தின் மூன்றாவது நாள்."

"நான் பத்து நாட்கள் இங்குக் காத்திருப்பேன்" என்று கிஷன் பதிலளித்தார்.

"நீங்கள் இங்குத் தங்க முடியாது, ஆனால் நீங்கள் வேறு இடத்தில் தங்கி, தரிசனம் வேண்டி, பாபாவிடம் ஒரு சிறிய விண்ணப்பத்தை வைக்கலாம். நான் அதை அவருக்கு அனுப்பி அவர் என்ன சொல்கிறார் என்று பார்க்கிறேன்."

கிஷன் அதற்கு இணக்கம் தெரிவித்து, தனது மனமார்ந்த விண்ணப்பத்தை எழுதினார். அவர் அதை முடித்த அந்தத் தருணத்தில், பைதூல்

அவர்களைக் கடந்து செல்லவே, கிஷனின் கடிதத்தை பாபாவிடம் எடுத்துச் சென்று, ராவல்பிண்டியைச் சேர்ந்த மனிதனைப் பற்றிக் கூறுமாறு கேட்டுக்கொண்டார். கிஷன் அவரை 200 கெஜம் தூரத்திலிருந்து இரண்டு நிமிடங்கள் பார்க்க முடியும் ஆனால் கிஷன் அவரை தலை தாழ்த்தி வணங்கக்கூடாது என்று பாபா, பைதூல் மூலமாகச் செய்தியை அனுப்பினார்.

கிஷன் ஸிங் அதற்கு ஒப்புக்கொள்ள, பைதூல் அவரை பாபாவின் அறை வாசலுக்கு அழைத்துச் சென்றார்; மீண்டும், தலை தாழ்த்தியோ அல்லது தரையில் விழுந்து பாபாவை வணங்கவோ கூடாது, ஆனால் கைகளைக் கூப்பி வணங்கலாம் என்று நினைவூட்டினார். கிஷன் ஸிங் 'ஜூபிலி ஹில்ஸ்' பங்களாவின் வாயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில், பாபா வீட்டை விட்டு பால்கனியில் வந்தார். அப்போது அவரைப் பார்த்ததைப் பற்றிய கிஷன் ஸிங்கின் விளக்கம் கீழ்வருமாறு:

பாபா பால்கனியில் தோன்றியபோது, நான் அவரிடம் பார்த்ததை, விளக்குவது அல்லது எழுதுவது என்பது எனது சக்திக்கு அப்பாற்பட்டது. முதல் பார்வையில் நான் வியப்புக்குள்ளாகி திகைத்துப்போனேன் என்று சொன்னால் போதுமானது. பாபாவின் முகத்தில் தென்பட்ட பிரகாசம், அவருடைய ஆன்மீக மகத்துவத்தையும் பொருட்படுத்தாமல் - அவர் அவதார புருஷர் அல்லது சத்குரு, அல்லது ஒரு சாதாரண துறவியாக இல்லாவிட்டாலும், முழு மனதுடன் அவரிடம் சரணடைய என் மனதை ஈர்த்தது! பாபாவின் புன்னகைக்கும் முகபாவம் என் இதயத்தில் அவரிடம் நான் வைத்திருந்த சிறிய அன்பின் பிணைப்பை உறுதிப்படுத்தியது. அவருடைய அற்புதமான கண்கள் எதிர்காலத்தில் எனக்காக என்ன காத்திருக்கிறது என்பதன் குறியீட்டை உருவாக்கியது. உண்மையில், நான் இப்போது என் இதயத்தில் ஒரு புதிய சகாப்தத்தின் விடியலை உணர்ந்தேன்.

திகைப்பூட்டும் பரவச நிலையில், கிஷன் ஸிங், பாபாவின் அனைத்து அறிவுறுத்தல்களையும் முற்றிலுமாக மறந்து, அவரை வணங்கி சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்தார். பைதூல் உரத்த குரலில் அவரை எழுப்பி, தடுக்க முயன்றார்!

சரியாக இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, பாபா கைகளைத் தட்டிவிட்டு மீண்டும் பங்களாவிற்குள் சென்றார்; பைதூல், கிஷனை அவரது சுய உணர்வுடன் எழுந்து நிற்க உதவினார். அவர் மண்டலி இல்லத்தில் உணவு உண்டு, பாபாவின் கட்டளைப்படி, தனது வீட்டிற்குச் சென்றார். ராவல்பிண்டிக்குத் திரும்பிச் சென்றவர், மெஹர் பாபாவைப் பற்றிய செய்தியைப் பரப்புவதைக் குறித்து ஆராயத் தொடங்கினார். அதற்குப் பிறகு, கிஷன் ஸிங் பாபாவின் பணியில் ஒரு முக்கிய இணைப்புச்சங்கிலியாக நிரூபிக்கப்பட்டார்.

ஜபல்பூரின் ஸுலூ மேஷ்ராம் (SULOO MESHRAM), 'ஆன்மீகப் பாதைக்கு ஏற்ற சிறுவன்', ஜூபிலி ஹில்ஸில் பாபாவை சந்தித்த வேளையில், பாபா,

**‘ஸுலூவின் தாயார், நிரந்தரமாக மண்டலியில் ஒருவராக ஸுலூ இணைவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பாரா?’** என்று கேட்டதற்கு ஸுலூ, ‘ஆமாம்’ என்று பதிலளித்து, பாபாவிடம் அவரது தாயார் அதை அனுமதிக்க மாட்டார் என்று கூறியது, பாபாவை ஏமாற்றமடையச் செய்ததுபோலத் தோன்றியது; சில நாட்களுக்குப் பிறகு ஸுலூவை அவரது இல்லத்திற்குத் திரும்பச் சொன்னார். பாபா, ஸுலூவை மிகவும் நேசித்தார், ஆனால் சூழ்நிலைகள் சிறுவனை அவருக்கு அருகில் இருக்க அனுமதிக்கவில்லை.

பாபாவின் உபவாசத்தின் போது போரின் நிகழ்வுகள் உச்சக்கட்டத்தை எட்டின. 1945, மே 7 அன்று, ஜெர்மன் இராணுவம் நிபந்தனையின்றி பெர்லின் நகரில் சரணடைந்த அடுத்த நாள், ஐரோப்பாவில் வெற்றி தினமாக கொண்டாடப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, மே 10ஆம் தேதி, பாபா தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசத்தை நிறைவு செய்தார்.

ஜூபிலி ஹில்ஸ் பங்களாவின் பின்புறத்தில் அமைந்த நீச்சல் குளத்தில் மார்கரெட் க்ராஸ்கே கிழக்கத்திய பெண்களுக்கு நீச்சல் கற்றுத்தந்தார்.

மார்கரெட் இந்நாட்களிலும் இங்கிலாந்தில் வாழும் டிலியா டிலியோனுடன் தொடர்ந்து கடிதப் பரிமாற்றம் செய்து கொண்டிருந்த வேளையில், டிலியா, வில் பேக்கெட்டுடன் இணைந்து பாபாவின் பெயரைப் பரப்பி வந்தார். அமெரிக்காவில், எலிஸபெத், மர்டில் பீச் (MYRTLE BEACH) மையத்தை மேம்படுத்துவதற்கான தனது திட்டங்களை முன்னெடுத்துச் சென்றார்; டார்வின் ஷா (DARWIN SHAW), ஃபிராங்க் ஈட்டன் (FRANK EATON), டேவிட் ப்ரூக்ஸ் (DAVID BROOKS), ஹில்டா ஃபக்ஸ் (HILDA FUCHS) மற்றும் சிலர் அங்குத் தங்கி எலிஸபெத்திற்கு உதவியாக இருந்தனர். நோரினா நியூயார்க் நகர், ஈ. 67ஆவது தெருவில் அமைந்த ஓர் அடுக்குமாடி குடியிருப்பில் மூன்று இளம் பெண்களுடன் வாழ்ந்து வந்தார் - ஃபிலிஸ் ஃப்ரெட்ரிக் (FILIS FREDERICK), அடெல் வோல்கின் (ADELE WOLKIN) மற்றும் டோலோரஸ் ஷா - DOLORES SHAW (டார்வின் ஷாவின் மருமகள்). நோரினாவுடன் தங்கியிருந்த நதீன் டால்ஸ்டாய் (NADINE TOLSTOY) உடலில் திசுக்கள் சம்பந்தப்பட்ட நோயால் பாதிக்கப்பட்டு உடல்நலம் சரியில்லாமல் இருந்தார்.

1943 டிசம்பர் மாதத்தில் ஃபிலிஸ், அடெல் இருவரும் நோரினா, எலிஸபெத், நதீன் ஆகியோருடன் வந்திணைந்தனர். மெஹர் பாபாவின் ‘ஆன்மீக சிந்தனை பரிமாற்றம்’ (SPIRITUAL THOUGHT TRANSMISSION) மூலமாக நோரினா, பாபாவின் அழைப்பை விடுத்து அவர்களை நெருக்கத்தில் கொண்டு வர முயன்றார்.

இரண்டு இளம் பெண்களும் நோரினா, எலிஸபெத் இருவருடன் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்தனர். அந்தக் காலகட்டத்தில், ரபியா மார்ட்டின் (RABIA MARTIN) அவர்களுடன் தங்க அழைக்கப்பட்டார்.

‘ரபியா மார்ட்டின்’ 70, 1911இல் இனாயத் கானால் (INAYAT KHAN) ஸு:பி பாரம்பரியத்தில் (SUFISM) அறிமுகப்படுத்தப்பட்டு, முழுமனதாக அதனுள் ஈர்க்கப்பட்டார், பின்னர் அமெரிக்காவில் ஸு:பியிஸத்தின் தலைவராக (முர்ஷிதா - MURSHIDA என்றழைக்கப்படும் பொறுப்பில்) நியமிக்கப்பட்டார். அமெரிக்காவில் மெஹர் பாபாவின் ஆன்மீக மையம் நிறுவுவதற்கு உகந்த இடங்களை ஆராயும் நோக்கத்தில் கலி:போர்னியா சென்றபோது, 1942இல் ‘ஸான் :பிரான்சிஸ்கோ’ நகரில் அவர் நோரினா, எலிஸபெத் இருவரையும் சந்தித்தார். நோரினாவின் பொது ஆன்மீக உரை ஒன்றில் அவர்களின் குருநாதரைப் பற்றிய விளக்கங்களைக் கேட்டறிந்த பிறகு, மெஹர் பாபா ஓர் அசாதாரண ஆன்மீக நபர் என்பதை ரபியா உறுதியாக நம்பினார். அதைத் தொடர்ந்து குருநாதரின் ஆக்கப்பூர்வமான உள் அனுபவத்தால் அவர் மிகவும் பாதிக்கப்பட்டார்; மேலும், மெஹர் பாபாவின் பயன்பாட்டிற்காக ஸான் :பிரான்சிஸ்கோவிற்கு அருகிலமைந்த ‘:பேர்:பாக்ஸ்’ (FAIRFAX) நகரில் அமைந்த அவரது ஸு:பி ஓய்வு மையத்தை அன்பு பரிசாக வழங்கினார். எலிஸபெத் இதைப்பற்றி இந்தியாவில் பாபாவிற்குத் தெரியப்படுத்தினார்: “ரபியாவின் இந்த அன்பளிப்பு இதயத்திலிருந்து வந்ததாகத் தோன்றியது, நாங்கள் கலி:போர்னியாவில் சந்தித்த அவர் ஆன்மீகப் பாதையில் மிகவும் முன்னேறிய, அறிவார்ந்த ஆன்மா என்பதை அனைவரும் மனமார ஏற்றுக்கொள்கிறோம்.”

அடுத்த மூன்று ஆண்டுகளில், ரபியா மார்ட்டின், பாபாவின் புத்தகங்களைத் தீவிரமாகப் படித்ததோடு, அவருடன் கடிதப் பரிமாற்றத்தையும் மேற்கொண்டார். நியூயார்க் நகரத்திற்கு மீண்டும் மீண்டும் வருகை தந்ததன் மூலம் அவர் நோரினா, எலிஸபெத் ஆகியோருடன் நெருக்கமான உறவில் வளர முடிந்தது. 1945 ஏப்ரல் மாதத்தில், நோரினா, எலிஸபெத் இருவரும் ரபியாவை அவர்களுடன் வாழ அழைப்பு விடுத்தனர். அவர் நியூயார்க் நகரிலும் பின்பு ‘மர்டில் பீச்’ மையத்திலும் ஜூலை மாதம் வரை அவர்களுடன் தங்கியிருந்தார். அந்த முக்கியமான காலகட்டத்தில், ரபியாவின், உத்வேகத்தால் உருவான உள் அனுபவங்கள், மெஹர் பாபா ஸு:பியிஸத்தின் உயிரூட்டத்திற்கான ஆதாரம் மற்றும் கடவுளின் தெய்வீக அவதாரம் - ரஸூல் அல்லது அவதார புருஷர் என்பதை உறுதிப்படுத்தியது.

1945 மே மாதத்தில், மர்டில் பீச் (MYRTLE BEACH) மையத்தில் இருந்தபோது, ரபியா மார்டின், அவரை பாபாவின் மாணவராக ஏற்றுக்கொள்ளும்படி கடிதம் மூலம் கேட்டுக்கொண்டார்; பின்பு பாபா அதை ஏற்றுக்கொண்டபோது, ஸு:பி பாரம்பரியத்தின் ஆன்மீக வழிகாட்டுதலுக்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும்படி, மேலும் கடிதம் எழுதினார்.

பாபாவின் பதிலைப் பெற்ற பின்னர், 1945 இலையுதிர்காலத்தில், ரபியா மார்ட்டின் தனது ஸு:பி மாணவர்களுக்கு, மெஹர் பாபாவின் வாழ்க்கை, பணி, போதனைகள் அனைத்தும் ஸு:பியிஸத்தின் சாராம்சம், அது இப்போதும் எதிர்காலத்தில் எப்போதும் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில், அவரது பணி

இப்போது பாபாவுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்றும், மாணவர்கள் அனைவரும் அவருடைய ஸூஃபி குழுவில் தொடர விரும்பினால், அவர்களின் ஆன்மீகப் பற்றும், நம்பிக்கையும் மெஹர் பாபாவுக்காக இருக்க வேண்டும் என்றும் தெளிவுறக் கூறினார்.

எலிஸபெத் மற்றும் நோரினாவுடனான தனது இளந்தளிர் போலப் பேணி பாதுகாக்கப்படும் உறவைப் பற்றிய சில விளக்கங்களுக்குப் பின்னர், இன்னும் சில நாட்களில் இந்த இரண்டு பெண்மணிகளும் ஸியாட்டிலில் (SEATTLE) வாழும் மூன்றாவது அன்பரான மில்ட்ரெட் கைல் (MILDRED KYLE) என்பவருடன் தன்னை சந்திக்க வருவதாக, ரபியா அவரது மாணவர்களுக்குத் தெரிவித்தார். அதன் பின்னர் அவர் ஃபேர்ஃபாக்ஸ் ஸூஃபி பள்ளிக்கூட வளாகத்தில் ஒரு முக்கிய சந்திப்பு நடைபெறும் என்றும் அறிவித்தார்; மேலும், அந்த சந்திப்பில் அவரது விருந்தினர்கள் ஸூஃபி பாரம்பரியத்தின் ஆரம்பகால மாணவர்களுக்கு மத்தியில் உரை நிகழ்த்தி, மெஹர் பாபாவைப் பற்றிய அவர்களின் ஆத்மார்த்தமான அறிவு மற்றும் அவருடனான உறவின் பயனை அவர்களுக்கு வழங்குவர்.

ஃபேர்ஃபாக்ஸ் கூட்டம் முறையாக நடைபெற்றது, அதற்குப் பிறகு மெஹர் பாபாவின் ஆன்மீக வழிகாட்டுதலின் கீழ், தங்கள் முர்ஷிதாவைப் பின்பற்றுவதற்கு இரண்டு வாரங்கள் அவகாசம் கொடுப்பதாக ரபியா தனித்தனியாக அனைத்து மாணவர்களுக்கும் ('முரீத்'-MUREED என்றழைக்கப்பட்டனர்) அறிவுறுத்தினார். ஸூஃபி ஃபேர்ஃபாக்ஸ் நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து ரபியா மார்ட்டினின் முரீதுகளும் மெஹர் பாபாவின் ஆன்மீக வழிகாட்டுதலின் கீழ் 'முர்ஷிதா' ரபியா மார்டினைப் பின்பற்றுவதாகத் தெரிவித்தனர்.

அடுத்த சில மாதங்களில், ரபியா தனது நெருங்கிய ஸூஃபி மாணவர்களுடன் மெஹர் பாபாவைப் பற்றி அவர் அறிந்து, புரிந்துகொண்ட அனைத்தையும் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார், அவர்களில் ஐவி. ஓ. டியூஸ் (IVY O DUCE), டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS), ஸாமுவெல் லூயிஸ் (SAMUEL LEWIS) ஆகியோர் முக்கியமானவர்கள். ஸான் ஃபிரான்ஸிஸ்கோ விரிகுடா பகுதியிலிருந்து தனது மொத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய வழக்கமான கூட்டங்களின் போது, அவர் 'தெய்வீகக் கருப்பொருள்' (DIVINE THEME) என்ற தலைப்பில் ஒரு குறுகிய, நீல நிற புத்தகத்தை முதன்மையாக அவரது விளக்க உரைகளுக்குப் பயன்படுத்தினார். இந்தப் பணியின் வரைபடங்களைப் பெரிதாக்கும் திறன்படைத்த 'முரீத்' ஒருவரின் கைவண்ணத்தால் உருவான சித்திரத்தை அவர் நகரக்கூடிய பலகையில் பொருத்தி, மேலும் அவருடைய விரிவுரையின் போது தொடர்ந்து பயன்படுத்தினார்.

இந்தக் காலகட்டத்தில், ரபியா அவரது ஸூஃபி ஆணையத்தின் அனைத்து பொருள் வளங்களையும் உடைமைகளையும் மெஹர் பாபாவிடம் அர்ப்பணித்து தனது உறுதிப்பாட்டை முறைப்படுத்தினார், இதில் ஃபேர்ஃபாக்ஸில் அமைந்த ஸூஃபி பள்ளிக்கூடமும் அடங்கும். அவர் தன்வசம்

இருந்த அனைத்தையும் பாபாவிடம் அர்ப்பணித்து, இவ்வாறு எழுதினார்: "உணர்வுதான் வாழ்க்கையின் உயிரோட்டம் - நீங்கள் எழுச்சியுறச் செய்வதையும், கற்பிப்பதையும் நான் உணர்கிறேன் - அதனால் நான் கூக்குரலிட்டு உங்களை அழைத்து, என் இதயத்தையும், எங்களின் இதயங்களையும் அன்பால் நிரப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். அன்பு ஒன்றுதான் அங்கே இருக்க முடியும்."

ஆதி சீனியர் மூலமாக பாபா பதிலளித்தார்: "**பாபா உங்களை அறிவார். நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதை அவர் அறிவார். நீங்கள் நாடும் ஒவ்வொன்றும் அவருக்குத் தெரியும். நீங்கள் அவரை எப்படி நேசிக்கிறீர்கள் என்பதும் அவருக்குத் தெரியும். நீங்கள் விரும்பும் ஒவ்வொன்றையும் அவர் அறிவார். அவர் தனது எல்லையற்ற இதயத்திலிருந்து ஆழ்ந்த அன்பையும் ஆசிகளையும் உங்களுக்கு வழங்குகிறார்.**"

ரபியா, மெஹர் பாபாவை நேருக்கு நேர் சந்திக்காத போதிலும் அவரை அவதார புருஷர் என முழுமையாக ஏற்றுக்கொண்டார்.

1945, மே 14 அன்று, பாபா 'உத்கிர்' (UDGIR) மற்றும் பிற இடங்களுக்கு பைதூல், எரச் ஆகியோருடன் மஸ்த் தொடர்புக்காக ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். தொலைவில் அமைந்த 'சங்கரெட்டி' (SANGAREDDY) கிராமத்திற்குச் செல்வதற்காக அவர்கள் 25 மைல் தூரம் ஒரு மாட்டு வண்டியில் பயணம் செய்தனர்; இரவில் திரும்பி வர வெகுநேரமாகிவிட்டது.

அண்மையில் இப்பகுதியில் பல கொள்ளைகள் நடந்துள்ளதால், கிராம மக்கள், பைதூல், தோற்றத்தில் திடகாத்திரமான பட்டான் வம்சத்தை ஒத்திருந்ததால், அவரை ஒரு கொள்ளைக்காரனாகப் பார்த்தார்கள். பைதூல் மற்றும் சோர்வடைந்த, சவரம் செய்யாத, அழுக்கு துணிமணிகளுடன் தோன்றிய நபர்களைக் கைது செய்யுமாறு காவல்துறையினருக்கு ஊர் மக்கள் தகவல் தெரிவித்தனர். எரச், போலீஸ் அதிகாரிகளிடம் சென்று அவர்கள் ஸொராஸ்ட்ரியர்கள், அவர்களால் எவருக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்று எடுத்துக்கூறினார்.

போலீஸ் அதிகாரி அவரை நம்பி பைதூலை விடுவித்தார். இந்தக் கிராமத்தில் பாபா, வயதான மஸ்த் 'அப்துல்லா ஸாஹேப்'பை (ABDULLA SAHEB) இரண்டு முறை தொடர்பு கொண்டார்; மறுநாள் 16ஆம் தேதி ஹைதராபாத்திற்கு மீண்டும் 25 மைல்கள் மாட்டு வண்டியில் பயணம் செய்யவேண்டியதாயிற்று.

காலம் குறிப்பிட்டது போல, "மெஹர் பாபாவுடனான மஸ்த் பயணம் என்பது நிதானமான பயணம் அல்ல, கிட்டத்தட்ட ஒவ்வொரு மஸ்தையும் தேடிக் கண்டுகொள்ள, சந்து பொந்துகள், மூலை முடுக்குகள், பாலைவனம், காடு, மலைகள், கல்லறைகள் அல்லது அருவருப்பான குட்டைகள் போன்ற பல இடங்களில் வேட்டையாடுவதோடு, மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் சோர்வடையச் செய்யும் பல மணிநேர சித்திரவதை பயணம், குறைந்தபட்ச

ஓய்வு மற்றும் உணவோடு இருப்பதைக் குறிக்கிறது. சந்தேகத்திற்கு இடமின்றி, மஸ்துகள் மெஹர் பாபாவின் உண்மையான, பிரியமான அன்பர்கள்; ஆனால் அவர்களைக் கண்டுபிடித்து - பிறகு பாபாவின் தனிப்பட்ட தொடர்புக்கு இணங்கச் செய்வது - கற்பனை செய்ய முடியாத அளவிற்கு கடினமான, மிகுந்த சிரத்தையோடு செய்யவேண்டிய இந்தப் பணி - எப்பேர்ப்பட்ட வல்லமை வாய்ந்த இதயங்களையும் உடைத்து சுக்கு நூறாக்கிவிடும்.

"அவதார புருஷரால் மட்டுமே இதுபோன்ற பணிகளைச் செய்ய முடியும், ஏனெனில் மஸ்துகளின் வாழ்க்கையின் ரகசியங்கள் மற்றும் அவர்களின் இதய ஏக்கங்கள் அவருக்கு மட்டுமே தெரியும்."

1945, மே 22 அன்று திட்டமிடப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, பாபா ஹைதராபாத்திலிருந்து மெஹராபாத்திற்கு ஆதி சீனியருடன் புறப்பட்டார். பெரும்பாலான ஆண், பெண் மண்டலி அனைவரும் அப்போது ஹைதராபாத்தில் தங்கியிருந்தனர். ஸரோஷ் பாபாவை மன்மாடில் சந்தித்து அவரது காரில் மெஹராபாத்துக்கு அழைத்துச் சென்றார்.

அறிவுறுத்தல்களின்படி, அழைக்கப்பட்ட அனைவரும் 23ஆம் தேதி மெஹராபாத் வந்த வேளையில், பாபா அவர்களுக்கு தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார். பின்வரும் 40 அன்பர்கள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர்: மண்டலியில் பதினான்கு பேர் - ஆதி சீனியர், அண்ணாஸாஹேப் காளே, சகன், எரச், டாக்டர் கனி, குஸ்தாஜி, கைக்கோபாத், காளேமாமா, முரளி, பாதிரி, பெண்டு, ஸெயிலர், ஸவக் மற்றும் ஜால்பாய். இதர இருபத்தி இரண்டு ஆண்கள்: பாபாதாஸ், தத்து மெஹந்தர்கே, டாக்டர் தேஷ்முக், டாக்கே, தவுலத் ஸிங், காடேக்கர், ஹோமி ஃபட்டேனா, குப்புசாமி, ஜால் கேரவாலா, மானேக்கர், மானேக் மேத்தா, மெஹர்ஜி ஸட்டா, நரிமன் தாதாசாஞ்சி, பண்டோபா, பப்பா ஜெஸவாலா, பிலூ ஸட்டா, போஃபலி, ராம்ஜூ, சதாஷிவ் பாட்டீல், ஸரோஷ், விபூதி மற்றும் ஆதி ஜூனியர்.

ஃபெராம் ஒர்கிங்பாக்ஸ்வாலா செயல்முறைகளின் விபரங்களைச் சுருக்கெழுத்து முறையில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். இரண்டு நாள் கூட்டம் கீழ் மெஹெராபாத்தில் அமைந்த 'மெஸ் குவார்டர்ஸில்' (பழைய தர்மஸாலா கட்டிடம்) நடைபெற்றது. காலை 8:00 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. 1945 மே 24 வியாழக்கிழமை, அடுத்த இரண்டு நாட்களுக்கான நிகழ்ச்சிகளின் அட்டவணையை பாபா சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டினார். கூட்டங்கள் காலையில் மூன்று மணி நேரம் நடைபெற்றது; மாலையில் பாபா தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார். அப்போது அவர் கூறியதாவது:

**இந்த இரண்டு நாட்களில் நான் சொல்லப்போவது மற்றும் எடுக்கப்படும் முடிவுகளில் தீவிர கவனம் செலுத்துங்கள், ஏனெனில், அநேகமாக, இதுபோன்ற சந்திப்பு எதிர்காலத்தில் நடைபெறாது; மேலும் எனது சீடர்கள் என்னை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எனது பௌதீக உடல்**

**வடிவத்தில் பார்க்காமல் இருக்க நேரிடும். எனது உண்மையான பணியின் போது அவர்கள் என்னைப் பார்க்கக்கூடும்.**

**கடந்த இரண்டு இரவுகளில் நான் தூங்கவில்லை, கூட்டங்களில் விவாதிக்க வேண்டிய விஷயங்களைத் தீர்மானிப்பதில் இரவுகள் கழிந்தன. இந்தக் கூட்டங்கள் நன்கு திட்டமிடப்பட்ட நிகழ்வுகளுக்குப் பின்னரே நடத்தப்படுகின்றன; அதற்கேற்ப நீங்கள் அனைவரும் மே 1ஆம் தேதி உபவாசம் இருந்தீர்கள். அதன் பிறகு, நான் ஒன்பது நாட்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்தேன். இந்தப் பத்து நாள் உபவாசம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நான் கடுமையான மஸ்த் பயணத்தை மேற்கொண்டேன். இவை அனைத்திற்கும் மத்தியில், நான் விரும்பியபடி எனது பணியை முடித்தேன்.**

**ஆதி காலத்திலிருந்தே, கடவுள், அவரது தெய்வீக விளையாட்டை ஏழு பாகங்களாகப் பிரித்து விளையாட வேண்டும் என்பது நியதி. இந்த ஏழு பாகங்களாலான விளையாட்டு நிறைவடையும் தருவாயில், கடவுள் தன்னை வெளிப்படுத்தும் நேரம் வரும். இந்த இரண்டு நாட்களில், சில முடிவுகள் எடுக்கப்பட உள்ளன, அதன்படி, சீடர்கள் பணிபுரிய வேண்டும். அவர்கள் தத்தமது பங்கை செய்யத் தவறினால், நானே அதைச் செய்தாக வேண்டும். ஆனால் எனது சீடர்கள் எனக்கு அவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் தருவார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.**

**ஐரோப்பாவில் போர் முடிந்துவிட்டது என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் போர் இப்போதுதான் தீவிரமாகத் தொடங்கியுள்ளது. இந்தப் போர் மாயையால் உருவாக்கப்பட்டது, இப்போது அதன் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இரண்டு கட்டங்கள் முடிந்துவிட்டன, கடைசி கட்டம் தொடங்கிவிட்டது. உச்சக்கட்டம் வெகு தொலைவில் இல்லை. மிகப்பெரிய துன்பம் உலகிற்காகக் காத்திருக்கிறது. இயற்கை மற்றும் இயற்கைக்கு மாறான அழிவு ஏற்படும்.**

**இந்தப் போரில் ரஷ்யா முக்கிய பங்கு வகிக்கும் என்று நான் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறேன். மண்டலியில் பலர் என் அறிக்கையை நினைவில் கொண்டுள்ளனர். இவை அனைத்தும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, நான் அதைப் பற்றி மண்டலிக்கு அப்போதே தெரிவித்தேன். என் உலகளாவிய பணியுடன் தொடர்புடைய கருத்தார்ந்த, இன்றியமையா காரணங்களுக்காக, டிசம்பர் இறுதி வரை, எனக்கு மண்டலியுடன் வெளியளவிலான தொடர்பு இருக்காது.**

பாபா, அன்பர்களாகிய ஊழியர்களிடம் அவர்களுடைய இடங்களில் செய்யப்படும் பணிகளைக் குறித்து கேட்ட வேளையில், அவர்களும் விரிவான அறிக்கையை அளித்தனர். அவர் பாபாதாஸிடம் அவரது பணியின் விபரங்களைக் கேட்டு இவ்வாறு எடுத்துரைத்தார்:

**மக்களைப் பொறுத்தவரை, பாபாதாஸின் பணி மிகவும் சிறந்தது. எல்லா கஷ்டங்களையும் சகித்துக்கொண்ட சீடர்களில் அவர் ஒருவர். அவர்**

**கால்நடையாகப் பயணம் செய்து, சமூகத்தில் உயர்ந்த மற்றும் சாதாரண நிலையில் உள்ள அனைவரையும் சந்திக்கிறார். எனது பணியின் நிமித்தம் அவர் இந்தியா முழுவதும் பயணம் செய்து, எனக்காகப் பணிபுரிந்த வேளையில், ஆயிரக்கணக்கானோர் அவரை பின்பற்றுபவர்களாக மாறிவிட்டனர்! உதாரணமாக, நான் அவருடன் ஷோலாபூர் சென்றபோது, மக்கள் அவரை வணங்கி மரியாதை செலுத்துவதை நான் கண்டேன்.**

**பாபாதாஸின் பணி மிகவும் சிறப்பானது என்றாலும், அவர் அதை விளக்கி, அவருடைய செயல்பாடுகளைப் பற்றிய அறிக்கையைக் கொடுக்க முயலும்போது, அவர் பேசுவதை, கடவுள் கூடப் பின்பற்றுவது கடினம்! அவர் ஒரு விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத்திற்குத் தாவி, பார்வையாளர்கள் அனைத்து உண்மைகளையும் அறிந்தவர்கள் என்று கருதுகிறார். கேட்பவர்களை முற்றிலும் குழப்பத்தில் ஆழ்த்தி, முன்பின் தொடர்பற்ற முறையில் பேசுகிறார். அவர் சொல்ல விரும்புவது என்ன என்பது அவருக்கே தெரியாது!**

பாபா, விபூதியை அவரது பணிக்காகப் பாராட்டி, '**இது சாதாரண மக்களுக்கும் மிகச் சிறந்தது**' என்று குறிப்பிட்டார். ஜோத்பூர் (JODHPUR), பிக்கானேர் (BIKANER) போன்ற நகரங்கள் உட்பட ராஜ்புத்னாவின் (RAJPUTNA) பல்வேறு இடங்களுக்கு அவர் சென்றதற்கான சுருக்கமான விவரத்தை பாபாதாஸ் அளித்தார். பாபாவைப் பற்றிக் கூற மக்களிடையே சென்றதாகவும், மக்கள் பாபாவின் தரிசனத்தையும் அவரைப் பற்றிய புத்தகங்களை விரும்புவதாகவும் கூறினார்.

இதைக் கேட்ட பாபா, புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் உட்பட வரலாற்று தொகுப்புகள் அனைத்தும் டிசம்பர் மாதம் வரை மட்டுமே தேவைப்படும் என்று சுட்டிக்காட்டி, மேலும் கூறினார்: "**டிசம்பர் மாதத்திற்குப் பின்னர், எனது பணிக்கு எந்த ஊடகமும் தேவையில்லை. நான் எனது தெய்வீக உறை வாளை கட்டவிழ்க்கும்போது, எனக்கு மண்டலியின் உதவி, எந்தவிதமான கூட்டம், சந்திப்பு, புத்தகங்களும் தேவையில்லை.**

"**டிசம்பர் வரை உதவியும், இலக்கியங்களும் தேவைப்படுவதால் இந்தக் காலகட்டத்தில் பயன்படுத்தத் தேவையானவற்றை அச்சிடலாம்.**"

அந்த நேரத்தில், பாபாதாஸ், டாக்டர் தேஷ்முக்கைக் குறிப்பிட்டு விமர்சனம் செய்தார், அவரிடமிருந்து அச்சிடப்பட்ட பொருட்கள் அனைத்தும் வேண்டிய நேரத்தில் அடையப்பெறுவதில் தாமதம் ஏற்படுவதாகப் புகார் கூறினார். பாபா உடனே இவ்வாறு குறிப்பிட்டார், "**சம்பந்தப்பட்ட நடைமுறை சிக்கல்களைக் கருத்தில் கொள்ளாமல், எல்லாவற்றையும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று பாபாதாஸ் விரும்புகிறார். பிறரின் சிரமங்களைப் பற்றி அவருக்குத் தெரியாது.**"

தனது மாமா ஃபேரடூனின் குணத்தை நினைவு கூர்ந்த பாபா, நகைச்சுவை கலந்த தொனியில் குறிப்பிட்டார், "**ஃபேரெடூன் மாஸாவிற்கும் அதே மனப்பாங்கு இருந்தது. சீட்டு விளையாடும்போது, அவர் ஆவேசத்தில்**

**கொந்தளித்ததோடு, அவர் விளையாட்டை இழக்கும் வேளையில், சீட்டுகளை கிழித்து விடுவது வழக்கம்**!" மண்டலி உறுப்பினர்கள் அந்த வேடிக்கையான காட்சிகளை நினைத்து மனதார சிரித்து மகிழ்ந்தனர்.

"பாபாதாஸ் இவ்வளவு அவசரமாக இருப்பதானால், அவர் டெல்லியில் இந்தப் புத்தகத்தை அச்சிடலாம்..." என்று தேஷ்முக் கூறினார்.

பாபா குறுக்கிட்டு, "**டெல்லி வெகு தூரத்தில் உள்ளது**!" (இந்தி பழமொழிக்கு இணங்க, 'செய்வதை விட சொல்வது எளிது' என்று அர்த்தம்) என்றார்.

இறுதியாக டாக்டர் கனி, அவர் எழுதிய ஆறு உருது கட்டுரைகளின் 5,000 பிரதிகளை அச்சிட்டு, பொது விநியோகத்திற்காக பாபாதாஸ், விபூதி ஆகியோருக்கு வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அந்த ஆண்டு மேற்கொண்ட பயணங்களின் விவரங்களை அளித்த விபூதி, அவர் 'டெஹ்ரா டூன்' முதல் 'லக்னோ' வரை பல்வேறு இடங்களுக்குச் சென்றதாகவும், பாபாவைப் பற்றி மக்களுக்குத் தெரிவித்ததாகவும் எடுத்துரைத்தார். அவருக்கும் இந்தி, மராட்டி புத்தகங்கள் தேவைப்பட்டன.

அதற்குப் பிறகு பாபா, காஷ்மீரில் வாழும் தவ்லத் ஸிங்கிடம் அவரது பணியைப் பற்றிக் கேட்டு, அவர் அங்கு மிகவும் செல்வாக்கு மிக்கவர் என்றும் குறிப்பிட்டார்: "**அவர் ஒரு மருத்துவர் மட்டுமின்றி நகராட்சி ஆணையரும் ஆவார். தவ்லத் ஸிங்கின் அன்பும் பக்தியும் ஈடிணையற்றது மேலும் அவரது பணி உயர்ந்த, உன்னதமான தரம் மிக்கது**."

டாக்டர் ஸிங் பதிலளித்தார், "விசித்திரமானவர் எனது குருநாதர், அவரது வழிகளும், முறைகளும் அதைவிட விசித்திரமானவை! உண்மையான அர்த்தத்தில் நான் அவருக்கு சேவை செய்யவில்லை, ஆனால் அவருடைய எல்லையற்ற கருணையால், அவர் மண்டலிக்கு முன் என்னைப் புகழ்கிறார். நண்பர்கள் மற்றும் என்னிடம் வரும் நோயாளிகளுக்கு, பாபாவைப் பற்றிக் கூறி, அவருடைய புகைப்படங்களை அவர்களுக்குத் தருகிறேன். அவர்கள் பாபாவைப் பற்றி என்னிடம் மீண்டும் கேட்கும் தருணத்தில், நான் அவர்களிடம் சொல்கிறேன். இருப்பினும், சிலர் எனது வார்த்தைகளால் ஈர்க்கப்படவில்லை." தவ்லத் ஸிங் (மெஹர் பாபா ஜர்னலின் முதல் இதழிலில் வெளிவந்த) 'அவதார்' என்ற கட்டுரையை அச்சிடுமாறு பரிந்துரைத்தார்.

அவதார புருஷர் மீதான முஸ்லிம்களின் பொதுவான உணர்வு பற்றி டாக்டர் கனியிடம் பாபா கேட்டதற்கு அவர், "முஹமதியர்கள், கடவுள் மனித உருவில் வருவதை நம்பவில்லை" என்று பதிலளித்தார்.

டாக்டர் கனியின் பதில் குறித்து, பாபா விளக்கினார்:

**முஸ்லிம்கள் மத்தியில் இரண்டு கருத்துக்கள் உள்ளன, அவை கவனமாகப் பார்க்கப்பட வேண்டும். அதன் நியதியாக, ஒரு சாதுவின் ஆளுமையை நம்புவதற்கு முன்னர், அவர்கள் அற்புதங்கள் நிகழ்த்துவதன் மூலம் அவருடைய புனிதத்தன்மையை நிரூபிக்குமாறு**

**வலியுறுத்துகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் 'ஷரியத்'** (வெளியளவிலான மதச் சடங்கு சம்பிரதாயங்கள்) **ஒன்றுதான் அனைத்திற்கும் முதலும் முடிவும், அதுவே அவர்களின் நம்பிக்கையின் அடித்தளம். மேலும், ஒரு மனிதன் கடவுளாக இருப்பது சாத்தியமற்றது என்று அவர்கள் கருதுகின்றனர்.**

**இப்போது நான் எனது தெய்வீக உறைவாளைக் கட்டவிழ்ப்பதற்கு முன்பு, முஸ்லிம் அன்பர்கள் இந்தத் தடைகளைத் தாண்டிச் செல்லும் அளவிற்கு நாம் தயார் செய்ய வேண்டும் என்றால், நாம் அதை மிகுந்த கவனத்துடனும் சாதுரியத்துடனும் செய்ய வேண்டும். ஆனால் அதைச் செய்யும் வேளையில், நீங்கள் 'ஷரியத்'தை உறுதிப்படுத்தக் கூடாது. மனிதன் கடவுளாக மாறுவது குறித்து, நீங்கள் மிகுந்த கவனத்துடன் விஷயங்களை விளக்க வேண்டும், ஏனெனில் இந்த பாரபட்சம் மீண்டும் அறியாமையால் ஏற்படுகிறது.**

**'உண்மைப்பொருள்' ஷரியத்திற்கு அப்பாற்பட்டது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் ஷரியத்தைப் பின்பற்றுவது நல்லது, ஆனால் நீங்கள் அதை கவனமாகப் பார்ப்பதானால், ஷரியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வலியுறுத்துபவர்கள், பொதுவாக, தங்களின் கொள்கைகளைப் புறக்கணித்து, பல்வேறு வகையான தீயச்செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ஷரியத்தின் பிணைப்புகளை உடைத்தெறியும் நேரம் வந்துவிட்டது, நான் என் உறை வாளைக் கையில் எடுக்கும்போது, இந்தப் பிணைப்புகள் உடைந்து சிதறிவிடும்.**

**அதற்கு முன்பு, நீங்கள் சாமர்த்தியமாக, சாதுரியத்துடன் பணிபுரிய வேண்டும் எனும்போது நீங்களே ஷரியத்தை உறுதிப்படுத்த மாட்டீர்கள். ஷரியத்தின் தலைமையகம் ஹைதராபாத்; உங்களுக்குத் தெரியும், நான் தற்போது அங்கிருந்துதான் எனது பணியைச் செய்து கொண்டிருக்கிறேன்.**

பாபாவிற்கு அளித்த அறிக்கையைத் தொடர்ந்து, தவ்லத் ஸிங் இவ்வாறு எடுத்துரைத்தார், "ஆரம்பத்தில் நான் என் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பை சந்தித்தேன். ஒரு பார்சியை நான் குருநாதராக ஏற்றுக்கொண்டதால் மக்கள் என்னை பைத்தியம் என்று பட்டம் கட்டினர். ஆனால் பொறுமையாகவும் சாதுரியத்துடனும் நான் பாபாவைப் பற்றி அவர்களுக்கு தெரியப்படுத்தினேன். மேலும், பாபாவின் அருளால், ஐரோப்பியர்கள் உட்பட அனைத்து சமூகங்களிடையேயும் நான் வெற்றியை சந்திக்க நேர்ந்தது.

மானேக் மேத்தா அவர் செய்ததைப் பற்றிய அறிக்கை ஒன்றை வழங்கினார், "பார்சி சமூகத்திற்கு பாபா மற்றும் அவரது பணியைக் குறித்துத் தெரிவிக்க, நான் எந்த ஒரு வலியையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தேன். ஒரு நாளைக்கு சராசரியாக நான் ஒரு சொற்பொழிவை வழங்கி வருகிறேன்; கடந்த ஜூன் மாதத்தின் கடைசி சந்திப்பிலிருந்து 'சர்வதேச சிறப்பியல்பு' குறித்த ஆறு விரிவுரைகளை வழங்கினேன். மும்பையில் வாழும்

இரண்டு லட்சம் பார்சிகளில், பாபாவின் பணியின் மதிப்பு மற்றும் நோக்கம் குறித்து ஏறக்குறைய 6,000 பேர் மத்தியில் திடமான நம்பிக்கையை ஏற்படுத்த முடிந்தது. சிலர் எனது பணியில் பல்வேறு வகையான தடைகளை உருவாக்குவதால், நான் அவற்றை எதிர்த்து செயல்பட வேண்டியதாகிறது."

பாபா இவ்வாறு கருத்துரைத்தார்: "**எதிர்ப்பிற்கு எதிராகப் பணிபுரிவதில் மானேக் அதிர்ஷ்டசாலி, ஏனெனில் எதிர்ப்பை எதிர்கொள்ளும் பணி நிலையாக நீடித்து நிற்கும்**."

"சில நபர்கள் என்னைப் பற்றித் தவறான வதந்திகளைப் பரப்புகிறார்கள்," என்று மானேக் கூறினார்.

பாபா மண்டலியிடம் கேட்டார், "**மானேக்கிற்கு எதிராக நீங்கள் ஏதாவது கேள்விப்பட்டீர்களா?**" அவர்கள் அப்படி எதுவும் கேள்விப்படவில்லை என்று பதிலளித்ததும் பாபா, "**உங்கள் புகார் என்ன?**" என்று அவரிடம் கேட்டார்.

"பார்சி சமூகத்தில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைக் காட்டிலும் ஏறக்குறைய மூன்று மடங்காக இருப்பதால் எனது வேலை பெரும்பாலும் பெண்களிடையே செய்யப்படுகிறது. இதனால் சில குறும்புக்காரர்கள் இது தொடர்பாக என்னைப் பற்றிய ஆதாரமற்ற கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றனர்."

பாபா பதிலளித்தார்:

**என்னுடைய உண்மையான ஊழியர் ஒருவர், சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்ட எண்ணங்களைக் கொண்டிருந்தாலும், பெண்கள் மத்தியில் பணிபுரிவதைத் தவிர்க்க வேண்டுமென்ற தேவை எதுவுமில்லை - அதேவேளையில் அவர் அந்த எண்ணங்களைச் செயல்படுத்தாமல், அவற்றைக் தொடர்ந்து கையாளுவதன் மூலம், இத்தகைய எண்ணங்கள் வந்தால்கூட, அந்த ஊழியர் அவற்றை எதிர்ப்பதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்; மேலும் அதன் விளைவு சிறப்பானதாகவும் நீடித்தும் இருக்கும். பாலியல் சிந்தனைகள், பாலியலின் நிலையற்ற தன்மையை நிரூபிக்க உதவுகின்றன. ஆனால் இந்த எண்ணங்களைச் செயல்படுத்தும் வேளையில், விளைவு பேரழிவைத் தரும். எனவே பெண்களைப் பார்ப்பதைத் தவிர்க்காதீர்கள், அவ்வாறு செய்வதன் மூலம், நீங்கள் பொதுமக்களிடையே சந்தேகத்தை எழுப்பி, ஆதாரமற்ற கதைகளை உருவாக்கத் தூண்டுதலாக இருக்கிறீர்கள். பெண்கள் மத்தியில் உங்கள் பணியைத் தொடருங்கள், மனதை 100 சதவீதம் வலுவாகவும், உங்கள் செயல்களை சமநிலையில் தூய்மையாகவும் வைத்திருங்கள்.**

**பாபாதாஸ், ஒரு சந்தர்ப்பத்தில் அவரை உண்மையில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நடந்ததாக அவர் என்னிடம் கூறினார்.**

**அத்தகைய முறையற்ற விருப்பங்களை முன்மொழிந்தாலும், ஊழியர் ஒருவர் உறுதியாக இருந்தால், அவர் என்னால் மதிக்கப்பட**

தகுதியானவர். அத்தகைய சோதனையை அவர் எதிர்க்க அல்லது வெல்ல முடிந்தால், அவருடைய பணி மிக உயர்ந்ததாக இருக்கும். மானேக்கின் வேலையில் மட்டுமல்ல, என்னைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் மதிப்புமிக்க மூன்று விஷயங்களை நான் வழங்குகிறேன்.

'ஷரியத்'தைப் பற்றிப் பேசாமல், துரதிருஷ்டவசமாக, ஆன்மீக ரீதியில் மிகவும் பின்தங்கிய மற்றும் அறியாமை போன்ற பிற தீமைகள் பெரிய அளவில் பரவியுள்ள பார்சி மக்களை அணுகுவது சாத்தியமில்லை. சாதுக்கள், யோகிகள், வாலிகள் போன்ற ஆன்மீக விஷயங்களைப் பற்றிய அறிவு அவர்களுக்கு மிகக் குறைவு. நான் இந்த உடலை ஒரு பார்சியாக எடுத்துக்கொண்டேன், இந்த நேரத்தில், இந்த உடலிலேயே, அவதார புருஷரின் உலகளாவிய பணியின் உச்சக்கட்டம் எட்டப்படும்!

எனது குருநாதர்களில் ஒருவர் முஸ்லிம், மற்றொருவர் இந்து, மேலும் இந்தக் கலவையானது ஒரு திட்டவட்டமான முடிவைக் கொண்டுள்ளது. பார்சிகள் மத்தியில் செய்வதற்கான எனது ஆன்மீகப் பணியை நான், மானேக்கிடம் ஒப்படைத்துள்ளேன். அதற்கு அடிப்படை எதுவும் இல்லாமல் இல்லை. அவருக்கும் எனக்கும் இடையே முந்தைய தொடர்பு உள்ளது. அவர் 'ஜப் மண்டலில்' வேலை செய்து கொண்டிருந்தபோது கூட, எனது கைகள் அவரை வழிநடத்தின. இப்போது அவர் பல்வேறு எதிர்ப்புகளுக்கு எதிராக செயல்பட வேண்டும். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லப்போகும் மூன்று விஷயங்களில் அவர் தவறாமல் இருந்தால், வேலை எளிதாக இருக்கும்; இல்லையெனில், அது கடினமாகிவிடும்.

ஷரியத் பற்றி மக்களிடம் எடுத்துரைத்த பின்னர், என்னைப் பற்றியும் எனது பணியைப் பற்றியும் மிக நேரடியான, உறுதியான குறிப்புகள் கொடுக்கப்பட வேண்டும். இதைச் செய்யாமல், ஷரித்தைப் பற்றி மட்டும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டால், பார்சிகள் மானேக்கை ஒரு சிறந்த மால்வியாக (பாதிரியாராக) மாற்றி, ஷரியத்தை வலியுறுத்தி, தமது சொந்த நலனுக்காகப் பயன்படுத்துவார்கள். விரிவுரைகள் தொடர்பாக என்னைப் பற்றிய பதிவு மற்றும் எனது பணி பற்றிய குறிப்பு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருக்க வேண்டும். எனது வேலையைத் தொடரும் நேரத்தில், எதிர்ப்பு உருவாக்கப்பட்டால், ஊழியர் வருத்தப்படக்கூடாது. அவர் எதிரிகளுக்கு அடிபணியக்கூடாது; அவர்களின் வலையில் சிக்கிவிடவும் கூடாது. ஊழியர் அவர்களை கேலி, கிண்டல், நகைச்சுவை இதுபோன்ற பலவீனத்தை வெளிப்படுத்தும் செயல்கள் எதுவும் செய்யக்கூடாது. முக்கியமாகத் தேவைப்படுவது என்னவென்றால், ஊழியர் எதிரிகள் மீது கோபப்படக்கூடாது.

முடிவாக, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

உண்மையாகச் சொன்னால், நான் கர்னல் ஈரானியை விரும்புகிறேன். அவர் எனக்குள் இருக்கிறார் என்றும், நான் செய்ய

**விரும்புவதை அவர் செய்கிறார் என்றும் எனக்குத் தெரியும்! ஒவ்வொருவரும் அவரவர் செய்ய திட்டமிட்ட வேலையைச் செய்கிறார்கள், கடவுள் எல்லோரிலும் எல்லாவற்றிலும் இருக்கிறார். எவரும் தவறு செய்யவில்லை.**

**பணிபுரிய வேண்டியது முக்கியம்; பாண்டவர்களும் கௌரவர்களும் போர்க்களத்தில் போர் புரிந்தது போல், அர்ஜுனன், கிருஷ்ணரின் ஆலோசனையின் படி தனது கடமையைச் செய்தது போல், என் ஊழியர்களும் எனது பணியைச் செய்ய வேண்டும்.**

**எதிரிகள் அல்லது பொதுமக்களின் விமர்சனத்திற்குப் பயந்து எதிர்ப்பைத் தவிர்க்காதீர்கள். நான் இப்போது உங்களுக்குக் கூறியபடி, எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டும், நீங்கள் அவ்வாறு செய்தால், உங்கள் முயற்சிகளில் 100 சதவிகிதம் வெற்றி நிச்சயம் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.**

பாபாவின் போதனைகளின் அடிப்படையில் ஹைதராபாத்தில் டாக்டர் கனி எழுதிய கஸல்களைப் படிக்குமாறு அவரிடம் பாபா கேட்டுக்கொண்டார். அதன் பிறகு கூட்டம் நிறைவடைந்தது; மதியம் மற்றும் மாலை அனைவருடனும் பாபா, தனிப்பட்ட நேர்காணல்களை நடத்தினார்.

மறுநாள் காலை எட்டு மணியளவில், மெஸ் குவார்ட்டர்ஸில் கூட்டத்தை மீண்டும் தொடங்கிய பாபா, அவரது மண்டலியை பற்றிப் பேசினார்:

**எனது மண்டலி உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் ஜபம், தவம் எதுவும் செய்யவில்லை (கடவுளின் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது அல்லது தவம் புரிவது எதுவுமில்லை) அல்லது எந்த வகையான யோக பயிற்சிகளிலும் ஈடுபடுவதில்லை. அவர்கள் தமது வாழ்க்கையை எனக்கு முழுவதுமாக அர்ப்பணித்து, நீண்ட காலமாக என்னை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதில் ஒரு சிறிய பகுதியைக் கூட யோகிகளால் செய்ய முடியாது!**

**எங்களிடையேயான இந்த இணைப்பில் உள்ள முக்கியமான விஷயம் என்னவெனில், அவர்கள் என் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், எனது சொந்த விவகாரங்களில் உதவுவது மட்டுமல்லாமல், அவர்கள் எனக்கு தனிப்பட்ட உதவிகளையும் செய்கிறார்கள். இறை உணர்வை அடைவதற்கு முன்னர், அவர்கள் எனக்கு சேவை செய்வதைப்போல், எனது குருநாதருக்கு நான் சேவை செய்ய முடியாது என்பதை உறுதியாக நம்புகிறேன்.**

**புத்தி அல்லது அறிவுத்திறன், இறை ஞானத்தை அடைவதற்கு மிகப்பெரிய தடையாக உள்ளது. மிகச் சிறிதளவிலான விமர்சிக்கும் மனப்பான்மை இருந்தால் கூட, அது ஒரு தடையாகும். புத்திக்கு அப்பாற்பட்டதை புத்தியால் (அறிவுபூர்வமாகப்) புரிந்துகொள்ள முடியாது;**

இது காற்றை ஒரு சாதாரண வலையில் சிக்க வைக்க முயற்சிப்பது போலாகும்.

எனது மண்டலியில் எவருக்கும் மூளை இல்லாமல் இல்லை; ஆனால் அவர்களில் ஒன்று அல்லது இரண்டு பேர் புத்திசாலித்தனம் இல்லாதவர்களாக இருக்கலாம்; அவர்களுக்கு ஆன்மீக உதவி இல்லாமல் இருந்திருந்தால், கடந்த 25 ஆண்டுகளாக அவர்கள் என்னுடன், எப்படி ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது கடினம். நான் உங்களுக்குச் சொல்கிறேன், இறை உணர்விற்கு முன்பு, நான் அதைச் செய்திருக்கக் கூட சாத்தியமில்லை!

அவதார புருஷரைப் பொறுத்தவரையில், அவருக்குரிய ஞானம் புலப்படத் தொடங்கும் முன்னர், எல்லையற்ற படபடப்புடன் கூடிய அமைதியின்மை நிலவும்; இதன் காரணமாக அவர் எதனோடும் ஒட்டிக்கொண்டிருக்க முடியாது.

எனது பிரியமான மண்டலியின் பணி மற்றும் சேவைகள் மகத்தானவை. உதாரணமாக, 'ஆதி சீனியர்' என்னுடன் 25 ஆண்டுகளாக இருக்கிறார். அவர் தனது வாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்துள்ளார். அவர் எனக்கு ஆற்றிய அனைத்து சேவைகளும் தனித்துவமானது. அவர் இப்போது கூட என்னுடன் வாழ்கிறார், எனக்காகப் பணிபுரிகிறார்.

'ஸரோஷ்' 25 ஆண்டுகளாக எனது தொடர்பில் இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணித்துள்ளார். அவரது வருமானம் அனைத்தையும் எனக்குத் தருகிறார். அவரால் செய்யப்பட்ட தனிப்பட்ட சேவைகள் விவரிக்க முடியாதவை. நானே எனது குருநாதருக்காக இதையெல்லாம் செய்ய முடியாது.

'பெண்டு', 'பாதிரி', 'விஷ்ணு' - இவர்கள் மெஹராபாத்தின் நான்கு தூண்களில் மூன்று தூண்களாவர். அவர்கள் எந்த ஆசையும் இல்லாமல் பணிபுரிகிறார்கள். அவர்கள் சேவையின் மொத்த ஆளுமையைக் கொண்டவர்கள்; கடந்த 25 ஆண்டுகளாக சிறந்த சேவையைச் செய்துள்ளனர். உதாரணமாக, பாதிரிக்கு ஆன்மீகத்தைப் பற்றி எதையும் தெரிந்து கொள்ளும் விருப்பம் இல்லை. அவரது ஒரே விருப்பம் எனக்காகப் பணிபுரிவது மட்டுமே.

மேலும், 'விஷ்ணு'வின் சேவையை என்னென்பது? லாஹூரில் இருந்த வேளையில், அவரது உடலைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல், மிகவும் அசௌகரியமான சூழ்நிலையிலும் பணிபுரிவதை அனைவரும் கண்கூடாகப் பார்த்தார்கள். எனது சீடர்களின் இந்த அற்புதமான தன்னலமற்ற சேவைகளை, எந்தத் தவம் அல்லது ஜபத்துடனும் ஒப்பிட முடியாது.

'டாக்டர் நீலு', பால் மற்றும் பாஸந்தி (இனிப்புப்பண்டம்) பிரியர் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் அவர், மிகப்பெரிய கவலையிலிருந்து என்னை விடுவித்த ஒரே சீடர் - அதாவது, மெஹராபாத்தில் நான்

இருந்தாலும், இல்லாமலிருந்தாலும், பெண்மணிகளின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை முழுமையாக ஏற்றுக்கொண்டார். மேலும், எனது உலகளாவிய பணியில் அவர் மிகவும் குறிப்பிடத்தக்க உதவியை வழங்கியுள்ளார்.

'ஸவக் கொத்வால்' அவரது வாழ்நாள் முழுவதையும் எனக்காக அர்ப்பணித்தார். அவரது சேவை தனித்துவமானது. இந்த சிறப்பான சேவையுடன் எந்த யோகா, தியானத்தை ஒப்பிட முடியும்?

'காளேமாமா' 'அமைதியற்ற ஓய்வின் மொத்த உருவம்'. இந்த சீடரின் நிலை குஸ்தாஜியால் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது, அவர் தனது கை விரலால் சுழலும் அடையாளத்தை உருவாக்கி, பம்பரம் போலச் சுழலக்கூடியவர் என்று அவரைக் குறிப்பிடுகிறார். அத்தகைய 'துருதுருப்பான' மனிதர் என் மீது 100 சதவிகிதம் நம்பிக்கை வைத்து, பல ஆண்டுகளாக என்னுடன் ஒட்டிக்கொண்டிருப்பது, என்னைப் பொறுத்தவரையில் எனக்கு ஒரு சாத்தியமற்ற யோகாவாகத் தோன்றுகிறது.

'அண்ணாஸாஹேப்' (காளே) அவரது சகோதரர், இதற்கு நேர்மாறானவர். அவர் ஒரு நல்ல சமநிலையான மனம் படைத்த முறையான தொழிலாளி. என் மீதான அவரது நம்பிக்கையும் அன்பும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அவர் எனக்கு எல்லா வகையான பணிகளையும் செய்கிறார். என்னுடைய பணிகளுக்குத் தேவையான செலவுகளுக்குப் பணம் சம்பாதிக்க அவர் சினிமாவில் கூட வேலை செய்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, என்னுடைய பணிக்காகச் செலவழிக்கப்பட்ட பணம் எனது சீடர்களால் எனக்கு வழங்கப்பட்டது.

'ஸெயிலர்' குழந்தை பருவத்திலிருந்தே என்னுடன் இருந்து வருகிறார். அவரிடம் ஆயிரம் குறைபாடுகள் உள்ளன, ஆனால் என் மீதான அவரது அன்பும் நம்பிக்கையும் மிக உயர்ந்த நிலையில் இருந்ததால் அவருடைய குறைபாடுகள் எதுவும் எந்த விளைவையும் ஏற்படுத்தியதில்லை.

'குஸ்தாஜி' என் தோழர். அவர் வெளிப்படுத்தும் பொறுமைத்தன்மை ஒரு மகாயோகிக்குக் கூட கிடையாது. மௌனம் கடைப்பிடிப்பது, படிப்பது எழுதுவதை தவிர்ப்பது மற்றும் எந்த வேலையும் செய்யாமல் வாழ்வது, நான் கூட செய்திருக்க முடியாத யோகா.

'டாக்கே' பத்தொன்பது ஆண்டுகளாக என்னுடன் இருக்கிறார். அவர் ஒன்றும் முட்டாள் அல்ல. அவர் ஓர் அறிவார்ந்த வழக்கறிஞர். அவர் என்னிடமிருந்து எந்த லௌகீக ஆதாயத்தையும் பெறவில்லை. அவரது மனைவி சமீபத்தில் காலமானார், ஆனாலும் என் மீதான அவருடைய அன்பிலும் பக்தியிலும் குறை ஏதுமில்லை. நேற்று நான் அவரை அழைத்து அவரது வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு, எனது வேலையைச் செய்யச் சொன்னேன், அவர் அதைச் செய்ய ஒப்புக்கொண்டார்.

'காடேக்கர்' பிறரின் நற்குணங்களை எடுத்துக் கூறி கண்ணீர் சிந்தும் ஒரு நபர். நான் அவரைப் பற்றி அதிகம் பேச மாட்டேன். அவர் ஒரு 'புன்முறுவல் புரியும் புத்தர்' (உருளை வடிவம்) மற்றும் கபடமற்ற பக்தர். அவர் வாழ்வில் பல ஏற்ற தாழ்வுகளைக் கடந்து சென்றும், என்னை விட்டு விலகவில்லை. அவர் எனக்காக எவ்வளவோ சேவை செய்தாலும், எனக்கு சேவை செய்யும் வாய்ப்புகள் கிடைக்காததை எண்ணி அவர் மிகவும் வருத்தமடைவதாக நேற்று என்னிடம் கூறினார்.

'பண்டோபா'விற்கு ஒன்பது குழந்தைகள் உள்ளனர், மேலும் மாதத்திற்கு ரூ 50க்கு மேல் சம்பாத்தியம் இல்லை. அவர் என்னிடம் ஒரு நயா பைசா கூடக் கேட்கவில்லை, ஆனால் எப்போதும் என் வேலையில் உதவி கரம் வழங்கியதுண்டு. அவரது சேவைகளுடன் ஒப்பிடும்போது, ஜபம்-தவம் அனைத்தும் முக்கியமற்றதாகிவிடும்.

'ஹோர்முஸ்ஜி' (ஃபட்டேனா) இயற்கையாகவே விமர்சிக்கும் மனப்பாங்கு உள்ளவர், ஆனாலும் அவர் ஒருபோதும் எனக்குத் தவறிழைத்ததில்லை. அவர் உடல் சுவாதீனத்தால் சிரமங்களை எதிர்கொண்டாலும், எப்போதும் எனக்குப் பெரும் உதவியாக இருந்தார். ஊர் உலகம் அறியாமல் அவர் எனது பணிக்காகப் பெரிய தொகையைக் கொடுத்துள்ளார்.

எங்கள் அன்பான மாஜிஸ்ட்ரேட் 'ஜால் கேரவாலா', 'டாக்டர். டான்கின்' ஆகியோர் என் மீது கொண்டுள்ள ஆழ்ந்த அன்பு, அசைக்க முடியாத நம்பிக்கை மற்றும் எனக்காகச் செய்யும் ஈடு இணையற்ற சேவை அனைத்தும் பாராட்டுக்கு அப்பாற்பட்டது. டான் ஒரு செல்வந்தர் குடும்பத்திலிருந்து வந்தவர். என் மீதான அவரது நம்பிக்கையும் அன்பும் தனித்துவமானது. அவர் எனக்காகவே இராணுவத்தில் பணியாற்றுகிறார், எனக்காகப் பணத்தைச் சேமித்து எப்போதும் எனக்கு உதவி செய்கிறார்.

'ராம்ஜூ'வைப் பார்க்கும்போது, எனது சொந்த உலகளாவிய துயரம் நினைவிற்கு வருகிறது! நான் எல்லையற்ற துயரத்தை அனுபவிப்பவன், ஏனெனில் நான் உலகளாவிய துரதிர்ஷ்டத்தைத் தாங்க வேண்டும். ஆனால், அதேவேளையில் எல்லையற்ற ஆனந்த நிலையை நான் அனுபவிப்பது எல்லையற்ற துயரத்தைச் சமன் செய்கிறது; ராம்ஜூவைப் பொறுத்தவரை, அவர் எதிர்கொள்ளும் மகிழ்ச்சியற்ற தன்மை மட்டுமே உள்ளது. அவர் தனது வாழ்நாள் முழுவதையும் எனது பணிக்காக அர்ப்பணித்துள்ளார், மேலும் அவர் எனது பணியில் கணிசமான அளவு உதவி செய்துள்ளார்.

'சதாஷிவ்' (பாட்டீல்) எனது வலது கை. செயலிழந்த கை, சில நேரங்களில் புத்துயிர் பெறுகிறது.

'பைதூல்' மஸ்துகளின் ஸர்தார் (தலைவர்); எனது மஸ்த் பணியின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். அவர் எனக்குச் செய்த தனிப்பட்ட சேவைகள் தனித்துவமானது.

எங்கள் 'காக்கா பாரியா': காக்கா செய்த விதத்தில் எனக்கு எவரும் தனிப்பட்ட முறையில் சேவை செய்ய முடியாது. இந்த வகையில் அவரது சேவை ஈடு இணையற்றது. அவர் என்னுடன் ஏழு முறை மேற்கத்திய நாடுகளுக்குப் பயணம் செய்தது மட்டுமின்றி, கடுமையான சிரமங்களையும் எதிர்கொண்டார். என்னுடைய தனிப்பட்ட உதவியாளராக, அவர் பட்டியலில் முதலிடம் வகிக்கிறார்; மேலும் மஸ்த் வேலையில் பைதூலுக்கு அடுத்தபடியாக இருப்பவர் காக்கா.

'எரச்' மிகவும் நம்பிக்கைக்குரியவர். நான் தனிப்பட்ட முறையில் ஒருவருடைய தோழமையை விரும்புவதானால், அது எரச்சின் தோழமை.

'சகன்': சகனின் அன்பை நான் எப்படி விவரிக்க முடியும்? அவர் ஆரம்பத்தில் இருந்தே என்னுடன் இருக்கிறார்.

'கைகோபாத்' மண்டலியில் புதியதாக வந்திணைந்தவர்; ஆனால் அவருடைய அன்பும் நம்பிக்கையும் தனித்துவமானது. அவர் என் பெயரை ஒரு நாளைக்கு ஒரு லட்சம் முறை திரும்பத் திரும்ப உச்சரிக்கிறார். அவர் இப்போது செய்யும் சேவையை என்னால் கூட செய்திருக்க முடியாது.

எனக்கு மிகவும் நெருக்கமாகவும், பிரியமாகவும், இதயத்திற்கு அருகாமையிலும் இருக்கும் சீடர்களில் ஒருவர் 'ஃபெராம்ரோஸ் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா'. 'தத்து மெஹந்தர்கே' - இவரைப் பற்றியும் நான் இதையே சொல்லலாம், அவர்கள் இருவரும், அவர்களின் குருநாதருக்குப் (எனக்கு) பெரும் சேவையை செய்து வருகின்றனர்.

'அப்துல்லா' (ஜாஃபர்), 'ஸையத் ஸாஹேப்', 'எட்கே' போன்ற பலர் உள்ளனர், அவர்கள் அனைவரும் வாழ்நாள் முழுவதும் என்னை முழு மனதுடன் நேசிக்கின்றனர்.

'சிது' 1926 முதல் எனக்கு பல்வேறு பொறுப்புகளில் சேவை செய்து வருகிறார். அவருடைய நேர்மையும், நம்பிக்கையின் எளிமையும் ஈடு இணையற்றது. எல்லா தனிப்பட்ட விஷயங்களிலும் நான் அவரை நம்பலாம். எந்த ஜபத்தையும் தவத்தையும் அவரது சேவைகளுடன் ஒப்பிட முடியாது.

'முரளி' (காளே): அவருக்கு உலக சிந்தனைகள் பல இருந்தாலும், அவர் என்னுடனிருந்து எனக்கான அனைத்து வேலைகளையும் செய்து வருகிறார். அவரது சேவைகள் உயர் மதிப்பு மிக்கவை.

'ஸட்டா' குடும்பம்: இந்தக் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் தனித்துவமானவர்கள். என்னைப் பற்றிய சந்தேகம் எதுவும் மனதில் எழாத ஒரே நபர் பிலூ ஸட்டா. நடப்பதெல்லாம் எனது விருப்பப்படியே என்று எப்போதும் நம்பும் அவர் என் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவர்.

'மினூ' (கராஸ்): ஈடு இணையற்ற அன்பும் பக்தியும் மிக்க மனிதர் இவர். மினூ தனது இரண்டு கைகளும் எரிந்துள்ள போதிலும், அவர் எனது பார்வை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் அவர் உயிரை இழந்திருக்கக்கூடும் என்று நம்புகிறார்.

'பப்பா'வைப் பற்றி (ஜெஸவாலா) **என்ன சொல்ல வேண்டும்? அவர் ஒரு பாப்பா!**

**'ஜால்பாய்': எனது சகோதரர்களிடையே, ஜால் எல்லா ஏற்ற தாழ்வுகளிலும் என்னுடன் இருந்தார். ஆதி (ஜூனியர்), பெஹராம் இருவரும் என்னை மிகவும் நேசிக்கிறார்கள். நான் கடவுள் என்று பெஹராம் நம்புகிறார். ஜால் என்னுடைய ஒவ்வொரு தாளத்திற்கும் ஆடியுள்ளார். எந்த ஒரு வேலையும் செய்யாமல் இருப்பது மிகவும் கடினமான விஷயம், ஆனாலும் ஜால் இதை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. என் மீதான நம்பிக்கையை சோதிப்பதற்காக ஒரு முறை செந்தழல் கரி அவரது உள்ளங்கையில் வைக்கப்பட்டபோது, அவரது சதை எரிந்தாலும், அவர் ஒரு அங்குலம் கூட அசையவில்லை!**

**நரிமனின் நம்பிக்கையும், என் மீதான அன்பும், உலகில் எனக்காக எதையும் சாதிக்க நான் அவரைச் சார்ந்து இருக்க முடியும்.**

'குப்புசுவாமி'யைப் பற்றி, **எதிர்வரும் டிசம்பர் கூட்டத்தில் நான் கூறுவேன்.**

**எனக்காக உரை நிகழ்த்தி, எனது பணி, மக்கள் மனங்களைத் தொடும் விதத்தில் சேவை புரிபவர்கள் எனது 'குரல்' (நாக்கு) போன்றவர்கள். உண்மையில் அவர்கள் எனது 'சார்புக்குரல்'. எனக்காகப் பணிபுரியும் அன்பர்கள் அனைவரும் என் இதர உறுப்புகளைப் போன்றவர்கள்.**

டாக்டர் கனி, டாக்டர் தேஷ்முக் இருவரும் பாபா, தனது சீடர்கள் மீது வைத்திருந்த அசாதாரண அன்பிற்காக அவரைப் பாராட்டினர், மேலும் குருநாதர் தமக்கு வழங்கிய அனைத்து பாராட்டுக்கும் சீடர்கள் உண்மையில் தகுதியற்றவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டினர்.

தொடர்ந்து பாபா உலக விவகாரங்களை, சுருக்கமாகப் படமிட்டுக் காட்டினார்: "**கிழக்கு மற்றும் மேற்கத்திய நாட்டு அரசியல்வாதிகளுக்கு, தற்போதைய சிக்கல்களைப் பற்றி எதுவும் தெரியாது. இதில், எவரும் வெற்றிவாகை சூடுவதும் இல்லை, தோல்வியுற்று வீழ்ந்து போவதும் இல்லை என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.**"

'டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிகையில் உலக நிலைமை மற்றும் பல்வேறு நாடுகளில் எழும் சிக்கலான பிரச்சினைகளை விவரித்து வெளிவந்த கட்டுரை பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது. பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**உலக நிலைமை மிகவும் சிக்கலாகிவிட்டது. ஜெர்மனியின் தோல்விக்குப் பிறகு, ரஷ்யாவின் பிரச்சினை மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ஜப்பானின் தோல்வி பற்றிய கேள்வி தீர்க்கப்பட வேண்டியதாக உள்ளது. போரின் உச்சகட்டம் டிசம்பரில் தலைதூக்கி, பின்னர், உண்மையான விளையாட்டு ஆரம்பமாகும். அனைத்து நாடுகளும் உதவியற்றதாக உணரும், அல்லது மூன்றாம் உலகப் போர் அதன்**

**விளைவாக உருவாகும், அல்லது எங்களில் ஒருவர் (குருநாதர்) அந்நாடுகளுக்கு உதவ முன் வருவார். அந்த நேரத்தில் நான் எனது நமாஸை (பிரார்த்தனை) எடுத்துரைப்பேன். அந்த நமாஸ் தெய்வீக வாளை அதன் உறையிலிருந்து கட்டவிழ்ப்பதாக இருக்கும்!**

**அனைத்தையும் கருத்தில் கொண்டு, நான் மூன்று விஷயங்களைத் தீர்மானித்தேன்:**

**முதலாவது: என்னுடைய உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்கள், சுமார் 400 முதல் 500 வரை, அடுத்த டிசம்பர் முழு மாதமும் என்னுடன் இருப்பார்கள்.**

**இரண்டாவது: டிசம்பர் வரை, முழு வீச்சில் எனது பணியில் ஈடுபடும் நோக்கத்தில் அனைத்து கடிதப் போக்குவரத்துகள் மற்றும் தொடர்புகளிலிருந்து விடுபட விரும்புகிறேன்.**

**மூன்றாவது: ஜனவரி முதல், உடன்பாட்டில் கையொப்பமிட்டவர்களுக்கு அளிக்கப்படும் குறிப்பிட்ட பணியை, இந்தியாவில் அல்லது வெளிநாட்டில், என்னுடன் இணைந்து அல்லது தனியாகச் செய்ய, அனைவரும் தயாராக இருக்க வேண்டும்.**

டிசம்பர் 1945இல் ஒரு மாத காலத்திற்காகத் திட்டமிடப்பட்ட கூட்டத்தைக் குறித்த விவாதத்தில், அதை ராய்ப்பூர் நகரில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. ராய்ப்பூர் கூட்டத்தின் விவரங்களைக் கோடிட்டுக் காட்டி, கூட்டம் நிறைவடைந்ததும், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் விவரங்களை உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் சுற்றறிக்கை ஒன்று வெளியிட முடிவு செய்யப்பட்டது.

பாபா, மீண்டும் மாலையில் அனைவருக்கும் தனி நேர்காணல்களை அளித்ததோடு தனிப்பட்ட அறிவுறுத்தல்களையும் வழங்கினார். அயலூரிலிருந்து வந்த அன்பர்கள் அனைவரும் அடுத்த நாள், 1945, மே 26 சனிக்கிழமை அன்று தத்தமது இல்லங்களுக்குப் புறப்பட்டனர்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, டாக்கேயின் மனைவி காஷிபாய் சமீபத்தில் காலமானார். டாக்கே, பாபா மீது மிகுந்த அன்பும், பற்றும் கொண்டிருந்தார்; ஒரு வருடத்திற்கு முன்பு ராஹூரியில், பாபா அவரது வீட்டிற்குச் சென்ற வேளையில், காஷிபாய் பலவீனமாக இருப்பதைக் கண்டறிந்த பாபா, அவருக்கு முழு ஓய்வு கொடுக்கும்படி அறிவுறுத்தி, அவரது ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு, பாபா, 1928ஆம் ஆண்டு டோக்கா ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது, டாக்கே மனைவியுடன் குடும்ப குவாட்டர்ஸில் வாழ அனுமதித்தார்.

அவரது மறைவிற்குப் பிறகு, பாபா, டாக்கேயைக் கூட்டத்தில் சந்தித்து, தனிப்பட்ட முறையில் விளக்கினார், **"நீங்கள் இப்போது சுதந்திரமாக இருக்கிறீர்கள், நான் உங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறேன். இப்போது மீண்டும் அந்தப் பொறிக்குள்** (திருமணம் என்று அர்த்தம்) **விழுந்து விடாதீர்கள், என்னுடன் நிரந்தரமாக இருங்கள்."** டாக்கே அதற்கு இணக்கம்

தெரிவித்ததும், "**நாளை முதல், என்னுடன் தங்குவதற்கு வாருங்கள்**" என்று மண்டலியோடு வந்திணைய பாபா அவரை வரவேற்றார். இதற்கும் டாக்கே ஒப்புதல் அளித்தார்.

"**ஆறு மாதங்களுக்குப் பின்னர் என்னுடன் நிரந்தரமாகத் தங்க வாருங்கள்**" என்று பாபா, தெளிவுபட கூறி, இந்த முறையில் எல்லாம் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இதற்கிடையில், இரண்டாவது முறையாக டாக்கேயின் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. அவரது திருமண அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றதும், பாபா உடனடியாக, காளேமாமாவை, டாக்கே திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற உத்தரவுடன் அனுப்பிவைத்தார். காளேமாமா தக்க நேரத்தில் தொடர்பு கொள்ள முடியாததால் திருமணமும் நடந்து முடிந்தது. பாபா இந்த விவகாரத்தில் கோபமடைந்து தற்காலிகமாக டாக்கே தன்னிடம் வருவதைத் தடை செய்தார்.

பெண்டு மெஹராபாத்தில் மேலாளராக இருந்தார், மேலும் அனைத்து நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களையும் கையாண்டு, கணக்குகளை வைத்திருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில், தத்து, பெண்டுவின் கணக்கு புத்தகத்தை ஆதி சீனியரிடம் காட்ட, அவர் கணக்குகள் ஒழுங்காக இல்லை என்று பாபாவிடம் புகார் செய்தார். அதனால் பாபா, பெண்டுவை அழைத்து, "**உங்கள் கணக்குகள் சரியாக இல்லை**" என்று விமர்சித்தார்.

"அவை சரியாகத்தான் உள்ளன!" பெண்டு எதிர்ப்புத் தெரிவித்தார்.

"கணக்கில் உள்ள ஒவ்வொரு பொருளும் தனித்தனியாக பட்டியலிடப்பட வேண்டும்," ஆதி சுட்டிக்காட்டினார்.

"வங்கிகள் அவற்றின் பணத்திற்காக வெவ்வேறு கஜானாக்களை வைத்திருக்கிறதா?" பெண்டு கேட்டார். "பணம் ஒன்றாக வைக்கப்பட்டு, கணக்குகள் தனித்தனியாக எழுதப்படுகின்றன. அதேபோல, நானும் தனித்தனியாகக் கணக்குகளை வைத்துள்ளேன்" என்றார்.

"**நீங்கள் மிகவும் நம்பிக்கைக்குரியவராக இருக்கிறீர்கள், உங்கள் நம்பிக்கையை எவரும் சந்தேகிக்க முடியாது; ஆனால் கணக்கியல் பற்றிய முதல் நிலை விதிகள் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்! ஆதி சரியாகத்தான் கூறுகிறார்**" என்று பாபா அனைவருக்கும் முன்னால் பெண்டுவை வசைபாடினார்; பெண்டு மிகவும் சீற்றமடைந்தாலும், பாபா கட்டளைகளை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்ததை அவர் கேட்டுக்கொண்டே இருந்தார்.

தத்து, அப்போது தனது அறையை விட்டு வெளியே வர, பெண்டு பின்தொடர்ந்து, அவரைக் கைகளால் பற்றிக் கொண்டு, "நீதான் இந்த எல்லா பிரச்சினைகளுக்கும் காரணம்" என்று கூறி, பலமாக அறைந்தார். பாபா, அதைக் கேட்டு மீண்டும் அவர்களை அழைத்து, பெண்டுவைக் கடுமையாகத் திட்டி தத்துவின் கால்களைத் தொடுமாறு கட்டளையிட்டார்.

பெண்டு அதைச் செய்ததும், அவரை மன்னித்து, பாபா விளக்கினார், "**தத்து சண்டையின் மூல காரணம் அல்ல; ஒவ்வொருவரின் கோபமும்தான் அதற்குக் காரணம்! கோபம் இல்லை என்றால் மோதலும் இல்லை. உங்கள் முழு வாழ்க்கையையும் எனக்கு அர்ப்பணித்து விட்டீர்கள்; உங்கள் முழு மனதுடன் பல வருடங்களாக எனக்கு சேவை செய்கிறீர்கள். ஆனால் இது வரை உங்கள் கோபத்தை என்னிடம் அர்ப்பணிக்கத் தவறிவிட்டீர்கள். நீங்கள் அதைச் செய்வதானால், ஈடு இணையற்றவராக இருப்பீர்கள்!**

நாக்பூரைச் சேர்ந்த 'நானா கேர்' (NANA KHER - வயது 28), குழந்தை பருவத்திலிருந்தே ஆன்மீகத்தில், குறிப்பாக ராம் மற்றும் கிருஷ்ணரின் கதைகளில் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் 1941ஆம் ஆண்டில் டாக்டர் தேஷ்முக் (கல்லூரியில், அப்போது அவரது தத்துவ பேராசிரியர்) மூலமாக, பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டார்; அந்த நேரத்திலிருந்தே பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கினார். ஆனால் 1944இல் நாக்பூரில் பாபாவின் தரிசன நிகழ்ச்சி நடைபெற்றபோது, நானா பூனாவில் பணிபுரிந்ததால், அது பற்றிய விபரம் தெரியாமல் போயிற்று.

பூனாவில், அவர் எரச்சை சந்திக்க நேர்ந்தது; அவர் (எரச்) தனது எதிர்வரும் திருமணத்தைப் பற்றி எடுத்துக்கூறி, 'நீங்கள் அதில் கலந்து கொள்வதானால், மெஹர் பாபாவின் தரிசனத்தைப் பெறும் வாய்ப்புள்ளது' என்றதும், விழாவில் கலந்து கொள்ளும் எண்ணத்தில் நானா அஹமதுநகருக்கு வந்தார். மே 27, திருமணத்திற்கு முந்தைய நாள் மாலை, பாபா அக்பர் பிரஸ்ஸுக்கு விஜயம் செய்த வேளையில், அவர் பாபாவை முதன்முதலில் சந்திக்க முடிந்தது.

பாபா, நானாவை தனது அறைக்குள் அழைத்தபோது எரச், ஜால் கேரவாலா, ஜால்பாய் ஆகியோரும் உடன் இருந்தனர். பாபா, நானாவிடம், "**உங்களுக்கு என்ன வேண்டும்?**" என வினவினார்.

"ஆன்மீக சுதந்திரம்," நானா பதிலளித்தார்.

பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார், "**நீங்கள் எனது கட்டளைகளைப் பின்பற்றுவீர்களா?**"

"நீங்கள் சொல்வதைச் செய்ய நான் முற்றிலும் தயாராக இருக்கிறேன்."

பாபா அறிவுறுத்தினார், "**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பகலில் உபவாசம் இருங்கள், மாலை 7:00 மணிக்கு உங்கள் கைகளால் ஒரு பிச்சைக்காரருக்கு உணவூட்டிய பிறகு, முழு உணவை நீங்கள் உட்கொள்ளலாம். ஒரு மூடிய அறையில் தினமும் பதினைந்து நிமிடங்கள் எனது பெயரை உச்சரித்து, எளிமையும், தூய்மையுமான வாழ்க்கையை நடத்துங்கள்.**" பாபாவின் கட்டளைகளுக்கு நானா நன்றியுள்ளவராக இருந்தார்; பாபா அவரிடம், "**நீங்கள் வேறு ஏதேனும் கேட்க விரும்புகிறீர்களா?**" என்றார்.

நானா தயக்கத்துடன் கேட்டார் "எனது பெற்றோர் நான் திருமணம் செய்துகொள்வதை விரும்புகிறார்கள். நான் என்ன செய்ய வேண்டும்?"



எரச் (வலது புறம்) மற்றும் குடும்ப உறுப்பினர்களின் திருமண நிகழ்ச்சி
(MARRIAGE CEREMONY OF ERUCH, FAR RIGHT & HIS COUSINS)

**“இப்போது என்ன அவசரம்? இரண்டு வருடங்கள் காத்திருங்கள், அதற்குப் பின்னர் என்ன செய்வது என்பதை நான் சொல்கிறேன்.”**

நானா, பாபாவுடன் அவரது காரில் மெஹராபாத் செல்ல அனுமதிக்கப்பட்டார். முஹமது மஸ்த் பாபாவைப் பார்த்ததும், அவரை மார்போடு அணைத்துக்கொண்டு போக விடாமல் தடுத்தார். பாபா, சில சாக்குப்போக்குகளை எடுத்துக்கூறி அவரிடமிருந்து விடைபெற்று, பழைய ‘மெஸ் குவார்ட்டர்ஸ்’ கட்டிடத்தில் மண்டலியைக் கூட்டி, ஆதி சீனியர் ஹார்மோனியம் வாசிக்க, கஸல் நிகழ்ச்சியில் பங்கெடுத்தார்.

1945, மே 28 திங்களன்று எரச் (29), அவரது உறவினர் கோர்ஷெத் தமானியா (29), மற்றும் எரச்சின் சகோதரி மெஹரு (24), கோர்ஷெத்தின் சகோதரர் ஸவக் தமானியா (33) ஆகியோரின் திருமணங்கள் அக்பர் பிரஸ்ஸில் (AKBAR PRESS) நடந்தன. அது ஒரு சாதாரண திருமண விழாவாக இல்லாமல், மும்பை, பூனா மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த அன்பர்களுக்கு, பாபாவுடனான சகவாச திருநாளாகக் கொண்டாடப்பட்டது.

திருமணங்களில் கலந்து கொள்வதற்காக பாபா, மெஹராபாத் மண்டலியுடன் அக்பர் பிரஸ்ஸுக்குச் சென்ற வேளையில், திருமண விழா தரிசனமாக மாறியது! இரண்டு திருமணங்களும் பாபாவின் விருப்பப்படி நடந்தன, ஆனால் எரச்சின் திருமணம் மிகவும் அசாதாரணமானது. பாபாவிற்குக் கீழ்ப்படியும் அதே நேரத்தில், அவரது தந்தையை மகிழ்விக்கும் ஒரே நோக்கத்துடன் எரச் திருமணம் செய்துகொண்டார் - ஆனால் நிகழ்வுகளின் காலப்போக்கில், அவர் திருமண வாழ்க்கையில் ஈடுபடவில்லை என்பது தெளிவானது.

திருமணத்திற்குப் பிறகு, மானேக் மேத்தா, மெஹர் பாபாவை, கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தி, அவரை ‘யுகத்தின் அவதார புருஷர்’ என்று அறிவித்தார். பூனாவைச் சேர்ந்த பாடகர் பாபு கவாய் (BABU GAVAI) என்பவரின் இசை நிகழ்ச்சியின்போது, பாபா அனைவருக்கும் தரிசனத்தை அனுமதித்தார். மேலும் ஒரு தனி அறையில், புதிதாக திருமணமான இரண்டு தம்பதிகள் உட்பட சில நபர்களுக்கு அவர் தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார். கராச்சியைச் சேர்ந்த ‘மினோசெர் கே. ஸ்பென்ஸர்’ (MINOCHER K. SPENCER) என்ற ஆன்மீக ஆர்வலர் இந்த நேரத்தில் பாபாவை சந்தித்தார். கேரளாவில் வாழும் சுவாமி ராமதாஸிடமிருந்து ஸ்பென்ஸர் ஒரு செய்தியை கொண்டு வந்தார், ஆனால் அவர் அதை வழங்குவதற்கு முன்பே, பாபா, அந்த நபர் ஏன் வந்தார், அந்தச் செய்தியில் என்ன அடங்கியுள்ளது என்பது குறித்த தனது சர்வ ஞானத்தை வெளிப்படுத்தினார்.

மும்பையில் வாழும் ஸொராப்ஜி ஸிகன்போரியா (SORABJI SIGANPORIA) தனது குடும்பத்துடன் திருமணத்தில் பங்கெடுத்த அவர் இதற்கு முன்னதாக, பாபாவை சந்தித்திருந்தார்; ஆனால் மனதளவில் பாதிக்கப்பட்ட தனது மகன்

நோஷிரை, பாபாவுடன் இருக்குமாறு அவர் கூறியபோது, ஸொராப்ஜி மனமுடைந்து, பாபா மீது நம்பிக்கை இல்லாமல் திரும்பிச் சென்றார்.

ஸொராப்ஜி, அக்பர் பிரஸில் அமர்ந்திருந்த வேளையில், பாபா அவரை அழைத்து ஒரு வெற்றிலையைக் கொடுத்து, உண்ணுமாறு கூறினார். இந்த முறை கூட நம்பிக்கையின் வெளிச்சம் அவருக்கு இன்னும் முழுமையாக வரவில்லை எனினும், ஸொராப்ஜி, பாபா கூறியபடி வெற்றிலையை வாயிலிட்டு மென்றபோது, அவர் திடீரென சில உள் உணர்வால் தாக்கப்பட்டு, வியப்பில் கதறினார், “நான் உங்களை நம்புகிறேன்! நான் உங்களை ஏற்றுக்கொள்கிறேன்!” அங்கிருந்த அனைவரின் கண்களும் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தன.

அந்த நேரத்திலிருந்து, ஸொராப்ஜிக்கு மெஹர் பாபா மீது முழு நம்பிக்கை பிறந்தது.

படிப்படியாக, நோஷிரின் உடல்நிலையும் ஓரளவு இயல்பு நிலைக்கு வந்தது. தக்க தருணத்தில் பாபாவுடன் தனது மகனை விட்டுச் செல்லாததை எண்ணி ஸொராப்ஜி இப்போது வருந்தினார்.

1945, மே 29 செவ்வாய்க்கிழமை அன்று பாபா, ஆதி சீனியருடன் காரில் மெஹராபாத்திலிருந்து ஹைதராபாத்திற்குப் புறப்பட்டு மறுநாள் சென்றடைந்தார். ஜூன் 4 அன்று, காக்கா, பைதூல், குஸ்தாஜி ஆகியோருடன் பாபா மீண்டும் மஸ்த் பணிக்காக விஜயவாடா (VIJAYAWADA) மற்றும் சில இடங்களுக்குச் சென்றார். ‘காஸிப்பெட்’ (KAZIPET) எனும் கிராமத்தில், பாபா இரண்டு மஸ்துகளைத் தொடர்பு கொண்டார், ஒருவர் மசூதியில் மறைந்திருந்த ‘ஹைதர் வாலி’ (HYDER WALI) என்பவர் மற்றொருவர் ‘வாலி ஹைதர்’ (WALI HYDER) என்றழைக்கப்பட்ட, ஒரு சிறப்பான மஸ்த், வழக்கமாக அவர் காட்டுப்பகுதியில் அலைந்து கொண்டிருந்ததால் அவரைக் கண்டுகொள்வது கடினம்.

ஜூன் 5ஆம் நாள், வாரங்கல் (WARANGAL) நகரில் பாபா, ‘பிரம்மச்சாரி’ (BRAHMACHARI) என்ற மகத்தான மஸ்த் ஒருவரை சந்திக்க பைதூலை அனுப்பி வைத்தார். அவர் ஒரு குறுகிய மனிதராக இருந்தாலும், அச்சத்தைத் தோற்றுவிக்கும் ஜலாலி வகையைச் சார்ந்தவர். மஸ்த், பைதூலைப் பார்த்ததும், ”என் எல்லைக்குள் அடியெடுத்து வைக்காதே!” என்று கத்தினார்; மஸ்தின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, பைதூல் அருகில் செல்லும் தைரியம் இல்லாமல் பாபாவிடம் திரும்பிச் சென்றார்.

**“நாங்கள் உங்களை சந்திக்க மட்டுமே இங்கு வந்துள்ளோம்”** என்ற செய்தியுடன் பாபா, காக்காவை பிரம்மச்சாரியிடம் அனுப்பி வைத்தார்.

அந்த மஸ்த் சீற்றத்துடன் அவரைக் கண்டித்தார், “எனவே நீங்கள் சுமையை ஏற்றுக்கொள்ளும் வேறு எந்த மனிதனையும் கண்டுகொள்ள முடியவில்லையா? நான் எவரிடமிருந்தும் எதையும் ஏற்கப்போவதில்லை! மேலும் நான் எவருக்கும் எதையும் கொடுக்கப்போவதுமில்லை!”

காக்காவும் திரும்பி வந்தார்; பாபா, அவருடைய ஒத்துழையா மனப்பான்மையைக் குறித்து மஸ்திற்கு விளக்கி எடுத்துரைக்க அவரைத்

திருப்பி அனுப்பி வைத்தார். காக்கா, பிரம்மச்சாரி மஸ்தை, சோம்பேறியாகவும் பொறுப்பற்றவர் எனவும் விமர்சித்தார்; பின்னர் அவர் ஏன் நாள் முழுவதும் வெறுமனே அமர்ந்து, தனது பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார் என வினவினார். மஸ்த் சிறிது நேரம் அமைதியாகப் பேசிக்கொண்டிருந்தவர், பின்னர் ஆவேசத்தில், "உடனடியாக இங்கிருந்து புறப்படுங்கள்!" என்று காக்காவை எச்சரித்தார்.

காக்கா திரும்பி வந்து பாபாவிடம் நடந்த அனைத்தையும் எடுத்துரைத்த வேளையில், பாபா மனம்விட்டுச் சிரித்தார். அவர் மஸ்தை நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை என்றாலும், பைதூல், காக்கா இருவர் மூலமாக அவரது உள் பணியைச் செய்து முடித்ததால், அது தேவையற்றது எனத் தோன்றியது. மஸ்துகள் மிகையான இறை போதையில் இருக்கும் சில நேரங்களில், மேலும் வழங்கப்படும் மதுபானம் அவர்களால் வீசி எறியப்படுவதுண்டு! போதாக்குறைக்கு, மதுபானத்தை அள்ளி வழங்கும் இறைவனைப் பற்றிய உணர்வு இல்லாத நிலையில், அவர் தனது அன்பில் பைத்தியம் பிடித்து அலையும் அவர்களுக்கு மேலும் அதிகமாக மதுவை வழங்க வரும்போது, சிலர் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள், சிலர் இல்லை! அவர்கள் குழந்தைகளைப் போல மாறிவிட்டதால், பாபா அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க எதையும் செய்யத் தயாராக இருந்தார்.

பாபா, காக்கா, பைதூல் மூவரும் ஜூன் 7 அன்று ஹைதராபாத் திரும்பி வந்தனர். பயணத்தின் போது காலநிலை மிகவும் சூடாக இருந்ததால் கடுமையான வெப்பம் பாபாவின் ஆரோக்கியத்தைப் பாதித்தது.

ஹைதராபாத்தில் இருந்தபோது, கைக்கோபாத், நாராயண் நாயர் (கிருஷ்ணாவின் சகோதரர்), சி.எஸ். கவ்டே (KAVDE) ஆகியோர் மண்டலி மற்றும் பாபாவின் பங்களாக்களில் பகல்நேர காவலாளர்களாக இருந்தனர், ஏனெனில் எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

1942இல் மெஹராபாத்தில் பாபாவின் தரிசனத்திற்காக வந்த கவ்டே, அவருடன் தங்க விரும்பினார். பின்னர் ஒரு நாள் அவர் அழைக்கப்படுவார் என்று பாபா உறுதியளித்தார், அவர் இப்போது பாபாவுடன் ஹைதராபாத்தில் தங்கியிருந்தார்.

ஒரு நாள் பாபா, திடீரென மண்டலியின் இல்லத்திலிருந்து கவ்டேயை அழைத்து வர பைதூலை அனுப்பியபோது அவர் அங்கு இல்லை; பைதூல் திரும்பி வந்து பாபாவிடம் இது பற்றி கூறி, "அவருக்கு ஏதேனும் செய்தி இருந்தால், அவர் திரும்பி வரும்போது நான் அதைத் தெரிவிப்பேன்" என்றார்.

பாபா முகம் சுளித்து, சீற்றத்தை வெளிப்படுத்தினார், "**எந்த செய்தியும் இல்லை - நான் அவரை அறைந்து ஆண்மையை இழக்கச் செய்ய விரும்புகிறேன்! கூர்மையான கத்தியை எடுத்து வாருங்கள்!**" என்றதும் அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர்; கவ்டே திரும்பி வந்ததும் அவரிடம் அதைப் பற்றிக் கூறியபோது, பாபாவின் வார்த்தைகளுக்குப் பின்னால் இருந்த

ஆழமான அர்த்தத்தை அவர் மட்டுமே புரிந்துகொண்டார். உண்மை என்னவெனில், அவர் அக்கல்கோட் (AKKALKOT) கிராமத்தில் ஒரு பெண்ணைக் காதலித்து, தொடர்ந்து அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். பாபாவுடன் இரவும் பகலும் ஹைதராபாத்தில் தங்கியிருந்தாலும், கவ்டே இந்தப் பெண்ணை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் பாபாவின் கருணை நிறைந்த பார்வை அவரை ஆழமாகச் சிக்கவிடாமல் காப்பாற்றியதோடு, அவரது திருமண எண்ணங்கள் படிப்படியாக மறைந்து போயின. பாபாவின் தலையீட்டின் மூலமாக, அவர் ஒரு பிரம்மச்சாரியாகவே இருந்தார்.

ஒருமுறை ஹைதராபாத்தில் பாபாவுடன் மண்டலி அமர்ந்திருந்தபோது, டாக்டர் கனி, பாபாவிற்குக் கோபம் வரும் விதத்தில் ஒன்றைக் கூறினார். பாபா உடனே கைக்கோபாத்திடம், "**நான் சொல்வது போலச் செய்வீர்களா?**" எனக் கேட்டார்.

"நான் உங்களுடன் இருப்பதன் ஒரே காரணம் அதுவே" என்று கைக்கோபாத் தீவிரமாக பதிலளித்தார்.

"**அப்படியானால் கனியின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுங்கள்!**"

கைக்கோபாத் ஒரு கணம் என்ன செய்வதென்ற குழப்பமுற்ற நிலையில், "ஆனால் கனி உங்கள் ஆரம்பகால மண்டலியில் ஒருவர்... நான் அவரை எப்படி அறைவேன்?" என்றார்.

பாபாவின் கோபம் உடனே அவர் மீது திரும்பியது: "**நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? இதைக் கூறுவதன் மூலம் நீங்கள் கனியை அறையவில்லை, ஆனால் என்னை அறைந்தீர்கள்!**"

"நான் எப்போது உங்களை அறைந்தேன், பாபா?"

"**என் உத்தரவை நிறைவேற்றத் தவறியதன் மூலம், நீங்கள் எனக்கு ஒரு கடுமையான அறையைக் கொடுத்தீர்கள்! நீங்கள் உண்மையாகவே என்னை அறைந்திருந்தால், உங்கள் கீழ்ப்படியாமையைப் போல் அது என்னைப் புண்படுத்தியிருக்காது. எனக்குக் கீழ்ப்படியாமல் நீங்கள் என் இதயத்தை மிகவும் ஆழமாக காயப்படுத்தி விட்டீர்கள்; அந்த வலி எப்போதும் அங்கேயே இருக்கும், ஒருபோதும் நெஞ்சைவிட்டு நீங்காது.**

"**நீங்கள் தினமும் 100,000 முறை எனது பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கிறீர்கள், ஆனால் எனது வார்த்தைகளை மதிக்காதவரையில் உங்கள் தவம் மற்றும் பிரார்த்தனைக்கு என்ன மதிப்பு இருக்கிறது? என் உத்தரவிற்கு முன்னால் எதுவும் உயர்ந்ததல்ல! நீங்கள் அதை உணரவில்லை என்றால், ஆயிரக்கணக்கான வருடங்கள் எனது பெயரை உச்சரிப்பது எந்த வகையிலும் உங்களுக்கு உதவாது. நீங்கள் என்னுடன் இருப்பதால் என்ன பயன்?**"

அதற்குப் பிறகு பாபா, கைக்கோபாத்தை சிவந்த முகத்துடன், அமைதியற்றவராக அங்கேயே விட்டுச் சென்றவர், விரைவில் திரும்பி வந்தபோது, கைக்கோபாத், "நான் கனியை அறைந்திருந்தால், அது அவருக்கு எவ்வளவு வேதனையைத் தந்திருக்கும். பிறரின் உணர்வுகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டாமா?" என்று கேட்டார்.

பாபா உடனே, "**அதாவது நீங்கள் அவருடைய உணர்ச்சிகளை எனது கட்டளையை விட உயர்ந்ததாகக் கருதுகிறீர்களா?**" எனக் கேட்டு, கனியின் பக்கம் திரும்பி, "**உங்களை அறைந்திருந்தால், நீங்கள் அதைப் பற்றி மோசமாக உணர்ந்திருப்பீர்களா?**" என்று வினவினார்.

பாபாவின் மறைமுக கருத்தைப் புரிந்துகொண்டு, டாக்டர் கனி பதிலளித்தார், "இல்லை, நான் சற்றும் வருந்தியிருக்க மாட்டேன், ஆனால் கைக்கோபாத் உங்களுக்குக் கீழ்ப்படியாதது குறித்து நான் மிகவும் மோசமாக உணர்கிறேன்."

கைக்கோபாத் உடனடியாக, "நான் இப்போது அவரை அறைவேன்" என்றார்.

ஆனால் பாபா சைகையால் தெரிவித்தார், "**என்ன பயன்? காலம் கடந்துவிட்டது. நீங்கள் கனியின் வருத்தத்தை நினைவில் கொண்டீர்கள், ஆனால் என்னுடைய வலியை அல்ல. நீங்கள் அவருக்கு நல்லவராக இருக்க விரும்பினீர்கள், ஆனால் அவரே உங்கள் அணுகுமுறையை ஆமோதிக்கவில்லை.**"

மண்டலியை நோக்கி, பாபா, இந்தக் கருத்துரையை வழங்கினார்: "**நீங்கள் உலகின் பார்வையில் நல்லவராகத் தோன்ற விரும்பினால், நீங்கள் எனக்காக வாழ முடியாது. ஆனால் நீங்கள் எனக்கு நம்பகரமாக இருந்து என்னை மகிழ்விக்க முயற்சித்தால், உலகம் உங்கள் காலடியில் விழும்.**"

பாபா, உடனடியாக ஆதி சீனியர் பக்கம் திரும்பி, இவ்வாறு கேட்டார்: "**நீங்கள் உங்கள் செருப்பால் கனிக்கு ஓர் அறை கொடுப்பீர்களா?**"

ஆதி பதிலளித்தார், "பாபா, நீங்கள் அவருக்குப் பத்து அறைகள் கொடுக்கச் சொன்னால், நான் அவருக்கு 12 அறைகள் கொடுக்கலாம்!"

"**அதுதான் நம்பிக்கையின் அடையாளம்!**" பாபா சைகையால் தெரிவித்தார்.

"**அவர் கூறியதை நீங்கள் கேட்டீர்களா, கைக்கோபாத்?**" என்றதும், கைக்கோபாத் முக வாட்டத்துடன் தலையசைத்தார். பின்பு பாபா, அவரைத் தனியாக அழைத்துச் சென்று, இனிமையாகப் பேசி, அவரை அரவணைத்தார்; கைக்கோபாத் கண்கலங்கினார்.

ஜூன் 16 அன்று, அலி ஷா மீண்டும் ஹைதராபாத்திற்கு அழைத்து வரப்பட்டார். பாபா ஒன்பது நாட்கள் மஸ்தின் அருகாமையில் இருந்து பணிபுரிந்து, 25ஆம் நாள் திருப்பி அனுப்பி வைத்தார். பாபாவின் இந்தப் பணி,

‘ஒக்கினாவா’ (OKINAWA) நகரில் நேச நாடுகள் வெற்றிவாகை சூடியதோடு ஒத்துப்போனதாகத் தோன்றியது.

கடந்த சில ஆண்டுகளில் மஸ்துகளுடனான அவரது தீவிர பணி, போரைக் கண்காணிக்கும் நிகழ்வுகளோடு தொடர்புடையது என்று பாபா குறிப்பிட்டார். ஆனால் பாபா இதை மட்டுமே செய்துகொண்டிருந்தார் என்று கருதுவது முட்டாள்தனம். அவதார புருஷரின் பணி இயற்கையால் உலகளாவியது, அதேவேளையில், அதன் உள்நோக்கம் கற்பனை செய்ய இயலாதது. ஒரே கல்லில் இரண்டு பறவைகளைக் கொல்லும் கோட்பாடு, அவதார புருஷரைப் பொறுத்தவரையில், அளவிறுதியற்ற தன்மையுடன் அதீத தாக்கத்தைக் கொண்டிருக்கும். பாபாவின் நகர்வுகள் போரின் முன்னேற்றங்களுடன் ஒத்துப்போனது என்பதில் சந்தேகமில்லை என்றாலும், அவருடைய உபவாசங்கள், பயணங்கள், மஸ்துகளுடனான அயராத பணி அனைத்தும் கண்ணுக்கு தெரியாத, அறிவிற்கு எட்டாத விளைவுகளை ஏற்படுத்தியதோடு, முக்கியமாக, மனிதகுலத்தின் உணர்வு நிலையை மேம்படச் செய்து, உலகை இறைவனை நோக்கி வழிநடத்துவதையும் கையாண்டது.

சில வருடங்களுக்கு முன்பு, பாபா, மெஹர்ஜி கர்காரியாவிடம் ஈரானில் அவர் நடத்திவந்த வியாபாரத்தைக் கைவிடாமல் தொடர்ந்து நடத்துமாறு அறிவுறுத்தினார். பாபாவின் அறிவுரைப்படி மெஹர்ஜி ஈரானுக்குத் திரும்பிய வேளையில் அவருடைய வணிகம் செழிப்பாக நடந்தது. 1945ஆம் ஆண்டு, அவர் மீண்டும் இந்தியாவிற்கு வந்தபோது, பாபா அவரை ஜூன் 23 அன்று ஹைதராபாத்திற்கு அழைத்தார். பாபா அவருடன் சில விஷயங்களைப் பற்றி விவாதித்து, “**இப்போது ஈரானுக்குச் சென்று, உங்கள் வணிகத்தை கைவிட்டு, மும்பைக்குச் செல்லுங்கள்; இல்லையெனில், ஹோமாய்** (அவரது மனைவி) **உயிரைத் துறந்துவிடுவார்**” என்று கூறினார்.

பாபாவின் வார்த்தைகள் போதுமான ஊக்கமளிப்பதாக இருந்ததால், மெஹர்ஜி பாரசீகத்திற்குப் புறப்பட்டுச் சென்று, பாபாவின் அறிவுறுத்தலின் படி தனது வணிக பரிமாற்றத்தை முடிவு செய்து, நவம்பர் 2 அன்று மும்பை வந்து சேர்ந்தார். இருப்பினும், மெஹர்ஜி இறுதியாக ஈரானில் தனது அனைத்து விவகாரங்களையும் முடிவிற்குக் கொண்டுவர நீண்ட காலம் பிடித்தது; அவர் இந்தியாவில் குடியேறிய பிறகும், வணிகம் சம்பந்தமாக ஈரானுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. தொலைத்தந்தி மூலமாக அவர் புறப்படுவதாக பாபாவிற்கு அறிவித்த ஒவ்வொரு முறையும், அவர் திரும்பி வருவதற்கான ஒரு குறிப்பிட்ட தேதியையும் பாபா வழங்கி வந்தார்.

ஒரு முறை மெஹர்ஜியால் பந்தர் அப்பாஸிலிருந்து (BANDER ABBAS) மும்பைக்குப் புறப்பட தேவையான கப்பல் கிடைக்காததால், குறிப்பிட்ட தேதியில் இந்தியாவை வந்தடைய அவர் ஒரு சிறிய மீன்பிடி கப்பலில் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. பயணத்தின் போது திடீரென எழுந்த புயலில் படகு, இயக்கு திசைக்கு எதிராக, பக்கவாட்டில், அலைமோதியது.

மேலும் தொடர்ந்து பயணிப்பது மிகவும் ஆபத்தானதாகையால், அந்த இடத்திலே நிறுத்தியாக வேண்டும் என்று படகோட்டி பரிந்துரைக்க, மெஹர்ஜி, "நிறுத்தாதீர்கள்! நான் விரைவில் மும்பையைச் சென்றடைய வேண்டும்!" என்றார்.

படகோட்டி மன்றாடினார், "வாழ்வா, சாவா? நாம் பயணத்தைத் தொடர்ந்தால், கடலில் மூழ்கிவிடுவோம்." புயல் தொடர்ந்து சக்திமிக்க அலைகளாக உருவெடுத்து, கடல் கடும் கொந்தளிப்பில் காணப்பட்டது; ஆனால் மெஹர்ஜி தனது கோரிக்கையிலிருந்து சற்றும் விலகாமல் பயணத்தைத் தொடரும் வேளையில், ஒரு முறை, அவர் பலமாக ஒரு பக்கம் வீசி எறியப்பட்டார்; அவரது விரலில் இருந்த பிளாட்டினம் (PLATINUM) மோதிரம் பல துண்டுகளாக உடைந்தது. பாபாவை நினைவில் கொண்ட அவ்வேளையில் அவர் தைரியத்தை இழக்கவில்லை. படகு, அருகில் அமைந்த துறைமுகத்தில் நிறுத்தப்பட்டபோது, மெஹர்ஜி மும்பைக்குச் செல்லும் வேறொரு படகு வழியாக பயணம் செய்து, சரியான நேரத்தில் வந்து சேர்ந்தார். அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்தின் காரணமாக அவர் பாபாவின் உள் உதவியை அனுபவிக்க முடிந்தது.

1945 ஜூலை 6 அன்று, காக்கா, பைதூல் ஆகியோருடன் பாபா மற்றொரு மஸ்த் பயணத்தில் புறப்பட்டார். 'குல்பர்கா'வில் (GULBARGA) தொடர்பு கொண்ட இரண்டு மஸ்துகளில், ஒருவர் 'புட்டி' (BUDHI - வயதான பெண்மணி) என்று அழைக்கப்பட்டார். இந்த முதிய, மரியாதைக்குரிய மஸ்த் மாநிலம் முழுவதும் ரயிலில், இலவசமாக பயணம் செய்து வந்தார்.

'கோஹர் ஷா' (GOHER SHAH) என்ற மற்றொரு மஸ்த், அதிக அளவில் மதுபானம் அருந்தும் பழக்கத்தைக் கொண்டவர், அவருக்குப் பிடித்தமான ஒரு மதுபானக்கடையில் அவரைக் கண்டுபிடித்து, பாபா தொடர்பு கொண்டார்.

குல்பர்காவிலிருந்து ஆறு மைல் தொலைவில் 'கன்டல்' (KHANDAL) என்ற சிறிய கிராமத்தில் வாழ்ந்த 'அப்பா சுவாமி' (APPA SWAMI) என்ற மஸ்துடன் பாபா தொடர்பு கொள்ளச் சென்ற போது, அந்த மஸ்த், பாபாவை ஒரு கோவிலுக்குள் அழைத்துச் சென்றார்; அப்போது அவர் பாபாவிடம், "நீங்கள் ஏன் அமைதியாக இருக்கிறீர்கள்? நீங்கள் பேச வேண்டும்" என்று குறிப்பிட்டார். இது பாபாவைக் களிப்புறச் செய்தது. பாபா அங்கிருந்து செல்லத் தயாரானபோது, மஸ்த் அவரை விடாமல், மேலும் இரண்டு மணி நேரம் அருகில் அமரச் செய்தார். அவர்கள் குல்பர்காவிற்குத் திரும்பும் வேளையில் பொழுது சாய்ந்துவிட்டது. சோர்வடைந்த பாபா, மேடு பள்ளம் நிறைந்த சாலையை ஒரு டோங்காவில் கடந்து சென்றார். மழைக்காலம் ஆதலால் முன்னால் சாலையைப் பார்க்க முடியாத அளவிற்கு இருள் மூடியிருந்தது. காக்கா, பைதூல் இருவரும் ஒளிரும் விளக்குகளைக் கைகளிலேந்தி முன்னால் சென்று வழிநடத்தினர்.

அடுத்த நாள், ஜூலை 7, பாபா 'யாத்கிரி' (YADGIRI) என்ற இடத்திற்குப் புறப்பட்டார். சில மைல் தொலைவில், தும்கூர் (TUMKUR) கிராமத்தில், 'தில்கூர் சுவாமி' (TILGUR SWAMI) என்றழைக்கப்பபட்ட இறை உணர்வை அடைந்த

'ஜீவன்முக்தா' (JIVANMUKTA) வாழ்ந்து வந்தார். இந்த மகத்தான ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட அவரைத் தொடர்பு கொள்ள, பாபா தும்கூருக்குப் புறப்பட்டார். தும்கூரை நோக்கி நடக்கத் தொடங்கிய வேளையில் அவரது மார்பில் கடுமையான வலி ஏற்படவே, வேகமாகச் செல்ல கடினமாக இருந்தது. வழியெங்கும் மழை பொழிந்த போதிலும், பாபாவின் உடல் வியர்வையால் நிரம்பி வழிந்தது. அனைவரும் முழங்கால் ஆழமான நீரில் நதியைக் கடந்து இறுதியில் கிராமத்தைச் சென்றடைந்தனர்.

பாபாவின் மார்பு வலி தொடர்ந்தது; அவரது உடை வியர்வை மற்றும் மழையால் நனைந்திருந்ததால், அவர்கள் வருவதற்கு சற்று முன்பு, சூரியன் வெளியே வந்து பிரகாசித்த வேளையில், பாபா அங்கே நின்று, தனது ஆடைகளை வெயிலில் உலர வைத்தார்.

பின்னர், அவர் கிராமத்துக் கோவிலருகில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்த தில்கூர் சுவாமியைத் தேடிச் சென்றார். அவரைப் பார்த்ததும், தில்கூர் சுவாமி, பாபாவை அரவணைத்து அவர் மீது வெளிப்படுத்திய ஆழ்ந்த அன்பைக் கண்டு காக்கா, பைதூல் இருவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்; தில்கூர் சுவாமி, பாபாவைப் பார்த்ததில் மகிழ்ச்சியாக இருந்தார்.

அவர்களின் சந்திப்பை, காலம் வியப்புடன் பார்த்தது: "நித்திய சொரூபமான அவதார புருஷர் மற்றும் விடுதலை பெற்று இறைநிலையை அடைந்த ஒரு ஜீவன்முக்தா - இருவருக்கும் இடையேயான ஓர் அரிய சந்திப்பு! மெஹர் பாபா, பரிபூரண சமுத்திரத்தின் உறைவிடம்; தில்கூர் சுவாமி பரிபூரண நிலையை அடைந்து சமுத்திரம் எனும் அனுபவத்தை அடைந்தவர். இந்த இரண்டு பெருங்கடல்களுக்கு இடையிலான சந்திப்பை எப்படி வார்த்தைகளால் விவரிப்பது? சமுத்திரத்தின் மொழி நம் செவிகளுக்குப் புரியாது."

கண்ணுக்குத் தெரியாத சில கொடுக்கல் வாங்கல்களுக்குப் பிறகு, பாபா யாத்கிரிக்குத் திரும்பி வந்தார். மார்பு வலியும் இப்போது மறைந்து, பாபா புதிய உற்சாகம் நிரம்பி காணப்பட்டார். தும்கூருக்கு நடந்து சென்று, தில்கூர் சுவாமியை சந்தித்து, அவர் ஆற்றிய பணி என்ன என்பது நமக்குப் புரியாது. ஓர் எறும்பால் இமயமலையின் உயரத்தை அளவிட முடியாதது போல, பாபா செய்யும் உள்பணியின் மகத்துவத்தை நம்மால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது.

ஹைதராபாத்தில் இருந்த இந்தக் காலகட்டத்தில், ரானோ ஒரு புதிய ஜோடி கண்ணாடிகளை வாங்க பாபாவிடம் அனுமதி கோரியபோது, பாபா இவ்வாறு அறிவுறுத்தினார், "**கண்ணாடிகளை வாங்குங்கள், ஆனால் அதற்காக, தேவைக்கு அதிகமாகச் செலவிட வேண்டாம்.**"

ரானோ ஒரு கண் மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்த பின்பு, டாக்டர் கட்டணமாக ஒரு பெரிய தொகையைக் கேட்டார். இது ரானோவை ஓர் இக்கட்டான சூழ்நிலையை சந்திக்கச் செய்தது, ஏனெனில் பாபா அவரிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை விட அதிகமாக செலவழிக்க வேண்டாம் என்று

கூறியிருந்தார். ரானோ மருத்துவரிடம், "டாக்டர், நான் வெளிநாட்டவர் என்பதால் என்னிடமிருந்து அதிக கட்டணம் வசூலிக்க வேண்டாம், என்னுடைய பழைய கண்ணாடிகள் விலை உயர்ந்ததாக இருந்தாலும், நான் இப்போது ஏழை ஆகிவிட்டேன், என்னிடம் அதிக பணம் இல்லை" என்று முறையிட்டது அவரை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது, ஏனெனில் மேற்கத்தியர்கள் கேட்ட கட்டணத்தைக் கொடுக்கத் தவறியதில்லை. ஆனால் ரானோ தொடர்ந்து வாதாடி, இறுதியாக, அவர் புதிய ஜோடி கண்ணாடிகளின் விலையை மட்டுமே செலுத்தினார்.

டாக்டர் டான், ரானோவுடன் டோங்காவில் திரும்பி வரும் வழியில் அவர் மண்டலிக்கு சில சாக்லேட்டுகளை வாங்கி, ரானோவிற்கும் சிலவற்றை வழங்கினார்; ஆனால் அவர் அதைப் பணிவுடன் மறுத்துவிட்டார். டான் கட்டாயப்படுத்திய வேளையில், மார்கரெட் சாக்லேட்களை அதிகமாக விரும்புவதால் அவருக்காகச் சிலவற்றை எடுத்துக் கொண்டார்.

ரானோ திரும்பி வந்ததும், தன் அறைக்குச் சென்று மார்கரெட்டுக்கு அந்தச் சாக்லேட்களைக் கொடுத்தார். பாபா ஒருபோதும் அவர்களின் அறைக்குள் நுழைந்ததில்லை, ஆனால் அன்று சில காரணங்களுக்காக அவர் திடீரென அங்குத் தோன்றினார்.

ரானோ அந்தச் சாக்லேட்டை மறைக்க முயன்றார், ஆனால் பாபா அவர் கையில் என்ன இருக்கிறது என்று கேட்க, 'சாக்லேட்' என்று பதிலளித்தார்.

**"அதை ஏன் கொண்டு வந்தீர்கள்?"**

"மார்கரெட்டுக்கு கொடுக்க."

**"மார்கரெட்டுக்கு மட்டுமா, எனக்கு இல்லையா?"** பாபா, வேதனை ததும்பிய முகத்துடன் கேட்டார்.

"நான் அதை வாங்கவில்லை!" ரானோ விளக்கினார். "டான் அதை என்னிடம் கொடுத்தார்."

**"அவர் எவ்வளவு வாங்கினார், யாருக்காக?"**

"மண்டலிக்கு ஒரு டின்."

**"போய், டானிடமிருந்து அதை எடுத்து வந்து என்னிடம் கொடுங்கள்."**

ரானோ சாக்லேட் டின்னை எடுத்து வந்து பாபாவிடம் கொடுத்தபோது, அவர் இந்த உத்தரவை வழங்கினார், **"எவரேனும் உங்களுக்கு எதையேனும் கொடுத்தால், முதலில் அதை என்னிடம் கொடுங்கள்."**

பாபா, மண்டலி பங்களாவிற்குச் சென்று டாக்டர் டானிடம், **"நீங்கள் மண்டலிக்கு ஏதாவது கொண்டு வருவதுண்டா?"** என்று கேட்டார்.

"இல்லை, உண்மையில் இல்லை. இன்று மட்டும், நான் கொஞ்சம் சாக்லேட் வாங்கினேன். எனினும், விஷ்ணு, உங்கள் அனுமதியின்றி அதை ஏற்கவில்லை. ரானோ அதை எடுத்துச் செல்லும் வரை, டின் உங்கள் நாற்காலியில் வைக்கப்பட்டிருந்தது."

பாபா, நகைச்சுவையாக வெளிப்படுத்தும் விதத்தில் கேலி செய்தார், **"இந்த மக்கள்** (மண்டலி) **என் மார்பில் அமர்ந்துள்ளனர்** (என்னைத் தொந்தரவு

செய்கிறார்கள்), **நீங்கள் அவர்களுக்கு இனிப்புகளைத் தொடர்ந்து வழங்கினால், உடல் எடைபோட்டு உண்மையில் என்னை நசுக்கிவிடுவார்கள்!** **நான் அவர்களை அடித்து உதைத்து காற்றுபோல மெல்லியதாக மாற்ற விரும்புகிறேன்!”**

அப்போது பாபா, “**நீலு மற்றும் அவரது இனிப்புப் பெட்டி பற்றிய கதை உங்களுக்குத் தெரியுமா?**” என்று கேட்டபோது, டான் தெரியாது எனக் கூறவும், பாபா கதையை விவரித்தார்:

**நீலுவிற்கு இனிப்பு என்றால் அலாதி ஆசை. அதற்காக அவர் இரவும் பகலும் ஏங்குகிறார். ஒரு நாள் மெஹராபாத்தில், பீலாமாயிடம் ஒரு சாக்லேட் டின்னில் உலர்ந்த மாட்டுச்சாணத்தை நிரப்பி, பரிசுப்பொருளாகத் தோற்றமளிக்கும் விதத்தில் பளபளக்கும் காகிதத்தால் சுற்றி மடிக்கச் சொன்னேன். மிகவும் அருமையாகத் தயார் செய்த அந்தப் பரிசு பொட்டலத்தை எடுத்துக் கொண்டு, நான் மண்டலியிடம் சென்றேன்.**

**பொட்டலத்தைப் பார்த்ததும் நீலுவின் வாயில் நீர் சுரக்கத் தொடங்கியது. நான் அவரை அழைத்து, அவரை எவ்வளவு நேசிக்கிறேன், எனக்கு அவர் எவ்வளவு பிரியமானவர், பிரத்தியேகமானவர் என்று கூறி, பொட்டலத்தைத் திறந்து, பாதியைத் தனக்காக வைத்துக் கொண்டு, மீதியை மண்டலிக்கு விநியோகிக்குமாறு அறிவுறுத்தினேன். மகிழ்ச்சி பொங்கும் இதயத்துடன், அவர் பொட்டலத்தை அவிழ்க்கத் தொடங்கினார். ஆனால் அது மாட்டு சாணத்தால் நிரம்பியிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவரது முகம் வெளிறியது!**

**நான் அவரிடம் சொன்னேன்: இதன் உள்ளே இருந்ததைப் பார்த்து நீங்கள் இவ்வளவு வெளிறிப்போவதானால், முழு உலகமும் மாட்டு சாணம் போன்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் அந்த உண்மையை உணரும்போது, உலகத்துடனான உங்கள் பற்று வெளிறிப்போய்விடும்! நீங்கள் மாட்டு சாணத்தைத் தூக்கி எறிந்தது போல், ஒரு நாள் இந்த உலகம் மற்றும் அதன் விவகாரங்களிலிருந்தும் விடைபெறுவீர்கள்.**

நீலுவைப் பற்றிய மேலுமொரு சம்பவத்தை டானிடம் பாபா விவரித்தார்:

**நீலு முதன்முதலில் என்னிடம் வந்தபோது, அவர் திருமணம் செய்துகொள்வதைப் பற்றி விசாரித்தேன். அவர் திருமணம் செய்து கொள்ள விரும்பினார், நான் அவரைத் தடுத்திருந்தால், அது உடனடியாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்காது. அதனால் நான் ஒரு திட்டத்தை உருவாக்கி, அதற்கிணங்க, காக்குபாய் மற்றும் ஷிரீன்மாயுடன் பூனாவிற்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்க்க அனுப்பி வைத்தேன்.**

**உண்மையில், ஷிரீன்மாயும், காக்குபாயும் பல பெண்களைப் பார்க்க நீலுவை அழைத்துச் சென்றனர்; நடந்தது என்ன? அவர் விரும்பிய பெண்கள் அவரை விரும்பவில்லை, அவர் விரும்பாத பெண்கள் அவரை விரும்பினர். இதனால், அவர் முணுமுணுத்துக்கொண்டே, மெஹராபாத்துக்குத் திரும்பி**

**என்னிடம் வந்து கூறினார், 'பாபா, நான் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை.' அவர் இதைச் சொல்ல வேண்டும் என்றுதான் நான் விரும்பினேன், அது எனது திட்டத்தின் படி, திறவுகோலைத் திருப்பியதற்கிணங்க நடந்தது. ஆனால் நான் ஆரம்பத்தில் ஆட்சேபனை தெரிவித்திருந்தால், அவர் எனக்குக் கீழ்ப்படிந்திருப்பார் என்றாலும், திருமணம் செய்து கொள்ளும் ஆசை இன்னும் அகத்தில் எரிந்து கொண்டிருக்கும்.**

பாபா, நீலுவிடம் கேட்டார், "**இது உண்மையா இல்லையா?**"

நீலு, "முற்றிலும் உண்மை. உலகில் வேறு எவரும் இத்தகைய சிறப்பான விளையாட்டை விளையாடியிருக்க முடியாது" என்றார்.

1945, ஜூலை 21 சனிக்கிழமையன்று, டாக்டர் டான், எரச், பைதூல், காக்கா, ஜால் கேரவாலா ஆகியோருடன் பாபா ஹைதராபாத்திலிருந்து தெற்கு நோக்கி மதராஸுக்குப் (MADRAS) புறப்பட்டுச் சென்று, அங்கு அவர் பத்தொன்பது மஸ்துகளுடன் பணிபுரிந்தார். பைதூல், 'ஆண்டர்சன் வீதி'க்கு (ANDERSON STREET) அருகிலமைந்த ஒரு பாதையில் 'மொஹம்மது மஸ்தான்' (MOHAMMED MASTAN) என்ற மஸ்தைக் கண்டுபிடித்தார். அந்த மஸ்த் இடைவிடாமல் தனது ஆடைகளைக் கிழித்து மீண்டும் அவற்றை ஒன்றாக தைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்.

பாபா அவரைத் தொடர்பு கொள்ள விரும்பினார்; ஜூலை 24ஆம் நாள், எரச், பைதூல் இருவரும் அருகிலமைந்த வங்கி அலுவலகத்திற்குள் மஸ்த் மொஹம்மது மஸ்தானை அழைத்துச் சென்றனர். எரச் வங்கி மேலாளருடன் பேசினார், அவரது மூத்த சகோதரர் (பாபா) மஸ்தானுடன் சிறிது நேரம் தனியாக இருக்க விரும்புவதாக விளக்கினார். எரச், "இந்த அறையை சில நிமிடங்கள் பயன்படுத்த நீங்கள் அனுமதித்தால் அவர் அதை பெரிதும் பாராட்டுவார்" என்றார். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட வங்கி அதிகாரி உடனடியாக ஒப்புக் கொண்டது மட்டுமல்லாமல் காசாளர்கள், எழுத்தர்கள் மற்றும் பிற ஊழியர்கள் அனைவரையும் வளாகத்தை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார். அவரும் வெளியில் சென்றார்; பாபா வங்கிக்குள் நுழைந்து மொஹம்மது மஸ்தானுடன் அவரது பணியைச் செய்து முடித்தார்.

இது ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம்: பாபா மஸ்துடன் பணிபுரிய, வங்கி ஊழியர்கள் தங்கள் வேலையை நிறுத்திவிட்டு, வெளியே செல்ல உத்தரவிடப்பட்டனர்! ஊழியர்கள் வெளியே நின்றபோது பணம், காசோலைகள் போன்றவை பாதுகாப்பற்ற நிலையில் மேசைகளில் கிடந்தன. இது போன்ற ஒன்றை அனுமதிக்கும் விதத்தில், முன் பின் தெரியாத வங்கி ஊழியர்கள் எப்படி, சாதகமான முறையில் நடந்துகொள்ள முடியும்? ஆனால் பாபாவைப் போன்ற ஒருவருக்கு, அறிமுகமில்லாதவர் அல்லது அறியாதவர் என ஒருவருமில்லை.

மெஹர் பாபா, மதராஸின் ஆன்மீகப் பொறுப்பாளரான 'மால்வி ஸாஹேப்' (MAULVI SAHEB) என்றழைக்கப்பட்ட 'ஜலாலி' வகையைச் சார்ந்த மஸ்துடன் பணிபுரிந்தார்; அவர் ஒரு வயதான, பராமரிப்பற்ற, பருமனான, கோபக்கார மனிதராகத் தோன்றினாலும், உண்மையில் நகரத்தின் முன்னணி ஆன்மீகப் பொறுப்பாளராக இருந்தார்.

பாபா இந்தத் தொடர்பால் முழுமையான திருப்தி அடையவில்லை, ஏனெனில் பல ஆர்வமிக்க பார்வையாளர்கள் அங்கிருந்து விலகாமல் நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

பாபா சந்தித்த இதர மஸ்துகளில் 'ராம் ஸ்வரூப்' (RAM SWARUP) போன்ற சில மறக்கமுடியாத மஸ்துகளும் இருந்தனர், அவர் முற்றிலும் நிர்வாணமாக உடல் உணர்வற்ற நிலையில் இருந்தார். அவர் புறக்கணிக்கப்பட்ட கோவில்களில் வாழ்ந்து, தகாத உணவுகளை உண்டு வந்தார். பாபா அவருக்கு கைகளால் உணவூட்டி அவருடன் ஒரு மணி நேரம் அமர்ந்திருந்தார்.

மெஹர் பாபா சந்தித்த மற்றுமொரு நிர்வாண மஸ்த் ஒரே விஷயத்தை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந்தார்: "நாம் அனைவரும் கடவுள்... நாம் அனைவரும் கடவுள்... (WE ARE ALL GOD - ஸப் ஹம் குதா ஹைன்... ஸப் ஹம் குதா ஹைன்...)!"

ஒரு மெஹபூபி - MAHBOOBI (ANDROGYNOUS - திருநங்கை இனத்தைச் சார்ந்த), 'காதிர் பாட்ஷா' (QADIR BADSHAH) என்பவர் தனது கைகளில் வளையல்களை வரிசையாக அணிந்திருந்தார். மஸ்தின் வழக்கமான நிலையிலிருந்து முற்றிலும் மாறாக, அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார்

ஹைதராபாத் திரும்பும் வழியில், ஜூலை 26 அன்று பாபா, ராய்ச்சூரில் (RAICHUR) நின்று, அவரது அடையாளத்தை ரகசியமாக வைத்துக்கொண்டு, நகரத்திலிருந்து மூன்று மைல் தொலைவில், மண்டலி அழைத்துவந்த 40 ஏழை எளியவர்களின் (பலர் பார்வையற்றவர்கள்) கால்களைக் கழுவி, தலைவணங்கி, ஒவ்வொருவருக்கும் மூன்று ரூபாயைப் பிரசாதமாக வழங்கினார். அதற்குப் பிறகு, பாபா, மண்டலியுடன் எலும்பை நொறுக்கும் ஆறு மணி நேர பேருந்து பயணம் செய்து, 'மெஹ்பூப்நகர்' (MAHBUBNAGAR) எனும் கிராமத்தில் அமைந்த ஒரு மதுபானக்கடையில் மேல்நிலை மஸ்த் ஒருவரைத் தொடர்பு கொண்டார். ஜூலை 29ஆம் நாள் மீண்டும் ஹைதராபாத் வந்து சேர்ந்தனர்.

இந்தக் காலகட்டத்தில், டாக்டர் டான் ஸெக்கந்திராபாத் இராணுவ மருத்துவமனையில் (SECUNDERABAD MILITARY HOSPITAL) பணியாற்றிக் கொண்டிருந்தார்; ஆனால், பாபா ஹைதராபாத்தில் இருந்த வேளையில், பத்து மைல் தூரம் சைக்கிளில் மண்டலி அல்லது பாபாவின் பங்களாவிற்கு வருவது வழக்கம். ராஜா (KING), ராணி (QUEEN) என்றழைக்கப்பட்ட இரண்டு கருப்பு 'புல் டெரியர்' (BULL TERRIER) வகை நாய்க்குட்டிகள் டாக்டர் டானின் கண்காணிப்பில்

வளர்ந்து வந்தன; டான் ஹைதராபாத் வரும்போதெல்லாம் பாபா, அவற்றை தன்னுடன் எடுத்து வரக் கூறியிருந்தார்.

மார்கரெட் வயிற்றுக்கோளாறால் அவதிப்பட்ட போது, டாக்டர் டான் அவருக்கு சிகிச்சை அளிக்க அடிக்கடி வரத் தொடங்கினார். டான் தனது சைக்கிளில் நாய்க்குட்டிகளை ஒரு கூடையில் எடுத்துச் செல்வது வழக்கம்; ஆனால் சைக்கிளில் பயணிக்கும் வேளையில், அவை, எப்பொழுதும் வெளியே குதிப்பதற்கான வழியைக் கண்டுகொள்ளும். டான் சைக்கிளை நிறுத்தி அவற்றைத் துரத்திப் பிடித்தது, வழிப்போக்கர்களுக்கு வேடிக்கையான பொழுதுபோக்காக அமைந்தது.

இவ்வேளையில், பாபா மெஹராபாத்தில் தங்கியிருந்த பெண்மணிகளை, நான்கு தனித்தனி குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு வாரம் தங்கியிருக்க அழைத்தார். மார்கரெட், மெஹரா, மணி, மெஹரு ஆகியோர் ஜூபிலி ஹில்ஸ் பங்களாவில் இருந்த நீச்சல் குளத்தை பொழுதுபோக்கிற்காக தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர் - 'தங்கள் அன்பிற்குரியவரின் அளவிறுதியற்ற ஆழ்கடலில் மூழ்குவதற்கான அடையாள சின்னம்!' என காலம் இதைக் குறிப்பிட்டது.

1945 ஆகஸ்ட் முழுவதும் பாபா, ஹைதராபாத் உள்ளூர் மஸ்துகளுடன் தொடர்ந்து பணிபுரிந்தார்; ஒரு நாள் 'நூருதீன்' (NURUDDIN) என்ற மஸ்தைத் தொடர்பு கொண்டார்; அவர் அதிக அளவில் மது வகைகளை அருந்துவதாக இருந்தாலும், அற்புதமான மஸ்தாக இருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில், பாபாவுடன் டோங்காவில் சவாரி செய்யும் போது, மஸ்த் ஒரு மதுபானக்கடையைப் பார்த்து, டோங்காவை நிறுத்தும்படியும், புத்துணர்வுக்காக ஓரிரு கோப்பை மது அருந்தி செல்ல விரும்புவதாகவும் பாபாவிடம் கோரிக்கை வைத்தார். பாபாவும் அவருக்குப் பிடித்த மதுபானத்தை அருந்த அவரை அழைத்துச் சென்றார்.

பாபா, டோங்காவில் நூருதீனுக்கு அருகில் அமர்ந்து, ஹைதராபாத் வீதிகளில் சவாரியைத் தொடர்ந்தார். எரச், பைதூல் இருவரும் வேறொரு டோங்காவில் பின்தொடர்ந்தனர். வழியில், பைதூல், 'ரஜியா மஸ்தான்' (RAJIAH MASTAN) என்ற மஸ்தை, சாலையோரம் பார்த்து அவரை அழைத்தார். ரஜியா மிகவும் அசுத்தமான தோற்றத்தில், கனமான, அழுக்கான தலைப்பாகையை அணிந்ததோடு உடைந்த கண்ணாடி மூட்டைகளையும் வைத்திருந்தார். பாபா, கை சைகையால் தெரிவித்ததற்கு இணங்க, பைதூல், அவர்கள் பயணித்த டோங்காவில் அமர மஸ்திற்கு உதவினார். பைதூல், அவர்கள் மெதுவாக ஓட்டிச் சென்ற போது அவரை கவனமாகப் பிடித்துக் கொண்டார்; அதே நேரத்தில், திரளாக வந்த பள்ளி மாணவர்களின் கூட்டம், டோங்காவின் அருகே வேடிக்கை வினோதங்களால், மஸ்தைக் கேலி செய்து சுற்றி சுற்றி வந்தனர். ரஜியாவும் சிறுவர்களின் சிரிப்பிலும் வேடிக்கையிலும் கவனம் செலுத்தினார்; மேலும் பாபா குழந்தைகளின் வெகுளித்தனத்தைக் கண்டு அகமகிழ்ந்தார்.

1945, ஆகஸ்ட் 7 செவ்வாய்க்கிழமை, மெஹர் பாபா ஹைதராபாத்தின் பொறுப்பாளர் ‘ஸையத் முய்னுதீன்’ (SAYYED MU’INUDDIN) என்பவருடன் பணிபுரிந்தார். பாபா, அவருடன் அன்று மூன்று முறை தொடர்புகொண்ட வேளையில் கடைசியாக, மூன்று மணி நேரம் காத்திருந்த பின்னரே பாபா, அவரது கைகளால் திருப்திகரமாக உணவூட்ட அனுமதித்தார். அதற்குப் பிறகு, ஸையத், ஓர் உணவகத்திலிருந்து பைதூல் வாங்கி வந்த மாமிசம் மற்றும் சப்பாத்தியைக் கேட்டு வாங்கி உண்டு, மேலும் பர்ஃபி (BARFI) வேண்டுமெனக் கேட்டார். அவருக்கு அதுவும் கொடுக்கப்பட்டது; அடுத்ததாக சிகரெட்டுகளைக் கோரினார், அதையும் பாபா அன்போடு வழங்கினார். இந்தத் தொடர்பு, பாபாவைப் பெருமகிழ்ச்சியடையச் செய்தது.

மீண்டும் ஆகஸ்ட் 8 அன்று, பாபா நகரத்தின் வீதிகளில் மஸ்துகளை சந்தித்து, அடுத்த நாள் ‘குலாம் ஹுஸைன்’ (GULAM HUSSEIN) என்ற உயர் நிலை மஸ்துடன் பணிபுரிந்தார்.

1945 ஆகஸ்ட் 6ஆம் நாள், முதல் அணுகுண்டை அமெரிக்கா ‘ஹிரோஷிமா’ (HIROSHIMA) மீது வீசியது, மூன்று நாட்களுக்குப் பின்னர், 9ஆம் நாள், மற்றுமொரு அணுகுண்டு ‘நாகஸாக்கி’ (NAGASAKI) மீது வீசப்பட்டது என்ற உண்மையின் வெளிச்சத்தில், மெஹர் பாபாவின் இந்தத் தொடர்புகள் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. இரண்டு நகரங்களும் பேரழிவிற்கு உள்ளாகி, ஒவ்வொரு நகரத்திலும் 100,000 பேர் உயிரிழந்ததாக கணக்கிடப்பட்டது.

ஜப்பான் சரணடைந்ததைத் தொடர்ந்து, 1945 ஆகஸ்ட் 15 வெற்றிவாகை சூடிய நாளாகக் கொண்டாடப்பட்டது. பின்னர் அதே நாளில், பாபா இந்தப் புலனாகாத வார்த்தைகளை எடுத்துரைத்தார்:

**அக்டோபரில் நான் உயிரை விடுவேன்,**
**நவம்பரில் மீண்டும் உயிர்த்தெழுவேன்,**
**டிசம்பரில் நான் அனைவரையும் கொன்றுவிடுவேன்,**
**பிப்ரவரியில் அனைவருக்கும் மறுவாழ்வு தருவேன்!**

காக்கா தனது சந்தேகங்களைத் தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தியபோது, டாக்டர் கனி அதை, பாபாவிற்குத் தெரிவித்தார். இதைக் கேட்டு பாபா எதுகை மோனையுடன் கூடிய மற்றுமொரு கவிதையை எடுத்துரைத்தார்:

**அக்டோபர் நாற்பத்தைந்து -**
**மரணத்தின் குழியில் நான் குதித்து,**
**நவம்பர் நாற்பத்தைந்து -**
**மீண்டும் வாழ்வை மீட்டெடுத்து,**
**டிசம்பர் நாற்பத்தைந்து -**
**அனைவரையும் கொன்று குவித்து,**
**அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில், அஞ்ச வேண்டாம்,**
**அனைவரையும் நான் உயிர்ப்பித்து விடுவேன்!**

அப்போது பாபா இவ்வாறு அறிவித்தார், "**1945, அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில், பெண் மண்டலியையும் சந்திக்காமல், தனிமையில் என் ஆன்மீகப் பணியைச் செய்வேன்.**"

ஜப்பான் சரணடைந்த சிறிது நேரத்தில், அவர்களின் வளர்ப்பு நாய், 'டைஃபூன்', ஜூபிலி ஹில்ஸ் பங்களாவின் மாடியிலிருந்து விழுந்ததில் ஏற்பட்ட உள் காயங்களால் உயிரைத் துறந்தது.

பாபா, இது ஹைதராபாத்திலிருந்து புறப்படும் நேரமெனத் தெரிவித்தார், மேலும் மஹாபலேஷ்வர் அருகே பங்களாக்களைக் கண்டுபிடிக்க விஷ்ணுவை அனுப்பி வைத்தார். ஹைதராபாத்தில் அவர்களது பங்களாக்கள் ஆறு மாதங்களுக்கு மட்டுமே குத்தகைக்கு எடுக்கப்பட்டன, செப்டம்பர் முதல் வாரத்தில் அந்த காலம் முடிவடையும் தருவாயில், பாபாவின் மஸ்த் பணியும் நிறைவடைந்ததால் அவர் புறப்பட ஆயத்தமானார்.

1945, ஆகஸ்ட் 21 வியாழக்கிழமை, மூன்றாவது முறையாக அலி ஷா ஹைதராபாத்திற்கு அழைத்து வரப்பட்டார், மேலும் பாபா அவருடன் மூன்று நாட்கள் ஏகாந்தவாசத்தில் பணியாற்றினார். அலி ஷா, ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஜமாலி வகையைச் சார்ந்த மஸ்தாக இருந்தாலும், பாபா அவருடன் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது; மேலும் ஒவ்வொரு முறையும் அவருடன் அமர்ந்து, பணிபுரிந்து வெளிவரும் நேரத்தில் மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். பாபா இதை இவ்வாறு விளக்கினார், "**அவரது தூக்கம் மற்றும் மந்தமான சுபாவம் காரணமாக, நான் அவருடன் வழக்கத்தைவிட அதிகமாக உழைக்க வேண்டும். அவருடனான பணி என்னை முற்றிலும் சோர்வடையச் செய்வதாக இருந்தாலும், அலி ஷா மூலமாகச் செய்யப்பட்ட பணி தனிச் சிறப்புடையதாக இருந்தது.**"

ஆகஸ்ட் 31 அன்று, 'ராஜா தரம் கரன் பஹதூர்' (RAJA DHARAM KARAN BAHADUR) தனது மூன்று மகன்களுடன் ஹைதராபாத்தில் பாபாவை சந்திக்க வந்தார். அவர் ஆங்கிலேய சுதேச மாநிலங்களில் ஒரு ராஜாவாக இருந்தார் மற்றும் 1938ஆம் ஆண்டில் பாபாவின் நீலப்பேருந்து பயணத்தின் போது ஒரு முறை, ஹைதராபாத்தில் பாபாவை சந்திக்க நேர்ந்தது. அந்த நேரத்தில், ஹைதராபாத்தில் ஒரு மையத்தை நிறுவுவது பற்றி எழுந்த விவாதத்தில் மஹாராஜா உதவ ஆர்வமாக இருந்தார். ஆனால், இந்த முறை, பாபா ஹைதராபாத்தை விட்டு வெளியேற இருந்த வேளையில், தரம் கரன் இந்தத் தலைப்பைப் பற்றி எதுவும் பேசாமல், பாபாவிடம், "நான் உங்கள் பாதத்தில், என்னையும் எனது குடும்பத்தையும் அர்ப்பணிக்க வந்துள்ளேன். தயவுசெய்து எங்களை உங்கள் சொந்தமாக்குவதன் மூலம் திருப்திப்படுத்துங்கள்" என்று கூறினார்.

மஹாராஜா அவரது முழு வேண்டுகோளுக்கும் குரல் கொடுக்கத் தவறினாலும், இதை முழுமையாக அறிந்த பாபா, "**நான் உங்களுக்கு ஆன்மீக**

**ரீதியில் உதவுவேன், அரசாங்கத்தில் அமைச்சராகும் உங்கள் லட்சியத்தின் மீது எனது பார்வை இருக்கும். உங்கள் மகன்கள் உலகப்பொருள் ரீதியில் முன்னேறுவதைப் பார்த்துக்கொள்வேன்"** என்றார்.

அதற்குப் பிறகு, பாபா இவ்வாறு வலியுறுத்திக் கூறினார், "**ஆனால், நீங்கள் அமைச்சரான பின்னர், உலகை மாயையாகவும் கடவுளை மட்டுமே யதார்த்தமாகவும் (உண்மைப்பொருளாகவும்) பார்க்கவும். நினைவில் கொள்ளுங்கள், மனிதகுலத்தின் நன்மைக்காக, எப்போதும் நீங்கள் என் அறிவுறுத்தல்களால் வழிநடத்தப்படுவீர்கள்.**" மனம் நெகிழ்ந்து போன மஹாராஜா, பாபாவின் வார்த்தைகளுக்கு உடன்பட்டு, தனது மகன்களுடன் விடைபெற்றுச் சென்றார்.

ஜப்பான் 'நிபந்தனையற்ற சரணடைதல்' ஒப்பந்தத்தில் (FORMAL TREATY OF UNCONDITIONAL SURRENDER) கையெழுத்திட்ட வேளையில் இரண்டாம் உலகப் போர் அதிகாரப்பூர்வமாக 1945, செப்டம்பர் 2 அன்று முடிவடைந்தது. ஆகஸ்ட் மாதம் பெங்களூரில் நடைபெற்ற ஒரு பெரிய யாகம் (புனித நெருப்பு) விழாவில் நாராயண் மஹாராஜ் பங்கெடுத்தார். இந்த சிறப்பு நிகழ்ச்சிக்காக, இந்தியா முழுவதிலுமிருந்து கூடிய ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு, மஹாராஜ் தரிசனம் வழங்கினார்.

சற்றும் எதிர்பாராமல் 1945 செப்டம்பர் 3 திங்கள்கிழமை, நாராயண் மஹாராஜ், அவரது 60ஆவது வயதில் உடலைத் துறந்தார். அவரது உடல் பெங்களூரில் தகனம் செய்யப்பட்டது; செப்டம்பர் 5 அன்று அவரது சாம்பலில் ஒரு பாகம் கேட்காவ்ம் (KEDGAON) ஆசிரமத்தில் அமைந்த சமாதியிலும், மறு பாதி பனாரஸுக்கு எடுத்துச் சென்று கங்கை நதியிலும் கரைக்கப்பட்டது.

நாராயண் மஹாராஜ் அவரது பௌதீக உடலைத் துறந்த அந்நாளில், மெஹர் பாபா ஹைதராபாத்தில் மஸ்துகளுடன் பணிபுரிந்து கொண்டிருந்தார். சில நேரங்களில் அவர் ஒரே மஸ்துடன் பல முறை பணிபுரிந்ததுண்டு. அந்த நாளில், அவர் இரண்டாவது மற்றும் கடைசி முறையாக, 'கேப்டன்' (CAPTAIN) என்றழைக்கப்பட்ட தனிச் சிறப்புமிக்க மஸ்தைத் தொடர்பு கொண்டார். ஆதி சீனியரின் காரில் சவாரிக்கு அழைத்துச் செல்லுமாறு 'கேப்டன்' கேட்டதற்கிணங்க, பாபா, ஆதி சீனியர், மஸ்த் மூவரும் காரில் ஏறினர். கேப்டன் மஸ்த் எங்குச் செல்ல வேண்டும் என்று வழிகாட்டினார்; முதலில் ஒரு குறிப்பிட்ட வீட்டில் காரை நிறுத்தி, அந்த இடத்திற்குச் சொந்தமானவர் போல் உள்ளே நுழைந்தார்! அடுத்ததாக, அவர் ஸெக்கந்திராபாத் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, இறுதியாக ஹைதராபாத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட கோவிலுக்குத் திரும்பிச் சென்று, பாபாவிடமிருந்து விடை பெற்றார்.

பாபாவின் அனுமதியைப் பெற்று, விஷ்ணு, காளேமாமாவின் உதவியுடன், மஹாபலேஷ்வர் அருகில் 'வய்' (WAI) கிராமத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் அமைந்த 'பஸர்னி'யில் (PASARNI) நவாப் ஒருவரின்

பங்களாவை ஏற்பாடு செய்தார். பங்களாவின் முக்கிய பகுதியில் பாபாவும் பெண்மணிகளும், பங்களாவின் வளாகச் சுவருக்கு வெளியே அமைந்த பணியாளர்கள் குடியிருப்பில் ஆண் மண்டலியையும் தங்க வைப்பதாகத் திட்டம். இந்த ஏற்பாடு செய்யப்பட்ட பிறகு, பாபா, ஆண், பெண் மண்டலி அனைவருடன் ஹைதராபாத்திலிருந்து 1945, செப்டம்பர் 6 வியாழக்கிழமை புறப்பட்டார். அடுத்த நாள் பூனா வந்தடைந்து, பாபா மற்றும் பெண் மண்டலி இரண்டு நாட்கள் பிந்த்ரா ஹவுஸில் ஓய்வெடுத்தனர்.

பாபாவின் வருகை கெய்மாயை எப்பொழுதும் மகிழ்ச்சியடையச் செய்தது, அவர் அந்த வீட்டை பாபாவின் வீடாகக் கருதினார். பெண் மண்டலியுடன் பாபா பிந்த்ரா ஹவுஸில் தங்கிய போதெல்லாம், பப்பா ஜெஸவாலா, அவரது மகன் மெஹர்வான் இருவரும் வெளியில் அமைந்த கேரேஜுக்குச் செல்ல வேண்டியிருந்தது. பெண் மண்டலியுடனான தொடர்பைத் தவிர்க்கும் நோக்கத்தில், பப்பா, மெஹர்வான் இருவரும் வீட்டிற்குள் நுழைய தடை விதித்து, வெளியே ஒரு கழிவுக் கலமும் வைக்கப்பட்டது; ஆனால் பாபா அடிக்கடி அவர்களைப் பார்க்க வருவதுண்டு. பாபாவுடன் வந்த ஆண் மண்டலி உறுப்பினர்களில் எரச் அல்லது பைதூல் போன்றவரும் கேரேஜில் தங்க வேண்டியிருந்தது, அவர்களுக்கான உணவும் அங்கே அனுப்பப்பட்டது.

பாபா, அவரது சகோதரர் பெஹராம், மனைவி பெரின், அவர்களின் குழந்தைகளைப் பார்க்க, பாபா இல்லத்திற்குச் சென்றார். பெரின் கர்ப்பமாக இருந்தார், அவர் இரட்டைக் குழந்தைகளை சுமப்பதாகக் கூறப்பட்டது. பாபா பெஹராமிடம், "**இரட்டையர்கள் பிறக்கும்போது முதலில் பாதங்கள் வெளிவருவதானால், பெரின் இறந்துவிடுவார்**" என்று கூறினார். இது இருவரையும் மிகவும் கவலையுறச் செய்தது, ஆனால் பாபா, பெரினுக்கு அறிவுறுத்தினார், "**எனது பெயரை தொடர்ந்து, முழு மனதுடன் உச்சரியுங்கள் - கவலைப்படாதீர்கள், எனது பார்வை உங்கள் மீது இருக்கும்.**"

சிறிது நேரம் அங்கே இருந்த பாபா, தன் உறவு குழந்தைகள், ஷெரூ, குல்னார் ஆகியோருடன் விளையாடினார்; பெரின், பெஹராம் இருவருக்கும் தைரியமும் உற்சாகமும் அளித்து, பிந்த்ரா ஹவுஸுக்குத் திரும்பிச் சென்றார்.

1945, செப்டம்பர் 8ஆம் நாள், பாபா பெண்மணிகளுடன் பஸர்னிக்குப் புறப்பட்டார். சில நாட்களுக்குப் பின்னர், அவர் இதர பெண்மணிகளையும் மெஹராபாத்திலிருந்து அழைத்தார்.

மெஹராபாத்தில் இருந்த போது, கிட்டி, பைதூலின் மகள் டவ்லா, கைக்கோபாத்தின் மகள்களான குலு, ஜலு மூவருக்கும் ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கினார். டவ்லா புதிய ஆங்கில பாடல்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டவே, பாபாவின் ஒப்புதலுடன், 'வய்' கிராமத்திற்குச் சென்ற பிறகு, கிட்டி ஒரு ஆங்கிலப் பாடலைக் கற்றுத் தந்தார்.

ஒரு நாள் பாபா பஸர்னியில் பெண்மணிகளுடன் அமர்ந்திருந்தபோது ஒரு வித்தியாசமான குரல் ஒலித்தது. "**அந்தக் குரல் எங்கிருந்து வருகிறது? இது என்ன கழுதை கத்தும் குரலல்லவா?**" என்று பாபா கேட்டார்.

பெண்மணிகளில் ஒருவர் அதைப் பார்க்கச் சென்றபோது, கிட்டி, டவ்லாவிற்கு ஆங்கில பாடலைக் கற்பித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். பாபா அவர்கள் இருவரையும் அழைத்து, "**இந்தப் பூமியில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?**" என வினவினார்.

கிட்டி மகிழ்ச்சி பொங்க கூறினார், "நான் டவ்லாவிற்கு பாடல் கற்றுக்கொடுத்தேன். நாங்கள் பாடிக்கொண்டிருந்தோம்."

"**நல்லது, உங்களின் பாடல் மிகவும் இனிமையானது**" என்று பாபா கிண்டல் செய்தார். "**அதை ஒரு கழுதை கேட்டிருந்தால், வெட்கத்தில் தலை குனிந்திருக்கும்! இது கழுதை கத்துவதாக நினைத்தேன்! ஆசிரியர் உண்மையிலே தனித் திறன் படைத்தவர், அதுபோல் அவருடைய மாணவரும் கூட. நீங்கள் இருவரும் சத்தமாகப் பாடுங்கள்.**"

கிட்டி அடக்க முடியாமல் சிரித்துக்கொண்டே கூறினார், "டவ்லாவின் ஆர்வத்தைத் திருப்திப்படுத்த மட்டுமே நான் அதைச் செய்தேன்..." என்றார்.

"**ஆமாம், நீங்கள் என்னையும் திருப்திப்படுத்தினீர்கள்**" என்று பாபா பதிலளித்தார். "**இங்கே விசித்திரமாக ஏதேனும் நடந்தால், எங்குப் பார்க்க வேண்டும் என்று எங்களுக்கு இப்போது தெரியும். ஒரு மனிதன் கழுதையைப் போலக் கதறுவது மிகவும் கடினம், பல வருட பயிற்சி தேவை; ஆனால் நீங்கள் இருவரும் அதை இயல்பாகச் செய்கிறீர்கள்.**"


பாபா அவர்களிடம் இசைப் பயிற்சியைத் தொடரச் சொன்னது, அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்தது.

1945 செப்டம்பர் 12 புதன்கிழமை, ராய்ப்பூரில் தேவையான பங்களாக்கள் கிடைக்காததால், டிசம்பர் மாதம் அங்கு நடைபெறவிருந்த கூட்டம், பிப்ரவரி 1ஆம் தேதிக்குத் தள்ளிவைக்கப்பட்டதாக, பாபாவின் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டது. சுற்றறிக்கையில், பாபா மேலும் கூறினார்:

**சரியான நேரத்தில், சமீபத்தில் நிகழ்ந்த ஸ்ரீ நாராயண் மஹாராஜின் மறைவு - எனது பணியுடன் தொடர்புடைய ஐந்து குருநாதர்களில் கடைசி சத்குரு - மேலும் நான், என்னுடைய ஆண் பெண் மண்டலியைப் பிரிந்து, மூன்று மாதங்களுக்காக (அக்டோபர், நவம்பர், டிசம்பர்) இந்தியாவில் சில சிறப்புமிக்க தொலைதூர இடங்களுக்குச் செல்ல இருக்கிறேன் என்பது, ஒரு மாத சந்திப்பிற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேறும் என்பதற்கான அடையாளச் சின்னமாகத் திகழ்வது மட்டுமல்லாமல், எனது மௌனத்தைக் கலைத்து, நீண்ட நெடிய காலமாக எதிர்பார்க்கப்பட்ட எனது வெளிப்பாட்டை அரங்கேற்றுவதற்கான முக்கிய அறிகுறிகளாகவும் விளங்கும்.**



நாராயண் மஹாராஜ் (NARAYAN MAHARAJ)




மெஹர் பாபாவுடன் அடையாளம் தெரிந்த மண்டலி, **1944,** ஆகஸ்ட் **6**

(KNOWN MANDALI WITH MEHER BABA, 1944 AUGUST 6)

**1-ஆதி ஈரானி** (ADI IRANI), **2-சி.டி.தேஷ்முக்** (C.D.DESHMUKH)**, 3-பைதூல்** (BAIDUL),

**4-மாஸாஜி** (MASAJI), **5-ஜால் கேரவாலா** (JAL KERAWALA),

**6-காக்கா பாரியா** (KAKA BARIA), **7-சாஞ்சி** (CHANJI),

**8-தத்து மெஹந்தர்கே** (DATTU MEHENDARGE), **9-விஷ்ணு** (VISHNU),

**10-கிருஷ்ணா நாயர்** (KRISHNA NAIR), **11-பாபாதாஸ்** (BABADAS)



ஏக இறைவனுள்

இருக்கும்

பலரை நேசிப்பதை

விட்டு

ஏக இறைவனான

என்னை

மட்டும் நாடு.

-அவதார் மெஹர் பாபா